தென்கிழக்காசிய வரலாறு

(இரண்டாம் பாகம்)

டாக்டர் ச. நாகராஜன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—853

தென்கிழக்காசிய வரலாறு

(கி. பி. 1800 முதல் 1965 வரை)

(இரண்டாம் பாகம்)

(மேல் பட்டப்படிப்பிற்குரியது)

ஆசிரியர்
டாக்டர் ச. நாகராஜன், எம்.ஏ., பிஎச். டி.
விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition - July, 1979
Number of Copies—1000

T. N. T. B. S. (C. P.) No. 853

HISTORY OF SOUTH EAST ASIA—II
(FROM 1800—1965 A. D.)

Dr. S. NAGARAJAN

Price Rs. 15-70

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has beenprinted on concessional paper made available by the Government of India.

Printed by :
T. KRISHNA PRESS,
94, Pulianthope High Road,
Madras-600 012.

அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பத்தொன்ப தாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங்கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர் களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண் டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்று விப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும், சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணித வியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல, புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூல நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று இருவகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **தென்கிழக்காசிய வரலாறு** (கி.பி. 1800 முதல் 1965 வரை) இரண்டாம் பாகம்—என்னும் இந்நூல் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **853** ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **888** நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல் மைய அரசு, கல்வி, சமூகநலஅமைச்சகத்தின் 'மாநிலமொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்ட'த்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக்களையும், மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரித்தாகுக!

செ. அரங்கநாயகம்

பொருளடக்கம்

4. இந்தோனேசியா

1. இந்தோனேசியா, பிரிட்டன், பிரான்சு, நெதர்லாந்து

இந்தோனேசியா சுதந்திரம் அடைவதற்குமுன் 'நெதர்லாந்துக் கிழக்கிந்தியத் தீவுகள்' (Netherlands East Indies) என அழைக்கப்பட்டது. நெதர்லாந்து, அதாவது டச்சு மேலதிகாரத்தின்கீழ் இந்தோனேசியா இருந்ததால் அதற்கு 'நெதர்லாந்துக் கிழக்கிந்தியத் தீவுகள்' என்ற பெயர் சூட்டப்பட்டது. ஆனால் இத் தீவுகளை நாம் இனி இந்தோனேசியா என்றே அழைப்போம்.

நாம் வரலாறு தொடங்கும் காலத்திலே (கி.பி. 1800) இந்தோனேசியா டச்சு ஆட்சியின் கீழிருக்கவில்லை. ஐரோப்பாவிலே ஐரோப்பியர்களுக்குள் ஏற்பட்ட போர்களின் எதிரொலி அவர்களின் ஆசியக் குடியேற்றப் பகுதிகளிலும் பரவியது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலே ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கு மிடையே உலக நாடுகளைக் கைப்பற்றுவதற்காகக் கடும் போட்டி நடந்துகொண்டிருந்தது.

ஆகையால், பிரெஞ்சுப் புரட்சியின்போது கி.பி. 1795ஆம் ஆண்டில் பிரான்சு நெதர்லாந்தைக் கைப்பற்றியது. ஆங்கிலேய-பிரெஞ்சுப் போட்டியினால் ஜாவாத் தீவும் பாதிக்கப்பட்டது. கி.பி. 1808ஆம் ஆண்டுக்குப் பிறகு இத்தீவில் பிரெஞ்சு நாட்டின் ஆளுநரும், ஆங்கிலேயக் குடியேற்ற நாட்டின் ஆளுநரும் (Pro-Consuls) போட்டியிட்டுக் கொண்டு ஜாவாவில் சீர்திருத்தங்கள் செய்யவும், நிலையாக ஆட்சி செலுத்தவும் முயன்றார்கள்.

நெதர்லாந்தைப் பிரான்சு கைப்பற்றியவுடன் ஒரு கைப்பாவைப் படாவியன் குடியரசை (Puppet Batavian Republic) அமைத்தது. இந்தோனேசியாவின் தற்காலத் தலைநகரமான ஜகார்த்தாவைப் (Jakarta) படாவியா (Batavia) என ஐரோப்பியர்கள் அழைத்து வந்தார்கள். நிருவாகம், வாணிபம் ஆகியவற்றின் விவகாரங்களில் பரந்த மனப்பான்மையுடன் பிரான்சு இறங்கியது. நாட்டைவிட்டுக் கடத்தப்பட்டுப் பிரிட்டனில் அகதியாக வந்து தங்கியிருந்த டச்சுக் குடியரசின் தலைவர் (Stadtholder) பிரிட்டனின் பாதுகாப்புப்

பொறுப்பில் டச்சு அயல்நாட்டுக் குடியேற்றப் பகுதிகளை ஒப்படைத்தார்; சமாதானம் ஏற்பட்டு அமைதிநிலை நாட்டியவுடன், இப்பகுதிகளை மீண்டும் நெதர்லாந்தினிடமே ஒப்படைப்பதாகப் பிரிட்டன் உறுதிமொழியளித்தது. இவ்வொப்பந்தத்தின்படி. இந்தியாவிலிருந்த டச்சுக்குடியேற்றப் பகுதிகள், கேப் ஆப் குட் ஹோப் (Cape of Good Hope), இலங்கை, மலாக்கா, மேற்கு மலேயா, மேற்குச் சுமத்திரா, அம்பாய்னு (Amboina), பந்தாத் தீவுகள் (Banda-islands) போன்ற டச்சுக் குடியேற்ற நாடுகள் பிரிட்டனின் பொறுப்பில் வந்தன. படாவியாவிலிருந்த உள்நாட்டு டச்சு அதிகாரிகள் ஆங்கிலேய ஆட்சியையும், ஐரோப்பாவிலிருந்து அறிவிக்கப்பட்ட பரந்த மனப்பான்மையுடன் அமைக்கப்பட்ட படாவியாக் குடியரசின் வாணிபக் கொள்கைகளையும் வெறுத்தனர். தெர்னுதே (Ternate), மக்காசர் (Macassar), பாலெம் பாங்கு (Palembang), போர்னியோவிலிருந்த பன்சர்மாசின் (Banjermasin) ஆகிய பகுதிகள் இவர்கள் ஆதிக்கத்தின்கீழிருந்தன. கி.பி. 1800ஆம் ஆண்டிலே படாவியாவை அரை மனத்துடன் ஆங்கிலேயர்கள் முற்றுகையிட்டுக் கடல்நில வழியைத் தடுத்தனர். ஆனால், மோரிசிலிருந்தும் (Mauritius), எகிப்திலிருந்தும் பிரான்சு ஒருவேளை இந்தியாவைத் தாக்குமோ என அஞ்சித் தங்கள் முற்றுகையை ஆங்கிலேயர்கள் தாற்காலிகமாக நிறுத்தினுர்கள். கி.பி. 1802ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் தாற்காலிகமாகச் சமரச மனநிலை நிலவியதால் பல டச்சுக் குடியேற்றப் பகுதிகள் பெயரளவில் திருப்பியளிக்கப்பட்டன; ஆனுல் கி.பி. 1804ஆம் ஆண்டில் மீண்டும் போர் மூண்டபோது லூயி நெப்போலியனின்கீழ்ப் புதிய ஹாலந்தரசு (New kingdom of Holland) அமைக்கப்பட்டது. இதற்கிடையில் கி.பி. 1798—99ஆம் ஆண்டுகளில் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் கடனுக்காக அதன் உடைமைகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டது; கம்பெனியின் சலுகை உரிமைப் பத்திரம் முடிவுறுவதற்கும் (Charter to expire) இசைந்தது.

இந்தியாவின் தலைமை ஆளுநரான கோமான் மின்டோ (Lord Minto) ஜாவா விவகாரங்களில் தலையிடாமல் மௌனமாக அடங்கிக் கிடந்தார். கிழக்கிந்தியத் தீவுகளைப் பயன்படுத்தப் பிரெஞ்சுக் கப்பல்களுக்கு வாய்ப்பளிக்காதவரை படாவியக் குடியரசு ஜாவாவை ஆட்சி புரிவதை அவர் எதிர்க்கவில்லை. காப்பி, சர்க்கரை போன்ற ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்றுல், ஜாவா மக்களின்மேல் உரிமைத்தடை ஆட்சி (Coercion) அமைக்க வேண்டும் என ஆளுநர்கள் ஓவர்ஸ்ரேடன் (Overstraten), நீதர்பர்க்கு (Nederburgh) ஆகிய இருவரு

கூறினர். ஆனால் பொருளாதாரத் துறையில் ஊக்கமளிப்பதால் மட்டும் பல நூற்றுண்டுகளாக வளர்ந்து வந்த சோம்பேறித் தன்மையை ஒழிக்க முடியாது; சோம்பேறித் தன்மை மக்களின் குருதியிலே ஊறியிருந்தது. வன்முறைகளைப் பயன்படுத்தித்தான் படாவியாவின் வாணிகத்தைக் காப்பாற்ற முடியும்; தாங்கள் பின்னுரிமையாளராக அடைந்த கம்பெனியின் மிகைப்பட்ட கடன்களை இவ் வாணிபத்தின் மூலம் கிடைக்கும் வருமானம்மூலம்தான் அடைக்க முடியும். ஆட்சி அமைப்பில் சிறிதளவே மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டன. முன்போலவே ஆளுநரும், அவர் பிரதிநிதிகளும், ஜாவாவிலுள்ள தாயகப் பகர ஆளுநர்களும் நீடித்து ஆட்சி புரிந்தனர். கி.பி. 1806ஆம் ஆண்டிலே ஐரோப்பாவிலிருந்த படாவியன் குடியரசு நெப்போலியன் உடன் பிறந்தவர் ஆன லூயிஸ் (Louis) மன்னர் தலைமையிலே ஹாலந்தரசு (Kingdom of-Holland) என மாற்றியமைக்கப்படாமலிருந்தால் இவ்வகையான வழிவழி மரபுக் கொள்கைகள் வரையறுக்கப்படாத காலம்வரை நீடித்திருக்கும்.

லூயிஸ் போனபார்டேவினுல் (Louis Bonaparte) நியமிக்கப்பட்ட படைத்துறை மீயுயுர் அலுவலர் ஹெர்மன் வில்லன் டயண்டெல்ஸ் (Marshall Herman Willen Daendels) கி.பி. 1808ஆம் ஆண்டுத் தொடக்கத்திலே ஜாவாவின் ஆளுநராகப் பதவியேற்றுர். டச்சு வழிவழி மரபுக் குடியேற்றக் கொள்கைகளுக்கும் எர்மனுக்கும் எவ்வகைத் தொடர்பும் கிடையாது. டச்சு இனத்தவராக இருந்த போதிலும், பிரான்சின் படைத்துறை மீயுயர் அலுவலராயிருந்த இவர், பேரரசர் நெப்போலியனை வழிபட்டுப் போற்றி மதிப்பார்வம் காட்டினுர். ஆங்கிலேய-இந்தியப் படைகளின் வருங்கால எதிர்ப்பைச் சமாளிப்பதற்காக ஜாவாத் தீவின் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும் என முயன்றுர்; அவருடைய முயற்சியில் விசையூக்கம் இருந்தது. ஜாவாவைத் தவிர மற்றப் பெரும்பான்மையான தீவுகள் இவரால் கைவிடப்பட்டன; அம்பாய்னுவிலும், மக்காசரிலும் சிறு படைகளை நீடித்து வைத்திருந்தார். பதினேழாயிரம் ஜாவாப் படை வீரர்களுக்குப் போர் வீரர் குடியமைப்பு வரிசைகள் (barracks) கட்டப்பட்டன; போர்க் கருவிகளின் வார்ப்படக் களங்கள் (arms foundries) அமைக்கப்பட்டன: ஒரு படைசெல் நெடும்பாதை கடற்கரை வழியாக அமைக்கப்பட்டது; தீவின் எதிர் எல்லைகளிலே விரைவாகச் செல்லும் சிறு கப்பற் படைகள் நிறுத்தப்பட்டன; இத் தீவின் தலைநகரம், சுகாதாரத்திற்கும் பாதுகாப்புக்கும் தக நில உட்பகுதிக்குள் அமைக்கப்பட்டது. உள்ளூர்ச் சுல்தான்களின் பகர ஆளுநர்களின் அதிகாரங்கள் நீக்கப்பட்டு, அவர்களை

ஊதியம் பெறும் டச்சு நாட்டின் அதிகாரிகளாக எர்மன் மாற்றினர்; அரசாங்க ஆட்சித் திறமையைப் பெருக்கும் நோக்கத்துடன் இந் நிருவாக மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டன என்றாலும் இவற்றைத் தப்பு வழியிலே செலுத்திய செயல்கள் எனக் கூறலாம். உள்ளூர் உயர்குடி மக்களின் (local aristocracy) தன்மானத்தையும் உயர் படி மதிப்பையும் டயண்டெல்ஸ் தொலைத்ததால் அவர்களுடைய ஆதரவையிழந்தார்.

பல இன்னல்களையும் தடைகளையும் டயண்டெல்ஸ் ஏற்கவேண் டியிருந்தது. திட்டப்படி அமைக்கப்போகும் ஜாவாப் படைக்கு அதிகாரிகள் கிடைக்கவில்லை. இராணுவம் பற்றிச் செய்யவேண்டிய முன்னேற்பாடுகளுக்குத் தேவையான செல்வமில்லை. காப்பிக் கொட்டை உற்பத்தியை மூன்று மடங்கு பெருக்க வேண்டும் என்ற டயண்டெல்ஸின் பெருமிதப் பகட்டான திட்டம் இறுதியில் தோல்வியடைந்தது. கி.பி. 1808ஆம் ஆண்டிற்குப் பின் டென் மார்க் வாணிபம் நிறுத்தப்பட்டது; அமெரிக்கக் குடியரசு வாங்கிய கொள்முதல் சரக்குகள் குறையத் தொடங்கியதால் கி.பி. 1810ஆம் ஆண்டில் தாற்காலிகமான வாணிகத் தடை நடவடிக்கை எடுக்கப் பட்டது. இறுதியில் கி.பி. 1810ஆம் ஆண்டில் படாவியாவை ஆங்கிலேயர்கள் முற்றுகையிட்டார்கள். கடன் தீர்க்க வகையற்ற நிலையிலிருந்ததால் (bankruptcy) உள்ளூர் ஊக வாணிபர்களுக்கு (Speculators: பெரும்பான்மையானவர்கள் சீனர்கள்) டயண் டெல்ஸ் நில உடைமைகளை விற்றார். இந் நடவடிக்கைக்குத் துணை யாகக் கடனுதவித்தொகையை வற்புறுத்தி வழங்கினார்; பணவித ழை (Paper Money) வழங்கினார். வழிவழி மரபுக்குத்தகை முறைக்கு மாறாக, நிலப்பண்ணை வாங்கியவர்களுக்குத் தெய்லீ வரிகளைப் (Taille-Taxes) பெறவும், கூலியில்லா வேலையைப் (Corvee labour: நிலப் பண்ணையாட்சி முறையில் ஊழியக் கடமை) பயன்படுத்தவும் வரையறுக்கப்படாத உரிமைகள் வழங்கப்பட்டன. பல திரைமறை வான இழிசெயல்களையும் டயண்டெல்ஸ் செய்தார். கி.பி. 1810 ஆம் ஆண்டில் ஹாலந்தில் பிரான்சின் நேரடியாட்சி அமைக்கப் பட்டவுடன் டயண்டெல்ஸ் பிரெஞ்சுத் தேசியக் கொடிகளை ஜாவா வில் பறக்கவிடத் தொடங்கி டச்சுக்காரர்களின் அரசியல் கூருணர் வுத் திறத்தை அவமதித்துப் புண்படுத்தினார்.

கி.பி. 1811ஆம் ஆண்டு ஜாவாவை ஆங்கிலேயர்கள் கைப்பற் றினர். இவ்வாண்டின் தொடக்கத்தில் டயண்டெல்ஸ் ஓர் அமெரிக்கக் கப்பலின் உதவியுடன் பிரான்சிற்குத் திரும்பினார். இதற்கிடையில் ஆங்கிலேயக் கடற்படை மீண்டும் கேப்டவுனையும், மலாக்காவையும் கைப்பற்றியது; டயண்டெல்ஸின் படைவீரர்களிட

மிருந்து அம்பாய்னுவையும், பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து மோரிஸ் (Mauritius) தீவையும் கைப்பற்றியது. புதிய ஆளுநரான சன் சான்சென்ஸ் (Jan Janssens) ஜாவாவின் உதவியற்ற சூழ்நிலையில் சிக்கித் தவித்தார். கி.பி. 1811ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் படாவியாவைக் கைப்பற்றினார்கள். மலாக்காவிலிருந்த ஸ்டாம் போர்டு ராபல்சின் சூழ்ச்சி வலையில் வீழ்ந்த தாயக அரசர்கள் (native princes) பிரெஞ்சு—டச்சு ஆட்சியை எதிர்க்கத் தொடங்கியதால் ஆங்கிலேயப் படையெடுப்புக்கு இவர்களின் எதிர்ப்பு பக்கபலமாயிருந்தது. பிறகு மக்காசரும், பாலெம்பாங்கும் கைப் பற்றப்பட்டன.

ராபல்ஸின் ஆட்சி

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி தாமஸ் ஸ்டாம்போர்டு ராபல்சை ஜாவாவின் ஆளுநராக நியமித்தது; ராபல்ஸ் பரந்த மனப்பான்மையுடைய வழிவழி மரபில் வளர்ந்தவர்; கி.பி 1807 ஆம் ஆண்டில் அடிமை வாணிபத்தை (Slave trade) ஒழித்தவர்; கி.பி. 1813ஆம் ஆண்டில் கம்பெனியின் தனியுரிமையை நீக்கியவர்; பொருளாதாரச் சுதந்திரச் சூழ்நிலையைப் பேணுபவர். தம் கோட்பாடுகளைத் தீவிரமாகப் பின்பற்றும் மனப்பான்மையுள்ளவர். ஆங்கிலேயர்களின் சிறப்புமிக்க 'பண்புயர்ந்த' ஆட்சியில் நம்பிக்கையுள்ளவர். தீவிர ஆங்கிலேயத் தேசியவாதியாக இருந்ததாலும், பெரும் போக்கான கொள்கைகளில் ஈடுபட்டவராயிருந்ததாலும் டச்சுக் குடியேற்றக் கொள்கைகளை வெறுப்புடன் நோக்கி 'இவை பெருங் கேடு பயக்க வல்லவை; அடிமையாக்கும் தன்மையுடையவை, எனக் கடுமையாகக் கண்டனம் தெரிவித்தார். ஆகையால் ஜாவா மக்களுக்கும், டச்சுக் குடிமக்களுக்கும், கல்கத்தாவில் வாழ்ந்த கம்பெனி அதிகாரிகளுக்கும் மன நிறைவு அளிக்கும் வகையில் தம் உயர்நோக்கம் கொண்ட, பரந்த மனப்பான்மையுள்ள, மனிதத் தன்மையுள்ள திட்டங்களைச் செயல்படுத்த முடியும் என நம்பினார்.

பல சிறப்புமிக்க சீர்திருத்தங்களைச் செயல்படுத்த ராபல்ஸ் முயன்றார். உள்ளூர்த் தாயக ஆட்சியாளர்களின் கொடுமையிலிருந்து கிராம மக்களை விடுவிப்பதற்காக ஆட்சி அமைப்பை மையப்படுத்தினார். ஆகையால் தாயக அரசர்களின் அதிகாரம், மேன்மை, புகழ், தன்மானம் ஆகியவற்றை விலக்குவதில் டயண்டெல்ஸின் கொள்கையையே ராபல்ஸ் நீடித்துச் செயல்படுத்தினார்; ஆகையால் இவர்கள் ஐரோப்பிய அலுவலர்களின் கைப்பொம்மைகளாக அமைக்கப்பட்டார்கள். இனிமேல் கிராமத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நீதி முறைகளைத் திருத்தும் நோக்கத்

துடன் ஜூரி முறையையும் (Jury trial), குற்றம் சாட்டப்பட்டவர்களைப் பலவகைகளில் துன்புறுத்துவதைத் தடுக்கும் சட்டத்தையும், பொதுவாகச் சிறைக் கைதிகளின் நலன்களை மேம்படுத்தும் திட்டங்களையும் அறிமுகப்படுத்தினர். கடனைத் திருப்ப முடியாததால் அடிமைகளாகும் பழக்கத்தை (debt Slavery) ஒழித்தார்; அடிமை முறைகளை முழுமையாக ஒழிக்கும் நோக்கத்துடன் மற்ற அடிமை முறைகளின்மேல் அதிக வரிகளை விதித்தார்.

கி.பி. 1813ஆம் ஆண்டில் வங்காள நில உடைமை உரிமை, நிலவரி முதலியவை பற்றிய திட்டத்தைச் செயல் படுத்தத் தொடங்கினர். இதுவே அவர் எடுத்த முயற்சிகளுக்குள் மிகக் கடுமை வாய்ந்த முயற்சி. ஒரு குறிப்பிட்ட ஆண்டு வரித்தொகையைச் செலுத்தித் தனியார்கள் நிலங்களைச் சொந்தமாக வைத்துக் கொள்ளும் ரயட்-வாரித் திட்டக்கொள்கையை (ryot-wari pattern) அறிமுகப்படுத்தினர். ஆனல் நில அளவாய்வு செய்வதற்கும், வரி வழங்குவதற்கும் தேவையான அலுவலர்கள் கிடைக்கவில்லை. தனியார்கள் நிலவுரிமைகளைப்பற்றிய விவரங்களைப் பதிவுசெய்யவும் வரி பெறவும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமத் தலைவர்கள் பயன்படுத்தப்பட்டார்கள். மதிப்பீடு செய்த வரி ஆண்டின் நிலவிளைச்சலில் நான்கில் ஒரு பங்கிலிருந்து இரண்டில் ஒரு பங்குவரை பொருள்களுக்குத் தகுந்தவாறு விதிக்கப்பட்டது. ஆனல் ஏறத்தாழ எல்லா நிலங்களும் கிராமச் சமுகப் பொது உடைமையாக இருந்ததால், தனியார்கள் மேல் அல்லாமல் ஒவ்வொரு கிராமத்தின் மேல்தான் வரிவிதிக்க முடிந்தது. பணமூலம்தான் நிலவரியைச் செலுத்த வேண்டும், இல்லாவிட்டால் நிலவுரிமை பறிக்கப்படும் என ராபல்ஸ் கட்டாயப்படுத்தியதால் குடியானவர்கள் சீன வட்டித் தொழிலர்களிடம் சிக்கிக்கொள்ள வேண்டியதாயிருந்தது. சீன வட்டித் தொழிலர்கள் நிலத்தை அடமானத்திற்கெடுத்துக் கொண்டு, கடன் தொகையின் மேல், பகர ஆளுநர்கள் முன்பு விதித்ததைவிட, மிக அதிக அளவு வட்டி விதித்தார்கள். பயிரிடப்படாத நிலங்களெல்லாம் அரசாங்கத்தைச் சேர்ந்தவை என்ற சட்டத்தைச் செயற்படுத்தியதால் லடாங் பயிரிடும் முறை (ladang cultivation : லடாங் முறையின் கீழ் ஒரு குடும்பம் காடு புதர்களை அழித்து நிலங்களைச் செப்பனிட்டு வெற்றிடமாக மாற்றினல் அவர்கள் அந்நிலங்களின் உடைமையாளர்களாக மாறினர்கள்) மூலம் செயற்படுத்தப்பட்டு வந்த பயிர் மண்டலிப்பு முறை (rotation of crops) விலக்கப்பட்டு, ஐரோப்பியர்களும் சீனர்களும் அதிக நிலங்கள் வாங்குவதற்கு வாய்ப்பேற்பட்டது. இதைத் தவிர, வரி செலுத்த முடியாததால் அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்ட நிலங்களையும் ராபல்ஸால் பயன்படுத்த முடிந்தது. வளர்ந்து வரும் அரசாங்கக் கடனை நிலங்களை விற்று

வந்த வருமானம் மூலம் தீர்க்க ராபல்ஸ் முயன்றார். பொதுவாக, அவருடைய புதிய நிலச் சீர்திருத்த முறையும் வரி திரட்டும் முறையும் தோல்வியடைந்தன எனக் கருதப்படுகிறது.

தனியுரிமைக் கொள்கைகளைக் கருத்தளவில் ராபல்ஸ் எதிர்த்த போதிலும் சூழ்நிலையின் காரணமாகத் தம் கொள்கைகளைச் செயல் படுத்த முயலவில்லை. தொடக்கத்திலிருந்து ஜாவாத் துறைமுகங்களுக்கு வரும் ஆங்கிலேயக் கப்பல்களுக்கு முன்னுரிமைச் சலுகை அளித்தார். ஐரோப்பியர்களுக் கெதிராகத் தோன்றிய வன்முறைச் செயல்கள் மிகுந்த கலகங்களைப் பாலம் பாங்குச் சுல்தானால் அடக்க முடியாததால் அத் தீவிலுள்ள வெள்ளீயச் சுரங்கங்கள் பாதிக்கப் பட்டன. இதன் விளைவால் அச் சுரங்கங்களை நாட்டின் தனி உரிமையின்கீழ் ராபல்ஸ் கொண்டு வந்தார். காப்பிக் கொட்டை உற்பத்தியாகும் ஜாவாவிலுள்ள பிரியாங்கர் (Preanger) பகுதியில் தொடர்ந்து சரக்கு மூலம் வரிகளைத் திரட்டினார்; ஆனால் தற்சமயம் ஐரோப்பியர்கள் (பகர ஆளுநர்கள் அல்லர்) வரி திரட்டினார்கள். கி.பி. 1814ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் போர்ச் சூழ்நிலை நீங்கி அமைதி நிலவத் தொடங்கியவுடன், அதிக அளவில் காப்பிக் கொட்டை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பேற்பட்டதால், வரிச் சீர்திருத்தத்தைப்பற்றியும், கட்டாயக் கூலிவேலை செய்வதைத் தடுக்கும் சட்டத்தையும் ராபல்ஸ் மறந்து காற்றில் பறக்கவிட்டார். ஜாவாவை டச்சுக்காரர்களுக்கு மீண்டும் அளிக்கப்போவதாகத் தெரிந்தவுடன்தான் காப்பிக் கொட்டை திறை முறையை (Coffee-tribute system) மூழ்கடிக்க ராபல்ஸ் முயன்றார் என டச்சு வரலாற்றாசிரியர்கள் வரைகிறார்கள். வழி வழிச் சமூகப் பொதுவுடைமை முறைகளையே குடியானவர்கள் விரும்புகிறார்கள் என இறுதியில் தெரிந்தது; ராபல்ஸின் இப்புதிய நிலவரி முறையின் மூலம் அவர்கள் நில உரிமையை இழக்கும் வாய்ப்பிருந்ததால் இப் புதுப்பாங்கான சீர்திருத்தத்தைக் குடியானவர்கள் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை.

ஜாவாவை டச்சு அரசாங்கத்திற்கு மீண்டும் அளிப்பதாகக் கி.பி. 1914ஆம் ஆண்டில் உறுதிமொழியளித்ததால், மேலும் இரண்டாண்டுகள் புதுவித முயற்சிகள் எடுக்காமல் ராபல்ஸ் காலங் கடத்தினார்; ஜாவாவை ஆங்கிலேயர்கள் ஆட்சியின்கீழ்க் கொண்டுவர வேண்டும் எனக் கல்கத்தா அரசாங்கத்தை வற்புறுத்தி வந்தார். ஆனால் ராபல்ஸின் பெருமிதப் பகட்டான திட்டங்கள் மூலம் சீர்கேடுற்ற பற்றுக்குறையேற்பட்டதால், மனக்குறைவுற்ற கம்பெனி மேலாளர்கள் கி.பி. 1816 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ராபல்ஸை ஜாவாவை விட்டுத் திரும்பிவருமாறு ஆணையிட்டார்கள். மீண்டும் ஆட்சி செலுத்த டச்சு அலுவலர்கள், மேலாளர்கள் ஜாவாவிற்குத்

திரும்பினார்கள். தமக்களித்த பொறுப்புகளை மிஞ்சித் தம் விருப்பம் போல் ராபல்ஸ் ஆட்சி புரிந்ததால் கல்கத்தாவில் அவருக்குச் செல் வாக்கோ, மதிப்போ இல்லாமலிருந்தது. ஜாவாவைவிட்டு வெளியே றியவுடன் சுமத்திராவின் தென் கரையிலிருந்த மிளகு விளையும் சிறிய நாடான பென்குலனின் (Benkulen) கண்காணிப்பாளராக ராபல்ஸ் நியமிக்கப்பட்டார்; கி.பி. 1818 ஆம் ஆண்டில் டச்சு அர சாங்கத்திற்கு மீண்டும் அளிக்கப்பட்டதும் ஆங்கிலேயர்களால் புறக்கணிக்கப்பட்டதுமான மலாக்காவின் ஆட்சியாளராகவும் அவர் நியமிக்கப்பட்டார்.

2. பெரும்போக்கான கொள்கைகளும் இந்தோனேசியாவும் (கி.பி. 1816—1830)

(The Liberal Experimental Period: 1816—1830 A.D.)

டச்சு நிருவாகத்தை இந்தோனேசியாவில் மீண்டும் அமைப்ப தற்காகவும், ஹாலந்து, ஜாவா ஆகியவற்றிலுள்ள சீரழிந்த நிதி நிலையைச் சீரமைக்கவும் நெதர்லாந்து மூன்று ஆணையர் தலைவர்களை (Commissioners' General) இந்தோனேசியாவிற்கனுப்பியது. அவர்கள் (1) கோர்நீலியஸ் தியோதர் எலௌட்டு (Cornelius Thedore Elout), (2) பேரன் வான் கேபல்லன் (Baron van capellan), (3) ஏ.ஏ. பேய்ஸ்கெஸ் (A.A. Buyskes) ஆவர்.

டாய்டெண்டல்சிற்கும் (Daendels), ராபெல்சிற்கும் (Raffles) கீழே பணிபுரிந்து வந்த முந்திங்கே (Muntinghe) இவர்களுக்குத் துணையாக உதவி புரிந்தார். கி.பி. 1815ஆம் ஆண்டுக் குடியேற்ற அரசியல் சட்டதிட்டத்தில் கூறியபடிச் செயல்புரிய இவர்களுக்கு ஆணையிடப்பட்டது. அபினி, நறுமணப்பொருள் ஆகியவற்றைத் தவிர, மற்றப் பொருள்களையெல்லாம் கட்டுப்பாடின்றிச் சுதந்திரத் துடன் பயிரிடலாம் என்ற கொள்கை பின்பற்றப்பட்டது. இவ்வகை யான பரந்த மனப்பான்மையுடைய கொள்கைகளை இந்தோனேசி யாவிலே ஏற்பட்ட திடீர் மாற்றம் எனக் கூறலாம். இச்சமயத்தில் தான் ஐரோப்பாவிலே முற்போக்குக் கருத்துத் தென்றல் வீசிக் கொண்டிருந்தது. பெரும்போக்கான கொள்கைக் குறிக்கோள்களு டன்தான் ஆணையர்கள் இந்தோனேசியாவிற்கு வந்தார்கள். ஒன்று மட்டும் அவர்கள் நிச்சயமாகச் செய்வதாக இல்லை. டச்சுக்கிழக்கிந் தியக் கம்பெனியின் பழி கூறும் தீய செயல்களை மீண்டும் புரிவதில்லை. இந்தோனேசியர்களின் நலனை முன்னேற்ற வேண்டும் என்பதே அவர்களின் முக்கிய நோக்கம்; இவ்வாறு நடந்துகொண்டால் டச்சுக்காரர்களுக்கும் நன்மை விளையும். இந்தோனேசியாவை

அலசிப் பார்த்தபின் கி.பி.1819ஆம் ஆண்டில் தங்கள் அறிக்கையை வெளியிட்டார்கள்; பரந்த மனப்பான்மையுடைய கருத்துகளை வெளியிட்டார்கள்.

(1) ராபெல்சின் நிலவரித் திட்டத்தைச் சிறிது சீர்ப்படுத்தி அதையே அடிப்படையாக ஏற்றுக்கொண்டு வரிவிதிக்கவேண்டும். பகர ஆளுநர்களின் கொடுங்கோன்மையான விதிக்கட்டின்றி விதித்த வரிகள் நீக்கப்பட்டன; இந் நிலவரித் திட்டத்தை அடிப் படையாக வைத்துக்கொண்டுதான் ஏறக்குறைய வரிகள் விதிக்கப் பட்டன.

(2) இவ் வரியைப் பணமாகவோ சரக்காகவோ அளிக்கலாம். குடியானவர்களை வட்டித் தொழிலாளர்கள் பிடியிலிருந்து மீட்கும் நோக்கத்துடன்தான் இவ்வகையான விருப்பப்படி வரி செலுத்தும் வாய்ப்பளிக்கப்பட்டது.

(3) தனி நபர் மேல் வரி விதிக்கப்படமாட்டாது; கிராமப் பிரிவுகளின்மேல் [village groups (desa)] வரி விதிக்கவேண்டும். தத்துவத்திற்கு அப்பால் இக்கொள்கையிருந்த போதிலும், நடை முறையைச் சார்ந்ததாயிருந்தது. குறைந்த அரசாங்க ஊழியர் களிருந்த சூழ்நிலையில் இக்கொள்கையால் நிருவாகச் சிக்கல்கள் குறைக்கப்பட்டன. வரி திரட்டும் பொறுப்பினைக் கிராமத் தலைவர் களிடமே விட்டுவிடும் நோக்கத்தோடுதான் இவ்வாறு செய்யப் பட்டது. ஒவ்வொரு நிலப்பகுதியையும் ஒழுங்குமுறையோடு அள வாய்வு செய்து, வகைப்படுத்தி, மதிப்புப் போடும் வரை இவ்வரித் திட்டத்தைத் தாற்காலிகமாகச் செயல்படுத்த வேண்டும் என அரசாங்கம் தீர்மானித்தது. இங்ஙனம் நிலங்களை மதிப்பிட்டபின் தனியாளர்கள் வரி அறிமுகப்படுத்தப்படும்.

(4) அரசாங்கமும் கிராம மக்களும் கலந்து வரித்தொகை யைத் தீர்மானம் செய்யலாம்.

(5) கட்டாயப்படுத்தி யாரையும் வேலை செய்யத் தூண்டக் கூடாது. வலிய வந்து வேலை செய்பவர்களுக்கு அவர்களுடைய வேலை மதிப்பின் அளவு கூலி அளிக்கப்படும்.

(6) அரசாங்க வருமானம் பெறுவதற்காகச் சில விளைபொருள் களை மட்டும் கட்டாயமாகப் பயிரிட வேண்டும் என்ற கொள்கை மாற்றியமைக்கப்படமாட்டாது. பிரியாங்கரில் (Preanger) காப்பிக் கொட்டை தரும் செடிவகைகளைப் பயிரிடுதலை இதற்கு ஓர் உதார ணமாகக் காட்டலாம். வெறுக்கப்பட்ட ஓங்யீ (hongyi) மாலுகாசில்

(Mollucas) ஒழிக்கப்பட்டது. [நறுமணப் பொருள்களின்மேல் உள்ள விலையுயர்வைத் தனி உரிமையில் வைத்துக் கொள்வதற்காக அரசாங்க அனுமதியில்லாமல் உற்பத்தி செய்த அம்போனிஸ் கிராம்பு (Cloves), பண்டனீஸ் சாதிக்காய் (Bandanese nutmegs மரங்களை டச்சுக்கப்பல்கள் அழித்தன. இவ்வாறு மரங்களை வெட்டி அழிக்கும் டச்சுக்கப்பல்களுக்கு ஓங்யீ (hongyi) எனப் பெயர்.]

(7) மேலே (5-ல்) கூறியதற்குப் பதிலாகக்காடுகளில் வலுக் கட்டாயமாகப் பணிபுரிவதைத் தவருகப் பயன்படுத்தாமல் பார்த்துக்கொண்டு, நீடித்துச் செயல்படுத்த வேண்டுமென ஆணையர் அறிவுரை அளித்தார்.

(8) நிருவாக அமைப்பு விரிந்துகொண்டு போவதால் அதிக அளவில் அதிகாரிகளை வேலைக்கு நியமிக்க வேண்டும். திறமையில்லா அதிகாரிகளை வேலையிலிருந்து நீக்கி நிருவாகத்தை வலுப்படுத்த வேண்டும்; தாயக அதிகாரிகளை மரியாதையுடன் நடத்திப் பணிபுரியப் பயன்படுத்த வேண்டும். அவர்களுடைய ஊதியத்தைப் பணமாக அளிக்க வேண்டும்; நிலத்தைக் கொடையாக வழங்கியோ மக்களைத் துன்புறுத்திச் செல்வம் பறித்தோ அவர்களுக்குச் சம்பளமளிக்கக் கூடாது.

(9) மறைமுக ஆட்சியை மீண்டும் அமைக்கவேண்டும்.

(10) ஐரோப்பியர்களுக்கும் தாயகத்து மக்களுக்கும் தனித் தனியே நீதிமன்றங்கள் அமைக்கவேண்டும். காப்பரசு (Residency), வட்டார (circuit) நீதி மன்றங்கள் தாயகத்து மக்களுக்காக ஒதுக்கப்பட்டன. படாவியாவில் ஓர் உயர்நீதிமன்றம் (High court) அமைக்கவேண்டும். ராபெல்ஸ் ஜூரி நீதி வழிமுறை (Jury system) உரிமை அல்லது குற்றங்கள் பற்றிய வழக்குகளில் நிகழ்வு பற்றிய முடிவான விவாதத்தை ஆய்ந்து ஒருமனதாகத் தீர்ப்புக் கூறும் 12 பேர் கொண்ட ஆயம் கலைக்கப்பட்டது.

(11) ராபெல்ஸ் ஒழித்த அடிமை வழிமுறையை நீடித்துச் செயல்படுத்த வேண்டும்.

கி.பி. 1818ஆம் ஆண்டிலும், 1819ஆம் ஆண்டிலும் அரசியல் சட்டதிட்டத்தின் அம்சங்களாக ஆணையர்களின் ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இக்கொள்கைகளைச் செயல்படுத்தியிருந்தால் இந்தோனேசியாவில் முக்கியமாக ஜாவாவில், டச்சு ஆட்சி மூலம் பல நன்மைகள் விளைந்திருக்கும். முன்பிருந்த கொடூரமான டச்சு ஆட்சியும் முடிவடைந்திருக்கும்; டச்சுக்காரர்களுக்கும் பல

நன்மைகள் ஏற்பட்டிருக்கும். ஆணையர்களில் ஒருவரான வாண்டெர் கேபல்லன் கி.பி. 1819ஆம் ஆண்டில் நெதர்லாந்துக்குத் திரும்பினூர். ஆனுல் எதிர்பார்த்தது நடக்காமல் இந்தோனேசிய வரலாறு வேறு வழியில் சென்றது; இத் தோல்விக்கு வாண்டெர் கேபல்லன் நிருவாகம்தான் காரணமாய் விளங்கியது.

வாண்டெர் கேபல்லனின் நிருவாகம் (கி.பி. 1819—1824)

இந்தோனேசியாவில் நிலவிய சூழ்நிலையில் மேலே கூறிய கொள்கைகளைச் செயல்படுத்துவது கடினம் எனத் தலைமை ஆளுநர் வாண்டெர் கேபல்லன் புரிந்துகொண்டார். நிருவாகம் நடத்துவதற்காக அவசரமாகவும் உடனடியாகவும் வருமானம் திரட்டவேண்டியதாயிருந்தது. கி.பி. 1819ஆம் ஆண்டு பெரும்போக்கான கொள்கைகளின்படியே நடக்க வேண்டுமென்ருல் தேவையான வருமானம் கிடைக்காது. ஆகையால், அவர் ஓர் எளிய வழியைக் கண்டு பிடித்தார். சில கொள்கைகளைத் தாற்காலிகமாகச் செயல்படுத்த முயற்சி எடுக்கவில்லை; மற்றவற்றைச் செயல்படுத்திஞர்.வாண்டெர் கேபல்லனைப் 'பிற்போக்காளர்' (reactionary) எனக் கிளைவ் டே (Clive day) கண்டனம் தெரிவித்தார். கேபல்லனின் காலத்தவர்களும் அவ்வாறே அவரை அழைத்தார்கள். கிளைவ் டே பின்வருமாறு வரைகிருர்:

> வாண்டெர் கேபல்லன் தம்முடைய ஏழாண்டு ஆட்சியின்போது தாம் பின்பற்றவேண்டும் என அமைக்கப்பட்ட கொள்கைகளைப் புறக்கணித்தார்; படிப்படியாகப் பின்வாங்கிப் பழைய அரசியல் நிருவாக முறையையே பின்பற்றலானூர். குடியேற்றங்களின் அரசியல் சட்டதிட்டங்களை ஒழுங்குபடுத்துவது வெறும் எழுத்தளவில் மட்டுமிருந்தது. (அதாவது நடைமுறைப்படுத்தப்படாத சட்டமாயிருந்தது.) விளைச்சலுக்காக மூலதனம் தேவைப்பட்ட சர்க்கரை, இண்டிகோ, மற்றப்பொருள்களும் பாழ்நிலையடைந்தன. கேபல்லன் 'பிற்போக்காளர்' அல்லர்; சூழ்நிலைதான் அவ்வாறு செயல்புரியும்படி அவரைக் கட்டாயப்படுத்தியது எனக் கோர்நீலியஸ் எலெளட் விவாதித்தார். மொத்தத்தில் கேபல்லனின் ஆட்சியின்போது செலவினங்கள் மிகவும் அதிகரித்தன; டச்சுப் பேரரசரும் டச்சு மக்களும் மறுப்புத் தெரிவித்தார்கள். இந்தோனேசியர்கள் தொடர்ந்து துன்புற்ருர்கள். தீமைகளை ஏற்படுத்தியது ஜாவாப் போர். ஆகையால், பெரும்போக்கான கொள்கைகளின் செயல்முறை தோல்வியடைந்தது எனப் பலர் நம்பினூர்கள்.

வாணிபச் சூழ்நிலையைச் சீர்திருத்தம் செய்யக் கேபல்லன் முயன்றபோது ஐரோப்பியர்கள் முக்கியமாக டச்சுக்காரர்கள் சீறி

யெழுந்தார்கள். சுரண்டலிலிருந்து இந்தோனேசியர்களைப் பாது காக்கும் நோக்கத்துடனும், அப்பகுதியிலிருந்து கிடைக்கும் வருமானத்தை அரசாங்கத்தின் தனி உரிமையின்கீழ்க் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்துடனும், அரசாங்கத்தின் தனி அனுமதியில்லாமல் எவ்விதமான ஐரோப்பிய வாணிகமும், காப்பிக் கொட்டை மாவட்டமான பிரியாங்கருக்குள் (Preanger) நுழையக் கூடாது எனக் கி.பி. 1821ஆம் ஆண்டில் சட்டத்தை நடைமுறைக் குக் கொண்டுவந்தார் அவர்.

கேபல்லன் இந்தோனேசியர்களிடமிருந்து ஐரோப்பியர்கள் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது எனக் கி.பி. 1823ஆம் ஆண்டில் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தார். ஐரோப் பியர்கள் இந்தோனேசியர்களைச் சுரண்டக்கூடாது என்பதே இச் சட்டத்தின் நோக்கம். முக்கியமாகச் சுரகர்த்தா (Surakarta), ஜோக் ஜகார்த்தாவிலிருந்த (Jogjakarta) பண்ணையார்கள் இதனால் பாதிக் கப்பட்டார்கள். அங்குப் பலகாலமாக இந்தோனேசியர்களின் நிலங் களை ஐரோப்பியர்கள் குத்தகைக்கு எடுத்துக்கொண்டிருந்தார்கள். குத்தகைக்கு நிலம் எடுக்கும் ஐரோப்பியர்கள் இந்தோனேசியர் களுக்கு மிகுந்த அளவில் முன் பணம் அளிப்பது வழக்கமாயிருந்தது. குத்தகை முறை மூலம் ஐரோப்பியப் பண்ணையார்களும், இந்தோ னேசிய அதிகாரிகளும் அதிகப் பயனடைந்தார்கள். ஏழைக்குடி யானவர்கள்தாம் வஞ்சிக்கப்பட்டார்கள். ஆகையால் கி.பி. 1823ஆம் ஆண்டுச் சட்டத்தால் பொருளாதாரம் தகர்த்தெறியப் பட்டது. இச்சட்டம் செயல்முறையில் வந்ததால் தாங்கள் கொடுத்த முன்பணத்தை ஐரோப்பியப் பண்ணையார்கள் திருப்பித் தருமாறு கேட்டார்கள். ஆனால், முன் பணத்தை இந்தோனேசியர்கள் ஏற் கெனவே செலவழித்திருந்ததால் திருப்பித்தர முடியவில்லை. ஆகை யால், ஐரோப்பியப் பண்ணையார்களும் இந்தோனேசிய அதிகாரி களும் மனக்கசப்புற்றார்கள். கி.பி. 1823ஆம் ஆண்டுச் சட்டம்தான் கி.பி. 1825—1830ஆம் ஆண்டுகளுக்கிடையே ஏற்பட்ட ஜாவாப் போருக்கு ஒரு முக்கியக் காரணமாய் விளங்கியது.

ஜாவாப் போர், கி.பி 1825-1830

வாண்டெர் கேபல்லனின் நிருவாகம் ஹாலந்து அரசாங்கத்திற்கு மனக்கசப்பு அளித்தது. நிருவாகத்திற்காக அதிகப் பணம் செல வழிக்க வேண்டியதாயிருந்தது; ஏற்றுமதி செய்யும் பொருள்களின் உற்பத்தி போதியவளவு இல்லாமலிருந்தது. ஆகையால் கி.பி. 1824ஆம் ஆண்டில் இவர் ஹாலந்துக்கு அழைக்கப்பட்டார். பதிலாக டூபஸ்டி கிசிக்கினிசு (De Bus de Gisignies) ஆணையர் தலைவராக நியமிக்கப்பட்டார். கி.பி. 1826ஆம் ஆண்டில் டூபஸ் ஆணையர் தலை

வராக ஜாவாவிற்கு வந்தபோது ஜாவாவில் மிகப்பெரிய போர் நடந்து கொண்டிருந்தது. இவர் ஆண்ட நான்கு ஆண்டுகளில் (கி.பி. 1826-30) ஜோக்ஜகார்த்தாவின் சுல்தான் தீபோ நெகரோ வின் (Dipo negoro) ஜாவாப் போர்தான் சிறப்புப் பெற்றது. கேபல்லனின் ஆட்சியின்போதே இக் கலகத்தின் விதை ஊன்றப் பட்டது. டூபஸ் அரசாங்கம்தான் பெரும்போக்கான கொள்கைகள் திட்டத்தை இறுதியாக விலக்கி வைத்தது.

கட்டுப்பாடில்லாத முழுச் சுதந்திரமுள்ள வாணிகத்தைத் தான் டூபஸ் விரும்பினார். நிதிபற்றிய சிக்கலைத்தான் அவர் முதலில் தீர்க்க வேண்டியிருந்தது. இந்தோனேசிய நிலங்களைப் பயன்படுத்த ஐரோப்பியர்களுக்கு வாய்ப்பளித்தால்தான் உற்பத்தி அதிகரிக்கும் என இவர் நம்பினார். ஆகையால் நில விற்பனைக்கும், குத்தகை விடுவதற்கும் ஊக்கமளித்தார்; சுறுசுறுப்புடன் தம் கொள்கைகளைச் செயல்படுத்தினார்:

(1) நில விற்பனை பற்றிய கட்டுப்பாடுகளை எல்லாம் நீக்கினார்.

(2) செலாவணி (currency) முறையைச் சீர்திருத்தினார்.

(3) நிருவாக அமைப்பில் பொருளியல் ஆய்வாளர்களைப் (economists) புகுத்தினார்.

(4) ஜாவாப் பாங்கை நிறுவினார்.

ஆனால், மத்திய ஜாவா முழுவதும் போரில் மூழ்கியிருந்த தால் டூபஸ் செய்த முயற்சிகள் வெற்றியடையவில்லை. ஜாவாச் சுல்தான்களுக்குள் ஒருமையுணர்ச்சி யில்லாமலிருந்தது. சிலர் டச்சுக்காரர்களை ஆதரித்தார்கள்; சிலர் எதிர்த்தார்கள்.

இந்தோனேசியாவின் ஆக்கநலனை வளர்க்கவேண்டும் என்று தம் திட்டங்கள் மூலம் கேபல்லன் எதிர்ப்பழுத்தம் (Pressure) செய்ததால் போர்ச்சூழ்நிலை உருவாகியது. தங்களுடைய ஆக்க நலனுக்காக டச்சுக்காரர்கள்கூடப் பாடுபட முயலுவார்கள் என் பதை இந்தோனேசியர்களால் நம்பமுடியவில்லை. மேலும் செயல் பட்டுவரும் தீர்வை வரி முறையையும் அவர்கள் வெறுத்தார்கள். தங்கள் பொருள்களுக்கு அதிகச் சுங்கவரி செலுத்துவதை இந்தோனேசியர்கள் விரும்பவில்லை. மேலும் குறிப்பிட்ட தொகைக் கீடாக வரிவாடகைக் கட்டண உரிமை சீனர்களிடம் குத்தகையில் விடப்பட்டிருந்ததால் சீனக்குத்தகையாளர்கள் அதிக அளவில் வரியை உயர்த்தித் திரட்டினார்கள். இம்முறையும் இந்தோனேசி

யர்களின் சினத்தைக் கிளறியது. தீபோநெகரோவின் திறமை யான தலைமை கிடைத்தவுடன் இம் மனப்பான்மை கொந்தளித்துக் கலகமாக மாறியது.

ஜாவாப் போரின் முக்கியக் காரணங்கள்

(1) நிலக் குத்தகை ஒப்பந்தத்தை விலக்கியதால் முளைத்த மனப்பான்மை.

(2) மிக அதிகமான சுங்கவரி முறையும், எரிச்சல் உண் டாக்குகிற ஏனைய வரிகளும்.

(3) உயர்குடிமக்களும் (aristocracy) டச்சுக்காரர்களுக் கெதிராக வெகுண்டெழுந்தனர்.

(4) தீபோநெகரோவின் திறமை வாய்ந்த படைத்தலைமை.

ஆகையால் அரசியல், பொருளாதாரம், சமயம் முதலியவற் றின் காரணமாக இப்போர் மூண்டது. பொருளாதார விவகாரம் பற்றிக் கி.பி. 1823ஆம் ஆண்டு நிலச்சட்டத்தால் பாதிக்கப்பட்ட எல்லா இந்தோனேசியர்களும் டச்சு அரசாங்கத்தை எதிர்க்கும் மனப்பான்மையுடன் இருந்தார்கள். சீனக் குத்தகையாளர்களுக்கு அதிக வரி செலுத்தவேண்டியிருந்ததாலும் மக்கள் அரசாங்கத் திடம் குறைகண்டு வெறுத்தனர். கலகம் செய்யும் இளவரசர் தீபோநெகரோ போரின் அரசியல், சமயம் ஆகிய காரணங்களின் மையமாக விளங்கினர்.

தீபோநெகரோ

தீபோநெகரோவின் இளைய சகோதரர் ஜாரோட்டு அல்லது அமன்குபுவானே (Djarot or Amangkubuwono IV) இறந்த வுடன் தீபோநெகரோவிற்கு ஜோக்ஜகார்த்தாவின் சுல்தான் பதவி யளிப்பதாக ராபெல்ஸ் வாக்குறுதி யளித்திருந்தார். ஆனல், டச்சு அரசாங்கம் ராபெல்ஸின் வாக்குறுதியைப் புறக்கணித்தது. பதிலாகக் கி.பி. 1822ஆம் ஆண்டில் ஜாரோட்டின் இரண்டு வயது மகனை ஐந்தாம் அமன்குபுவானேவைச் சுல்தானக அமர்த் தியது. முரண் நகைத்திறத்துடன், நெஞ்சறி நிலையிலன்றிச் சுல்தானின் துணைக்காப்பரசர்களாகத் தீபோநெகரோவையும், மாங்கு பூமியையும் (Mangko Bumi) நியமித்தது. கி.பி. 1824ஆம் ஆண்டில் நில சம்பந்தமான ஒப்பந்தங்கள் எல்லாம் நீக்கப்பட்ட தால் தீபோநெகரோவிற்கும் டச்சு அரசாங்கத்திற்கும் மனக்கசப்பு ஏற்பட்டது. இதற்கு முன்பு தீபோநெகரோவை ஜாவாவின்

சமயத்தலைவராக டச்சு அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. ஒரு தூய கல்லறையிருந்த தீபோநெகரோவின் நிலம் வழியாக ஒரு நெடுஞ்சாலையை அமைக்கவேண்டும் என டச்சு அரசாங்கம் வலியுறுத்தியதால் தீபோநெகரோ டச்சு அரசாங்கத்திற்கெதிராகக் கலகம் செய்தார்.

நாட்டின் 'விடுதலை இளவரசர்' (Prince Liberator)

டச்சு நாத்திகர்களை ஜாவாத் தீவிலிருந்து துரத்தும் ஜாவா முஸ்லிம்களின் தலைவர் எனத் தீபோநெகரோ பரப்பியதால் ஆயிரக் கணக்கான ஜாவா மக்கள் இவரை ஆதரித்தனர். தீபோநெகரோவும் மாங்கு பூமியும் மலைகளுக்குள் ஓடிப்பதுங்கியவுடன் கலகச் சூழ்நிலை உருவாகிறது என டச்சு அரசாங்கம் உணர்ந்தது. ஆனால் பாலெம் பாங்கிற்கும், போனிக்கும் (Boni) ஏற்கெனவே அனுப்பியிருந்த படைகளை வரவழைக்க நேரமில்லை. திடீரென்று தலைநகரத்தில் தீபோநெகரோ தோன்றியபோது மக்கள் பேராதரவுடன் கிளர்ச்சி செய்யத் தொடங்கினுர்கள். குழந்தையாயிருந்த சுல்தானுடன் டச்சுக்காரர்கள் புறமுதுகு காட்டி ஓடினுர்கள்; விட்டு விட்டுப்போன ஐரோப்பியர்களும், சீன வரிக் குத்தகையாளர்களும் கலகக்காரர்களின் கோபத்திற்காளானுர்கள்.

ஒரு சிறு படையுடன் படைப்பெருந்தலைவர் தீகாக் (General De kock) படாவியாவிலிருந்து ஜோக் ஜகார்த்தாவிற்குச் சென்றுர். பல இளவரசர்களை நடுநிலை அரசு ஏற்கும்படி வற்புறுத்தினுர். மதுராவின் அரசரும் (Prince of Madura), சுரகர்த்தாவின் சுசுஹனனும் (Susuhanan of Surakarta: சுசுஹனன் என்பது சோலோவை—Solo—மத்திய ஜாவாவை ஆட்சி செய்யும் அரசின் பட்டப்பெயர்) டச்சுப்படையுடன் சேர்ந்து கலகக்காரர்களை எதிர்த்தார்கள். தம்முடைய திறமை வாய்ந்த மருமான் சென்தோத்தின் (Sentot) உதவியுடன் டச்சுக்காரர்களுக்கெதிராகக் கொரில்லாப் போரைத் தீபோநெகரோ புரியத் தொடங்கினுர். நோயினுல் துன்புற்று ஆயிரக்கணக்கான ஜாவா மக்கள் இறக்கத் தொடங்கியவுடன் படிப்படியாக டச்சு அரசாங்கம் வெற்றிப் பாதையில் செல்லத் தொடங்கியது. கி.பி. 1829ஆம் ஆண்டிற்குள் தாங்கள் தோல்வி அடைவதற்கு முன்னர் அடைக்கலம் புகுவது மேல் என மாங்கு பூமியும், சென்தோத்தும் தீர்மானம் செய்தார்கள். இதுவரையில் ஏறத்தாழ 20,000 கலகக்காரர்கள் மடிந்தனர். எல்லோராலும் கைவிடப்பட்டுத் தம் நிலை மோசமாக இருந்ததால் டச்சு அரசாங்கத்திடம் பேச்சு நடத்த கி.பி. 1830ஆம் ஆண்டில் தீபோநெகரோ முன்வந்தார். தீகாக்கைச் சந்தித்துச்

சுல்தான் என்ற பட்டப்பெயரை—இவரே தமக்கு அளித்துக் கொண்ட பட்டப்பெயர்—தாம் தொடர்ந்து சூட்டிக்கொள்ள அனுமதி தரவேண்டும் என்றும், தம்மை இஸ்லாம் சமயத்தின் பாதுகாவலர், ஆதரவளிப்பவர் என டச்சு அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் தீபோநெகரோ வலியுறுத்தினர். ஆனால் தீகாக் இவரைக் கைது செய்து நாட்டைவிட்டு வெளியேற்றி மெனதோ (Menado) தீவிற்கு அனுப்பினர். இதோடு ஜாவாப் போர் முடிவடைந்தது; ஆனால் இதன் விளைவுகள் முடியவில்லை.

டச்சு அரசாங்கம் இப்போருக்காக 20—25 மில்லியன் கில்டர் களைச் (Guilders) செலவழிக்க வேண்டியிருந்தது. ஆகையால் கி. பி. 1830ஆம் ஆண்டில் இதுவரை இல்லாத அளவு நிதிநிலைமை மோசமாகியது; ஏழ்மையும் குற்றங்களும் தலைவிரித்து ஆடத் தொடங்கின. ஜாவாவில் டச்சு அரசாங்கம் புது நாடுகளைக் கைப்பற்றியிருந்தது; வருமானத்தை அதிகரிக்கும் திறமையில்லாத நிலையிலிருந்தது டச்சு அரசாங்கம். ஜாவாப்போர் முடிந்தவுடன் பெல்ஜியன் கலகம் (Belgian Revolt) மூண்டதால் ஹாலந்தின் நிலைமை மோசமாகியது. பெல்ஜியத்துடன் போர்புரிய ஹாலந் துக்குப் பணம் தேவையாக இருந்தது. ஜாவாமூலம் ஹாலந்து செல்வம் திரட்டும் நிலைமையில் இல்லை. இவ்வாறான சூழ்நிலையில் எவ்வாறு ஜாவா, பெல்ஜியம் ஆகியவற்றிலுள்ள குழப்பங்களை ஹாலந்து தீர்க்கப்போகிறது என்ற வினாக்குறி தோன்றியது. டச்சு மேற்கிந்தியத் தீவுகளில் (Dutch West Indies) தாம் செய்த தேர்வு முறையால் ஜாவாவிலும் இக் குழப்பங்களைத் தீர்க்கலாம் என்ற நோக்குடன் ஜோஹன்னெஸ் வாண்டென் பாஸ் (Johannes Vandan Boseh) ஜாவாவிற்கு வந்தார்.

தீவிர மாறுதல்களின் தேவை

பெரும்போக்கான கொள்கைகளின் திட்டத்தைச் செயல் படுத்தியதிலிருந்து மோசமான இந்தோனேசிய நிதிநிலையைத் திருத்திச் சீரமைக்க வேண்டுமென்பதே டச்சு அரசாங்கத்தின் ஒரே நோக்கம். ஆங்கிலேயே வாணிகப் போட்டியினால் இச்சூழ் நிலையில் மேலும் பல சிக்கல்கள் ஏற்பட்டன. கடல் வாணிபத்தில் டச்சுக்காரர்களை முதன்மையிடத்திலிருந்து ஒதுக்கி ஆங்கிலேயர் கள் முதன்மை இடத்தைப் பிடித்தார்கள். மலாக்கா நீரிணைப்புப் பகுதிகளில் டச்சுக்காரர்கள் நீக்கப்பட்டு ஆங்கிலேய வர்த்தகர்களின் செல்வாக்கு அதிகரித்தது. கி.பி. 1819ஆம் ஆண்டில் சிங்கப்பூர் அமைக்கப்பட்டதால் தீவுக்கூட்டங்களின் (archipelago) வாணிப மையமாகச் செழித்திருந்த படாவியாவின் செல்வாக்குக் குறையத் தொடங்கியது. கி.பி. 1824ஆம் ஆண்டில் ஆங்கிலேய டச்சு

உடன்படிக்கையால் ஆங்கிலேயர்களின் அதிகாரம் நிலையாக ஜாவாப் பகுதிகளுக்கும் வந்தது. டச்சு வாணிபப் பொருள்களுடன் ஆங்கிலேய ஆக்கத்தொழில் சரக்குகளும் வெற்றி நடையில், ஜாவா உட்படப் போட்டி போட்டன.

பெரும்பான்மையான உள்தீவுகள் வாணிகத்தைப் புகீஸ் (Bugis) சீன வணிகர்கள் டச்சுக்காரர்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்டார்கள். ஜாவாவைத் தவிர மற்ற இந்தோனேசியத் தீவுகளில் டச்சு வாணிபத்திற்கிருந்த செல்வாக்கு மங்கிச் சீனர்களின் செல்வாக்குத் தழைத்தோங்கியது. தென்கிழக்காசியாவிலிருந்து டச்சுக்கப்பல் வாணிப நடவடிக்கைகள் மங்கிச் சரியத் தொடங்கின. ஐரோப்பாவிலே உருவாகிய விலை வீழ்ச்சியினால் கி.பி. 1820ஆம் ஆண்டில் காப்பிக்கொட்டையின் விலை மிகவும் குறைந்தது. இந்நிகழ்ச்சி டச்சு வாணிபப் பொருளாதாரச் சூழ்நிலையை மேலும் மோசமாக்கியது. ஹாலந்தின் வாணிப வருமானத்தில் முதன்மையிடத்தைக் காப்பிதான் பெற்றிருந்தது; ஆனால், இதன் விலை வீழ்ச்சியினால் ஹாலந்துப் பொருளாதாரச் சூழ்நிலை பாதிக்கப்பட்டது.

கி.பி. 1819ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1824ஆம் ஆண்டுவரை திட்டம் போட்டு ஜாவாமூலம் செல்வம் திரட்டும் நோக்கம் தோல்வியடைந்தது. ராபெல்ஸின் பெரும்போக்கான கொள்கைத் திட்டத்தை நீடித்து நடத்திய போதிலும் அது பலனளிக்கவில்லை என்பதை டச்சு அரசாங்கம் உணர்ந்தது. கட்டுப்பாடில்லாப் பொருளாதாரச் சூழ்நிலையின் நன்மைகளை ஜாவாக் குடியானவர்கள் பயன்படுத்த முடியவில்லையாதலால் ஜாவா அரசாங்கத்தின் நிதிக்குழப்பத்திற்கு விடையளிக்க முடியவில்லை. ஜாவாப்போர் (கி.பி. 1825-30) கவலைப்படத்தக்க இந்நிதிச் சூழ்நிலையை மேலும் மோசமாக்கி டச்சு அரசாங்கத்தின் கடன் நிலையைப் பெருக்கியது.

ஐரோப்பாவிலும் ஹாலந்தின் அனுபவம் மனச்சாந்தி அளிக்கவில்லை. ஐரோப்பியத் தென்கிழக்காசியச் சரக்குகளின் பங்கீட்டாளர்களாகச் (Distributors) செயல்புரிந்துவந்த ஹாலந்து இப் பழியை இழந்தது. தற்சமயத்தில் பல ரெயின்ஸ் நாடுகள் (Countries of the Rhines) தங்களுடைய தொழிற்சாலைகளை வளர்த்துக்கொண்டு தன்னிறைவுடைய நிலையை அடைய முயன்று கொண்டிருந்தன. மேலும் டச்சுக்காரர்களை வாணிக இடையீட்டாளர்களாக இனியும் பயன்படுத்தக்கூடாது என்ற மனப்பான்மை உருவாகிக் கொண்டிருந்ததால் பயனுகர்வோர் நாடுகளுடன் (Consumer Countries) நேரடியாகத் தொடர்பு கொள்

ளும் ஆர்வம் தோன்றலாயிற்று. ஹாலந்தும் பெல்ஜியமும் சேர்ந்த கூட்டரசுதான் நெதர்லாந்து (Netherlands) ஆனால் கி.பி. 1830ஆம் ஆண்டில் இவர்களிடையே போர் மூண்டது. பல காலமாக நீடித்துவந்த இவ் வுள்நாட்டுப் போரினால் நிதிநிலை இழி நிலையயடைந்தது; இறுதியில் பெல்ஜியம் சுதந்திர நாடாக மாறியது. ஆகையால் இவ்வகையான சூழ்நிலையைத் திருத்தும் நோக்கத்துடன்தான் வண்டென்போஷ் பண்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த முனைந்தார்.

3. பண்பாட்டுத் திட்டம்
(The Culture System)

வண்டென் போஷ் (Vanden Bosch) கி.பி. 1830ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஜாவாவிற்கு வந்தார். இந்தோனேசியாவில் உள்ள ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என வண்டென் போஷிடம் ஹாலந்து அரசாங்கம் கூறியது; ஐரோப்பிய வாணிகத்திற்கு ஊக்கமளிக்க வேண்டும் என்றும் கூறியது. ஆனால், அவ்வாறு ஊக்கமளிக்கும்போது அரசாங்கப் பயிர்த்தொழில் திட்டங்களைப் பாதிக்கக்கூடாது எனவும் எச்சரித்தது.

இந்தோனேசியாவில் உள்ள பிரியாங்கர் (Preanqer) திட்டம் வண்டென் போஷைக் கவர்ந்தது. பிரியாங்கரில் மக்கள் வரியைக் காப்பிக் கொட்டையாக வழங்கினார்கள். மேலும் இந்நாட்டு மக்கள் மன நிம்மதியுடனும் செழிப்புடனும் வாழ்ந்தார்கள். ஜாவாவின் மற்றப் பகுதிகளில் குடியானவர்கள் தங்கள் விளைபொருள்களை முதலாளிகளிடம் கொடுத்தார்கள். இப்பொருள்களின் வரிகளைக் குடியானவர்களுக்குப் பதிலாக முதலாளிகள் கட்டினார்கள். இம் முறையைச் சிறிது மாற்றி ஜாவாவைச் செழிப்புள்ள நாடாக்க வேண்டும் என வண்டென் போஷ் கருதினார். வரிப்பணத்திற்குப் பதிலாக விளைபொருள்களைக் குடியானவர்களும், நிலச்சொந்தக்காரர்களும் கொடுக்கவேண்டும் என வண்டென் போஷ் கூறினார். இம்முறைக்குக் காலப்போக்கில் பண்பாட்டுத்திட்டம் (The Culture system) எனப் பெயர் வந்தது. இத்திட்டத்தின்கீழ் மக்கள் தாங்கள் கொடுக்கவேண்டிய வரிகளை விளைபொருள்களைக் கொடுத்துத்தான் தீர்க்கவேண்டும். இத்திட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு நிறைய விளைபொருள்கள் கிடைக்கும். அப்பொருள்களை ஹாலந்துக்குக் கப்பல் மூலம் அனுப்பி விற்றால் அரசாங்கத்திற்கும் டச்சு வியாபாரிகளுக்கும் நிறைய இலாபம் கிடைக்குமென வண்டென் போஷ் கருதினார். இம்முறைக்குச் 'சரக்கனுப்புத் திட்டம்' (Consignment system) என்று பெயர் வந்தது.

ஆனால், மற்ற டச்சு அரசாங்க அதிகாரிகள் வண்டென் போஷின் திட்டத்தை வரவேற்கவில்லை. இத்திட்டத்தின்படி குடியானவர்கள் வலுக்கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். அரசாங்கத்திற்குத் தனிக்குத்தகை உரிமையும், தனி உரிமையும் கிடைக்கின்றன; இது குடியானவர்களுக்கு நல்லதன்று என வாதாடினார்கள். மேலும் இத்திட்டம் தனியார் வாணிகத்திற்கு இடையூறாக இருக்கும். பொருள்களின் விலைமதிப்பீடு சில சமயங்களில் ஏறும்; சில சமயங்களில் இறங்கும். ஆகையால் ஆட்சியாளர்களின் வருமானம் நம்ப முடியாத நிலையிலும், நிலையில்லாமலும் இருக்கும். இக்காரணங்களைச் சுட்டிக்காட்டி மெர்குஸ் என்பவர் பதவியிலிருந்து விலகுவதாகக் கடிதம் கொடுத்தார். ஆனால், வண்டென் போஷ் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

வண்டென் போஷ் ஜாவாவில் பயணம் செய்தார். பலகிராமத் தலைவர்களைச் சந்தித்து உடன்படிக்கைகளைச் செய்துகொண்டார். இவ்வுடன்படிக்கைகளின்படிக் கரும்பும் இன்டிகோவும் (அவுரிச் செடி) வரிப்பணத்திற்குப் பதிலாக அரசாங்கத்திற்கு இக்கிராமத் தலைவர்கள் கொடுக்கவேண்டும். அரசாங்கம் நம்பியிருக்கும் சில ஐரோப்பியக் குத்தகையாளர்கள் இப்பொருள்களை ஏற்றுமதி செய்து விற்கவேண்டும். இவ்விளைபொருள்களில் வரும் இலாபத்தில் ஒரு பாகம் இக்குத்தகையாளர்களுக்குக் கொடுக்கப்படும். முதன் முதலாகப் பண்பாட்டுத்திட்டம் இவ்வாறுதான் இந்தோனேசியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், முதல் முறை கிராமத் தலைவர்கள் மனமுவந்து தாமாகவே இத்திட்டத்தில் பங்கு கொண்டார்கள். மெதுவாக இத்திட்டம் இந்தோனேசியா முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டது.

வண்டென் போஷ் தமது பண்பாட்டுத்திட்டம் அதற்கு முன்னாலிருந்து சுயேச்சை விவசாயத்திட்டத்தை (Free Cultivation)விட உயர்ந்தது என்பதை பின்வரும் காரணங்களைக் கூறி நிரூபிக்க முயன்றார். ராபெல்ஸ் திட்டப்படி ஜாவாவால் இங்கிலாந்திற்கு அதிக இலாபம் வந்தது. ஜாவாமக்கள் அதிகமாக வரிசெலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. குடியானவர்கள் விளைச்சலில் $\frac{2}{5}$ பாகத்தை வரியாகச் செலுத்தினார்கள். ஆகையால் உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு வரவில்லை. காப்பிக்கொட்டையைத் தவிர வேறு எந்தப் பொருளையும் ஏற்றுமதிக்காகப் பயிரிடவில்லை. காப்பியைக்கூட வலுக்கட்டாயப்படுத்தியதால்தான் பயிரிட்டார்கள். எல்லா இலாபமும் இடையீட்டாளர்களுக்கும், தரகர்களுக்கும் (Middle-

men) சென்றது. இலாபத்தில் கொஞ்சம் கிராமத்தலைவர்களுக்கும் சென்றது. குடியானவர்களுக்குத் தங்கள் உழைப்புத்தான் கிடைத்தது. அவர்கள் வேறு ஒரு பயனையும் அடையவில்லை. சாதாரணமாக அவர்களுக்கு இரண்டு புளோரின் (Florin Shilling) வரும்படிக்குமேல் கிடைக்கவில்லை. இம்முறை வட்டித்தரகர்களுக்கும், இடையீட்டாளர்களுக்கும்தாம் அதிக இலாபம் தந்தது. மக்களிடையே ஏழ்மைநிலை பெருகியது. பிரியாங்கர் திட்டப்படி குடியானவர்களுக்கு ஒரு பிகோல் (Pikol) காப்பிக்கு ஏழு புளோரின் கிடைத்தது. விளைந்த நெல்லில் பத்தில் ஒரு பகுதிதான் பகர ஆளுநரிடம் (Regent) வரியாகக் கொடுத்தார்கள். மக்கள் சுகமாய் வாழ்ந்தார்கள். வருமானம் பெருகியது. பிரியாங்கர் திட்டமும், நிலவருவாய்த்திட்டமும் கலந்த திட்டம்தான் பண்பாட்டுத்திட்டம். இத்திட்டப்படி வரியை $\frac{2}{5}$ பகுதிப் பணமாகப் பெறுவதற்குப் பதிலாக $\frac{1}{5}$ பங்கு விளைபொருளாய் வாங்கப்படுகிறது. நெல்விளை நிலங்களில் $\frac{1}{5}$ பகுதி ஏற்றுமதிப் பொருள்களை வேளாண்மை செய்வதற்காக ஒதுக்கியிருந்தால் அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் வரிப்பணம் கொடுக்கவேண்டியதில்லை. நிருணயித்த நிலவருவாய்க்குமேல் பணம் கையிருப்பிலிருந்தால் அவ்வருவாய் அக்கிராமத்திற்கே கொடுக்கப்படுகிறது. குடியானவர்களின் தவறு தவிர வேறு ஏதாவது ஒரு காரணத்தால் விளைவு குறைந்தால் அது அரசாங்கத்தைத்தான் பாதிக்குமே தவிரக் குடியானவர்களைப் பாதிக்காது. இரும்பு போன்ற ஏற்றுமதி செய்யும் பொருள்களைப் பயிரிடும்போது அவைகள் முதலாளிகள் கையில் ஒப்படைக்கப் படுகின்றன. குடியானவர்கள் நான்கு பிரிவாகப் பிரிக்கப் படுகின்றனர். ஒரு சாரார் பயிர் விளைவைக் கவனிக்கவேண்டும்; மற்றொரு சாரார் அறுவடை செய்யவேண்டும்; இன்னொரு சாரார் இவ்விளைச்சலை வண்டிகளில் ஏற்றித் தொழிற்சாலைக்கு அனுப்ப வேண்டும்; கடைசிப் பிரிவினர் தொழிற்சாலையில் வேலைசெய்ய வேண்டும். பயிர்கள் விளைந்து முதிர்ந்துவிட்டால் அக்கிராம மக்கள் தங்கள் கடமைகளை முடித்துவிட்டதாகக் கருதப்படுவர். மேலும் அவர்கள் நிலத்தவணைக்குக் குத்தகைத் தொகையும் கொடுக்கவேண்டாம். ஐரோப்பிய அலுவலர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் மேற்பார்வையாளராக இருந்து வேலைகள் ஒழுங்காகச் செய்யப்படுகின்றனவா என்று கவனிக்கவேண்டும். துன்புறுங் காலங்களில் நிலத்தவணைக் குத்தகைத் தொகையை மக்கள் கொடுக்கவேண்டாம். இத்திட்டத்தின்படி ஜாவாமக்கள் இன்னும் அதிகமாகச் சம்பாதிக்கலாம் என வண்டென் போஷ் கருதினார். இத்திட்டத்தின்படி நான்கு ஆண்டுகளுக்குள் தொழில் செய்யும் நிலங்கள் மிகுந்தன; வாணிபம் பெருகியது; செலவினத்திற்குக்

குறைந்த வரவின்நிலை (deficit) நீங்கியது. டச்சு ஆட்சியும், அதிகாரமும் பரவின; அமைதி நிலவியது என வண்டென் போஷ் கூறினர்.

வண்டென் போஷ் பண்பாட்டுத் திட்டத்தின் மூலக் கோட்பாடுகள் பின் வருமாறு :

(1) ஒவ்வொரு கிராமத்திலும் நெல்விளையும் நிலங்களில் $\frac{1}{5}$ பகுதியில் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருள்களைப் பயிரிடவேண்டும்.

(2) ஒதுக்கப்பட்ட நிலங்களில் நெல்விளைவதற்கு எவ்வளவு குடியானவர்கள் பயன்படுத்தப்படுகிருர்களோ அதே அளவு குடியானவர்களைப் பயன்படுத்தவேண்டும்.

(3) ஒதுக்கப்பட்ட நிலங்களுக்கு நிலத்தவணைக் குத்தகைத் தொகை கொடுக்கவேண்டாம்.

(4) நிருணயித்த நிலத்தவணைக் குத்தகைத் தொகைக்குமேல் ஒதுக்கப்பட்ட நிலங்களில் விளைச்சல் இருப்பின், அதன் அதிகப் படியான வரும்படி அக்கிராமத்திற்கே கொடுக்கப்படும்.

முதலில் பண்பாட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியபோது குடியானவர்கள் இத்திட்டத்தில் கலந்துகொள்ளவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. விவசாயிகளுக்கு விருப்பமிருந்தால் அரசாங்கத்திற்காக $\frac{1}{5}$ பங்கு நிலத்தை ஒதுக்கி அரசாங்கத்திற்கு வேண்டிய பொருள்களைப் பயிரிடலாம். அரசாங்கம் செய்யும் வாணிகத்தோடு கட்டற்ற வாணிகமும் (Free Trade) இருந்தது. ஆனுல், சில ஆண்டுகளுக்குப் பிறகு அரசாங்கம் குடியானவர்களை வலுக் கட்டாயப்படுத்திப் பண்பாட்டுத்திட்டத்தை இந்தோனேசியா முழுவதும் கொண்டுவந்தது.

கி.பி. 1831ஆம் ஆண்டு இண்டிகோ, கரும்பு, காபி முதலியன ஜாவா முழுவதும் பயிரிடவேண்டும் என வண்டென் போஷ் கட்டாயப்படுத்தினர். ஒவ்வொரு துணைக்காப்பரசின் ஆளுநரும் (Resident) தலைக்கு ஒரு புளோரின் வீதம் ஏற்றுமதியாகும் பண்டங்களை அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டும் என்று கி.பி. 1832ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அறிவித்தார். குடியானவர்கள் கரும்பு, இண்டிகோ முழுவதையும் அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டும். ஆனுல், அரசாங்கத்திற்குக் கொடுக்கும் நிலத்தவணைக் குத்தகைக் காபியைத் தவிர மிஞ்சிய காபியைக் குடியான

வர்கள் வெளியிலே விற்கலாம். ஆனல், கி.பி. 1833ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரசாங்கம் நிருணயித்த விலையில் எஞ்சிய காபியை அரசாங்கத்திற்கே விற்கவேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார். இதனல் அரசாங்கத்திற்குத் தனிக்குத்தகை உரிமை கிடைத்தது.

ஆனல், வல்லாட்சி முறைக்கு உட்படாத சில நிலங்களும் ஐரோப்பியர்களிடம் இருந்தன. உதாரணமாக, கி.பி. 1837ஆம் ஆண்டில் தனிமுறை வியாபாரத்தின் மூலம் ஏற்றுமதியான சர்க்கரை 3,00,000 பிகோல் (Pikols); அரசாங்கம் மூலம் ஏற்றுமதியான சர்க்கரை 5,00,000 பிகோல்; பண்பாட்டுத் திட்டம் பின்னல் ஒழிந்தபோது தனியார் விவசாயம் செய்த சில காபித் தோட்டங்களும், நான்கு தனியாரால் நடத்தப்பட்ட சர்க்கரைத் தொழிற்சாலைகளும் இந்தோனேசியாவில் இருந்தன. ஆனல் இவற்றைப் பொருட்படுத்தக்கூடாது. ஏனெனில், பண்பாட்டுத் திட்டம் இருந்த காலத்தில் இத்திட்டம் இந்தோனேசியா முழுவதும் பரவியிருந்தது.

பண்பாட்டுத் திட்டத்தால் வியக்கத்தக்க முறையில் ஜாவாவிலிருந்து ஹாலந்துக்குச் செல்வம் வந்து குவிந்தது. கி.பி 1830ஆம் ஆண்டு ஜாவாவிலிருந்து ஹாலந்துக்கு ஏற்றுமதியான பொருள்களின் மதிப்பு 15 அல்லது 20 மில்லியன் புளோரின் (Florin); கி.பி. 1835ஆம் ஆண்டில் 32·6 மில்லியன் புளோரின்; கி.பி. 1840ஆம் ஆண்டில் 74 2 மில்லியன் புளோரின் வண்டென் போஷின் குறிக்கோள் என்னவென்றல் ஜாவாவில் 40,000 பிகோல் காபியும், 4,00,000 பிகோல் சர்க்கரையும், 2 மில்லியன் பவுண்டு இண்டிகோவும் விளையவேண்டும். ஆனல் அவர் எதிர்பார்த்ததற்கு மேலாக இவை விளைந்தன. கி.பி. 1840 ஆம் ஆண்டில் ஜாவாவிலிருந்து 1 மில்லியன் பிகோல் காபியும் 1 மில்லியன் பிகோல் சர்க்கரையும், 2 மில்லியன் பவுண்டுக்குமேலாக இண்டிகோவும் ஹாலந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனல் அரசாங்கத்திற்காகப் பயிரிடப்பட்ட பண்ணைகளில் புகையிலையும், தேயிலையும் வண்டென் போஷ் எதிர்பார்த்தபடி விளையவில்லை. ஆனல், அரிசி ஏற்றுமதியில் அதிக வளர்ச்சியிருந்தது.

மக்கள் தொகை பெருகியதால் குடியானவர்கள் பெருகினர்கள். குடியானவர்கள் பெருகியதால் உற்பத்தி பெருகிற்று. ஆனல் மூலதனம் வெளிநாடுகளிலிருந்து வரவில்லை. பண்பாட்டுத் திட்டத்தின் மூலம் வந்த இலாபத்தையே அரசாங்கம் மூலதனமாகப் போட்டது. ஆனல் உற்பத்தி பெருகுவதற்காகப் புது

முறைகளை அரசாங்கம் கையாளவில்லை. நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. ஆனால் ஆய்வறிவு முறைகளைப் புகுத்தவில்லை.

பண்பாட்டுத் திட்டமுறையில் குடியானவர்களுக்குள் பிளவு ஏற்பட்டது. வண்டிகளில் கரும்பை ஏற்றி அனுப்பும் விவசாயிகள் விவசாயத்தை மறந்து அதையே ஒரு தொழிலாகக் கொண்டார்கள். நெல் விளையும் நிலங்களில், நெல் விளையாத காலங்களில் குடியானவர்கள் சோயாமொச்சை, மக்காச்சோளம் முதலியவற்றைப் பயிரிட்டார்கள். இதனால் குடியானவர்களுக்கு அதிகப் பணம் கிடைத்தது. கிராமங்களில் நன்னிலைமை நிலவியது. ஆகையால் பண்பாட்டுத் திட்டமுறையை நீக்கினால் மக்கள் அதை வரவேற்க மாட்டார்கள் என்று பண்பாட்டுத் திட்டமுறையை எதிர்த்த வான் ஹோவல் (Van Hoevell) அவர்களே கூறுகிறார்.

புள்ளியியலும் (Statistics) இந்தக் கருத்துரையை ஆதரிக்கிறது. பண்பாட்டுத் திட்டமுறைக் காலத்திலே மக்கள் தொகை 6 மில்லியனிருந்து 9 மில்லியனாக மாறியது. ஏற்றுமதியும் அதிகரித்தது. உப்பு வரியையும், அங்காடி வரியையும் மக்களிடமிருந்து அரசாங்கம் வாங்கியது. பருத்தி, பருத்தி ஆடைகள் ஆகியவற்றின் இறக்குமதி பெருகியது. கி.பி. 1830ஆம் ஆண்டிலே 3·8 மில்லியன் புளோரின் பருத்தியும், கி.பி. 1840ஆம் ஆண்டிலே 13·1 மில்லியன் பருத்தியும், இறக்குமதி செய்யப்பட்டன. பருத்தி இறக்குமதி மிகுந்திருந்தாலும் $\frac{2}{3}$ பகுதி பருத்தி ஆடைகள் இந்தோனேசியாவிலே நெய்யப்பட்டன. பண்பாட்டுத் திட்டத்தால் கி.பி. 1840ஆம் ஆண்டுவரை மக்களுடைய வாழ்க்கைநிலை ஓங்கியது; வளமை வந்தது என்று கூறலாம்.

பொதுவாக, அதிகாரிகள், ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின் விளைவிலே கவனம் செலுத்தினார்கள்; நெல் விளைவில் கவனம் செலுத்தாமல் புறக்கணித்தார்கள். குடியானவர்களின் நன்மையைப்பற்றிச் சிந்திக்காமல் தங்களுடைய விற்பனை முகவர் பங்கு வரிமீதே (commission) அதிகக் கவனம் செலுத்தினார்கள். அரசாங்கத்திடம் நல்ல பெயர் வாங்கவேண்டும் என்றே எண்ணினார்கள். ஆகையால், பல சமயங்களில் எல்லைமீறி நடந்தார்கள். சட்டப்படி $\frac{1}{5}$ பங்கு நிலத்தில்தான் குடியானவர்கள் ஏற்றுமதி செய்யப்போகும் பொருள்களைப் பயிரிடவேண்டும். ஆனால் சில சமயங்களில் குடியானவர்களைக் கட்டாயப்படுத்திப் பாதி நிலத்திற்குமேல் ஏற்றுமதி செய்யப்போகும் பொருள்களைப் பயிரிடச் செய்தார்கள். அதிகாரிகள் சில இடங்களில் நீர்ப்பாசன

வசதிக்காகக் கிராமத்திலுள்ள எல்லா நிலங்களிலும் ஏற்றுமதி செய்யும் பொருள்களைப் பயிரிடச் செய்தார்கள். மேலும் குடியான வர்களுக்கு அவர்கள் கொடுக்கும் கரும்பு அளவு பணம் கொடுக் காமல் சர்க்கரை ஆலை சர்க்கரையை உற்பத்தி பண்ணுகிற அளவு தான் கொடுத்தார்கள். பெரும்பகுதிக் குடியானவர்களுக்குச் செய்த வேலைகளுக்குக் கூலியே கிடைக்கவில்லை.

அரசாங்கம் ஒப்பந்தங்களை எளிதில் கொடுத்தது; நிலங்க ளுடைய இயல்புகளைப்பற்றிச் சிந்திக்காமல் அரசாங்கத்திற்கு வேண்டிய பொருள்களைப் பயிரிடச் செய்தார்கள். ஆனால் பண் பாட்டுத் திட்ட முறையில் வளமை வந்ததால் அரசாங்கம் இந்த குறைபாடுகள் பற்றிச் சிந்திக்கவில்லை.

முதன்முதலாகப் பண்பாட்டுத் திட்டமுறையில் இருந்த குறைகளின் அறிகுறி கி.பி. 1843ஆம் ஆண்டிலே செரிபோனில் (cheribon) தெரிந்தது. கி.பி. 1830ஆம் ஆண்டு செரிபோனில் பொதுவாக நெல்தான் விளையும். ஆனால் பண்பாட்டுத் திட்ட முறையை அறிமுகப்படுத்தியவுடன் காபி, கரும்பு, இண்டிகோ, தேயிலை, இலவங்கப்பட்டை (மரம்) போன்ற பொருள்கள் பயிரிடப் பட்டன. கி.பி. 1843ஆம் ஆண்டிலே அரசாங்கம் நெல்லையும் பயிரிட முன்வந்தது. ஒரு கூட்டு வாணிக நிலையம் (firm) இது பற்றி அரசாங்கத்திடம் ஒப்பந்தம் செய்து கொண்டது. இவ்வொப் பந்தத்தின்படி இந்த நெல் விளையும் நிலங்களிலிருந்து அரசாங்கத் திற்குச் சேரவேண்டிய நிலத்தவணைக் குத்தகைத் தொகையை நெல்லாக இந்நிலையம் விவசாயிகளிடமிருந்து வாங்கிக்கொண்டு ஏற்றுமதி செய்யும். உடனே செரிபோனில் பஞ்சம் வந்தது. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் செரிபோனை விட்டு வெளியேறின; பலர் மடிந்தார்கள். கி.பி. 1843ஆம் ஆண்டிற்கும், 1848ஆம் ஆண்டிற்கும் இடையில் இன்னும் பல இடங்களில் பஞ்சம் வந்தது. ஒரு நகரத்தில் மக்கள் தொகை 3,36,000 என்பதிலிருந்து 1,20,000 ஆகக்குறைந்தது. இன்னொரு மாவட்டத்தில் 89,500 என் பதிலிருந்து 9000 ஆகக் குறைந்தது. கி.பி. 1841–45ஆம் ஆண்டு களில் அரிசி ஏற்றுமதி 4·29 மில்லியன் புளோரின். ஆனால் கி.பி. 1846–50ஆம் ஆண்டுகளில் இதுவே 3.17 மில்லியன் புளோரி னுகக் குறைந்தது. அரிசி இறக்குமதி 2,33,000 புளோரினிலிருந்து 6,12,000 புளோரினுக அதிகரித்தது. பருத்தி ஆடைகள் வாங்கு வதற்கு மக்களிடம் பணமில்லை. ஆகையால் பருத்தி ஆடைகளின் இறக்குமதி 13·1 மில்லியன் புளோரினிலிருந்து 9·8 மில்லியன் புளோரினுகக் குறைந்தது. கி.பி. 1845ஆம் ஆண்டிலிருந்து 1850ஆம் ஆண்டு வரை காபி, சர்க்கரை, இண்டிகோ முதலிய

வற்றின் ஏற்றுமதி மிகவும் குறைந்தது. பண்பாட்டுத் திட்டமுறை யின் மூலம் வந்த வளமை கி.பி. 1840ஆம் ஆண்டு வரைதான் நீடித்தது. அதிகாரிகளிடமிருந்து பண்ணையாளர்களுக்கு உற்பத்தி முறைகளை மேற்பார்வையிடும் பொறுப்பினை மாற்றவேண்டும் எனக் கி.பி. 1841ஆம் ஆண்டில் வண்டென் போஷ் கூறினர். ஒரு வேளை பண்பாட்டுத்திட்ட முறையின் குறைகளைப் பார்த்துத் தான் இவ்வாறு கூறினர் போலும். உண்மையில் கி.பி. 1840ஆம் ஆண்டுக்குப் பிறகு பண்பாட்டுத் திட்டமுறையால் மக்களுக்கு ஏழ்மைநிலை வந்தது.

கரும்புத் தோட்டங்களில், நெல் நிலங்களில் வேலை செய்வது போல் மூன்று மடங்கு வேலை செய்யவேண்டும். ஒவ்வொரு குடும்பமும் 250 காப்பிச் செடியிலிருந்து 1000 காப்பிச்செடி நடவேண்டும் என அதிகாரிகள் குடியானவர்களைத் துன்புறுத்தி னர்கள். குடியானவர்களை எல்லாம் கூட்டமாக ஒதுக்கி வைத்துக் காப்பிச்செடி நடவேண்டும் என வற்புறுத்தினர்கள். குடியான வர்களை அவர்கள் வீடுகளிலிருந்து இழுத்துச் சென்று மாதக் கணக்கில் இண்டிகோ நிலங்களில் வேலை செய்யச் செய்தார்கள். மேலும் இக்குடியானவர்களுக்கு இதிலிருந்து வரும் வருமானம் சாப்பிடுவதற்குக்கூடப் போதவில்லை. மேலும் விளைபொருள்களை வண்டியேற்றி அனுப்புவதற்கும், தொழிற்சாலைகளில் வேலை செய் வதற்கும், பெருஞ்சாலை போடுவதற்கும், பாலம் கட்டுவதற்கும், மரக்கலம் செல்லத்தக்க நீர்வழி (waterways) அமைப்பதற்கும் அதிகாரிகள் அவர்கட்குக் கூலி கொடுப்பதில்லை. பொதுவாக, குடியானவர்களின் நிலை இரக்கத்திற்குரியதாக இருந்தது. குடியான வர்கள் விற்ற காப்பிக்கொட்டைகளுக்குக் குறைந்த விலை கொடுக்கப் பட்டது. ஆனல், 1870ஆம் ஆண்டில் பணிமுறை சாராத தனி முறை வாணிபம் வந்தும் மக்களுடைய நிலைமையில் மாறுபாடு இல்லை.

வண்டென் போஷ் டச்சு நாட்டின் இலாபத்தைக் கருதியே பண்பாட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினர். ஆங்கிலேயப் பொருள்களை இந்தோனேசியர்கள் வாங்கவேண்டும் என்ற நோக் கத்துடன் ராபெல்ஸ் உழைத்தார். ஆனல் இந்தோனேசிய மக்கள் டச்சு நாடு முன்னேறுவதற்காக உழைக்கவேண்டும் என்ற எண் ணத்துடன் வண்டென்போஷ் உழைத்தார். வண்டென்போஷ் பகர ஆளுநருடைய (Regent) நோக்கத்தைப் புரிந்துகொண் டார். அவர் தம் மக்களை வேலை செய்ய ஊக்குவித்தார். ஆகை யால் வண்டென் போஷ் பகர ஆளுநர்களுக்குத் தேவையான அதிகாரம் கொடுத்தார். ஆனல், கிராம விவகாரங்களில் தலையிட

யாருக்கும் அனுமதி கொடுக்கவில்லை. ஒவ்வொரு கிராமத்தையும் 'சிறு குடியரசு' என்றே கூறலாம். இதனால்தான் 1840ஆம் ஆண்டு வரை மக்களிடம் அமைதியும் வறுமையும் நிலவின.

பண்பாட்டுத் திட்டத்தின்கீழ்க் கிராமத் தலைவர்கள் அரசாங்கத்தின் கைக்கூலிகளாக மாறினார்கள். அவர்கள் மக்களின் ஆதரவைத் தேடவில்லை. மக்கள் அவர்களின் பணியாளர்கள் ஆனார்கள். அரசாங்கத்தின் ஆதரவிலிருந்ததால் எதை வேண்டுமானாலும் செய்ய முற்பட்டார்கள். பலாத்கார முறைகளைக் கடைப்பிடித்து அவர்கள் விவசாயிகளை நிலங்களில் வேலை செய்யத்தூண்டினார்கள். குடியானவர்களை வற்புறுத்திப் பொதுநலப்பணிகளில் ஈடுபடச் செய்தார்கள். குடியானவர்களைத் தங்களுக்குப் பணி செய்வதற்காக வைத்துக்கொண்டார்கள். ஆகையால் நிலச்சொந்தக்காரர்களும், நிலத்தில் வேலை செய்பவர்களும் அதைத் தனிச்சலுகையாகக் கருதவில்லை. அங்காடியில் உள்ள கொடுக்கல் வாங்கல் நிலைமையைப்பற்றிக் கிராம மக்களுக்குத் தெரியவில்லை. ஆகையால், அவர்களுக்கு வியாபார அறிவு வளரவில்லை; நிலத்தின் உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றவில்லை; வண்டென் போஷ் அவர்களை குழந்தைகளைப்போல் நடத்தினார்.

கிராமத்தில் உள்ள சீன வட்டித்தொழிலர்களுடைய பலத்தைக் குறைக்கவேண்டும் என்று நினைத்து வண்டென் போஷ் பகர ஆளுநர்களின் அதிகாரத்தை அதிகரித்தார். ஆனால் சீனர்களைக் குத்தகையாளர்களாக (contractor) எடுக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மேலும் இறக்குமதி அதிகமானதாலும், தெருவிலே சில்லரைச் சாமான்கள் விற்பதற்காகச் சிறு கடைகள் முளைத்ததாலும் சீனர்களின் எண்ணிக்கையும், செல்வமும், வலிமையும் அதிகரித்தன.

பண்பாட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியபோது வண்டென் போஷின் நோக்கம் பின்வருவன :—

(1) ஜாவாவை வளமாக்கி அதன் கடனை அதனையே தீர்க்கச் செய்யவேண்டும்.

(2) ஹாலந்தின் கப்பற் போக்குவரத்திற்கும் வாணிகத்திற்கும் உற்சாகமூட்ட வேண்டும்.

(3) ஹாலந்தில் உள்ள மூலதனத்திற்கும், தொழில் துறைக்கும் தடையற்ற வெளிநாட்டு வாணிகக்களத்தை உருவாக்க வேண்டும். இம்மூன்று நோக்கங்களில் அவர் நினைத்ததற்குமேல்

வண்டென் போஷ் வெற்றி அடைந்தார். ஹாலந்தின் கப்பற் போக்குவரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது. டச்சுக் கப்பல் கம்பெனி என். ஹெச். எம். (N.H.M.) தோன்றியதாலும், அனுப்புச் சரக்குத் திட்டத்தாலும் டச்சுக்காரர்களின் கடற்படையின் சக்தி அதிகரித்தது. இங்கிலாந்திற்கும், பிரான்சிற்கும் அடுத்தபடியாக டச்சுக்காரர்களிடம்தான் அதிகக் கப்பற்படை இருந்தது.

சரக்கனுப்புத் திட்டம் டச்சு வாணிகத்திற்குத் தூண்டுகோலாயிருந்தது. கி.பி. 1837ஆம் ஆண்டில் காப்பிக்கொட்டை வியாபாரத்தில் ஐரோப்பாவிலே முதன்மை இடம் பெற்றிருந்தது ஹாலந்து. ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் காப்பிக்கொட்டை, சர்க்கரை முதலிய சரக்குகளின் முக்கிய வியாபாரத்தலமாகயிருந்தது. பண்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஜாவாவிலிருந்து ஹாலந்துக்குச் செல்வம்வந்து குவிந்ததால் டச்சுக்காரர்களின் வாணிகம், ஆக்கத்தொழில், கப்பற்போக்குவரவு, கப்பற் சரக்கனுப்பீடு முதலியன தழைத்தோங்கி வளர்ந்தன. பத்தொன்பதாம் நூற்றுண்டின் முதலிலே டச்சுக்காரர்களிடையே ஊக்கமும் ஆர்வமும் இல்லாததால் ஜாவாவின் மூலம் ஹாலந்தைச் செழிப்புறச் செய்ய முடியவில்லை. ஆனுல் ஜாவாவில் விபக்கத்தக்க நிகழ்ச்சிகளை நடத்தலாம்; அதன் மூலம் ஹாலந்தைச் செழிப்புள்ள நாடாக்கலாம் என்பதைத்தான் வண்டென் போஷ் எடுத்துக் காட்டினர்.

4. மற்ற இந்தோனேசியத் தீவுகளில் (ஜாவாவைத்தவிர) டச்சு ஆதிக்கம்

ஜாவாவில் பண்பாட்டுத் திட்டத்தில் கவனம் செலுத்தி வந்ததால் கடற்கொள்ளைக்காரர்களை ஒழிக்கவோ, மற்ற இந்தோனேசியத் தீவுகளின்மேல் கவனம் செலுத்தவோ டச்சு அரசாங்கம் அதிக அளவில் முயற்சி எடுக்கவில்லை. கி.பி. 1870ஆம் ஆண்டு வரை பெரும்பான்மையான அளவில் சுந்தா நீரிணைப்பைத்தான் நெதர்லாந்து வாணிபச் சமுதாயக் கப்பல்கள் பயன்படுத்தின. மலாக்கா இடைக்கழியை மலேயா பக்கமிருந்த ஆங்கிலேயர்கள் கட்டுப்படுத்தி, அதிகாரம் செலுத்த டச்சு அரசாங்கம் விட்டு விட்டது. கி.பி. 1840ஆம் ஆண்டில் படாவியா தன் ஆட்சி அதிகாரத்தைப் பாலித்தீவில் செலுத்தியது. கி.பி. 1851ஆம் ஆண்டில் வெள்ளீயம் உற்பத்தி செய்யும் பங்காத் தீவைக் (Bangka Island) கைப்பற்றியது. கி.பி. 1855–1859 ஆகிய ஆண்டுகளில் செலிபெஸின் முக்கியத் துறைமுகங்களைக் கைப்பற்றியது.

கி.பி. 1856–1864ஆம் ஆண்டுகளில் புகையிலை விளையும் தெற்கு, கிழக்குச் சுமத்திரா ஆகிய பகுதிகளைக் கட்டுப்பாடில்லாமல் திறக்கப்பட்டதால், அச்சே சுல்தானுடன் (Acheh Sultan) டச்சு அரசாங்கத்திற்குக் கொள்கைப் பிணக்கேற்பட்டது. ஒரு காலத்தில் இப்பகுதிகள் அச்சே சுல்தானின் மேலாட்சி உரிமைப் பகுதிகளாயிருந்தன. சுமத்திராவின் பொருளாதாரச் செழிப்பு புகையிலை விளைச்சல் வளர்ச்சியின் மூலம் முதலில் தெரிந்தது. நீராவிக் கப்பல்கள் அறிமுகப்படுத்தப்பட்டதாலும், போர்னியோ சுமத்திரா ஆகிய இடங்களில் நிலக்கரிச் சுரங்கங்கள் திறக்கப்பட்டதாலும், உள்ளூர்த் தீவுகளில் கடற்கொள்ளைக்காரர்களைக் கட்டுப்படுத்தி ஒழிக்கவேண்டிய தேவையேற்பட்டது. இந்தோனேசியத் தீவுகள் முழுவதனையும் டச்சுப் பேரரசின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்றால் மேலும் அதிகப் பொறுப்புணர்ச்சியுடன் ஆட்சிபுரிய வேண்டும் என்ற சூழ்நிலை உருவாகியது.

கி.பி. 1869ஆம் ஆண்டின் இறுதியில் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டதால் சுமத்ராவின் வடமுனையில் சூறையாடிக் கொண்டிருந்த அச்சே கடற்கொள்ளைக்காரர்களை ஒழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கி.பி. 1869ஆம் ஆண்டிற்குப்பின் ஐரோப்பா—தென்கிழக்காசியக் கடற்பயணத்திற்குச் சுந்தா இடைக்கழியை விட, மலாக்கா நீர்க்காலையே எல்லோரும் பயன்படுத்தத் தொடங்கினார்கள். (அச்சே மலாக்கா நீரிணைப்புக்கு அருகே உள்ளது.) கரையிலிருந்து செல்கிற இடங்களிலிருந்து கடற்கொள்ளைக்காரர்களைக் கப்பற்படை மூலம் ஒழிக்க முடியவில்லை. இச்செயல்களைத் திறமையோடு செயல்படுத்த அதன் தளங்கள் ஐரோப்பியர்களின் ஆதிக்கத்தின்கீழ் அமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனால் கடற்கொள்ளைக்காரர்கள் டச்சு அரசாங்கத்திற்கு ஒரு தடையாக இருந்தனர். கி.பி. 1824ஆம் ஆண்டு ஆங்கிலேய—டச்சு ஒப்பந்தத்தின்படி டச்சு அரசாங்கம் அச்சேவின் சுதந்திரத்தை மதித்து நடக்க வேண்டும். இத்தடைவிதியை நீக்கும் நோக்கத்துடன், டச்சு அரசாங்கம் ஆங்கிலேயர்களுக்குச் சில சலுகைகள்மூலம் இழப்பீடு செய்ய முன்வந்தது. இதன் விளைவால் கி.பி. 1871ஆம் ஆண்டு ஆங்கிலேய—டச்சு உடன்படிக்கையின்படி டச்சுக் கப்பல்களுக்கும், டச்சுக்காரர்களல்லாத கப்பல்களுக்கும் இடையே இந்தோனேசியத் தீவுகளிலிருந்த சுங்கவரி வேறுபாடுகள் நீக்கப்பட்டன. அண்மையில் டச்சு ஆட்சியின்கீழ் வந்த சுமத்திராப் பகுதிகளுடன் சிங்கப்பூர் தொடர்ந்து வாணிப-உறவு வைத்துக்கொள்ளலாம். பதிலாக, அச்சே கடற்கொள்ளைக்காரர்களை எவ்விதத்திலும் டச்சு அரசாங்கம் ஒழிக்க முழுச் சுதந்திர உரிமை அளிக்கப்பட்டது. மேலும் இப்பேச்சு

மூலம் மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து டச்சுப் பொன் கடற்கரைப் பகுதிகள் (Gold Coast) பிரிட்டனுக்கு அளிக்கப்பட்டன. அச்சேவுடன் 30 ஆண்டுகள் போர் புரிவதற்காக இவ்வளவு அதிகச் சலுகைகளைப் பிரிட்டனுக்கு டச்சு அரசாங்கம் விட்டுக் கொடுத்தது. அச்சே சுல்தான் சிங்கப்பூரில் வசித்த அமெரிக்க அயல்நாட்டுத் தனிப் பேராளருடன் ஒரு வாணிப உடன்படிக்கை பற்றிய பேச்சு நடத்தியதாக ஒரு போலிக் காரணத்தைக் காட்டி டச்சு அரசாங்கம் அச்சேவுடன் போர் தொடுத்தது.

அச்சே மக்கள் தீவிர இஸ்லாம் சமயப்பற்றுடையவர்கள். தங்கள் சுதந்திரத்தை எளிதில் இழக்கும் மனப்பான்மை உடைய வர்கள் அல்லர். போர் செய்து உயிர்நீத்து எவ்வகையிலேனும் தங்கள் சுதந்திரத்தை டச்சு ஏகாதிபத்திய வெறியிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையுடையவர் களாக இருந்தார்கள் இந்தோனேசிய விடுதலைப் போர்வீரர்கள். இன்றும்கூட இந்தோனேசியத் தேசிய இயக்க வரலாற்றிலே அச்சேவின் முப்பதாண்டுச் சுதந்திரப் போர் பெருமிதத்துடன் பாராட்டப்படுகிறது.

அச்சே மக்கள் டச்சு சர்வாதிகாரத்திற்கு எதிராகக் கொரில் லாப் போர் முறையைக் கையாண்டார்கள். போர்புரிய அச்சே பெருமக்களின் பேராதரவு இருந்ததால் அச்சே முழுவதும் பரவி இரகசியமாக மறைந்திருந்து டச்சுச் சுயநலவாதிகளைக் கொரில்லாப் போர்முறை மூலம் தாக்கினுர்கள். இத்திறமைவாய்ந்த போர் வீரர்களைக் கட்டுப்படுத்தித் தோல்வியடையாமல் சமாளிக்க டச்சு அரசாங்கம் திணறியது. செல்வமும் மதிப்பும் கரைவதை நோக்கிய டச்சு அரசாங்கம் பலமுறை இப்போரை விட்டுவிட நினைத்தது. டச்சுக்காரர்களின் தயக்கம் அச்சே போர்வீரர்களின் தன்னம் பிக்கையை வலுப்படுத்தி மேலும் திறமையுடன் போர்புரியும் மனப்பான்மையை வளர்த்தது. காலரா நோயினுல் துன்புற்றுப் பல ஆயிரம் டச்சுப் படைவீரர்கள் இறந்தனர். இப்போர் தொடங்கியதிலிருந்து செலவுக்கு மேல் மிஞ்சும் வருமானம் மறைந் தது. கி.பி. 1877ஆம் ஆண்டுக்குப் பிறகு இப்பணம் போருக்காகச் செலவழிக்கப்பட்டது. பாதுகாப்பு அமைக்கும் நோக்கத்துடன் கி.பி. 1885ஆம் ஆண்டில் ஒரு புகைவண்டிக் குறுக்குப்பாதையை அரசாங்கம் அமைத்தது. ஆனுல் இதுவும் பயனளிக்கவில்லை. கி.பி. 1893ஆம் ஆண்டில் ஓர் அச்சே உள்நாட்டுத் தலைவரைத் தன் பக்கம் சேர்த்துக்கொண்டது. ஆனுல் டச்சுக்காரர்களின் நோக்கம் நிறைவேறும் முன்னே இவர் தம் பகுதி மக்களெல்லோ ருடனும் சேர்ந்து, மீண்டும் அச்சே சுல்தான் கட்சியிலே சேர்ந்தார்.

இறுதியில் இடைவிடாத படைத்தாக்குதல்களாலும், உலக இஸ்லாமியச் சமுதாயத்துடன் ஒற்றுமை செய்துகொண்டதாலும் கி.பி. 1903ஆம் ஆண்டில் மெக்காவில் (Mecca) ஓர் இந்தோனேசிய அயலிட நாட்டுத் துணைப் பேராளர் (Vice-Consul) நியமிக்கப்பட்டார். மெக்காவிற்குப் பயணம் செய்யும் விருப்பமுள்ள இந்தோனேசியர்களுக்கு டச்சு அரசாங்கத்தின் உதவி அளிக்கப்பட்டது. கி.பி. 1908ஆம் ஆண்டுவரை அச்சே சுதந்திரப்போரின் எதிரொலி சிறிதளவில் கொரில்லாப் போர்முறை மூலம் ஒலித்துக்கொண்டிருந்தது. இதற்கு இடையில் பாலித் தீவிலும், மற்றும் பல கிழக்குத் தீவுப் பகுதிகளிலும் அமைதி குலைந்ததால் டச்சுப் படைவீரர்களைப் பயன்படுத்தி அடக்க வேண்டியதாக இருந்தது. கி.பி. 1898 ஆம் ஆண்டில் ஆளுநர் வான் ஹியுட்ச் (Van Heutsch) ஏற்படுத்திய ஒப்பந்தத்தின்படி எல்லா அடிமைத் தலைவர்களும் டச்சு மேலாதிக்க உரிமையை இறுதியாக ஒப்புக்கொண்டார்கள்.

5. முற்போக்குத் திட்டம் (கி. பி. 1870—1900)

ஐரோப்பாவிலே முற்போக்குக் கொள்கைகள் மலரத் தொடங்கியவுடன் கி. பி. 1860ஆம் ஆண்டில் பண்பாட்டுத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தோன்றத் தொடங்கியது. பண்பாட்டுத் திட்டத்தின் மூலம் கொடுமையாக மக்கள் சுரண்டப்படுகிறார்கள்; ஜாவாவில் உள்ள விவசாயிகள் அரைகுறையாக அடிமைப் படுத்தப் படுகிறார்கள் என முற்போக்குக் கொள்கைகளைப் பின்பற்றிய டச்சுக்காரர்கள் மறுப்புத் தெரிவித்தார்கள். டச்சு முற்போக்காளர்களின் எதிர்ப்புக்குப் பல காரணங்களிருந்தன. பண்பாட்டுத் திட்டம் உறுதியற்ற நிதிநிலையை உருவாக்கியதென முற்போக்குக் கட்சி அமைச்சர் ஜே. பி. தோர்பெக் (J. B. Thorbecke) கூறினார். பண்பாட்டுத் திட்டத்தின் மூலம் தனியார் வாணிபம் வளர்ந்ததா விவசாயிகள் வாணிகத்திற்குத் தேவையான விளைபொருள்களை விளைவிக்கும்படிக் கட்டாயப்படுத்தப் பட்டார்களா என்பதைப் பற்றி டபிள்யு. ஆர். வான் ஹோவல் (W. R. Van Hoevell) அக்கறை காட்டவில்லை. ஆனால், மக்களுடைய அன்றாட வாழ்க்கை நிலைமையைப்பற்றித் தெரிந்துகொள்ளவே அவர் விரும்பினார். இஸாக். ஜே. வாண்டெர் புட்டே (Issac. J. Vander Putte) என்ற வணிகர் தனியார் வாணிபக் கொள்கைகளை விரும்பினார்; நேர் முகமான வரிவிதிப்பு மூலம் மிகுந்த பயன் வரும் என நம்பினார். வாணிபம் தழைத்தோங்குவதற்குத் தடையாக இருக்கிறது எனப் பண்பாட்டுத் திட்டத்தை அவர் எதிர்த்தார். இம்மூவரும் ஒரே காரணத்தால் பண்பாட்டுத் திட்டத்தை எதிர்க்கவில்லை.

முற்போக்குக் கொள்கைகளை உடையவர்கள் பல்வேறு காரணங்களால் பண்பாட்டுத் திட்டத்தை எதிர்த்தார்கள். ஆனால், பொதுவாக இந்தோனேசியாவில் கீழ்க்காணும் மூன்றும் ஏற்பட வேண்டும் என விரும்பினார்கள் :

1. தொடர்ந்து ஜாவா மூலம் ஹாலந்திற்கு மிகுபயன் வர வேண்டும்.

2. அதே சமயத்தில் இந்தோனேசியப் பொருளாதாரத்தை வளர்க்கத் தனியார் டச்சுப் பண்ணையாளர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டும்.

3. இந்தோனேசியர்களைச் சுரண்டுவதையும் கொடுமைப் படுத்துவதையும் தடுத்து நிறுத்திப் பாதுகாப்பளிக்க வேண்டும்.

கி. பி. 1848ஆம் ஆண்டில் ஐரோப்பிய முற்போக்காளர்கள் புரட்சி தோன்றிய பிறகு டச்சு அரசாங்கத்தின் குடியேற்ற நாட்டுக் கொள்கைகளில் மாறுதல்கள் ஏற்பட்டதால்தான் இத்தகைய எண்ணங்கள் தோன்றத் தொடங்கின. கி.பி. 1848ஆம் ஆண்டுச் சட்டதிட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கி.பி. 1884ஆம் ஆண்டில் குடியேற்ற நாட்டுக் கொள்கைகளை உருவாக்கியது. இக்கொள்கைகளின் அடிப்படை உண்மை பின்வருமாறு :

1. முன்பிருந்ததைவிடச் செய்தித்துறைகளுக்கு மேலும் அதிகச் சுதந்திரம் வழங்கவேண்டும்.

2. அடிமை நிலையை ஒழிக்க வேண்டும்.

3. இந்தோனேசியர்களுக்குக் கல்வி வசதிகள் கொடுக்க வேண்டும்.

4. இந்தோனேசியர்கள் அல்லாதவர்கள் இந்தோனேசியர் களிடமிருந்து நிலம் வாங்கக்கூடாது.

5. பண்ணைகள் தொடங்குவதற்காகத் தரிசு நிலங்களை டச்சுப் பண்ணையாளர்கள் குத்தகைக்கு விடலாம்.

6. நிலவரி சட்டப்பிணைப்பால் பல்வேறு பணிகளை இந்தோனேசியர்கள் செய்வது ஆகியவை பற்றி இந்தோனேசியர் களைத் துன்புறுத்தாமல் பாதுகாப்பளிக்க வேண்டும்.

எதிர்க்கும் முற்போக்காளர்கள் அமர்ந்திருந்த மேடை வலுவில்லாமல் ஆடிக்கொண்டுதான் இருந்தது. இந்தோனேசிய

மக்களுக்குத் தீங்கு இல்லாமல் ஹாலந்தால் செல்வம் திரட்ட முடியவில்லை. ஹாலந்திற்கு உச்ச அளவில் வருவாய்ப் பெருக்கம் கிடைத்ததால் இந்தோனேசியர்கள் மிகப் பெரிய அளவில் தீமை அடைவார்கள். அந்நிலைக்கு மாறாக இந்தோனேசிய மக்களின் முன்னேற்றத்திற்கு முதலிடம் கொடுத்தால் டச்சுக்காரர்களின் ஆதாயமும் செல்வாக்கும் குறையும். ஆனால், கிடைக்கும் மொத்த பயனில் ஒரு பங்கு மட்டும் டச்சுக்காரர்களுக்குச் சென்றால் எஞ்சிய பகுதி இந்தோனேசியர்களுக்குக் கிடைக்கும். மிகு பயனில் எத்தனை சதவீதம் டச்சுக்காரர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதைப் பற்றித்தான் விவாதம் நடந்தது. டச்சுக்காரர்களுக்குக் கிடைக்கும் மிகுபயன் படிப்படியாகப் பெருகத் தொடங்கியது. டச்சுக்காரர்களுக்கும், இந்தோனேசியர்களுக்கும் போட்டி ஏற்பட்டதால் டச்சுக்காரர்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டது.

கி.பி. 1860ஆம் ஆண்டிற்குப் பிறகு முற்போக்காளர்களின் கட்சிக்கு ஆதரவு பெருகத் தொடங்கியது. வெளியீடுகள் சில ஜாவா மக்களின் நிலையைப் படம் பிடித்துக் காட்டின. இதைப் படித்த டச்சு மக்கள் அதிர்ச்சி அடைந்தார்கள். பண்பாட்டுத் திட்டத்தின் மூலம் இந்தோனேசிய ஏர் உழவர்கள் எவ்வாறு துன்புறுத்தப்பட்டார்கள் என்பதைப் பற்றி டோவெஸ் டெக்கர் (Douwes Dekker), மேக்ஸ் ஹேவலார் (Max Havelaar) அல்லது டச்சு வாணிபக் குழுவின் காபி ஏல விற்பனை (The Coffee Auctions of the Dutch Trading Company) என்ற அகலப் புனைகதையில் அழகாக எடுத்துக் காட்டியிருந்தார். வாண் டெர் புட்டேவின் (Van der Putte) துண்டு வெளியீடுகள் (Pamphlets) டெக்கரின் அகலப் புனைகதையில் கூறியதை ஆதரித்து வலியுறுத்தின. வாண் டெர் புட்டே ஜாவா நிலைமையை நன்கு அறிந்திருந்ததால் முற்போக்காளர்கள் கட்சியின் (Liberal Party) தலைவர் தோர் பெக்கே (Thor becke) அவரைக் கி. பி. 1863ஆம் ஆண்டில் குடியேற்ற நாடுகளின் அமைச்சராக (Minister of Colonies) அமர்த்தினர்.

வாண் டெர் புட்டே அமைச்சரானவுடன் (கி. பி. 1863—1866) ஜாவாவில் முற்போக்குக் கொள்கைத் தென்றல் வீசத் தொடங்கியது. பண்பாட்டுத் திட்டத்தைப் புதைக்க வேண்டிய சடங்குகள் புட்டே காலத்தில் தொடங்கின. கி. பி. 1862ஆம் ஆண்டில் மிளகு; கி. பி. 1863ஆம் ஆண்டில் இலவங்கம், சாதிக்காய்; கி. பி. 1865ஆம் ஆண்டில் இண்டிகோ, தேயிலை, உலர்ந்த பூச்சிவகையிலிருந்து எடுக்கப்படும் செஞ்சாயப் பொருள் (Cochineal), இலவங்கப்பட்டை; கி. பி. 1866ஆம் ஆண்டில்

புகையிலை போன்ற முக்கியமற்ற பயிர்கள் கட்டாய முறையில் பயிர் செய்யப்படுவது நிறுத்தப்பட்டன. இப்பயிர்கள் மூலம் கி. பி. 1860ஆம் ஆண்டிற்குப் பிறகு அரசாங்கத்திற்கு மிகுபயன் கிடைக்கவில்லை. அரசாங்கத்திற்கு வரும் வருமானத்தில் பெரும் பகுதி இப்பயிர்கள் மூலம்தான் கிடைத்தது.

மேலும் பண்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஏற்பட்ட தீமைகளும், தவறான வகையில் பயன்படுத்தப்பட்ட பல செயல்களும் நீக்கப் பட்டன.

1. பயிரிடப்படும் பொருள்களைத் தங்கள் ஆட்சியின் மூலம் கட்டுப்படுத்தும் காரணத்தால் டச்சுக்காரர்களுக்கும், அரசப் பிரதிநிதிகளுக்கும் (பகர ஆட்சியாளர்களுக்கும்—regents) கிடைத்த தரகு வருமானத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

2. கி. பி. 1867ஆம் ஆண்டிலிருந்து இந்தோனேசியாவின் வரவு செலவுப் பட்டியலுக்கு ஒவ்வோராண்டும் ஹாலந்து நாட்டின் நாடாளு மன்றம்தான் இசைவுச் சீட்டு கொடுக்கவேண்டும்.

3. புதர்மரப்பரப்பு மாவட்டத்தில் வலுக்கட்டாயமாகக் கூலிவேலை செய்யவேண்டும் என்ற கட்டளை நீக்கப்பட்டது.

4. இனிமேல் பயிரிடப்படும் நிலங்களில் ஐந்தில் ஒரு பங்கு நிலத்தில்தான் அரசாங்கத்திற்குத் தேவையான பயிர்கள் பயிரிடப் படலாம்.

வண்டெர்புஷ் ஆட்சியில் மேலும் ஏற்றுமதிப் பொருள்களைக் கட்டாயமாக அரசாங்கத்திடம் ஒப்படைக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு நீக்கப்பட்டுப் பதிலாக நேரடி வரி விதிக்கப்பட்டது. இதனால் நாணயப் பொருளாட்சி முறை (Money economy) ஓங்கி வளரத் தொடங்கியது. வரி செலுத்துவதற்காக விவசாயிகள் தாங்கள் பயிரிடும் பொருள்களைப் பணம் வாங்கி விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தேவைக்குமேல் விற்றால் மேலும் அதிகப் பணம் கிடைத்தது. ஆகையால் இறக்குமதியாகும் டச்சுப் பொருள்களை இந்தோனேசியர்களால் வாங்க முடிந்தது. இம் முறை மூலம் கட்டற்ற தனியார் வாணிபம் தழைத்தோங்கத் தொடங்கியது.

வலுக்கட்டாயப்படுத்தப்பட்டுக் கூலியில்லாமல் வேலை செய்தால் தனியொருவனின் தன்னாட்சியுரிமையும், தங்குதடை யற்ற தன்னுரிமையும் பாதிக்கப்படுகின்றன எனக் கருதப்

பட்டுத் தடைவிதிக்கப்பட்டது. இனிமேல் கூலிவேலை செய்தால் ஊதியம் அளிக்கவேண்டும் என்ற சட்டம் அமலுக்குக் கொண்டுவரப்பட்டது. தங்குதடையற்ற அங்காடியில் தனியார் வணிகர்களும் போட்டியிட்டுக்கொண்டு நிலங்களையும் தொழிலாளி களையும் பயன்படுத்தலாம் என்ற உரிமை வழங்கப்பட்டது.

பொதுவாக முற்போக்காளர்களின் முக்கியக் கருத்து என்ன வென்றால் தனி வணிகர்கள் தங்குதடையின்றி ஜாவாவில் நுழைந்து வாணிபம் செய்யலாம். ஆகையால் தனி வணிகர்கள் நேரடியாக வாணிபம் செய்து முழுப்பயன் பெறலாம். அரசாங்கத்திற்குச் சென்றுகொண்டிருந்த மிகுபயன் இதனால் குறைந்தது. ஆனால், வரி விதித்துத் தனி வணிகர்களின் மிகு பயனில் ஒரு பங்கை அரசாங்கம் அடைந்தது. ஆகையால் இந்தோனேசிய மக்களிடையே நிலவி வந்த நீதியின்மை குறைந்தது ஊதியத்திற்காக வேலைசெய்ததால் அவர்களுடைய வாழ்க்கை முறையும் சீரடையத் தொடங்கியது. கி. பி. 1870ஆம் ஆண்டில் பண்பாட்டுத்திட்டம் நீக்கப்பட்டு முற்போக்காளர்களின் திட்டம் தொடங்கப்பட்டது. இதன் பயனாகக் கி. பி. 1870ஆம் ஆண்டில் இரண்டு புதிய சட்டங்கள் நடைமுறைக்கு வந்தன. டாவாலின் (Dawall) நில உடைமைச்சட்டம் (The Agrarian Law) நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. வேளாண்மையை வளர்க்கவேண்டும். என்பதே இச்சட்டத்தின் நோக்கம். வேளாண்மை வளர்ச்சிக்காக அயல்நாட்டு மூலதனத்தை எவ்வளவு பயன்படுத்தலாம் என்பதைப் பற்றியும் இச்சட்டத்தில் கூறப்பட்டிருந்தது. அயல் நாட்டு மூலதனத்தை அதிக அளவில் நம்புவது நல்லதன்று என்று டச்சுக்காரர்கள் நினைத்தார்கள். இச்சட்டத்தின்படி இந்தோனேசியர் அல்லாதவர்கள் இந்தோ னேசியாவில் நிலங்களை வாங்கக்கூடாது. ஆனால், இந்தோ னேசியர்கள் பயிர் செய்யாத நிலங்களை அவர்கள் 75 ஆண்டுக் காலத்திற்குக் குத்தகைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

முற்போக்குத் திட்டத்தின் விளைவுகள்

இந்தோனேசிய வரலாற்றிலே கி. பி. 1870ஆம் ஆண்டு ஒரு முக்கியக் கட்டமாகும். இவ்வாண்டின் தொடக்கத்திலிருந்துதான் விரைவாக மாறுதல்கள் ஏற்பட்டன. இந்தோனேசியாவில் முக்கியமாக ஜாவாவில் கட்டுப்பாடில்லாத வாணிபம் மலரத் தொடங்கியது. முன்பு இவ்வாறான சூழ்நிலை உருவாகவில்லை. முற்போக்காளர்களின் ஆட்சி தொடங்கியதிலிருந்து ஏற்றுமதி ஆகும் பொருள்களின் விளைச்சல் அதிகரித்தது. புதிய விளைபொருள் களான இலவம் பஞ்சும், இரப்பரும் வாணிகப் பொருள்களாக

அறிமுகப்படுத்தப்பட்டன. கி. பி. 1860—1875ஆம் ஆண்டுகளில் உற்பத்தியின் மதிப்பு மூன்று மடங்காகப் பெருகியது; கி.பி. 1885ஆம் ஆண்டுக்குள் பத்துமடங்காக உயர்ந்தது.

வெள்ளீயத்தின் உற்பத்தி மதிப்புப் பின்வருமாறு :

கி. பி. 1870ஆம் ஆண்டு 2200 மெட்ரிக் டன்கள் (2240 கல் எடை கொண்ட எடையலகு); கி.பி. 1900ஆம் ஆண்டு—10,000 மெட்ரிக் டன்கள்.

டார்டொரக்ட் எண்ணெய் வாணிகச் சங்கம் (Dordrecht oil Company) கி. பி. 1887ஆம் ஆண்டில் எண்ணெய் தோண்டி எடுக்கத் தொடங்கியது. கி. பி. 1890ஆம் ஆண்டில் ராயல் டச்சு வாணிகச்சங்கம் (Royal Dutch Company) கெஸ்லெர் (Kessler), ஹெச்டெ டெர்டிங் (H. Deterding) தலைமையில் அமைக்கப் பட்டது; மிக விரைவிலேயே உலகப்புகழ் அடைந்தது. வாணி பத்தின் மூலம் வந்த பயன் ஹாலந்திற்கு அனுப்பப்படவில்லை. பல திட்டங்களின் மூலம் இந்தோனேசியாவின் வளர்ச்சிக்காகப் பயன் படுத்தப்பட்டது. உள்நாட்டுத் தொடர்பும் இணைப்பு வழிகளும் விரைவாக வளரத்தொடங்கின. இந்தோனேசியர்கள் படிப்பதற் காகக் கல்வி வசதிகள் செய்யவும் திட்டங்களிடப்பட்டன. ஆனால் ஆங்கிலேயக் குடியேற்ற அரசாங்கம் போலில்லாமல் டச்சு அரசாங்க அமைப்பில் கல்வி பயின்ற இந்தோனேசியர்களுக்கு அதிக வாய்ப்புக் கிடைக்கவில்லை. சிலருக்குத்தான் இக்கல்வியால் பயன் ஏற்பட்டது.

இந்தோனேசியாவின் ஏற்றுமதி ஒரே சீராக வளரத் தொடங்கியது. இறக்குமதி செய்யப்படும் பொருள்களில் முக்கிய மானவை இயந்திரக்கருவிகள் (Machinery), செய்பொறிகள், விவசாய உருப்படிகள் முதலியன. டச்சு நீராவிக் கப்பல்கள் ஜாவாவில் பயன்படுத்தப்பட்டன. கப்பல் வழிநிலை தெரிமுறையில் வாய்ப்பு நலம் ஏற்பட்டதால் சுமத்திரா, போர்னியோ ஆகியவற்றி லிருந்த அரசாங்க எண்ணெய், நிலக்கரி, இரும்பு முதலியவற்றின் தொழிற்சாலைகள் தழைத்து ஓங்கின. முற்போக்காளர்களின் ஆட்சியில் இந்தோனேசியப் பொருளாதாரத்திற்குப் பல பயன்கள் ஏற்பட்டன. பரந்த செயல் விளைவுகள் ஏற்பட்டன. முற்போக்குக் கருத்தை முக்கியமாகக் கட்டுப்பாடில்லாத வாணிபத்தை அடிப் படையாக அரசாங்கம் ஏற்றுக்கொண்டதால் அரசியல் நெறிமுறைச் சார்பில் முக்கிய மாறுதல்கள் ஏற்படவில்லை. சமுதாயக் கூட்டுறவு பற்றி இக்கொள்கைக்குச் சிறப்புக் கொடுக்கலாம். ஒரு புதிய

சமுதாயப்பிளவு உருவாகியது. நடுத்தர டச்சு இந்தோஸ் (Indos) இந்தோனேசிய இன வகுப்புத் தோன்றியது. பொருளாதாரத்தில் சீன இடையீட்டாளர்களின் பங்கு அதிகரித்தது. ஆகையால், சீனர்களின் மேல் இந்தோனேசியர்களின் வெறுப்பும், கடுஞ்சின எதிர்ப்பும் வளரத் தொடங்கின. பண்ணைகளில் பணிபுரிவதற்காக ஜாவா மக்கள் கூலிவேலையில் சேர்க்கப்பட்டதால் கிராம அமைப்பில் தகர்வு ஏற்பட்டது.

ஆனால் முன்னேற்றக் கருத்தைப் புகுத்தியதால் இந்தோனேசிய விவசாயம், தொழிற்சாலை ஆகியவை பற்றிய பொருளாதார நிலைமையில் காளான்கள்போல் திடீர் வளர்ச்சி தோன்றியது. கி. பி. 1872ஆம் ஆண்டிலிருந்து டச்சுக்காரர்கள் மிக அதிகமாக இந்தோனேசியாவிற்கு வந்து குடியேறுவதற்கும் இது வழியிட்டது. டச்சுக்காரர்கள் குடியேறத் தொடங்கியதால் முதலீடு செய்தல் அதிகரித்துப் பொதுவாக இந்தோனேசியாவின் பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்பட்டது.

முன்னேற்றக் கொள்கைகளின் குறைபாடுகள்

முன்னேற்றத் திட்ட காலத்தில் கட்டுப்பாடற்ற வாணிபத்தால் ஜாவாவிற்கும், ஹாலந்திற்கும், தனி முதலாளிகளுக்கும் அதிகப் பணவருமானம் கிடைத்தது. புது நிலங்களில் பயிர் செய்யாவிட்டாலும் கடுமையான உழைப்பால் பயிரிடும் நிலங்களைப் பண்படுத்தியதால் விளைபொருள்களின் உற்பத்தி அதிகரித்தது. இதனால் பொருளாதார அமைப்புப் பல் கூட்டுத் தொகுதியாக மாறியது; ஆகையால் அதிக அதிகாரிகளை அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஜாவாவில் டச்சுக்காரர்கள் குடியேறத் தொடங்கியது அதிகரித்தவுடன் அரசியல் அதிகாரிகளைவிட அரசியல் தொடர்பில்லாத அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது.

இவ்வாறு கட்டுப்பாடில்லாத போட்டிபோடும் சுதந்திரப் பொருளாதாரச் சூழ்நிலையேற்பட்டதால் இந்தோனேசியர்களால் இந்தோனேசியர் அல்லாதவர்களுடன் போட்டியிட முடியவில்லை. ஒரு சில பொருள்களுக்கே முதன்மை கொடுத்ததால் பொருளாதாரச் சூழ்நிலையில் தயக்கநிலை ஏற்படும் காலங்களில் நாடு கடுமையாகப் பாதிக்கப்பட்டது. விலை வீழ்ச்சி ஆண்டுகளில் இந்தோனேசியாவிற்கு அழிவுண்டாகிற நிலை ஏற்பட்டது. முக்கியமாகக் கரும்பாலைகளால் அதிக இலாபம் கிடைத்தது. ஆனால், சர்க்கரையையே முக்கியமான வருமானமாய் நம்பி வாழ்ந்தால் சர்க்கரை விலை

குறையும் காலத்தில் தீங்குவருவது திண்ணம். உதாரணமாக, கி. பி. 1885ஆம் ஆண்டில் உலகத்தில் விலை வீழ்ச்சி ஏற்பட்டதால், ஜாவா மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். இதற்குப் பின்பு மோசமான வானிலை நிலைமையாலும், செடிகள் நோயினால் தாக்கப் பட்டதாலும் காப்பிக்கொட்டையின் வளர்ச்சி குறைந்தது. சர்க்கரைக்குப் பிறகு காப்பியின் வருமானத்தைத்தான் இந்தோனேசியர்கள் நம்பியிருந்தார்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது.

இம்முன்னேற்றத் திட்டத்தின் முக்கியக் குறைபாடு என்ன வென்றால் ஒருசிலருக்கே பயன் கிடைத்தது. ஒவ்வோர் இந்தோனேசியனின் வருமானமும் குறைவாகவிருந்தது. ஜாவாவில் கட்டுப்பாடில்லாத வாணிபச் சூழ்நிலை யிருந்ததால் வாணிப வரி விதிக்கப்படவில்லை; நில (பண்ணை) வரிதான் விதிக்கப்பட்டது. இதன் விளைவால் ஏழ்மை நிலையை அந்நாடு அடைந்தது. மேலும் வரி அமைப்பில் பணக்காரர்களைவிட ஏழைகளே அதிக வரிகள் செலுத்தினார்கள். வரி செலுத்துபவர்களில் நான்கில் மூன்று பகுதி யினருக்கு வருமானமே கிடையாதெனக் கூறலாம். ஆகையால் வரித் திட்டங்களால் நாட்டிற்கு நன்மை ஏற்படும் சூழ்நிலை உருவாக வில்லை. கி.பி. 1877ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாகப் பற்றுக் குறை பரவத்தொடங்கியது. கி.பி. 1897ஆம் ஆண்டுக்குள் 18 மில்லியன் கில்டர்கள் (guilders) கடன் ஏற்பட்டது. வரிமூலம் வரும் வருமானத்தைவிட நிருவாக அமைப்பிற்காக ஏற்படும் செலவு அதிகமாயிருந்தது. மக்கள் தொகை அதிகரித்ததால் கல்வி, மருத்துவம் வாணிபம் சமூக வளர்ச்சி முதலிய துறைகளில் முன்னேற்றத் திட்டத்தார் செய்த வசதிகள் போதவில்லை.

முன்னேற்றத் திட்டத்தார் ஆட்சிக்காலத்தில் கிராமத் தலைவர் களின்மேல் ஏர் உழவர்களுக்கிருந்த மதிப்பு மிகவும் குறைந்தது. ஆகையால், அவர்களே தனித்தனியாகத் தங்கள் எண்ணங்களை வெளியிடத் தொடங்கினார்கள். ஏற்றுமதி செய்வதற்காகப் பயிரிடும் விளைபொருள்களுக்குப் பதிலாக மீண்டும் நெல் பயிரிடுவதையே அவர்கள் விரும்பினார்கள். இதற்குக் குடியேறிய சில டச்சுக்காரர் களும், ஜாவாவிலுள்ள இந்தோஸும் ஆதரவு தெரிவித்தார்கள். கி.பி. 1890ஆம் ஆண்டிலிருந்து முன்னேற்றத் திட்டத்தின் குறை பாடுகளை வெளிப்படையாகப் பலர் கண்டிக்கத் தொடங்கினார்கள். ஆகையால் இத்திட்டத்தை மேலும் நீடித்துத் தொடர்ந்து செயல் படப் பலர் விரும்பவில்லை.

முற்போக்குத் திட்டத்தின் சீராய்வு கி.பி. 1848ஆம் ஆண்டு ஐரோப்பியப் புரட்சிக்குப் பிறகு ஹாலந்து அரசருக்குக் குடியேற்ற

நாடுகளின் மேலுள்ள ஆட்சி அதிகாரம் குறைந்தது. பண்பாட்டுத் திட்டத்தை முற்போக்காளர்கள் எதிர்க்கத் தொடங்கிக் கண்டனம் தெரிவித்தார்கள். இத்திட்டம் மனிதத் தன்மைக்குப் புறம்பானது, கொடுமையானது எனத் தெரிவித்தார்கள். ஜாவா மக்களின் வாழ்க்கையைச் சீர்ப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமை என வலியுறுத்தினார்கள். கி.பி. 1840ஆம் ஆண்டின் தொடக்கத்திலே பண்பாட்டுத் திட்டத்தால் யாதொரு பயனும் கிடையாது எனப் பண்ணை நில ஆட்சிக் கோமான் வான்ஹோவெல் (Baron van Hoevell) தலைமையில் முற்போக்காளர்கள் எடுத்துரைத்தார்கள். ஆனால், பழமை பேணும் கட்சியினர் (conservatives) இடைவிடாமல் ஆட்சி புரிந்ததால் முற்போக்குக் கட்சியினரின் எதிர்ப்புப் பயனின்றி மலராமல் மொட்டாகவே இருந்தது. இருந்த போதிலும் அவர்கள் அரசாங்கத்தை வற்புறுத்திக்கொண்டே இருந்தார்கள். பண்பாட்டுத் திட்டத்தை ஒழிக்கவேண்டும் என்றும், தனியார் வாணிபத்தை அமைக்க வேண்டும் என்றும் விடாப்பிடியாக வற்புறுத்தினார்கள்.

கி.பி. 1863ஆம் ஆண்டில் பதவியேற்ற பிறகு முற்போக்குக் கட்சியாளர்கள் தங்கள் எண்ணத்தைச் செயல்படுத்த முற்பட்டார்கள். முற்போக்குக் கட்சியாளர்கள் பண்பாட்டுத் திட்டத்தால் ஏற்பட்ட குறைகளைப் பெரிதளவு நீக்கினார்கள். ஜாவாவிலும், ஓரளவு மற்றத் தீவுகளிலும் கட்டுப்பாடற்ற வாணிபத்தைத் தொடங்கினார்கள். ஆனால், இப்புதிய சூழ்நிலையில் இந்தோனேசியர்களால் இந்தோனேசியர்கள் அல்லாதவர்களுடன் வாணிபத்தில் போட்டியிட முடியவில்லை. மிகு பயனில் சிறிதளவே இந்தோனேசியர்களுக்குக் கிடைத்தது. சமூகப் பிளவும் நிருவாகக் குழப்பமும் ஏற்பட்டன.

பண்பாட்டுத் திட்டம் தோல்வி யடைந்ததைப்போல் முற்போக்குத் திட்டமும் வெற்றி யடையவில்லை. அரசாங்க வருமானத்தை அதிகரிக்கவும், அதே சமயத்தில் இந்தோனேசியர்களுக்குத் தீமை விளைவிக்காமலிருக்கவும் இத்திட்டங்களால் முடியவில்லை. ஜாவாவிலுள்ள சூழ்நிலை மன நிறைவில்லாமலிருந்ததால் ஹாலந்து அரசாங்கம் தன்னுடைய இந்தோனேசியக் குடியேற்ற நாட்டின் கொள்கையை மாற்றியமைத்தது. மாற்றியமைத்த புதிய திட்டத்தை நெறிமுறைத் திட்டம் (Ethical Policy) என அழைத்தார்கள்.

6. நெறிமுறைத் திட்டம் (கி.பி. 1900-1920)

முற்போக்குத் திட்டத்தினுல் எதிர்பார்த்த பயன்கள் கிடைக்காததால் இந்தோனேசியர்களுக்கு நன்மை பயக்குமாறு இந்தோனேசியாவை ஆட்சி புரியவேண்டும் எனப் பரந்த மனப்பான்மைக் கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள் வலியுறுத்திஞர்கள். முற்போக்குத் திட்டத்தின் மூலம் கிடைத்த சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொண்ட ஐரோப்பியப் பண்ணையாளர்களுக்கு அதிக அளவில் இந்தோனேசியக் கூலியாள்களுக்கும் தொழிலாளர்களுக்கும் யாதொரு நன்மையும் விளையவில்லை. கி.பி. 1880ஆம் ஆண்டில் டச்சுக்காரர்கள் கொள்ளைப் பயன் அடிப்பதை எதிர்த்து மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. இந்தோனேசியர்களின் நன்மைக்காக டச்சு அரசாங்கத்தைப் பயன்படுத்த வேண்டும் என்னும் கருத்தைக் கி.பி. 1880ஆம் ஆண்டில் ஏ. குயிபர் (A. Kuyper) இயற்றிய 'ஆன்ஸ் புரோகிராம்' (Ons Program) என்னும் நூலின் மூலம் பிரசாரம் செய்தார். சி. த. வான் டேவென்டர் (C. Th. Van Deventer) தம்முடைய பண்பொழுக்கத்தின் கடன் (A Debt of Honour) என்ற கட்டுரையின் மூலம் டச்சுக்காரர்கள் இந்தோனேசியர்களைச் சூறையாடுவதைப்பற்றித் தெளிவாக எடுத்துரைத்தார். இந்தோனேசியாவின் மூலம் கிடைக்கும் மிகுபயனில் இந்தோனேசியர்களுக்கும் ஒரு பங்கு உண்டு என இவர் வலியுறுத்திஞர். மேலும் குடியேற்ற நாடுகளைக் கொள்ளையடிக்கக் கூடாது; நிருவகித்துப் பாதுகாப்பளிக்க வேண்டும் என்ற கருத்தை எடுத்துரைத்தார். நியாயம், மனித இனநலப் பற்றுத்தொண்டு, பொது மக்களின் பாதுகாப்புப் போன்ற நீதிநெறி முறைகளைப் பரப்பி தம் அரசியல் மன்றச் சீர்திருத்தக் கட்சியினர்கள் கூட (Clerical Reformers) இந்தோனேசியர்களை நெறிமுறையுடன் நடத்தவேண்டும் எனக்கூறி வளர்ந்துவரும் இயக்கத்திற்கு ஆதரவளித்தார். கி.பி. 1880ஆம் ஆண்டில் வான்கோலின் (vonkol) தலைமையின்கீழ் வந்த சோஷியலிஸ்டுக் கட்சியினர் இந்தோனேசியாவிலுள்ள எல்லா மக்களும் சமம் என்ற அடிப்படைக் கருத்தை வலியுறுத்தினர். மக்களுடைய நலத்தை மனத்தில் வைத்துக்கொண்டுதான் அவர்கள் எல்லோரும் இவ்வாறு பிரசாரம் செய்தார்கள்.

கி.பி. 1901ஆம் ஆண்டில் வான் ஏ. குயிபர் நெதர்லாந்தின் பிரதமராகப் பதவியேற்றவுடன் குடியேற்ற நிருவாக அமைப்பை மாற்றியமைத்துத் தேசிய இயக்கம் மலருவதற்கு வழி வகுத்தார். கி.பி. 1901ஆம் ஆண்டில் நெறிமுறைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. வழக்கத்திலிருந்த மறைமுக டச்சு ஆட்சி அமைப்

பைப் படிப்படியாக இது மாற்றி யமைத்தது. கி.பி. 1901ஆம் ஆண்டில் புருசூப்டுவின் (Brooshooft) குடியேற்றக் கொள்கையின் நெறிமுறைப் போக்கு (The Ethical Tread in colonial Policy) என்னும் கட்டுரையின் மூலம் இப்புதிய திட்டம் பரப்பப் பட்டுப் பொதுமக்கள் விரும்பும் நிலையை அடைந்தது. கி.பி. 1900ஆம் ஆண்டில் திடீரென விலை வீழ்ச்சியினால் ஹாலந்தும் இந்தோனேசியாவும் பாதிக்கப்பட்ட காரணத்தாலும் இப்புதிய திட்டத்திற்கு ஆதரவு அதிகரித்தது. அரசியல் மன்றக் கட்சியினரின் (Clerical Party) தாக்குதலைத் தாங்க முடியாமல் முற்போக்காளர் அரசாங்கம் (The Liberal Government) கவிழ்ந்தது. இச் சமயத்திலிருந்து இந்தோனேசியர்களின் நலனைப்பற்றி டச்சு நாடாளுமன்றம் நலம் உதவத் தொடங்கியது.

இரண்டாகப் பகுபட்ட தன்மையுடையது நெறிமுறைத் திட்டம் :

(1) இது பொருளியல் சார்ந்த திட்டம். மேற்கு நாட்டு வாணிபர்களுக்கு ஊக்கமளித்து, இந்தோனேசியாவில் நல நிறைவு நிலை உருவாக்குவதற்காக மூலதனம் உளதாக்க வேண்டும். நிதி நிலையிலிருந்து நோக்கினால் மேலைநாட்டு வணிகர்கள் மூலம் நாட்டை வளர்த்து, இச்செல்வத்தின் மூலம் சமூகத்தொண்டுகள் செய்யவேண்டும் என்பதே நெறிமுறைத் திட்டத்தின் நோக்கம்.

(2) இதைச் சமுதாயம் (Social) நோக்கிய திட்டமாகவும் கருதவேண்டும். நாட்டுப்புறத் தொகுப்பு முறை மூலம் (Village System) ஆக்க நலத்தை வளர்க்கவேண்டும் என்பது இதன் நோக்கம். முற்போக்குத் திட்டத்தின் மூலம் கிடைத்த பொருளாதாரச் சுதந்திரம் கிராமக் கூட்டுப் பொறுப்புணர்வை நலியும்படிச் செய்தது. ஆகையால், நெறிமுறைத் திட்டம் நாட்டுப்புற அமைப்பை வலிமைப்படுத்த நினைத்தது. இதை ஒரு நெம்புகோலாகப் பயன்படுத்திச் சமூக நலனையும் தன்னாட்சி முறையில் பயிற்சியையும் அளிக்கவேண்டும் என விரும்பியது. இந் நெம்புகோலைப் பயன்படுத்திப் பொருள் திறத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கமில்லை.

தன்னாட்சிமுறையின் வழியில் சென்று வளர்ச்சியடைய வேண்டும் என்ற கருத்து இப்புதுத்திட்டத்தில் மறைந்து இருந்ததால் எத்தகையதான தன்னாட்சிமுறையைத் தழுவவேண்டும் யாருக்காகத் தழுவவேண்டும் என்பன போன்ற கேள்விக்குறிகள் எழுந்தன. தி ஹேகிலிருந்து (The Hague in Holland) படாவியா

வரை (Batavia i.e. Jakarta) டச்சுக்காரர்களின் மூலம் இந்தோனேசிய அதிகாரிகளின் கிளையாட்சி நிருவாக அமைப்பை நிறுவ வேண்டும் என்ற கொள்கையைப் பின்பற்றித்தான் இப்புதிய திட்டம் அமைக்கப்பட்டது. ஆனால், இத்திட்டத்தைச் செயல் படுத்த முயற்சி செய்யவில்லை. கி. பி. 1914ஆம் ஆண்டிலே கூட ஹாலந்து அரசாங்கத்தின் முழு அதிகாரத்தின் கீழ்தான் தலைமை ஆளுநர் பணிபுரிந்து வந்தார்.

டச்சுக்காரர்களின் கருத்துகளைத் தழுவி இந்தோனேசியர்களின் நலனைப் பெருக்கச் சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றில் சீர்திருத்தங்கள் செய்ய முயற்சி எடுக்கப்பட்டன.

சமூக அமைப்பின் மாறுதல்கள்

1. சமூக வளர்ச்சிக்காக எல்லோருக்கும் கல்வி பயில முக்கியமாகத் தொடக்கப்பள்ளிப் படிப்புப்பெற வாய்ப்பு அளிக்கப்பட்டது.

2. நோயற்ற நிலையை உருவாக்குவதற்காக வசதிகள் நாட்டுப் புறங்கள் உட்படச் செய்யப்பட்டன.

3. இந்தோனேசியக் கூலியாள்களைப் பாதுகாப்பதற்காகவும், வேளாண்மை மற்றும் பல தாயகத் தொழில்களை ஒழுங்கிசைவு படுத்துவதற்காகவும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

4. ஜாவாவிலிருந்து மற்ற இந்தோனேசியத் தீவுகளுக்குச் சென்று மக்கள் குடியேற ஊக்கம் அளிக்கப்பட்டது.

பொருளாதார நடவடிக்கைகள்

1. வட்டித் தொழிலர்களிடமிருந்து இந்தோனேசியர்களைப் பாதுகாக்கவும், வட்டிக்கடைகளுக்கு அவர்கள் செல்லாமலிருப்பதற்காகவும் அரசினரின் உடைமையான பொதுநலக் கடன் தவணைச் சலுகை வசதிகள் செய்யப்பட்டன.

2. நெடுஞ்சாலைகளும் புகைவண்டிப் போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டன.

3. திடீர் விலைவீழ்ச்சி யேற்படாமலிருப்பதற்காகச் சுரங்கங்களின் வளர்ச்சி அதிகரிக்கப்பட்டது.

4. காட்டியலும் மீன் தொழில் துறையும் வளர்ச்சியடைய ஊக்கம் அளிக்கப்பட்டது.

5. இந்தோனேசியா முழுவதும் நீர்ப்பாசன வசதியும், சாக்கடை நீர்வசதியும் செய்வதற்காகப் பொறிவலாளர்கள் (Engineers) வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள்.

6. கி.பி. 1905ஆம் ஆண்டில் படாவியாவில் ஒரு வேளாண்மைத்துறை (Department of Agriculture) அமைக்கப் பட்டது.

அரசியல் சீரமைப்புகள்

1. கி. பி. 1903ஆம் ஆண்டுச் சட்டத்தை மிக முக்கியமானதாகக் கருதவேண்டும். கிளையாட்சியமைப்பை இந்தோனேசியாவில் நிறுவவேண்டுமென்றும், தங்கள் அரசாங்கத்தைத் தாங்களே நடத்த இந்தோனேசியர்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்றும் இச்சட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது. இதைப் பின்பற்றிக் கி. பி. 1904—05ஆம் ஆண்டில் ஆணைகள் வெளியிடப் பட்டன. ஐரோப்பியர், இந்தோனேசியர், சீனர்கள் ஆகிய உறுப் பினர்கள் அடங்கிய உள்ளூர் மன்றங்கள் அமைக்க இவ்வாணைகள் அனுமதி அளித்தன.

2. உள்ளூர் மக்கள் உள்ளூர் அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டனர். பண்ணை நிலவுரிமை முறைக் காலத்தின் பகர ஆளுநரின் (Regent) அதிகாரங்களும் மதிப்பும் ஒழிக்கப் பட்டன. மாறாக, இந்தோனேசிய உயர்ந்தோர் குழாம் இப்பதவி களில் அமர்ந்து, உயர்ந்தோர் இயக்கத்திற்கு மறுமலர்ச்சி அளித்தது.

நெறிமுறைத்திட்டம் தோல்வியடையக் காரணம்

அரைகுறை ஆர்வத்துடன் டச்சு அரசாங்கம் இத்திட்டத்தை செயல்படுத்த முயன்றது. பெரும்பான்மையான இந்தோனேசி யர்கள் இதில் அக்கறை காட்டவில்லை. இத்திட்டத்தைப்பற்றி அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. படித்துப் பட்டம் பெற்ற சிறு இந்தோனேசியர் குழாம் டச்சுக்காரர்கள் கொடுப்பதற்கு மேலும் அதிகமாக அரசாங்கத்திடம் எதிர்பார்த்தது.

சமூகப் பொருளாதார நலநிறைவு நிலையை உருவாக்கத்தான் டச்சு அரசாங்கம் விரும்பியது; இந்தோனேசியர்களுக்கு அரசியலில் வாய்ப்பளிக்க டச்சுக்காரர்கள் தயாராகவிருக்கவில்லை. தன்னாட்சி முறைவழியிலே இந்தோனேசியர்களுக்குப் பயிற்சி யளித்து அழைத்துச் செல்லவேண்டும் என்ற நோக்கம் டச்சுக்காரர் களுக்குக் கிடையாது. நெறிமுறை மனப்பான்மையுடையவர்

களாயிருந்தாலும் இந்தோனேசியாவில் ஆட்சி அதிகாரத்தை விட்டுவிடும் எண்ணம் டச்சுக்காரர்களுக்குக் கிடையாது.

பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டபோதிலும் மக்கள் தொகை வளர்ந்துகொண்டு வந்ததால் நன்மை விளையவில்லை. இந்தோனேசியர்களுக்குச் சமூகப் பொருளாதார உரிமைகளையும் சலுகைகளையும் அளிக்க விரும்பியபோதும், தங்களுடைய ஆட்சி அதிகாரப் பொருளாதாரச் செல்வாக்கைக் குறைத்துக்கொள்ளும் நோக்கம் டச்சுக்காரர்களிடையே கிடையாது. இவை நெறிமுறைத் திட்டத்தினுள் இருக்கும் முழு எதிர்மறைக் கருத்துகள்.

ஆகையால், பல்வேறு திட்டங்கள் செயல் முறையில் வெற்றி அடையவில்லை. கல்வி பயிலும் திட்டத்திலும் மக்கள் ஆர்வம் காட்டவில்லை. டச்சு மொழிக் கல்வித்திட்டம் தங்களுக்குப் பயன்படாது எனக் கருதினுர்கள். அதேபோலச் சுகாதார மருத்துவ வசதிகளிலும் மக்கள் அக்கறை காட்டவில்லை. ஆனுல், பட்டினங்களில் ஓரளவில் இவ்வசதிகள் பயன்படுத்தப்பட்டன. இந்தோனேசியக் கூலியாள்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் சட்டங்கள் நிறைவேற்றப் பட்டாலும் கிராமத் தலைவர்கள் தங்கள் அதிகாரங்களைப் பயன்படுத்தி மொத்தமாகக் கிராமக் கூலியாள்களைத் தேர்ந்தெடுத்து டச்சு முதலாளிகளிடம் அளிக்கும் வாய்ப்பைக் கிராம அமைப்பு அளித்தது. பொதுநலக் கடன் தவணைச் சலுகைகளைப் பற்றியும், அரசாங்கம் செய்த அங்காடி வசதிகளைப் பற்றியும் கற்றறியும் பொறுமையோ ஆர்வமோ மக்களிடையே இல்லாமலிருந்தது. அரசியல் பற்றி யாதொரு பயனும் விளையவில்லை. மிஞ்சிப் போனுல் தேசிய விடுதலை உணர்ச்சிகள்தாம் கிளறப்பட்டன. உள்ளூர் மன்றங்களிடம் அதிகாரம் சிறிதளவுகூட ஒப்படைக்கப்படவில்லை. இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட இருபதாண்டுகளுக்குப்பின் சிறு தன்னுட்சி உரிமைகூட வளர்ச்சியடைய ஆதரவளிக்கவில்லை. பிறகு எம்முறையில் நாட்டுப்புறங்களைத் திட்டம் முதலில் விரும்பியபடி வலுப்படுத்த முடியும்? நாட்டுப்புறச் சமூக அமைப்பை வலுப்படுத்தினுல்தானே நாட்டுப்புற ஆக்க நலன்களை வளர்க்க முடியும்.

நெறிமுறைத்திட்டம் இந்தோனேசியர்களின் தேவைக்கேற்றவாறு இயங்கவில்லை என்பதை மலர்ந்து வரும் இந்தோனேசிய இயக்கத்தைப் பார்த்தாலே புரிந்தது. திரண்டுவரும் தேசிய உணர்ச்சிகளும் கோரிக்கைகளும் ஆட்டம் கொண்டிருக்கும்

நெறிமுறைத் திட்டத்தின் அடிப்படையை அரித்துத் தகர்த்தெறிந்து இந்தோனேசியர்களின் மனநிலையை உருமாற்றியமைத்தன.

7. இந்தோனேசியா—இரு போர்களுக்கு இடையில்

கி.பி. 1920ஆம் ஆண்டில் டச்சு அரசாங்கம் நெறிமுறைத் திட்டத்தை நீக்கித் தன்னாட்சி முறையைப் புகுத்த முன்வந்தது. ஆகையால், மக்கள் மன்றங்கள் (People's Council) அல்லது வாக்ஸ்ராட் (Valksraad) அமைக்கப்பட்டன. குடியேறியிருக்கும் ஐரோப்பிய மக்களின் தேவைகளை நிறைவு செய்யவே இம்மன்றங்கள் தோன்றின. உண்மையாக இம்மன்றங்களுக்கு மிகுந்த அதிகாரங்கள் கொடுக்கப்படவில்லை. ஜாவாவில் அமைக்கப்பட்ட கீழ்ப்படியில் உள்ள மன்றங்களுக்குமட்டும் ஆலோசனை கூறும் அதிகாரம் வழங்கப்பட்டது. சுதந்திரப் போர் தீவிரமாக நடைபெற்றதால் கி.பி. 1925ஆம் ஆண்டிலிருந்து 1935 வரை ஆட்சிபுரிந்த டச்சு அரசாங்கம் இந்தோனேசியர்களுக்கு அதிக அரசியல் உரிமைகளை வழங்க மறுத்தது; அடக்குமுறை ஆட்சியை வலுப்படுத்தியது. சுதந்திரம் என்று பேசினால்கூட இராசத்துரோகம் என்ற சட்டத்தைக் கொண்டுவந்தது. 'இந்தோனேசியன்' என்ற சொல்லைக் கூறுவதற்குக்கூடத் தடை விதிக்கப்பட்டது. 1920ஆம் ஆண்டில் தழைத்தோங்கியிருந்த செல்வச் செழிப்பான வாழ்க்கை கி.பி. 1920ஆம் ஆண்டில் உச்சநிலையை அடைந்தது. ஆனால், கி.பி. 1930ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தோனேசியப் பொருள்களின் தேவை உலக வியாபாரத் தலங்களில் மிகவும் குறைந்ததால் இந்தோனேசிய மக்களும், ஐரோப்பிய வணிகர்களும் பாதிக்கப்பட்டார்கள். இந்தோனேசிய மையத்திலிருந்து விலகியுள்ள வெளிப்புறத் தீவுகளிலிருந்து (Outer Islands) வேலை கிடைக்காத தொழிலாளர்கள் ஜாவாவிற்குத் திரும்பிவந்தனர். விவசாயத்தையே நம்பிவாழும் மக்களுக்கு வாழ்க்கைத் தேவைக்கு மட்டும் பணம் கிடைத்தது; ஆதாயப்பங்கு (Dividends) முழுவதும் குறைந்தது. மிகப் பெரிய வாணிபத் தலங்கள் தங்களுடைய கையிருப்பு, சேமத் தொகைகளை (financial reserves) பயன்படுத்தின. உலகப் பொருளாதார நிலை சோர்வடைந்த நிலையிலிருந்ததால் (depression) இந்தோனேசியாவிற்குச் சுதந்திரமாக வந்து வாணிபம் செய்யும்முறை பாதிக்கப்பட்டது; குறைந்த விலையில் விற்கப்படும் ஜப்பானியப் பொருள்களால் பயன்படுத்துபவர் சார்பான வாணிகம் (consumer goods) இழி நிலையை அடைந்தது. தேசிய இயக்கங்கள் ஒத்த தரமுடையனவாயில்லாததால் அரசாங்கம் அவைகளைக் கட்டுப்படுத்த முடிந்தது.

அவ்வாறு இருந்தாலும், தேசியவாதிகளால் அரசாங்கத்தை வற்புறுத்த முடிந்தது. மக்கள் மன்றங்களில் டச்சுக்காரர்களோடு ஒத்துழைக்கும் தேசிய மிதவாதிகளின் இந்தக் கோரிக்கையைக் கி.பி. 1936ஆம் ஆண்டில் ஹேகில் (The Hague) உள்ள டச்சு அர சாங்கம் ஏற்காமல் தள்ளிவைத்தது. கி.பி. 1946ஆம் ஆண்டில் டச்சு அரசாங்கம் இங்கிலாந்திற்குப் புறமுதுகு காட்டி ஓடிய பிறகுகூட, அரசியல் சட்டதிட்டத்தில் மாறுதல் ஏற்பட வேண்டும் எனக் கூறும் முக்கியமான கோரிக்கை எதுவும் வெளிவரவில்லை. கி.பி. 1942ஆம் ஆண்டில் ஜப்பானிய ஆதிக்கம் இந்தோனேசியா விற்கு வருமுன்னே இந்தோனேசியாவில் டச்சு ஆட்சி நிலைத் திருக்கும் என்பது ஒரு பகற் கனவாயிற்று.

முதல் உலகப் போருக்குப் பிறகு வந்த சீர்திருத்தத் திட்டங்கள்

நெறிமுறைத் திட்டத்தின் நோக்கம் சமுதாய நலன்களை வளர்க்க வேண்டும் என்பது; ஆனால் அதற்குப் பிறகு வந்த திட்டத்தின் நோக்கம் படிப்படியாக நிருவாக முறையில் சீர்திருத் தங்கள் கொண்டுவர வேண்டும் என்பதே. இவ்விரு திட்டங்களின் கொள்கைகளுக்கும், உட்கருத்துகளுக்கும் அதிக வேறுபாடுகள் இருந்தன; மிக விழிப்புடன் தந்தை போன்ற நோக்கத்துடன் நல்வழியில் செல்ல முயன்றதுதான் இவ்விரு திட்டங்களுக்கும் உள்ள ஓர் ஒற்றுமை. கி.பி. 1920ஆம் ஆண்டு சமூகப் பொருளா தார முன்னேற்றத்திற்காக இந்தோனேசியத் தலைவர்களைப் பயன்படுத்த முயன்றது டச்சு அரசாங்கம். ஆனால், கி.பி. 1920ஆம் ஆண்டுக்குப் பிறகு தேசியவாதிகள் அரசாங்கத்தில் பங்குகொள்ள வேண்டும், ஹாலந்து ஆட்சி இந்தோனேசியாவிலிருந்து விலக வேண்டும் என்று மக்கள் தீவிரமாக முறையிடத் தொடங்கியதால் சில சலுகை உரிமைகளைக் கொடுக்க அரசாங்கம் முன்வந்தது. ஐரோப்பாவிலிருந்தும், மேற்கு ஆசிய இஸ்லாமிய நாடுகளிலிருந் தும் படித்துத் திரும்பிவந்த இந்தோனேசியர்கள், உருசிய சாரிகட் இஸ்லாம் (Sarekat Islam) என்ற தேசியக் கட்சி கூறுவதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தொடங்கியதாலும் தேசிய இயக்கம் வலுத்து முன்னேறத் தொடங்கியது. படித்துப் பட்டம்பெற்ற இந்தோனேசியர்கள் நிருவாக விவகாரங்களில் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும் எனக் கி.பி. 1920ஆம் ஆண்டுக்குப் பிறகு டச்சு அரசாங்கம் வலியுறுத்தத் தொடங்கியது.

உலகப் போரின்போது ஏற்பட்ட பல நிகழ்ச்சிகள் ஹாலந்திலும் இந்தோனேசியாவிலும் உள்ள டச்சு மக்களின் மனத்தை மாற்று வதற்குக் காரணமாயிருந்தன. அரசியல் சட்டதிட்டங்களில் பல

மாறுதல்களை ஏற்படுத்துவதற்கு அவர்களைத் தயாராக்கின. கி.பி. 1919ஆம் ஆண்டுக்குள் இந்தோனேசியாவிலிருந்து அமெரிக்காவிற்கும், ஜப்பானிற்கும் செய்யும் ஏற்றுமதி 22 விழுக்காடாய்ப் பெருகியது. இதனால் ஹாலந்தின் செல்வாக்குக் குறைந்தது; தன்மானம் ஒடுங்கியது. கி.பி. 1914ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரிட்டனும் பிரான்சும் ஐரோப்பிய விவகாரங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்தன; கீழை நாடுகளில் ஜப்பானியர்களுக்குப் போரில் ஈடுபாடு மிகத் தொடங்கியது. இந்தச் சூழ்நிலையில் அமைதியின்மையையும் கலகத்தையும் தோற்றுவித்தது. தெற்கு நோக்கி ஜப்பான் செல்ல முயன்றால் டச்சு அரசாங்கம் இந்தோனேசியர்களைக் கட்டாயமாகப் படைகளில் சேர்த்துத்தான் இந்தோனேசியாவைப் பாதுகாக்க முடியும் என்ற நிலைமை இருந்தது. ஆனால், டச்சு அரசாங்கம் சுயாட்சி கொடுப்பதாக வாக்களிக்காவிட்டால் கட்டாயமாகப் படையில் சேர்ப்பதை இந்தோனேசியர்கள் எதிர்ப்பார்கள் என்பதில் ஐயமில்லை. மேலும் மக்கள் தலைவர் வில்சன் சுயாட்சி உரிமைகள் கொடுக்க வேண்டும் என்னும் கருத்தைப் பரப்பவே இப்புரட்சியான சூழ்நிலை வலுவடைந்தது. ஆகையால் இந்தோனேசியர்களுக்கு நிருவாகத்தில் பங்கு கொடுக்க வேண்டும் என்று டச்சு அரசாங்கம் பல திட்டங்களை ஆராயத் தொடங்கியது. இதற்கு முன் இத்தகைய திட்டங்கள் மூலம் ஹாலந்து ஆட்சிக்கு இடையூறுகள் ஏற்படும் என டச்சு அரசாங்கம் அஞ்சியதையும் நாம் மறக்கக்கூடாது.

நிருவாக முறையில் மிதமான மாறுதல்கள் ஏற்படுத்த வேண்டும்; ஆலோசனை கூறும் மக்கள் மன்றங்களை நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைக்க வேண்டும் எனக் கி.பி. 1918ஆம் ஆண்டில் அரைகுறை மனத்துடன் ஹாலந்தில் உள்ள டச்சு அரசாங்கம் தீர்மானித்தது. முதலில் இத்திட்டத்தை ஜாவாவில் செயற்படுத்த வேண்டும் எனவும், பிறகு மற்றைய தீவுகளில் படிப்படியாகப் புகுத்த வேண்டும் எனவும் அரசாங்கம் தீர்மானித்தது. கி.பி. 1922ஆம் ஆண்டில் அரசாங்கச் சீர்திருத்தக் குழு இதுபற்றிப் பரிந்துரை செய்தது. இச்சமயத்தில் தேசிய உணர்ச்சி தீவிரத் திசையில் திரும்பத் தொடங்கியது. உதாரணமாக ஸாரிகட் இஸ்லாம் கட்சி முதலாளித்துவத்தைத் தீவிரமாக எதிர்த்தது. சில கலகக்காரர்களும், அமெரிக்கச் சோவியத் அரசாங்கங்களின் பொறுப்பற்ற அறிவிப்புகளும் இத்தீவிரத் திருப்பத்திற்குக் காரணம் எனப் பிற்போக்குக் கொள்கையுள்ள அரசியல் அதிகாரிகள் கூறினார்கள்.

கி.பி. 1903ஆம் ஆண்டில் சில நகரங்களில் மிதமான நோக்கத்துடன் தொடங்கிய மன்றங்களில் மக்கள் பங்குகொள்ள வாய்ப்

புக்கிடைத்தது; இதுவே முதல் உலகப் பெரும்போருக்குமுன் சுயாட்சி முறையில் கிடைத்த ஒரேஓர் அனுபவம் ஆகும். அதிகார மனப்பான்மையுள்ளவர்களின் மேற்பார்வையையும் மறைமுக மில்லாத ஆட்சிமுறையையும் கலந்து டச்சுக்காரர்கள் இந்தோனேசியாவை நிருவகித்தார்கள். மேலும், பிரியாயி பணித்துறைப் பான்மையையும், கிராமத் தலைவர்கள் அதிகாரத்தையும் மக்கள் மதித்ததால் டச்சு அரசாங்கம் இந்த மரபுரிமையையும் தங்கள் நிருவாக முறையில் பயன்படுத்திக்கொண்டது. சுரகர்த்தா, ஜோக் ஜாகர்த்தா ஆகியவற்றைத் தவிர மற்ற ஜாவாத் தீவுப் பகுதிகளில் டச்சுத் துணைக் காப்பரசனின் ஆளுநர்களும், அவர்களுக்குத் துணை புரிந்தவர்களும் ஆட்சிபுரிந்தார்கள். தலைமை ஆளுநர்களுக்கு இவர்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டிருந்தார்கள். உயர்ந்த குலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஊதியம் வாங்கிக்கொண்ட ஜாவா பகர ஆளுநர்கள் (Jawenese regents) இவர்களுடன் ஒத்துழைத்தார்கள். இப்பகர ஆளுநர்கள்மூலம் டச்சு அதிகாரிகள் மக்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டார்கள். மேலும் இவர்கள் டச்சுக்காரர்களின் மேற்பார்வைக்குக் கட்டுப்பட்டு நடந்தார்கள். கல்வி, சுகாதாரம், விவசாயம் பொதுநலம் முதலிய துறைகளை அரசாங்க நடைமுறை சார்ந்த குழுக்கள் நிருவகித்தன. முதல் உலகப் பெரும் போருக்குப் பிறகு தீர்மானித்த திட்டத்தின் ஒரு புதிய பகர ஆட்சியாண்மையை (new regently) அமைக்கலாம் என்றும், மாகாண ஆலோசனை மன்றங்களை உருவாக்கலாம் என்றும் அராங்கம் நினைத்தது. முழுமையான தன்னாட்சியுரிமை நிருவாக நிறுவனமாக மாறுவதற்கு வேண்டிய ஆற்றல் இம்மன்றங்களுக்கு இருக்கும் எனவும் அரசாங்கம் நினைத்தது. ஜாவாவைத் தவிர மற்றத் தீவுகளில் டச்சுக்காரர்களின் விவகாரங்களைத் தவிர மற்ற விவகாரங்களில் உள்நாட்டுச் சுல்தான்களின் அதிகாரமும் பிரதேச ஆளுநர்களின் (Regional Governor's) நேரடியில்லாத ஆட்சியும் நிலவின. ஆனால், இத்தீவுகளில் மன்றங்களை அமைக்க நீண்டகாலம் வேண்டும் என அரசாங்கம் கருதியது.

மக்கள் மன்றங்கள்

இந்தோனேசியாவில் டச்சு மக்களின் வற்புறுத்தலினால் மக்கள் மன்றம் அமைக்கலாம் எனும் எண்ணம் உருவாகியது. பிற்காலத்தில்தான் இத்திட்டம் இந்தோனேசிய மக்களைச் சீர்ப்படுத்தும் திட்டத்துடன் சேர்க்கப்பட்டது. கி.பி. 1916ஆம் ஆண்டில் மக்கள் மன்றங்களை அமைக்கப்போகும் திட்டம் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றது. கி.பி. 1918ஆம் ஆண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கியது. ஹாலந்திலிருந்து தன்

விருப்பப்படியாக இந்தோனேசியாவை டச்சு அரசாங்கம் ஆட்சி புரிந்தது இந்தோனேசியாவிலிருந்த டச்சுக்காரர்களுக்குப் பிடிக்க வில்லை. இதற்கு மறுப்பைத் தெரிவித்துத் தங்களுக்கும் இந்தோ னேசியாவைப்பற்றி வகுக்கும் திட்டங்களில் பங்கு கொடுக்கவேண் டும் என வலியுறுத்தினர்கள். தொடக்கத்தில் ஐரோப்பியர்களே மக்கள் மன்றத்தின் பெரும்பான்மையான உறுப்பினர்களாயிருந் தார்கள். இவர்களில் சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்; சிலர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார்கள். ஆனால் எண் குறிப்புப்படி இந்தோனேசியர்களும், இந்தோ–அராபியர்களும், இந்தோ–சீனர் களும் ஐரோப்பியர்களுக்குச் சமமாக உறுப்பினர்களாயிருந்தார் கள். ஆட்சிமுறையில் ஏற்கெனவேயிருந்த பிரதேச மன்றங் களும் நகர மன்றங்களும் பெரும்பான்மையான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்தன. சிறுபான்மையான எண்ணிக்கை வகுப்புகளைச் சேர்ந்த தலைவர்களையும் அரசாங்கம் மக்கள் மன்றத்தின் உறுப்பி னர்களாக நியமித்தது. இவர்களில் சிலர் அரசாங்கத்தின் தவறு களை எடுத்துக் கூறுபவர்களாகவும் இருந்தார்கள். மிக முக்கியமான தீர்மானங்கள் பற்றி இந்தோனேசியாவின் தலைமை ஆளுநர் ஹாலந்தில் உள்ள ஹேக் அரசாங்கத்தின் தொடர்பையும் பெற வேண்டும். ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் கால அட்ட வணை உருவாக்குவது போன்ற முக்கியச் செய்திகளைப்பற்றித் தலைமை ஆளுநர் மக்கள் மன்றத்தின் ஆலோசனையைக் கேட்க வேண்டும். ஏற்கக்கூடிய சீர்திருத்தத் திட்டங்களைப்பற்றி மக்கள் மன்றம் ஆலோசனை கூறலாம். ஆனால், அரசாங்கத்தை எதிர்க்கும் தேசியவாதிகள் சுதந்திரமாக இந்த மன்றத்திற்குள் பேச வாய்ப் பளிக்கப்படவில்லை.

கி.பி. 1920ஆம் ஆண்டிலிருந்து மக்கள் மன்றத்தைச் சீர்திருத்துவதற்காகச் சிறு மாறுதல்கள் பல சமயங்களில் புகுத்தப் பட்டன. ஆகையால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண் ணிக்கை பெருகியது. இந்தோனேசியர்களும், டச்சுக்காரர்களும் சேர்ந்து மொத்தம் 55 உறுப்பினர்கள் இருந்தார்கள். கி.பி. 1922ஆம் ஆண்டிலும், 1928ஆம் ஆண்டிலும் கொடுக்கப்பட்ட அனுமதியினல் இந்தோனேசிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 30 ஆக மிகுந்ததால் அவர்களுக்குப் பெரும்பான்மை கிடைத்தது. இவ்விரு இனத்தாரைச் சேர்ந்த உறுப்பினர்களைக் தேர்ந்தெடுக்கச் சிறிதளவுள்ள தனி இனத்தொகுதிகள் உருவாக்கப்பட்டன. ஆகை யால் இவ்விரண்டு இனத்தார்களுக்கும் அரசியல் பற்றி ஒத் துழைப்பு ஏற்பட வாய்ப்புக் கொடுக்கவில்லை. ஏறத்தாழ 550 ஐரோப்பிய வாக்காளர்களே இருந்தார்கள். கி.பி. 1924ஆம் ஆண் டில் 452 இந்தோனேசியர்களுக்கே வாக்குரிமை கொடுக்கப்பட்டது.

இவர்கள் எண்ணிக்கை பெருகத் தொடங்கினாலும் இது 1,530-க்கு மேல் உயரவில்லை. பெரும்பான்மையான இந்தோனேசிய வாக்காளர்கள் பிரதேச மன்ற உறுப்பினர்கள் கி.பி. 1931ஆம் ஆண்டில் மொத்தம் 60 பேர் இருந்தார்கள். அதில் 22 உறுப்பினர்களைத் தலைமை ஆளுநர் நியமித்தார். இவர்களில் 10 உறுப்பினர்கள் ஐரோப்பியர்கள்; 10 இந்தோனேசியர்கள்; இரண்டு அயல்நாட்டு ஆசியர்கள்.

ஒரு திறமைவாய்ந்த சட்டமியற்றும் மன்றமாக மக்கள் மன்றம் திகழவில்லை. சட்டமியற்றும் திட்டங்களைத் தொடங்கி வைக்கவும், திருத்தம் செய்யவும், மனக்குறைகளை நீக்க வேண்டுகோள் விடவும், கேள்வி எழுப்பவும், விளக்கம் கேட்கவும்தான் இம்மக்கள் மன்றத்தால் முடிந்தது. ஆனால் தானாகவே சட்டமியற்றும் அதிகாரம் இதற்குக் கிடைக்கவில்லை. விசாரணை நிறுவனங்களை அமைக்கவும் இதற்கு உரிமையில்லை. ஒரு சட்டமியற்றும் திட்டம் பற்றித்தலைமை ஆளுநருக்கும், மக்கள் மன்றத்திற்கும் ஒப்பந்தம் ஏற்படவில்லை யென்றால், ஆறு மாதம் கழித்து இதே திட்டத்தை மக்கள் மன்றத்தின் முன் கொண்டுவர உரிமையுண்டு. ஆனால் இந்தத் தவணைக்காலம் முடிந்துவிட்டால் முடியரசர் (crown) இத்திட்டத்தை மறுப்பு ஆணையைப் பயன்படுத்தி அழிக்கலாம். அல்லது சட்டமாக மாறுவதற்கு ஆணையிடலாம் (to legistlate lay decree). நாட்டின் பாதுகாப்பிற்குத் தேவையானப் பொருள்கள் அயல்நாட்டுத் தொடர்பு விவகாரங்கள், வரவு செலவுத் திட்டத்தைக் கடைசியாக ஒப்புக்கொள்ளும் உரிமை இவையாவும் ஹேகில் உள்ள மன்னரைச் சார்ந்தவை. நாட்டின் அமைதியைப் பாதுகாக்கும் விவரங்கள் பற்றித்தான் செய்தித் தாள்களைத் தணிக்கை செய்யலாம். டச்சு வெளியீடுகள் கட்டுப்பாடில்லாமல் எங்கும் சென்றன. ஆனால் சமுதாய உரிமைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது அரசியலைப்பற்றிப் பேசவும், அரசியலைப்பற்றிப் பேசிக் கூடவும் உரிமைகள் கிடையா என அரசாங்கம் அறிவித்தது. தேசிய உணர்ச்சி நன்கு ஒலிக்க முடியாத ஊமையான நிலைமையில் இருப்பதாலும் இவ்வுணர்ச்சிகள் குறைபாடான நிறைவு ஏற்படாத முறையில் உருவாகி யிருப்பதாலும் விளைவு பயனற்றதாய்ப் போய்விட்டது; ஆகையால் இதை அரசாங்கம் புறக்கணித்து விடலாம் என அரசாங்கம் தான்போட்ட தடைகளுக்கு ஆதரவைக்கூறியது. ஆனால் உண்மையில் இந்தியாவிலும், பர்மாவிலும், பிலிப்பைன்ஸிலும் நிலவிவந்த நாட்டுப் புரட்சிபோல் இந்தோனேசியாவிலும் வந்து விடக்கூடாது என்ற அச்சத்தால் தான் டச்சு அரசாங்கம் இத் தடைகளை விதித்தது.

ஆட்சிமுறை சார்ந்த சீர்திருத்தங்கள்

அரசாங்கச் சீர்திருத்தக்குழு நிர்வாகம்பற்றிச் செய்த சிபாரிசு கள் கி.பி. 1922ஆம் ஆண்டில் நெதர்லாந்து சட்டதிட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இந்தோனேசியத் தீவுகளில் குடியாட்சி முறைகள் வளர்வதற்கு இது துணையாயிருந்தது. தொடக்கத்தில் ஜாவாவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தி, பின்பு மற்றத் தீவுகளிலும் செயல்படுத்த ஒரே வகையான மாகாண அரசாங்கங்களை அமைக்க அரசாங்கம் தீர்மானித்தது. இவ்வாறு புதியனவாக அமைக்கப்படும் மாகாணங்களை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் ஆட்சி புரிந்தார்கள். மக்கள் மன்றம்போல் உள்ளூர் மன்றங்கள் அமைக்கப்படவேண்டும். ஆளுநர்கள் இம்மன்றங்களின் தலைவர்களாக (chairman) நியமிக்கப்படுவார்கள். சட்டம் செயல்படுத்தும் பிரதிநிதிகள் சூழ மக்களின் (Board of Deputies) தலைவராகவும் ஆளுநர்கள் நியமிக்கப்படுவார்கள். ஊதியம் பெறும் அதிகாரிகள் இக்குழுமத்தின் உறுப்பினர்களாக இயங்குவார்கள். தண்ணீர் வழங்கிடும் நீர்ப்பாசன வசதி செய்யும், மின்சக்தியினால் இயங்கும் துறைகளை இப்பிரதிநிதிகள் மேற்பார்வையிட வேண்டும். துணைக்காப்பரசின் ஆளுநர்களுக்கு உதவிபுரியும் அதிக அனுபவம் உள்ள அதிகாரிகள், தாங்கள் ஆட்சிபுரியும் பகுதிகளில் முன்பு இருந்ததுபோல் சட்டம் நிறைவேற்ற அதிகாரங்களைத் தங்கள் விருப்பப்படி பயன்படுத்தலாம். மாகாணத்தில் அல்லது மாகாணமாக மாறும் தகுதியுள்ள இடங்களில் சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றைத் தன்னாட்சி உரிமைப் பகுதிகளாக அமைக்கலாம். தீர்மானங்கள் நிறைவேற்றுவதற்காக இப்பகுதிகளில் ஆலோசனை மன்றங்களை அமைக்கவேண்டும். தங்கள் கடமைகளைச் செய்யத் தவறினாலும், ஒத்துழைக்க மறுத்தாலும் இம்மன்றங்களை நிறுத்தி வைக்கவோ, அடக்கி ஒதுக்கவோ உரிமை உண்டு.

ஜாவாவில் இச்சீர்த்தங்களைச் செயல்படுத்தியபோது பழைய பிரதேசப்பகுதிகள் நீக்கப்பட்டு பதிலாக ஐந்து புதிய மாகாணங்கள் அமைக்கப்பட்டன. ஜாவாவின் மேற்கிலும், கிழக்கிலும், நடுவிலும் மாகாணங்கள் உடனே அமைக்கப்பட்டன. ஆனால் மற்ற இரண்டு (துரகர்த்தா, ஜோக்ஜாகர்த்தா) மாகாணங்களும் கி.பி. 1928ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டன. இம்மாகாணங்களில் சில பகுதிகளையும் மதுராவின் சில பகுதிகளையும் சுயாட்சியுள்ள பகர ஆட்சியாண்மைப் பகுதியாக (autonomous regencies) அரசாங்கம் நிறுவியது. இப்பகர ஆட்சியாண்மைப் பகுதிகள் கி.பி. 1930ஆம் ஆண்டில் இருந்தன. பகர ஆட்சியாண்மைப் பகுதி மன்றங்

களின் வாக்காளர்களுக்கு 25 வயதாவது முடிந்திருக்க வேண்டும். அதாவது 500 குடிமக்களுக்கு ஒரு வாக்காளர் இருந்தார். வரி விகிதப் பிரதிநிதித்துவத்தேர்தல் முறைப்படி (Propostional representation) வாக்காளர்கள் மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். இம்மன்றத்தின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பகர ஆளுநர் (Regent) ஆட்சி மன்றத்தின் கூட்டங்களுக்கு அமைச்சர் தலைமை தாங்கினார்; ஆனால் இக்கூட்டங்களில் பங்கு எடுத்துக்கொள்ளாமல் வெறும் பார்வையாளராக (observer) டச்சுக்காரர் ஒருவர் இக்கூட்டத்தின் நிகழ்ச்சிகளைக் கவனிப்பார். பகர ஆளுநர்களில் பெரும்பான்மையோர் மன்றங்களுடன் சேர்ந்து வேலை செய்ய விரும்பவில்லை. ஏனென்றால் இம்மன்றங்கள் அவர்களுடைய வழி வழி மரபான அதிகாரங்களை அழிக்கத் தொடங்கின.

இப்புது நிருவாக முறையின் மூலம் நாட்டின் நிலையான ஆட்சியும் பொறுப்புள்ள அறிவுரைகளும், இந்தோனேசிய மக்களுக்குச் சுயாட்சி முறையில் பயிற்சியும் கிடைக்கும் என இப்புதுத் திட்டத்தை வரவேற்றவர்கள் கூறினார்கள்.

சமூகப் பொருளாதாரம் ஆகியவற்றின் வளர்ச்சி கி.பி. 1920—1930

முதல் உலகப் பெரும் போருக்கும் பிறகு ஜாவாவைத் தவிர மற்றத் தீவுகளில் பொருளாதார வளர்ச்சி மிகுந்த அளவில் ஏற்பட்டது. முக்கியமாகப் புகையிலை, எண்ணெய், ரப்பர், வெள்ளீயம் முதலியவற்றின் உற்பத்தியே இவ்வளர்ச்சிக்குக் காரணமாய்த் திகழ்ந்தது. அந்நிய நாட்டு முதலாளித்துவம் இதில் தீவிரமாகக் கலந்துகொண்டது. சீனத் தொழிலாளர்களே மிகுந்த அளவில் பயன்படுத்தப்பட்டார்கள். கி.பி. 1925ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தோனேசியத் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் பெருகத்தொடங்கியது. இந்தோனேசியாவில் உள்ள $1\frac{1}{4}$ மில்லியன் சீனர்களில் பாதிக்குமேல் ஜாவாவிற்கு வெளியே உள்ள தீவுகளில் வசித்து வந்தார்கள். இரப்பர், கொப்பரைத்தேங்காய் முதலியவற்றின் உற்பத்தி பெருகச் சுமத்திராவில் உள்ள மினங்கபாவு, வடக்கு செலிபிஸ் (Celebes) ஆகியவற்றிலுள்ள சிறு திறநிலமுடையவர்களே காரணமாய் விளங்கினார்கள். தென் சுமத்திராவிலும் கிழக்குப் போர்னியோவிலும் எண்ணெய்த் தொழில் துறை வளர்ச்சியடைந்தது. இது சம்பந்தமாக முதலீடுசெய்வதற்கும், உற்பத்தியைப் பெருக்குவதற்கும் வாணிபம் செய்யவும் இப்பகுதிகள் வெளிநாடுகளுடன் உறவு கொண்டிருந்தன. ஆனால், உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு

இவை பொருத்தமாய் அமையவில்லை. இந்தோனேசியாவில் இருந்த டச்சு பாங்கு ஸ்தாபனங்களும் மேற்கு நாட்டவர்களுடைய வாணிபத்திற்கே உபயோகப்படுத்தப்பட்டன. கி.பி. 1920—30 ஆம் ஆண்டுகளில் வெள்ளீயம், கொப்பரைத் தேங்காய் ஆகியவற்றின் உற்பத்தி 50 விழுக்காடு அதிகமாயிற்று; நிலக்கரி, எண்ணெய், சர்க்கரை, தேயிலை உற்பத்தி இருமடங்கு அதிகரித்தது; இரப்பர் விளைச்சல் 200 விழுக்காடு பெருகிற்று. கி. பி. 1928—1929ஆம் ஆண்டில் அயல் நாட்டு முதலீடு 4 மில்லியன் கில்டர்கள் (Guilders: டச்சு நாணயத்தின் பெயர்) இவர்களுக்கு இம்முதலீட்டின்மேல் 500 மில்லியன் கில்டர்ஸ் ஆதாயப் பங்காய்க் (Dividends) கிடைத்தது. கி.பி. 1927ஆம் ஆண்டில் 52,000 இந்தோனேசியர்கள் மெக்காவை (Mecca) காணச்சென்றதை நோக்கினுல், இந்தோனேசியர்களுக்கும் இப்பொருளாதார வளர்ச்சியினுல் முன்னேற்றம் கிடைத்தது என நாம் கூறலாம். ஆனுல், அயல் நாட்டார்களுக்குக் கிடைத்த மிகுபயனில் ஒரு சிறு பகுதிகூட இந்தோனேசிய மக்களுக்குக் கிடைக்கவில்லை எனக் கூறலாம்.

ஆனுல் பொருளாதார வளர்ச்சி சுயாட்சி முறைக்குத் தடையாகவும் இருந்தது எனக் கூறலாம். வாணிகர்களுக்கு மிகுபயன் கிடைத்ததால் சட்டதிட்டத்தின் மூலம் இந்தோனேசியர்களுக்குச் சலுகைகள் கொடுப்பதை அவர்கள் எதிர்த்தார்கள். ஆகையால், மக்கள் மன்றத்திற்கு மிகுந்த அதிகாரங்கள் கொடுக்கப்போவதாக வாக்களித்ததைச் செயல்முறையில் நிறைவேற்ற மறுத்தது. டச்சு அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மறுக்கும் தேசிய இயக்கங்கள் இராசத்துரோகம் செய்கின்றன என அவைகளுக்குத் தடை விதித்தது. ஆங்கிலேயர், அமெரிக்கர், டச்சுக்காரர் ஆகியவர்கள் கூட்டுறவுத் தொழில் நிறுவனங்கள் தொழிலாளர்களுக்குக் குறைந்த ஊதியம் கொடுத்தன. அரசாங்கத்திற்கு மிதமாக வரி செலுத்தியதுதான் அந்த நிறுவனங்கள் இந்தோனேசிய மக்களுக்குச் செய்த உதவி. சீனர் முதலானவர்கள் கரும்புப் பண்ணைகளில் பங்கு கொண்டார்கள். ஆனுல், தேயிலை, பருத்தி, புகையிலை, கோகோ அபினித் தோட்டங்களும், பண்ணைகளும் ஐரோப்பியர்களின் தனியுரிமையின்கீழ் வந்தன. தொழிலாளர்கள் உடன்படிக்கையை மதிக்காமல் நடக்க முற்பட்டால் சட்டப்படி தண்டனை அளிக்கப்படும் என்ற நிபந்தனை, புகையிலை விளைச்சலைப் பற்றிய உடன்படிக்கையிலிருந்து கி.பி. 1932ஆம் ஆண்டில் விலக்கப்பட்டது. கி.பி. 1940ஆம் ஆண்டில் இரப்பர்த் தோட்டம் பற்றிய உடன்படிக்கைகள் நீக்கப்பட்டன. கட்டாயமுறையில் தொழிலாளிகளை வேலை செய்யவைத்து உற்பத்தியைப் பெருக்கும்

பண்டங்கள் அமெரிக்காவில் விற்கக்கூடாது என்ற தடை விதித்த தால்தான் இந்த நிபந்தனைகளும் நீக்கப்பட்டன.

புது நாகரிகப் பண்பாட்டின் செயல்விளைவுகள்

இரண்டு உலகப் பெரும் போரின் இடைக்காலத்திலே இந்தோனேசியர்களின் வாழ்க்கை மேற்கு நாட்டவர்களின் கலாசாரத்தால் பாதிக்கப்பட்டது. விவசாய உற்பத்தியை ஜாவாவில் பெருக்கியதாலும், சுகாதார வசதிகள் மிகுந்ததாலும், ஜாவாவின் மக்கள் தொகை விரைவாகப் பெருகத் தொடங்கியது. கி.பி. 1930ஆம் ஆண்டில் ஜாவாவின் ஜனத்தொகை 40 மில்லியன். புதுவகைப் பயிர்களை உற்பத்தி செய்யத் தொடங்கிய இந்தோ னேசியர்களுக்குப் புதுவகைத் தேவைகளும் அதிகரித்தன. உதாரணமாக இயந்திரங்கள், மிதிவண்டிகள், மருந்துகள், உடைகள், பள்ளிக்கூடவசதி முதலியவற்றின் தேவைகள் பெருகின. இந்தோனேசியர்கள் செலாவணியும் பயன்படுத்தத் தொடங்கினர். சுரங்கங்களிலும், தொழில் துறைகளிலும், பண்ணைகளிலும், தூரத் தீவுகளிலிருந்து வந்து வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு முதன் முதலாக ஊதிய இழப்பீடு (Wage Compansation) கொடுக்கப் பட்டது. தனியார்களிடமிருந்து கடன்வாங்கும் அனுபவமும் அவர்களுக்கு முதன் முறையாக ஏற்பட்டது. பொம்மலாட்டம், விதை விதைக்கும்போதும் அறுவடைசெய்யும்போதும் செய்த மதவழிப்பாட்டு முறைகள் போன்ற பழைய பழக்கவழக்கங்கள் மறையத் தொடங்கின.

கி.பி. 1915ஆம் ஆண்டிலிருந்து 1930ஆம் ஆண்டுவரை டச்சுப் பண்ணைகளின் வளர்ச்சி இந்தோனேசியச் சமூக மாறுதல் களுக்கு முக்கியக் காரணமாய் விளங்கியது. ஜாவாவில் உள்ள பண்ணைகளில் கரும்பு, மரவள்ளிக்கிழங்கு, அரிசி, தேயிலை, காபி, தாழை நாரிழை (Sisas), கூவைக் கிழங்கு வகைகள் (Cassava) பயிரிடப்பட்டன; ஜாவாவைத்தவிர மற்றத் தீவுகளின் தோட்டங் களில் இரப்பரும், புகையிலையும் பயிரிடப்பட்டன. பதனிடும் தொழிற்சாலைகளை அமைக்க விவசாய முதலாளிகளிடமிருந்து 20 ஆண்டுகளுக்கு நிலங்களைக் குத்தகைக்கு எடுத்தார்கள். நான்கில் ஒரு பங்கு விளைச்சல் நிலங்களில் இத்தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. நிலங்களைக் குத்தகைக்கு வாங்குவதற் காகவும், தொழிலாளர்கள் தேவைப்படும்போது அவர்களை வேலைக்கு அமர்த்த கிராமத்தலைவர்களையும், இந்தோனேசியப் பொதுத்துறை ஊழியர்களையும் இடையீட்டாளர்களாகப் பயன் படுத்தினுர்கள். ஆய்வறிவு சார்ந்த தாற்காலிக முறைப்படி

நிலங்களில் விவசாயம் செய்யப்பட்டது. கி.பி. 1920ஆம் ஆண்டுக்குப் பிறகு டச்சு ஆலைக்காரர்கள் கரும்பு வாங்குவதை நிறுத்தியதால் தனியார் பண்ணையாளர்கள் பாதிக்கப்பட்டார்கள்.

கி. பி. 1930ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரம் இழிநிலையடையாதிருந்தால் இத்தகைய பண்ணை முறை நீடித்திருக்கும். ஜாவா விவசாயப் பொருளாதாரச் சூழ்நிலையில் ஒரு வகைப் புதுச் சீரமைப்பு ஏற்பட்டிருக்கும். மேலெழும்பிய சமூக அமைப்பில் கிராமக் குறுநிலக்கிழார் வகுப்புத் தோன்றியது. இவ்வகுப்பின் மேற்படியில் நிலவுடமையாளர்களும், கிராமத்தலைவர்களும் இருந்தார்கள். குத்தகை விடுவதன்மூலமும், டச்சுக்காரர்களின் தொழிலாளித் தேவையை நிறைவு செய்து மிகுபயன் அடைவதன் மூலமும் இவர்கள் செல்வம் குவித்தார்கள். பண்ணைகளிலோ, ஆலைகளிலோ, பருவகாலங்களில் கூலிக்கு வேலைசெய்த விவசாயிகளுக்குத் தம் நிலத்தில் விளையும் நெல்லை நம்பித்தான் வாழ்ந்தார்கள். இவ்வாறு விவசாயிகளையும் தொழிலாளிகளையும் ஒரு பாட்டாளி மக்களின் வகுப்பாக அமைக்க முடியவில்லை. பண்ணைகளில் தொழிற்சாலைகளில் வேலை செய்த தொழிலாளர்கள் பத்தொன்பதாவது நூற்றுண்டில் நிலவி வந்த முறைப்படியே நிருவகிக்கப்பட்டார்கள். உற்பத்தியையும், வாணிபத்தையும் உலகப் பொருளாதாரச் சூழ்நிலையுடன் டச்சுப் பண்ணை மேற்பார்வையாளர்கள் இணைத்தார்கள். தொழில்துறை உரிமையாளர்களாகவும், குத்தகையாளர்களாகவும் ஆவதற்கு இந்தோனேசிய மக்களுக்குக் கிடைத்த வாய்ப்பு மிகச் சிறிதே. செல்வம் பெருக்கும் நோக்கத்துடன் இந்தோனேசியச் சமூக அமைப்பை மாற்ற முயற்சி செய்யவில்லை. கி. பி. 1930ஆம் ஆண்டுக்கு முன் ஏற்பட்ட உற்பத்திப் பெருக்கிறைலும், சமூக நலத்திட்டங்களிறைலும் நன்மைகள் கிடைத்தபோதிலும், ஒவ்வொருவருக்கும் கிடைத்த வருமானத்தில் பொதுவாக அதிகரிப்பு இல்லை.

1930-ல் இந்தோனேசியப் பண்ணைப் பொருள்களின் தேவை (உலக வாணிபஸ்தலங்களில்) மிகக் குறைந்ததால் வாழ்க்கைத் தேவைக்கு மட்டும் வேண்டிய விவசாயத்தில் இந்தோனேசியர்கள் ஈடுபட்டார்கள். உலகப் பொருளாதாரம் மிகவும் வீழ்ச்சியடைந்ததால் ஜாவாவில் புதியதாக முளைத்துவந்த புதிய வகுப்பு கிள்ளியெறியப்பட்டது. விவசாய உற்பத்தித் தொழில்களைச் சீன வட்டிக் கடைக்காரர்கள் செய்யத் தொடங்கினர். குத்தகைகள் நீக்கப்பட்டதாலும் இந்தோனேசிய மக்களின் வாழ்க்கை நிலை ஏழ்மை நிலையில் ஆழ்ந்தது. முஸ்லீம்கள் நடத்திய பள்ளிக்கூடங்களும் மூடப்பட்டன. டச்சுடன் ஒத்துழைத்த இந்தோனேசிய ஆளும்

வகுப்பினர், கிராமத்தலைவர்களின் பெருமையும் செல்வாக்கும் குறைந்தன. ஆகையால், இந்தோனேசியா தலைவர்கள் அற்ற பகுதியாயிற்று. ஆனால், ஆளும் வகுப்புக் கீழ்ப்படியில் வேலை செய்த இந்தோனேசியர்களிலிருந்தும் படித்துக்கொண்டிருக்கும் மாணவக் குழுவிலிருந்தும் புதுத்தலைவர்கள் தோன்றத் தொடங் கினார்கள். ஆகையால், டச்சு அரசாங்கம் அடக்கு முறைகளைப் பயன்படுத்தத் தொடங்கியது.

டச்சுக்காரர்கள் இந்தோனேசியாவில் குடியேறியதால் அவர்க ளுடைய வாழ்க்கை முறைகளை இந்தோனேசியர்களும் தழுவத் தொடங்கினார்கள். கி.பி. 1920ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரியாயி (Prijaji) அல்லது கல்வியறிவாளர் ஆளும் வகுப்பினரைச் சேர்ந் தவர்களின் வாழ்க்கை முறை முற்றிலும் மாறத் தொடங்கிற்று. ஜாவாவில் உள்ள இந்துக்கள் அரண்மனையில் நிலவி வந்த கலாசாரத்தைத்தான் பிரியாயி வகுப்பினர்கள் பொதுவாகப் பின் பற்றி நடந்தார்கள். பண்பட்ட நடத்தை, ஆன்மீக முறையில் கடவுளின் மாயையை அறிய முற்படும் மதப்போக்கு, கலை, ஆடல், பாடல் முதலியவற்றில் நாகரிகமான பண்பட்ட அனுபவிக்கும் தன்மை ஆகியவற்றையே இந்துக் கலாசாரம் வலியுறுத்தியது. பொதுவாகச் சிற்றரசர்களின் தனிச்சிறப்புரிமைகளை ஜாவா மாவட்டத்தின் அதிகாரிகள் நடைமுறையில் தமதாக்கிக் கொண் டார்கள். அவர்கள் அலுவலகத்திலே வேலை செய்பவர்கள். பொதுவாக உழவர் தொடர்பு கொள்ளவில்லை. ஆனால் கி.பி. 1920ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரியாயி வகுப்பினர்கள் கணக்கர் களாகவும், தொழில் நுட்ப வல்லுநர்களாகவும் (technicians), பணியாளர்களாகவும் பணி செய்யத் தொடங்கினார்கள். டச்சுக் காரர்களின் வழிமுறைகளைப் பின்பற்றி அவர்கள் புதிதாக வந்த கலாசாரத்திற்கும், பழங்காலத்திலிருந்தே வழங்கி வந்த கலா சாரத்திற்கும் இடையே கலாசாரத் தரகர்களாகச் செயலாற்றினார் கள். ஆனால், உயர்படியில் இருந்த பிரியாயிகள் தங்களுடைய பழங்காலப் பழக்க வழக்கங்களை விட்டு விடாமல் பாதுகாத்தார்கள். ஆனால் புதுப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றிய பிரியாயிகள் தேசியப் புரட்சியின் தலைவர்களாகத் தோன்றத் தொடங்கினார்கள். இவர்களுக்கும், டச்சுக்காரர்களோடு ஒத்துழைத்துக் கொண்டிருந்த மேற்படியிலிருந்த ஆளும் வகுப்பினர்களுக்கும் மிகுந்த வேறுபாடு கள் இருந்தன.

அரசியல் பற்றிய வேறுபாடுகள் ஜாவாவில் சிக்கலான சூழ் நிலையில் இருந்தன. மதவழியைப் பின்பற்றினால் ஜாவாக் குடி மக்களை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று ஜாவாக் கடற்கரை

யோரங்களில் வசித்து வந்த ஸன்த்ரீ (Santri) வகுப்பினர்கள். இரண்டாவது அபன்கன் (abangan) வகுப்பினர்கள். இவர்கள் மத்திய ஜாவாவின் உட்பகுதியிலே மிக அதிகமாக வசித்து வந்தார் கள். நடைமுறையிலிருந்த சமரசஞ் சார்ந்த ஆன்மாதி (Syncretic animist) இந்து, முகமதன் வழிபாட்டு முறைகளில் ஸன்த்ரீகள் இஸ்லாமியத் தத்துவத்திற்கே முதலிடம் கொடுத்தார்கள். ஆனால் அபன்கன் வகுப்பினர்கள் இஸ்லாமியத் தத்துவத்திற்கு முதன்மை கொடுக்க மறுத்தார்கள். கிராமப் பகுதிகளில் வசிக்கும் ஸன்த்ரீ களுக்கும், அபன்கன்களுக்கும் மிகுந்த மாறுபாடு கிடையாது. ஆனால் நகரத்தில் வசித்து வந்த புதுமைப் பாங்குகளைப் பின்பற்றிய இவ்விரு வகுப்பினர்களுக்கும் மனக் கசப்பு அதிகமாயிற்று. வணிகர்களும், மசூதிகளில் வேலை செய்த அதிகாரிகளும், முஸ்லிம் கல்விமான்களும் ஸன்த்ரீ வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் முகமதீயா, நக்தாதுல் உலாமா (Nahdatul Ulama) ஆகிய கட்சி களில் இருந்தார்கள். தேசியக் கட்சி (Nationalist Party), கம்யூனிஸ்டு கட்சி ஆகியவற்றின் தலைவர்களாகப் புதுமைப் பாங்கு களைப் பின்பற்றிய பிரியாயி தொழிலாளிகள் வந்தார்கள். ஆகை யால் ஜாவாவில் கிராமத்தில் வாழ்ந்து வந்தவர்களுக்கும், நகரத்தில் வாழ்ந்து வந்தவர்களுக்கும், ஸன்த்ரீகளுக்கும், அபன்கன்களுக் கும், பழங்கால முறைகளைப் பின்பற்றுபவர்களுக்கும், புதுமைப் பாங்கை நோக்கிச் செல்பவர்களுக்கும் ஒற்றுமையில்லாமலிருந்தது. டச்சுக்காரர்களின்மேல் உள்ள வெறுப்புத்தான் முதல் உலகப் போருக்குப் பிறகு அவர்களைப் பிணைத்தது.

ஜாவாவைத் தவிர மற்றத் தீவுகளில் உள்ள நகரங்களில் வாழும் மக்களுக்கும், கிராமத்தில் வாழும் மக்களுக்கும் மாறுபாடு கள் தெளிவாய்த் தெரிந்தன. எண்ணிக்கைகளில் அதிகரித்துக் கொண்டிருக்கும் இந்தோனேசிய வணிகர்களும், சிறு நிலமுடைய இர்ப்பர் பயிரிடும் விவசாயிகளும் வழிவழி மரபில் வந்த தலைவர் களின் ஆட்சியை வெறுத்தார்கள். ஐரோப்பியச் சீனப்பொரு ளாதாரத் தலைமையையும் அவர்கள் வெறுத்தார்கள். இந்தோ னேசிய வணிகர்களுக்குள் ஒருவருடைய செல்வமும், வியாபாரத் திறமையும் அவர்களுடைய சமூக நிலையைத் தீர்மானித்தன. கிறிஸ்தவ அம்போயினிஸ் (Amboinese) மக்களிடையேயும், வடக்குச் செலிபினில் இருக்கும் மெனடோனிஸ் (Menadonese) மக்களிடையேயும் அவர்களுடைய வழிவழி மரபில் வந்த சமூகப் பிரிவுகள் மறைந்தன. இந்தோனேசிய நுண்ணறிவாளர் சமூகத் தில் (intellegentsia) பெரும்பான்மையோர் சுமத்திராவைச் சார்ந்த மினன்கபாவு மக்கள். கி.பி. 1920ஆம் ஆண்டிலிருந்து சாரிகட்

இஸ்லாம் கட்சிக்குள் சிறிது சிறிதாகக் கம்யூனிஸ்டுகள் நுழையத் தொடங்கியதால், மதச் சார்பற்ற படித்தவர்களின் சமூகத்தைச் சார்ந்தவர்கள் அதைவிட்டு வெளியேறத் தொடங்கினார்கள். அவர்களில் பலர் புதுத் தேசிய இயக்கக் கட்சிகளில் சேரத் தொடங்கினர். இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த படித்த சமூகத்தினர் முகமதியாக் (Muhammadijah) கட்சியிலும், மற்றும் பல்வேறு சன்த்ரீ (Santri) இஸ்லாமியக் கட்சிகளிலும் சேரத் தொடங்கினர். புதுமைப் பாங்கு விரும்பும் இந்தோனேசியர்கள் கறுப்புத் துருக்கிக் குல்லாய்களை அணியத் தொடங்கினார்கள்; ஐரோப்பியர்களுடன் செய்யும் திருமணங்களை வெறுத்து எதிர்க்கத் தொடங்கினார்கள்.

பொருளாதார வட்டத்தைத் தவிர, மற்ற வட்டங்களில் டச்சுக் காரர்களின் கலாசாரப்பணி மிகச் சிறிதே. மரபு வழக்கான அடாட் (Adat) சட்டங்களைப் புதிய தேவைகளுக்குத் தகுந்தாற்போல் மாற்றி அமைக்க டச்சுக்காரர்கள் ஊக்கமூட்டினார்கள்; இந்தோனேசிய இலக்கியம் மலருவதற்கும் ஊக்கமூட்டினார்கள். கி.பி. 1900ஆம் ஆண்டுக்குப் பிறகு குரோம் (Krom) போன்ற டச்சுக் கல்விமான்கள், அரசாங்க உதவியுடன் இந்தோனேசியாவில் தொல்பொருள் ஆராய்ச்சியில் (archealogy) ஈடுபட்டார்கள். ஆனால் தங்களுடைய மொழியையும், இலக்கியத்தையும், நாகரிகத்தையும் இந்தோனேசிய மக்களுடன் மிகுதியாய்ப் பகிர்ந்து கொள்ளவில்லை. இந்தோனேசியத் தீவுகளின் இணை மொழியான மலாய் மொழியில் டச்சுச் சொற்களைவிடப் போர்ச்சுகீஸ், அரேபிய மொழிகளே அதிகமாயிருந்தன. முறைப் படி தங்கள் டச்சு முதலாளிகளுடன் வேலைக்காரர்கள் டச்சு மொழியில் பேசக்கூடாது. குடியேறிய டச்சுகாரர்களுக்கும், பிறந்தவர்களுக்குக் கூட டச்சு மொழியில் பேசத் தெரியவில்லை. பழங்கால இந்தியாவைப் போல ஜாவாவின் கட்டட கலை, இலக்கியக்கலை மற்றும் பிற கலைகளில் டச்சுக்காரர்கள் பங்கு கொள்ளவில்லை. தேசிய இயக்கத்தின் மறுமலர்ச்சியைக் கண்டு அஞ்சி, மக்களின் ஆற்றலை நல்ல முறையில் பயன்படுத்த முயற்சியெடுக்கவில்லை.

அரசியல் கூறுபாடுகள்

இருபதாவது நூற்றாண்டில் இந்தோனேசிய மக்கள் அரசியல் விவகாரங்களில் பல கூறுகளாகப் பிரிந்திருந்தார்கள். தங்களுக்குச் சுயாட்சி கிடைக்க வேண்டும் என நிருவாகம் செய்யும் டச்சு அதிகாரிகள் விரும்பினார்கள்; இந்தோனேசியாவில் குடியேறியிருந்த ஐரோப்பியர்களும், யுரேசியர்களும் தாங்கள் தேர்ந்தெடுத்த உறுப்பினர்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கவேண்டும் என

முறையிட்டனர். ஐரோப்பாவிலே பிறந்த டச்சுக்காரர்களின் ஆதிக்கத்தின் கீழ்ச் சுரங்கங்களும் வெளிநாட்டு வாணிபமும் இருந்தன; ஆனால் கரும்பு ஆலைகளும், மக்கள் பயன்படுத்தும் பணித்துறைகளும் (Utility services), அஞ்சல் சார்ந்த நிறுவனங்களும் இந்தோனேசியாவில் பிறந்து வளர்ந்த ஐரோப்பியர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன. வாணிபமும், தொழிற்சாலைகளும், இந்தோனேசியாவில் வளரவேண்டும் என்றும், அவற்றில் இந்தோனேசியப் பழங்குடி மக்களே வேலை செய்ய வேண்டும் என்றும் இந்தோனேசியாவை உறைவிடமாக ஏற்றுக்கொண்ட ஐரோப்பியர்கள் வலியுறுத்தினார்கள். ஆனால், மக்கள் மன்றத்தில் உறுப்பினர்களாயிருந்த டச்சுக்காரர்கள் வெவ்வேறு எண்ணங்களை எடுத்துக் கூறினார்கள். கி.பி. 1929ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட வாடர் லாண்ட்ஸ் கழகம் நாட்டுப்பற்றுச் சார்புடைய எண்ணங்கள் யாவையும் எதிர்த்தன. கி.பி. 1934 ஆம் ஆண்டில் வல்லாண்மை முறையை ஆதரித்த தீவிர ஐரோப்பியக் குழு ஒன்று தோன்றியது.

இந்தோனேசியாவில் $1\frac{1}{4}$ மில்லியன் சீனர்கள் குடியேறியிருந்தார்கள். இவர்களுடைய அரசியல் சிந்தனைகளும், கொள்கைகளும், குடி உரிமைகளும் தெளிவில்லாமல் ஐயப்படும்படியாக இருந்தன. குற்ற இயல் சாராத விவகாரங்கள் தொடர்பாக இவர்கள் டச்சு நீதி மன்றங்களுக்குத்தான் செல்ல வேண்டும். கொள்கையளவில் குற்ற இயல்புள்ள விவகாரங்கள் பற்றிக் கி.பி. 1917ஆம் ஆண்டு இவர்கள் இந்தோனேசியக் காவல் துறைக்கும், வழக்கமான அடாட் சட்டத்திற்கும் (adat law) கட்டுப்பட்டு நடக்க வேண்டும். ஜாவா மக்களைவிட இவர்கள் கடுமையாக உழைத்தாலும், திறமையுடையவர்களாயிருந்தாலும், ஐரோப்பியப் பொருளாதாரச் சூழ்நிலை கொடுத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திய சாரிகட் இஸ்லாம் தேசியவாதிகள் இவர்களைத் தாக்கத் தொடங்கினார்கள். இந்தோனேசியாவை விட்டு வெளியேறி மூன்று மாதத்திற்கு மேல் தங்கினால் இந்தோனேசியாவில் பிறந்த சீனர்கள் டச்சுக் குடிகளாகத் தொடர்ந்து நீடித்திருக்க வேண்டுமானால் திரும்பவும் பதிவு செய்து கொள்ள வேண்டும். கி.பி. 1910 ஆம் ஆண்டில் சீனாவுடன் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி இந்தோனேசியாவில் குடியேறியிருந்த சீனர்களின் குடி உரிமைகளைப்பற்றி டச்சு அரசாங்கமே தீர்மானிக்கலாம். இச் சீனர்களைப் பற்றிச் சீனா சிறிதும் கவலைப்படவில்லை. ஆனால் 1926-1927 ஆம் ஆண்டுகளில் குயோமின்டாங் (Kuomintang) ஆட்சி சீனாவில் வந்த பிறகு ஒரு புதுத் திருப்பம் ஏற்பட்டது. சீனாவைப் பொறுத்தவரை சீனர்களின் குடியுரிமைகள் பறிக்க முடியாத உரிமைகள்; ஆகையால் அவர்கள்

சீனுவின் குடிகள் எனச் சீனுவில் வந்த புதிய அரசாங்கம் கூறியது. இன நாகரிகச் செருக்குள்ள இந்தோனேசியச் சீனர்கள் இந்தோனேசியாவின்மேல் நாட்டுப் பற்று இல்லாமல் இருந்தார்கள்.

ஆனுல் அவர்களுக்குள்ளே மொழிப்பிரிவும், மற்ற வேறுபாடுகளும் இருந்தன. கி.பி. 1931ஆம் ஆண்டுக்குப் பிறகு ஜப்பானியர்களை அவர்கள் ஒருமனதாக வெறுத்ததால் அவர்களுக்குள் ஒற்றுமை உருவாகியது. இந்தோனேசிய நாட்டின் பழங்குடி மக்களுக்குள்ளும் மொழி இனப்பிரிவுகள் இருந்தன. அவர்களுக்குள் வரலாறு, கலாசாரம், நில இயல் முதலிய வேறுபாடுகளும் இருந்தன. இஸ்லாமும், மதச் சார்பற்ற தேசியமும் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு இந்தோனேசிய மக்களை இணைத்து ஒன்று சேர்க்க முயன்றன. இஸ்லாமியக் கொள்கைப்படி இஸ்லாமியச் சமய ஏற்பாளர்களும், இஸ்லாம் மதத்தின் மேல் நம்பிக்கையில்லாதவர்களும் ஒன்று சேர முடியாது. ஆகையால், இதில் நம்பிக்கையுள்ள இந்தோனேசியர்கள் தீவிரவாதிகளாக மாறினுர்கள். ஆனுல், மேலை நாட்டு நாகரிகத்தை ஒப்புக் கொண்ட இந்தோனேசியர்கள் தங்களைச் சரிப்படுத்திக் கொண்டு வெளி உலகத்துடன் ஒற்றுமையாக வாழவேண்டும் என விரும்பினுர்கள்.

உதாரணமாக அச்சீனீஸ் (Achennese) மதவெறியும், மரபு பற்று முடையவர்கள். ஆனுல் சுமத்திராவில் வசித்த மற்ற மலேய் மக்கள், (உதாரணமாக மினங்கபாவு மக்கள்) சீர்திருத்தங்கள் வருவதை வரவேற்றுர்கள். வரலாற்றுத் தொடர்பின் காரணமாகவும், மரபு முறையாலும் ஜாவாவைத்தவிர மற்றத் தீவுகளில் வசிக்கும் பெரும்பான்மையான மக்கள் ஜாவா மக்களை வெறுத்தார்கள். ஜாவாவில் வசித்து வந்த இவ்வகையான இனத்தார்கள் சுமத்திராவின் பல பகுதிகளிலும், மதுராவிலும், அம்பாயினுவிலும், மினஹாசாவிலும், டிமோரிலும் (Timor) ஜாவா மக்கள் சேராத தேசிய நிறுவனங்களை அமைத்தார்கள். சில மகளிர் நிறுவனங்களையும் தொடங்கினுர்கள். ஆகையால் எத்தகைய முறையைப் பயன் படுத்திச் சுயாட்சியைப் பெறலாம், அப்படி அது கிடைத்தால் அதன் பிறகு என்ன செய்வது என்பதைப் பற்றியெல்லாம் இந்தோனேசியர்களுக்குள் ஒற்றுமையில்லாமலிருந்தது.

இந்தோனேசியாவில் இஸ்லாம் வரும்முன் இருந்த கலாசாரச் சாதனைகளைப் பற்றிப் பேசுவது—உதாரணமாக மதரம் (Mataram), ஸ்ரீவிஜயா, கேதிரி—உருவ வழிபாட்டிற்குச் சமானமாகும் என மரபு வழாத முஸ்லிம் ஸ்திரீகள் ஏளனம் செய்தார்கள். ஆனுல் முகமதி

யாவைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு கூறவில்லை. இஸ்லாமிய மதத்தில் கூறியிருக்கும் சமுதாயத் தொண்டையும் பகுத்தறிவு வாதங்களையும் இவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஏனென்றால் இக் கட்சியின் தலைவர்கள் கெய்ரோ பல்கலைக் கழகத்தில் படித்தவர் கள். மதச் சார்புடைய கல்வியைப் பற்றியும், தனி மனிதருக்குரிய பொறுப்புகளைப் பற்றியும்தான் இவர்கள் வலியுறுத்தினார்கள். புற மரபு சடங்குகளுக்கு இவர்கள் முதன்மை கொடுக்கவில்லை. தங்கள் நிலத்தில் விளைந்த விளை பொருள்களிலும், வருமானங்களிலும் அல்லது முதலீடுகளிலும் குறிப்பிட்ட ஒரு பகுதியை அற நிலையங் களுக்கு ஒதுக்க வேண்டும் என முஸ்லிம்களைப் பற்றிக் கூறும் நிபந்தனையையே இவர்கள் வரவேற்று ஒப்புக் கொண்டார்கள். நூல் நிலையங்களையும், மருத்துவ மனைகளையும் அற நிலையங்களையும், சமயபரப்பு துறைகளையும், தாற்காலிக முறையுடன் கூடிய பள்ளிக் கூடங்களையும் அமைக்க இவர்கள் முன் வந்தார்கள். சமயவாத சட்ட வல்லுநர்கள் தாம் மரபு வழாத சமயக் கோட்பாடுகளை வரையறுக்கலாம் என்ற பழக்கத்தை இவர்கள் எதிர்த்தார்கள்; டச்சு ஆட்சியை வெறுத்தார்கள். இருந்தபோதிலும் இவர்கள் அரசியல் இடது சாரியினரின் கொள்கை முறைகளைப் பின்பற்ற வில்லை. இவர்களை அரசியல் தீவிரவாதிகள் என அழைக்க முடியாது. கி.பி. 1925 ஆம் ஆண்டுக்குப் பிறகு முகமதிய இயக்கம் கம்யூனிஸ்டுகள் நுழைந்த சாரிகட் இஸ்லாம் கட்சியை அகற்றி அதன் இடத்தையும் பிடிக்கத் தொடங்கியது. ஆகையால் டச்சு அரசாங்கம் மரபு வழாத கொள்கைகளை ஏற்றுக்கொண்டிருக்கும் கட்சிகளுக்கு உதவி புரிந்தது. ஆனால் கி.பி. 1930 ஆம் ஆண்டுக்குப் பிறகு முகமதியர் இயக்கமும் சில மரபு வழாத கொள்கைகளை ஏற்றுக் கொள்ளத் தொடங்கியது. ஆகையால் இந்த இயக்கமே மஸ்சூமிக் கட்சியின் (Masjumi Party) மையக் கனவாய் விளங்கியது.

தங்களுடைய செல்வாக்குக் குறைந்து கொண்டிருந்ததால் மரபு வழாத சமயச் சட்ட வல்லுநர்கள் ஒன்றுகூடிக் கி.பி. 1926 ஆம் ஆண்டில் நக்தாதுல் உலாமா கட்சியை அமைத்தார்கள். ஜப்பானியர்கள் இந்தோனேசியாவைத் தம் தனித் தலைமையின் கீழ்க் கொண்டு வரும் சமயம் வரை புதுக் கருத்துக் கோட்பாட்டு முறைகளை ஒப்புக் கொண்டவர்களை இவர்கள் தீவிரமாக எதிர்த் தார்கள். இந்தோனேசியாவை ஜப்பான் கைப்பற்றியவுடன் இச் சமயச் சட்ட வல்லுநர்களைத் தன் சுயநலத்திற்காக ஜப்பான் பயன்படுத்தத் தொடங்கியது. பொதுவாக இச்சமயச் சட்ட வல்லுநர்களை எதிர்ப்பதை டச்சுக்காரர்கள் தவிர்த்தார்கள்.

சாரிகட் இஸ்லாம் கம்யூனிஸ்டு தேசியக் கட்சிகள்

கி. பி. 1916 ஆம் ஆண்டில் சாரிகட் இஸ்லாம் அதன் முதல் அகில இந்தோனேசியத் தேசியப் பேரவையைக் கூட்டியது. இக்கூட்டத்தில் அதன் 80 கிளைகளின் 360,000 உறுப்பினர்களும் கலந்துகொண்டார்கள். இதன் மன்றத் தீர்மானத்தில் நெதர் லாந்துக் கூட்டரசு சுயாட்சி முறையைக் கேட்டது.

இதன் இடையில் சோஷியலிசக் கருத்து (சமதருமம், பொது நலக் கூட்டுத் தத்துவம்) இந்தோனேசிய மக்களிடையேயும், டச்சு யூரேசியன் மக்களிடையேயும் பரவத்தொடங்கியது. கி. பி. 1917 ஆம் ஆண்டில் ரஷ்லாய மாப்புரட்சியும் ஜாவா மக்களிடையே ஒரு புதிய ஆர்வத்தை மூட்டியது. ஹெண்டிரிக் ஸ்நீவ்லியட் (Hendrik Sneevliet) என்பவர் இந்தியன் சோஷியல் டெமாகிரட்டிக் சங்கத்தை நிறுவினர். இச்சங்கம் புரட்சிக் கொள்கைகளைப் பரப்பியது. சாரிகட் இஸ்லாம் கம்யூனிஸ்டு கருத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று இதன் உறுப்பினரான செமாவுன் (Semaun) முயன்ருர். கி.பி. 1917 ஆம் ஆண்டில் சாரிகட் இஸ்லாமின் அனைத்து இந்தோனேசியப் பேரவையில் சொக்ரோ அமிநோடோ டச்சு அரசாட்சிக்கு முதன் முறையாக எதிர்ப்புத் தெரிவித்தார். ஆனல், சட்டமுறையிலே இந்த எதிர்ப்பைத் தெரிவிக்கவேண்டும் எனக் கூறினர். நீண்ட நாள்களாக டச்சுக் காரர்கள் வாக்களித்த மக்கள் மன்றத்தை அமைக்காததாலும், வாக்குரிமை கொடுக்கப் பல நிபந்தனைகள் போட்டதாலும், மக்களிடையே ஏமாற்றம் ஏற்பட்டது. முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுவதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சாரிகட் இஸ்லாம் கட்சிக்குள்ளே உருசியர்கள் உதவியுடன் ஒரு கம்யூனிஸ்டுப் பிரிவைச் செமாவுன் அமைத்தார். ஆனல், இவரால் சாரிகட் இஸ்லாம் கட்சியைத் தம் ஆதிக்கத்திற்குள் கொண்டுவர முடியவில்லை. ஆகையால், அக்கட்சியிலிருந்து இவர் வெளியேறி இந்தோனேசியன் கம்யூனிஸ்டு கட்சியை நிறுவினர். இக்கட்சி மூன்ருவது அனைத்துநாட்டுப் பொதுவுடைமைப் புரட்சி மன்றத்துடன் சேர்ந்தது. கி.பி. 1919 ஆம் ஆண்டில் பிரி ஏங்கரில் (Pre anger) சாத்து விக எதிர்ப்புத் (Passiveresistance) தொடங்கியது; இந்த எதிர்ப்பு மத்திய செலிபிஸில் சில டச்சு அதிகாரிகள் கொலைசெய்யப்பட்டவுடன் தோன்றியது. இந்தக் கொலைகள் பற்றி அரசாங்கம் விசாரணை செய்தபோது சாரிகட் இஸ்லாமின் கம்யூனிஸ்டு கிளைப்பிரிவைச் சார்ந்த இரகசிய மன்றங்கள்தாம் இதற்குக் காரணம் என அரசாங்கம் முடிவெடுத்து கம்யூனிஸ்டுக் கட்சியைக் கலைத்தது.

சமய விவகாரங்கள் பற்றிக் கம்யூனிஸ்டு கட்சிக்கும், சாரிகட் இஸ்லாமிற்கும் இடையே போராட்டம் ஏற்பட்டது. கி.பி. 1920ஆம் ஆண்டு அனைத்திந்தோனேசியக் கம்யூனிஸ்டு கூட்டத்தில் கம்யூனிஸம், இஸ்லாமியம் ஆகிய உலகின் கூட்டமைவுகள் இயக்கத்தையும், மேற்கு நாட்டவர் ஆதிக்கத்தையும் எதிர்க்கும் எனக் கூறப்பட்டது. கம்யூனிஸம் ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக ஓங்கவில்லை. கம்யூனிஸ்டுகள், சிறந்த அறிஞர்களாகவும், சுறுசுறுப்பாகவும் இருந்தாலும், கம்யூனிஸ்டுகள் ஒரு சிலரே. ஆகையால் சாரிகட் இஸ்லாம் தலைவர்களுக்கு உள்ள செல்வாக்கையும், தொழிற்சங்கத்தையும் தங்களுக்குப் பயன் படுத்த அவர்கள் முயற்சி செய்தார்கள். அரசாங்க வட்டிக் கடையின் தொழிலாளிகளை வேலை நிறுத்தம் செய்யத் தூண்டியபடியால் டான் மலாகா (Tan Malacca) என்ற கம்யூனிஸ்டு தலைவர் நாடு கடத்தப்பட்டார். ஆகையால், அவர் மாஸ்கோவிற்குச் சென்று இஸ்லாமிய உலகத்தின் கூட்டமைப்புக்குள் இயக்கத்தை ஏற்றுக்கொள்ளும்படி அனைத்து நாட்டுப் பொதுஉடைமை அமைப்பைக் (Comintern) கேட்டுக்கொண்டார்.

கி. பி. 1921ஆம் ஆண்டு அக்டோபரில் அரபியாவில் சாரிகட் இஸ்லாமின் அனைத்திந்தோனேசியச் சபை கூடியது. இச்சமயத்தில் இரகசிய எதிர்ப்பு முயற்சிகளோடு (underground activities) தொடர்பு கொண்டிருந்தார் எனச் சொக்ரோ அமிநோடோவை அரசாங்கம் கைதுசெய்திருந்தது. ஆகையால், சொக்ரோ அமிநோவிற்குப் பதிலாக அகுஸ் சலிம் (Agus Salim) தலைமை தாங்கினார். சாரிகட் இஸ்லாம் உறுப்பினர்கள் வேறு எந்தக் கட்சியையும் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடாது என்று அப்துல் முயிசும் (Abdul Muis), அகுஸ் சலீமும் ஒரு மன்றத் தீர்மானக் கோரிக்கையை (Motion) வெற்றியுடன் நிறைவேற்றினார்கள். ஆகையால், கம்யூனிஸ்டுகள் ஸாரிகட் இஸ்லாம் இயக்கத்திலிருந்து வெளியேற வேண்டியநிலையில் இருந்தார்கள். ஆனால், சில கம்யூனிஸ்டுகள் தங்களுடைய சாரிகட்களை (Sarekat—சங்கம்) அமைத்தனர். வேலைநிறுத்தஞ் செய்யும் இயக்கங்களை இவர்கள் ஆதரித்தார்கள். மேலும், வடக்கு, மேற்கு ஜாவாவில் புரட்சி நடவடிக்கைகளை எடுக்க முயற்சி செய்து கொண்டிருந்தார். இந்தக் கம்யூனிஸ்டுகளை ஐந்து ஆண்டுகள் சாரிகட் இஸ்லாம் எதிர்த்து வெற்றியடையவில்லை. கி. பி. 1922 ஆம் ஆண்டில் அரசாங்கப் பணிகளில் தங்களுக்குள்ளபடி நிலையை நினைத்து அடைந்த ஐரோப்பாவில் படித்துப் பட்டம் பெற்ற இள இந்தோனேசியர்கள் தூண்டுதலினால், சாரிகட் இஸ்லாம்

இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சியுடன் தொடர்புகொண்டு ஒத்துழையாமைக் கொள்கையை (Non co-operation) ஏற்றுக் கொண்டது.

கி. பி. 1923 முதல் 1926ஆம் ஆண்டுகளில் புரட்சிச் செயல்களில் பல இந்தோனேசியர்கள் ஈடுபட்டனர். முதல் உலகப் போருக்குப் பிறகு உலகப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததால் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் விவாதங்கள் நடந்தன. இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு அரசியல் பொருளாதார வாழ்க்கையைத் தாறுமாறுக்கி அமைதியைக் குலைத்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றலாம் எனத் தீவிர வாதிகள் நினைத்தார்கள். போர்த் தந்திரப்படி ஜாவா மிகச்சிறப்பு வாய்ந்த மையம் என மாஸ்கோ வலியுறுத்தியது. சிங்கப்பூரில் உள்ள தரகர்கள் (agent) மூலம் இந்தோனேசியக் கம்யூனிஸ்டு கட்சி சீனக் கம்யூனிஸ்டு கட்சியுடன் தொடர்பு கொண்டிருந்தது. இச்சமயத்தில் இந்தோனேசிய இயக்கங்களிலே கம்யூனிஸ்டு இயக்கமே மிகச் சக்திவாய்ந்த இயக்கமாக மாறியது. சட்டத்துக்குக் கட்டுப்படாத குழப்பமிக்கதான் அச்சுறுத்தி அடக்கும் சூழ்நிலையை உருவாக்கியது. சாரிகட் இஸ்லாம் இதைத் தீவிரமாக எதிர்த்தது. கம்யூனிஸ்டுகளை ஒழிக்கத் தீவிரமாக மதத்தின் மேல் சிந்தனையைச் செலுத்தத் தொடங்கியது.

தொழிலாளர் சங்கங்களில் உள்ள பெரும்பான்மையோர் தொழிலாளிகளின் ஆதரவுடன் கி.பி. 1923ஆம் ஆண்டு மே மாதம் கம்யூனிஸ்டு கட்சி இருப்பூர்த்தி நிலையப் பணியாளர்களை வேலை நிறுத்தம் செய்யத் தூண்டியது (railway strike). பொருளாதாரச் சூழ்நிலையில் சீர்குலைவு ஏற்படும்படி யாராவது நடந்து கொண்டால் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என அரசாங்கம் அறிவித்தது. ஆனால், அரசாங்கம் இவ்வாறு அடக்கி ஆள முயன்றதால் தீவிரவாதிகளின் கொள்கைகள் இந்தோனேசியா முழுவதும் மிக விரைவாகப் பரவத் தொடங்கியது. கி.பி. 1925ஆம் ஆண்டில் ஓர் உலோகத் தொழிற்சாலையில் நடந்த வேலை நிறுத்த இயக்கத்தை அரசாங்கம் கடுமையான முறையில் அடக்கியது. அடுத்த ஆண்டு ஜினோவியும் (Zinoviev), புகாரினும் (Bucharin) உதவி செய்வதாக வாக்களித்ததால், மேற்கு ஜாவாவிலும் சுமத்திராவிலும் கம்யூனிஸ்டு தலைவர்கள் ஒரு பெரும் புரட்சியைத் தொடங்க முயன்றார்கள். இதுபற்றி முன்னெச்சரிக்கை எடுக்கப் பட்டது என்றும், இப்புரட்சி இந்தோனேசியாவில் பல பகுதிகளில் பரவியிருந்தது என்றும் கூறப்படுகிறது. ஆனால், இப்புரட்சியை

யும் அரசாங்கம் எளிதில் அடக்கியது. கடுமையான அடக்கி ஆளும் முறைகளை அரசாங்கம் பயன்படுத்தும் முன்னே இந்தப்புரட்சி இயக்கம் தளர்ந்து நொறுங்கியது. அரசாங்கம் கம்யூனிஸ்டு கட்சி யின் மேலும், கம்யூனிஸ்டு கூட்டங்களின் மேலும், தடை விதித் தது. 1,300 கம்யூனிஸ்டுகள் நியூகினியில் (New Guinea) உள்ள காவல் கட்டுப்பாட்டுப் பாசறைக்குள் அடைக்கப்பட்டார்கள். கம்யூனிஸத்தை முழுமையாக அடக்க முடியவில்லையென்றாலும், கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் இல்லாமல் மாறியது. கம்யூனிஸ்டு கட்சி வரலாற்றிலே ஒரு புதுத் திருப்பம் ஏற்பட்டது. பதினைந்து ஆண்டுகள் கம்யூனிஸ்டு கட்சி அடங்கிக் கிடந்தது. கம்யூனிஸ்டு களுடன் உள்ள தொடர்பினால் சாரிகட் இஸ்லாம் இயக்கத்திற்கும் அவமானம் ஏற்பட்டது. மக்களிடையே அதற்குள்ள ஆதரவும் மிகக் குறைந்தது, அதுவும் தன் ஆற்றலை இழந்தது. மதச் சரர்பற்ற இந்தோனேசியத் தேசியவாதிகள் தோன்றுவதற்கேற்ற சூழ்நிலையேற்பட்டது. நயமான முறையில் அடக்க முறைகளைப் பயன்படுத்தாமல் அரசாங்கம் ஆளவேண்டும் என டச்சு மக்கள் கேட்ட ஆட்சி முறைக்கு முடிவு காலம் வந்தது.

தேசிய மேடையிலிருந்து சாரிகட் இஸ்லாமும், கம்யூனிஸ்டு கட்சியும் நீக்கப்பட்டவுடன் மாணவர்களால் தோற்றுவிக்கப்பட்ட படிப்புச் சங்கங்கள் அரசியலிலே முக்கியப் பங்குகொண்டன. ஐரோப்பாவிற்குச் சென்று திரும்பிய இந்தோனேசியர்கள் முதல் உலகப் பெரும் போருக்குப் பிறகு எவ்வாறு அயர்லாந்து, போலந்து, பால்டிக், அரபிய நாடுகள் சுதந்திரமடைந்தன என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்தார்கள். மாஸ்கோவின் குடி யேற்ற நாட்டுக்கொள்கையை எதிர்க்கிற இயக்கத்தை அவர்களில் பலர் விரும்பி ஆதரித்தார்கள். பாந்துஸ், படிப்புச் சங்கத்தின் உறுப் பினர்களான சுகர்னோ(Sukarno)என்ற பொறியாளரும் (Engineer), சிப்டோ (Tjipto) என்ற மருத்துவரும் கி.பி. 1920ஆம் ஆண்டில் இந்தோனேசிய தேசியக் கட்சியை (Indonesion Nationalist Party) நிறுவினார்கள். இவ் விரு பட்டதாரிகளும் ஜாவாவைச் சேர்ந்தவர்கள். இந்தியக் காங்கிரஸ் கட்சியும், அதன் மாபெரும் பொதுமக்களின் ஒத்துழையாமை இயக்கமும் சுகர்னோவிற்கு ஓர் உதாரணமாக விளங்கின. தம் பேச்சாற்றல் மூலம் மக்களைக் கவரும் தன்மை அவரிடம் இருந்தது. கட்சிப் போராட்ட ஊக்கொலிகளை எழுப்புவதில் தீரர். போர்க்குரல் கொடுத்து, கொள்கைக் குரல் எழுப்பி மக்களின் உணர்ச்சிகளைத் தட்டி யெழுப்பினார். கி.பி. 1929ஆம் ஆண்டின் இறுதியிலே இவரை டச்சுக் காவலர்கள் சிறைப்படுத்தினார்கள். பிளோரெஸ் தீவிலே (Flores island)

இவர் பாசறையில் அடைக்கப்பட்டார். பின்பு சுமத்திராவில் உள்ள பென்குலனெக்கு அனுப்பப்பட்டார். இவர் சிறையிலிருந்தபோது டாக்டர் சார்டோனோ (Sartono) என்பவர் மற்றொரு இந்தோனேசியன் கட்சியை அமைத்தார். இக்கட்சிக்கும் சுகர்னோவின் கட்சிக்கும் கொள்கைகளில் அவ்வளவு வேறுபாடில்லை கி.பி. 1932ஆம் ஆண்டிலே மார்க்ஸிஸத்தின் ஆதரவாளரான சூடான் ஷாஃரீர் (Sutan Sjahrir) என்பவரும், மகமது ஹட்டா (Mohammed Hatta) என்பவரும் ஐரோப்பாவிலிருந்து திரும்பி வந்து ஒரு மிதவாதிக் கொள்கையுடைய சோஷியலிஸ்டு கட்சியைத் தொடங்கி வைத்தார்கள். அதே ஆண்டில் சுகர்னோவும் சிறையிலிருந்து வெளிவந்தார். இம்மூவரும் சேர்ந்து இவ்விரு மாணவர் தேசீய இயக்கங்களை ஒன்றுபடுத்த முயற்சி செய்தார்கள். ஆகையால் சுகர்னோ மறுபடியும் சிறையில் அடைக்கப்பட்டார். ஹட்டா, ஷாஃரீரும் கி.பி. 1934 ஆம் ஆண்டில் சிறையில் அடைக்கப்பட்டார்கள். பிற்போக்காளரான டச்சுத் தலைமை ஆளுநர் டிஜோங்கே (De Jonge) கி.பி. 1931 முதல் 1936ஆம் ஆண்டுவரை சுகர்னோவிற்கு முதன்மை கொடுத்ததால் சுகர்னோவின் மதிப்பு நாட்டு மக்களிடம் மிகத் தீவிரமாக வளரத் தொடங்கியது. டச்சு அதிகாரிகள் சுகர்னோவிற்கும் சோஷியலிஸ்டுக்கும் முதன்மை கொடுத்த போதிலும் அச்சமயத்தில் அவர்களுக்கு அத்தகைய முதன்மை கொடுக்க வேண்டிய சூழ்நிலையே இல்லை. தேசியக் கட்சியின் உறுப்பினராக ஆவதற்கு ஒரு சிலருக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. இதனுடைய சோஷியலிஸவேர் நன்றாக ஊன்றவில்லை; கருத்து வேறுபாடுள்ள முஸ்லிம்களுடன் ஒத்துழைக்க முயற்சி செய்யவில்லை. ஜப்பானியர்கள் இந்தோனேசியாவைக் கைப்பற்றியவுடன்தான் மாணவர்கள் தொடங்கி வைத்த தேசிய இயக்கங்கள் மக்களிடையே மிகுந்த செல்வாக்கும் மதிப்பும் பெற்றன.

கி.பி. 1931ஆம் ஆண்டுக்குப் பிறகு டச்சு அரசாங்கம் எல்லாத் தேசியத் தலைவர்களையும் கவனக் கண்காணிப்பில் வைத்தது. அரசியல் பற்றிய எல்லாச் செய்திகளிலும் தலையிடத் தொடங்கியது. புரட்சிக் கூட்டங்களுக்குத் தடைவிதித்தது. 'இந்தோனேசியா' என்ற சொல்லை நாட்டைக் கவிழ்க்கக்கூடிய சதிவேலையில் ஈடுபடுவதற்குச் சமானம் என அறிவித்தது. ஆனால் தேவன்தோரோ (Devantoro) மகமதியர் தலைவர்கள் போன்ற கலாச்சாரத்தைப் பற்றி மட்டும் பேசும் தேசியவாதிகளின் நடவடிக்கைகளுக்குத் தடைவிதிக்கப்படவில்லை. ஆனால் அவர்களும் மதம் கல்வி ஆகியவை பற்றிய விவகாரங்களில்தான் ஈடுபடலாம். தேவன்

தோரா மட்டும் 250 டாமொன் சிஸ்வாட் (Taman Siswa) பள்ளிக்கூடங்களை தொடங்கிவைத்தார். டாக்டர் சார்டோனோ வின் படிப்புச் சங்கம் ஒத்துழையாமைக் கொள்கையை எதிர்த்து உருப்படியான ஆக்கச்சார்பான செயல்களில் ஈடுபடும் எனக் கூறியதால், அச்சங்கத்தின் நடவடிக்கைகளையும் அரசாங்கம் ஒருவாறு பொறுத்துக்கொண்டது. மக்கள் மன்றத்தின் உறுப் பினர்கள் சேர்வதை ஆதரிக்கிற கட்சிகளுக்கெல்லாம் கூடிப்பேச அனுமதி கொடுக்கப்படும் எனக் கி.பி. 1935ஆம் ஆண்டில் அரசாங் கம் அறிவித்தது. மக்கள் மன்றத்தின் சில உறுப்பினர்கள் தேசிய நாடாளுமன்றக் குழு ஒன்றை அமைத்தார்கள். மிதவாதிகளான இவர்கள் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் நடந்துகொண் டார்கள்.

பொருளாதார வீழ்ச்சியும் விலக்குதற்குரிய முயற்சிகளும்

கி.பி. 1929-1934ஆம் ஆண்டுகளில் உலகப் பொருளாதார சூழ்நிலையால் இந்தோனேசியப் பொருளாதார நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டுக் கவலைப்படும் நிலைமையை அடைந்தது. இந்தோ னேசியாவிலிருந்து ஏற்றுமதியாகும் பண்டங்கள்தாம் மிகவும் பாதிக்கப்பட்டன. பெரும் பண்ணைகள் தங்களுடைய கலவை முறையைப் பயன்படுத்தித் தங்கள் செலவைக் குறைத்தன; சில பண்ணையாளர்கள் குறைந்த விற்பனை விலையில் பண்டங்களை ஏற்றுமதி செய்தார்கள்; நாட்டுப் பழங்குடி இந்தோனேசியர்கள் ஏற்றுமதிப் பண்டங்களைப் பயிரிடுவதை நீக்கித் தங்கள் வாழ்க் கைக்குத் தேவையான பொருள்களையே (முக்கியமாக நெல்) பயிரிட்டார்கள். இந்தச் சூழ்நிலை நிலவியிருக்கும் காலத்தில் இந்தோனேசியாவின் மொத்த உற்பத்தி பாதிக்குமேல் குறைந்தது. ஏற்றுமதியாகும் பண்டங்கள் 75 விழுக்காடு குறைந்தன.

கி.பி. 1928ஆம் ஆண்டில் அரசாங்கப் பண்ணைகளுக்கு 54 மில்லியன் கில்டர்கள் மிகுபயன் கிடைத்தது; கி.பி. 1932ஆம் ஆண்டில் 7 மில்லியன் கில்டர்கள் இழப்பேற்பட்டது. வேலை யில்லாத் திண்டாட்டத்தினலும், குறைந்த ஊதியம் கிடைத்த தாலும் ஜாவாவைத் தவிர மற்றத் தீவுகளில் வேலை செய்த 100,000 ஜாவனீஸ் தொழிலாளிகள் ஏற்கெனவே மக்கள் தொகை அதிகரித்திருந்த தங்களுடைய கிராமங்களுக்குத் திரும்பினர்கள்.

திருத்துவதற்கு முயற்சிகள் செய்வது கடினமாயிருந்தது; அவ்வாறு செய்தாலும் அம் முயற்சிகள் தேவைக்குள் குறைந்ததா ரு ந்தன. ஜாவாவில் இருந்த உழுது பயிரிடும் நிலங்களில்

பொதுவாக ஒரு குடும்பத்திற்கு இரண்டு ஏக்கர் நிலங்கள்தாம் கிடைத்தன. ஆனால் ஜாவா மக்களுக்கு மட்டும்தான் ஏழ்மையும் துன்பமும் வந்தன என நினைக்கக்கூடாது. உழவர்களுடைய கடனை அடைப்பதற்காக எல்லா இடங்களிலும் விளைபொருள்கள் வருங்காலத்திற்கும் சேர்த்து அடைமானம் வைக்கப்பட்டன. எல்லாப் பொருள்களையும் விடச் சர்க்கரை ஏற்றுமதியே மிகவும் பாதிக்கப்பட்டது; அதன் உற்பத்தியில் மூன்றில் இருபங்கு குறைந்தது. கி.பி. 1928ஆம் ஆண்டின் விற்பனை விலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அதற்கு இப்பொழுது ஆறில் ஒரு பங்குதான் கிடைத்தது. இறக்குமதி செய்யப்படும் நிலையிலும் பயன்படுத்து பவரிடம் அளிக்கப்படும் நிலையிலும் உள்ள பொருள்களின் விலை மிகவும் பெருகியது. இறக்குமதி மிகவும் குறைந்ததனாலும், பயன்படுத்துபவர்களின் வாழ்க்கை மிகவும் இழிநிலையடைந்த தாலும் தான் அயல்நாட்டுப் பணத்தை முதலீடு செய்த அயல் நாட்டாருக்குப் பணம் கிடைத்தது. ஜாவானிஸ் மக்களை மற்றைய தீவுகளுக்கு அனுப்புவதற்காக டச்சு அரசாங்கம் 25 மில்லியன் கில்டர்களைச் செலவழித்தது; உள்நாட்டு நெசவுத் தொழிலை முன்னேற்றுவதற்காக திருத்தங்கள் செய்யப்பட்ட 25,000 தறி களைப் பகிர்ந்து கொடுத்தது. செலாவணியின் மதிப்பைக் குறைத்த தால் கி.பி. 1936ஆம் ஆண்டில் கடன் குறைந்தது; இரண்டாவது உலகப்போர் தொடர்ந்தவுடன் இந்தோனேசியன் எண்ணெய், இரப்பர், வெள்ளீயம் முதலியவற்றிற்கு உலக வாணிபத் தலங் களில் கிராக்கி ஏற்பட்டது.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்து பின்பற்றிய கட்டுப்பாடற்ற வாணிபக் கொள்கையைக் கி.பி. 1930ஆம் ஆண்டில் அரசாங்கம் கைவிட்டது. தேயிலை, இரப்பர், சர்க்கரை முதலியவை தேவைக்கு மேற்பட்டு வாணிபத் தலங்களில் குவிந்துவிடக் கூடா என்பதற்காக அவர்களின் உற்பத்திப் பங்கை நியமித்தது. கப்பல்மூலம் செய்யும் வாணிபத்திற்குக் கட்டுப்பாடு அளித்தது. இறக்குமதியாகும் பொருள்களுக்கு வேற்றுமைக் கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தது. மலிவான ஜப்பானியப் பொருள்களைக் குறைக்கவே இத்திட்டத்தைச் செயல்படுத்தியது. கி.பி. 1934ஆம் ஆண்டில் இந்தோனேசியாவிற்கு இறக்குமதி யாகும் பொருள்களில் 30 விழுக்காடு 25 விழுக்காடாகக் குறைந் தது. டச்சுக் கப்பல்களே கரையோரக் கடல் வாணிகம் செய்யலாம் எனச் சட்டம் வந்தது. 1934-40 வரை வாணிப மறுமலர்ச்சி ஏற்படவில்லை.

சீர்திருத்தத் திட்டங்களும் அரசாங்கமும்.

கீழ் நிலையுற்ற பொருளாதாரச் சூழ்நிலை நிலவியிருந்ததாலும், காவலர்கள் கண்காணித்துக் கொண்டிருந்ததாலும், ஜப்பானியர்களின் படையெடுப்பு வரும் என்ற அச்சம் அதிகரித்துக் கொண்டிருந்ததாலும் சில இந்தோனேசியச் சங்கங்கள் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டன. வலதுசாரி பூடி உடோமே உறுப்பினர்களும், கம்யூனிஸத்தை எதிர்த்த கட்சிகளும் நன்காராய்ந்து தந்திரமாக அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் கொள்கைகளைப் பின்பற்றின. தக்கவாறு தேசியச் சுதந்திரம் பற்றிய விவரங்களைப் பேசினார்கள். ஆனால் தீவிர ஜெரிண்டோ (Gerindo) உறுப்பினர்கள், அமிர் ஷாரிபுதின் (Amir Sjarifudin) உள்பட எல்லோரும் குடியேற்றக் கோட்பாடுகளையும் முதலாளித்துவத்தையும் தாக்கினார்கள். வாக்குரிமை சிலருக்கே கொடுத்திருந்தபோதிலும் கி.பி. 1935,1939 ஆம் ஆண்டுகளில் மக்கள் மன்றத்தின் தேர்தலை நோக்கினால், தேசிய உணர்ச்சி மலர்ந்து வளருவதையும், இனவேறுபாடுகளினால் மனக் கசப்புப் பெருகுவதையும் நாம் காணலாம்.

கி.பி. 1936ஆம் ஆண்டில் மக்கள் மன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்ட திட்டச் சீர்திருத்தக் கோரிக்கையை டச்சு அரசாங்கம் புறக்கணித்ததால் தீவிர வாதக் கொள்கைகள் வேரூன்றி வன்மையுறத் தொடங்கின. நெதர்லாந்து உறவைப் படிப்படியாக மாற்றியமைத்துச் சுயாட்சி உரிமைத் திசையை நோக்கி இந்தோனேசியா செல்வதற்கானச் சூழ்நிலையை அமைக்கக் கூடிய ஒரு திட்டத்தை உருவாக்கலாம் என்று கோரிக்கை வெளியிடப்பட்டது. மக்கள் மன்றத்தின் டச்சு உறுப்பினர்கள் இதைத் தீவிரமாக எதிர்த்தார்கள். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு குடியேற்ற நாடுகளின் அமைச்சர் இக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்தார். இவ்விருநாடுகளின் சட்ட திட்ட உறவில் முழுமாற்றம் ஏற்படுத்துவதைவிட செயல் முறையில் இருந்து கொண்டிருக்கும் நிருவாகச் சீர்திருத்தங்களும், ஆட்சி உரிமைகளைப் பன்முகப்படுத்தும் திட்டங்களுமே மேலானவை என இவர் வலியுறுத்தினார். கீழ்ப்படி நிலைகளிலே படிப்படியாகச் சுயாட்சியுரிமை வளருவதற்கு வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால்தான் இடைபட்ட படிநிலைகளிலேயும் அத்தகைய சூழ்நிலையை உருவாக்கலாம். அதேபோல் இறுதியாக மையத்திலும் சூழ்நிலைகளை உருவாக்கலாம் என இவர் கூறினார்.

மிதவாத வழிக்குத் தோல்வி ஏற்பட்டதால் மக்கள் மன்றத்தில் உள்ள இந்தோனேசியத் தேசியவாதிகள் கி.பி. 1939ஆம் ஆண்டு மே மாதம் இந்தோனேசியன் அரசியல் ஒருமுகக்குழுவை (Indonesian Political Concentration) அமைத்தார்கள். அரசாங்கத்

தால் தடைசெய்யப்பட்ட 'இந்தோனேசியன்' என்ற சொல்லை இவர்கள் துணிவோடு பயன்படுத்தினார்கள்; ஆனால் இதனால் கிடைத்த பலன்கள் மிகச் சிலவே. ஒரு குழுவை அமைக்கவும் அக் குழு அரசியல் பற்றிய செய்திக் குறிப்புகளைச் சேர்த்துப் பின் டச்சு அரசாங்கத்திடம் கொடுத்து இந்தோனேசியர்களுக்காகப் பயன் படுத்தவும் இம் மன்றத்தினர் நாடு கடத்தப்பட்ட டச்சு அரசாங் கத்திடமிருந்து கி.பி. 1940ஆம் ஆண்டு நவம்பரில் அனுமதி பெற்றது. இக் குழுவின் அறிக்கை இறுதியாக 1941ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் நாள் வெளிவந்தது. நாட்டின் நிருவாகத்தில் வருங் காலத்தில் இந்தோனேசியர்களுக்கு அதிக வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்றும் இந்தோனேசியாவில் வசிக்கும் டச்சு, அயல் நாட்டு ஆசியர்களின் உரிமைகள் பறிக்கப் படாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் இவ்வறிக்கையில் கூறப்பட்டது.

இதற்கு இடையிலே, இந்த நாடாளுமன்ற ஒரு முகக் கூட் டிணைவு ஐந்து அம்சங்கள் அடங்கிய ஒரு திட்டத்தை வெளிப் படுத்தியது. இத் தீவுகளை இனிமேல் சட்டப்படி, பணித்துறைக் குரிய உரிமைப்படி 'இந்தோனேசியா' என அழைக்க வேண்டும். ஓர் இந்தோனேசியனே இனித் துணை நிலை ஆளுநர் (Lieutenant-Governor) பதவியேற்க வேண்டும். அரசாங்க நிருவாக அலுவ லங்களில் துணை இயக்குநர் (Deputy Directors) பதவிகள் வரை எல்லாப் பதவிகளையும் நாட்டுப் பழங்குடியைச் சார்ந்த இந்தோ னேசியர்களுக்காக ஒதுக்கி வைக்க வேண்டும். ஹாலந்தில் உள்ள இந்திஸ் மன்றத்தில் (Council of Indies) இந்தோனேசியர்களும் உறுப்பினர்களாக நியமிக்கப்படவேண்டும். வயது வந்த எல்லோ ராலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு புதிய மக்கள் வேட்பாளர்களின் சபை அமைக்கப்பட வேண்டும், இச் சபை கீழ்ச் சபையாக இயங்க வேண்டும். இருக்கின்ற மக்கள் மன்றம் மேல் சபையாக (Senate) இயங்க வேண்டும் என்று இவர்கள் விண்ணப்பித்துக் கொண்டார்கள்.

ஜப்பானியர்களின் படையெடுப்பின் அச்சம் நிலவி வந்த போதே இந்தோனேசியர்களின் அரசியல், இராணுவம் ஆகிய வற்றின் உதவியை டச்சு அரசாங்கம் நாடியிருக்கலாம். இவ்வாறு செய்திருந்தால் வருங்காலத்தில் இது டச்சுகாரர்களுக்கு உதவியா யிருந்திருக்கக் கூடும். ஆனால், தங்கள் வல்லரசைப் பாதுகாப்ப தற்காக இந்தோனேசியர்களுக்கு ஆயுதம் கொடுக்க டச்சு அஞ்சி யது; வரப்போகும் துன்பங்களையும், எதிர்ப்புகளையும் எவ்வாறுவது சமாளிக்கலாம் என நினைத்தது. கி.பி. 1941ஆம் ஆண்டின் இறுதி யில் அரசியலில் ஈடுபட்டிருந்த எல்லா இந்தோனேசியர்களும்,

ஜப்பானியர்களின் வருகையை வரவேற்ருர்கள். இந்தோனேசிய ஆட்சி இருக்கையில் ஏறிய உடனே ஜப்பானியர்கள் சுகர்னே ஷாஃரீர் ஹட்டாவை விடுதலை செய்தார்கள். ஜப்பானியர்கள் இந்தோனேசியாவைத் தாக்குவதற்கு முன்பே அத் தேசியவாதி கள் டச்சு அரசாங்கத்திற்கு எதிராகக் கலகங்கள் செய்தார்கள்.

8. இந்தோனேசியத் தேசிய இயக்கம்

ஐரோப்பியக் குடியேற்றக் கொள்கைகளை எதிர்த்து, உரு வாக்கிய இயக்கம்தான் இந்தோனேசியத் தேசிய இயக்கம். தேசிய இயக்கத்தின் நோக்கங்கள் இரண்டு.

(1) இந்தோனேசியாவை ஒரு சுதந்திர நாடாக அமைக்க வேண்டும்.

(2) சமூக அமைப்பைத் திருத்திச் சீரமைக்க வேண்டும். அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றினுல்தான் சமூக அமைப்பி லுள்ள குறைபாடுகளைத் திருத்த முடியும் என்பதே இந்தோ னேசியத் தேசிய வாதிகளின் கருத்து. ஆகையால், மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டுமெனத் தேசியவாதிகள் கிளர்ச்சி செய்தார்கள். இக்காரணத்தால் டச்சு அரசாங்கத்துடன் மோதவேண்டியதாக இருந்தது.

நெறி முறைத் திட்டத்தைச் செயல்படுத்தும் முன் தாங்கள் பின்னுரிமையாளராக அடைந்த இந்தோனேசியச் சமூக அமைப்பைக் கலைக்காமல் வைத்திருக்க வேண்டும் என்பதே டச்சு ஆட்சியாளர்களின் கொள்கை. ஆனுல், தங்கள் அதிகாரத்தின் மூலம் ஜாவாத்தீவின் அடிப்படைச் சமூக அமைப்பை ஓரளவில் டச்சு அரசாங்கம் மாற்றியிருந்தது; மேலும் இந்தோனேசியர்களின் பொருளாதார அரசியல் எதர்ப்பையும் கிளப்பியிருந்தது. தேவையான வருமானமில்லாததால் நேரடி ஆட்சி அமைப்பை நிறுவுவதற்கு மாருக மறைமுக ஆட்சி அமைப்பை உருவாக்கியது. டச்சு அரசாங்கத்தின் ஒரே நோக்கம் முடிந்த அளவில் இந்தோனேசியாவைச் சுரண்டிப் பெரும் பயன் பெறவேண்டும் என்பதே. மறைமுக ஆட்சி அமைப்பை நிறுவிய தால் தங்களுடைய பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்ய இந்தோனேசியர்களின் அதிகார (நிர்வாக) படிநிலை அமைப்பைப் பயன்படுத்த முடிந்தது. தாங்கள் பெரும் பயன் அடைவதற்குச் சாதகமாக இந்தோனேசிய உயர் குடிமக்களும் மற்றத் தலைவர் களும் மக்களின்மேல் ஆட்சி செலுத்தியதால் அவர்களுக்கு

அதிகாரங்களும் டச்சுப்படையின் ஆதரவும் டச்சு அரசாங்கம் அளித்தது. இதனால் இந்தோனேசியச் சமூக அமைப்பு நிலைகுலைந்தது. தங்கள் கிராமத் தலைவர்களின் வரம்பு மீறிய அட்டூழியத்தைக் கட்டுப்படுத்துவதற்காக ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குச் சென்று குடியேறி விடுவதாக, அச்சுறுத்தும் வழிவழி முறைகளையும் தங்கள் மறைமுக ஆற்றல் களையும் மக்களால் இப்புதிய சூழ்நிலையில் பயன்படுத்த முடிய வில்லை. ஆகையால், உள்ளூர் ஆதிக்கம் வல்லாட்சியாக மாறியது. மற்றொரு பக்கத்திலிருந்து நோக்கினால் ஜாவாவின் ஆட்சியாளர்கள் டச்சு உடன் உள்ள தொடர்பில் மிகை அளவில் சுதந்திரமற்றவர் களாக இருந்தார்கள்.

அரசாங்க அமைப்பு பின் விவரிக்கப்பட்ட முறையில் அமையலாயிற்று.

டச்சு அரசாங்கம்

அரசக் குடும்பத்தைச் சேர்ந்த பகர ஆளுநர்கள்.	செல்வாக்கும் சலுகைகளும் உள்ள சீனர்கள்

கிராமத்தலைவர்களும் மிகச் சிறிய குடித்தலைவர்களும் (Petty Chiefs)

மக்கள் (Ra'ayat)

சில சமயங்களில் பொருளாதாரக் கொள்கைகள் மோசமானச் சூழ்நிலையை உருவாக்கியதால் விளைபொருள்களின் சொந்தக்காரர் களுக்குத் தாங்கள் தொடர்ந்து கூலிவேலை செய்வதற்குத் தேவையான அளவு விளைபொருள்கள் மட்டுமே கிடைத்தன. அரசக் குடும்பப் பகர ஆளுநர்கள் வழக்கம் மீறி மிகுதியாக மக்களை எவ்வளவுக் கெவ்வளவு வலிந்து கசக்கிப் பிழிந்தெடுக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாகவோ, குறைவாகவோ கொள்ளைப் பயன்பெறலாம். பின் சீன இடையீட்டாளர்கள் தோன்றிய தாலும் ஜாவா மக்களின் வாழ்க்கைநிலை இழிநிலையை அடைந்தது. சீனர்கள் கிழக்கியத் தீவுகளின் சரக்குகளின் இடையீட்டாளர் களாகத் தொடக்கத்தில் பணிபுரிந்து வந்தார்கள். ஆனால், டச்சு அரசாங்கத்தினது திட்டத்தின் மூலம் டச்சுக்காரர்கள் மொத்த வாணிகர்களாகவும், இடையீட்டாளர்களாகவும் (middle men) மாறியதால் சீனர்கள் சில்லறை வாணிபங்களைக் (retailers)

கைப்பற்றி டச்சுக் கம்பெனிக்கும் இந்தோனேசிய மக்களுக்கும் இடையே உள்ள நடுவர்களாகப் (intermediaries) பணி புரியத் தொடங்கினார்கள். சில்லறை வாணிபம் படிப்படியாகப் பரந்து, விரிந்து, கம்பெனி ஏற்றுமதி செய்யும் பொருள்களை ஜாவா மக்களிடமிருந்து திரட்டி வாணிபம் செய்யும் உயர்படி நிலையை அடைந்தது. காலப்போக்கில் இவ்வாணிபச் செல்வாக்குமூலம் பகர ஆளுநர்கள் தகுநிலையை அடைந்து போர்க் கருவிகளைக் கூடத் தேவையான சமயத்தில் பயன்படுத்தி வரிகளைச் சீனர்கள் திரட்டத் தொடங்கினார்கள். கிராமங்களின் மேல் தங்களுக்குள்ள அதிகாரத்தை நம்பி நில அடைமானங்களின் பேரில் கடன்கள் வழங்கலானார்கள். சுங்கவரி, பாதைவரி, சந்தைவரி, உப்புவரி போன்ற உள்நாட்டு வாணிபம் பற்றிய ஜாவா நிர்வாகத்தை டச்சு அரசாங்கம் சீனர்களுக்குக் குறிப்பிட்ட தொகைக்கு ஈடாக வரி வாடகைக் கட்டண உரிமைகளைக் குத்தகைக்கு விட்டது.

மறைமுக ஆட்சியுடன் பொருளாதார மோசடியும் தொடர்ந்து வந்த ஆட்சி முறையே பண்பாட்டுத் திட்டம். ஏற்கெனவே கூறியபடி பண்பாட்டுத் திட்டத்தின்மூலம் நெதர்லாந்துக்குத்தான் பயன் கிடைத்தது. ஆனால், ஜாவாவும், ஜாவாமக்களும் யாதொரு நன்மையையும் அடையவில்லை. வாணிப அங்காடிச் சூழ்நிலை யுடன் ஜாவா மக்கள் தொடர்புகொள்ளாமல் ஒதுங்கி நின்றார்கள். வாணிக அனுபவம் கிடைக்கவில்லை. விளைபொருள்கள் பயிரிடும் கூலியாள்களாகத்தான் இருந்தார்கள். பொதுநலத் துறைகளுக்கும் மற்ற நிர்வாக அமைப்புகளுக்கும் கட்டுப்பாடில்லாத் தொழிலாளர் கள் தேவையாக இருந்ததால் படிப்படியாகக் கட்டாயக் கூலிமுறை விடப்பட்டது. முற்போக்காளர்கள் வற்புறுத்தியதால் இரண்டாம் முறையாக இந்தோனேசியாவில் முற்போக்குக் கொள்கைகளை யுடைய அரசாங்கம் அமைக்கப்பட்டது.

கிராமத் தலைவர்களிடமிருந்தும் சீன டச்சு முதலாளிகளிட மிருந்தும் ஜாவாத் தீவின் குடியானவர்களைப் பாதுகாக்கப் புதிய அரசாங்கம் முயற்சி செய்தது. நெறி முறைத் திட்டம் குடியானவர் களைப் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டுமென்ற கொள்கையைத் தீவிரமாகப் பின்பற்றியது. மேலும் இத்திட்டத்தின் மூலம் இந்தோனேசியத் தலைவர்கள் மேலைநாட்டுச் சமூகப் பண்பாடு களுடனும், பொருளாதார அரசியல் கருத்துகளுடனும் தொடர்பு கொண்டார்கள். செலாவணிப் பொருளாதார அமைப்புடன், குடியானவர்களால் இசைந்து இணைய முடியாததால் அவர்களால் தங்கள் வாழ்க்கை நிலையை வளர்த்துக்கொள்ள முடியவில்லை.

வரிகளைப் பணமாகச் செலுத்த வேண்டியிருந்ததாலும், பட்டணங்களில் இருந்து சாமான்கள் வாங்கவேண்டியதாய் இருந்ததாலும், அவர்கள் தங்கள் நிலங்களை டச்சுப் பண்ணையாளர்களுக்கு விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேண்டிய நிலைமை உருவாகியது. ஆகையால் இவர்கள் தங்கள் நிலங்களை இழந்து, சொந்த நிலமில்லாக் கூலியாள்களாக மாறினார்கள். அரசாங்க வேளாண்மைத் திட்டத்தின் மூலமாகக்கூட அவர்களுக்குத் தேவையான அளவு பாதுகாப்பளிக்க முடியவில்லை. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து வாணிபமும் தாயக உற்பத்திப் பொருள்களும் அதிக அளவில் ஓங்கின. ஆனால், இவற்றின்மூலம் இந்தோனேசியர்களுக்கு யாதொரு நன்மையும் உண்டாகவில்லை. விவசாயிகள் தங்கள் பிடிகளுக்குள் வாழ்ந்ததால், சீனர்களும் அரேபியர்களும் மிகக் குறைந்த விலையில் பொருள்களை வாங்க முடிந்தது. ஆகையால், இப்புதிய திட்டத்தின்மூலம் சீன அரேபிய வாணிகர்கள்தாம் மிகுபயன் அடைந்தனர்.

இந்தோனேசியர்களிடையே அரசியல் விழிப்புப் பின்வரும் காரணங்களால் ஏற்பட்டது.

1. எல்லாத் துறைகளிலும் இந்தோனேசியர்கள் வேறுபாடுகளுடன் ஓரங்காட்டப்பட்டு நடத்தப்பட்டார்கள்.

2. நெறிமுறையற்ற ஒழுங்கில்லாத பொருளாதார அமைப்பினால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது; ஐரோப்பியர்களுடனும், இன்தோக்களுடன் (Indo's) ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தோனேசியர்களுக்குக் குறைந்த அளவு ஊதியம்தான் கிடைத்தது.

3. கட்டாய வேலை விதிமுறை என்னும் புதிய தேசியத் தென்றல், நகரப் பண்ணை வேலையாள்களின் கவனத்தைக் கவர்ந்தது. முறையாக அமைக்கப்பட்ட தேசிய இயக்கத் தலைவர்கள் தோன்றுததாலும், கிராமங்களில் சமூகச் சீர்திருத்தங்கள் செயற்படுத்தப்பட்டதாலும், குடியேற்றக் கொள்கைகளை எதிர்க்கும் கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான் தேசியச் சுதந்திர இயக்கம் அமைக்கப்பட்டிருக்கிறது; என நாட்டுப்புற மக்கள் மெதுவாக உணர்ந்தார்கள். கி.பி. 1913ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1930ஆம் ஆண்டுவரை படிப்படியாக இஃது இந்தோனேசியர்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சியை உண்டாக்கியது.

சீனர்களை எதிர்க்கும் மனப்பான்மையும் இருபதாம் நூற்றாண்டில் தேசிய இயக்கத்தோடு ஒருங்கே கலந்திருந்தது. சீனர்கள்

இந்தோனேசியாவிற்குள் குடியேறியதால் தாயக மக்களின் ஆக்க நிலையில் தடுமாற்றம் ஏற்பட்டது. பண்பாட்டுத் திட்டத்தின் மூலம் உருவான வெற்றிடத்தைச் சீன வணிகர்கள் நிரப்பினுர்கள். பொதுவாக அவர்களிடையே வலிவான வாணிப உறவும், கடுமையாக உழைக்கும் ஆர்வமும், திறமையும், வலியத் தாக்கும் இயல்பும் இருந்தன.

தொடக்கத்தில் கடற்கரைப் பகுதிகளில் மட்டும்தான் சீனர்கள் வாணிகம் செய்யலாம். உள்நாட்டுப் பகுதிகளில் வியாபாரம் செய்யச் சில சீனர்களுக்கு அனுமதிச் சீட்டு அளிக்கப்பட்டது. சீனர்களிடமிருந்த இந்தோனேசியர்களை அரசாங்கம் பாதுகாத்த வரை பகைமை ஏற்படவில்லை. ஆனுல் ஒழுங்குக் கட்டுப்பாட்டுடன் அமைக்கப்பட்ட சீனத் தேசிய இயக்கத்தின் வற்புறுத்தலால் கி.பி. 1904ஆம் ஆண்டிலிருந்து 1910ஆம் ஆண்டு வரை சீனர்களுக்கெதிராக இருந்த தடைவிதிகளை விலக்கியது. ஜாவா முழுவதும் போட்டி போட்டுக்கொண்டு சீனர்கள் வாணிகம் செய்ததால், இந்தோனேசிய வாணிபர்கள் பாதிக்கப்பட்டார்கள். மனக்கசப்பும் வன்மமும் தோன்றின. சீன வாணிபப் போட்டியைத் தடுத்து நிறுத்துவதற்காகச் சாரிகட் தாகங் இஸ்லாம் (Sarekat Dagang Islam) என்னும் பெயரில் இஸ்லாமியர் வாணிபச் சங்கம் அமைக்கப்பட்டது.

தவிர, விலை குறைந்த பேரளவில் உற்பத்தி செய்த பொருள்களை ஐரோப்பாவிலிருந்தும் ஜப்பானிலிருந்தும் இந்தோனேசியாவில் இறக்குமதி செய்யப்பட்டதாலும் இந்தோனேசிய வாணிபக் குழாம் பாதிக்கப்பட்டது. இதன் விளைவால் கிராமத் தொழில் வாணிகத்துறைகள் அழிந்தன. பல்வேறு பொருளாதார வாய்ப்புகள் அடைக்கப்பட்டன. மொத்தத்தில் பெரும்பான்மையான தொழில்துறைகள் ஐரோப்பியர்களிடமும் சீனர்களிடமும் இருந்தன. பின்வரும் புள்ளிவிவரம் இதை நிரூபிக்கும்.

கி.பி. 1925-ல் தொழில் துறைகளின் சொந்தக்காரர்கள்.

1. ஐரோப்பியர்கள்	...	21816
2. சீனர்கள்	...	1516
3. இந்தோனேசியர்கள், அராபியர்கள், மற்றும் பலர்.	...	865

இந்தோனேசியச் சமூகச் சமநிலை அமைப்பு மாறியதால் பொறுப்புள்ள நடுத்தர வகுப்பினர்கள் தோன்றினுர்கள். பொது

மக்களின் கவனத்தை ஈர்த்து இவர்கள் தேசிய இயக்கத்தின் தலைவர்களாகத் தோன்றினர். தங்களுடைய சமூகம் படிநிலையும், சலுகைகளும், குடியேற்ற நிர்வாகத்தைச் சார்ந்திருந்ததால், நடுத்தர வகுப்பினர்கள் பல ஆண்டுகள் டச்சு அரசாங்கத்தை ஆதரித்து பராமரித்து வந்தார்கள். ஆனால் இவ்வழி மரபில் வளர்ந்தவர்களின் மக்கள் டச்சு அரசாங்கத்திலிருந்து விலகி, முழுப் பொருளாதாரச் சுதந்திரம் அடையும் நோக்கத்துடன் மரபுரை வகுப்புக் கொள்கைகளை எதிர்த்தனர். திறமையுள்ளவர்கள் தந்தை வழியில் சென்று அரசாங்கப் பதவிகளில் அமர மறுத்தார்கள். மருத்துவம், பொறித் தொழில், கற்பித்தல் போன்ற வாழ்க்கைத் தொழில்கள் (Professional occupations) பணிபுரிய ஆர்வம் காட்டினுர்கள்.

புதிய நடுத்தர வகுப்பினர் மேலைநாட்டுக் கல்விமுறைப் பயிற்சி அளிக்க வேண்டுமென உரிமைக் கோரிக்கை விட்டனர். இவ்வகையானக் கல்வித் திட்டத்தின் மூலமாகத்தான் பொறுப்புள்ள இடங்களைப் பிடித்துக் குடியேற்ற அரசு பிடியிலிருந்து இந்தோனேசியாவை விடுவிக்க முடியுமென இவர்கள் நம்பினுர்கள். நடைமுறையில் ஐரோப்பியர்களுக்கும் சீனர்களுக்கும் மட்டுமே கல்வி வாய்ப்பு அளித்திருந்ததால் இந்தோனேசியர்கள் மறுப்புத் தெரிவித்தனர்.

முழுச் சுதந்திரம் கிடைப்பதற்கு ஒன்பதாண்டுகளுக்கு முன் கூடக் கி.பி. 1940ஆம் ஆண்டில் மிகுந்த அளவில் உயர்பள்ளிப் படிப்பு ஐரோப்பியர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. கல்வி பயில வாய்ப்பளிக்க வேண்டுமென வற்புறுத்தியதால் ஒரு தொழில் நுட்பக் கல்லூரியும் (1919), சட்டக் கல்லூரியும் (1924), மருத்துவக் கல்லூரியும் (1926) அமைக்கப்பட்டன. இக்கல்லூரிகளில், கி.பி. 1910ஆம் ஆண்டிலிருந்து திறமையுள்ள எல்லாக் குடிமக்களுக்கும் கல்வி பயிலும் வாய்ப்பளிக்கப்பட்டது. ஆனல் கல்வி பயில அதிகப் பணம் தேவையாக இருந்ததால் செல்வந்தர்களின் குழந்தைகளுக்கு மட்டுமே பயிலும் வாய்ப்புக் கிடைத்தது. முன்பிருந்ததைவிடத் தற்சமயம் மற்றும் பலர் பகர ஆளுநரின் படிநிலையை அடையும் வாய்ப்புக் கிடைத்தது. கல்வி பயின்ற பெரும்பான்மையான நடுத்தர வகுப்பினர் படைத்துறையைச் சாராத அரசாங்க அலுவலகத்தில் பணிபுரிந்தனர். பலர் அரசாங்க வேலையை நம்பி வாழவேண்டும் என்ற நிலைமையில் இல்லாதிருந்ததால் இந்தோனேசியாவை வளர்க்க வேண்டுமென முற்பட்டனர். அரசாங்கப் பணியிலிருந்த பெரும்பான்மையான இந்தோனேசியர்

கள் பணியாளர் படிநிலையை விட்டு மேலே உயர்பதவிகளில் அமர வாய்ப்புக்கிடைக்கவில்லை. கி.பி. 1920ஆம் ஆண்டில் நடுத்தரப் பள்ளி வகுப்புகளில் பயின்ற இந்தோனேசியர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. ஆனால் ஓரங்காட்டி அரசாங்கம் டச்சுக்காரர்களுக்கும், இந்தோக்களுக்குமே (Indos- டச்சு இந்தோனேசியப் பெற்றோர்களின் குழந்தைகள்) வேலைகள் அளித்ததால் இவர்களுக்கு வேலை கிடைப்பது அரிதாயிருந்தது. தனியார் நிறுவனங்கள் டச்சுக் குடிமக்களுக்கு மட்டுமே வேலை அளிக்க முன் நின்றது; இந்தோனேசியர்களுக்கும் இந்தோக் களுக்கும் (Indos) வேலை அளிக்க விரும்பவில்லை. ஆகையால் கி.பி. 1928–29ஆம் ஆண்டுகளில் தங்கள் படிப்பிற்கு உகந்த வேலைகளில்லாமல் 25 விழுக்காடு இந்தோனேசியர்கள் தவித்தார் கள். வேலையில்லாத் திண்டாட்டத்தினால் இருக்கும் சில வேலை களுக்கும் தீவிரப் போட்டி ஏற்பட்டது. இதனால் ஊதியம் குறைந் தது. மேலைநாட்டு முறையில் கல்வி பயின்றவர்களுக்கு ஆசிரியர் வேலையைத் தவிர மற்ற வேலைகள் கிடைப்பது அரிதாயிருந்தது.

ஆகையால் ஒரு சிறுபான்மை இந்தோனேசியர்களே டச்சு ஆட்சியின்போது நன்மையடைந்தனர். பெரும்பான்மையானவர் கள் விவசாயிகளாயிருந்ததால் குடியேற்ற அமைப்புத் தொடர்ந் திருக்க வேண்டுமென்ற ஆர்வம் அவர்களிடமில்லை. ஆகையால் தேசிய இயக்கம் மலர்ந்து, டச்சு அதிகாரத்தைத் தாக்கியபோது, கீழ்ப்படியிலுள்ள பெரும்பான்மையான இந்தோனேசிய மக்கள் இவ்வியக்கத்தை ஆதரித்தனர். இதில் பங்கெடுப்பதால் ஒன்று மில்லாத அவர்களுக்கு இழப்பு வர வாய்ப்பில்லை; மிகு பயன் அடைய வழி பிறக்கலாம். ஆனால் மேல் நாட்டுப் படிப்பு முறையில் பயின்ற நடுத்தர வகுப்பினர்கள் தாம் தேசிய இயக்கத்தின் தலைவர்களாகத் தோன்றினார்கள்.

தேசிய இயக்கத் தோற்றத்தின் காரணங்கள்.

1. அயல்நாட்டுப் பண்புகள் நிரம்பிய கொடுமையான ஓரங் காட்டும் தன்மையுடைய டச்சு ஆட்சி இந்தோனேசிய மக்களி டையே அரசியல் விழிப்பு மலர அடிக்கல் நாட்டியது.

2. கலாசாரம் சமூகம் முக்கியமாகச் சமயம் ஆகியவற்றின் கருத்து வேறுபாடுகளினால் சச்சரவுகளும் மோதல்களும் இந்தோ னேசியர்களை ஒழுங்கு உணர்ச்சியுடன் ஒருங்கே கலக்கச் சமயம் பயன்படுத்தப்பட்டது. தேசியவாதிகள் இஸ்லாம் சமயப்பற்றைத் திராணி அழைப்புக்குரலாகப் (Rallying Cry) பயன்படுத்தினர்,

இந்தோனேசியாவில் 90 விழுக்காடு மக்கள் முஸ்லிம்களாதலால் ஒருமைப்படுத்த இஸ்லாம் சமயம் பயனுடையதாயிருந்தது.

3. இந்தோனேசியர்களை இந்தோனேசியர் அல்லாதவர்களிடமிருந்து முற்றொருமைப்படுத்துவதற்காக மலேய் மொழி (Malay) பயன்படுத்தப்பட்டது. மலேய் மொழி சீரமைக்கப்பட்டுத் தேசிய மொழியாக அமைக்கப்பட்டது. டச்சு மொழியை இந்தோனேசியர்கள் பயன்படுத்தக்கூடாது என்ற தடையை டச்சு அரசாங்கம் விதித்ததால்தான் மலேய் மொழியின் செல்வாக்கு ஓங்கியது.

4. டச்சுக் குடியேற்றக் கொள்கைகளின் நடைமுறைகளுக்கு எதிராக வளர்ந்து வரும் இந்தோனேசிய மனக்கசப்பு நெறிமுறைத் திட்டத்தின் மூலம் உறுதியாக்கப்பட்டு, நிலையான உருப்பெற்றது. போக்ஸ்ராட் (Volksraad) அல்லது மக்கள் மன்றங்கள் அமைக்கப்பட்டவுடன் இந்தோனேசிய உறுப்பினர்கள் ஒன்று கூடிக்கலந்து பழக வாய்ப்பு ஏற்பட்டதால் தங்களுக்குள் ஒரு பொதுத் தேசிய நோக்கம் இருப்பதை உணர்ந்தார்கள்.

5. இணைப்பு வசதிகள் (Communications) மூலம் இந்தோனேசியாவின் பல்வேறு பகுதிகளோடு தொடர்புகொண்டதாலும், வானொலியும் செய்தித்தாளும் வளர்ச்சி அடைந்ததாலும் தேசிய உணர்ச்சிகளைக் கிளர்ந்து ஒருங்கே கலக்க வாய்ப்பேற்பட்டது.

6. மறைமுக ஆட்சியமைப்பு மறைந்ததால் இந்தோனேசியர்கள் டச்சு அரசாங்கத்துடன் நேரடித் தொடர்புகொள்ள முடிந்தது. இதன் மூலம் அரசியல் அதிகாரத்தின் சிறப்பைப் பற்றியும் செல்வாக்கைப்பற்றியும் உணர்ந்தார்கள். தங்களுடைய தலைவர்களின் ஆட்சியின்கீழ் வராமல் டச்சு அயல் நாட்டார்களது அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டதால் மக்களிடையே வன்மமும் மனக்கசப்பும் அதிகரித்தன.

7. இந்தோனேசிய உயர்ந்தோர் குழாம் (Elite) உருவாக்கப்பட்டதால் தேசிய இயக்கத்தை நடத்தத்தக்க தலைவர்கள் கிடைத்தார்கள். கெய்ரோவிலும் (Cairo) மேல் நாட்டுக் கல்வி முறையிலும் பயின்ற இத் தேசியத் தலைவர்கள் புதுப்பாங்கானக் கருத்துகளை ஜாவாவில் பரப்பினார்கள். மேலை நாட்டுக் கல்வியும் மேலை நாட்டு அரசியல் கருத்துகளும் செயல்விரிவுடைய அறிவுத்திறனுடைய இந்தோனேசியத் தேசியவாதிகளை உருவாக்கின. கெய்ரோவில் பயின்ற இந்தோனேசியர்கள் முடியாட்சியின் தீவிர எதிரிகள்; மதவெறி கொண்டவர்கள்; டச்சு நாத்திகர்களை (Dutch Kafirs)

எதிர்க்கும் நோக்கத்துடன் புது நாகரிக இஸ்லாம் இயக்கத்தைத் தொடங்கினார்கள்.

8. மேலைநாட்டு முறையில் பயின்றவர்களுக்கு அரசாங்கம் வேலை வாய்ப்பளிக்காததால் குடியேற்ற அரசாங்கத்தை எதிர்க்கும் கடும் தீவிர வகுப்பினர்களை மறைமுகமாக அரசாங்கம் உருவாக்கியது. அரசாங்கத்தைக் கைப்பற்றினால் தற்பொழுது உள்ள டச்சு அதிகாரிகளின் பதவியை அடையலாம் என்ற நம்பிக்கை அவர்களிடம் இருந்தது.

9. ஆசியத் தேசிய இயக்கம் இந்தோனேசியத் தேசிய இயக்கம் பிறப்பதற்கு ஊக்கம் அளித்து வழிகாட்டியது; உதாரணமாக கி.பி. 1904ஆம் ஆண்டில் ரஷ்யாவை ஜப்பான் தோற்கடித்ததை எல்லா ஆசியர்களும் வியந்து பாராட்டினார்கள். கி.பி. 1896ஆம் ஆண்டில் பிலிப்பினோ தேசியவாதிகள் ஸ்பெயினைத் தூக்கியெறிந்ததை இந்தோனேசியர்கள் புகழ்ந்து பாராட்டினார்கள். கி.பி. 1911ஆம் ஆண்டில் சக்தி வாய்ந்த சீன நாட்டு மன்சூ வம்சத்தின் ஆட்சியை (Manchu dynasty) ஒழித்தது; இவ்வியக்கத்தின் விசையழுத்தும் மேலை நாட்டினரை எதிர்க்கும் வழியில் இழுத்துச் சென்றது. இந்தியச் சுதந்திரப் போரும், இந்தோனேசியர்களின் கவனத்தை ஈர்த்தது ஆகையால், இந்தோனேசிய விடுதலைப் போராட்டம் மலர ஆசியச் சூழ்நிலை மறைமுகமாக உதவியது.

10. ஓரங்காட்டி இந்தோனேசியர்கள் தாழ்ந்தவர்கள் டச்சுக்காரர்கள் உயர்குடி மக்கள் என்ற கருத்தை டச்சு ஆட்சி முறைகள் வலியுறுத்தின. தங்களுடன் சமமாகப் பணிபுரியும் டச்சுப் பணியாளர்களைவிட இந்தோனேசியர்களுக்குக் குறைந்த ஊதியம் அளிக்கப்பட்டது. கல்வி நீதித்துறை முதலியவற்றில் இவ்வகையான ஏற்றத் தாழ்வு காட்டப்பட்டதால் டச்சுக்காரர்களின் சலுகைகளை நோக்கிய இந்தோனேசியர்கள் திரண்டெழுந்தார்கள்.

தேசிய இயக்க வரலாறு

இந்தோனேசியத் தேசிய இயக்கத்தின் சூழ்நிலையைப்பற்றி நாம் ஓரளவு அறிந்துகொண்டோம். டச்சு வேற்றுமை மனப்பான்மை ஆட்சியின் மூலம் உருவாகிய இந்தோனேசிய எதிர்ப்புணர்ச்சிகளை ஒழுங்குபடுத்தி ஒரு சேரக் கலந்து தேசிய இயக்கமாக மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆகையால் தேசியச் சங்கங்கள் அமைக்கப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டில் தேசிய இயக்கம் ஒரு சமூகப் பண்பாட்டு இயக்கமாகத்தான் (Socio-Cultural move-

ment) இருந்தது. கல்வித் திட்டத்தின் மூலமாகத்தான் மக்களின் நலனைச் சீரமைக்க முடியும் எனச் சில இந்தோனேசிய அறிஞர்கள் திண்ணமாக நினைத்தார்கள். முதல் முறையாகக் கி.பி. 1902ஆம் ஆண்டில் ராடென் அத்ஜெங் கார்த்தினி (Raden Adeng Kartini) என்பவர், இந்தோனேசியர்களுக்கு இப்பாதை அமைக்க முயன்றார். அரச குடும்பத்தைச் சார்ந்த இவ்விளவரசியார், இந்தோனேசிய மகளிர்க்காக டச்சு இந்தோனேசியாவுடன் கலந்து கல்விமுறையை அமைக்க வேண்டுமென விரும்பினார். இந்நோக்கத்தைச் செயல் படுத்துவதற்காக டாக்டர் மாச்வாஹிதின் சுதிரோ உசோடோ (Dr. Mrs. Wahidin Sadiro Husodo) உதவியுடன் பல இந்தோ னேசிய மகளிர் பள்ளிகளைக் கட்டினார். அவருடைய திறமை வாய்ந்த செயல்கள் இந்தோனேசியத் தீவுகளில் எதிரொலித்துத் தேசிய உணர்ச்சிகளைத் தூண்டின. ஆனால் இருபத்தைந்து வயது நிரம்பாததற்கு முன்பே கார்த்தினி இறந்ததால் அவருடைய முயற்சிகள் நிலையாக வெற்றியடையவில்லை.

பூதி உடோமோ (Buti Utomo)

பின் கி.பி. 1808ஆம் ஆண்டில் டாக்டர் உசோடோ 'பூதி உதோமோ' என்ற மன்றத்தை நிறுவினார், மருத்துவக் கல்வி வசதிகள் செய்ய வேண்டுமென்பதே இதன் முக்கிய நோக்கம்; தவிர இந்தோனேசிய வேளாண்மைத் துறையையும் வாணிபத் துறையையும் பொதுவாகச் சமூக அமைப்பையும் சீர்திருத்தவும் இம் மன்றம் விரும்பியது. ராடென் சுதோமோ (Raden Sutomo), ராடென் மான்குன் குகமோ (Raden Mangun Kugumo) என்ற இரண்டு இளவரசர்கள் இவருக்குத் துணையாக நின்றார்கள். முதன் முதலாக அமைக்கப்பட்ட இந்தோனேசியத் தேசியக் கட்சி இதுவே. ஆனால், இம் மன்றம் அரசியலில் ஈடுபடவில்லை. கல்வி பயின்ற வகுப்பினர்கள் இம் மன்றத்தை ஒரு கலாசாரத் தேசிய மன்றமாக உருவாக்க முயன்றார்கள். இவ்வாறு, அறிஞர்கள் மன்றத்தில் பெரும்பான்மையானக் குடியானவர்கள் பங்கெடுப்பதற்கு வாய்ப்பேற்படவில்லை. அரசியலில் ஈடுபடாவிட்டாலும், பூதி உடோமோ கி.பி. 1910ஆம் ஆண்டில் அரசியல் திட்டம் உருவாகுவதற்கு வழி அமைத்தது.

கி.பி. 1909ஆம் ஆண்டில் இம் மன்றத்தில் 10,000 உறுப்பினர்களிருந்தார்கள் ஆனால் கி.பி. 1912 ஆம் ஆண்டுக்குள் இதன் உறுப்பினர்கள் குறைந்தார்கள், அரசியல் சார்பான கட்சிகளில் சேர்வதற்காக இம் மன்றத்தை விட்டுப் பலர் வெளியேறினர். ஆனால் இம் மன்றத்தை ஏற்படுத்திய சமயத்தில் அரசியல் கிளர்ச்சி

செய்யும் நோக்கம் யாருக்குமே இருக்கவில்லை. இச் சமயத்தில் பூதி உடோமோவை ஒரு தேசிய மன்றமாகக் கருதக்கூடாது. ஏனென்றால் இதன் உறுப்பினர்களில் பெரும்பாலோர் ஜாவாத் தீவைச் சேர்ந்தவர்கள்; ஆனால் இதைத் தேசிய இயக்கத்தின் முன்னணிப் படை என அழைக்கலாம் என்று மகமது ஹட்டாக் கூறுகிறார்.

சாரிகட் தாகங் இஸ்லாம் (இஸ்லாமியர் வாணிபச் சங்கம்)

பொருளாதாரம் சமயம் ஆகிய விவகாரங்கள் பற்றிய நோக்கத்துடன்தான் இச்சங்கம் கி.பி. 1909ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. படிக் நெசவுத் தொழில்களின் (batik iudustry: படிக் என்றால் துணியில் சாயம் போட வேண்டியிராத பகுதிகளுக்கு மெழுகு பூசி, எஞ்சிய பகுதிகளில் வண்ணப்படங்களை அச்சிடும் கீழை நாட்டு முறை) இடையீட்டாளர்களாகப் பணிபுரிந்து போட்டியிடும் சீனர்களை எதிர்க்கும் நோக்கத்துடன் ஜாவா-படிக் வாணிகர்கள் இச் சங்கத்தை நிறுவினார்கள். இஸ்லாம் சமயப்பற்றைத் திரளணி அழைப்புக் குரலாக இச் சங்கம் பயன்படுத்தியது. சீனர்களை நீக்கி இந்தோனேசிய நடுத்தர வகுப்பினர்களின் வாணிபத்தை வளர்க்க வேண்டுமென்பதே இதன் முக்கிய நோக்கம். சீன வாணிபப் போட்டியை எதிர்ப்பதற்காக ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அமைத்தார்கள். சீனர்களை எதிர்ப்பதில் ஊர்க்கட்டு (boycott) முறைகளைப் பயன்படுத்தவும் தயாராயிருந்தார்கள். கி.பி. 1912ஆம் ஆண்டில் சுரகர்த்தாவிலும் (Surakarta) சுரபயாவிலும் (Surabaya) சீனர்களுக்கெதிரான இனவெறிக் கலகத்தை இச் சங்கம் தூண்டியது.

சீனர்களை எதிர்க்கும் இயக்கமாக மட்டும் கருதாமல் டச்சுக்காரர்களை எதிர்க்கும் தேசியச் சங்கமாகவும் இதை ஆதரித்த இந்தோனேசியர்கள் கருதினார்கள். சமயப் பேரொலியை இச் சங்கம் எழுப்பியதால் இந்தோனேசிய முஸ்லிம்களுக்கும் மற்ற அயல் நாட்டு முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைத் தெளிவாக எடுத்துக்காட்டியது. அதிக அளவில் உறுப்பினர்கள் சேரத் தொடங்கியவுடன் இது, அரசியல் தன்மையைக் காட்டத் தொடங்கியது.

தாங்கள், உள்ளூரில் பயணம் செய்யும் தடுப்புக் கட்டளையை நீக்குமாறு டச்சு அரசாங்கத்தைச் சீனர்கள் வற்புறுத்தியதாலும் இச் சங்கம் அரசியல் வழியில் செல்ல முயன்றது. ஏற்கெனவே கூறியபடி சீனர்கள் கேட்டதை அரசாங்கம் அளித்தது.

சாரிகட் இஸ்லாம் (Sarikat Islam)

கி.பி. 1912ஆம் ஆண்டு செப்டம்பர் 19ஆம் நாள் தாகங் இஸ்லாம் மறுபடியும் சீரமைத்துப் பொதுமக்களுக்குரிய சாரி இஸ்லாமாக மாறியது; விரைவில் இது ஓர் அரசியல் கட்சியாக மாறியது.

இம் மன்றம் நிறுவப்பட்ட நான்கு மாதங்களுக்குப்பின் கி.பி. 1913ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சுரபயாவில் இதன் முதல் மாநாடு தொடங்கியது. அறிவாளிகளும், வர்த்தகர்களும், சமயக் குருமார்களும், கூலி வேலையாள்களும், விவசாயிகளும் இதன் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டார்கள். இம் மன்றத்தின் தலைவர் ஓமர் செய்யது சொக்ரோமினோடோ (Omar Said Tjokroaminoto) இவருக்குத் துணையாகத் திறமையுடன் உதவிபுரிந்தவர் அகுஸ் சலீம் (Agus Salim)

இம் மாநாட்டின்போது இதன் நோக்கங்களைப் பின்வருமாறு அறிவித்தது :

1. இந்தோனேசிய வாணிபத்தை ஊக்கமளித்து மேம் படுத்துவது.

2. ஒருவருக்கொருவர் பொருளாதார ஆதரவு அளித்துக் கொள்ளுதல்.

3. இந்தோனேசியப் பொருள் திறன் அறிவாற்றல் ஆகியவை சார்ந்த நன்மைகளைப் பேணி வளர்ப்பது.

4. உண்மையான இஸ்லாம் சமயத்தைப் பரப்புதல்.

மேலே கூறிய நோக்கங்களைப் பார்த்தால் வெளிப்படையாகச் சாரிகட் இஸ்லாம் அரசியலில் ஈடுபட விரும்பவில்லை. ஆனால் உண்மையில் இது ஏமாறச் செய்யக்கூடியதாயிருந்தது. எல்லா வகையான அரசியல் கூட்டங்களுக்கும் அரசாங்கம் தடை விதித் திருந்ததால் சாரிகட் இஸ்லாமின் தலைவர்கள் எச்சரிக்கையுடன் நடக்கவேண்டிய சூழ்நிலை உருவாகியிருந்தது. இம் மன்றத்தின் கிளைகள் ஜாவா முழுவதிலும் பல வெளியிலும் அமைக்கப்பட்டன.

இம் மன்றத்திற்குப் பொதுமக்கள் ஆதரவு கிடைத்தது. மூன்று மாநாடுகள் நடத்திய பிறகு $2\frac{1}{2}$ மில்லியன் மக்கள் இம் மன்றத்தின் உறுப்பினர்களாயிருந்தார்கள். அரசாங்கத்திற்கு அச்சமுண்டாயிற்று. கி.பி. 1916ஆம் ஆண்டுத் தேசிய மாநாட்டில் கலந்துகொண்ட 360,000 உறுப்பினர்கள் நெதர்லாந்துக் காமன்

வெல்த்துக்குள் (Netherlands Commonwealth) இந்தோனேசியாவிற்குத் தன்னாட்சி உரிமை அளிக்க வேண்டுமென்ற உரிமைக் கோரிக்கையை வெளியிட்டார்கள்.

இத் தேசிய இயக்கத்திற்குத் தடைவிதிக்கும் நோக்கத்துடன் இம் மன்றத்தின் மத்தியக் குழுவிற்குச் சட்டப்படி நிலை (legal status) அளிக்க டச்சு அரசாங்கம் மறுத்தது. இதனால் சாரிகட் இஸ்லாமின் ஒருமை பாதிக்கப்பட்டது. எல்லாக் கிளைகளுடன் தொடர்புகொள்ள விரும்பும் இதன் தலைவர்களுக்குப் பல இன்னல்கள் முளைத்தன. இதன் செயல்கள் நிறைவேறாததால் இம் மன்றத் தலைவர்களின் செல்வாக்கு மக்களிடையே குறையத் தொடங்கியது. மிதவாதிகளிடமிருந்து அகன்று, தீவிரவாதிகளின் பக்கம் இதன் உறுப்பினர்கள் சேர்ந்தார்கள். ஆனால் இச் சமயத்திலிருந்த தேசிய இயக்கம் சாரிகட் இஸ்லாம் ஒன்றேதான்.

தி இன்திசி கட்சி (The Indische Party)

இந்தோனேசியர்களின் மன்றமாக விளங்கியது சாரிகட் இஸ்லாம். ஆகையால் பறங்கியர் தலைவர்கள் (Eurasian–Indonesian Leaders) எட்வர்டு தோவெஸ் டெக்கர் (Edward Douwes Dekker), சிபிதோ மன்குன் குசுமோ (Tjipto Mangkunkusumo), சுவார்தி சூர்ய நின் கிராட்டு (Suwardi Suryaningrat) தலைமையில் கி.பி. 1912ஆம் ஆண்டு டிசம்பரில் பறங்கியர் தேசியக் கட்சியைத் (The National Indische Party) தொடங்கினார்கள். இக் கட்சியும் சமூகப் பொருளாதாரச் சமத்துவமும் நியாயமும் இறுதியாகச் சுதந்திரமும் கேட்டது.

இந்தோனேசியாவை இந்தோனேசியர்கள்தாம் ஆட்சிபுரிய வேண்டும் என்பது இக் கட்சியின் நோக்கம். இக் கட்சியிலிருந்த பறங்கியர்கள் தங்களையும் இந்தோனேசியர்கள் என்றே கருதினார்கள்; 'கிழக்கிந்தியத் தீவுகளைத் தங்கள் தாயகமாகக் கருதுகின்றவர்களுக்கே இந்தோனேசியா சொந்தம்' என்ற போர்க் குரலை எழுப்பினார்கள். இதன் காரணமாகக் கி.பி. 1916ஆம் ஆண்டில் போக்ஸ் ராட் (Volks raad) அல்லது மக்கள் மன்றங்களை நிறுவுவதாக, டச்சு நாடாளுமன்றம் வாக்களித்தது. கி.பி. 1918ஆம் ஆண்டில் மக்கள் மன்றங்களின் முதல் கூட்டம் தொடங்கப்பட்டது. இதற்கிடையில் இக்கட்சியின் மூன்று தலைவர்களும் அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார்கள். இதன் விளைவால் இக் கட்சி கலைந்தது.

மற்றக் கட்சிகள்

ஆகையால் பறங்கியர்கள் இன்சுலின்தே (Insulinde) என்ற கட்சியில் சேர்ந்தனர். இந்தோனேசியர்கள் அரசியலில் ஈடுபடத் தொடங்கிய சாரிகட் இஸ்லாம் கட்சியில் சேர்ந்தார்கள்.

கி.பி. 1912ஆம் ஆண்டில் கியாஹி ஹிச் (Kjahi hj) என்பவர் தலைமையில் முகமதியா (Muhammadijah) என்ற கட்சி அமைக்கப் பட்டது. இது முழுமையான சமயக் (இஸ்லாமிய) கட்சி. இது அரசியல் விவகாரங்களில் சிறப்பைப் பெறவில்லை. இக்கட்சி சமூகத் தொண்டுகளில் ஈடுபட்டது; தற்கால நாகரிகப் பண்பாடுடைய இஸ்லாமியச் சமயக் கொள்கைகளைப் பரப்பியது. தேசிய இயக்கம் நிலைத்து வாழ இக் கட்சி ஊக்கமளித்தது எனக் கூறலாம். ஏனென்றால், இதன் உறுப்பினர்களும் சாரிகட் இஸ்லாம் கட்சி யினர்களைப்போல டச்சுக்காரர்களை வெறுத்தார்கள்.

கி.பி. 1914ஆம் ஆண்டில் ஹெண்டிரிக் ஸ்நீவ்லியட் (Hendrik Sneevliet) என்பவர் இந்திசி சோஷியல் டெமொகிராடிக் (Indische Social Democratische Vereeniging—I.S.O.V.) என்ற கட்சியைச் செமராங்கில் (Semarang) அமைத்தார். இது டச்சுக் குடியேற்றக் கொள்கைகளை எதிர்த்தது. பின்பு சாரிகட் இஸ்லாமுடன் இக் கட்சி இணைந்தது. சோஷியலிஸ கம்யூனிஸ்டு கருத்துகளைச் சாரிகட் இஸ்லாமில் புகுத்திய பெருமை இக் கட்சியையே சேர்ந்தது.

9. புரட்சியும் புரட்சி அரசாங்கமும்

இந்தோனேசிய உயர்ந்தோர் குழாம் (Elite) டச்சு ஆட்சியை வெறுத்ததால் அவர்களில் பெரும்பான்மையோர் கி. பி. 1942ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் ஜப்பானிய படையெடுப்பை வரவேற்றார் கள். ஜப்பானியர்களின் ஆட்சியின்கீழ்த் தங்களுடைய நிலைமை இன்னும் மோசமாகப்போக வாய்ப்பு இல்லை என்றும், ஒருவேளை முன்னேற்றம் அடைந்தாலும் அடையலாம் எனவும் நினைத்தார்கள். ஆனால், அவர்கள் எதிர்பாரா வகையில் ஜப்பானிய ஆட்சி கொடுங் கோன்மை ஆட்சியாய் விளங்கியது. ஜப்பானியர்களின் ஆட்சியில் ஏற்பட்ட துன்பங்களினால் இந்தோனேசியர்களின் நாட்டுப்பற்று மலரத் தொடங்கியது. அவர்கள் மீண்டும் டச்சு ஆட்சியை வரவேற்கத் தயாராயிருக்கவில்லை. டச்சுப்படை வீரர்களால் இந்தோனேசியாவைப் பாதுகாக்க முடியாததால் ஹாலந்துக்கு இந்தோனேசியர்களால் மிகுந்த அவமானம் ஏற்பட்டது. ஹாலந்தின் செல்வாக்கும் வீழ்ச்சியடைந்தது. தங்களைப் பாது காத்துக் கொள்வதற்காகத் தங்களுக்கு டச்சு அரசாங்கம்

ஆயுதங்கள் கொடுக்கவில்லை என்று இந்தோனேசியர்களுக்கு டச்சுக்காரர்களின்மேல் வெறுப்புணர்ச்சி மேலிட்டது. இக்காரணங்களாலும் ஜப்பானின் டச்சு எதிர்ப்புப் பிரசாரங்களினாலும் டச்சு அரசை எதிர்க்கும் உணர்ச்சிகள் இந்தோனேசியப் பொது மக்களிடையே மிகத் தீவிரமாகப் பரவத் தொடங்கின.

ஜப்பானியர்களின் ஆதிக்கம்

ஜாவாவில் உள்ள அரசியலில் ஈடுபடாத பழைமைப் பற்றுளர்களான முஸ்லிம்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த ஜப்பான் முயன்றது. கி.பி. 1933ஆம் ஆண்டிலிருந்தே ஜப்பான் முன்னேற்பாடுகள் செய்யத் தொடங்கிற்று. இஸ்லாம் மதத்தைப் பற்றிக் கற்று அறிவதற்காக ஜப்பானியர்கள் மேற்கு ஆசிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டார்கள். மெக்காவிற்கும் இம்மாணவர்கள் சென்றார்கள். இம் மாணவர்கள் டோக்கியோவிற்குத் திரும்பிய பிறகு ஜப்பானியர்களின் இஸ்லாம் மன்றம் ஒன்றை அமைத்தார்கள். கி.பி. 1938ஆம் ஆண்டில் ஜப்பான் நாட்டுத் தலைநகரத்தில் உலக முஸ்லீம்கள் மாநாடு கூட்டப்பட்டது. இந்தோனேசியப் பிரதிநிதிகள் ஜப்பானியர்களின் செலவிலே இம்மாநாட்டிற்குச் சென்று கலந்துகொண்டார்கள். ஜப்பானியப் பேரரசரின் பேச்சு இவர்களை மயக்கிற்று. ஜப்பானியர்களின் சொற்றிறமையால் கி. பி. 1937ஆம் ஆண்டில் சுரபயாவில் (Surabaya) இஸ்லாம் மன்றம் [Islamic Council (or) MIAI] நிறுவப்பட்டது. மாறுதல்களை விரும்புகிற முகமதியா உறுப்பினர்கள், மாறுதல்களை எதிர்க்கிற நக்தத்உல் உலாமா (Nahdatvl ulama) உறுப்பினர்கள் ஆகிய தலைவர்கள் இம் மன்றத்தில் சேர்த்தார்கள்.

மதத்தைப் பரப்புவதும், செல்வம் பெருக்குவதும் குரானைப் (Kuran) பழக்கச் செய்வதுமே இம்மன்றத்தினர்களின் நோக்கம். எஞ்சியுள்ள சில சாரிகட் இஸ்லாம் உறுப்பினர்கள் கி. பி. 1939ஆம் ஆண்டில் இம் மன்றத்தில் சேர்ந்தார்கள். அரசியல் நெறிமுறையில்லாமல் மதநெறிமுறையிலே இவர்கள் டச்சு அரசாங்கத்தை எதிர்த்தார்கள்; அடாட் (Adat) நீதிமுறையை எதிர்த்தார்கள். குரானில் உள்ள சட்டப்படி ஆட்சிபுரியவேண்டும் என வலியுறுத்தினார்கள். கி. பி. 1942ஆம் ஆண்டில் ஜப்பானியர்கள் படையெடுத்து வந்தபோது அவர்களுடைய படைகளுடன்கூட இஸ்லாமைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக ஹஜீ ஆடை உடுத்த (Hazi Robed-மெக்காவுக்குப் பயணம் செய்பவர்கள்) ஜப்பானியர்களும் மசூதிகளில் நடக்கும் முஸ்லிம் வழிபாட்டு முறையின்போது அதில் பங்கெடுத்துக்கொண்ட ஜப்பானியப்படை வீரர்களும் வந்தார்கள்.

இந்தோனேசியாவை ஜப்பானியக் குடியேற்ற நாடாக மாற்ற வேண்டும் என்றும் தங்கள் கருத்தை ஆட்சித் தொடக்கத்திலே சமய வழியிலே இஸ்லாமிற்கு எதிரான கோட்பாடுகளையுடைய டச்சு ஆட்சிக்கு எதிராகப் பரப்பினர்கள். ஆனல், இந்தோனேசியச் சுதந்திர உணர்ச்சிக்கு ஊக்கம் கொடுக்கவில்லை. பொதுமக்கள்முன் 60 ஐரோப்பியர்களை மானம் இழக்கும்படி அவர்களுடைய செருக்கைக் குலைக்க வந்தார்கள். அவர்களை அரசினருக்கு எதிர்ப்பானவர்களை ஒதுக்கிவைக்கும் குடியேற்றப் பகுதிகளில் (Concentration Camp) அடைத்தார்கள். மேலைநாட்டு நாகரிகப் பாங்குடைய இந்தோனேசியர்களைவிட, பழமை பேணும் முஸ்லிம்களை எளிதில் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாம் என ஜப்பானியர்கள் நினைத்தார்கள். ஆகையால், பொதுவாக இஸ்லாம் மன்றத்தையும், சமயவாதச் சட்ட வல்லுநர்களையும் கிராமப் பகுதிகளில் பயன்படுத்தினர்கள். ஜப்பானியக் கலாசாரம் தலைமையை ஏற்றுக்கொள்வதற்காகவும், குரான், ஜப்பானிய மொழி ஆகியவற்றைப் பள்ளிக்கூடங்களில் கற்றுக்கொடுப்பதற்காகவும் சமயவாதச் சட்டவல்லுநர்களுக்கு இரண்டு வாரங்களில் பயிற்சியளிக்கப்பட்டது. கிராம மக்களைக் கட்டுப்படுத்துவதும், தங்களுடன் ஒத்துழைக்கச் செய்வதுமே இச்சமயவாதச் சட்ட வல்லுநர்களின் நோக்கம். உணவுப்பண்டங்களை எளிதில் கிடைக்கச் செய்வதும், தொழிலாளர் படைகளில் புதிய தொழிலாளர்களைச் சேர்க்க வைப்பதும், ஆர்வ ஊழியர்களை ஜப்பானியர் அமைத்த பேட்டா (Peta) படையிலே சேர்க்கவைப்பதும் இஸ்லாம் மன்றத்தின் கடமையாகும். கி.பி. 1942ஆம் ஆண்டு செப்டம்பரிலே அரசியல் நோக்கமுள்ள முஸ்லிம்களை [சாரிகட் இஸ்லாம் முஸ்லிம் இளைஞர் சங்கம் (Young Muslim League) உட்பட] அரசாங்கம் அடக்கி ஒழித்தது.

கி.பி. 1943ஆம் ஆண்டின் இறுதியிலே இஸ்லாம் மன்றம் பல உரிமைகளைக் கேட்டது. மிகப் பெரிய மசூதி ஒன்று கட்டப்பட வேண்டும் என்றும், இஸ்லாம் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க வேண்டும் என்றும், முஸ்லிம் கருவூல நிலைமையை வளர்க்க வருமானத்தில் பத்திலொரு பங்கு வரியைத் திரட்ட அனுமதி கொடுக்கவேண்டும் என்றும் அச் செல்வத்தை மக்கள் துன்பத்திற்குள்ளாகும்போது செலவழிக்க அனுமதி கொடுக்கவேண்டும் என்றும் இவர்கள் விண்ணப்பித்துக் கொண்டார்கள். ஆனல், ஜப்பானியர்களுக்கு இவர்களுடைய ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. இக்காரணத்தால் கி.பி. 1943ஆம் ஆண்டின் இறுதியில் மதவெறி மிகுதியாக இல்லாத மஸ்ஜுமிக் கட்சியை (Masjumi Party) அமைக்க ஜப்பான் உதவியது.

மஸ்ஜூமிக் அல்லது இந்தோனேசிய முஸ்லிம்கள் கலந்து பேசும் சங்கம் (Consultative Council of Indonesian Muslims) மதநோக்கத்துடன் நிறுவப்பட்ட சங்கம் என்றாலும், உண்மையில் அது ஓர் அரசியல் கட்சி. கொள்கையளவில் இக் கட்சி அல்லா தலைமையில் ஓர் இஸ்லாம் நாட்டை அமைக்க விரும்பியது. மத விவகாரங்களில் மிகுந்த தீவிர நோக்கமில்லாத இஸ்லாம் மன்றத்தின் உறுப்பினர்களும், கிராம ஆசிரியர்களும் இக்கட்சியில் சேர்ந்தார்கள். மக்களைக் கட்டுப்படுத்தவும் இந்தோனேசியாவைப் பாதுகாக்கவும் இக்கட்சியை ஜப்பானியர்கள் பயன்படுத்தினார்கள்.

ஜப்பானியர்கள் மூன்றரை ஆண்டுகள் ஆட்சிபுரிந்தபோது தேசிய உணர்ச்சி வளரத்தொடங்கியது. ஆனால், இது ஒரு சீராயிராத இயக்கமாய் விளங்கியது. ஜப்பானிய இராணுவ ஆட்சியின்போது இந்தோனேசியாவை மூன்று பிரிவுகளாகப் பிரித்தார்கள். இம்மூன்று பகுதிகளும் ஒன்றோடு ஒன்று தொடர் பில்லாமல் நிருவகிக்கப்பட்டன. ஜாவாவை ஒரு ஜப்பானியப்படை ஆண்டுவந்தது. சைகானில் அமைத்திருந்த ஜப்பானியத் தென்கிழக்கு ஆசியப் படையின் தலைமை அலுவலகத்திற்குப் பதிலளிப்பது இப் படையின் கடைமையாயிருந்த போதிலும் இதற்குப் பலவகையான தன்னாட்சி உரிமைகள் இருந்தன. இந்தோனேசியத் தேசிய இயக்கம் வளருவதற்கு இது பல வாய்ப்புரிமைகள் கொடுத்தது. மற்றொரு ஜப்பானியப் படைவீரர் களது ஆட்சியின்கீழ்ச் சுமத்திரா இருந்தது. இதுவும் சைகானில் உள்ள தலைமை அலுவலகத்திற்குப் பதிலளிக்கக் கடமைப் பட்டிருந்தது. ஆனால், தேசிய இயக்கம் வளருவதற்கு இது அதிக வாய்ப்புக் கொடுக்கவில்லை. செலிபிஸ், போர்னியோ, மோலுகாஸ், கீழைச்சுன்தா நாடு முதலியவை ஜப்பானியக் கப்பற்படைப் பிரிவின் ஆட்சியின்கீழ் இருந்தன. இப் படையின் தலைமை அலுவலகம் மகஸாரில் (Macassar) இருந்தது. இந்தோனேசியத் தேசிய வாதிகளைக் கடுமையாகத் தண்டித்து அடக்கி ஆண்டு கொண்டிருந்தது. டச்சுக்காரர்கள் போலவே இதுவும் இந்தோ னேசியச் சுதந்திர வீரர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை.

டச்சுக்காரர்கள் கொடுத்த சுதந்திரத்தைவிட இன்னும் மிகுந்த சுதந்திரத்தை ஜாவாவில் வசித்த இந்தோனேசியத் தேசியவாதி கள் பெற்றார்கள். பல ஆண்டுகளாக நாடுகடத்தப்பட்ட இந்தோ னேசியத் தேசியத் தலைவர்களுக்குச் சுதந்திரமாக ஜாவாவில் நடமாட உரிமை கிடைத்தது. இந்தோனேசிய மக்களுடன் தொடர்புகொள்ள அவர்களில் சிலருக்கு உரிமை கொடுக்கப்பட்டது. ஜப்பானுடைய போர்த்தொடர்பான பொருளாதாரத் தேவைகளைப்

பெருக்குவதற்காகப் பொதுவாக, வன்முறையில் தொழிலாளர்களைத் திரட்டவும், விவசாயிகளை அரிசி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்காகவும் இந்தோனேசியர்களுக்குப் பல உரிமைகளை ஜப்பான் கொடுத்தது. பொறுப்புடன் வேலைசெய்யவந்த இந்தோனேசியத் தேசிய இயக்கத் தலைவர்களுக்கு முக்கியமாகச் சுகர்னோவிற்கு— கிராமங்களில் சுற்றித் திரிந்து உழவர்களுடன் பேசவும், வானொலி மூலம் பேசவும் உரிமைகளைக் கொடுத்தது. இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு இந்தோனேசியத் தேசியத் தலைவர்கள் தேசிய உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பினார்கள்.

கி.பி. 1943ஆம் ஆண்டின் இளவேனில் காலத்தில் புதேரா (Putera) என்ற கைப்பாவை அரசியல் கட்சியை ஜப்பான் அமைத்தது. இக் கட்சியின் தலைவர்களாக ஆவதற்குச் சுகர்னோவையும், ஹட்டாவையும் இணங்கவைத்தது. இதற்கு இணையாக ஓர் இரகசிய இயக்கத்தை ஷாஃரீர் (Sharir) தொடங்கினார். வாய்ப்பிருந்தால் இவ்விரு இயக்கங்களும் இந்தோனேசியச் சுதந்திரத்திற்காக ஒத்துழைக்கலாம் என இவர்கள் கருதினார்கள்.

எதிரிகளின் தாக்குதலைத் தடுப்பதற்காகப் பேட்டா (Peta) என்ற துணைப் படையையும் ஜப்பான் உருவாக்கியது. ஜப்பானியர்கள் இப்படை வீரர்களுக்குப் பயிற்சியளித்தார்கள்; ஆனால் இவர்களுக்கு ஆயுதங்கள் கொடுக்க முன்வரவில்லை. இப்படைகளின் தலைவர்களாக இந்தோனேசியர்களே நியமிக்கப்பட்டார்கள். இத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கச் சுகர்னோவிற்கு உரிமை கொடுக்கப் பட்டது. ஒன்றரை ஆண்டுகளுக்குள் 120,000 படை வீரர்கள் பேட்டாவில் சேர்ந்தார்கள். இதுவே இந்தோனேசியத் தேசியப் புரட்சிப் படையாக மாறியது. ஜப்பானியர்களினால் அமைக்கப் பட்ட படை யென்றாலும் ஜப்பானியர்களுக்கு எதிராகவே உலகப் போரின் இறுதியில் இது போரிட்டது. அதற்குப் பிறகு ஆங்கிலேய டச்சுப்படைகளை எதிர்த்தது.

புதேராவிற்குப் பொதுமக்களின் ஆதரவு கிடைக்கவில்லை. ஜப்பானியர்கள் இக் கட்சியை ஐயுற்றதால் கி.பி. 1943ஆம் ஆண்டின் இறுதியில் இக்கட்சியையும் இஸ்லாம் மன்றத்தையும் கலைத்தார்கள். கி.பி. 1944ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் அரசுப் பற்றுடைய மக்கள் மன்றம் (Peoples Loyalty Organisation) ஒன்றை ஜப்பான் அமைத்தது. சுகர்னோவையும், ஹட்டாவையும் இதன் தலைவர்களாக நியமித்தது. ஆனால் கி.பி. 1945ஆம் ஆண்டில்தான் இம் மன்றம் மலருவதற்கு வாய்ப்புக் கிடைத்தது.

ஓர் அனைத்து இந்தோனேசியத் தேசிய மொழி வளருவதற்கு ஜப்பான் வாய்ப்புக் கொடுத்தது. இம் மொழியை வளர்ப்பதற்காக இந்தோனேசியர்கள் முயற்சியெடுத்தார்கள். டச்சு மொழியின் மீதும், அரபு மொழியின் கையெழுத்து முறை மீதும் ஜப்பானியர்கள் தடை விதித்தார்கள். ஆனால் பள்ளிக்கூடங்களிலும், நிர்வாக விவகாரங்கள் பற்றி ஜப்பான் மொழியையே பயன்படுத்த வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். இந்தோனேசியர்கள் இதைத் தீவிரமாக எதிர்த்தார்கள். ஆகையால், எல்லா முக்கிய விவகாரங்களிலும் இந்தோனேசியன் தேசியமொழியே பயன் படுத்தப்பட வேண்டும் என்ற சட்டத்தை ஜப்பானியர்கள் கொண்டு வந்தார்கள். ஆகையால், நாட்டின் தேசிய இயக்கத்திற்கு மிக்க அவசியமான ஒரு தேசிய மொழி வளர்வதற்கு வேண்டிய அடிக்கல் நாட்டப்பட்டது.

ஜப்பானியர்கள் இந்தோனேசியாவிற்குப் படையெடுத்து வந்தபோது இராணுவ அலுவலகப் பணியாளர்களைக் கூட்டி வரவில்லை. மேலும் டச்சுக்காரர்களைப் பாதுகாப்புக் காவலில் வைத்தனர். ஆகையால் டச்சுக்காரர்கள் செய்த நிர்வாகம், தொழில் ஆகிய துறைகளைச் சார்ந்த வேலைகளை இந்தோனேசியர் களுக்குக் கொடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இரண்டா வது உலகப் போரின் இறுதிவரை மிக உயர்ந்த வேலைகள் ஜப்பானி யர்களுக்கே கொடுக்கப்பட்டன. கீழ்நிலையில் வேலை செய்து வந்த இந்தோனேசியர்களுக்கு இன்னும் உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டன. இவ் வேலைகளை இந்தோனேசியர்கள் திறமை யுடன் செய்ததால் அவர்களுக்கே இது வியப்பை விளைவித்தது. ஆகையால் டச்சுக்காரர்களால்தாம் சில வேலைகள் செய்ய முடியும் என்ற எண்ணம் கலைந்ததால், தங்கள் திறமைமேல் இந்தோ னேசியர்களுக்கு நன்னம்பிக்கை பிறந்தது. ஆகையால், தங்க ளால் இந்தோனேசியாவை ஆட்சி புரிய முடியும் என்ற தன்னம்பிக்கை இந்தோனேசியர்களிடையே வளர்ந்தது. ஒரு வேளை டச்சுக்காரர்கள் ஆட்சிக்குத் திரும்பி வந்தால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட உயர்ந்த உத்தியோகங்கள் பறிபோய்விடுமோ என்ற அச்சம் இருந்ததால் இவர்கள் சுதந்திரத்தை விரும்பினார்கள். ஆகையால் டச்சுக்காரர்கள் மீண்டும் வந்தால் அதைத் தீவிரமாக எதிர்ப்பதற்கு இவர்கள் தயாராயிருந்தார்கள்.

உலகப் போரின் இறுதிப் பகுதியில் ஜாவாவை எதிரிகள் தாக்குவார்கள் என ஜப்பானியர்கள் அஞ்சினார்கள். இந்தோ னேசியர்களுக்குச் சுதந்திரமும், உயர் நிர்வாகப் பதவிகளும் கொடுப்பதாக வாக்களித்தால்தான் அவர்களுடைய உதவி

தங்களுக்குக் கிடைக்கும் என ஜப்பானியர்கள் எண்ணினுர்கள். ஆகையால், மிக விரைவில் இந்தோனேசியாவிற்கும் சுதந்திரம் கொடுக்கப்போவதாக ஜப்பானியப் பிரதம மந்திரி கி.பி. 1944ஆம் ஆண்டு அக்டோபர் தொடக்கத்தில் அறிவித்தார். ஜாவாவில் தேசியத் தலைவர்களின் மேல் இருந்த கண்காணிப்பு மிகவும் குறைந்தது. மக்களுடன் கலந்து பழக இன்னும் அதிக சுதந்திரம் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. இந்தோனேசியர்களுக்குச் சுயாட்சி கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. உயர் நிர்வாகப் பதவிகளும் மிக அதிக அளவில் இந்தோனேசியர்களுக்குக் கொடுக்கப்பட்டன. (ஆனல் இத்தகைய மாறுதல்கள் ஜாவாவில் தான் அதிகமாக ஏற்பட்டன. சுமத்திராவிலும் ஓரளவு சுதந்திரம் கொடுக்கப்பட்டது. ஆனல் கப்பற்படை ஆண்டுவந்த பகுதிகளின் சூழ்நிலையில் யாதொரு மாறுதலும் ஏற்படவில்லை.) ஆனல் ஜப்பானியர்கள்தாம் எல்லாப் பதவிகளையும் மேற்பார்வையிட்டார் கள். ஜப்பானுடைய அதிகாரமில்லாமல் ஒன்றும் செய்யக்கூடாது. ஆனல் இந்தோனேசிய மக்களிடையே இம்மாறுதல்களால் ஒரு புதிய தன்னம்பிக்கை பிறந்தது. டச்சுக்காரர்கள் ஏற்றிருந்த பதவியைத் தாங்களும் திறமையுடன் ஏற்கலாம் என்ற துணிவு பிறந்து மலர்ந்தது.

கி.பி. 1945ஆம் ஆண்டு மார்ச் மாதம் 60 இந்தோனேசியர்கள் உள்ள ஒரு குழுவை அமைத்தார்கள். இக் குழுவில் உள்ள பெரும்பான்மையோர் புகழ்வாய்ந்தவர்கள். பொதுவாக இவர்கள் ஜாவா, மதுரா ஆகியவற்றில் இருந்த சமூகப்பிரிவுகளைச் சார்ந்தவர் கள். ஏழு ஜப்பானியர்களுடன் ஒத்துழைத்து இக் குழு சுதந்திர இந்தோனேசியத் திட்டம் ஒன்றை வரையறுக்க வேண்டும். இந்தோனேசியர்களே இத்திட்டத்தை வகுக்க முக்கியப் பங்கு எடுத்துக்கொண்டார்கள். ஜப்பானியர்கள் மெதுவாகவே கலந்து கொண்டார்கள். சுகர்னேதான் முக்கியப் பங்கு எடுத்துக் கொண்டார். இஸ்லாம் மதம் சார்ந்த நாட்டை உருவாக்க வேண்டும் எனப் பல முஸ்லிம் தலைவர்கள் விரும்பினர்கள். பல முஸ்லிம் அல்லாதவர்களும் இந்தோனேசியாவில் வசிக்கிருர்கள் என்றும், இந்தோனேசியாவின் பெரும்பான்மையான பகுதிகளில் மத வெறி கிடையாது என்றும் காரணம் காட்டி இவர் இஸ்லாமியத் தலைவர்களின் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியில் சுகர்னேவே வெற்றி பெற்ருர். இந்தோனேசிய வாய்ப்புள்ள எல்லா மக்களையும் மன நிறைவு செய்வதற்காக இவர் ஐந்து கொள்கைகள் அடங்கிய பஞ்சசீலம் (Pantjasila) என்ற திட்டத்தை இந்தோனேசிய மக்களுக்குக் கொடுத்தார். ஆனல் இதைப் பல முஸ்லிம் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள்,

பஞ்சசீலக் கொள்கைகள் பின்வருமாறு: (1) நாட்டு விடுதலை யுரிமை, நாட்டுப் பற்றுக் கோட்பாடுகள் (Nationalism), (2) அனைத்து நாட்டுத் தொடர்பு கொள்கை அல்லது மனித இனநலப் பற்று, இனப் பொதுச்சமய அமைதிக் கொள்கைகள் (Internationalism or humunitarianism), (3) பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் அமைப்பு (Representative Government), (4) சமூக உரிமைகளை நீதி வழியில் (Social justice) பாதுகாத்தல், (5) கடவுள் மேல் நம்பிக்கை (belief in God). சுமத்திராவின் வட மூலையிலிருந்து பாபுவா (Papua) வரை பரவியிருக்கும் நாடே இந்தோனேசியா எனக் கூறினர். ஆனால் இதனால் அளவு மீறிக் குறுகிய நாட்டுப் பற்றுடையவர்களாக இருக்கக்கூடாது; மற்ற நாட்டு மக்களுடன் கூடி மனித இனநலப் பற்றையும், அமைதிக் கொள்கைகளையும் பரப்ப வேண்டும். இஸ்லாமின் கொள்கையான கலந்து பேசுதல் பொதுமக்களால் தேர்ந்தெடுத்கப்பட்ட அரசியல் அமைப்பில் அடங்கியிருக்கிறது. இத்தகைய அமைப்பில் இஸ்லாமிய அரசியல் அமைப்பு ஏற்படுத்துவதற்கும் மற்ற மதங்களைப் பின் பற்றுவர்கள் தங்களுடைய கொள்கைகளை முன்னேற்றுவதற்கும் அதிக வாய்ப்பு இருக்கிறது. சமூக உரிமைகளைப் பாதுகாக்க முடிய வில்லையென்றால் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கு ஆட்சியமைக்கும் தகுதி கிடையாது. அமெரிக்காவிலே அரசியல் விவகாரங்களில் சம உரிமை இருந்தாலும், பொருளாதார விவகாரங்களில் சம உரிமையும் வாய்ப்பும் (Economic Democracy) இல்லை. ஆகையால், இந்தோனேசியர்களுக்கு மேற்கு நாட்டவர்களின் மக்களாட்சி முறை தேவையில்லை. அரசியல்—பொருளாதார மக்களாட்சி முறை (Palitico-Economic Democracy) இந்தோனேசியாவிற்குத் தேவை. மேற்கூறியவாறு சுகர்னோ பேசினர்.

கி பி. 1945ஆம் ஆண்டு ஜூலை இறுதியிலே சுமத்திராவில் ஆட்சிபுரிந்த ஜப்பானியர்களும் இந்தோனேசியச் சுதந்திரத் திட்டத்தை வரையறுக்க ஒரு குழுவை அமைத்தனர். ஆனால் கப்பற்படை ஆட்சி புரிந்த தீவுகளில் இந்தோனேசியர்களுக்கு இத்தகைய வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. கி.பி. 1945ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7ஆம் தேதி அனைத்து இந்தோனேசியச் சுதந்திர ஆக்கக் குழு (All Indonesia Independence Preparatory Committee) ஒன்றைச் சைகானில் உள்ள தலைமை அலுவலகம் அமைத்த பிறகுதான், கப்பற்படை அதிகாரத்திற்குள் அடங்கி நடத்த இந்தோனேசியர்களுக்கு ஜாவாவிற்கு வந்து சுதந்திரத்தைப் பற்றி மற்றத் தலைவர்களுடன் கலந்து பேச உரிமையும் வாய்ப்பும் கிடைத்தன. இக் குழுவின் கூட்டத் தலைவராகச் சுகர்னோவும் துணைக் கூட்டத் தலைவராக ஹட்டாவும் தேர்ந்தெடுக்

கப்பட்டார்கள். பின் வருமாறு இக் குழுவின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்: ஜாவா 11, சுமத்திரா 4, செலிபீஸ் 2, கீழைச்சுண்டா 1, மொலுகாஸ் 1, இந்தோனேசியச் சீனர்கள் 1.

புரட்சி முயற்சிகள்

ஜப்பான் அடைக்கலம் புகுந்தவுடன் ஜப்பானிய கொடுங்கோலாட்சி மறைந்தது. இந்தோனேசியத் தேசிய இயக்கம் வளர்வதற்கு எதிராக இருந்த இடையூறுகள் ஒழிந்தன. இந்தோனேசியப் பேட்டாப் படை வீரர்கள் ஜப்பானியர்களையும் டச்சுக்காரர்களையும் பகைவர்களாகக் கருதினுர்கள். வேண்டிய படைக்கலன்களுடனும் போர்க்கருவிகளுடனும் அவர்களை எதிர்க்கத் தயாராக இருந்தனர். இதுகாறும் உள்ள நிலையே நீடித்திருக்க வேண்டிய முயற்சிகளை ஜாவாவில் உள்ள ஜப்பானியத் தளபதி எடுத்தார். டச்சுக்காரர்கள் திரும்பவும் வந்து இந்தோனேசியாவைக் கைப்பற்றுவார்களோ என அஞ்சிக்கொண்டிருந்த சுகர்னோ, ஹட்டா ஆகியோர் ஜப்பானியர்களை எதிர்த்த இரகசிய இயக்கங்களினுல் தூண்டப்பட்டு, கி.பி. 1945ஆம் ஆண்டு ஆகஸ்டு 17ஆம் நாள் இந்தோனேசியா சுதந்திரம் அடைந்துவிட்டது என முடிவாக அறிவித்தார்கள்.

ஜப்பானியர்கள் ஆயுதங்களை இந்தோனேசியர்கள் கைப்பற்றியதைச் சில ஜப்பானிய இராணுவத் தலைவர்கள் எதிர்க்கவில்லை; ஆனுல் மற்றும் சிலர் இதைத் தடுக்க முயன்றனர். சில முக்கிய நகரங்களை இந்தோனேசியப் படைகள் கைப்பற்ற முயன்றதால் ஜப்பானியர்களுக்கும் இந்தோனேசியர்களுக்கும் இடையே போர் மூண்டது; இந்தோனேசியப் புரட்சியின் முதல்நிலை தொடங்கியது.

ஜாவாவில் மூண்ட இப்போர் மற்றத் தீவுகளில் உள்ள இந்தோனேசியர்களுக்கு ஓர் உதாரணமாய் விளங்கியது. சுமத்திராவிலும் இந்தோனேசியர்களும் ஜப்பானியர்களும் சண்டையிடத் தொடங்கினுர்கள். ஆனுல் போர்னியோவிலும், செலிபிஸிலும், கீழைச்சுண்டாவிலும், மொலுகாஸிலும் இவ்வகையான சூழ்நிலை ஏற்படவில்லை. இத்தீவுகளில் இந்தோனேசியர்கள் தேசிய மன்றங்களை அமைக்கவோ படைதிரட்டவோ ஜப்பானியர்கள் வாய்ப்பு கொடுக்காததனுல் ஜப்பானியர்களால் அவர்களை எளிதில் அடக்கி ஆள முடிந்தது. ஜப்பானுடைய ஆதிக்கத்தை நீக்கிய ஆஸ்திரேலியா ஆங்கிலப் படை வீரர்களுக்கும் எதிர்ப்பு இல்லாமல் இருந்தது. ஆகையால் இத் தீவுகளில் பொதுத்துறையைச் சார்ந்த டச்சு நிருவாகத்தை ஆஸ்திரேலியர்கள் திரும்பவும் அமைத்தார்கள்.

ஆனால், ஜாவாவிலும் சுமத்திராவிலும் சூழ்நிலை வேறுவிதமாயிருந்தது. இந்தோனேசியச் சுதந்திரம் பற்றி அறிக்கைவிட்ட ஆறு வாரங்களுக்குப் பிறகு ஆங்கிலேயப் படை ஜாவாவிற்குள் நுழைந்தது. ஆற்றல்வாய்ந்த படை குடியரசில் இருப்பதைக்கண்டு ஆங்கிலேயர்கள் வியப்பு அடைந்தார்கள். இக் குடியரசிற்கு ஜாவாவிலும் சுமத்திராவிலும் பொதுமக்களுடைய பேராதரவு இருப்பதையும் கண்டார்கள். ஆங்கிலேயர்கள் வந்து ஜப்பானியர்களை இந்தோனேசியாவிலிருந்து வெளியேற்றுவதை இந்தோனேசியர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். ஆனால் திரும்பவும் டச்சு அரசாங்கத்தை ஆங்கிலேயர்கள் இந்தோனேசியாவில் கொண்டுவருவதை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஆகையால் கடும் போர் தொடங்கியது. தங்களிடம் இருக்கும் படை வீரர்களை வைத்துக்கொண்டு இந்தோனேசியர்களை அடக்க முடியாது என ஆங்கிலேயர்கள் புரிந்துகொண்டார்கள். தங்களுடைய கொள்கைகளையும் முறைகளையும் மாற்றிக்கொண்டு இந்தோனேசியத் தேசியத் தலைவர்களுடன் ஒத்துழைத்தால்தான் இந்தோனேசியாவில் ஆள முடியும் என அறிந்து கொண்டார்கள். ஆங்கிலேயர்களின் இராணுவத் திட்டங்களுக்கு இலண்டனில் ஆட்சி புரிந்த ஆங்கிலேய அரசாங்கம் அனுமதி கொடுக்க மறுத்தது. ஆகையால் இந்தோனேசியக் குடியரசு சட்டப்படி எவ்வாறாயினும் நடப்பின்படி உண்மையான (defacto) அரசாங்கம் என ஆங்கிலேயர்கள் ஏற்றுக்கொண்டனர். ஆங்கிலேயர்கள் வயமிருந்த துறைமுகப்பட்டினங்களில் அவர்களது அனுமதியுடன் டச்சுப்படை நுழையத் தொடங்கியது. ஆனால், டச்சு அரசாங்கம் இந்தோனேசியக் குடியரசுடன் பேச்சு நடத்தி ஒரு சமரச இணக்கத்தைத் தயார்செய்ய வேண்டும் என ஆங்கிலேயர்கள் டச்சு அரசாங்கத்திடம் கூறினார்கள். மேலும், கி.பி. 1946ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் தாங்கள் இந்தோனேசியாவை விட்டு வெளியேறிவிடுவதாகவும் டச்சு அரசாங்கத்திடம் ஆங்கிலேயர்கள் கூறினார்கள்.

ஆகையால் கி.பி. 1945ஆம் ஆண்டு நவம்பர் இறுதியில் இந்தோனேசியக் குடியரசுக்கும், டச்சு அரசாங்கத்திற்கும் லிங்கசாதி உடன்படிக்கை (Linggadjatt Agreement) ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கை ஏற்பட்டதால் போர் தவிர்க்கப்படும். இவ்விரு நாடுகளின் தேவை நிறைவு செய்யப்படும் எனப் பலர் கருதினார்கள். இந்த உடன்படிக்கையின்படி இந்தோனேசியாவில் உள்ள டச்சுக்காரர்களின் செல்வமும் பொருளாதார உரிமைகளும் செல்வாக்கும் பாதுகாக்கப்பட்டன; ஜாவா, சுமத்திரா ஆகியவற்றில் உள்ள இந்தோனேசியக் குடியரசு சட்டப்படி எவ்வாறாயினும் நடப்பின்படி

உண்மையான (defacto) அரசாங்கம் என டச்சு அரசாங்கம் ஒப்புக் கொண்டது. இந்த உடன்படிக்கைக்குப் பிறகு எட்டு மாதங்களில் ஓர் அமைதியான சூழ்நிலையேற்பட்டது. இச் சூழ்நிலையைப் பயன் படுத்திக்கொண்டு டச்சு அரசாங்கம் ஜாவா, சுமத்திரா ஆகியவை தவிர மற்றத் தீவுகளிலும் தன்னுடைய அதிகாரத்தை வலுப்படுத் தியது. ஜாவா, சுமத்திரா ஆகிய தீவுகளில் ஆங்கிலேயர்கள் தங்களுக்குத் திரும்பக் கொடுத்த துறைமுகப்பட்டினங்களில் டச்சு அரசாங்கம் படையை வளர்த்து ஆட்சியை வலுப்படுத்தியது. தங்களுடைய ஆட்சியை மீண்டும் இந்தோனேசியாவில் அமைப்ப தற்காக டச்சு அரசாங்கம் இரு வழிகளைக் கையாண்டது. முதலில் தன்னுடைய இராணுவத்தின் மூலம் இந்தோனேசியப் படையை யும் குடியரசையும் அழிக்க முயன்றது; பிரிவு உண்டாக்கி ஆட்சி செய் (divide and rule) என்ற முறையைப் பயன்படுத்தி இந்தோ னேசியக் குடியரசை மற்ற இந்தோனேசிய பகுதிகளிலிருந்து பிரித்துத் தனிப்படுத்தி ஒதுக்க வேண்டும் என்று முயன்றது. இச் சூழ்நிலையை உருவாக்குவதற்காக ஒரு புதிய கூட்டிணைப்பு அரசியல் முறையை (Federal System) உருவாக்கத் திட்டமிட்டது. இக் கூட்டமைப்பில் பதினைந்து டச்சினலப்பட்டனவும், ஆனப்பட்டன வும் ஆகிய நாட்டுப் பகுதிகளுக்கு இந்தோனேசியக் குடியரசைவிட அதிக வாக்குரிமைகள் இருந்ததால் மேம்படு வாக்குகள் பெற்று இந்தோனேசியக் குடியரசைத் தோல்வியுறச் செய்யலாம் என டச்சுக்காரர்கள் நினைத்தார்கள். ஆனால், அவர்கள் இந்தோனேசி யக் குடியரசுடன் போர்புரிந்து அக் குடியரசை அழித்தால்தான் அவர்களுடைய நிலையான ஆட்சியை அமைக்க முடியும். ஆனால், உண்மையில் இது ஒரு பகற்கனவு ஆகியது. அவர்களால் இந்தோனேசியர்களைத் தோற்கடிக்க முடியவில்லை.

லிங்க சாதி உடன்படிக்கையால் உள்ள நடுவர் தீர்ப்பை (arbi- tration) ஏற்றுக்கொள்ளாமல் அதை இந்தோனேசியக் குடியரசு கட்டுமீறி நடந்ததாகக் கி.பி. 1947ஆம் ஆண்டு ஜூலையில் டச்சு அரசாங்கம் தெரிவித்தது. ஆகையால், இந்தோனேசியக் குடியர சின்மேல் படையெடுத்தது. இந்தோனேசியக் குடியரசில் சேர்ந்த ஜாவா, சுமத்திரா ஆகியவற்றில் உள்ள வளமான மாவட்டங்களை டச்சுக்காரர்கள் கைப்பற்றினார்கள். ஆனால் ஐக்கிய நாடுகள் அமைப்பு (United Nations) இதில் தலையிட்டு டச்சுக்காரர்கள் மேலே சென்று படையெடுப்பதைத் தடுத்து, இந்தோனேசியக் குடியரசும் டச்சு அரசாங்கமும் ரென்வில்லி ஒப்பந்தத்தில் (Renville Agreement) கி.பி. 1947ஆம் ஆண்டு ஜனவரியில் கையொப்ப மிடச் செய்தது. இவ் வுடன்படிக்கையின்படி தாங்கள் படை-

யெடுத்துக் கைப்பற்றிய இடங்களிலுள்ள மக்கள் இந்தோனேசியக் குடியரசின் ஆட்சியை வரவேற்கிறார்களா, இல்லையா என டச்சு அரசாங்கம் ஐக்கிய நாடுகள் அமைப்பின் மேற்பார்வையில் மக்களின் வாக்களிப்புத் தீர்ப்பின் (Plebiscte) மூலம் தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால் இத்தகைய வாய்ப்புக் கொடுத்தால் பெரும்பான்மையான மக்கள் இந்தோனேசியக் குடியரசின் ஆட்சியையே ஏற்றுக்கொள்ளும் என்பது திண்ணம்; ஆகையால் டச்சு அரசாங்கம் இவ்விடங்களில் இச் செய்தியைப்பற்றிய பொதுமக்கள் வாக்கைக் கேட்கவில்லை. ஆனால், இதற்கு பதிலாக இவ்விடங்களில் தங்களுக்குக் கைப்பாவையாக இருக்கும் நாடுகளை டச்சு அரசாங்கம் உருவாக்கியது.

ஜாவாவில் தங்களுக்கு மிஞ்சியிருந்த இடங்களில் இந்தோனேசியக் குடியரசு ஆட்சிபுரிந்தது. டச்சுக்காரர்கள் கைப்பற்றிக் கொண்டிருந்த இடங்களிலிருந்து ஒரு மில்லியன் இந்தோனேசிய அகதிகள் உணவுப்பொருள்கள் மிகவும் குறைந்த அளவில் கிடைக்கும் இந்தோனேசியக் குடியரசு பகுதிகளுக்கு ஓடிவந்து அடைக்கலம் புகுந்தார்கள். டச்சு அரசாங்கம் ரென்வில்லி ஒப்பந்தத்தை மீறி நடந்தது. டச்சு அரசாங்கம் முற்றுகையிட்டதனால் நில நீர்வழித் தடை, வாணிகத் தடை, போக்குவரத்துத் தடை ஆகியவையேற்பட்டன. மருந்துகள்கூட இந்தோனேசியக் குடியரசிற்குக் கிடைக்கவில்லை. ஆகையால், இந்தோனேசிய மக்கள் மிகவும் துன்பத்துக்குள்ளாக்கப்பட்டார்கள். ஹாலந்து அரசாங்கம் ரென்வில்லி உடன்படிக்கையின்படி நடக்க அமெரிக்க அரசாங்கமும், ஐரோப்பிய நாடுகளும் நடவடிக்கைகள் எடுக்கும் என்ற நம்பிக்கையையும் இந்தோனேசியக் குடியரசு இழந்தது. குடியரசில் இருக்கும் கம்யூனிஸ்டுகளை ஆதரிக்கும் கட்சி உறுப்பினர்களோடு, செல்வாக்கும் மிகுந்தது. ஸ்டாலின்ஸ்ட் கம்யூனிஸ்டுகள் (Stalinst Communists) சுகர்னோவையும், ஹட்டாவையும் ஆட்சியிலிருந்து தூக்கியெறிவதற்காகத் திட்டங்களை தீட்டினர். ஆனால் திட்டம் போட்டுக் கொண்டிருக்கும்போதே மத்திய ஜாவாவில் உள்ள மாதியுன் (Madiun) பகுதியில் பல கம்யூனிஸ்டுகள் கலகம் செய்யத் தொடங்கினார்கள். கி.பி. 1948ஆம் ஆண்டு செப்டம்பர் இடையிலிருந்து நவம்பர் இடைவரை இவர்களுக்குள் நடந்த போரில் இந்தோனேசியக் குடியரசு வெற்றியடைந்தது; கலகம் அடக்கப்பட்டது.

இது நடந்து ஆறு வாரங்களுக்குப் பிறகு ரென்வில்லி உடன்படிக்கையை மீறி ஹாலந்து, குடியரசின்மேல் படையெடுத்தது. குடியரசின் படைகள் வலிகுன்றியிருந்தபோதிலும் டச்சுப்

படைகளின் எதிர்ப்பைச் சமாளித்தது. இராணுவச் சக்தியின் மூலம் இந்தோனேசியாவை அடக்கி ஓர் அரசியல் முடிவுக்கு வரமுடியாது என 1949ஆம் ஆண்டின் இளவேனிற் காலத்தில் டச்சு அரசாங்கத்துக்குத் தெளிவாகத் தெரிந்தது. மேலும், விடாமல் போர்செய்தால் இந்தோனேசியாவில் உள்ள ஹாலந்தின் 2 மில்லியன் முதலீட்டுக்குத்தான் தீங்கு என டச்சு அரசாங்கத்திற்கு புரிந்தது. ஹாலந்தில் உள்ள டச்சு அரசாங்கத்தின் செல்வமும் இப் போரினால் குறைந்துகொண்டேபோகும் என அஞ்சியது. ஓரிடத்தைக் கைவிட்டுச் செல்லும்போது அங்குள்ள சாதனங்களை எதிரிக்குப் பயன்படாமலிருக்க அழித்துச் செல்லும் கொள்கையை (Scorched carth policy) இந்தோனேசியக் குடியரசு பின்பற்றிய தால் இந்தோனேசியாவில் குடியேறியிருந்த டச்சுக்காரர்களின் நில உடைமைகளும் செல்வாக்கும் மிகவும் பாதிக்கப்பட்டன. இந்தோனேசியாவிற்குச் சுதந்திரம் கொடுக்கவேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கூறிவரும் டச்சு முற்போக்காளர்களோடு டச்சு வணிகர்களும் இக் கொள்கையைச் செயல்படுத்த ஒன்றுசேர்ந்தார் கள். பொதுவாக, உலகத்தில் உள்ள மற்றவர்களும் டச்சு நடவடிக்கைகளை எதிர்த்து இந்தோனேசியக் குடியரசை ஆதரித்தார்கள். இந்தோனேசியத் தேசிய உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு அவர்களுடன் ஓர் ஒப்பந்தத்திற்கு வரும்படி அமெரிக்கக் குடியரசு டச்சு அரசாங்கத்தை வற்புறுத்தியது. கி.பி. 1949ஆம் ஆண்டின் கோடைக் காலத்தின் இறுதியிலே ஹேகில் நடத்த வட்டமேசை மாநாட்டில் (Round Table Conference) இந்தோ னேசியக் குடியரசிற்கும் ஹாலந்துக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படி இந்தோனேசியாவிற்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டது. ஆனால், மேற்கு நியூகினிக்கு (Western New Guinea) டச்சு அரசாங்கம் சுதந்திரம் கொடுக்க மறுத்தது. அடுத்துவரும் ஆண்டும் பேச்சுமூலம் இந்தோனேசியாவும், ஹாலந்தும் இதனுடைய நிலையை நிர்ணயிக்கும் என ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்தோனேசியாவில் உள்ள டச்சுக்காரர்கள், மூல தனத்திற்கும் செல்வாக்கிற்கும் இந்தோனேசியா பாதுகாப்பளிக்கும் என்றும் இவ் வுடன்படிக்கையில் கூறப்பட்டது. இந்தோனேசி யாவில் உள்ள ஹாலந்து அரசாங்கத்திடமிருந்து இந்தோனேசியா 1,130,000,000 கடனை ஏற்றுக்கொண்டது. இக்கடனில் பாதிக்கு மேல் ஹாலந்து அரசாங்கம் இந்தோனேசியத் தேசிய இயக்க போரை அடக்கக் கி. பி. 1945ஆம் ஆண்டுக்குப் பிறகு பயன் படுத்தியது.

சுமத்திரா டச்சு ஆகியவை கைப்பற்றிய அரசாங்கம்

கி. பி. 1947ஆம் ஆண்டு ஜூலை முதல் டச்சுப் படையெடுப்பு வரை, இந்தோனேசியக் குடியரசு ஆட்சி ஜாவா, சுமத்திரா ஆகியவற்றில் முற்றிலும் பரவியிருந்தது. ஆனால், இத் தீவுகளின் சில முக்கியத் துறைமுகங்கள் முதலில் ஆங்கிலேய ஆட்சியின்கீழும், பின்பு டச்சு ஆட்சியின் கீழும் இருந்தன. இந்தோனேசியாவின் மற்றப் பகுதிகளில் டச்சு ஆட்சி எளிதில் பரவியது. போர்னியோ, செலிபெஸ், கீழைச்சுண்டா நாட்டு மக்கள் இந்தோனேசியர்களது குடியரசு ஆட்சியை ஆதரித்ததோடல்லாமல் டச்சு அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சியும் செய்தார்கள். ஆனால், இவர்களின் எதிர்ப்பை டச்சு அரசாங்கம் எளிதில் அடக்கியது. இப்புரட்சியின்போது இந்தோனேசியக் குடியரசின் தலைநகரம் மத்திய ஜாவாவில் உள்ள ஜோக்ஜகார்த்தா, ஜாவாவும், சுமத்திராவும் இதன் ஆட்சிக்குள் வந்தாலும் ஜாவாவுடனேயே இது நெருங்கிய தொடர்புகொண்டிருந்தது. இந்தோனேசிய மக்கள் தொகையில் ஐந்தில் நான்கு பகுதி இவ்விரு தீவுகளில் வசித்தார்கள். ஹாலந்தில் கப்பற்படையும், விமானப்படையும் இவ்விருதீவுகளின் தொடர்பைத் துண்டித்ததால், இத்தீவுகளிடையே மிகச் சிறிய தொடர்பே இருந்தது. கி. பி. 1947ஆம் ஆண்டின் கோடைக்காலத்தில் டச்சின் படையெடுப்புக் காரணமாக ஜாவாவில் பாதிப் பகுதியையும், சுமத்திராவில் கால் பகுதியையும் டச்சுக்காரர்கள் கைப்பற்றினார்கள். ஆகையால், இத் தீவுகளில் இருந்த உள்தொடர்பும் துண்டிக்கப்பட்டது. சுமத்திராவில் உள்ள உயர்நிர்வாகப் பதவிகளின் அதிகாரிகளை மத்திய அரசாங்கமே நியமித்தது. முடிந்த அளவு மத்திய அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டத்தையுமே சுமத்திராக் குடியரசு நிருவாகம் பின்பற்றியது. இருந்தபோதிலும் உண்மையாகக் கூறப்போனால் இவ்விரு தீவுகளிலும் தனியாட்சியே நிலவியிருந்தது. மத்திய அரசாங்கத்திற்கும், சுமத்திராவிற்கும் செலாவணி பற்றிய உறவு கிடையாது. சுமத்திரா அரசாங்கம் தனக்குத் தேவையான செலாவணிகளை அச்சிட்டது. இச்செலாவணி மலாக்கா நீரிணைப்புக் குடியேற்றங்களின் டாலர் செலாவணியின் மதிப்புடன் இணைக்கப்பட்டது. சுமத்திராவில் உள்ள குடியரசின் படைவீரர்கள் தங்கள் பணத்தேவைகளைத் தாங்களே தேடிக்கொள்ளவேண்டிய நிலைமையிருந்ததால் உணவுப் பொருள்களையும் மற்றத் தேவைகளையும் உள்நாட்டு மக்களிடமிருந்தே பெற்றுக்கொண்டார்கள். ஆகையால், இந்தோனேசியப் புரட்சியின்போது சுமத்திராவின் பல பகுதிகளிலே உள்நாட்டு மக்களின்

சுயாட்சி முறையே நிலவிவந்தது. கூடியமட்டும் மத்திய அரசாங்கத்தின் கட்டளைகளையும் நிறைவேற்ற முயன்ருர்கள்.

கி. பி. 1945ஆம் ஆண்டிலிருந்து தாங்கள் ஆண்டுவந்த பகுதிகளிலும், கி.பி. 1947ஆம் ஆண்டின் இடையிலிருந்து தாங்கள் அரசாட்சி புரிந்த பகுதிகளிலும் டச்சு அரசாங்கம் ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்க முயற்சி செய்தது. கி.பி. 1949ஆம் ஆண்டின் தொடக்கம்வரை அவர்கள் இப்பகுதிகளில் 15 'நாடுகளை' (States) அமைத்தார்கள். வெளியுலக மக்களை ஏமாற்றுவதற்காக இந்நாடுகளில் சுயாட்சிமுறை நிலவியிருக்கிறது என்றும், அவைகளை உள்நாட்டு இந்தோனேசியர்களே ஆட்சிபுரிகிருர்கள் என்றும் டச்சு அரசாங்கம் பிரசாரம் செய்தது. ஆனல், உண்மையாகவே இந்நாடுகளை டச்சுக் குடியேற்ற அரசு அடக்கி ஆண்டுவந்தது. கி. பி. 1947ஆம் ஆண்டில் கைப்பற்றிய இடங்களில் அமைத்த நாடுகளில் இந்தோனேசியக் குடியரசின் கொரில்லாப் படைவீரர்கள் ஆக்கிரமிப்பின்கீழ்ப் பல பகுதிகள் இருந்தன. ஆனல், டச்சு ஆட்சி இருந்த மற்றத் தீவுகளில் டச்சு அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பு முழுமையாயிருந்தது. இந்தோனேசியக் குடியரசை ஆதரித்தவர்களைச் சிறையில் அடைத்தது. குடியரசின் ஆட்சி வந்தால் தங்களுடைய சீமானின் செல்வாக்கும், பண்ணை நில உரிமைகளும் பறிபோயிடுமோ என அஞ்சிச் சில இந்தோனேசியர்கள் டச்சு ஆட்சியை இத்தீவுகளில் ஆதரித்தனர். சமயத்திற்கேற்ப நடிப்பவர் சிலரும் டச்சு ஆட்சியை ஆதரித்தனர் தங்களுடைய குடும்பங்களைப் பாதுகாக்க ஊதியம் தேடவேண்டும் என்ற நோக்கத்தினல், பல இந்தோனேசியர்கள் மனத்திற்குள் குடியரசை ஆதரித்தாலும் டச்சு அரசாங்கத்துடன் ஒத்துழைத்தார்கள். தங்களை ஆண்டுவந்தவர்களை வெறுத்ததால், ஜாவா, சுமத்திரா ஆகியவற்றில் சண்டையிடும் மக்கள் தங்கள் சார்பாகவும் இடுகிருர்கள் என்ற மனநிறைவோடு இவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

10. கி.பி. 1945ஆம் ஆண்டுச் சட்டதிட்டமும் பொருளாதாரச் சூழ்நிலையும்

ஜப்பான் அடைக்கலம் அடைவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே கி. பி. 1945ஆம் ஆண்டுச் சட்டதிட்டம் உருவாக்கப்பட்டது. கி. பி. 1945ஆம் ஆண்டு ஆகஸ்டுமாதம் இச்சட்டம் வெளியிடப்பட்டது. இச்சமயத்தில் சுகர்ணே குடியரசுத் தலைவராகவும், ஹட்டா துணைக் குடியரசுத் தலைவராகவும் இருந்தார்கள்.

கி. பி. 1945ஆம் ஆண்டுச் சட்டதிட்டம் பலவகையில் அமெரிக்கக் குடியரசின் சட்டதிட்டம் போல உருவாக்கப் பட்டிருந்தது. குடியரசுத் தலைவர் அதிகாரங்களின் மையமாக விளங்கினர்; தமக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கும் மந்திரி சபையை இவர் நியமனம் செய்யவேண்டும். சட்டம் நிறை வேற்றற்குரிய அதிகாரங்கள் (Executive Power) இவருக்கே கொடுக்கப்பட்டிருந்தன. இவரும், மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பேராண்மைக் கழகமும் (elected congress) சேர்ந்து சட்டம் இயற்றவேண்டும். இதைத்தவிர அறிவுரைகூறும் ஒரு சபையும் (Consultative Assembly) அமைக்கப்படவேண்டும். இச்சபை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கூடவேண்டும் இச்சபையே குடியரசுத் தலைவரையும் துணைக் குடியரசுத் தலைவரையும் தேர்ந் தெடுக்கவேண்டும். இவர்கள் இச்சபைக்குப் பதிலளிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். கி. பி. 1945ஆம் ஆண்டுச் சட்டதிட்டம் தற்பொழுதைக்கான சட்டம் என்பதால் இச்சபைக்கு நிலையான சட்டதிட்டம் ஒன்றை உருவாக்க அதிகாரம் இருந்தது. அரசாங்கத் திட்டங்களையும் இச்சபையே உருவாக்கவேண்டும். உயர் ஆலோசனை மன்றம் ஒன்றை அமைப்பதைப் பற்றியும் இச்சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆலோசனை மன்றத்தின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதைப் பற்றி ஒரு சட்டம் உருவாக்க வேண்டும். இம்மன்றம் குடியரசுத் தலைவருக்கு ஆலோசனையும், தகவல்களும் கொடுக்கவேண்டும், கி.பி. 1955ஆம் ஆண்டுக்கு முன் தேர்தல் நடக்கவேண்டும் எனக் கி.பி. 1945ஆம் ஆண்டுச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. அறிவுரை கூறும் சபையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பேராண்மைக் கழகமும் உருவாக வில்லை. குடியரசுத் தலைவரையும் துணைக் குடியரசுத் தலைவரையும் மேலும் சுதந்திரத்தை ஆயத்தமாக்குகிற குழு ஒன்றையும் கி.பி. 1945ஆம் ஆண்டு ஆகஸ்டு 18ஆம் நாள் அன்று தேர்ந்தெடுத்தது.

கி.பி. 1950ஆம் ஆண்டு ஆகஸ்டு சட்ட திட்டம்

இச் சட்டதிட்டம் கி.பி. 1950ஆம் ஆண்டு ஆகஸ்டில் வெளி யிடப்பட்டது. இச்சட்டம் கி.பி. 1957ஆம் ஆண்டு வரை நடை முறையிலிருந்தது. கி.பி. 1959ஆம் ஆண்டின் இடைக்காலம் வரை இச்சட்டம் நீக்கப்படவில்லை இச் சட்டதிட்டம் குடியரசுத் தலைவரின் பதவியைப்பற்றித் தெளிவாகக் குறிப்பிடவில்லை. புதிய அமைச்சர் அவையை அமைப்பதற்காக ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களை அழைத்து அமைச்சர் அவையை அமைக்கச் சொல்லக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரமிருந்தது. இந்நபர்கள் பரிந்துரை செய்த பிறகு குடியரசுத் தலைவர் பிரதம

மந்திரியை நியமிக்கலாம்; பிரதம மந்திரி இந்நபர்களில் ஒருவராகத் தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது துணைக் குடியரசுத் தலைவரை நியமிக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஆனால், மக்கள் சட்டசபை (House of Representatives) பரிந்துரை செய்த பிறகுதான் குடியரசுத் தலைவருக்கு அவ் அதிகாரம் உண்டு. குடியரசுத் தலைவரையும் துணைக் குடியரசுத் தலைவரையும் மீறி யாரும் நடக்க முடியாது (inviolable) ஆகையால், குடியரசுத் தலைவரும், துணைக்குடியரசுத் தலைவரும் யாரும் குற்றஞ் சாட்டமுடியாத உயர்ந்த நிலையில் இருந்தார்கள். மேலும், இவர்கள் எவருக்கும் பதிலளிக்கக் கடமைப்பட்டவரல்லர். மேலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிருணயசபை (Constituent Assembly) அமைக்கும் வரை இவர்களைப் பதவியிலிருந்து யாரும் நீக்கக்கூடாது. மக்கள் சட்டசபையைக் கலைக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. ஆனால், கலைத்த முப்பது நாட்களுக்குள் இச் சட்டசபையின் உறுப்பினர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்க வேண்டும். துணைக் குடியரசுத் தலைவரைப் பிரதம மந்திரியாக நியமிக்கக் கூடாது. கி.பி. 1950ஆம் ஆண்டில் இச் சட்டதிட்டத்தின்படி சுகர்னோ குடியரசுத் தலைவராகவும், ஹட்டா (Hatta) துணைக் குடியரசுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அரசாங்கக் கொள்கைகளைப்பற்றி அமைச்சர்கள் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இரண்டாவது உலகப்போரின் காரணமாகப் போக்குவரத்து, இணைப்பு வழிகள் (Communication), எண்ணெய்க் கருவிக்கல அமைவுகள் (Oil installations), பண்ணைகளுக்குத் தேவையான சாமான்கள், கரும்பாலைகள், சில தொழிற்சாலைகள் முதலியன மிகவும் பாழடைந்தன. இவற்றை ஒழுங்குபடுத்துவதற்கே இந்தோனேசியாவிற்கு மிகுந்த நிதி தேவையாயிருந்தது. ஆகையால், பொருளாதாரத்தை வளர்க்க ஏற்றுமதியாகும் பொருள்களை இந்தோனேசியா நம்பியிருந்தது. இந்தோனேசியாவிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் பாறை எண்ணெய் 25 விழுக்காடாயிருந்தது. இப்பாறை எண்ணெயில் 70 விழுக்காடு சுமத்திராவில் கிடைத்தது. மலேயாவிற்கு அடுத்தபடியாக இந்தோனேசியாவிலே வெள்ளீயம் அதிகம் கிடைத்தது. சுமத்திராவிற்கு அருகிலுள்ள மூன்று கிழக்கு இந்தோனேசியத் தீவுகளில் வெள்ளீயம் அதிகம் கிடைத்தது. இந்தோனேசியா ஏற்றுமதி செய்யும் பொருள்களின் விலை உலக வாணிபத் தலங்களில் மாறிக் கொண்டே இருந்தது. இக் காரணத்தால் இந்தோனேசியாவில் வளர்ச்சித் திட்டங்கள் வரைய முடியவில்லை.

[illegible]ரியங்களைத் தவிர மற்றப் பகுதிகளில் முதலாளித்துவமே ஓங்கியிருந்தது. ஒரு சில இந்தோனேசியர்களைத் தவிர மற்ற முதலாளிகளெல்லாம் சீனர்களும், டச்சுக்காரர்களுமே ஆவார்கள். இந்தோனேசியாவில் டச்சுக்காரர்கள் ஏறத்தாழ ஒரு மில்லியன் டாலர்கள் மூலதனம் இட்டிருந்தார்கள். இந்தோனேசியாவை ஆட்சிபுரிந்தவர்கள் சோஷியலிஸக் கொள்கைகளைக் கடைப்பிடித்த தாலும், அயல்நாட்டு மூலதனம் இந்தோனேசியாவில் அதிகரிக்கக் கூடாது என்ற கொள்கை கொண்டிருந்ததாலும், வெளி நாட்டினர் மூலதனத்திற்கு ஆபத்தான சூழ்நிலை உருவாகியிருந்தது.

இந்தோனேசியாவில் இந்தோனேசியர்களில் நடுநிலை வகுப்பினர்கள்கூட இல்லை. இந்தோனேசியாவில் குடியேறிய 3 மில்லியன் சீனர்களே செல்வமுள்ள நடுநிலை வகுப்பினராயிருந்தார்கள்.

11. அரசியல் கட்சிகள்

மிகுந்த உயர்படியிலிருந்து கீழ்நோக்கிச் சென்ற தலைவர்களால் தட்டியெழுப்பப்பட்டு அமைத்த கட்சிகளே இந்தோனேசிய அரசியல் கட்சிகள். மாபெரும் மக்கள் இயக்கங்கள் தோன்றித் தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுத்து அமைத்த அரசியல் கட்சிகள் அல்ல இவை. கி.பி. 1955ஆம் ஆண்டில் இந்தோனேசிய தேர்தலைப்பற்றி ஆராய்ச்சி செய்தால், கம்யூனிஸ்டு, சோஷியலிஸ்டுக் கட்சிகளைத்தவிர, மற்ற இந்தோனேசியக் கட்சிகள் அமைப்பு முறையையும், நடத்தையையும் மேலை நாட்டுக் குடியரசுக் கட்சிகள் கொண்டு இயங்கியதைப்போல் இயங்கவில்லை எனத் தெரிகிறது. உட்பகுதிகளில் புகழ்பெற்றுள்ள செல்வாக்குகள் உள்ள தனிமனிதர்கள் மூலம்—பொதுவாக மாவட்ட அதிகாரிகள், கிராமத் தலைவர்கள், மதப்பரப்பாளர் மூலம்—தங்கள் கட்சிகளுக்கு ஆதரவு தேடின இந்தோனேசிய அரசியல் கட்சிகள். உட்பகுதிகளில் உள்ள தலைவர்களைத் தங்கள் கட்சியில் சேர்ப்பது, தங்கள் கட்சிகளைத் தேசியக் கட்சிகளாக அமைக்க முயற்சி எடுப்பது, மக்களை அரசியலில் ஈடுபடச்செய்வது இவைகளே நாட்டில் புகழுடன் வாழ்ந்த தேசியக் கட்சித் தலைவர்கள் செய்த தொண்டுகள். தேசியத் தேர்தல் சமயத்தின் போதுகூட நாட்டில் செல்வாக்குள்ள படையையும் (Army) சில முக்கியப் பிரதேசத் தலைவர்களையும் பெரும்பான்மையான உயர் நிலைக் கல்வியும் நடுநிலைக் கல்வியும் பெற்ற மாணவர்களையும் தங்கள் கட்சிகள் முன்னேறுவதற்காக இந்தோனேசியக் கட்சிகள் உபயோகிக்கவில்லை.

கி.பி. 1962ஆம் ஆண்டுக்குமுன் முஸ்லிம் மஸ்சூமிக் (Masjumi party) கட்சியே இந்தோனேசியாவின் மிகப் பெரிய அரசியல் கட்சி. பிறகு நக்தாதுல் உலாமா (Nahdatul Ulama) இக்கட்சியை விட்டு வெளியேறியதால் இக்கட்சி இரண்டாம் இடத்தை அடைந்தது. 236 உறுப்பினர்கள் உள்ள, தேர்தலுக்கு முன் இருந்த நாடாளுமன்றத்தில், நக்தாதுல் உலாமா மஸ்சூமிக் கட்சியை விட்டு வெளியேறியதால் 52 உறுப்பினர்களைக் கொண்டதாக ஆயிற்று இருப்பினும் மற்றக் கட்சிகளைவிட இக்கட்சிக்கே இரண்டு உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் அதிகமாயிருந்தனர். கி. பி. 1955ஆம் ஆண்டுத் தேர்தலின் போது இக்கட்சிக்கு 79,03,886 (21 விழுக்காடு) வாக்குகளும், 57 நாடாளுமன்ற இடங்களும் கிடைத்ததால் இக்கட்சி இரண்டாம் இடத்தைப் பெற்றது. ஜாவாவைத் தவிர மற்றத் தீவுகளில் இக்கட்சிக்கு 50 விழுக்காட்டிற்குமேல் வாக்குகள் கிடைத்தன. பெரும்பான்மையான வாக்குகள் சுமத்திராவிலும் ஜாவாவிலும் கிடைத்தன. மேற்கு ஜாவா, ஜாகர்த்தாவில் 25 விழுக்காட்டிற்குமேல் வாக்குகளும், கிழக்கு மத்திய ஜாவாவில் 25 விழுக்காடு வாக்குகளும் இக்கட்சி பெற்றது. இந்தோனேசியா முழுவதும் நோக்கினுல் இக்கட்சிக்கே மற்றக் கட்சிகளைவிட வாக்காளர்களின் ஆதரவு அதிகமாக இருந்தது. பதினைந்தில் பத்து[1] வாக்காளர்கள்

---

[1]கம்யூனிஸ்டு, நக்தாதுல் உலாமா, மஸ்சூமி ஆகிய தேசியக் கட்சிகளைத் தவிர, பல சிறு கட்சிகளும் இருந்தன. நான்கு தேசியக் கட்சிகளுள் ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததனுல் இச்சிறு கட்சிகளின் ஆதரவைத் தேடின. ஆகையால் இச்சிறு கட்சிகளுக்கும் இந்தோனேசிய அரசாங்கத்தில் பங்கு கிடைத்தது. இச்சிறு கட்சிகளுக்குள் மிகப் பெரிய கட்சி சாரிகட் இஸ்லாம் இந்தோனேசியக் கட்சி (P.S.I.I.—Partai Sarekat Islam Indonesia) கி.பி. 1955ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப்பிறகு இக்கட்சிகளுக்குள் மிகப்பெரிய கட்சி கிறிஸ்துவக்கட்சி (Christian party). இதற்கு 1 மில்லியன் வாக்குகளும் (2·6 விழுக்காடு) 8 இடங்களும் கிடைத்தன. தேர்தலுக்கு முன் நாடாளுமன்றத்தில் இதற்கு 5 இடங்களே இருந்தன. பொதுவாக இதை ஒரு பிரதேசக் கட்சி என்றே அழைக்கலாம். வடசுமத்ராவில் உள்ள லூதரன் படக் மக்களும் வடசெலிமெஸ்ஸில் உள்ள மினஹாஸா பகுதியிலும் தென் மொலுகஸ்ஸிலும் உள்ள பிராட்டஸ்டன்ட் (Protestant) கிறித்தவர்களுமே இக்கட்சிக்குப் பேராதரவு கொடுத்தனர். இதற்கு அடுத்தப்படியாகக் கத்தோலிக்கக் கட்சிக்கு (Catholic party) 770,740 வாக்குகளும் 2%) 6 இடங்களும் கிடைத்தன. தேர்தலுக்கு முன் இதற்கு 8 இடங்கள் நாடாளுமன்றத்தில் இருந்தன. கீழைச் சுண்டாவின் கிழக்குப் பகுதிகளில்தான் இதற்குப் பேராதரவு; 5 இடங்களும், 753,191 வாக்குகளும் கிடைத்தன. தேர்தலுக்கு முன் இக்கட்சி 14 இடங்கள் பெற்றிருந்தது. இக்கட்சி சிறியதாயிருந்தபோதிலும், சுதான்ஷாஃரீர் போன்ற இக்கட்சியின் தலைவர்களுக்கு நாடு முழுவதும் புகழ் இருந்ததால் இக்கட்சிக்கும் இந்தோனேசிய அரசியலிலே சிறப்புத்துவம் கிடைத்தது. தேர்தலுக்குப் பிறகு நாடாளுமன்றத்தில் 27 அரசியல் கட்சிகள் இருந்தன,

மாவட்டத்தில் இதற்கே மிக அதிகமாக வாக்குகள் கிடைத்தன. இக்கட்சிக்குத் தேசத்தின் புகழ் வாய்ந்த முஸ்லிம் தலைவர்களின் ஆதரவு இருந்தது. மாவட்டங்களிலும், கிராமங்களிலும் இருந்த மதத் தலைவர்களின் மூலம் பெரும்பான்மையான விவசாயிகளின் பேராதரவு தேர்தலின்போது இதற்குக் கிடைத்தது. இக்கட்சிக்கு நடுத்தர வகுப்பைச் சார்ந்த வணிகர்களின் ஆதரவும் தங்கள் குடும்பத்திற்குத் தேவையான அளவு நிலத்தைவிடச் சிறிதளவு அதிகமாக வைத்துக்கொண்டிருந்த நிலச்சுவான்தார்களின் ஆதரவு மிகுந்தபோதிலும், இக்கட்சியையும் ஒரு சோஷியலிஸ்டுக் கட்சி என்றே அழைக்கலாம். இந்தோனேசிய மக்களிடம் வேண்டிய அளவு செல்வமும், தேர்ச்சித்திறமும், தொழில் நுட்பத் திறனும் இல்லாததால் இன்னும் பல ஆண்டுகளுக்கு அயல்நாட்டு மூலதனம் தேவைப்படும் என இவர்கள் கருதினார்கள். ஆகையால் இக்கட்சி அயல்நாட்டு மூலதனத்தை வரவேற்றதோடில்லாமல் தேசியமயமாக்கும்(Nationalisation) கொள்கையையும் எதிர்த்தது. இக்கட்சியின் கூட்டத்தலைவன் முகம்மது நாட்சிர் (Mohammed Natsir). தனக்குத் தேவையான அளவு நிருவாக அலுவலர்களுக்கும் தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும் பயிற்சி கொடுக்கும் திறமை வருமுன் தேசியமயமாக்கும் முயற்சிகளில் அரசாங்கம் இறங்கக் கூடாது. ஆகையால் தொடக்கத்தில் பழைய வாணிபத் தலங்களைத் தேசியமயமாக்குவதைவிட மூலதனம் போட்டுப் புதிய தொழில் துறைகளையும், வாணிபத் தலங்களையும் அரசாங்கம் அமைப்பதே நல்லது' எனக் கூறினார்.

நாட்சிர், ஷாப்ருதின் பிராவீரநெகரா (Sjafruddin Praviranegar), முகம்மது ரோம் (Mohammed Roem), புர்ஹானுதின் ஹரஹாப் (Burhanuddin Harahap) மதச்சார்புள்ள சோஷியலிஸ்டு தலைவர்கள் போன்றவர்களே மஸ்சூமிக் கட்சியின் முக்கியத் தலைவர்கள். புதுப்பான்மையான இஸ்லாம் கருத்துகளையும், மேனாட்டுக் கலாசாரத்தைப் பற்றியும் முஸ்லிம் தலைவர்கள் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்று இவர்கள் பிரசாரம் செய்தார்கள். ஆனால், எத்தகைய இஸ்லாமிய நாட்டை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்பதைப்பற்றிக் கட்சிக்குள் விவாதிக்க இவர்களுக்குத் தேவையான அளவு பலம் கிடைக்கவில்லை. ஆகையால், மஸ்சூமிக் கட்சியை முழுமையாகக் கட்டுப்படுத்தி ஆளவேண்டிய சக்தி இவர்களிடம் கிடையாது. நன்றாக இணைக்கப்பட்டு முழுநிறைவான கட்சியாக மஸ்சூமிக் கட்சி ஒருநாளும் இருந்ததில்லை. புதுப்பான்மைக் கருத்துகளைக்கொண்ட முகமதியா, பிற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட நக்தாதுல்

உலாமா (1952 வரை) போன்ற ஏறத்தாழத் தன்னாட்சி செய்த முஸ்லிம் சமூகக் கல்விக்கழகங்களை கூட்டிணைந்து மஸ்ஜுமிக் கட்சியை உருவாக்கி வளர்த்தன.

மஸ்ஜுமியிலுள்ள இரு பெரும் கழகங்களில் ஒரு கழகமான நக்தாதுல் உலாமா கி.பி. 1952ஆம் ஆண்டின் இடையிலே மஸ்ஜுமிக் கட்சியைவிட்டு வெளியேறியது. நக்தாதுல் உலாமா என்றால் இஸ்லாமியச் சமயப் பேரறிஞர்கள் கழகம் (Council of Ulamas) எனப் பொருள். நக்தாதுல் உலாமாவிற்குக் கிழக்கு ஜாவாவிலும், மத்திய ஜாவாவிலும் மிகுந்த செல்வாக்கு இருந்தது. தேர்தலுக்கு முன் நாடாளுமன்றத்தில் இதற்கு எட்டு உறுப்பினர்களே இருந்தார்கள். கி.பி. 1955ஆம் ஆண்டில் 273 தொகுதிகளுக்கு நடந்த தேர்தலில் இக்கட்சிக்கு 6,955,141 வாக்குகளும் (18.4 விழுக்காடு) 45 இடங்களும் கிடைத்தன. இதற்குக் கிடைத்த வாக்குகளில் 86·6 விழுக்காடு வாக்குகள் ஜாவாவில் கிடைத்தன. இவ்வாக்குகளில் நான்கில் மூன்று பங்கு கிழக்கு ஜாவாவிலும், மத்திய ஜாவாவிலும் கிடைத்தது. கிழக்கு ஜாவாவில் உள்ள கிராமப் பகுதிகளிலிருந்துதான் இக்கட்சியின் தலைவர்கள் வந்தார்கள். புதுமைப்பாங்கான அரசியல் எண்ணங்களை இவர்கள் சிறிதளவும் ஏற்றுக்கொள்ளவில்லை. புதுமைப்பாங்கான கொள்கைகளை எதிர்க்கவே கி.பி. 1926ஆம் ஆண்டில் நக்தாதுல் உலாமா தோன்றியது. தொடக்கத்தில் அரசியலில் பங்கு கொள்ளும் நோக்கம் இதற்குக் கிடையாது. பழமை பேணும் இஸ்லாம் கொள்கைகளையே இக்கட்சியினர் ஆதரித்தனர். இந்தோனேசியாவில் இஸ்லாம் வரும் முன் ஜாவாவில் ஆதரிக்கப்பட்ட இந்து, ஜாவானீஸ் பூடக ஆன்மிகச் சார்பான கொள்கைகளுடன் சமரசம் செய்துகொள்ளத் தயாராயிருந்தார்கள் இக்கட்சியின் தலைவர்கள். புது முஸ்லிம் கருத்துகளையே இவர்கள் தீவிரமாக எதிர்த்தார்கள். கிராமப் பகுதிகளிலிருந்து இதன் தலைவர்கள் தோன்றியதால் அவர்களுக்கு மேலை நாட்டினரின் பள்ளிக்கூடங்களில் படிக்க வாய்ப்புக் கிடைக்கவில்லை.

நக்தாதுல் உலாமா வெளியேறிய பிறகுகூட மஸ்ஜுமிக் கட்சியை ஒத்த பகுதிகளாக இணைத்து வளர்க்க முடியவில்லை. பொது அடிப்படையான கருத்துப் பாங்குகள்பற்றியும், தனிப்பட்ட விவகாரங்கள் பற்றியும், இக்கட்சியின் தலைவர்களுக்குள் வேறுபாடுகள் இருந்தன. மத்திய ஜாவாவில் டாக்டர் சுகிமான் வீர்யோசாண்ட் ஜோயோவைப் (Dr. Sukiman Wingo Sandjojo) பின்பற்றுபவர்கள் மிக அதிகமாயிருந்தனர், மற்ற முக்கியத் தலைவர்

களைவிட இவரே சுகர்னோவுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார்.

நக்தாதுல் உலாமாவைவிட, புதுக்கருத்துகளுடைய முஸ்லிம் களுடனே இவருக்குக் கருத்தில் நெருங்கிய தொடர்பு இருந்தது. புரட்சியின்போது கட்சிக்குள் இடையீட்டாளராய்ப் பணிபுரிந்த தால் இவருக்கு அச்சமயத்தில் கட்சிக்குள் செல்வாக்கு இருந்தது. அதனால் புரட்சிக்குப் பிறகு இவருடைய செல்வாக்கைவிட நாட்சி ருடைய செல்வாக்கே மஸ்சூமிக் கட்சிக்குள் ஓங்கியிருந்தது. ஆனாலும், கட்சிக்குள் இவருக்குத் தேவையான அளவு செல்வாக் கிருந்ததால் கட்சிபற்றி இவர் கூறுவதை யாரும் எளிதில் புறக் கணிக்கக் கூடிய நிலைமையில் இல்லை.

கி.பி. 1952ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து மேற்கு ஜாவாக் கிளைப் பகுதியின் கூட்டத்தலைவரான இஸா அன்ஸாரியின் (Isa Anshary) செல்வாக்குக் கட்சிக்குள் அதிகரிக்கத் தொடங் கியது. இஸ்லாம் மதம் பற்றிய விவகாரங்களில் இவர் கோட்பாட் டுறுதியுள்ளவர்; பிடிவாதக்காரர். கட்சி உறுப்பினர்கள் இஸ்லாம் மதம் பற்றிச் சமரசம் செய்வதை இவர் தீவிரமாக எதிர்த்தார். இஸ்லாம் மதத்துடன் இந்து, ஜாவானீஸ் மூடக ஆன்மிகக் கொள்கைகளை நக்தாதுல் உலாமா இணைக்க முயற்சி செய்ததை இஸ்லாம் கோட்பாடுகளுக்கு முரணானது என இவர் எதிர்த்தார். மதச் சார்புடைய சோஷியலிஸ்டு உறுப்பினர்களின் ஆதிக்கத்தை இவரால் உடைத்தெறிய முடியவில்லை யென்றாலும் இவருக்கு மேற்கு ஜாவாவில் உள்ள செல்வாக்கினாலும் சொற்பொழிவுத் திறனினாலும் இவரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பொது மேடைகளில் இஸ்லாம் சமயத்தைத் தீவிரமாகப் பின்பற்றாத இந்தோனேசியர் களை இவர் பழித்தார். இதற்கு மாறாக நாட்சிர் இஸ்லாம் மத மிதவாதியாக இருந்தார். இந்தோனேசிய அரசியல் சூழ்நிலைக்கு ஏற்றவாறு இருந்தது இவருடைய மதக் கொள்கை. ஆனால் இஸா அன்ஸாரியின் செல்வாக்கு மஸ்சூமிக் கட்சிக்குள் தழைத்தோங் கியது. அன்ஸாரியின் அரசியல் போக்கினால் மஸ்சூமியின் செல்வாக்கு மக்களிடையே, முக்கியமாக ஜாவாவில் பாதிக்கப் பட்டது என்பது தேர்தலுக்குப்பின் தெரிந்தது. ஆகையால் தேர்தலுக்குப் பிறகு அன்ஸாரியின் செல்வாக்கோ கட்சிக்குள் மங்கத் தொடங்கியது. ஆனாலும், சுகர்னோவும், இந்தோனேசியத் தேசியக்கட்சியும் நாட்சிரை எதிர்க்கும் முயற்சிகளைக் கைவிட வில்லை. ஆட்சியைக் கைப்பற்ற இவ்விரு பிரிவினர்களுக்குள் தீவிரமான போட்டியேற்பட்டது.

தேர்தலுக்கு முன் இரண்டாவது பெரிய தேசியக் கட்சியாய் விளங்கியது இந்தோனேசியாவின் தேசியக் கட்சி (Indonesian Nationalist Party—PNI). தேர்தலுக்கு முன் நாடாளுமன்றத்தில் இதற்கு 42 இடங்கள் இருந்தன. கி.பி. 1955ஆம் ஆண்டுத் தேர்தலில் இதற்கே மிக அதிகமாக 8,43,653 வாக்குகளும் (22.3 விழுக்காடு)-57 இடங்களும் கிடைத்தன. ஆளும் வகுப்பிடம்தான் (Bureaucracy) இதற்கு மிகுந்த செல்வாக்கிருந்தது. உயர்ந்த படிகளிலும், நடுப் படிகளிலும் உள்ள அதிகாரப்பிரிவினர் இக்கட்சியையே ஆதரித்தனர். பமோங்பிராஜா (Pamong praaja) என்று அழைக்கப்பட்ட மரபு முறைகளை அனுசரிக்கும் இந்தோனேசியாவின் படைத்துறை சாராத அரசு அலுவலர்களும் இக்கட்சியையே ஆதரித்தார்கள். ஜாவாவில்தான் இக் கட்சிக்குப் பேராதரவு கிடைத்தது. தனக்குக் கிடைத்த மொத்த வாக்கிலே 86 விழுக்காடு வாக்குகள் கி.பி. 1955ஆம் ஆண்டு ஜாவாத் தேர்தலில் இக்கட்சிக்குக் கிடைத்தது. 65 விழுக்காடு வாக்குகளுக்குமேல் கிழக்கு ஜாவாவிலும் மத்திய ஜாவாவிலும் மட்டும் கிடைத்தது. இக்கட்சியின் முக்கியமான தலைவர்கள் ஜாவாவிலிருந்து வந்ததால் இக்கட்சி 'ஜாவா மையம் சார்ந்தகட்சி' (Javacentric party) என அழைக்கப்பட்டது.

முரண்பாடற்ற, மாறுத, பரந்த கொள்கைகள் இல்லாமல் இருந்தது இந்தோனேசியன் தேசியக்கட்சி. முக்கியமாகச் சமூக நலன், பொருளாதாரம் முதலியவற்றில் இதற்கு இவ்வகையான கொள்கைகள் கிடையா. பெயரளவிலேயே இக்கட்சியின் உறுப்பினர்கள் முஸ்லிம்கள். மரபுவழாத முஸ்லிம் கொள்கைகளை ஏளனம் செய்தாலும் அவைகளைக் கண்டு அஞ்சினார்கள். 'மர்ஹனிசம்' (Marhanisam) என்ற கருத்தையே இக்கட்சி பிரசாரம் செய்தது. மர்ஹன் என்ற பெயர் இந்தோனேசியாவிலே பொதுவாக எல்லோரும் வைத்துக்கொள்ளும் பெயர். இந்தோனேசியாவில் உள்ள ஏழைகளின் முன்னேற்றத்தைப் பற்றி விவரிக்கும் தத்துவக் கருத்தானதால் இதற்கு 'மர்ஹனிசம்' என்ற பெயர் சூட்டப்பட்டது. இக் கருத்தை உருவாக்கியவர் சுகர்னோ. இவருடன் இக்கட்சி நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. மற்றக் கட்சிகளைவிட இக்கட்சியே இடைவிடாமல், மாறுமல் பஞ்சசீலக் கருத்தைப் பற்றியும் பிரசாரம் செய்தது. இரண்டாவது உலகப் போருக்கு முன் சுகர்னோ தொடங்கிய கட்சியின் பெயரையே இக் கட்சியும் வைத்துக் கொண்டிருந்தது. இக்கட்சியில் உள்ள பெரும்பான்மையான வயதான தலைவர்கள் இரண்டாவது உலகப் போருக்கு முன் இருந்த தேசிய இயக்கத்தின்போது சுகர்னோவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். எல்லா இந்தோனேசியக் கட்சிகளும்

நாட்டுப் பற்றுள்ள தேசியக் கட்சிகள்தாம். ஆனால் இக் கட்சியில் உள்ளவர்கள்தாம் மிக உணர்ச்சி வயப்பட்ட தேசியவாதிகள்; இவர்களில் ஒரு குழுவினர் பகுத்தறிவு வாய்ந்த தேசியவாதிகள்; மற்றொரு குழுவினர் பகுத்தறிவுக்கு மாறான உணர்ச்சிமிக்க தேச பக்தர்கள். உலகப் போருக்கு முன் சுகர்னோவுடன் பழகிய தலைவர் களைப் பின்பற்றும் படைத்துறை சாராத வயது முற்றிய அரசு அலுவலர்களை இக்கட்சியில் உள்ள மூன்றாவது குழுவினர்களாக நாம் கருதலாம். தொடக்கத்தில் இவர்கள் பகுத்தறிவுக்கு மாறான உணர்ச்சி மிக்க தேச பக்தர்களை ஆதரித்தார்கள். ஆனால் 1955ஆம் ஆண்டுத் தேர்தலில் மத்திய ஜாவாவிலும் கிழக்கு ஜாவாவிலும் கம்யூனிஸ்டுகளுக்குக் கிடைத்த பேராதரவைப் பார்த்து இவர்கள் அச்சமடைந்ததால் மேற்சொன்ன குழுவினரைப் பின்பற்றத் தயங்கினார்கள். ஆகையால் சுதந்திரமாகத் தங்கள் எண்ணங்களை வெளியிடத் தொடங்கினார்கள். கி.பி 1957ஆம் ஆண்டுக்குள் படித்த இளைஞர் கட்சி உறுப்பினர்களின் ஆதரவு பகுத்தறிவு வாய்ந்த தேசியவாதிகளுக்குக் கிடைத்தது. ஆனால் அக் குழுவினருக்கோ, மற்ற இரு குழுவினருக்குக் கட்சிக்குள் இருந்த ஆதரவு போன்று ஆதரவு கிடைக்கவில்லை.

இந்தோனேசியக் கம்யூனிஸ்டு கட்சிக்கும் (Indonesian Communist party or PKI) மற்றக் கட்சிகளுக்கும் அதிக வேறுபாடு கள் இருந்தன. மற்றக் கட்சிகளைவிட இக் கட்சி மிகக் கட்டுப் பாடுடன் இயங்கிய கட்சி. கி.பி. 1957ஆம் ஆண்டில் இக்கட்சியே இந்தோனேசியாவில் உள்ள மிகப் பெரிய அரசியல் கட்சி எனப் பலர் கூறினர். செயல் திறமுடைய சுறுசுறுப்பான உறுப்பினர்கள் (active members) மற்றக் கட்சிகளில் இருப்பதைவிட இக் கட்சியிலே மிக அதிகமாக இருந்தார்கள். கி.பி. 1952ஆம் ஆண்டி லிருந்துதான் மிக விரைவாகப் பெரும் தேசியக் கட்சியாக இது வளரத் தொடங்கியது. தேர்தலுக்கு முன் நாடாளுமன்றத்தில் 17 கம்யூனிஸ்டு உறுப்பினர்களே இருந்தார்கள். ஆனால் கி.பி. 1955ஆம் ஆண்டுத் தேர்தலின் போது இக்கட்சியின் செல்வாக்குப் பெருகியது. தேர்தலில் 39 இடங்களும், 6,76,914 வாக்குகளும் இக் கட்சி பெற்றது. ஜாவாவில் இதற்கு மொத்த வாக்குகளிலே 88.6 விழுக்காடு வாக்குகள் கிடைத்தன.

மத்திய ஜாவாவிலும் கிழக்கு ஜாவாவிலும் மட்டும் இதற்கு 75 விழுக்காடு வாக்குகள் கிடைத்தன. தேர்தலுக்குப் பிறகு மற்ற மூன்று தேசியக் கட்சிகளின் அமைப்பு, வலி குன்றித் தளர்ச்சி யடைந்து கொண்டிருந்தபோது கம்யூனிஸ்டுக் கட்சி வலிமை யுடைந்தது. இதைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை

பெருகியது. கி.பி. 1957ஆம் ஆண்டின் இடையில் நடந்த மாகாணத் தேர்தலில் (Provincial elections) கிழக்கு ஜாவாவிலும் மத்திய ஜாவாவிலும் இதற்கே முதலிடம் கிடைத்தது.

புரட்சியின் போதும் முக்கியமாகப் புரட்சி முடிந்து இரண்டாண்டுகளுக்குப்பிறகும் கம்யூனிஸ்டு கட்சியின் அமைப்பில் மிகுந்த குறைபாடுகள் இருந்தன; கட்சி வலி குன்றியிருந்தது. மாதியுன் (Madiun) கலகத்திற்குப் பின் அதற்கு மிகுந்த அவமானம் ஏற்பட்டது. கி.பி. 1952ஆம் ஆண்டுக்குப் பின் தான் தங்கள் கட்சிக்கு ஆதரவு தேடும் முயற்சியில் அக் கட்சியினர் வெற்றி பெறத் தொடங்கினர்.

கி.பி. 1951ஆம் ஆண்டின் தொடக்கம் வரை இக்கட்சியில் உள்ள முதிர்ந்தோர் குழாமிடம் இக் கட்சியின் தலைமையிருந்தது. டான்லிங்ஜி (Tan Ling Djie) என்ற கல்விமான் அக்கட்சியின் தலைவராகப் பணிபுரிந்து வந்தார். ஆனால், கி.பி. 1951ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இக்கட்சியின் தலைமையைத் தி. என். அய்தித் (Aidit) என்பவர் கைப்பற்றினர். மாதியுன் கலகத்தில் பங்கு கொள்ளாததனுல் 27 வயது நிரம்பிய இந்த இளைஞருக்கு அவமானம் ஏற்படவில்லை. தலைமைப் பதவியைக் கைப்பற்றுவதற்குச் சில மாதங்களுக்கு முன்தான் சீனுவிலும், வட வியட்நாமிலும் ஓர் ஆண்டுத் தங்கிவிட்டு இவர் திரும்பி வந்திருந்தார். எம். ஹெச். லுக்மான் (M.H. Lukman), நியோதோ (Njoto) என்ற இரு கல்விமான்கள் இவருக்குத் துணை புரியும் நண்பர்களாக விளங்கினுர்கள். தம்மைப் பதவியிலிருந்து யாராலும் நீக்க முடியாது எனப் புரிந்துகொண்டு கி.பி. 1952ஆம் ஆண்டில் கட்சிக் கொள்கைகளிலே ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தினுர். இவர் கி.பி. 1952ஆம் ஆண்டு வரை கம்யூனிஸ்டுக் கட்சி ஒரு சிறிய உயர்ந்தோர் குழாமின் (Small elite party) கட்சியாக இருந்தது. அய்தித் இதனை மாற்றிக் கம்யூனிஸ்டுக் கட்சியை ஒரு மாபெரும் பொதுமக்கள் கட்சியாக மாற்றினுர். இவர் ஒரு தேசிய முற்போக்குத் திட்டத்தை (National Front Program) உருவாக்கினுர். கம்யூனிஸ்டுக் கட்சி சட்டத்தை மீறி அரசியலில் பங்கு கொள்ளக் கூடாது என்றும், மற்றப் பேரரசு ஆட்சி முறைக் கோட்பாடுகளை எதிர்க்கும் (anti-imporalise) இந்தோனேசியக் கட்சிகளுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அறிவித்தார். இந்தத் திட்டத்தைத் தொடங்கியதால் கம்யூனிஸ்டுக் கட்சி மஸ்ஜுமிக் கட்சியின் மாருத எதிரியாக இருந்தது. மஸ்ஜுமிக் கட்சியையே தன்னுடைய முதல் எதிரியாக இக் கட்சி கருதியது. மஸ்ஜுமியை மற்றக் கட்சிகளிடமிருந்து பிரித்து ஒதுக்கி வைக்கும் நோக்கத்துடன் கம்யூனிஸ்டுக் கட்சி இந்தோ

னேசியன் தேசியக் கட்சியையும் பின்பு நக்தாதுல் உலாமாக் கட்சியையும் ஆதரித்தது. இம் முயற்சியில் இது வெற்றியும் அடைந்தது. நாட்டுப்பற்றை விளக்கிக் கூறுவதும் காட்டுவதும் ஆகிய அடையாளங்களின் மூலம்தான் மக்களின் ஆதரவைத் தேடிக் கொள்ள முடியும் எனப் புரிந்து கொண்டது. ஆகையால், சுகர்ணுவின் பிழைகளை எடுத்துக் காட்டுவதை நிறுத்தியதோடு அல்லாமல், சுகர்ணுவின் பஞ்சசீலக் கருத்தையும் பிரசாரம் செய்யத் தொடங்கியது. சுகர்ணுவின் மேற்கூறிய சுதந்திரத் திட்டத்திற்கும் ஆதரவு கொடுத்தது. இஸ்லாம் அரசியல் அமைப்பினுல் நாட்டிற்குக் கெடுதல் வரும் என்ற கவலையையும் சுகர்ணுவிடமும் இந்தோனேசியத் தேசியக் கட்சியிடமும் உண்டாக்கியது.

கி.பி. 1953ஆம் ஆண்டின் இறுதியிலே அலி மந்திரிசபை அமைக்கப்பட்டவுடன் நாடாளுமன்றத்துள் கம்யூனிஸ்டு உறுப்பினர்களின் நடைமுறையில் அடிப்படை மாற்றம் ஏற்பட்டது; ஆளும் கட்சியுடன் ஒத்துழைக்க முன் வந்தார்கள். நாடாளுமன்றத்திலுள்ள கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் அலி மந்திரிசபைக்கு ஆதரவு காட்டினுர்கள். அலி மந்திரிசபையின் பெரும்பான்மை மிகக் குறைந்த அளவில் இருந்ததால் அச்சபை மற்றச் சிறு கட்சிகளின் ஆதரவைத் தேடியது. ஆகையால் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆதரவை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டது.

கம்யூனிஸ்டு முன்னணி, கம்யூனிஸ்டு ஆதரவு அளித்த சங்கங்கள் ஆகியவற்றின் மூலமாகவும் கம்யூனிஸ்டுக் கட்சி தன் செல்வாக்கைப் பெருக்கியது. சோப்ஸி (Sobsi) அல்லது அனைத்து இந்தோனேசியத் தொழிலாளர்கள் மத்திய மன்றத்தின் மூலம் 1.5 மில்லியன் தொழிலாளர்களின் ஆதரவு கம்யூனிஸ்டுக் கட்சிக்குக் கிடைத்தது. இந்தோனேசியாவில் உள்ள மொத்தத் தொழிலாளர்களில் இவர்களே பாதிக்கு மேல் இருந்தார்கள். இந்தோனேசிய விவசாயிகளின் முன்னணி மூலம் (Indonesian Peaseants Front) பெரும்பான்மையான விவசாயிகளின், முக்கியமான பண்ணைகளில் வேலை செய்பவர்களின் ஆதரவு கம்யூனிஸ்டுக் கட்சிக்குக் கிடைத்தது. பெரும்பான்மையான இவ் விவசாயிகள் பெயரளவுக்குத்தான் முஸ்லிம்கள். ஜாவாவின் சில பகுதிகளிலே இந்தோனேசியத் தேசியக் கட்சிக்கிருந்த ஆதரவைவிட இதற்கே அதிக ஆதரவு இருந்தது. முக்கியமாக இவ்விடங்களில்தான் கி.பி. 1957ஆம் ஆண்டின் மாகாணத் தேர்தலில் இந்தோனேசியத் தேசியக் கட்சியைவிடக் கம்யூனிஸ்டு கட்சிக்கே அதிக அளவு வாக்குகள் கிடைத்தன. கி.பி. 1955ஆம் ஆண்டுத் தேர்தலிலே இந்தோ

னேசியத் தேசியக் கட்சிதான் இவ்விடங்களில் வெற்றியடைந்திருந்தது.

கம்யூனிஸ்டுத் தலைவர்கள் தீவிரமாக வேலை செய்ததால்தான் 1954-1957ஆம் ஆண்டுகளில் கம்யூனிஸ்டு கட்சி விரைவாக வளர வாய்ப்புக் கிடைத்தது. மேலும், மஸ்ஜுமிக் கட்சியைவிடக் கம்யூனிஸ்டு கட்சிமூலம் தங்களுக்கு வரும் தீங்கு குறைவு எனக் குடியரசு தலைவர் சுகர்ணோவும், இந்தோனேசியத் தேசியக் கட்சியின் சில தலைவர்களும் கருதினார்கள். மேலும், வரப்போகும் தேர்தலில் மஸ்ஜுமிக் கட்சியே வெற்றி பெற்று மந்திரிசபையை அமைக்கும் என இவர்கள் கருதினார்கள். ஆகையால், கம்யூனிஸ்டுக் கட்சியைக் கண்டு இவர்கள் அஞ்சவில்லை. இவ் அரசியல் சூழ்நிலையில் கம்யூனிஸ்டுகள் முயற்சியெடுத்துக்கொண்டு மஸ்ஜுமிக் கட்சியைத் தனித்து ஒதுக்குவதற்குச் சாதகமாயிருந்தது.

கம்யூனிஸ்டுகளிடையே இருந்த செல்வமும் அவர்களின் வெற்றிக்கு மற்றொரு காரணமாயிருந்தது. கட்சி உறுப்பினர்கள் செலுத்தும் சந்தா மூலமும், சீன வணிகர்கள் கொடுத்த நன்கொடைகள் மூலமும் இவர்களுக்குச் செல்வம் குவிந்தது.

12. அரசியல் வளர்ச்சி (1950—1957)

கி.பி. 1950ஆம் ஆண்டு செப்டம்பரிலிருந்து கி.பி. 1957ஆம் ஆண்டு ஏப்ரல் வரை இந்தோனேசியாவில் ஆறு நாடாளுமன்ற மந்திரிசபைகள் அமைக்கப்பட்டன. கி.பி. 1950ஆம் ஆண்டு செப்டம்பர் 6ஆம் நாளிலிருந்து 1951ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் நாள் வரை முதல் மந்திரிசபை ஆட்சி புரிந்தது. இம் மந்திரி சபையின் தலைவராக மஸ்ஜுமிக் கட்சியினரான முகம்மது நாட்சிர் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடக்கத்தில் மஸ்ஜுமி - இந்தோனேசியத் தேசியக் கட்சிக் கூட்டணி மந்திரிசபை அமைக்க எடுத்த முயற்சி தோல்வி அடைந்தது. தேசியக் கம்யூனிஸ்டுக் கட்சியைத் தவிர மற்றக் கட்சிகள் சேர்ந்து அமைக்கப்பட்ட கூட்டணியே முதல் மந்தரி சபையை அமைத்தது. குடியரசுத் தலைவர் சுகர்ணோவுக்கும், நாட்சிருக்கும் ஏற்பட்ட மனக் கசப்பினாலும் தேசியக் கட்சி எதிர்த்ததாலும் முதல் மந்திரிசபை கவிழ்ந்தது. மேற்கு இரியன் (மேற்கு நியூகினி) பற்றி நாட்சிர் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவில்லை எனச் சுகர்ணோ கருதினார். மேலும் அரசாங்க அமைப்பில் குடியரசுத் தலைவருக்கு உள்ள அதிகாரங்களைப்பற்றி எழுந்த பிரச்சினைகளும் சுகர்ணோவுக்கும் நாட்சிருக்கும் மனக்கசப்பை உண்டாக்கின.

மஸ்ஜூமி, தேசியக் கட்சி, மற்றும் சில சிறிய கட்சிகள் சேர்ந்த கூட்டணியே இரண்டாவது மந்திரிசபையை அமைத்தன. மஸ்ஜூமிக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் அதிமான் தலைமையிலிருந்த இம் மந்திரிசபைக் கருத்து 1951 ஏப்ரல் 27-லிருந்து கி.பி. 1952 ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம் நாள் வரை நீடித்தது. அயல்நாட்டுக் கொள்கையின் மாறுபாட்டினுல் கவிழ்ந்த மந்திரிசபை இந்த ஒரு மந்திரிசபையே ஆகும். அமெரிக்கக் குடியரசுடன் இந்தோனேசியப் பொருளாதார உதவி நாடி நடத்திய பேச்சின் போதுதான் இம் மந்திரிசபைக்குக் கண்டம் தொடங்கியது. இந்தோனேசியாவும் அமெரிக்காவும் ஓர் அறிக்கையை வெளியிட்டன. இவ்வறிக்கையை இந்தோனேசியா ஒப்புக் கொண்டது. இந்தோனேசியாவின் சுதந்திர அயல்நாட்டுக் கொள்கையைப் புறக்கணித்தற்குச் சமம் என்றும், இந்தோனேசியா அமெரிக்கக் குடியரசுடன் இணைந்துவிட்டது என்றும் எல்லோரும் கருதிக் கண்டனம் தெரிவித்தார்கள். [இவ்வறிக்கையில் கையொப்பமிடாவிட்டால் அமெரிக்க நாட்டின் பொருளுதவி நிறுத்தப்படும் என அமெரிக்கக் குடியரசின் தூதுவர் இந்தோனேசிய அயல்நாட்டு மந்திரி அக்மத் சுபார்ஜோ (Achmad Subarjo) விடம் கூறி அச்சுறுத்தியதாகச் சொல்லப்படுகிறது. மஸ்ஜூமா, தேசியக் கட்சிகள், பெரும்பான்மையான மக்கள் இந்தத் திருப்பத்தை எதிர்த்ததால் இரண்டவது மந்திரிசபையும் கவிழ்ந்தது.

தேசியக் கட்சித் தலைவரான விலோபோ (Wilopo) தலைமையில் மஸ்ஜூமி, சோஷியலிஸ்டு, கிறிஸ்டியன், கத்தோலிக்கக் கட்சிகளின் கூட்டணி மந்திரிசபை மூன்ருவது மந்திரி சபையாக அமைக்கப்பட்டது. இம் மந்திரிசபை கி.பி. 1952ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3ஆம் நாளிலிருந்து 1953ஆம் ஆண்டு ஆகஸ்டு 1ஆம் நாள் வரை ஆட்சி புரிந்தது. இராணுவப் படையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பற்றிக் குடியரசுத் தலைவர் சுகர்ணோவுக்கும் விலோபா மந்திரிசபைக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. மேலும், குறைந்த படிப்புப் படித்துள்ள இராணுவப் படை வீரர்களை இராணுவப் படையிலிருந்து இம் மந்திரிசபை நீக்கியதால் இராணுவ அதிகாரிகளிடையே தகராறு ஏறபட்டது. இப் படை வீரர்களை நீக்குவதை தடுப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களும், தேசியக் கட்சியின் முதிய தலைவர்களும், சுகர்ணோவும் முயற்சி செய்தார்கள். இதனுல் சினமடைந்த சில இராணுவத் தலைவர்கள் ஒரு திடீர் அரசியல் புரட்சி (அக்டோபர் 17) செய்தார்கள்; ஆனுல் தோல்வியுற்ருர்கள். உண்மையாக இப் புரட்சி சுகர்ணோவிற்கு எதிராகச் செய்த புரட்சியே ஆகும்; நாடாளுமன்றத்திற்கு எதிராகச் செய்த புரட்சி என்று கூற முடியாது.

இராணுவப் படைக்குள் இருந்த கருத்து வேறுபாட்டினாலும், சுகர்ணோவும் தேசியக் கட்சியின் முதிய தலைவர்களும் இடைவிடாமல் இத்தகராறுகளில் தலையிட்டதாலும் விலோபோ மந்திரி சபையும் கவிழ்ந்தது. வடசுமத்திராவில் அரசாங்கத்திற்குச் சொந்தமான புகையிலைத் தோட்டங்களிலிருந்து உரிமையின்றித் தங்கியிருக்கும் விவசாயிகளை (Peasant Squatters) அரசாங்கம் வெளியேற்றச் செய்த முயற்சியை நாடாளுமன்ற (தேசியக் கட்சி உறுப்பினர்கள் உட்பட) உறுப்பினர்கள் எதிர்த்ததால் இறுதியாக விலோபா மந்திரிசபை கவிழ்ந்தது.

இம் மந்திரிசபை கலைக்கப்பட்டு இரண்டு மாதத்திற்குப் பின் தான் தேசியக் கட்சியைச் சேர்ந்த அலிசாஸ்த்ரோமிஜோயோ தலைமையில் பெர்சாதுவான் இந்தோனேசிய ராய (Persatuan Indonesia Raja) தலைவர் வோங் சோ நெகோரோ (Wong Sonegoro) ஆகியோர் எடுத்த முயற்சியால், தேசியக் கட்சி, நக்தாதுல் உலாமா, மற்றும் சில சிறிய கட்சிகளின் கூட்டணி மந்திரிசபை அமைக்கப்பட்டது. மஸ்ஜூமிக் கட்சியும், சோஷியலிஸ்டு கட்சியும் கிறிஸ்டியன் கட்சியும் எதிர்க் கட்சியில் அமர்ந்தன. இம் மந்திரி சபை கி.பி. 1953ஆம் ஆண்டு ஆகஸ்டு 1ஆம் நாளிலிருந்து கி.பி. 1955ஆம் ஆண்டு ஆகஸ்டு 12ஆம் நாள் வரை ஆட்சிபுரிந்தது. குடியரசுத் தலைவர் சுகர்ணோ ஆதரித்ததால் இம் மந்திரிசபை இவ்வளவு காலம் நீடித்தது. சுகர்ணோவின் செல்வாக்கு அரசியல் விவகாரங்களில் ஓங்கியது. கம்யூனிஸ்டுக் கட்சி மாறுமல் ஆதரித்ததாலும், ஆப்ரோ—ஆசியின் மாநாட்டை அலிசாஸ்த்ரோமிஜோ கூட்டியதாலும் இம் மந்திரிசபையின் செல்வாக்கு மக்களிடையே அதிகரித்தது. மஸ்ஜூமியைத் தோற்கடிப்பதற்கான நடவடிக்கைகளை இம் மந்திரிசபையில் உள்ள எல்லாக் கட்சியினரும், குடியரசுத் தலைவரும் எடுத்தார்கள். இம் மந்திரிசபை மாறுமல் சுகர்ணோவை ஆதரித்தது. சுகர்ணோவை ஆதரிக்கும் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஐவா குசுமா சுமானத்ரீ (Iwakusuma Sumantri), சுகர்ணோ ஆதரித்த இராணுவத் தலைமை அதிகாரியைப் (Chief-of Staff) பதவியில் அமர்த்த முயற்சி செய்தார். இராணுவத்தில் உள்ள பெரும்பான்மையான உயர் அதிகாரிகள் இதை எதிர்த்ததால் தான் இம் மந்திரிசபை இறுதியாகக் கலைக்கப்பட்டது.

கி.பி. 1955ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு முன் இறுதியாக அமைக்கப்பட்ட அமைச்சர் அவையின் தலைவர் பிரதம மந்திரி புர்ஹாநுதின் ஹாரஹாப் (BURHA NUDDIN Harahap), மஸ்ஜூமி, நக்தாதுல் உலாமா, சோஷியலிஸ்டு மற்றும் சில சிறிய கட்சிகளின்

கூட்டணியே இம் மந்திரிசபை. இது கி.பி. 1955ஆம் ஆண்டு ஆகஸ்டு 13லிருந்து 1956ஆம் ஆண்டு மார்ச்சு 24-ஆம் நாள் வரை ஆட்சி புரிந்தது. தேசியக் கட்சி எதிர்க்கட்சியில் இருந்ததாலும் சுகர்ணோ எதிர்ப்புணர்ச்சிகளைக் காட்டியதாலும், இம் மந்திரிசபை தொடக்கத்திலிருந்தே துன்பத்திற்குள்ளாயிற்று, கையூட்டு வாங்குவதை எதிர்த்து இம் மந்திரிசபை நடவடிக்கை எடுத்ததால் இதற்கு ஓரளவு மக்கள் ஆதரவு கிடைத்தது. விமானப் படையின் துணை முதற்பெரும் படைத்தலைவரை நியமிக்க விரும்பியது. ஆனால், சுகர்ணோவை ஆதரித்த விமான முதற்பெரும் படைத் தலைவர். (Commander-in-Chief) இதை எதிர்த்ததால் அரசாங்கம் தன் முயற்சியில் தோல்வியடைந்தது. தேசியக் கட்சி மஸ்ஜுமியை விட அதிகவாக்குகள் பெற்றிருப்பது, டிசம்பரில் தேர்தல் முடிவுகள் அறிவித்தபோது தெரிந்தது. இதனாலும் இம்மந்திரிசபை வலு விழந்தது. சுகர்ணோவுடைய ஆதரவு இல்லாததாலும் தேர்தலின் முடிவு தெரிந்த பிறகு இடையீட்டுக் காலக் கண்காணிப்பு மந்திரி சபையாக (Caretaker Govt.) மாறியதாலும் இதனால் இறுதிக் காலத்தில் எவ்வகையான முக்கியமான நடவடிக்கைகளும் எடுக்க முடியவில்லை.

எதிர்பாராத வகையில் கம்யூனிஸ்டுகளுக்குத் தேர்தலிலே அதிக வாக்குக் கிடைத்ததனால் மஸ்ஜுமியும், தேசியக் கட்சிகளில் உள்ள பகுத்தறிவாளர் பிரிவினரும், முதியோர் பிரிவினர்களும் மஸ்ஜுமி—தேசியக் கூட்டணி மந்திரிசபையை அமைக்க முயற்சி செய்தார்கள். கி.பி.1956ஆம் ஆண்டு மார்ச்சு இறுதியில் அத்தகைய கூட்டணி அமைச்சர் அவை அமைக்கப்பட்டது. அலிசாஸ்த்ரோமிஜோயோ பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மஸ்ஜுமி, தேசியக் கட்சிகளைத் தவிர, நக்தாதுல் உலாமா உறுப்பினர்களும் இன்னும் சில சிறிய கட்சிகளின் உறுப்பினர்களும் இக் கூட்டணி அமைச்சர் அவையில் சேர்ந்தார்கள். தொடக்கத்திலிருந்து சுகர்ணோவின் ஆதரவு இந்த அமைச்சர் அவைக்குக் கிடைக்கவில்லை. மேலும், இக் கட்சிகளுக்குள் இருந்த அரசியல் வேறுபாடுகளும் மறையாததனால் இச்சபைக்குள் ஒற்றுமை ஒத்திசைவுகள் இல்லை. அரசாங்கத்தில் உள்ளவர்கள் கையூட்டு வாங்குவது அதிகரிக்கத் தொடங்கியது. கையூட்டை ஒழிக்கும் இயக்கத்தைத் தொடங்க வேண்டும் என மஸ்ஜுமி நாட்சிர் விண்ணப்பம் செய்த போது, அரசாங்கம் அவர் ஆலோசனையைப் புறக்கணித்தது. அயல்நாட்டு உறவுக் கொள்கையில் மிகுந்த கவனம் செலுத்துகிறார் என்றும், தம்முடைய கட்சியின் செல்வாக்கைப் பெருக்குவதிலே கவனம் செலுத்துகிறார் என்றும் மக்கள் பிரதம மந்திரி அலியைப் பற்றிக் குறை கூறினார்கள். உள் நாட்டு விவகாரங்களில் பிரதம

மந்திரி மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் கூறினர் கள். கையூட்டு வாங்குவது பெருகியதாலும், பணவீக்கம் (Inflation) பீடு நடை போட்டதாலும், நாட்டின் முக்கியப் பொருளாதார, நிருவாக விவகாரங்களில் திறமையற்ற முறையில் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்ததாலும், மக்களுக்கு மனக்குறை ஏற்பட்டது. இதன் விளைவாகச் சட்டமன்றக் குடியாட்சியின் மீதே (Parliamentary Democracy) மக்களுக்கு அருவறுப்பு ஏற்பட்டது. ஆட்சியிருக்கையில் அமராததால் கம்யூனிஸ்டுக் கட்சி இச் சூழ்நிலையைப் பயன்படுத்தித் தன் கட்சியை வலுப்படுத்தியது. இது அரசாங்கத்திற்கு எதிராகப் பேசினலும் தேசியக் கட்சியைப் பகைக்காமல் எச்சரிக்கையுடன் நடந்தது. முக்கியமாக இது மஸ்சூமியைத்தான் தாக்கியது.

கி.பி. 1956ஆம் ஆண்டின் இடைக்காலத்திற்குப் பிறகு பிரதேசங்களில் மனக்கசப்பு அதிகரித்தது; அரசாங்கத்தால் இராணுவத் தலைவர்களைக் கட்டுப்படுத்தி ஆட்சி புரிய முடியவில்லை. இராணுவத் தலைவர்களும் அரசியலில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினர்கள். அரசாங்கம் தங்கள் பொருளாதார வளர்ச்சிக்காக முக்கியமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றும், போதுமான அளவு நிருவாகப்பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளவில்லை யென்றும், நாட்டின் வருமானத்திற்குரிய விவகாரங்களில் கிளையாட்சியை வலுப்படுத்தவில்லையென்றும், ஜாவாவைத் தவிர மற்றத் தீவுகளில் உள்ளவர்கள் மனக்குறைவு அடைந்தார்கள். அயல் நாட்டு நாணயச் செலாவணி (Foreign Exchange) மூலம் வரும் செல்வத்தை ஜாவாவின் வளர்ச்சிக்கே பயன்படுத்துகிறது என்றும், மற்றத் தீவுகளின் பொருளாதார வளர்ச்சியைப் பொருட் படுத்தவில்லை யென்றும் இவர்கள் நம்பினர்கள். சொல்லப் போனல் இந்த அயல் நாட்டு நாணயச் செலாவணியில் நான்கில் மூன்று பங்கு மற்றத் தீவுகளிலிருந்து வருகிறது. இதனல், இவர் களின் சினம் மேலும் அதிகரித்தது. அரசாங்கம் இராணுவத் தலைவர்களுக்கு வேண்டிய அளவு நிதி கொடுக்காததால் அவர் களால் தங்கள் படைவீரர்களுக்குப் போதிய ஊதியமும், உணவுப் பண்டங்களும் வீட்டுவசதிகளும் கொடுக்க முடியவில்லை. ஆகை யால் செலிபெஸ், வடக்குச் சுமத்திரா ஆகியவற்றில் உள்ள இராணுவத் தலைவர்கள் கி.பி. 1956ஆம் ஆண்டின் இடைக் காலத்திலிருந்து கொப்பரைத் தேங்காய், இரப்பர் போன்ற பொருள்களை வைத்துக்கொண்டு சட்டம் மீறிப் பண்டமாற்று வாணிபம் செய்யத் தொடங்கினர்கள். இவ்வகையான வாணி பத்தின் மூலம் இத்தலைவர்கள் நேர்மையாக அயல்நாட்டு நாணயச்

செலாவணியைப் பெற்றுக்கொண்டார்கள். இதனுல் ஜாகர்த்தாவில் உள்ள அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்பட்டது. அரசியலிலும் இராணுவம் தலையிடத் தொடங்கியது. கி.பி. 1956ஆம் ஆண்டு ஆகஸ்டில் மேற்கு ஜாவா படைப்பகுதி முதல்வர் கவிலராங் (Colonel Kawilarang), கையூட்டு வாங்கியதாக அயல் நாட்டு விவகார அமைச்சர் அப்துல்கனியைக் (Abdulgani) கைது செய்ய முயன்ருர் நவம்பர் இடையிலே படைப்பகுதி முதல்வர் சுல்கிப்லிலுபிஸ் (Colonel zulkifli Lubis) முன்னுள் துணை இராணுவ முதல்வர் திடீர் அரசியல் புரட்சி (Coup) செய்தார். கையூட்டை ஒழிக்கவும் இராணுவ முதல்வர் நசுதியானையும் (Nasution), பிரதம மந்திரி அலியையும் பதவியிலிருந்து நீக்கவும் இவர் இப்புரட்சி செய்தார். ஆனுல், இவரது புரட்சி தோல்வியடைந்தது.

சுகர்ணேவுக்கும், ஹட்டாவுக்கும், அரசியல் கட்சிகளுக்கு இடையேயும் கருத்து வேறுபாடுகள் மிகுந்தன. ஜாவாவைத் தவிர மற்றத் தீவுகளில் முக்கியமாகச் சுமத்திராவில் மஸ்சூமிக்கு அதிக ஆதரவு இருந்ததாலும், அமைச்சர் அவையிலே கீழ்ப்படியான பதவிகளை மஸ்சூமி வகித்ததாலும், மற்றத்தீவுகளில் உள்ள தலைவர்களும், இஸா அன்ஸாரியும் மஸ்சூமியை அமைச்சர் அவையை விட்டு வெளியேறி அரசாங்கத்திற்கு எதிராக வேலை செய்ய வற்புறுத்தினுர்கள். இங்ஙனம் செய்தால் கம்யூனிஸ்டுகளுக்குச் சாதகமாயிருக்கும் என நாட்சிர் கூறி அமைச்சர் அவையை விட்டு மஸ்சூமியை வெளியேற்ற மறுத்தார் ஆகையால் கி.பி. 1957ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் நாள்வரை மஸ்சூமிக் கட்சி அரசாங்கத்துடன் ஒத்துழைத்தது. ஆனுல், சுமத்திராவில் திடீர் அரசியல் புரட்சி ஏற்பட்டதாலும், ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்கவேண்டும் எனச் சுகர்ணே விடாமல் பிரசாரம் செய்ததாலும், ஒரு சிறிய கட்சி அமைச்சர் அவையை விட்டு வெளியேறியதாலும், மஸ்சூமியும் மந்திரி சபையைவிட்டு வெளியேறியது.

தொடக்கத்திலிருந்தே சுகர்ணே, அலியின் இரண்டாவது அமைச்சர் அவையை ஆர்வத்துடன் ஆதரிக்கவில்லை. மெதுவாக அதைத் தாக்கவும் தொடங்கினுர். மேற்கு நாட்டவர் நாடாளுமன்றக் குடியரசு அரசியல் அமைப்பையும் கொள்கைகளையும் தாக்கினுர். தேசிய ஒற்றுமை வளரவேண்டுமானுல் அரசியல் கட்சிகளைப் புதைத்துவிடவேண்டும் எனக் கி.பி 1956ஆம் ஆண்டு அக்டோபரில் கூறினுர். அரசியல் கட்சிகளை அமைக்கச் சுதந்திரம் கொடுத்தால்தான் குடியரசு அமைப்பு வளர்ச்சியடையும் எனக்

கூறுவது தவறு என இவர் கி. பி. 1956ஆம் ஆண்டு நவம்பரில் நாடாளுமன்றத்தில் கூறினர். இந்தோனேசியக் குடியாட்சி தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கவேண்டும்; மற்றக் குடியாட்சி யின் அமைப்பைப் பின்பற்றியதாக இருக்கக்கூடாது; இந்தோ னேசியாவில் உள்ள தாழ்த்தப்பட்டோர்களின் வாழ்க்கை வளத்தை மேம்படுத்தவேண்டும்; ஒரு சமூகப் பிரிவினர் மற்றச் சமூகப் பிரவினரைச் சுரண்டிப் பிழைக்கக்கூடாது. ஆகையால் தாற்காலிகமாக இந்தோனேசியக் குடியாட்சியைக் கட்டுபடுத்திச் செல்லும் குடியாட்சியாக (Guided Democracy) மாற்றி அமைக்க வேண்டும் எனச் சுகர்ணே கூறினர். சுகர்ணே நாடாளுமன்ற மக்களாட்சி முறையை எதிர்த்ததாலும், கட்டுப்படுத்திச் செல்லும் குடியாட்சி முறையைப் பற்றிப் பிரசாரம் செய்ததாலும் சுகர்ணே வுக்கும் ஹட்டாவுக்கும் உள்ள வேறுபாடுகள் அதிகரிக்கத் தொடங்கின. இதன் விளைவாகக் கி.பி. 1956ஆம் ஆண்டு டிசம்பர் 1ஆம் நாள் ஹட்டா துணைக்குடியரசுத் தலைவர் பதவியினின்றும் விலகினர். ஹட்டா அரசாங்கத்தை விட்டு வெளியேறியதை ஜாவாவைத் தவிர மற்றத் தீவுகளில் உள்ளோர் விரும்பவில்லை; தங்களுடைய முக்கியமான பிரதிநிதி வெளியேறியதாக அவர்கள் கருதினர்கள். ஆகையால் அவர்களிடையே ஜாகர்த்தா அரசாங் கத்தின் மேல் உள்ள வெறுப்பு அதிகரித்தது. கி. பி. 1956ஆம் ஆண்டு டிசம்பரில் சுமத்திரா வடக்கிலும், நடுவிலும், தெற்கிலும் ரத்தம் சிந்தாத திடீர் அரசியல் புரட்சிகள் (bloodless Coup) ஏற்பட்டன. இராணுவத் தலைவர்கள் இப்பகுதிகளின் ஆட்சியைக் கைப்பற்றி இராணுவத் தலைமை மன்றங்களை (Army led Council) அமைத்தார்கள். அலி ஆட்சியை ஒப்புக்கொள்ளவோ, ஏற்றுக் கொள்ளவோ மாட்டோம் என அறிவித்தார்கள். ஆனல், வட சுமத்திராவில் அலி அரசாங்கத்தை ஆதரித்த இராணுவத் தலைவர்கள் திரும்பவும் திடீர் அரசியல் புரட்சி செய்து ஆட்சியை மீண்டும் கைப்பற்றினர்கள். மத்திய சுமத்திராவில் பிரதேச மன்றத்தின் தலைவராகத் துணைப் படைப்பகுதித் தலைவர் அகமது ஹுசைன் (Lieutienant Colonel Achmad Haussain) இருந்தார். தெற்குச் சுமத்திராவில் பிரதேசமன்றத்தின் தலைவராகத் துணைப் படைப்பகுதித் தலைவர் பார்லியன் (Barliaw) இருந்தார்.

அலி அரசாங்கத்தால் இப்புரட்சிகளை அடக்க முடியாததனல் சுகர்ணே கி. பி. 1957ஆம் ஆண்டு பிப்ரவரி 21ஆம் நாள் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார். 'இந்தோனேசிய அரசியல் அமைப்பைத் தீவிரமாக மாற்றி அமைக்கவேண்டும். அரசியல் அமைப்பு முழுமையையும் மறுபடியும் புதுமுறையில் உருவாக்க

வேண்டும். ஒவ்வோர் அமைச்சர் அவையும் போதிய அதிகாரம் இல்லாததாலும், எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு நாடாளுமன்றத்தில் இருந்ததாலும் கவிழ்ந்தது. இத்தகைய விளைவுகளுக்கு முக்கியக் காரணம் இந்தோனேசியா தன் தேவைகளுக்குத் தகுந்தாற்போல் ஓர் அரசியல் அமைப்பை நிறுவவில்லை. மேல் நாட்டுக் குடியாட்சி முறையை அப்படியே இந்தோனேசியா பின்பற்றியது. தாற்காலிகமாயிருக்கும் இந்தோனேசியக் குடியாட்சி இந்தோனேசிய மனநிலையைப் பிரதிபலிக்கவில்லை. மேலை நாட்டுக் குடியாட்சி முறைப்படி சுறுசுறுப்பும் செயல் திறமுமுடைய எதிர்க்கட்சிகள் அமைத்திருக்கவேண்டும். நுட்பமாக நோக்கினால் இக்கொள்கையை இந்தோனேசியா ஏற்றுக்கொண்டதால்தான் பதினொரு ஆண்டு களாக இந்தோனேசியாவிற்குத் தொல்லைகளும், இடையூறுகளும், ஏற்பட்டன. இக்கொள்கையை ஏற்றுக்கொண்டதால்தான் இந்தோனேசிய வாழ்க்கை முறைக்குப் புறம்பான முறையில் நினைவைச் செலுத்தத் தொடங்கிவிட்டோம். ஆகையால் இச் சூழ்நிலையைத் திருத்திச் சீர்ப்படுத்தவேண்டும். ஒரு புதுவகையான அமைச்சர் அவையை அமைக்கவேண்டும். நாடாளுமன்றத்தில் எல்லா முக்கியக் கட்சிகளிலிருந்தும், (கம்யூனிஸ்டுக் கட்சி உள்பட) அமைச்சர் அவைக்கு அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். மேலும் ஒரு தேசிய மன்றத்தை (National Council) உருவாக்க வேண்டும். இந்தோனேசிய மக்களிடையே உள்ள எல்லாப் பிரிவுகளிலிருந்தும் வாழ்க்கை, தொழில் ஆகியவற்றைச் சார்ந்த வர்கள் (Occupational), சமூகம், மதம், கலாசாரம் ஆகிய பிரிவு களைச் சார்ந்தவர்கள், இராணுவப்படை காவற்படை, தலைவர்கள் சட்டத்துறை தலைவர் முக்கியமான அமைச்சர்கள் இம்மன்றத்திற்கு உறுப்பினர்களை அனுப்பவேண்டும். 'சுகர்னோவே இம்மன்றத்தின் கூட்டத்தலைவராக இருப்பார். அமைச்சர் அவைக்கு ஆலோசனை கொடுப்பதும், மந்திரிசபையின் வேண்டுகோள் இருந்தோ இல்லாமலோ பரிந்துரைகளை (reconmendations) மந்திரிசபை யிடம் பணிவோடு கூறுவதுமே இம்மன்றத்தின் முக்கியக் கடமை ஆகும். அமைச்சர் அவை நாடாளுமன்றத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களின் எண்ணத்தைப் பொது மையமாகவிருந்து பிரதி பலிக்கும் தேசிய மன்றம் இந்தோனேசிய மக்களின் எண்ணத்தை ஒருமுகப்படுத்திப் பிரதிபலிக்கும். அமைச்சர் அவைக்கும், தேசிய மன்றத்திற்கும் நெருங்கிய தொடர்பிருக்கும். இத்தகைய அமைப் பிருந்தால் நாடாளுமன்றம் ஆற்றல் வாய்ந்த மக்களிடையே ஒரு பாலம் உருவாகும்.' மேற்கூறியபடி சுகர்னோ அறிவித்தார்.

சுகர்ணோவின் இப் புதுத் திட்டத்தை ஹட்டா உடனடியாகத் தாக்கினர். 'அமைச்சர் அவையில் கம்யூனிஸ்டுகளைச் சேர்த்துக் கொண்டால் அரசியலில் கூட்டுப் பொறுப்புணர்வு ஏற்படாது; பிளவுகள்தாம் ஏற்படும். ஏனென்றால் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கைகளும் மற்றக் கட்சியின் கொள்கைகளும் வெவ்வேறு திசையில் நோக்கிச் செல்கின்றன. வன்முறையில் மற்றக் கட்சிகளைக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடன் ஒத்துழைக்க முயற்சி செய்தால் நடைமுறையிலுள்ள பகைமைதான் அதிகரிக்கும்; தேசிய ஒற்றுமை ஏற்படுவது இன்னும் நெடுந்தொலைவில் உள்ளதாய் மாறிவிடும். கம்யூனிஸ்டுகள் உலகப்புரட்சியிலும், பாட்டாளர் களின் சர்வாதிகாரத்திலும் (Dictatorship of the Proletariat) நம்பிக்கை கொண்டவர்கள் ஆதலால் அமைச்சர் அவையில் அவர்கள் சேர்வதற்கு வாய்ப்புக் கொடுத்தால், இந்தோனேசியா சுதந்திர வெளிநாட்டுக் கொள்கைகளைப் பின்பற்றுவதை எதிர்த்து இந்தோனேசியாவைச் சோவியத் உருசியாவின் கைப்பாவையாக மாற்றிவிடுவார்கள். கம்யூனிஸ்டுகளை அமைச்சர் அவையில் சேர்ப்பது, தண்ணீரையும் எண்ணெயையும் கலக்கச் செய்வது போன்று வீண் முயற்சியாகும். அவர்களுக்குத் தகுதியான இடம் எதிர்க்கட்சியில் இருப்பதே ஆகும். எதிர்க்கட்சிகளை நாடாளு மன்றத்திலிருந்து ஒழித்தால்தான் இடையூறுகளைத் தவிர்க்க முடியும் என்பது தவறான கருத்து. குடியரசுத் தலைவர் தலைமையின் கீழ் நேர்மை, கண்ணியம், ஆற்றல் ஆகியவை உள்ள அமைச்சர் கள் சேர்ந்த ஒரு திறமையான அரசாங்கத்தை அமைத்தால் நாட்டி லுள்ள சூழ்நிலையைத் திருத்தி அமைக்க முடியும். தேசியமன்றம் நிறுவப்பட்டால் அது சட்டத்திற்கு அப்பாற்பட்ட, புறம்பான மன்றமாக விளங்கும். மேலும் நாடாளுமன்றத்திற்கும் இம்மன்றத் திற்கும் மாறுபாடு கிடையாது; சொல்லப் போனால் இவ்விரு மன்றங்களும் ஒத்தனவாயிருக்கும். சுகர்ணோ தலைமையின்கீழ் ஒரு குடியரசுத் தலைவர் அமைச்சர் அவையை அமைத்தால் நாட்டில் நிலையான அரசாங்கம் உருவாகுவதற்கு வேண்டிய சூழ்நிலை யேற்படும். தேவைப்படும்போது குடியரசுத் தலைவர் அமைச்சர் களுடனும், கட்சித் தலைவர்களுடனும், கட்சி சேராத வல்லுநர் களுடனும் (Non-party experts) முக்கிய அரசியல் செய்திபற்றிக் கூடி கலந்தாலோசிக்கலாம். ஆகையால் தேசியமன்றம் தேவை யில்லை' மேற்கூறியபடி ஹட்டா அறிவித்தார்.

சுகர்ணோ திட்டத்தைத் தேசியக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஏற் றுக் கொண்டன. அதில் சிலமாற்றங்களையும், திருத்தங்களையும் செய்து நக்தாதுல் உலாமாவும் ஒப்புக்கொண்டது ஆனால் முஸ்கூமி இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தது. ஹட்டாவுக்கும்

மஸ்ஜூமிக்கும் இத்திட்டம் பற்றிக் கருத்து வேறுபாடில்லை. ஜாவாவைத் தவிர மற்றப் பெரிய தீவுகளில் இத்திட்டம் மனக் குறையை உண்டாக்கியது. செலிபஸ்ஸிலும், இந்தோனேசியன் போர்னியோவிலும் திடீர் அரசியல் புரட்சிகள் கி.பி. 1957ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஏற்பட்டன. இராணுவத் தலைவர்கள் இவ்விடங்களிலும் இராணுவத்தலைமை மன்றங்களை நிறுவினர். எஞ்சிய அலி அமைச்சரவை மார்ச் 14ஆம் நாள் நெருக்கடிநிலைச் சட்டத்தில் (Martial Law) கையொப்பமிட்டு இந்தோனேசியா முழுவதும் போர்க்காலச் சட்டம் ஒன்றை அறிவித்தது; உடனடியாகப் பதவியினின்றும் விலகியது. சுகர்ணோவையும் இராணுவத்தையும் இச் சூழ்நிலை வலுப்படுத்தியது. இவ்விருவரும் அரசியல் கட்சிகளின் ஆதரவை நம்பி இனி அரசியலில் ஈடுபடவேண்டியதில்லை. இராணுவ ஆட்சி ஜாவாவிலும் தொடங்கியது. முதற் பெரும் படைத்தலைவரும் படைத்துறைப் பணித்தலைவருமான (Major General) ஏ. ஹெச் நசுதியனுடைய அதிகாரம் இச் சூழ்நிலையால் ஓங்கியது.

13. நாடாளுமன்றக் குடியாட்சியின் வீழ்ச்சி

அலி சாஸ்த்ரோமிஜியோவின் அமைச்சரவை கவிழ்ந்த பிறகு, நாடாளுமன்றக் குடியாட்சி வழியிலிருந்து விலகி இந்தோனேசியா ஒரு புதிய வழியில் செல்லத் தொடங்கியது. நாடாளுமன்றக் குடியாட்சி முறை இந்தோனேசியாவில் வீழ்ச்சியடைந்ததன் காரணத்தை நோக்குவோம்.

கி.பி. 1950ஆம் ஆண்டிலிருந்து 1957ஆம் ஆண்டு வரையிருந்த நாடாளுமன்றக் குடியாட்சி அமைப்பு மேலை நாடுகளின் குடியாட்சி முறையை முற்றிலும் பின்பற்றவில்லை. மேலைநாட்டு, வழிமரபுக் குடியாட்சிக் கொள்கைகளையும் தக்க அளவில் ஒன்று சேர்க்கவில்லை. இந்தோனேசியச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மேலை நாட்டுக் குடியாட்சி முறையை மாற்றி அமைக்கவும் முயற்சி செய்யவில்லை. கி.பி. 1950ஆம் ஆண்டின் இந்தோனேசியச் சட்டதிட்டம் கற்பனைத் திறமற்ற, வளைவு நெளிவற்ற, மிகக் கடுமையான, செயல் முறைக்கு ஒவ்வாத கோட்பாட்டுடன் நெதர்லாந்துச் சட்டத்திட்டத்தைப் பின்பற்றிய திட்டம். ஆகையால் நெதர்லாந்தில் இருக்கும் அமைப்புப்போல இந்தோனேசியாவிலும் பலவகையான அரசியல் கட்சிகளுடையதும், பலவகை வேட்பாளர்கள் தொகுதிகளுடையதும், சரிவிகிதப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையுடையதும் (Proportional representation) ஆன அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது.

ஆகையால் கி.பி. 1950ஆம் ஆண்டுச் சட்ட திட்டமும், கட்சி அமைப்பும் டச்சுக்காரர்களின் பண்பையும் ஹாலந்து நாட்டின் சமூக அமைப்பையும், பொருளாதார வளர்ச்சியையும், அரசியல் வரலாற்றையுமே பிரதிபலித்தது; இந்தோனேசியச் சூழ்நிலைக்கு ஒத்தவாறு இவற்றைப் படைக்கவில்லை.

ஒருவேளை இந்தோனேசியச் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு அமைந்திருந்தாலும், மேலைநாட்டுக் குடியாட்சியின் மூலத்தத்துவங்களுக்குக் கி.பி. 1950, 1957ஆம் ஆண்டுகளில் இந்தோனேசியச் சூழ்நிலையில் நிலையாகவிருக்க வேண்டிய வாய்ப்புகள் கொடுக்கப்படவில்லை. நாடாளுமன்றக் குடியாட்சி முறையையோ, ஜனாதிபதி குடியாட்சி முறையையோ இந்தோனேசியாவில் செயல்முறைப்படுத்த அதிக வாய்ப்பளிக்கவில்லை. ஆனால் இந்தோனேசியச் சட்டதிட்டத்தில் உள்ள குறைகளே நாடாளுமன்றக் குடியாட்சி முறையின் வீழ்ச்சிக்கு மூல காரணம் எனக் கூற முடியாது. நடைமுறையில் உள்ள வழிமரபு பண்புகள் டச்சு, ஜப்பானியர்களுடைய ஆட்சியின்போது இந்தோனேசிய உயர்ந்தோர் குழாமின் உள்ளத்தில் எழும்பிய உணர்ச்சிகளும், எண்ணங்களும், இந்தோனேசியாவின் சமூக அமைப்பு, முக்கியமாக அரசியலில் உள்ள சமநிலைவலிமை (Balance of power) இவைகளே நாடாளுமன்றக் குடியாட்சி முறையின் வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணம் எனக் கூறலாம்.

ஆட்சி, அமைப்பில் பெற்றோர் போன்ற ஆட்சி ஆதிக்கம் இருக்க வேண்டும் என்று வழிமரபில் வந்த நம்பிக்கை, எல்லா இந்தோனேசியர்களிடமும் (மேலைநாட்டு முறையில் படித்த உயர்ந்தோர் குழாம் உட்பட) இருந்தது. சமுதாயப் பாங்கும், ஆட்சி அமைப்பும், தனி மனிதனைவிட முதன்மை பெற்றிருந்தன. ஒரு தனி மனிதனுக்கு அரசியல் உரிமைகள் உண்டு; அவ்வுரிமைகளைச் சமுதாயம் பறிக்கக் கூடாது; சமுதாயம் அவ்வுரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நிலையான எண்ணங்கள் இந்தோனேசியர்களிடம் இருக்கவில்லை. ஆகையால், தனிமனிதனுக்கு உரிமைகள் உண்டு என்ற எண்ணம் வேரூன்றவில்லை. மேலைநாட்டில் கல்வி பயின்ற சிலரிடமே இத்தகைய புதுமைப்பாங்கான எண்ணங்கள் இருந்தன. ஆனால், இந்தோனேசியச் சூழ்நிலைக்கு இவை ஒத்துவருமா என இவர்களும் ஐயுற்றார்கள். ஆட்சி அமைப்பில் அதிகாரம் உள்ளவர்கள் மக்களின் பணியாளர்கள் என்ற எண்ணம் பொதுவாக இல்லை. ஆனால் இவர்கள் மக்களின் மேற்பார்வையாளர்கள் என்ற வழிமரபாக வந்த எண்ணமே தழைத்தோங்கி யிருந்தது. ஆட்சி அமைப்பில் உயர்பதவியில்

உள்ளவர்களுக்குத்தாம் பொறுப்புண்டு; அவர்கள் மக்களுக்கும் வாக்காளர்களுக்கும் பதிலளிக்க வேண்டாம்; ஒழுக்கமுறை, அண்டப் படைப்புக் கோட்பாடுகளைப் பொறுப்புடன் பாதுகாத்தால் போதும் என்ற நம்பிக்கையுடன் இருந்தார்கள். ஆதிக்க முறை ஆட்சியை இயல்பாகவே ஏற்றுக்கொண்டார்கள். டச்சு ஜப்பானியர் களின் ஆதிக்கம் இவ்வெண்ணத்தை மக்களிடம் வலுப்படுத்தின. குடியேற்ற நாட்டவர்களுடைய ஆட்சியின்போது மக்களுக்கு நாடாளுமன்றக் குடியாட்சி முறையுடன் தொடர்புகொள்ள வாய்ப்புக் கிடைக்கவில்லை. குடியேற்ற நாட்டவர்களது ஆட்சியின் போது மக்கள் பொறுப்புள்ள உயர்ந்த பதவிகள் வகிக்காததனால் அவர்களிடம் எதிர் முரண் எண்ணங்களும், மறுப்புரை எதிர் இயல்புடைய மனப்பான்மையும் நிலவியிருந்தன. இவ்வகையான மனப்பான்மை பொறுப்புடைய அரசியல் நடத்தைக்கு ஏற்றவாறு அமையவில்லை; ஆகையால் நாடாளுமன்றத்தில் பொறுப்புள்ள எதிர்க்கட்சியினராக இயங்க வேண்டிய சூழ்நிலையேற்படவில்லை.

மேலும், நாடாளுமன்றக் குடியாட்சி அமைப்பு, கூட்டுப் பொறுப்புணர்வு (Solidarity), ஒத்திசைவு (harmony) போன்ற இந்தோனேசியப் பண்பாடுகளுடன் இணங்கி அமையவில்லை. ஆகையால், செயல்திறமுடைய எதிர்க்கட்சிகள் கொண்ட அரசியல் அமைப்பும், அரசியல் கட்சிகளுக்குள் ஏற்பட்ட இடை விடாத எதிர்ப்புகளும், மனக்கசப்பும் இப் பண்பாடுகளுடன் ஒத்து வரவில்லை. பெரும்பான்மையான வாக்காளர்களின் தீர்ப்பு (Decision by majority vote) முறையும் இத்தகைய இந்தோ னேசியத் தன்மைகளுக்குப் புறம்பாக யிருந்தது. ஆகையால், இவ்வாறான அமைப்பில் உருவாகும் அரசியல் பிரிவுகளும், பொது மக்களுக்கு எதிராகப் பதிவாகும் அரசியல் வேறுபாடுகளும் இந்தோனேசிய மக்களுடைய பண்பாட்டுடன் ஒத்துவரவில்லை. வேறுபாடுகள் இருந்தால் அவற்றை ஒன்றுபடுத்த வேண்டும்; இல்லாவிட்டால் அவற்றைப் பேச்சில் தெரிவிக்காமலாவது இருக்க வேண்டும் என்பதே இந்தோனேசியர்களின், முக்கியமாக ஜாவா மக்களின் பண்பாடு. ஆகையால், ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளும் தேர்தல் அமைப்பு இந்தோனேசியர்களுக்கு ஒரு புதிய அனுபவமாயிருந்தது.

பல்வேறு முக்கியமான செய்திகளில் கருத்து ஒருமைப்பாடு இல்லாமல் இருந்தும் நாடாளுமன்றக் குடியாட்சியின் வீழ்ச்சிக்கு மற்றொரு காரணம் ஆகும். இந்தோனேசியாவில் அமைத்திருந்த குடியாட்சி அமைப்பு இம்மாறுபாடுகளுக்கு முதன்மை கொடுத்தது.

மதச் சார்பற்ற அரசாங்க அமைப்பை உருவாக்குவதா, இஸ்லாம் மதத்தைச் சார்ந்த அரசியல் அமைப்பைப் படைப்பதா என்று இந்தோனேசியர்களுக்கு பூசல் உண்டானதால் அமைதி குலைந்து ஆபத்து உண்டாகியது. இதனால் இந்தோனேசியர்களுக்குள் பிளவு ஏற்பட்டது; கி.பி. 1955ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப் பட்ட சட்டசபையில் இதைப் பற்றித்தான் அதிகமான வாக்கு வாதம் நடந்தது; இக்காரணத்தால் கி.பி. 1959ஆம் ஆண்டில் இச் சட்டசபையில் யாதொரு நடவடிக்கையையும் செயல்படுத்த முடியவில்லை; இறுதியாக இச் சட்டசபை இக்காரணத்தால் கி.பி. 1959ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டது. இதற்கு அடுத்தபடியாகப் பிரதேசக் சுயாட்சிக் கொள்கைக்கும், மைய அதிகார ஒருமிப்புக் கொள்கைக்கும் பூசல் உண்டாயிற்று. ஆட்சி அமைப்பு மன்றங் களில் இராணுவத்திற்குப் பங்கு கொடுக்க வேண்டுமா, இராணு வத்தை அரசாங்கத்தின் கையாளாகப் பயன்படுத்த வேண்டுமா என்பதைப் பற்றியும் பிணக்கு ஏற்பட்டது.

இந்தோனேசியாவிற்கு நாடாளுமன்றக் குடியாட்சி முறை பொருந்துமா பொருந்தாதா என்பதைப் பற்றித் தொடக்கத்திலே கருத்து வேறுபாடுகள் இருந்தன. மேலைநாட்டுப் படிப்புப் படித்த இந்தோனேசியர்களிடையே கி.பி. 1950ஆம் ஆண்டிலிருந்து நடை முறையில் இருந்த குடியாட்சி முறையின் செல்வாக்கு ஓங்கி யிருந்தது என்றாலும், அவர்களில் பெரும்பான்மையோர் இந்தத் தத்துவத்தை பொறுப்புடன் பாதுகாக்க முன்வரவில்லை. சந்தர்ப்ப வாதிகளாய் இவர்கள் இருந்ததால்தான் நடைமுறையிலிருந்த அரசியல் அமைப்பை இவர்கள் ஆதரித்தார்கள். மேலைநாடுகளின் ஆதரவைத் தேடுவதற்காகப் புரட்சியின் போது இந்த அரசியல் அமைப்பை இந்தோனேசியத் தேசியத் தலைவர்கள் உருவாக் கினார்கள். புரட்சியின்போது இந்தோனேசியத் தேசியத் தலைவர் களுக்குள் உருவான வேறுபாடுகள் வெளிப்படையாகத் தெரிய வில்லை. ஏனென்றால், இந்தோனேசியர்கள் சுதந்திரத்திற்காக அச்சமயத்தில் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால், டச்சு ஆட்சி இந்தோனேசியாவை விட்டு வெளியேறிய புடன் அவர்களுக்குள் இருந்த வேறுபாடுகள் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கின.

இந்தோனேசிய மக்களிடையே செல்வாக்குள்ளவர்களுக் கெல்லாம் ஆட்சி அமைப்பில் இடம் கொடுக்கவில்லை. ஆகையால் ஆட்சி அமைப்பைக் கவிழ்க்கக்கூடிய ஆற்றல் உள்ளவர்கள் பலர் வெளியே இருந்தனர். அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் இடம்

கொடுக்கப்படவில்லை. ஆகையால் இவர்களும் நாடாளுமன்றக் குடியாட்சியின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாயிருந்தார்கள்.

குடியேற்ற நாட்டினரின் ஆட்சியை ஒன்றுபட்டு எதிர்க்கிற தேசிய இயக்கம் இந்தோனேசியாவில் தேசியப் புரட்சியின்போது தோன்றவில்லை. டச்சு, ஜப்பான் ஆகியவற்றின் ஆட்சி அவ்வாறு ஒரு சூழ்நிலையை இந்தோனேசியாவில் உருவாக்கியது. ஆகையால், சுதந்திரம் வந்தபிறகு இந்தோனேசியா முழுவதையும் அடக்கி ஆளும் ஓர் அனைத்து இந்தோனேசியக் கட்சி அங்கு இல்லை. அவ்வாறான ஒரு நிலை இருந்த காரணத்தால்தான் இந்தோனேசியாவில் ஒற்றுமை ஏற்படவில்லை. மேலும், புரட்சியின் போது பெரும்பான்மையான இந்தோனேசிய மக்களால் ஆதரிக்கப்படும் ஓர் அரசியல் கருத்து உருவாகவில்லை. அரசியல் கட்சிகள் சோஷியலிசக் கருத்தைப் பரப்பினாலும் இக் கருத்துத் தெளிவற்றதாயிருந்தது. மேலும் சோஷியலிசக் கருத்தில் பலவகையான மாறுபட்ட வடிவங்கள் இருந்தன. ஆகையால், தேசியப் புரட்சியின் போது தேசிய உணர்ச்சிகளும், டச்சு ஆட்சி மீண்டும் வரக்கூடாது என்ற எண்ணங்களுமே ஓங்கியிருந்தன.

ஆட்சி அமைப்பின் அதிகாரத்தை உருவாக்குவதே சுதந்திர இந்தோனேசியாவின் முக்கிய நோக்கமாயிருந்தது. ஆனால், இவ்வதிகாரத்தை உருவாக்குவது அரிதாயிருந்தது. இந்தோனேசியா முழுவதையும் அடக்கி ஆளும் சக்தியில்லாததால் நிலையான நிருவாகத்தை அமைக்க முடியவில்லை. நிலையான நிர்வாகமில்லாததால் நிலையான ஆட்சியை அமைக்க முடியவில்லை. இதனால் மக்களுக்கு அரசாங்கத்தின் மேலிருந்த மதிப்புக் குறைந்தது.

சுகர்னோவுக்கும், ஹட்டாவுக்கும் மக்களிடையே மிகுந்த செல்வாக்கிருந்த போதிலும் அவர்களுடைய மதிப்பிற்கு உகந்தவாறு கி.பி. 1950ஆம் ஆண்டுச் சட்டதிட்டத்தின்கீழ் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இந்தக் கட்டுப்பாட்டைத் தகர்க்கச் சுகர்னோ முயன்றார். கி.பி. 1950ஆம் ஆண்டுச் சட்ட திட்டத்திற்குத் தம்முடைய விளக்கங்களைக் கூறிச் சுகர்னோ தம் அதிகாரத்தைப் பெருக்க முன் வந்தார். இவர் நடத்தை கி.பி. 1950ஆம் ஆண்டுச் சட்ட திட்டத்தை உருவாக்கியவர்களின் எண்ணத்திற்குப் புறம்பாயிருந்தது. ஆனாலும், இவர் இச்சட்ட திட்டத்தை மீறி நடந்தார் என்றும் திண்ணமாகக் கூற முடியாது. சுகர்னோவின் நடவடிக்கைகள் நாடாளுமன்றக் குடியரசு அமைப்பை வலிகுன்றச் செய்தது. தொடக்கத்தில் அவருடைய மதிப்பிற்குத் தகுந்தவாறு அதிகாரங்கள் கொடுத்திருந்தால் இந்தோ

னேசியாவிலே ஒரு நிலையான ஆட்சி உருவாகியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தோனேசியச் சுதந்திரப் புரட்சியிலே இந்தோனேசிய இராணுவமும் முக்கியமான பங்கேற்றிருந்தது. ஆகையால், தாங்களும் சுதந்திர இந்தோனேசியாவின் ஆட்சி அமைப்பிலே பங்கு கொள்ள வேண்டும் என்ற அவா அவர்களிடமிருந்தது. கி.பி. 1950ஆம் ஆண்டுச் சட்ட திட்டம் இராணுவத்திற்கு அரசியலிலே ஈடுபட வாய்ப்புக் கொடுக்கவில்லை. ஆனால், கி.பி. 1955ஆம் ஆண்டிலிருந்து மறைமுகமாகவோ, நேரடியாகவோ இராணுவம் அரசியல் விவகாரங்களிலே தலையிடத் தொடங்கியது.

குடியரசுத் தலைவர் சுகர்ணோவும், இராணுவமும் அரசியலில் தலையிட்டதால் நாடாளுமன்றக் குடியாட்சி அரசாங்கத்தின் அதிகாரம் பரிசோதனைக்குள்ளாகியது. ஆட்சியிருக்கை நிலையில் லாமல் ஆட்டம் கொண்டது. இதனால் மக்களுக்கு இவ்வாட்சி அமைப்பின் மேலிருந்த மதிப்புக் குறையத் தொடங்கியது.

ஜாவாவைத் தவிர மற்றத் தீவுகளில் இருந்த உயர்ந்தோர் குழாமில் உள்ளவர்களுக்கு அரசியல் கட்சிகளிலும், நாடாளுமன்றத் திலும் போதிய இடங்கள் கிடைக்கவில்லை. அத்தீவுகளிலுள்ள படைசாராத தலைவர்களுக்கும், இராணுவத் தளபதிகளுக்கும், முக்கியமாகச் சுமத்திரா, போர்னியோ, செலிபெஸ் ஆகிய இடங் களில் நெருங்கிய தொடர்பிருந்தது. தங்கள் தீவுகளுக்கு வேண்டிய சீர்திருத்தங்களை அரசாங்கம் செய்யாததால் இவ்விரு பிரிவினர்களும் ஒரு சேரக்கலந்து மத்திய அரசாங்கத்திற்கு எதிராகச் சதி செய்யத் தொடங்கினார்கள்.

நாட்டுப் பழங்குடியைச் சார்ந்த இந்தோனேசியர்களிடம் போதிய செல்வம் இல்லை. செல்வம் சேர்ப்பதற்கு அரசாங்கத் தையே நம்பியிருந்தார்கள். ஆகையால், அரசியல் கட்சிக்குச் செல்வம் கொடுத்து இவர்களால் ஆதரிக்க முடியவில்லை; ஆனால், நாடாளுமன்றத் தன்னாட்சி முறை நிலைத்திருக்க இது அவசியம். மேலை நாட்டிலே அரசியல் கட்சிகளுக்கு மக்கள் தங்கள் செல்வத் தைக் கொடுத்து ஆதரிப்பதனால் அங்கே குடியாட்சி முறை வேரூன்றி நிலையாயிருக்கிறது. ஒரு கட்சி ஆட்சியிருக்கையில் இருக்கும் போதுதான் தன் கட்சியின் செல்வாக்கையும், பொருளா தாரத்தையும் அதிகரிக்க வாய்ப்புக் கிடைக்கிறது. ஆகையால், கம்யூனிஸ்டுக் கட்சி தவிர மற்ற இந்னேசியக் கட்சிகள் தங்கள் கட்சிகளுக்காக நிதிதேட அரசாங்கத்தையே நம்பியிருந்தன,

ஆகையால், ஆட்சி அமைப்பிலே பங்கு கொள்ள வாய்ப்புக் கிடைத்தால்தான் பெரும்பான்மையான இக்கட்சிகளுக்குச் செல்வம் கிடைக்கும். மிகுந்த செல்வம் கிடைத்தால்தான் பரவலான தீவிர அரசியல் நடவடிக்கைகளும், பிரச்சாரமும் செய்ய முடியும். ஆட்சி அமைப்பிலே வாய்ப்புக் கிடைத்தால் தங்களுக்கு ஆதரவு, அளிப்பவர்களுக்கும் உதவி செய்பவர்களுக்கும் பணித்துறை அலுவலகங்களிலே உயர்ந்த பதவிகள் கொடுக்க முடியும். மேலும், பல தனிச் சலுகைகளும் பெறலாம். உதாரணமாக, மிகுந்த பயன் கொடுக்கக் கூடிய இறக்குமதி உரிமையிதழ்களைத் தங்களுக்கு வேண்டியவர்களுக்கே கொடுத்தால் அவர்கள் அக்கட்சிக்கு நிதி உதவி கொடுத்துத் தங்கள் மன நிறைவைத் தெரிவித்துக்கொள்வார்கள். வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் கடன்களிலிருந்து 5 அல்லது 10 சத விழுக்காடாவது பல வகையான முறைகளைப் பயன்படுத்தி ஆட்சி முறை அமைப்பிலே பங்கு கொள்ளும் கட்சிகளுக்குச் சேர்க்கலாம்.

ஆகையால் கி.பி. 1950—1957 ஆம் ஆண்டுகளில் அரசாங்க ஊழல்கள், கையூட்டு ஆகியவற்றின் மூலம் கட்சி நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. கையூட்டும் ஊழலும் அதிகரித்தவுடன் பொது மக்களுக்கு இக் கட்சிகளின் மேலுள்ள மதிப்புக் குறைந்தது. பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அலி சாஸ்த்ரோ மிஜோயோ அமைச்சர் அவைகூடக் கையூட்டையும் ஊழலையும் விட்டுவிட முயற்சி எடுக்கவில்லை. மேலும் இலஞ்சமும், கையூட்டும், ஊழலும் அலி ஆட்சியின் போது அதிகரிக்கத்தான் தொடங்கின. ஆகையால், மக்களுக்கு நாடாளுமன்றக் குடியாட்சியின் போது வெறுப்பு அதிகரித்தது. சட்டமன்ற உறுப்பினர்களை, கையூட்டும் ஊழலும் மலிந்த ஒழுக்கங் கெட்டவர்கள்; பொறுப்பற்றவர்கள் என்றே இந்தோனேசியப் பொது மக்கள் கருதினர்கள். அரசியல் கட்சிகளில் இலஞ்சம் ஊழல் மலிந்ததால் நாடாளுமன்றக் குடியாட்சி அமைப்பிலே கையூட்டும் ஊழலும் மலிந்தது என்ற எண்ணம் மக்கள் மனத்தில் குடியேறியது.

மேலும், இந்தோனேசிய அமைச்சர் அவைகளெல்லாம் கூட்டணிகளே. ஆகையால் அமைச்சர் அவையின் திறமையாவும் பாதிக்கப்பட்டது. கட்சிகளின் சக்தி நாடாளுமன்றத்தில் வளரவில்லை; நாடாளுமன்றத்தின் வெளியிலேதான் அதன் சக்தியிருந்தது. ஆகையால் நாடாளுமன்றத்தில் உள்ள தங்கள் கட்சி உறுப்பினர்கள் கூறுவதைக் கட்சித் தலைவர்கள் கேட்க மறுத்தார்கள். சர்வாதிகாரத்துடன் அரசியல் கட்சித் தலைவர்கள் நடந்து கொண்டார்கள். தாங்கள் கூறியபடிதான் மற்றக் கட்சி உறுப்

பினர்கள் நடக்க வேண்டும் என்று கூறத் தொடங்கினர்கள்; தங்களைத் தேர்ந்தெடுத்த தொகுதி மக்களை மதிக்காமல் நடக்க முற்பட்டார்கள். தங்களுடைய கட்சித் தலைவர்களுக்கு மட்டும்தான் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்கள் என்ற அளவில் நடந்து கொண்டார்கள்.

நடுநிலை ஆட்சி அமைப்பிலே (மாகாணங்கள் கடிபடன்ஸ் (Kalenpantens) இருந்த ஊழல்களாலும் நாடாளுமன்றக் குடியாட்சி அமைப்பிற்கு இழுக்கு ஏற்பட்டது. கி.பி. 1957ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் அரசியல் கட்சிகள் வலியுறுத்தியதால் ஆட்சி உரிமையைப் பன்முகப்படுத்தும் சட்டம் (Decentralisation Legislation) கொண்டு வரப்பட்டது. கி.பி. 1957ஆம் ஆண்டு வரை வட்டார ஆட்சி, படைத்துறை சாராத நிருவாக அரசு அலுவலர்களின் கீழிருந்தது. இவர்கள் மத்திய அரசாங்கத்திற்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டிருந்தார்கள். ஆனல் கி.பி. 1957 ஆம் ஆண்டில் கிளையாட்சி வலுப்படுத்தும் சட்டம் வந்தவுடன் மாவட்டத் தலைவர்களுக்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட மன்றத்திற்கும் மாவட்ட அதிகாரம் மாற்றிக் கொடுக்கப்பட்டது. அரசியல் கட்சிகள் திறமை வாய்ந்தவர்களுக்கு இப்பதவிகளைக் கொடுக்காமல் தகுதியில்லாதவர்களுக்கே கொடுத்தன. ஊழலும் அதிகரித்தது. இதனல் மாவட்ட மக்களுக்களுக்குச் சினம் உண்டாகியது. மாவட்டத் தேர்தலுக்குப் போட்டியிட்டவர்கள் பட்டணங்களிலிருந்து வந்தவர்கள். அவர்களுக்குக் மாவட்டச் சூழ்நிலையைப் பற்றி ஒன்றும் தெரியாமலிருந்தது; அவர்களுக்கு மாவட்ட மக்களிடையே மதிப்பும் கிடையாது. ஆகையால் மாவட்டத் தேசியத் தேர்தலின் மேல் மக்களுக்கு உள்ள மதிப்புக் குறைந்தது. தேர்தல்களின் மூலம் ஆட்சி அமைக்க வேண்டும் என்ற எண்ணமும் விலக ஆரம்பித்தது.

அரசாங்கம் தீர்மானங்கள் எடுத்தாலும் அத்தீர்மானங்களைத் திறமையுடன் நிறைவேற்றவில்லை. ஆகையால் அரசாங்கத்தால் ஆற்றலுடன் அதிகாரம் செலுத்த முடியவில்லை இதனலும் நாடாளுமன்றக் குடியாட்சி முறைக்கு அவமதிப்பு ஏற்பட்டது.

14, வரையறுக்கப்பட்டு வழிகாட்டும் குடியாட்சி கி.பி. 1957—1962

நாடாளுமன்ற மக்களாட்சியின்மேல் குடிகளுக்கேற்பட்ட மனக்கசப்பினலும், அருவெறுப்பினலும், வரையறுக்கப்பட்டு வழிகாட்டும் குடியாட்சி அரசியலை (Guided Democracy)

சுகர்ணோவால் எளிதில் தொடங்க முடிந்தது பெரும்பான்மையான இந்தோனேசிய மக்கள், சுகர்ணோவை எதிர்த்த பெரும்பான்மை யோர் உட்பட, இம்மாறுதலை வரவேற்றார்கள். கட்டுப்பாடுள்ள ஓர் அரசியல் அமைப்பு தேவை. மக்களாட்சிக்கு ஒரு வழிகாட்டி அவசியம். தங்களுக்காக ஒருவர் தலைமையேற்றுத் திறனுடன், கண்டிப்புடன் முன் வருவது முக்கியம் என இந்தோனேசியர்கள் கருதினார்கள்.

சுகர்ணோவின் கருத்துகள்

பல பத்தாண்டுகளாகச் சுகர்ணோ நாடாளுமன்றக் குடியாட்சி முறையும், பலவகைக் கட்சி அமைப்பு முறையும் இந்தோனேசியச் சூழ்நிலைக்கு ஒவ்வாது எனக் கூறி வந்தார். நடைமுறையில் நாடாளுமன்றக் குடியாட்சி முறை திறமையற்றதாயிருந்ததாலும், கி.பி. 1955ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப் பிறகு தேசியக் கட்சி, நக்தாதுல் உலாமா கட்சி ஆகியவை சுகர்ணோவின் ஆதரவை நாடாமலிருந்ததாலும், அவருடைய எண்ணங்களை முழுமையாக அக்கட்சிகள் ஏற்றுக்கொள்ளாமலிருந்ததாலும், நாடாளுமன்றக் குடியாட்சி முறை பற்றிய அவர் எண்ணங்கள் வலுவடைந்தன.

இந்தோனேசியப் புரட்சிக்கு முன் இருந்த சுகர்ணோவின் அரசியல், பொருளாதாரக் கொள்கைகள் புரட்சிக்குப்பின்பும் மாறவில்லை; மாறியது என்னுடைய கொள்கைகள் அல்ல, இந்தோனேசியச் சூழ்நிலையே எனச் சுகர்ணோ பலமுறை கூறி யிருக்கிறார். வரையறுக்கப்பட்டு வழிகாட்டும் குடியாட்சி முறையை அமைப்பதற்கு முப்பது ஆண்டுக்கு முன்பே இந்தோனேசிய மக்கள் ஒற்றுமையுடன் ஒருமைப்பட்டு வாழவேண்டும் எனச் சுகர்ணோ கூறியிருக்கிறார். நாட்டமைப்பில் உள்ள மூலக் கருத்துகள் இணைக்கப்பட்டு முழுமையாயிருக்கவேண்டும்; இவை மாறுபட்டு வெவ்வேறு திசையில் சென்று சமநிலையை அடையக் கூடாது, ஆனால் விழிப்புடன் இருந்து இவற்றை இசையச் செய்து ஒன்றாக்க வேண்டும் எனச் சுகர்ணோ கருதினார். அதிகாரங்களும், தலைமை தாங்கி நடத்துவதற்கான திறமையும் ஒன்றாயிருக்க வேண்டியது மிக அவசியம். தலைவராயிருப்பவர் சிந்தனைகளை விற்கும் தரகர் அல்லர். உயர்ந்த நோக்கங்கள் உள்ளவரும், பெற்றோர்போல ஆட்சி செலுத்துபவரும், மக்களுடைய எண்ணங்களை மதித்து அவர்களுடன் ஒத்திசைவு கொள்பவருமாய் உள்ளவரே தலைவராயிருக்கத் தகுதியுள்ளவர். மக்களுடைய ஆலோசனைகளைக் கேட்டு மக்களுக்கு எந்தவிதமான திட்டங்களைப்

பின்பற்றினுல் நன்மை பயக்கும் என்பதைப் பற்றித் தீர்மானங்கள் எடுப்பவரே தலைவராயிருக்கத் தகுதியுள்ளவர்.

இந்தோனேசியக் கிராமங்களில் முஸாவரத்—முபாகட் (Musjawarat—Mufakat) என்ற முறை மூலம் தீர்மானங்களை மக்கள் எடுப்பார்கள். தன் சிந்தனைகளும் இம் முறையைப் பின் பற்றியிருக்கின்றன, ஆகையால் தேசிய ஆட்சி முறையில் இதையும் புகுத்தலாம் என்று சுகர்ணே கூறினுர். மக்கள் ஒருவரோடு ஒருவர் கட்டுப்பாடில்லாமல் சுதந்திரத்துடன் பேசி வாதாடிக் கலந்து ஆலோசித்துப் படிப்படியாகக் கருத்து ஒற்றுமை யடைவார்கள்; கருத்து வேறுபாடுகள் மறைந்து ஒற்றுமையடையும் தருணத்தில் கிராமத் தலைவர் இவ்வொற்றுமை ஒப்பந்தத்தை அறிவிப்பார்; அவர் அறிவித்தவுடன் கிராம மக்கள் அதனை மதித்து அதன்படியே நடப்பார்கள். இம்முறையையே 'முஸாவரத்—முபாகட்' என அழைக்கிருர்கள். செல்வாக்குள்ள ஆற்றல் வாய்ந்த தலைவர்கள் இருந்ததால்தான் கிராமத்தில் கூட இவ் வகையான ஒற்றுமை ஒப்பந்தத்தை அடையமுடியும் எனச் சுகர்ணே கூறினுர். ஆகையால் ஆட்சியாதிக்க வல்லமையுள்ளவர்கள் மூலம்தாம் இம்முறை வெற்றியடைய முடியும். கிராமத் தலைவர்களுக்குத்தாம் விவாதத்தைத் தொடங்கும் உரிமையிருக்கிறது; பொதுவாக அவர்கள்தாம் ஆட்சியாதிக்கக் கத்தியைப் பயன்படுத்தி ஒற்றுமை ஒப்பந்தம் ஏற்படும்படியான சூழ்நிலையை உருவாக்குவார்கள்.

தேசியப் புரட்சியின் தொடக்கத்தில் சுகர்ணே ஓர் அணைத்து இந்தோனேசியக் கட்சியை அமைத்தார்; சில மாதங்களுக்குப் பிறகு பல்வேறு கட்சி அமைப்பு உருவாகுவதை எதிர்த்தார். இவருடைய ஆலோசனைகளையும் கேட்டுத்தான் கி.பி. 1945ஆம் ஆண்டில் சட்டதிட்டம் இயற்றப்பட்டது; இச்சட்டதிட்டம் நாடாளுமன்றக் குடியாட்சி முறை அமைப்பைப் பற்றிப் பேச வில்லை; ஆனுல் சக்தி வாய்ந்த குடியரசு தலைவர் ஆட்சிமுறை அமைப்பதைப்பற்றிக் கூறுகிறது. குடியரசுத் தலைவரே அமைச்சர் அவைகளிலுள்ள அமைச்சரை நியமிப்பார், அவ்வமைச்சர்கள் குடியரசுத் தலைவருக்கே பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிருர்கள். ஆனுல் புரட்சியின் தொடக்கக் காலத்திலே சுகர்ணேவிற்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்திருந்தால் குடியரசுத் தலைவரின் ஆட்சி முறை கவிழ்ந்திருக்காது; கி.பி. 1945ஆம் ஆண்டு நவம்பரில் நாடாளுமன்ற குடியாட்சி முறை தொடங்கியிருக்காது. கி.பி. 1949ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் நாள் மாறுபட்ட ஆட்சி முறையை அமைக்க வேண்டும் எனச் சுகர்ணே பேசினுர். 'நம்முடைய குடியாட்சி முறைக்கும், மற்ற நாடுகளிலுள்ள

குடியாட்சி முறைக்கும் மாறுபாடுகளுள்ளன. கீழை நாடுகளில் உள்ள குடியாட்சி, நுட்பமாகக் கூறப்போனால் இந்தோனேசிய மக்களாட்சித் தலைவரால் ஆளப்பட்ட குடியாட்சி' எனச் சுகர்ணோ கூறினார்.

மேலும், கி.பி. 1957ஆம் ஆண்டு வரை இந்தோனேசியப் பொருளாதார வளர்ச்சி அடையவில்லை. இச்சூழ்நிலை புரட்சியின் கருத்துகளுக்குப் புறம்பாக இருந்தது. மக்கள் வாழ்க்கையில் யாதொரு பொருளாதார மாறுதலும் உருவாகவில்லை; இறக்குமதி செய்யும் ஒரு புதிய நடுநிலை வகுப்புதான் (Bourgeoisie) உருவாகியது. தேசியக் கட்சிகள் சோஷியலிஸத்தைப் பற்றிச் செய்த பிரசாரத்திற்கு எதிராயிருந்தது இச் சூழ்நிலை. இதற்கு மாறுபாடாகக் கி.பி. 1956ஆம் ஆண்டின் இடையில் சுகர்ணோ கம்யூனிஸ்டு சீனாவிற்குச் சென்றிருந்தபோது பயன்படுத்திச் சீனாவின் பொருளாதார வளர்ச்சியை உருவாக்கியதை நோக்கினார். இந்தோனேசியாவிற்குக் கம்யூனிஸம் தேவையில்லை எனச் சுகர்ணோ நினைத்தபோதிலும் கம்யூனிஸ்டுக் கட்டுப்பாடுகளையும், சமூக அமைப்பை மாறுபடச் செய்த முறைகளையும் விரும்பத் தொடங்கினார். ஆகையால், இம்முறைகளில் சிலவற்றை இந்தோனேசியாவிலும் புகுத்தி இந்தோனேசியப் பொருளாதாரத்தையும் வளர்க்கலாம் எனச் சுகர்ணோ நினைத்தார். ஆனால், இத்தகைய மாறுதல்களை உருவாக்குவதற்குக் கம்யூனிஸ்டு கட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனச் சுகர்ணோ கூறவில்லை.

ஆகையால், கி.பி. 1957ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையிலிருக்கும் தேசியக் கட்சிகளைக் கலைத்து, ஒரே ஒரு அனைத்து இந்தோனேசியன் கட்சியை அமைக்க வேண்டும் எனச் சுகர்ணோ பிரசாரம் செய்யத் தொடங்கினார். இத் தேசியக் கட்சிதான் அரசாங்கத்தை அமைக்க வேண்டும். இக்கட்சி தன் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருக்க வேண்டும்; மக்களுடைய சக்தியைத் திரட்டி நாட்டை வளர்க்க வேண்டும் எனக் கூறினார். ஒரு தேசிய முன்னணியை அமைக்கவேண்டும். இது ஒரு தீவிர அரசியல் இடதுசாரிக் கோட்பாடுகளை உடையதாயிருக்க வேண்டும். ஆனால் கம்யூனிஸ்டு இல்லாத முன்னணியாயிருக்க வேண்டும்; மக்களுடைய சக்தியைத் திரட்டி அரசாங்கப் பணிக்குப் பயன்படுத்த வேண்டும். அதாவது சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியைப் போல் செயல்பட வேண்டும் எனச் சுகர்ணோ கூறினார். இம்முன்னணியில் இளைஞர், விவசாயி, தொழிலாளி, படை போன்ற பணி செய்யும் வகுப்பினர் (Functional Group) இருக்க வேண்டும்.

ஆனால் சுகர்ணோ தம் திட்டத்தை முழு விவரங்களுடன் அமைக்க வில்லை. எனினும், அதிகாரங்கள் முழுவதையும் ஒரே கழகத்திடம் கொடுத்துப் புரட்சியின் நோக்கமான பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும் என நம்பினார். தேசிய முன்னணி தம் தலைமையின்கீழ் ஒரு மாபெரும் மக்களின் கழகமாக மாறி அரசியல் கட்சிகளைக் கலைத்துத் தன்னுள் அடக்கிக் கொள்ளும் என நம்பினார்.

அரசியல் கட்சிகள் கலைந்தவுடன் நாடாளுமன்றமும் மறையும். அதற்குப் பதிலாக ஆழ்ந்தாராய்கிற குழாம்களை அமைக்க வேண்டும். தங்கள் தேவைகளை மக்கள் இக் குழாம்கள் மூலமாக அறிவிக்கலாம். தேசிய முன்னணி உறுப்புப் பகுதிகளிலிருந்து இக் குழாம்களின் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கலாம். மக்களுடைய புரட்சி எண்ணங்களைப் பிரதிபலிக்கும் புதுத் தலைவர்களை இம் முறை மூலம் உருவாக்க முடியும். ஆழ்ந்தாராய்கிற குழாம்களில் நிலையான எதிர்க் கட்சிகளை உருவாக்கக் கூடாது; பெரும்பான்மையோர் வாக்குகள் மூலம் தீர்மானங்களை நிறை வேற்றக் கூடாது. வாக்கில்லாமல், பிரிவுகளில்லாமல் முஸாவரத்—முபாகட் முறை மூலம் ஒற்றுமையுடன் எல்லோரும் கலந்து தீர்மானங்கள் நிறைவேற்றலாம்.

தேசியக் கட்சிகள் கலைக்கப்படாத, தேசிய முன்னணி உருவாக்கப்படாத இடைக் காலத்திலே எல்லாப் பெரிய கட்சிகளும், (கம்யூனிஸ்டு கட்சிகள் உட்பட) ஓர் அமைச்சர் அவையை அமைக்க வேண்டும்.

முன்பிருந்ததைவிட வரையறுக்கப்பட்ட குடியாட்சி அமைப் பில் தமக்கு மேலும் அதிகமான பொறுப்புகள் உருவாகும் எனச் சுகர்ணோ நம்பினார். ஆனாலும் தம்முடைய பொறுப்புகளைக் கூடிய வரையில் மற்றக் கட்சிகளோடு பகிர்ந்துகொள்ள வேண்டும்; முக்கியத் தீர்மானங்களைத் தாம் மட்டும் நிறைவேற்ற வேண்டும் எனச் சுகர்ணோ நினைத்தார். தேசிய மன்றத்திற்கு [1959ல் இதுவே உயர் ஆலோசனை மன்றமாக (High Advisory Council) மாறியது] இரண்டு வகையான பொறுப்புகள் கொடுக்கப்பட்டன. சுகர்ணோவின் கருத்துகளை அலசிப் பார்த்து அவருக்கு ஆலோசனை கொடுக்க வேண்டும். சில சமயங்களில் புதுக் கருத்துகளையும் அறிமுகப்படுத்த வேண்டும்; சுகர்ணோ எடுக்கும் தீர்மானங்களுக்கு அவருடன் கலந்து பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

இராணுவத்தின் கருத்துகள்

இந்தோனேசியா சுதந்திரம் அடைந்ததற்கு இராணுவமும் முக்கியக்காரணம் என்பதால், தங்களுக்கும் அரசியல் பங்கு எடுத்துக்கொள்ள உரிமையுண்டு என இராணுவம் நினைத்தது. இத்தகைய எண்ணம் ஜப்பானியர்களிடம் பயிற்சி பெற்ற படைத் தலைவர்களிடம் ஓங்கியிருந்தது. அரசாங்கத்தில் பங்குகொள்ளப் படைத்தலைவர்களுக்கு உரிமை மட்டுமன்று; இறையருட் கட்டளைப் பணியும் ஆகும் என ஜப்பானியப் பயிற்சியளிப்பவர்களும் போதனையாளர்களும் இவர்களிடம் கூறியிருந்தார்கள். மேலும், கி. பி. 1950ஆம் ஆண்டுக்கு முன் நடந்த புரட்சியின்போது நாலரை ஆண்டுகள் படைத்தலைவர்கள் அரசாங்கத்தில் முக்கியப் பொறுப்பேற்றிருந்தார்கள். ஆனால், கி. பி. 1950ஆம் ஆண்டில் டச்சு ஆட்சி வெளியேறியவுடன் இவர்கள் தங்கள் அரசியல் பதவிகளிலிருந்து விலகினார்கள். படைசாராத அரசாங்க அதிகாரிகளின் கையாளாக மாறினார்கள். படைத்தலைவர்களால் தங்களுடைய அரசாங்க அனுபவங்களை மறக்க முடியவில்லை. மேலும் படைசாராத பணியாளர்களின் மதிப்பும், அரசாங்கத்தின் மதிப்பும் குறையத் தொடங்கியவுடன் படைத்தலைவர்களுக்கு அரசியலில் ஈடுபடவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது.

படைத்தலைவர்கள் அரசியல் கட்சிகளையும் அவற்றின் நிருவாகத்தையும் பழிக்கத் தொடங்கினார்கள். பல அமைச்சர் அவைகள் (தேர்தல் மூலம் உருவான அலிசாஸ்த்ரோ மிஜியோ அமைச்சர் அவை உட்பட) தங்கள் கட்சியின் செல்வாக்கைப் படைவீரர்களிடம் பெருக்க முயற்சி செய்தார்கள். இதனால் இராணுவத்துள் பிரிவு ஏற்பட்டது; ஒற்றுமை குலையத் தொடங்கியது. இது இராணுவத்துள் எரிச்சலூட்டியது. இக்காரணத்தால் உயர்தர இராணுவ அதிகாரிகள், படைப்பெருந்தலைவர் (General) நசுதியான் உட்பட, அரசியல் கட்சிகள் கலைக்கப்பட வேண்டும் எனப் பிரசாரம் செய்தார்கள். அரசியல் கட்சிகளின் ஆட்சிமுறை யிருக்கும்வரை இராணுவத்தில் ஒற்றுமையேற்படாது என இவர்கள் நினைக்கத் தொடங்கினார்கள். கம்யூனிஸ்டுக் கட்சியையே இராணுவத் தலைவர்கள் தீவிரமாக எதிர்த்தார்கள். நாடாளுமன்றக் குடியாட்சி முறை நீடித்தால் இந்தோனேசியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு மக்களிடையே செல்வாக்கு இருந்ததால் அரசாங்கத்தில் முக்கியப் பங்கு கொள்ளுமோ என்ற காரணத்தாலும் இராணுவத்தினர் கம்யூனிஸ்டுக் கட்சியை எதிர்த்தார்கள். மேலும் இராணுவத்தினர் கம்யூனிஸ்டுக் கட்சியை ஏன் எதிர்த்தார்கள் என்றால் கம்யூனிஸ்டுகள் இராணுவத்தினருக்குக் கிடைத்த

பொருளாதார வளர்ச்சியையும், சலுகைகளையும், இராணுவத்தினர் அரசியல் பங்கு கொள்வதையும் தீவிரமாக எதிர்த்தார்கள். கம்யூனிஸ்டுக் கட்சி சோவியத் உருசியாவுடனும், கம்யூனிஸ்டுச் சீனவுடனும் தொடர்பு கொண்டிருக்கிறது என்றும், இதனுல் இந்தோனேசியாவின் சுதந்திரத்திற்கும், பாதுகாப்பிற்கும் ஆபத்து வரும் என்றும் சுகர்ணே நினைப்பதைப்போல் கம்யூனிஸ்டுகளை மாற்ற முடியும் என்பதில் தங்களுக்கு நம்பிக்கையில்லை யென்றும் படைத்தலைவர்கள் கூறினுர்கள். மதப்பற்றுள்ள படைத்தலைவர்களும் கம்யூனிஸ்டுக் கட்சியின் மதக் கொள்கையின்மேல் நம்பிக்கை கொள்ளாமல் அக்கட்சியை எதிர்த்தார்கள். ஆகையால் கம்யூனிஸ்டு கட்சியை ஒழிக்கவேண்டும் என்ற எண்ணம் இராணுவத்தினரின் உள்ளத்தில் ஓங்கியிருந்தது; ஆனுல், எத்தகைய முறைகளைப் பயன்படுத்தி எந்தச் சமயத்தில் அதை ஒழிப்பது என்பதைப் பற்றி அவர்களுக்குள் கருத்துவேற்றுமையிருந்தது. ஆனுல், அதைப் படைவீரர்களைப் பயன்படுத்தி ஒழித்தால் சுகர்ணே எதிர்ப்பார், அதனுல் நாட்டின் அமைதி குலையும் பொருளாதாரச் சூழ்நிலை பாதிக்கப்படும் என அஞ்சினுர்கள். ஆகையால் இராணுவத்தினரும் அரசியல் கட்சிகளை ஒழிப்பதையும் நாடாளுமன்றக் குடியாட்சி முறையை அழிப்பதையும் மனதார வரவேற்றுர்கள்.

ஆகையால், ஆட்சியாதிக்கக் கொள்கையுடைய அரசியல் அமைப்பு சுகர்ணே-ஹட்டா தலைமையில் அமைக்கவேண்டும் என இராணுவத் தலைவர்கள் விரும்பினுர்கள். ஆனுல், அவ்வாறுன ஆட்சி அமைப்பில் இராணுவத்திற்கு முக்கியப் பங்குகொடுக்க வேண்டும் என வலியுறுத்தினுர்கள். நாட்டில் அமைதியிருக்கும் காலங்களில்கூட அரசியில் அவையிலும் ஆலோசனை, திட்டம் ஆகியவை வரையறுக்கும் மன்றங்களிலும் இராணுவத்திற்கு இடம் கொடுக்கவேண்டும் என நசுதியான் கூறினுர்.

கி. பி. 1957ஆம் ஆண்டின் தொடக்கத்திலே சுகர்ணேவின் புது அரசியல் சிந்தனைகள் ஆட்சி முறையிலே உருவாகத் தொடங்கியபோதும், அவரிடம் வேண்டிய அதிகாரம் இல்லாததால் தம்முடைய புதிய ஆட்சி அமைப்புக் கொள்கைகளை முழுவதும் மக்கள்மேல் சட்டப்படிச்சுமத்த முடியவில்லை. ஆகையால் நிதானத்துடனும், எச்சரிக்கையுடனும் தம் சிந்தனைகளை அரசியல் அமைப்பில் புகுத்தினுர். இராணுவத் தலைவர்களிடமும் போதிய அதிகாரமில்லாததால் தம்முடைய சிந்தனையையும் வலிமையுடன் ஆட்சி அமைப்பில் புகுத்த முடியவில்லை. ஆகையால், புதிய ஆட்சி அமைப்பை உருவாக்குவதைப்பற்றிச் சுகர்ணேவிற்கும், இராணுவத்திற்கும் முழுமையான ஒற்றுமையில்லாமல் இருந்தது. அவர்

களுக்குள் எதைப்பற்றி ஒற்றுமையிருந்ததோ, அதைக்கூட அரசியல் கட்சிகளும், சுமத்திரா, செலிபெஸ் ஆகிய இடங்களில் உள்ள இராணுவ அரசாங்கமும் எதிர்த்தன. ஜாவாவைத் தவிர மற்றத்தீவுகளில் இராணுவத் தலைவர்கள் சுகர்ணோ நசுதியான் அதிகாரங்கள் குறையவேண்டும்; வேறுவிதமான ஆட்சி அமைப்பு உருவாகவேண்டும் என நினைத்தார்கள். ஆகையால், இவர்களை அடக்கி ஆளும் சமயத்தில்தான் சுகர்ணோவும் இராணுவத்தினரும், தங்களுடைய புதிய திட்டத்தை முழுமையாக அமைக்க முடியும். அத்தகைய சூழ்நிலை கி.பி. 1959ஆம் ஆண்டில் உருவாகியது. அதற்குப் பிறகுதான் சுகர்ணோவால் வரையறுக்கப்பட்ட குடியாட்சி முறை அமைப்பை அமைக்க முடிந்தது.

கி.பி. 1957—1958 கலகச் சூழ்நிலை

ஹட்டாவே புதிய அமைச்சர் அவையை அமைக்கவேண்டும் என்று பெரும்பான்மையோர், முக்கியமாக ஜாவாவைத் தவிர மற்றத்தீவுகளில் உள்ளவர்கள், கூறியும்கூடத் தேசியக்கட்சித் தலைவர் சுவூர்யோவை (Suwir'o) மந்திரிசபை அமைக்கும்படிக் குடியரசுத் தலைவர் கி. பி. 1957ஆம் ஆண்டு மார்ச்சு 15ஆம் நாள் அழைத்தார். கம்யூனிஸ்டுகளை அமைச்சர் அவையில் சேர்த்துக் கொள்வதை மற்றப் பெரிய கட்சிகள் எதிர்த்ததால் சுவீர்யோவால் மந்திரி சபையை அமைக்க முடியவில்லை. ஆகையால் எதிர்பாராத வகையில் சுகர்ணோ தம்மைக் 'குடிமகன் சுகர்ணோ' (Citizen Soekarno) என நியமித்துக்கொண்டு 'நாடாளுமன்றஞ்சாராத வல்லுநர்களைக் கொண்ட நெருக்கடிநிலை அமைச்சர் அவையை' (Emergency extra-Parliamentary Cabinet of Experts) அமைக்க முயன்றார். இதன் விளைவால் கட்சிசாராத சுவாந்தா கார்தத் விஜயாவின் (Djuanda Kartawidjaja) தலைமையில் ஒரு மந்திரி சபை அமைக்கப்பட்டது. கட்சி சாராதவர்களும், தேசியக்கட்சி நக்தாதுல் உலாமா முதலிய பல சிறிய கட்சிகளின் உறுப்பினர்களும் இந்த அமைச்சர் அவையில் இடம் பெற்றார்கள். கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து ஒருவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆனால், இம்மந்திரி சபையில் உள்ள இருமந்திரிகள் கம்யூனிஸ்டுக் கட்சிக்குப் பரிவுகாட்டுபவர்கள்; கம்யூனிஸ்டுகள் நாடாளுமன்றத்தில் இம்மந்திரி சபையை ஆதரித்துப் பேசினார்கள். ஆனால், இச்சபை சட்டத்திற்குப் புறம்பானது எனக்கூறி மஸ்குமி இந்த அமைச்சர் அவையில் சேரமறுத்தது.

சுகர்ணோவும், சுவாந்தாவும் இப்புதிய அமைச்சர் அவை நாடாளுமன்றத்திற்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறது எனக்

கூறியபோதிலும், நடவடிக்கையில் மக்கள் தலைவரின் ஆட்சிக்கே கட்டுண்டு ஆட்சிபுரிந்தது. ஆகையால், நாடாளுமன்றத்தின் அதிகாரம் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. சுகர்ணோவும், இராணுவத்தினரும் அரசியலில் முக்கியப் பங்கெடுக்கத் தொடங்கினார்கள். வரையறுக்கப்பட்டு வழிகாட்டும் மக்களாட்சியின் அமைப்பிற்கு முதல்வழி போடப்பட்டது. உடனடியாகச் சுகர்ணோ சுவாந்தாவுடன் ஆலோசித்து 43 உறுப்பினர்களடங்கிய தேசிய மன்றத்தைக் கி. பி. 1957ஆம் ஆண்டு மே 6 ஆம் நாள் நெருக்கடி நிலைப் பிரகடனத்தின் மூலம் நியமித்தார்.

பிறகு கி. பி. 1957ஆம் ஆண்டில் கட்சி வேறுபாடுகள் அதிகரித்தன; சுமத்திரா, செலிபீஸ் ஆகிய இடங்களில் இராணுவ ஆட்சி புரிந்தவர்களின் தொல்லை அதிகரித்தது. சுகர்ணோவிற்கும் மஸ்ஜுமிக்கும் உள்ள மனக்கசப்புப் பெருகியது. ஜாவாவைத் தவிர மற்றத் தீவுகளில் இராணுவ அதிகாரிகள் சுகர்ணோவிற்கும் ஹட்டாவிற்கும் சமாதான உடன்படிக்கை யேற்படவேண்டும்; ஹட்டா பிரதம மந்திரியாக நியமிக்கப்படவேண்டும்; நசுதியான் முதற்பெரும் படைத்தலைவர் பதவியிலிருந்து நீக்கப்படவேண்டும் என அறிவித்தார்கள். ஏற்றுமதிப் பொருள்களின் வருமானத்தை இராணுவத் தலைவர்களே எடுத்துக்கொண்டதால் அரசாங்கத்தின் பொருளாதாரம் இழிநிலையடையத் தொடங்கியது. இராணுவத்திற்குள்ளும், சுகர்ணோவுக்கும் ஹட்டாவுக்கும் உள்ள வேற்றுமைகளைத் தீர்க்க எடுத்த சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தன. சுகர்ணோவைப் படுகொலை செய்ய எடுத்த முயற்சியும் வெற்றியடையவில்லை.

மேற்கு இரியனிலிருந்து டச்சுக்காரர்கள் வெளியேற மறுத்தார்கள். சுகர்ணோவைப் படுகொலை செய்ய முயற்சி எடுத்த நாளுக்கு முந்தின நாள் ஐக்கிய நாடுகள் அமைப்புப் பொதுப் பேரவையில் (U. N. General Assembly) மேற்கு இரியன்பற்றி மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் இந்தோனேசியாவிற்குக் கிடைக்கவில்லை. இதனால் நெதர்லாந்துடன் மேற்கு இரியன் பற்றி இந்தோனேசியா பேச்சு நடத்த முடியவில்லை. டச்சுக்காரர்கள் இந்தோனேசியாவுடன் பேச்சு நடத்த மறுத்தால் இந்தோனேசியா கடுமையான நடவடிக்கை எடுக்கும் எனச் சுகர்ணோ முன்பே எச்சரிக்கை செய்திருந்தார். முன்னெச்சரிக்கை விடுத்திருந்தபோதிலும் டச்சுக்காரர்கள் பேச்சு நடத்த ஒப்புக்கொள்ளாததால் இந்தோனேசியாவில் உள்ள டச்சுக்காரர்களின் உரிமைப் பொருள்களை டிசம்பர் மாதத்தில் கைப்பற்றினர். இந்தோனேசியாவில் வசித்து வந்த 46,000 டச்சுக்காரர்களை இந்தோனேசியாவிலிருந்து வெளியேறும்

படிக் கூறினர். டச்சுக்காரர்களின் வாணிபத்தலங்களும், தொழிற்சாலைகளும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால், டச்சு வல்லுநர்கள் இந்தோனேசியாவை விட்டு வெளியேறியதால் தன் கீழிருந்த நிறுவனங்களை இராணுவத்தால் திறமையுடன் ஆட்சிபுரிய முடியவில்லை. டச்சு வாணிபக் கப்பல்களை இந்தோனேசியா பறிக்க முயன்றதால் டச்சுக்காரர்கள் தங்கள் கப்பல்களை இந்தோனேசியாவிலிருந்து வாங்கினார்கள். ஆகையால், போதிய அளவு உள்நாட்டு வாணிபக் கப்பல்கள் இல்லாமல் இந்தோனேசியா தவித்தது.

தகுந்த முன்னேற்பாடில்லாமல் இந்தோனேசிய அரசாங்கம் டச்சுக்காரர்களின்மேல் நடவடிக்கைகள் எடுத்ததால் ஹட்டாவும், பல மஸ்ஜுமித் தலைவர்களும் அரசாங்கத்தைத் தாக்கத் தொடங்கினார்கள். மஸ்ஜுமித் தலைவர்களைச் சிலர் அச்சுறுத்தத் தொடங்கினார்கள். அரசாங்கமும் அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்புக் கொடுக்க முன்வரவில்லை. ஆகையால், நாட்சிர், சாப்ருதின் பிராவீரநெகரா, புர்ஹாநுதின் ஹரவிரப் ஆகியவர்கள் சுமத்திராவில் உள்ள பாடாங்கிற்கு (Padang) ஓடினார்கள். அங்கே படைத் தலைவர்கள் அகமத் ஹூசைனும் மற்றவர்களும் சுகர்ணோவிற்கு எதிராகக் கலகம் செய்ய முன்னேற்பாடுகள் செய்து கொண்டிருந்தார்கள். ஜாகர்த்தாவிலிருந்து ஓடிவந்த மஸ்ஜுமித் தலைவர்களும் இவர்களுடன் கலகம் செய்ய முன்வந்தார்கள். அயல் நாட்டு முகவர்களும் இவர்களுக்கு உதவி செய்வதாக வாக்குறுதி கொடுத்தார்கள். இவர்கள் புதுமைப் பாங்கான அமெரிக்க இராணுவ ஆயுதங்களைக் கலகக்காரர்களுக்குப் பார்மோசாவிலிருந்து அனுப்பினார்கள். இச்சமயத்தில்தான் சுகர்ணோ அயல்நாட்டிற்குச் சென்றிருந்தார். படைப்பகுதி முதல்வர் ஹூசைன் தலைமையில் கி. பி. 1958ஆம் ஆண்டு பிப்ரவரி 10 ஆம் நாள் இவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு இறுதி எச்சரிக்கை கொடுத்தார்கள். இவ் எச்சரிக்கை வெளியிட்ட ஐந்து நாள்களுக்குள் சுவாந்தா மந்திரி சபை கலைக்கப்படவேண்டும் என்றும், அடுத்த தேர்தல் வரும் வரை ஹட்டா அல்லது ஜோக் ஜாகர்த்தா சுல்தானின் கட்சி சாராத மந்திரிசபை ஆளவேண்டும் என்றும் சுகர்ணோ அரசியல் அமைப்புக்குகந்தவாறுள்ள மக்கள் தலைவராகத்தான் பணிபுரியவேண்டும் என்றும் நிபந்தனைகளை இவர்கள் வெளியிட்டார்கள். சுவாந்தா மந்திரிசபை இந்த இறுதி எச்சரிக்கையை மறுத்தது. ஆகையால், கி.பி. 1955ஆம் ஆண்டு 15ஆம் நாள் இக்கலகக்காரர்கள் அரசாங்கத்திற்கு எதிராகத் தாங்களே ஒரு புதிய ஆட்சியை பாடாங்கில் அமைத்ததாக அறிவித்தார்கள். சாப்ருதின் பிராவீரநெகராவைப் பிரதமமந்திரியாகத் தேர்ந்தெடுத்தார்கள். தங்களுக்கு மற்ற

இந்தோனேசியத் தீவுகளிலிருந்து பேராதரவு கிடைக்கும் என்றும், ஆகையால் மத்திய அரசாங்கம் தங்களுடைய நிபந்தனைகளைக் கடைசியாக ஏற்றுக்கொள்ளும் என்றும் இவர்கள் நம்பினார்கள். ஆனால், மத்திய சுமத்திரா, தபானுலி (Tapanuli) மாவட்டம் மற்றும் வடக்குச் சுமத்திராவில் உள்ள அட்சேவின் (Atjeh) பகுதியிலிருந்துதான் இவர்களுக்கு வெளிப்படையாக ஆதரவு கிடைத்தது. தெற்குச் சுமத்திராவில் ஆட்சிபுரிந்து கொண்டிருந்த படைப்பகுதி முதல்வர் பார்லியனும் தங்களுக்கு ஆதரவுகொடுப்பார் என இவர்கள் நம்பினார்கள். அமெரிக்க இராணுவ ஆயுதங்கள் அதிக அளவில் இக்கலகக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டன. ஆனால், அமெரிக்கக் குடியரசு இவர்களுடைய அரசாங்கத்தை வெளிப்படையாகச் சட்டப்படி ஒப்புக்கொள்ளவில்லை. போரில் ஈடுபட்ட நாடு (Belliserent Status) என்றுகூட வெளிப்படையாக அமெரிக்கக் குடியரசு ஒப்புக்கொள்ளவில்லை.

ஹட்டாமூலம் இவர்களுடன் சமரசம் செய்யலாம் எனச் சுகர்னோ நினைத்தார். ஆனால்,கடைசியில் இராணுவ வலிமையைப் பயன்படுத்தி இக்கலகக்காரர்களை அடக்கலாம் என்ற முடிவே எடுக்கப்பட்டது. ஆகையால், மத்திய அரசாங்கம் இராணுவ உதவியுடன் கலகக்காரர்களின் இருப்பிடமான சுமத்திரா, செலிபெஸ் ஆகியவற்றின்மேல் கி. பி. 1958ஆம் ஆண்டு மார்ச் 7ஆம் நாள் படையெடுத்தது. மே மாதத்திற்குள் மத்திய அரசாங்கத்தை ஆதரித்த படைவீரர்கள் பாடாங், புகட்டிங் (Bukittinggi) ஆகியவற்றைக் கைப்பற்றினார்கள். கலகக்காரர்கள் இவர்களை இவ்விடங்களில் எதிர்க்கவே முயற்சி செய்யவில்லை. சில கலகக்காரர்கள் மத்திய அரசாங்கப் படையுடன் சேர்ந்தனர். கலகக்காரர்கள் மாகாணங்களிலிருந்து வெளியேறி, கொரில்லாப்போரில் ஈடுபட்டார்கள். ஆனால், வடக்குச் செலிபெஸில் கடும்போர் மூண்டது. ஆனால், ஜூலை இறுதிக்குள் முக்கியமான எல்லா மாகாணங்களையும் அரசாங்கப்படை கைப்பற்றியது. மேலும், இரண்டரை ஆண்டுகள் கொரில்லாப்போர் நீடித்திருந்தாலும், கி. பி. 1955ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் இக்கலகத்தைத் திறமையுடன் அடக்கி ஒழித்தார்கள்.

இதன் விளைவாகச் சுகர்னோவை எதிர்த்த ஒரு பெரும்படை அரசியல் மேடையிலிருந்து நீக்கப்பட்டது. சுகர்னோவும், நசுதியானும், மத்திய இராணுவத் தலைவரும் இதனால் வலிமையடைந்தனர். முன்பிருந்ததைவிட இராணுவத்தில் தற்பொழுது அதிக ஒற்றுமையேற்பட்டது. ஆகையால், இதுவலிவடைந்தது; கலகத்திற்குப் பிறகு அரசாங்கத்தில் அதிகச் செல்வாக்குப்பெற்றது;

மஸ்ஜூமிக் கட்சி இக்கலகக்காரர்களுடன் ஒத்துழைத்ததாகக் கருதப்பட்டது. ஆகையால், மஸ்ஜூமிக்கட்சி வலிமையிழந்தது. சோஷியலிஸ்டுக் கட்சிக்கும் இதே நிலையேற்பட்டது. இச்சூழ் நிலையைத் தனக்காதரவாகக் கம்யூனிஸ்டுக்கட்சி பயன்படுத்திக் கொண்டு வளர்ச்சியடைந்தது.

சமநிலை அதிகாரங்கள்

கலகம் அடக்கப்பட்டதால் வரையறுக்கப்பட்டு வழிகாட்டும் குடியாட்சி முறையை அமைப்பதற்கு எதிராக இருந்த மிகப் பெரிய தடை நீக்கப்பட்டது. அரசியல் கட்சிகளைக் கலைக்கவேண்டும்; தேசிய முன்னணி ஒன்றை நிறுவவேண்டும் என்பன போன்ற விவரங்களில் சுகர்ணோவுக்கும், இராணுவத்திற்கும் ஒரே கொள்கைகள் இருந்த போதிலும், எவரிடம் முக்கிய அதிகாரங்கள் கொடுக்கவேண்டும் என்பதைப் பற்றிப் பிரச்சினை கிளம்பியது. சுகர்ணோவுக்கும் இராணுவத்திற்கும் அரசியல் கட்சிகளைக் கலைப்பதைப்பற்றி ஒரே எண்ணம் இருந்தபோதிலும், அக்கொள் கையைச் செயல்படுத்துவதற்கு உடனடியாகச் சுகர்ணோ தயாரா யிருக்கவில்லை. தேசிய முன்னணியைக் கட்டுப்படுத்த முழுமை யான தனிப்பட்ட அதிகாரங்கள் கிடைக்கும்வரை கட்சிகளைக் கலைக்கும் நோக்கம் அவரிடமில்லை. கி. பி. 1965ஆம் ஆண்டு அவருக்கு அத்தகைய வாய்ப்புக் கிடைக்கவில்லை. கம்யூனிஸ்டுக் கட்சியைக் கலைப்பதற்கு இராணுவம் தயாராயிருந்தபோதிலும், சுகர்ணோ அதை எதிர்த்தார். கி. பி. 1958ஆம் ஆண்டிலிருந்தே அரசியல் கட்சிகளுக்குள் கம்யூனிஸ்டுக் கட்சிக்கே மக்களிடம் மிகுந்த செல்வாக்கிருந்தது. ஆகையால், கலகம் முடிந்தபிறகு சுகர்ணோவுக்கும் இராணுவம், கம்யூனிஸ்டுக்கட்சி ஆகியவற்றுக்கும் அரசாங்கத்தை நடத்தச் சக்தியிருந்தது. தம் அதிகாரத்தை வலுப்படுத்திச் சுகர்ணோ மற்ற இரு அரசியல் சக்திகளையும் ஒரு வரை ஒருவர் எதிர்க்கச் செய்து தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயன்றார். சுகர்ணோவுக்கு இராணுவத்தின் உதவியும், இராணுவ உயர்நிலை அதிகாரிகளுக்குச் சுகர்ணோவின் உதவியும் தேவையா யிருந்தன; சுகர்ணோவிற்குக் கம்யூனிஸ்டு கட்சியின் ஆதரவும்; தம்மை இராணுவத்திடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகக் கம் யூனிஸ்டுக் கட்சிக்கு சுகர்ணோவின் ஆதரவும் தேவையாயிருந்தன.

கம்யூனிஸ்டு கட்சிக்கு ஏர் உழவர்களின் (முக்கியமாக ஜாவாவில்) ஆதரவும், தொழிலாளர்கள் சங்கங்களின் (நகர, தொழில்துறை, பண்ணைகளிலுள்ள) ஆதரவும் இருந்தன. ஆகையால், நிலையான அரசாங்கத்தை அமைக்க அவர்களுடைய ஆதரவை நாடினார் சுகர்ணோ. மேலும், கம்யூனிஸ்டுக் கட்சியைப் பாதுகாத்தால்

கம்யூனிஸ்டு நாடுகளின் ஆதரவு (முக்கியமாக மேற்கு இரியன் சுதந்திரப்போராட்டத்திற்கு) கிடைக்கும். மேலும், நாட்டின் பொருளாதாரம் இராணுவம் ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பயன் படுத்தலாம். ஆகையால், கம்யூனிஸ்டுக் கட்சியைக் கலைக்கும் இராணுவத்தினரின் எண்ணத்தைக் சுகர்ணோ ஏற்றுக்கொள்ள மறுத்தார். ஆனால், முக்கியமான நிருவாகப் பதவிகளைக் கம்யூனிஸ்டுகளுக்குக் கொடுக்கச் சுகர்ணோ விரும்பவில்லை. அவ்வாறு முக்கியப் பதவிகள் கொடுத்தால் கம்யூனிஸ்டுகளின் சக்தி அதிகரிக்கும் எனச் சுகர்ணோவிற்குத் தெரியும். ஆகையால், பெயரளவிலே அவர்களுக்குச் சில முக்கியமில்லாத பதவிகளைக் கொடுக்கச் சுகர்ணோ முன்வந்தார். அமைச்சரவையிலே கம்யூனிஸ்டுகளுக்குப் பதவி கொடுக்கக்கூடாது என இராணுவம் எதிர்த்ததைச் சுகர்ணோவால் புறக்கணிக்க முடியவில்லை.

தம்மை இராணுவத்திடமிருந்து பாதுகாத்துக்கொள்ளச் சுகர் ணோவின் உதவியைத் தேடியதால் கம்யூனிஸ்டுக் கட்சி சுகர்ணோ வின் கருத்துக்களையும் கொள்கைகளையும் பொது மக்கள் முன்பு ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மக்களுக்கு அரசாங் கத்தின் மேலிருந்த மனக்கசப்பைத் தனக்குச் சாதமாகக் கம்யூனிஸ்டுக் கட்சி பயன்படுத்த முடியவில்லை. ஆகையால், சமுதாய வகுப்புகளின் போராட்டத்தை விடப் (Class Struggle) பேரரசுத் தன்மையை எதிர்க்கும் தேசியப் போராட்டத்திற்கே கம்யூனிஸ்டுக் கட்சி முதன்மை கொடுத்தது. வரையறுக்கப்பட்டு வழிகாட்டும் குடியாட்சியின் போது கம்யூனிஸ்டுகள் சந்தர்ப்பவாதி களாக மாறிச் சமுதாய வகுப்புகளின் போராட்டத்தைப்பற்றிப் புதுவகையான பொருள்விளக்கம் கொடுத்தார்கள். கம்யூனிஸ்டுகள் கொடுத்த விளக்கப்படி இந்தோனேசியாவிலே இருவகையான சமு தாய வகுப்புகள் உள்ளன. அவை மனிபோலை ஆதரிக்கும் வகுப் பினர் [Manipol—சுகர்ணோவின் அரசியல்கொள்கை விளக்க அறி விப்பை (Political Manifesto) ஆதரிப்பவர்கள்]; மனிபோலை எதிர்ப்பவர்கள். தொழிலாளர்கள், விவசாயிகள், கீழ்நிலையில் உள்ள நகர நடுத்தர வகுப்பினர் (Petty Urban bourgeiosie), தேசிய நடுத்தர வகுப்பினர் (National Bourgeiosie), கற்றறிந் தோர் வகுப்பினர் (Intelligentsic) முதியவர்கள் மனிபோலை ஆத ரிக்கும் வகுப்பைச்சேர்ந்தவர்கள். பேரரசுக் கோட்பாடுகளின் ஆதர வாளர்கள், நிலவுடைமையாளர்கள், அயல்நாட்டு வாணிகக்கழகங் களின் இந்தோனேசிய வேலையாள்கள் (Compradors), அதிகார இனத்தைச் சார்ந்த முதலாளிகள் (Bureaucratic Capitalists) முதலியவர்கள் மனிபோலை எதிர்க்கும் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

வரையறுக்கப்பட்டு வழிக்காட்டும் குடியாட்சி வளர்ச்சி.

தம் விருப்பத்திற்கேற்றவாறு ஒரு தேசிய முன்னணியை உருவாக்கச் சுகர்ணோவால் முடியவில்லை. சுகர்ணோவும், இராணுவத்தினரும் போட்டி போட்டுக் கொண்டு இம் முன்னணியைத் தங்கள் அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவர முயற்சி செய்தார்கள். இவ்வாறான சூழ்நிலை உருவாகியதால் ஓர் ஆற்றல் மிக்க தேசிய முன்னணி அமைக்கப்படவில்லை.

ஆட்சி ஆதிக்க வெறியுடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன; கூடிப் பேசும் உரிமை கட்டுப்படுத்தப்பட்டது. அரசாங்கத்தைத் தாக்கின செய்தித் தாள்களின் அலுவலகங்கள் மூடப்பட்டன. ஆகையால், கி.பி. 1960ஆம் ஆண்டுக்குள் அரசாங்கத்தை ஆதரிக்கும் செய்தித்தாள்களே தோன்றின. சட்டப்படி பாதுகாப்புகள் கிடைப்பது அரியதாயிருந்தது. நீதிமன்றங்கள் அரசாங்கக் கொள்கைகளை ஆதரித்தே தீர்ப்பு வழங்கத் தொடங்கின. தொழிலாளர் சங்கங்களின் சக்தியை இராணுவம் குறைத்தது. தொழில் துறைகளிலும், பண்ணைகளிலும் வேலை நிறுத்தம் செய்வது சட்டத்திற்குப் புறம்பானது என அறிவிக்கப்பட்டது.

வரையறுக்கப்பட்டு வழிகாட்டும் குடியாட்சி முறையில் இராணுவம் படைத்துறை ஆகியவற்றைச் சாராதவர்களின் அதிகாரங்கள் இணைக்கப்பட்டன. அரசாங்க விவகாரங்களில் இராணுவம் முக்கியப் பங்கேற்றது. கி.பி. 1959ஆம் ஆண்டின் இடையிலிருந்து மூன்றில் ஒரு பங்கு அமைச்சர் அவைப் பதவிகளை இராணுவத்திற்குக் கொடுக்கப்பட்டன. பல இராணுவத் தலைவர்கள் தூதுவர்களாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டார்கள். புதிதாக அமைக்கப்பட்ட நாடாளுமன்றத்திலும், உயர் ஆலோசனை மன்றத்திலும், தேசிய முன்னணியிலும் இடைக்காலத்து அரசியல் நிருணய சபையிலும் (Constituent Assembly) இராணுவத்தில் இருந்த பலருக்கு முக்கியமான பதவிகள் கொடுக்கப்பட்டன.

போர்க்காலச் சட்டமிருந்ததால் படைத்துறை சாராத அலுவலகங்களும் அரசாங்கத்தின்கீழுள்ள பொருளாதாரத் துறைகளும் இராணுவத்தின்கீழ் வந்தன. மற்றப் பொருளாதாரத் துறைகளிலும் இராணுவத்தின் நிருவாக மேற்பார்வையாளராகப் பணி புரிந்தார்கள். கிராமங்களில்கூட இவர்கள் அதிகாரம் பரவியிருந்தது. ஆனால், திறமையுள்ளவர்களை இராணுவத்தினர் பதவியில் அமர்த்தாததனால் படைசாராத அரசாங்க நிருவாகமும் அரசாங்கப்

பொருளாதார பணித்துறைகளும் பாதிக்கப்பட்டன. இச்சூழ் நிலையில் செல்வமும், உயர்ந்த பதவிகளும், சலுகைகளும் அரசியல் கட்சிபோல் உருவாகத் தொடங்கின. தேசியக் கோட்பாடுகளை யும் கம்யூனிஸ்ட் எதிர்ப்பையும் தங்களுடைய புதிய பதவிகளையும் சலுகைகளையும் பாதுகாப்பதற்காக இராணுவத்தினருக்குள் ஒற்றுமை நிலவியது.

வரையறுக்கப்பட்டு வழிகாட்டும் குடியாட்சியின் கருத்தைச் சுகர்ணோவே உருவாக்கினர்; இதில் இராணுவம் பங்குகொள்ள வில்லை. 'நாம் புரட்சியை மீண்டும் கண்டுபிடிப்போம்' எனச் சுகர்ணோ கி.பி. 1959ஆம் ஆண்டு ஆகஸ்டு 17ஆம் நாளில் ஆற்றிய சொற்பொழிவே இக்கருத்தின் அடிப்படையாக விளங்கியது. இதையே பிற்காலத்தில் மனிபோல் (Manipol) அல்லது அரசியல் கொள்கை விளக்க அறிவிப்பு (Political Manifesto) என அழைத்தார்கள். கி.பி. 1945ஆம் ஆண்டுச் சட்டதிட்டம் மீண்டும் நடைமுறையில் வருவதே நல்லது என்றும், கி.பி. 1945 ஆம் ஆண்டில் புரட்சி இயக்க உணர்ச்சிகள் மீண்டும் மலர வேண்டும் என்றும் மனிபோலில் கூறப்பட்டிருந்தது. புரட்சியின் பொருளாதாரச் சமூகக் குறிக்கோள்களை நடைமுறையில் கொண்டு வராததால்—அதாவது நேர்மையான, முறைதவருத, செழிப்புள்ள சமூக அமைப்பை இதுவரையில் உருவாக்காததால் பிழைபாடுகளைத் திருத்திப் புரட்சியின் கொள்கைகளை நிறைவேற்றவேண்டும் எனச் சுகர்ணோ கூறினர்.

மனிபோலில் ஐந்து அடிப்படைத் தத்துவங்கள் இருந்தன :—

(1) கி. பி. 1945ஆம் ஆண்டுச் சட்டதிட்டம், (2) இந்தோ னேசியச் சோஷியலிஸம், (3) வரையறுக்கப்பட்டு வழிகாட்டும் குடி யாட்சி, (4) வரையறுக்கப்பட்டு வழிகாட்டும் தேசியப் பொருளாட்சி (Guided Economy), (5) இந்தோனேசியத் தனித்துவம் (Indonesian Identity) இவ்ஐந்து அடிப்படைத் தத்துவங்களையும் ஒன்ருகச்சேர்த்து 'உஸ்டெக்' (USDEK) என அழைக்கிருர்கள்; அதாவது இந்தோனேசிய மொழியிலே இத்தத்துவங்களில் தொடங்கும் முதல் ஐந்து கொள்கைகளைக் கலந்து 'உஸ்டெக்' என அழைக்கிருர்கள். இத்தத்துவங்களைச் சுகர்ணோ தெளிவாக வரையறுக்கவில்லை; ஆனல் சுகர்ணோவின் அரசியல் தத்துவங் களுடனும் பொருளியல் தத்துவங்களுடனும் இவை ஒத்திருந்தன.

அரசியல் கட்சிகளின் சுதந்திரம் விரைவாகக் குறைக்கப் பட்டது. கி. பி. 1958ஆம் ஆண்டு செப்டம்பரில் பிரதம மந்திரியின் சுவாந்தா கி.பி. 1959ஆம் ஆண்டு செப்டம்பரில் நடக்கவேண்டிய

தேர்தல் ஒத்திவைக்கப்படும் என அறிவித்தார். சுகர்ணே ஒரு புதிய தேர்தல் சட்டத்தை அறிவித்தார். அரசியல் கட்சிகளை ஓரளவு வலிகுன்றச் செய்யவேண்டும். ஆனல் அதே சமயத்தில் அவை களுக்கு இராணுவத்தை எதிர்க்கக்கூடிய அளவு சக்தியிருக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டது இப்புதிய தேர்தல் சட்டம். இச்சட்டத்தின்படி நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் 50 விழுக்காடு உறுப்பினர்களை அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட 'பணிபுரியும் உறுப்பினர் வகுப்பு' (functional groups) பணி புரியும் பிரிவினரிலிருந்து அரசாங்கம் தேர்ந்தெடுக்கும். ஆனல், இவ்வுறுப்பினர் குழுவிலிருந்து 33 விழுக்காடு உறுப்பினர் தாம் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என அரசியல் கட்சிகள் வலியுறுத்தின.

சுகர்ணேவுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் ஏற்பட்ட பூசல் கி. பி. 1959ஆம் ஆண்டு பிப்ரவரி 20ஆம் நாள் வரை நீடித்தது. கி. பி. 1945ஆம் ஆண்டுத் திட்டத்தைத் திரும்பவும் நடை முறைக்குக் கொண்டுவரவேண்டும் என அரசாங்கம் அறிவித்தது. இத்தகைய செயல் வரையறுக்கப்பட்டு வழிகாட்டும் குடியாட்சி முறைவரும் என நம்பினர்கள். கி. பி. 1945ஆம் ஆண்டுச் சட்ட திட்டம் மக்கள் தலைவருக்குத்தான் மிகுந்த அதிகாரங்களைக் கொடுக்கிறது. அரசாங்கம் ஒரு புதிய தேர்தல் சட்டத்தையும் அறிவித்தது. சுகர்ணே தலைமையின் கீழுள்ள தேசிய முன்னணி யிலிருந்த நாடாளுமன்றத்தின் பாதி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக் கப்படுவார்கள். பணிபுரியும் உறுப்பினர்கள் வகுப்பிலிருந்து தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும். ஆனல், நாடாளுமன்றத்தின் இராணுவ உறுப்பினர்களை மட்டும் அவர்களுடைய தலைமை அதிகாரிகள் நியமிப்பார்கள் ஆகையால், தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள். கி. பி. 1955ஆம் ஆண்டு டிசம் பரில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணயசபை இன்னும் கலைக் கப்படாமல் பணிபுரிந்து கொண்டிருந்தது. மஸ்ஜுமி, நக்தாதுல், உலாமா ஆகிய கட்சிகளின் தலைமையில் பல முஸ்லிம் உறுப்பினர் கள் குடியரசுத் தலைவர் முஸ்லிமாகத்தான் இருக்கவேண்டும்; எல்லா இந்தோனேசிய முஸ்லிம்களும் முஸ்லிம் சட்டத்தைப் பின்பற்றித் தான் ஆகவேண்டும் என வலியுறுத்தினர்கள். இதனல் அரசியல் நிருணயசபையின் நடவடிக்கைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக் கப்பட்டது.

இப்பூசலினல், தாற்காலிகமாக அரசியல் நடவடிக்கைகள் இருக்கக்கூடாது என்ற தடுப்புச் சட்டத்தை நசுதியான் அறிவித் தார். சுகர்ணே இச்சமயத்தில் அயல் நாட்டிற்குச் சென்றிருந்தார்.

அயல்நாட்டிலிருந்து திரும்பியவுடன், இராணுவ அனுமதியுடன் சுகர்ணோ அரசியல் நிருணயசபையைக் கலைத்தார். கி.பி. 1950ஆம் ஆண்டுச் சட்டதிட்டம் நீக்கப்பட்டது. கி.பி. 1945ஆம் ஆண்டுச் சட்டதிட்டம் நடைமுறைக்கு வருகிறது என்ற சட்டத்தையும் அறிவித்தார். நெருக்கடி நிலையில் அதிகாரத்தோடொத்த கட்டளைகளை அரசாங்கம் சட்டம் மாற்றலாம் எனக் கி. பி. 1945ஆம் ஆண்டுச் சட்டதிட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. சுகர்ணோ இம் முறையைப் பலமுறை பயன்படுத்தினர். புதிய அமைச்சர் அவையிலே இராணுவத்தைச் சேர்ந்தவர்களுக்கு மிகுந்த பதவிகள் கொடுக்கப்பட்டன. அமைச்சர்கள் அரசாங்கக் கட்சியின் உறுப்பினர்களாக இருக்கக்கூடாது என்றும், உயர்பதவியிலிருக்கும் படைத்துறை சாராத அரசியல் அலுவலர்கள் அரசாங்கக் கட்சிகளுடன் யாதொருதொடர்பும் கொள்ளக்கூடாது என்றும் அரசாங்கம் அறிவித்தது.

குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்கீழ் இரண்டு ஆலோசனை மன்றங்கள் அமைக்கப்பட்டன. (1) உயர் ஆலோசனை மன்றம் (Higher Advisory Counsil) இம்மன்றத்தின் கூட்டத்தலைவராக ரோஸ்லன் அப்துல்கனி (Roeslan Abdul Gani) நியமிக்கப் பட்டார். (2) தேசியத் திட்டமன்றம் (National Planning Council) கம்யூனிஸ்டு அல்லாத தீவிரச் சோஷியலிஸக் கொள்கைகளையுடைய முகம்மது யாமின் (Mohammed Yamin) இம்மன்றத்தின் கூட்டுத் தலைவராக நியமிக்கப்பட்டார். சோஷியலிஸ மஸ்ஜூமிக் கட்சிகளின் உறுப்பினர்கள் இம்மன்றங்களில் சேரக்கூடாது எனத் தடை விதிக்கப்பட்டது. ஆனல், அவைகளின் நடவடிக்கைகள் கட்டுப் படுத்தப்பட்டன. கூட்டங்கள் கூடுவதற்கு அரசியல் கட்சிகள் இராணுவத்தின் அனுமதியைப் பெறவேண்டும்.

கி.பி. 1959ஆம் ஆண்டு செப்டம்பரில் கிளையாட்சியை வன்மை யுறச் செய்த சட்டங்களை ஒழித்தது; மத்திய அரசாங்கத்தின் ஆட்சியை வலிமையுறச் செய்தனர். இராணுவமும் இதை ஆதரித்து வரவேற்றது, மாகாணங்களின் (First level region) ஆளுநர்களைக் குடியரசுத் தலைவர் நியமிப்பார் மாகாணங்களின் கீழுள்ள வட்டாரத் தலைவர்களை (Second level region) உள்நாட்டு அமைச்சர் நியமிப்பார். ஆனல், குடியரசுத் தலைவர் இந்தத் தீர்மானங்களை ஒப்புக்கொள்ளவேண்டும். பிரதேசச் சட்டமன்றத்தின் சட்டம் நிறைவேற்றும் சபைகளின் (Regional legislatures' executive boards) உறுப்பினர்கள் அரசியல் கட்சிகளிலிருந்து விலக வேண்டும். இவ்வாறுகச் சட்டதிட்டங்கள் அரசியல் கட்சிகளின் செல்வாக்கையும் அதிகாரத்தையும் குறைத்தன.

கி. பி. 1960ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5ஆம் நாள் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை (budget) நாடாளுமன்றம் புறக்கணித்தது. ஆகையால், சுகர்ணோ நாடாளுமன்றத்தைக் கலைத்தார். கி பி 1945ஆம் ஆண்டுச் சட்டதிட்டத்தைப் பின்பற்றி நாடாளுமன்றத்திற் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள் எனச் சுகர்ணோ அறிவித்தார். இதுவே நாடாளுமன்றக் குடியாட்சி அமைப்பைக் குழிதோண்டிப் புதைக்க வழியமைத்தது.

கி. பி. 1960ஆம் ஆண்டு ஜூன்மாதம் சுகர்ணோ புதிய நாடாளுமன்றத்தைத் தொடங்கினார். அரசியல் கட்சிகளிலிருந்தும் பணிபுரியும் உறுப்பினர் வகுப்பினர்களிலிருந்தும் இம்மன்றத்தின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 132 பணிபுரியும் உறுப்பினர் வகுப்பினர் அங்கத்தினர்களையும் (36 உறுப்பினர்கள் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள்) 130 அரசியல் கட்சி உறுப்பினர்களையும், தேசியக்கட்சியின் 44 உறுப்பினர்களையும், நக்தத்துல் உலாமா கட்சியின் 36 உறுப்பினர்களையும், 30 கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களையும், 20 சிறிய கட்சிகளின் உறுப்பினர்களையும் நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களாகச் சுகர்ணோ நியமித்தார். மஸ்ஜூமி, சோஷியலிஸ்டு ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் நியமிக்கப்படவில்லை. நாடாளுமன்றத்திற்கு மிகுந்த அதிகாரங்கள் கொடுக்கப்படவில்லை. உயர் ஆலோசனை மன்றம் நாடாளுமன்றத்தைவிடச் சக்திவாய்ந்ததாயிருந்தது; இவ்வாலோசனைச் சபையே குடியரசுத் தலைவரின் முக்கிய ஆலோசனைச் சபையாக பயன்படுத்தப்பட்டது. முஸாவரத்—முபாகட் முறை மூலம் நாடாளுமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவ்வாறு முஸாவரத்—முபாகட் முறை மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட முடியவில்லையென்றால் குடியரசுத் தலைவரே இறுதியாகத் தீர்மானம் எடுக்கவேண்டும்

கி. பி. 1960ஆம் ஆண்டு ஜூலை மாதம் அரசியல் கட்சிகள் தொடர்பான சட்டம் நடைமுறைக்கு வந்தது 150,000 உறுப்பினர்கள் இருந்தால்தான்; 21 மாகாணங்களிலும் 300 மாவட்டங்களிலும் (Kabupatens) 25 விழுக்காடு கிளை நிறுவனங்கள் இருந்தால்தான் ஓர் அரசியல் கட்சியை அமைக்கலாம். எல்லாக் கட்சிகளும் சுகர்ணோவின் கருத்துகளை ஏற்றுக்கொள்ளவேண்டும். அரசாங்கத்திற்கு எதிராக ஏதாவது ஓர் அரசியல் கட்சி கலகத்தில் ஈடுபட்டிருந்தால் அக்கட்சி கலைக்கப்படும்.

இதன் விளைவாகச் சோஷியலிஸ மஸ்ஜூமிக் கட்சிகள் கலைக்கப்பட்டன. கி பி 1961ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் நாள் அரசாங்கத்

தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எட்டுக் கட்சிகளின் பெயரைச் சுகர்ணோ அறிவித்தார். அவை தேசியக்கட்சி, பார்மின்தோ (Parkindo—தேசியக் கட்சியின் இடதுசாரிப் பிரிவிலிருந்து வெளியேறியவர்களின் கட்சி) இப்கீ (Ipki—இராணுவத்துடன் தொடர்பு கொண்டிருந்த ஒரு சிறிய கட்சி), நக்தாதுல் உலாமா, கத்தோலிக்க சமயத்தினரின் கட்சி, சுகர்ணோவுடன் நெருங்கிய தொடர்புள்ள பி. எஸ். ஐ. ஐ. [(PSII) பிரிவினர்—சிறிய இஸ்லாமியர்களின் கட்சி], முர்பா (Murba—சிறிய தேசியக் கம்யூனிஸ்ட் கட்சி) ஆகியவை ஆகும். மூன்று மாதத்திற்குப் பிறகு பார்கின்தோ (Parkindo—பிராட்டெஸ்டன்ட் மதப்பிரிவினர் கட்சி], பெர்தி (Perti—சிறிய இஸ்லாம் கட்சி) ஆகிய கட்சிகளின் பெயரும் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்சிகள் என அறிவிக்கப்பட்டது. கி. பி. 1962 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சோஷியலிஸ்டு, மஸ்சூமித் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஷாஃரீர் கூடக் கைது செய்யப்பட்டார்.

கி. பி. 1960 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மக்கள் ஆலோசனைச் சபை (Pople's Consultative Assembly) அமைக்கப்பட்டது. ஆட்சி அமைப்பிலே உயர்ந்த இடம் கொடுக்கப்பட்டிருந்த இச்சபையே குடியரசு தலைவரைத் தேர்ந்தெடுத்தது. இக் குடியரசுத் தலைவரே இதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார். அரசாங்கத்தின் முக்கியத் திட்டங்களை இச்சபையே அறிவிக்க வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இச்சபை கூடவேண்டும். சட்டமுறைப்படி இச்சபை உறுப்பினர்களை மக்கள் தேர்ந்தெடுக்கவேண்டும். ஆனால் இதன் 499 உறுப்பினர்களில் 216 உறுப்பினர்களைப் பணிபுரியும் உறுப்பினர்கள் வகுப்பிலிருந்து சுகர்ணோ நியமித்தார். இதன் எஞ்சிய உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டார்கள். சுகர்ணோ பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கின்ற சபையின் உறுப்பினர்களெல்லாம் அவரால் நியமிக்கப்பட்டவர்கள். கி. பி. 1960 ஆம் ஆண்டு நவம்பரில் மக்கள் ஆலோசனை சபை கூடியது.

தேசிய முன்னணி இராணுவத்தின் கட்டுப்பாடுகளின்கீழ் அடங்கியிருந்தது. இதனால் மனக் கசப்புற்ற சுகர்ணோ கி.பி. 1961 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஒரு புதிய தேசிய முன்னணியை அமைத்தார். தம் அதிகாரத்தின்கீழ் இம்முன்னணி வரவேண்டும் எனச் சுகர்ணோ விரும்பினார். ஆனால், இம்முயற்சி வெற்றி பெறவில்லை. இராணுவத்திற்குத்தான் இம்முன்னணியில் அதிகச் செல்வாக்கிருந்தது. ஆகையால், சுகர்ணோவுக்கென்று ஒரு தனிச் சக்திவாய்ந்த அரசியல் கழகம் உருவாகவில்லை.

15. இந்தோனேசியப் பொருளாதாரச் சூழ்நிலை

இந்தோனேசிய மக்கள்தொகை அதிகரித்ததற்குச் சமமாகப் பொருளாதார வளர்ச்சியேற்படவில்லை; சராசரியாக ஒவ்வொரு வருடைய வருமானமும் குறைந்திருந்தது. கி.பி. 1950ஆம் ஆண்டிலிருந்த சூழ்நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் கி.பி. 1960ஆம் ஆண்டில் ஏற்றுமதி குறைந்திருந்தது. இரப்பர் உற்பத்தியைக் கி.பி. 1950ஆம் ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்த்தால் கி.பி. 1960ஆம் ஆண்டில் 10 விழுக்காடு குறைந்திருந்தது; கி.பி. 1960ஆம் ஆண்டுக்குப் பிறகும் குறைந்துகொண்டே வந்தது. அரிசி உற்பத்தி 10 விழுக்காடு அதிகரித்திருந்தது; ஆனால் மக்கள் தொகை 30 விழுக்காடு அதிகரித்திருந்தது. ஆகையால், இந்தோனேசியா அரிசியை இறக்குமதி செய்தது. தொழிற்சாலைகளின் இயல்திறன் (capacity) 50 விழுக்காடு குறைந்திருந்தது. உதிரி யுறுப்புகளும், மூலப் பொருள்களும் தொழிற்சாலைகளுக்குக் கிடைக்கவில்லை. புகைவண்டி, கப்பல் போக்குவரத்துகளில் தரக் குறைவு உண்டாகியது. வரையறுக்கப்பட்ட மக்களாட்சி அரசாங்கத்தின் கீழும் இந்த நிலை சீர்ப்படவில்லை.

பணவீக்கம் மலிந்தது; பொருளாதார வளர்ச்சிக்காக அரசாங்கம் அதிக மூலதனம் இடவில்லை. அயல்நாட்டுத் தனியாளர்கள் இந்தோனேசியாவில் மூலதனம் இட அரசாங்கம் ஊக்கமளிக்கவில்லை. அமெரிக்க எண்ணெய் வாணிகத்தலங்களுக்குத்தான் அவ்வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. அயல்நாட்டினரிடமிருந்து பாறை எண்ணெய் வியாபாரத்தலங்கள் மூலமாகத்தான் அரசாங்கத்திற்குச் சிறிது வருமானம் கிடைத்தது. 1958-1961ஆம் ஆண்டுக் காலத்தின்போது பணவீக்க நிலை மிகவும் பெருகத் தொடங்கியது. கி.பி. 1962ஆம் ஆண்டு மேற்கு இரியன் போரின் போது இது மேலும் அதிகரித்தது. அரசாங்கம் துணையாதரவு (subsidy) கொடுத்ததால்தான் படைசாராத அரசாங்க அலுவலர்களால் வாழ முடிந்தது. மேலும், ஒருவரே பல உத்தியோகங்கள் செய்யத் தொடங்கினார்கள். அதன் மூலம்தான் அவர்களால் வாழ்க்கையைச் சீர்ப்படுத்த முடிந்தது. இக்காரணத்தால் கையூட்டும் ஊழலும் அதிகரிக்கத் தொடங்கின.

இந்தோனேசியப் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சி அடையக் காரணம் என்ன? (1) கி.பி. 1956-1961ஆம் ஆண்டுகளில் நடந்த கலகங்கள்; (2) மேற்கு இரியன் போரும், பிரசாரமும்; (3) டச்சு முதலீட்டையும் வல்லுநர்களையும், இந்தோனேசியாவைவிட்டு வெளியேற்றியது. நாட்டைச் சீர்ப்படுத்த வேண்டுமென்றால் தன்

நாட்டிலுள்ள அயல்நாட்டுப் பொருளாதார ஆதிக்கத்தை ஒழித்தால் மட்டும் போதாது. மூலதனமும், வல்லுநர்களும் தேவை; ஆனால் இந்தோனேசியாவில் இவை கிடைப்பது அரியனவாயிருந்தன. சோஷியலிஸப் பொருளாதார அமைப்பை நிறுவினால் மட்டும் போதாது; அதைக் கட்டுப்பாட்டுடனும், திறனுடனும் சீர்திருத்த வேண்டும்.

பண வீக்கச் சூழ்நிலையிலிருந்து இந்தோனேசிய விவசாயிகள் பாதுகாக்கப்பட்டபோதிலும் அவர்களுடைய வாழ்க்கை நிலைமை குறையத் தொடங்கியது. 48,500 சதுர மைல்கள் உள்ள ஜாவாத் தீவில் 66 மில்லியன் ஆக உள்ள மக்கள் தொகை 1·5 மில்லியன் வீதம் அதிகரிக்கிறது. இதைக் குடும்பக் கட்டுப்பாட்டின் மூலம் இந்தோனேசிய அரசாங்கம் கட்டுப்படுத்த முயலவில்லை. ஜாவாவில் உள்ள 40 விழுக்காடு விவசாயிகள் நிலச் சொந்தக்காரர்களாயிருந்தார்கள். பெரும்பான்மையான இந்தோனேசிய விவசாயிகள் ஜாவாவில் வசிக்கிறார்கள். கிராமப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் மிகக் குறைவே. கிராமங்களில் தொழிற்சாலைகள் அமைக்கப்படவில்லை. ஜாவா நகரங்களில் தொழிற்சாலைகளில் வேலைகிடைக்க வாய்ப்பில்லை. நிலமில்லாத ஏர் உழவர்களுக்கும் நகரங்களில் வேலை கிடைக்கவில்லை.

நடுநிலைக்கல்வி பயின்றவர்களுக்கும், பட்டம்பெற்றவர்களுக்கும் படிப்புக்கேற்ற வேலை கிடைப்பது அரிதாயிருந்தது. அரசாங்க உத்தியோகத்திலும், இராணுவத்திலும் வேலைசெய்ய ஒரு சிலருக்கே வாய்ப்புக் கிடைத்தது.

அயல்நாட்டு உதவியின் மூலம் இந்தோனேசியப் பொருளாதாரச் சூழ்நிலையில் சிறிது வளர்ச்சியேற்பட்டது எனக் கூறலாம். இவ்வுதவியில் பெரும்பான்மையான பகுதி அரசியலை அன்றாடம் நடத்துவதற்காகவே செலவழிக்கப்பட்டது; பொருளாதார வளர்ச்சிக்காகப் பயன்படுத்தவில்லை. கி.பி. 1962ஆம் ஆண்டில் 1·6 மில்லியன் டாலர் வெளிநாட்டுக் கடன் இருந்தது. சோவியத் கூட்டிணைப்பு நாடுகளுக்கு இதில் 883 மில்லியன் டாலர்கள் கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டும். இதில் நான்கில் மூன்று பகுதி இராணுவ ஆயுதங்கள் வாங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. அமெரிக்கக் குடியரசுக்கு 180 மில்லியன் டாலர்கள் கடனை அடைப்பதற்காகக் கொடுக்கவேண்டியிருந்தது. வெளிநாட்டு உதவி கிடைத்ததால் நாட்டிற்குள் மூலதனம் திரட்ட இந்தோனேசியா முயற்சி எடுக்கவில்லை.

தொழிற்சாலைகள், வாணிபம் ஆகியவற்றின் மூலமாகக் குறைந்த அளவில்தான் பயன்வந்தது. பொதுவாகக் கைவினைத் திறன் (Handicraft) நிலையிலே இந்தோனேசியா இருந்தது. வரையறுக்கப்பட்டு வழிகாட்டும் குடியாட்சி முறை தொடங்கிய வுடன் அரசாங்கமே பொருளாதாரம் பற்றிய வாணிபத் தலங்களை அமைத்தது. கி.பி. 1959ஆம் ஆண்டில் அரசாங்கம் செலாவணி யின் மதிப்பைக் குறைத்தது. கி.பி. 1959–1960ஆம் ஆண்டுகளில் ஓர் ஐந்தாண்டு வளர்ச்சித் திட்டத்தை வகுத்தது. ஆனால் இது பற்றி நடவடிக்கை எடுக்கவில்லை. பின் கி.பி. 1961 முதல் 1968 முடிய எட்டு ஆண்டு வளர்ச்சித் திட்டத்தை நடைமுறையில் கொண்டுவந்தது. இதனாலும் இந்தோனேசியாவின் பொருளாதார நிலை வளர்ச்சியடையவில்லை. கி.பி. 1962ஆம் ஆண்டில் ஒவ் வொருவருடைய ஆண்டு வருமானம் 24 பௌண்ட். கி.பி. 1850ஆம் ஆண்டில் இந்தோனேசியர்களின் வருமானம் இதைவிட அதிகமா யிருந்தது.

பொருளாதாரச் சூழ்நிலையில் வளர்ச்சியில்லாமல் இருந்தாலும் நாம் இந்தோனேசியர்களை இகழ்ச்சியுடன் நோக்கக் கூடாது. மிகப் பெரிய திட்டங்களில் இந்தோனேசியா வளர்ச்சியடைய வில்லையென்றாலும், சிறு திட்டங்களின் மூலம் மக்களின் வாழ்க்கை யில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. கல்வித்துறையிலே வளர்ச்சி யிருந்ததை யாரும் மறுக்க முடியாது. சுகாதாரத் துறையைச் சேர்ந்தவர்கள் சுறுசுறுப்புடன் வேலை செய்ததால் பல தீவிர நோய் கள் மூலம் இறப்பவர்களின் எண்ணிக்கை குறைந்தது. இந்தோ னேசியப் பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டும் என்ற விழிப் புணர்ச்சி மக்களிடையே ஏற்பட்டது.

16. இந்தோனேசியாவின் அயல்நாட்டு உறவுகள்

டச்சுக் குடியேற்ற ஆட்சியில் ஏற்பட்ட அனுபவங்களைச் சுதந்திர இந்தோனேசியா மறக்கவில்லை. அயல்நாடுகள் இந்தோ னேசியாவைத் தங்கள் அடிமையாக மாற்றிவிடுமோ என அஞ்சியது. ஆகையால், அயல்நாடுகளுடன் எச்சரிக்கையுடன் தொடர்புகொண்டது. மேலும், கி.பி. 1945—1950ஆம் ஆண்டு அமெரிக்கக் குடியரசும், சோவியத் உருசியாவும் இந்தோனேசியச் சுதந்திர இயக்கத்தில் தலையிட்டதை இந்தோனேசியாவால் மறக்க முடியவில்லை. இந்நாடுகள் சுயாட்சி வாங்கிக்கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தோனேசியாவின் சுதந்திர இயக்கத்தில் தலையிடவில்லை; தங்கள் நலத்திற்குச் சாதகமாகப் பயன்படுத்தும் நோக்கத்துடன்தான் தலையிட்டன. சுதந்திரப்

புரட்சிப் போரின்போது 3½ ஆண்டுகள் சோவியத் உருசியாவும் அமெரிக்கக் குடியரசும் மறைமுகமாக டச்சுக்காரர்களுக்கோ கம்யூனிஸ்டுகளுக்கோ உதவி செய்ததை இந்தோனேசியா மறக்க வில்லை. இந்தோனேசியாவுக்கு உதவி, சுதந்திரம் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் இந்நாடுகளிடையே இல்லாமல் இருந்தது. ஆகையால், வெளிநாட்டு உறவுபற்றி ஒரு சுதந்திர வெளிநாட்டுக் கொள்கையை இந்தோனேசியா அறி வித்தது.

உலகத்தில் இருகூறுகப் பிரிந்து ஒன்றையொன்றை எதிர்க்கும் மிகப் பெரிய நாடுகளின் கூட்டணிகளில் சேர இந்தோனேசியா மறுத்தது. தனித் தன்மையுடன் தன்னிச்சைப்படி அயல்நாட்டு விவகாரங்களில் நடந்துகொள்வதே தன்னுடைய குறிக்கோள் என இந்தோனேசியா அறிவித்தது. வெளிநாடுகளுடன் தொடர் பில்லாமல் ஒதுங்கித் தனித்து இருப்பது இந்தோனேசியாவின் நோக்கமன்று. சுதந்திரத்துடன் ஒவ்வொரு வெளிநாட்டு விவகாரத்தையும் அலசி ஆராய்ந்து தீர்மானம் எடுப்பதே இந்தோனேசியாவின் குறிக்கோள். முடிவாகக் குடியேற்றப் பேரரசுக் கோட்பாடுகளை எதிர்ப்பதே இதன் நோக்கம். ஆகையால் தன் வெளிநாட்டுக் கொள்கையைச் சுதந்திரமும் சுறுசுறுப்பு முடைய அயல்நாட்டுக்கொள்கைகள் (Independent and active Foreign Policy) என இந்தோனேசியா அழைத்தது. ஆசியாக் கண்டத்தின் விவரங்கள்பற்றிப் பெரும் நாடுகள் ஆசிய நாடுகளின் ஆலோசனைகளைக் கேட்பதில்லை என இந்தோனேசியா கண்டனம் தெரிவித்தது. இந் நாடுகளுக்கு அறிவு புகட்டுவதற்காகவே கி.பி. 1955ஆம் ஆண்டில் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் மாநாட்டை மேற்கு ஜெனிவாவில் உள்ள பாண்டுங்கில் நடத்தியது. ஆசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளையும் கி.பி. 1962ஆம் ஆண்டில் ஜாகர்த்தாவில் நடத்தியது. கி.பி. 1957ஆம் ஆண்டி லிருந்து வரையறுக்கப்பட்டு வழிகாட்டும் குடியாட்சியமைப்பைத் தொடங்கியவுடன், உலக அரங்கிலே இந்தோனேசியா முக்கியப் பங்குகொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் சுகர்ணோ இந்தோ னேசியாவின் அயல்நாட்டுக் கொள்கையைச் செயல்படுத்தத் தொடங்கினர். குடியேற்ற ஆட்சி அதிகாரத்தின்கீழ் உள்ள நாடுகளுக்குச் சுதந்திரம் வாங்கிக்கொடுக்க வேண்டும்; உலகக் கூட்டணிகளில் சேராத நாடுகளுக்குத் தலைவராகத் திகழ வேண்டும் எனச் சுகர்ணோ விரும்பினர்.

இந்தோனேசிய அயல்நாட்டுக் கொள்கைகளிலே மேற்கு இரியன் அல்லது மேற்கு நியூகினி தொடர்பான கொள்கையே

மிகச் சிறப்பு வாய்ந்தது. மேற்கு இரியன் இந்தோனேசியாவிற்குச் சொந்தமானது. ஆகையால் டச்சுக்காரர்கள் அத் தீவைவிட்டு வெளியேற வேண்டும் என எல்லா இந்தோனேசியர்களும் கூறினுர்கள். இதுபற்றி இந்தோனேசியாவை ஆதரித்த வெளிநாடு களுடன் இந்தோனேசியா நெருங்கிய தொடர்புகொள்ள அஞ்ச வில்லை; ஆனல் ஆதரிக்காத நாடுகளின் மேல் இந்தோனேசியா விற்கு வெறுப்போங்கியது. சோவியத் உருசியாவும், கம்யூனிஸ்டு சீனவும் இந்தோனேசியாவின் மேற்கு இரியன் கொள்கையை ஆதரித்தன. ஆகையால், இந் நாடுகளுடன் இந்தோனேசியா நெருங்கிய உறவுகொள்ளத் தயங்கவில்லை. அமெரிக்கக் குடியரசு நடுநிலை வகித்தது. இதன் விளைவாக அமெரிக்கக் குடியரசு டச்சு அரசாங்கத்தையே ஆதரிக்கிறது என இந்தோனேசியர்கள் கூறினுர்கள். மித அரசியல்வாதிகளான ஹட்டாவும், மஸ்சூமித் தலைவர்களும்கூட இவ்வாறு கூறினுர்கள். அமெரிக்கக் குடியரசு இந்தோனேசியாவை ஆதரிக்காததனுல்தான் கி.பி. 1957ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்புப் பொதுப் பேரவையில் இந்தோனேசியாவிற்கு மூன்றில் இரண்டு பங்குகள் கிடைக்கவில்லை. இதன் விளைவாக மேற்கு இரியன் தொடர்பாக நெதர்லாந்து இந்தோனேசியாவுடன் சமரசம் பேச முன்வரவில்லை.

டச்சு அரசாங்கம் மேற்கு இரியனைவிட்டு வெளியேருது என்ற எண்ணம் இந்தோனேசியர்களிடையே உறுதிப்பட்டது. ஆகை யால், டச்சு—எதிர்ப்பு உணர்ச்சிகள் இந்தோனேசியாவிலே அதிகரிக்கத்தொடங்கின. சினம் கொண்ட இந்தோனேசியத் தலைவர்கள் கி.பி. 1956ஆம் ஆண்டில் டச்சுக்காரர்களுடன் இருந்த வட்டமேஜை மாநாட்டின் ஒப்பந்தத்தைத் தாமாகவே நீக்கினர். (Unilateral abroagation) இதன் விளைவாக இந்தோனேசியா நெதர்லாந்திற்குக் கொடுக்கவேண்டிய கடனும் ஒழிக்கப்பட்டது. கி.பி. 1957ஆம் ஆண்டு டிசம்பரில் இந்தோனேசியாவில் இருந்த டச்சுக்காரர்களின் உரிமைப்பொருள்களும் பறிக்கப்பட்டன. 46,000 டச்சுக்காரர்கள் இந்தோனேசியாவைவிட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

கி.பி. 1958ஆம் ஆண்டில் இந்தோனேசியாவில் கலகம் மூண்டதால் இந்தோனேசியாவிற்கு மேற்கு இரியனைப்பற்றிச் சிந்திக்க நேரம் கிடைக்கவில்லை. ஆனல் கி.பி. 1960ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இந்தோனேசியா நெதர்லாந்துடன் இருந்த தூதுவ உறவைத் துண்டித்தது. மேற்கு இரியனுக்குப் படை யெடுத்துச்செல்ல ஆயத்தமாயிற்று. இந்தப் போர் தொடர்பாக இந்தோனேசியாவிற்குப் போர்க் கருவிகள் தேவையாயிருந்தன.

இவைகளை அமெரிக்கக் குடியரசு கொடுக்க மறுத்தது. ஆகையால், இந்தோனேசியாவின் உதவியை நாடிப் போர்க்கருவிகளை உருசியா இந்தோனேசியப் படைக்கலன்கள் உடன்படிக்கையின்படி 450 மில்லியன் டாலர்கள் மேற்கு இரியன் போருக்காகச் சோவியத் உருசியா இந்தோனேசியாவிற்குக் கொடுத்தது.

கி.பி. 1961ஆம் ஆண்டு நவம்பரில் இந்தோனேசியா மேற்கு இரியனை விடுதலை செய்வதற்காகப் படையெடுக்கும் எனச் சுகர்ணோ அறிவித்தார். இந்தோனேசியக் கொரில்லாப் போர் வீரர்கள் மேற்கு இரியனில் இறங்கினார்கள்.

ஆகையால், அமெரிக்காவை ஆட்சி புரிந்த கென்னடி அரசாங்கம் இந்தோனேசியாவுடன் பேச்சு நடத்தும்படி நெதர் லாந்தை வற்புறுத்தியது. இதன் விளைவாக ஐக்கிய நாட்டு அமைப்பின் செயலாளர் பெருந்தலைவர் (Secretary General) யூதாந்த் (Uthant) உதவியுடன் பேச்சுத் தொடங்கப்பட்டது. கி.பி. 1962ஆம் ஆண்டின் இறுதியில் இந்தோனேசியாவிற்கும் நெதர்லாந்திற்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. கி.பி. 1962ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் நாள் வரை மேற்கு இரியன், ஐக்கிய நாட்டு அமைப்பின் அதிகாரத்தின் கீழிருக்கும்; பிறகு கி.பி. 1963ஆம் ஆண்டு மே 1ஆம் நாள் வரை இந்தோனேசிய ஐக்கிய நாட்டுக் கூட்டணி ஆட்சியின் கீழிருக்கும். அதன் பிறகு மேற்கு இரியன் இந்தோனேசிய ஆட்சியின் கீழிருக்கும். ஆனால் கி.பி. 1969ஆம் ஆண்டில் சுயாட்சி வேண்டுமா? இந்தோனேசியாவுடன் இணைய வேண்டுமா? என மேற்கு இரியன் மக்களின் எண்ணத் தைத் தேர்தல் நடத்தித் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதே அந்த ஒப்பந்தமாகும்.

கி.பி. 1956ஆம் ஆண்டின் இறுதியிலிருந்தே அமெரிக்காவின் மேல் சுகர்ணோவுக்கு ஐயம் ஏற்பட்டது. இந்தோனேசியத் தீவு களில் நடந்த இராணுவக் கலங்களுக்கு அமெரிக்கக் குடியரசு உதவி புரிந்தது என்ற எண்ணம் வலுத்தது. கி.பி. 1958ஆம் ஆண்டுக் கலகத்தின்போதும் அமெரிக்கக் குடியரசுக் கலகக்காரர்களுக்கு உதவியது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இதனால் சுகர்ணோ வுக்கும், அமெரிக்கக் குடியரசுக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது. மேலும், அமெரிக்காவை ஆதரித்த பல தென் கிழக்கு நாடுகளும் இந்தோனேசியக் கலகக்காரர்களுக்கு உதவி புரிந்தார்கள் என நிரூபிக்கச் சான்றுகள் இருந்தன. பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள கிளார்க் (Clarke) தளத்திலிருந்து கலகக்காரர்கள் இந்தோனேசி வின்மீது படையெடுத்தார்கள். இதைத் தடுக்கப் பிலிப்பைன்ஸ்

அரசாங்கம் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. சிங்கப்பூர் விமானத் தளத்தையும் கலகக்காரர்கள் பயன்படுத்தினுர்கள். இதனுல், சுகர்ணே பிரிட்டனின் மேல் மனக்கசப்புக் கொண்டார். மலேயாவின் பிரதம மந்திரி துங்கு அப்துல் ரஹ்மானும் கலகக் காரர்களை ஆதரித்தார். இக் காரணத்தாலே கி.பி. 1963ஆம் ஆண்டில் இந்தோனேசியா மலேசியக் கூட்டரசு அமைப்பை எதிர்த்தது. செலிபிஸில் உள்ள கலகக்காரர்கள் பார்மோஸாத் தளத்தைப் பயன்படுத்தினுர்கள் என்ற சான்றுகளும் இருந்தன. இக் காரணத்தால்தான் சுகர்ணே அமெரிக்காவை விட்டுக் கம்யூனிஸ்டு நாடுகளின் பக்கம் சாயத் தொடங்கினுர்.

இந்தோனேசியாவில் 1958ஆம் ஆண்டில் நடைபெற்ற கலகத்தின்போது அமெரிக்கா கலகக்காரர்களுக்கு மறைமுகமாக உதவிய போதிலும், நேரடியாக உதவி புரியவில்லை. கலகக்காரர் களின் அரசாங்கத்தையும் சட்டப்படி ஒப்புக் கொள்ளவில்லை.

ஆனுல், கலகக்காரர்கள் தோற்கடிக்கப்படும் சூழ்நிலையில் அமெரிக்காவின் இந்தோனேசியக் கொள்கை மாறத்தொடங்கியது. கி.பி. 1959ஆம் ஆண்டு ஆகஸ்டில் பெயரளவுக்கு அமெரிக்கா ஆயுதங்களைச் சுகர்ணே அரசாங்கத்திற்கு அனுப்பியது. ஆனுல், அமெரிக்கா மிக அதிக அளவில் இந்தோனேசியாவிற்கு இராணுவ உதவி கொடுக்க முன் வரவில்லை என்பதை மேற்கு இரியன் வரலாற்றை வரையும்போது கண்டோம். ஆகையால், மேற்கு இரியனில் டச்சு ஆட்சியை ஒழிப்பதற்காகக் கி.பி. 1962ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஏறத்தாழ ஒரு மில்லியன் டாலர் மதிப்புக்குச் சோவியத் கப்பல்களையும், விமானங்களையும், ஆயுதங்களையும் இந்தோனேசியா வாங்கியது.

1958ஆம் ஆண்டில் இந்தோனேசியாவில் உள்நாட்டுப் போர் நடந்த போது இந்தோனேசிய அரசை சீன அரசாங்கம் ஆதரித்தது; இந்தோனேசியாவின் மேற்கு இரியன் கொள்கைகளை யும் ஆதரித்தது. ஆகையால், இந்தோனேசிய—சீன உறவு வலிமை பெற்றது. கி.பி. 1950ஆம் ஆண்டிலிருந்து சீன ஐக்கிய நாட்டு அமைப்பின் உறுப்பினராக வேண்டும் என இந்தோ னேசியா வலியுறுத்தியது. கி.பி. 1953ஆம் ஆண்டிலிருந்துதான் சீன இந்தோனேசியாவின் நட்பை நாடியது. கி.பி. 1955ஆம் ஆண்டில் சீனுவிற்கும், இந்தோனேசியாவிற்கும் இரட்டைக்குடி உடன்படிக்கை (Dual Nationality Treaty) ஏற்பட்டது. இவ் உடன்படிக்கையேற்படுவதற்குமுன் உலகத்திலுள்ள எல்லாச் சீனர்களும் சீன நாட்டின் குடிகள் எனச் சீன கருதியது. ஆனுல்

இவ்வொப்பந்தத்தின்படி இந்தோனேசியாவில் வசித்து வந்த சீனர்களுக்கு ஒரு நாட்டுக் குடிஉரிமைதான் உண்டு. இந்தோனேசியக்குடி அல்லது சீனக்குடி ஆக இருக்கத்தான் உரிமையுண்டு. கி.பி. 1959ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தோனேசியாவில் வசித்த சீனர்கள் கிராமப்பகுதிகளில் சில்லறை வாணிபம் செய்யக் கூடாது; அவ்விடங்களிலிருந்து அவர்கள் பட்டணங்களுக்குச் சென்று குடியேற வேண்டும் என்ற சட்டத்தை இந்தோனேசியா அறிவித்தது. இதனால் இந்தோனேசிய-சீனா நட்புறவில் சில இடையூறுகள் ஏற்பட்டன. இந்தோனேசிய அரசின் சட்டத்தினால் இந்தோனேசியாவில் உள்ள சீனர்களுக்குத் தொல்லைகள் வரும் எனச் சீனா கூறியது. இச்சட்டத்தைச் செயல்படுத்தியதால் கி.பி. 1960ஆம் ஆண்டு டிசம்பருக்குள் 10,000 சீனர்கள் இந்தோனேசியாவிலிருந்து வெளியேறிச் சீனாவிற்குச் சென்றார்கள். இதன் விளைவாகச் சீனாவிற்கும் இந்தோனேசியாவிற்கும் மனக்கசப்பு ஏற்பட்டது. கி.பி. 1960ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் நாள் இந்தோனேசியாவிற்கும் சீனாவிற்கும் கி.பி. 1955ஆம் ஆண்டில் ஏற்பட்ட இரு குடிமக்கள் திட்டத்தைச் செயல்படுத்தும் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி இந்தோனேசியாவில் குடியேறியிருந்த 2½ மில்லியன் சீனர்கள் இந்தோனேசியக் குடிகளாக மாறப் போகிறார்களா என இரண்டு ஆண்டுகளுக்குள் சட்டப்படி ஒரு தீர்மானம் எடுக்கவேண்டும். இவ்விரு குடிமக்கள் உரிமைகளையும் இந்தோனேசியச் சட்ட மன்றம் மறுக்கும்; சீனர்கள் சீன நாட்டின் குடிகளே என இந்தோனேசிய அரசாங்கம் அறிவித்தது. இவ்விஷயத்தில் இந்தோனேசிய—சீன நட்பை வலுப்படுத்துவதற்காகச் சீனா வளைந்து கொடுத்தது எனக் கூறலாம். இந்தோனேசியா—மலேசியா உறவைப் பற்றி மலேசிய அயல் நாட்டு உறவில் பார்க்கவும்.

5. தாய்லாந்து

1. பத்தொன்பதாம் நூற்றுண்டில் சியாம்— மூன்றும் இராமாவின் ஆட்சி

பத்தொன்பதாவது நூற்றுண்டின் தொடக்கத்திலே சியாம் வழிமரபு பண்பாடுகளைக் கடுமையாகப் பின்பற்றிக் கொண்டிருந்தது; ஐரோப்பியர்களை எதிர்க்கும் கொள்கைகளைப் பின் பற்றியது. கி.பி. 1680ஆம் ஆண்டிலே துணிவும் வீரமும் உடைய ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் அரசர் நாரய் (King Narai) ஆட்சியிலே தலையிட முயன்ற, வெறுப்பூட்டுகிற அனுபவத்தைச் சியாம் இன்னும் மறக்கவில்லை. பர்மாவின் வன்முறைச் சுரண்டல் செயல்களிலிருந்து தன்னை மீட்டுக்கொண்டிருந்தது; ஆனல், இதன் அயல்நாட்டு வாணிபமும், உள்நாட்டு வாணிபமும் சீனர் களிடமிருந்தன. பிரிட்டிஷ்—இந்தியாவின் அதிகாரம் பர்மா, மலேயா, அருகிலிருந்த சியாம் எல்லைவரை கி.பி. 1826ஆம் ஆண்டில் பரவியிருந்தது. மூன்றுவது இராமா தம்முடைய தனித்தலைமை ஆட்சியையும், தனியுரிமை வாணிப உரிமைகளையும் அழியாது பாதுகாக்க வேண்டுமென்றும், சியாமிற்கு அடிமையா யிருந்த நாடுகள் தமக்கே கப்பம் செலுத்த வேண்டுமென்றும் விரும்பினர். ஓங்கிவரும் ஆங்கிலேயர்களின் செல்வாக்கை எதிர்த்ததால் சியாம் நாடும், மற்றத் தென்கிழக்காசிய நாடுகளும் தங்கள் உரிமையை இழக்க வேண்டிய சூழ்நிலையேற்படும் என்பதை மூன்றுவது மன்னர் இராமா மறந்தார்.

கி.பி. 1851ஆம் ஆண்டிலே மன்னர் மொங்குட் தம்முடைய கொள்கைகளை மாற்றியமைத்ததால்தான் சியாமால் தன்னுடைய உரிமையைப் பாதுகாத்துக் கொள்ள முடிந்தது. ஆட்சிக்கு வரு முன் மொங்குட் மேலைநாட்டு இலக்கியங்களையும், அறிவியலையும், தத்துவத்தையும் படித்திருந்தார். ஆகையால், கி.பி. 1851ஆம் ஆண்டில் ஆட்சியிலமர்ந்த பிறகு மேலைநாடுகளுடன் சில உடன்படிக்கைகளைத் தாமே முயற்சியெடுத்துச் செய்துகொண்டார். இதனுல், சியாமின் சட்டமுறையில் நாட்டின் வருமானம் பற்றிய உரிமை ஓரளவு பாதிக்கப்பட்டதென்றுலும், இப்பகுதிகளில் மேலை நாட்டுச் செல்வாக்கையும் சியாம் ஓரளவு குறைத்தது.

அரசர் முதலாம் இராமாவின் ஆட்சி (1782—1809)

பியாதக்ஸின் (Piya Taks) அதிகாரம் முறிவடைந்த பிறகு அரசர் முதலாம் இராமா பதவியேற்ருர். இவர் ஆட்சியை மக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்ருர்கள். இம் மன்னரே சக்ரி அரசர்குல (Chakri Dynasty) ஆட்சியைத் தொடங்கினுர். பர்மாவின் அரசரான போதவ்பாயா (Bodowbaya) சியாமை இடைவிடாமல் தாக்கியதால் அரசர் மூன்ரும் இராமா தம்முடைய ஆட்சியின் முதல் பத்தாண்டில் சியாமின் பாதுகாப்பைப் பெருக்கும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்திஞர். பர்மா தாய்லாந்திடம் இருமுறை தோல்வியடைந்ததால் வடலாவோஸ் நாடுகள் பர்மாவிற்கு எதிராகக் கலகம் செய்தன. சியாங்சென் (Chieng sen) பர்மாவின் ஆட்சியிலிருந்து விடுவிக்கப்பட்டது; ஆனுல் சியாமின் அடிமைநாடாக மாறியது. கி.பி. 1796ஆம் ஆண்டில் பர்மா மீண்டும் சியாங்மையைத் (Chiengmai) தாக்கியது. அதனுல், அதன் இரண்டாவது அரசர் சுராஸி (Surasih) பர்மியர்களைத் தாக்கித் துரத்திஞர். மீண்டும் கி.பி. 1802ஆம் ஆண்டில் பர்மா சியாங்மைமேல் படையெடுத்தது; மீண்டும் உபராட்சுராஸி பர்மியர்களைத் தோற்கடித்தார். முதலாம் இராமா ஆட்சியின்போது இதுவே பர்மாவின் கடைசிப் படையெடுப்பு ஆகும்.

சியாமும் (Siam), அன்னுமும் (Annam) கம்போடியாவைத் (Cambodia) தங்களுடைய அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவரப் போட்டியிட்டன. கம்போடிய ஆட்சிக்குப் போட்டியேற்பட்டதால் போட்டியிடும் அரசர்களில் ஒருவரை இந் நாடுகள் ஆதரித்தன. பல நூற்ருண்டுகளாக இவ்விரு நாடுகளின் செல்வாக்கு கம்போடியாவில் ஏதாவது ஒருசமயம் ஓங்கிக் கொண்டுதான் இருந்தது. இவ்விருநாடுகளில் ஏதாவது ஒரு நாட்டின் வலிமை குறைந்தால், மற்ருெரு நாடு இதைப் பயன்படுத்திக்கொண்டு கம்போடியாவின்மேல் தன்னுடைய அதிகாரத்தைச் செலுத்தியது. அடிமையாயிருக்கக் கம்போடியாவும் ஆர்வம் தெரிவிக்காமல் இருந்ததில்லை. அந் நாட்டு மன்னர்களும் அடிமை உறவைத் தேடினுர்கள். வியட்நாமின் இளவரசர் என்குயன் அன் (Nguyen Anh) பதவியிலமர முதலாம் இராமா உதவினுர். ஆகையால் அவர் சியாமிற்குத் திறை செலுத்திஞர்; வியட்நாமைச் சியாமின் அடிமை என ஒப்புக்கொண்டார். ஆனுல், கி.பி. 1802ஆம் ஆண்டில் இவர் வியட்நாமை ஒன்றுபடுத்தியவுடன் பேரரசர் ஜியாலாங் (Gia Long) என்று முடியணிந்தார்; உடனடியாக வியட்நாமைச் சியாமின் அடிமையிலிருந்து விடுவித்தார். சியாமுடன் ஒத்த உரிமையுடன் நண்பராகப் பழக முன்வந்தார்.

கம்போடியா வியட்நாமிற்கும் கப்பம் செலுத்த வேண்டும் எனக் கட்டளையிட்டார்.

கி.பி. 1794ஆம் ஆண்டில் அரசர் நாரை இராமா திபோதி (King Narai Rama Tibodhi) என்ற பெயரைச் சூட்டிக்கொண்டு அங்யெங் (Angeng) கம்போடியாவில் பதவியேற்றார். சியாமின் அரசர் முதலாம் இராமா படைவீரர்கள்தாம் யுடாங்கிற்கு அழைத்து வந்து அரசராக்கினார்கள். நன்றி தெரிவிக்கும் நோக்கத்துடன் மன்னர் நாரை சியாம் மன்னர் முதலாம் இராமாவுக்குக் கம்போடிய மாகாணங்களான சியாம்ரீப் (Siamreap), பட்டம்பாங் (Battam bang)ஆகியவற்றை விட்டுக் கொடுத்தார். ஆனால், அடுத்த ஆண்டே மன்னர் நாரை இறந்தார். அவருக்குப்பின் யார் பதவி யேற்பது என்பதைப் பற்றிச் சியாம் மன்னரே தீர்மானித்தார்.

அரசர் நாரைக்கு ஐந்து இளம் புத்திரர்கள் இருந்தார்கள். கம்போடியா நாட்டிலுள்ள சிறப்புமிக்க அமைச்சரில், ஓர் அமைச்சரைத் தேர்ந்தெடுத்து அவரைக் கம்போடியாவின் ஆளுநராய் மன்னர் மூன்றும் இராமா நியமித்தார். ஆனால், என்குயன்அன் வியட்நாமின் பேரரசர் ஆனவுடன், மன்னர் முதலாம் இராமா கம்போடியாவின் அரசரைத் தேர்ந்தெடுப்பது எனத் தீர்மானித்தார். ஆகையால், காலஞ் சென்ற அரசர் நாரையின் பதினொரு வயது மகனை அங்சனைக் (Angchan) கம்போடியாவின் அரசராக நியமித்தார்.

சியாமும் வியட்நாமும் கம்போடியாவைக் கைப்பற்றப் போட்டியிடும் எனக் கம்போடியாவிற்குத் தெரிந்ததே. ஆகையால், இவ்விரு நாடுகளையும் அமைதியுறச் செய்யும் நோக்கத்துடன் சியாம், வியட்நாம் ஆகிய நாடுகளைக் கம்போடியாவின் மேலுரிமை யரசு (Overlord) எனக் கம்போடியா ஒப்புக்கொண்டது. கி.பி. 1803ஆம் ஆண்டில் கம்போடியா வியட்நாமிற்குக் கப்பம் செலுத்தியது. கி.பி. 1806ஆம் ஆண்டில் அங்சன் பாங்காக்கிற்கு (Bangkok) அரசுரிமை பெற வந்தார். இத்தனிச் சிறப்பு வாய்ந்த உறவு பத்தாண்டுக் காலம் நீடித்தது.

இரண்டாம் இராமா (1809—1824)

மன்னர் இரண்டாவது இராமா வலிந்து கொன்று சண்டை செய்ய முனைகிறவர் அல்லர். தம் நாட்டின் நிர்வாகத்தின் மேலும் சிறப்பாக ஈடுபடவில்லை.

கி.பி. 1812 ஆம் ஆண்டில் அங்சன்னிற்கு எதிராக அவருடைய உடன்பிறந்தான் ஆன அங்சுனுகுவான் (Angsngvon) கலகம்

செய்தார். தம்மை இரண்டாவது மன்னராக ஒப்புக்கொள்ள வேண்டும் என அவர் விண்ணப்பித்துக் கொண்டது புறக்கணிக்கப் பட்டது. கம்போடியாவின் மேலுள்ள சியாமின் மேலுரிமையரசை வலுப்படுத்தும் நோக்கத்துடன் மன்னர் இரண்டாவது இராமா அங்சுனுகுவானை ஆதரித்தார். ஆகையால், அங்சன் சைகானிற்குச் சென்று பேரரசர் ஜியாங்-லாங்கின் உதவியை நாடினார். கி.பி. 1813ஆம் ஆண்டில் அங்சனைப் பதவியிலமர்த்துவதற்காக ஜியாங்-லாங் ஒரு பெரிய படையை யனுப்பினார். சியாம் படை வீரர்கள் பின்வாங்கி அங்சுனுகுவானுடன் சியாமிற்குத் திரும்பினார்கள். இதற் பிறகு கம்போடியாவில் வியட்நாமின் செல்வாக்கு ஓங்கியது. சியாமிற்கும் வியட்நாமிற்கும் வெளிப்படையாகப் போர் மூளவில்லையென்றாலும், இவ்விரு நாடுகளிடையே உள்முறிந்த உறவு இருந்தது. சியாம் தன் மேலுரிமையரசை மீண்டும் நிலைநாட்டுவதற்காக ஒரு நல்ல வாய்ப்புக்குக் காத்துக் கொண்டிருக்கிறது என வியட்நாமிற்குத் தெரியும்.

இரண்டாம் இராமாவினது ஆட்சியின்போது பர்மா இடைவிடாமல் படையெடுக்கவில்லை. கி.பி. 1810 ஆம் ஆண்டில் சியாமின் தீபகற்பப் பகுதிகளின் மேல் பர்மா படையெடுத்துப் புகெட்டைக் [–(Puket) மலேய்மொழியில் உஜோங் சலாங் (Ujong salang) என்றும், ஆங்கிலத்தில் ஜங்சிலோன் (Jung Ceylon) என்றும் அழைக்கப்படுகிறது] கைப்பற்றியது. கேதாவிலிருந்து மலேய்ப்படைகளின் உதவியுடன் 20,000 சியாம் படைவீரர்கள் பர்மாவைத் தோற்கடித்துப் புறமுதுகுகாட்டி ஓடச் செய்தார்கள்.

இரண்டாம் இராமாவினது ஆட்சியின்போதுதான் சியாம் மலேய் நாடுகளுடனுள்ள உறவை வலுப்படுத்தியது. சியாமைப் படைவலிமையால் ஒடுக்கமுடியாது எனப் பர்மா புரிந்துகொண்டு சியாமின்மேல் மீண்டும் படையெடுக்க முன்வரவில்லை. மேலும், பர்மா பிரிட்டிஷ் இந்தியாவுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளத் தொடங்கியதால் அதன் மேற்குத் திசைகளிலுள்ள நாடுகளின்மேல் கவனம் செலுத்தியது. ஆகையால், தெற்கிலுள்ள தனது அடிமை நாடுகளுடன் உறவை வலுப்படுத்தச் சியாமிற்கு வாய்ப்புக் கிடைத்தது.

மலேய் நாடுகளில் ஆங்கிலேயர்கள் தலையிடத் தொடங்கியதால் அதைத் தடுத்துநிறுத்தச் சியாம் விரும்பியது. கி.பி. 1814ஆம் ஆண்டில் கேலன்தன் (Kelantan) நக்கோன் ஸ்ரீதமாரத் (Nakhon Sritammarat) நிர்வாகத்தின்கீழ் வந்தது. இதுபற்றி முதற்படி முயற்சி கேலன்தன் அரசர்தாம் எடுத்தார். இதற்குமுன்

கேலன்தன் தெரன்கானுவின் (Trengganu) ஆட்சியின் கீழிருந்தது.

கி.பி. 1816ஆம் ஆண்டிலிருந்து சியாம் கேதானின் விவகாரங்களில் தலையிடத் தொடங்கியது. பேராக் புங்காமாஸ் (Bungamas) பாங்காக்கிற்கு அனுப்பவேண்டும் என்ற நோக்கத்துடன் கேதாவைப் பேராக்கின்மேல் படையெடுக்கச் சியாம் தூண்டியது. கேதாவும் பேராக்கின்மேல் படையெடுத்து வெற்றியடைந்தது; சியாம் சார்பில் கேதா பேராக்கை ஆண்டது. கேதா சியாமின் மேலுரிமையரசின் பிடியிலிருந்து விலகுகிறது என இரண்டாவது இராமா நினைத்தார். கி.பி. 1785ஆம் ஆண்டிலிருந்து ஆங்கிலேயர்களின் உதவியைக் கேதா நாடிக்கொண்டிருந்தது; ஆனால், இம் முயற்சியில் வெற்றியடையவில்லை. கேதா பர்மாவுடன் உறவு கொள்ள முயலுகிற தென்றும் இரண்டாவது இராமா ஐயுற்றார். பேராகிலுள்ள கேதாவின் ஆட்சி மனநிறைவு தரும் அளவில் நடக்கவில்லை என்ற காரணத்தைச் சுட்டிக்காட்டி இரண்டாவது சுல்தான் அஹ்மது தாஜுத்தீன் ஹலிம்-ஷாவை (Sultan Ahmad Tajjudin Halim-Shah II) பாங்காக்கிற்குவந்து விளக்கம் கூறும்படி சியாம் கட்டளையிட்டது. தம் உயிருக்கே ஆபத்து நேரும் அல்லது தாம் சிறையிலேயடைக்கப்படலாம் என அஞ்சிச் சுல்தான் பாங்காக்கிற்குச் செல்ல மறுத்தார். பதிலாக, கி.பி. 1820ஆம் ஆண்டில் தம் பிரதிநிதிகளைப் பாங்காக்கிற்கு அனுப்பினார். இச் செய்கை தம்மை அவமானப்படுத்துகிறது என இராமா தீர்மானித்துக் கேதாவின்மேல் கி.பி. 1821ஆம் ஆண்டில் படையெடுத்தார். சுல்தான் அஞ்சிப் பினாங்கிற்கு (Penang) ஓடித் தப்பித்தார். கேதா சியாம் நாட்டு ஆளுநரின் ஆட்சியின்கீழ் வந்தது.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் அரசியலமைப்பு

பழங்கால அங்கோர் (Angkor) பர்மா அரசியலமைப்புகள் போல் அமைந்திருந்தது. சக்ரிவம்சத்தினரின் ஆட்சியின் கீழிருந்த அரசியலமைப்பு அரசர் கடவுளின் மறுபிறப்பு, மாபெரும் சக்கரவர்த்தி அல்லது உலக முழுதாளும் பேரரசர்; புத்தர் அல்லது போதிசத்துவ நிலையைத் திண்ணமாக அடைவார். அவர் குடியிருந்த அரசமாளிகை தெய்விகக் காப்புடைய இடம். மாய வித்தை மந்திரச்சடங்குகளை அவையிலுள்ள அந்தணப் புரோகிதர்கள் செய்தார்கள்; ஆனால் அரசாங்க நிருவாகத்தில் அவர்களுக்குச் செல்வாக்கும் சலுகைகளும் கிடையா. யாராலும் அசைக்க முடியாத கடவுட்கொத்தவர் அரசர்; அவரிடம் முழுமையான அதிகாரம் உள்ளது; ஆகையால் தம் விருப்பப்படி ஆட்சி புரியலாம்.

நாட்டிலுள்ள நிலங்களும், குடிமக்களும் அவருடைய உடைமை; சட்டப்படி அவருடைய உடைமைப் பொருள்கள். ஆகையால், அவருக்கு வரிகேட்கும் உரிமையுண்டு; மக்களைத் தம் பணியாளர்களாக அமைக்கவேண்டிய அதிகாரம் சட்டப்படியுண்டு. ஆனல், தம் குடிகளைப் பொறுப்புடன் ஆட்சி புரிய வேண்டும்; மக்கள் செல்வத்தைப் பெருக்க முயற்சி செய்யவேண்டும்; பத்தொன்பதாவது நூற்றுண்டின் இடையிலே இவ் வெண்ணம் வலுத்தது. அரசருடைய அதிகாரங்கள் எல்லையில்லாதன; அவரே சட்டங்களை உருவாக்கினர்; கொள்கைகளையும், திட்டங்களையும் பற்றிய தீர்மானங்களை அவரே எடுத்தார். உயர் அதிகாரிகளை அவரே தேர்ந்தெடுத்தார்; ஒருவரின் சமூகச் செல்வாக்கை உயர்த்தவோ குறைக்கவோ அவருக்குத் தான் அதிகாரமிருந்தது. வரிமூலம் வரும் அரசாங்க வருமானமும், அவருடைய தனி உடைமையும் ஒன்றே. பண்பாடுகளை முன்னேற்றினல், புத்தமதத்திற்குச் செல்வாக்குக் கொடுத்தால் அரசருடைய மதிப்பு உயரும். கால்வாய்கள் வெட்டுவது, நிலங்களைச் சீர்திருத்துவது, வாணிபத்தை வளர்ப்பது போன்ற பொருளாதார வளர்ச்சித் திட்டங்களையெல்லாம் அரசர் செயல்படுத்தினர். அரசமதிப்பை உயர்த்த வேண்டியதும், அரசாங்க வருமானத்தைப் பெருக்க வேண்டியதும், மக்களுக்கு நன்மை செய்ய வேண்டியதும் அவர் கடமைகள்.

அரசருக்கு ஆலோசனை கூறச் சேனபோதி (Senabodhi) என்ற சபையிருந்தது. அரசாங்கத்தின் ஆறு சிறந்த துறைகளின் தலைவர்கள் இதன் உறுப்பினர்களாகவிருந்தார்கள். மூன்று முக்கியத் துறைகள்: (1) வடவெல்லைக் காப்புத்துறை—பர்மா எல்லையின் பாதுகாப்பைக் கவனித்தது, (2) தென் எல்லைக்காப்புத் துறை—மலேய் எல்லை விவகாரங்களைக் கவனித்துக்கொண்டது, (3) வாணிபமும், அயல் உறவுகள் பற்றிய துறை. இந்த மூன்று முக்கியத் துறைகளின் தலைவர்களுக்குப் படையும், வருமான விவகாரங்களும் பற்றிய மிகுந்த தன்னுட்சி உரிமைகளிருந்தன. தலைமுறை தலைமுறையாக இப்பதவிகளுக்கு அதிகாரிகள் வந்தனர். வடக்கில் உள்ள லாவோஸின் நான்கு மாகாணங்களிலும் தீபகற்பத்திலுள்ள லிகோர் (Ligor), சிங்கோரா (Singora) பகுதிகளிலும் உள்நாட்டுத் தலைவர்கள் ஆளுநர்களாகச் செயல்புரிந்தார்கள். அடிமை மலேய்ச் சுல்தான்கள் திறை செலுத்தினர்கள். மற்ற மூன்று துறைகளின் (தலைநகரம், அரண்மனை, நிலங்கள்) தலைவர்கள் அரசர் விருப்பப்படி நியமிக்கப்பட்டார்கள். நீதி நிருவாகம், வருமானம் ஆகியவற்றைப் பற்றிய துறைகள் தனித்தனியாக

அமைக்கப்படவில்லை. பொதுவாக, அவையிலுள்ள அரசகுமாரர்கள், சிறப்பாகத் துணையரசர் (Vice-King) அல்லது உபாரட் (Uparat) இவ்வாறு துறைகளின் தலைவர்களாக நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு இத்துறைகளின் மூலம் வருமானம் சேர்க்க உரிமையுண்டு. பொதுவாக, இளவரசர்கள் பர்மாவில் நியமிக்கப் படுவதுபோல, மாகாண ஆளுநர்களாக நியமிக்கப்படுவதில்லை. அவர்கள் அங்கிருந்து தங்களுடைய ஆதரவாளர்களுடன் கலகம் செய்வார்களோ என்ற அச்சம் இருந்ததால்தான் இவ்வகை முறையை அரசர் பின்பற்றினர். உயர் அதிகாரிகளில் ஆளுநர்கள் ஆகியோர் செய்த பணியை நெறிமுறைக் கண்காணிகள் (Censors) மேற்பார்வையிட்டார்கள். சிறப்பாகத் தலைநகரத்திற்கு அருகே பணிபுரிந்தவர்கள்மீது இவர்களுக்கு மேற்பார்வை செய்யும் அதிகாரமிருந்தது.

தனி உரிமைகள் மூலமாகவும், சுங்கவரி மூலமாகவும், குடியானவர்களின் மேல் வரிவிதிக்கும் உரிமைகள் மூலமாகவும், அயல்நாட்டு வாணிபத்தை அரசாங்கம் கட்டுப்படுத்தியது. அயல் நாடுகளிலிருந்து வரும் ஆபத்திலிருந்தும் அரசாங்கம் பாதுகாப்பு அளித்தது. ஆனல், கொள்ளைக்காரர்களிடமிருந்தும் சட்டம் மீறு பவர்களிடமிருந்தும் மக்களுக்குப் பாதுகாப்பளிக்கவில்லை; கிராமங் களிலுள்ள பெரியோர்கள்தாம் மக்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும். குற்ற இயல் சாராத எல்லா வழக்குகளிலும் உள்ளூர் மக்களே தீர்ப்பளித்தார்கள். கொலை, குற்ற வழக்குகள் தொடர்பாக உறவினர்களும், அக்கம் பக்கத்திலுள்ளவர்களும் சாட்சி கூறக் கடமைப்பட்டவர்கள்; குற்றவாளியைக் கைப்பற்றவும், அவர்கள் உதவிபுரியவேண்டும். பொதுவாக, மத்திய அரசாங்க அதிகாரிகள் கையூட்டும் ஊழலும் நிறைந்தவர்கள்; வலிந்து பிறர் பொருள் பறிக்கிறவர்கள்; ஆகையால், மக்கள் அவர்களிடமிருந்து தப்பிச் சென்று அவ் வதிகாரிகளை விலக்கிவைத்தார்கள்.

கம்போடியாவிலிருப்பது போல ஒருவருடைய சமுதாயப் படி நிலை அரசர் கொடுக்கும் வேலையைப் பொறுத்திருந்தது. ஐந்து தலைமுறைகளுக்குப் பிறகு ஒருவருடைய இளவரசர் படிநிலை படிப்படியாக அழியத்தொடங்கியது. உயர் அதிகாரிகளின் மக்கள் அரசமாளிகையில் பணியாள்களாகப் பணிபுரிந்தார்கள். ஆளுநர் களின், புதல்வர்களும் அடிமை இளவரசர்களின் புதல்விகளும் அரசர் அந்தப்புரத்தில் சேர்க்கப்பட்டார்கள். அரசியல் அதிகாரங்களுக்கும், பண்பாடுகளை வரையறுப்பதற்கும், சமூகத்தில் மேற்பதவி பெறு வதற்கும், செல்வம் சேர்ப்பதற்கும் தலைநகரமே மையமாக விளங்கியது. பொதுவாக, மக்கள் அதிகாரங்கள் உள்ளவர்களையும்,

உயர்பதவி வகித்தவர்களையும் மதித்தார்கள். அரசர் தெய்வத் தன்மைவாய்ந்தவர் என்ற இந்தியப் பண்பாட்டைப் பின்பற்றிய தாலும், சீனர்களின் குடும்ப அமைப்பைத் தழுவி நடந்ததாலும் மக்களிடம் இத்தகைய மனப்பான்மை குடிகொண்டிருந்தது.

ஆளுநர்கள் மாகாணங்களிலிருந்து வரும் வருமானத்தில் ஒரு பகுதியைத் தலைநகருக்கு அனுப்பவேண்டும். ஆண்டில் மூன்று அல்லது நான்கு மாதங்கள் ஆளுநர்கள் மக்களிடமிருந்து கூலி யில்லா வேலையும் (Corvee), படைத்துறையைச் சார்ந்த வேலை களையும் வாங்கலாம். கூலியில்லா வேலைக்குப் பதிலாக மக்கள் பணமும் கொடுக்கலாம். மக்களுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையே காப்பாளர்கள் (Patrons) பணிபுரிந்தார்கள். மக்கள் கொடுக்கவேண்டிய தொகைகளை வாங்கி அவர்கள் அனுப்பினார்கள். காப்பாளர்கள், பர்மியர்களின் மியோதுக்யியைப் (Myothugyi) போன்றவர்கள். காப்பாளர்களுக்கும், தாய்லாந்து உரிமை மனிதர் களுக்கும் இடையே தனிப்பட்ட முறையில் தொடர்பிருந்தது. தங்கள் வாடிக்கைக்காரர்கள் பணிபுரிந்ததற்கு மாருக இவர்கள் மக்களை ஊழலிலிருந்தும் கொடுமையிலிருந்தும் பாதுகாக்க வேண்டும். மக்களுக்கு மிகத் தேவையான நேரத்தில் பண உதவியும் செய்யவேண்டும்; ஓர் ஆணுடைய சமுதாயப் படி நிலையைக் குறிக்கும் அடையாளமாக அவருடைய மணிக்கட்டில் பச்சை (Tatooed). குத்தப்பட்டது தந்தைக்கு இருந்த சமுதாயப் படிநிலை மகனுக்கும் கொடுக்கப்பட்டது. பிடிக்கவில்லையென்றல் ஒரு வாடிக்கைக்காரர் தம்முடைய காப்பாளரை மாற்றிக்கொள்ள லாம். ஆகையால், கடன் தீர்க்கமுடியாத நிலையிலுள்ள தங்க ளுடைய வாடிக்கைக்காரர்களுக்கு உதவிசெய்யக் காப்பாளர்கள் முன்வந்தார்கள். நிலம் குடும்பத்திற்கு உரியதாயிருந்தது.

சமூக–சமயப் பண்பாடுகள்

பத்தொன்பதாவது நூற்ருண்டின் தொடக்கத்திலே சியாமி லுள்ள மூன்றில் ஒருபங்கு மக்கள் அடிமைகளாயிருந்தார்கள். தலைவர், அரசருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை அளிக்க வேண்டும்; மற்றப்படி அடிமைகளைத் தம் விருப்பம்போல் பயன் படுத்தலாம். பர்மாவிலுள்ளதைப்போல் புத்தவிகார அடிமைகள், வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கமுடியாமையால் ஆண்கள் போன்ற சில அடிமைகள் ஏறத்தாழ மனிதர்களைப் போலவே வாழ்ந்துவந்தார்கள். போர்க்கைதிகள் அரசருடைய உடைமைப் பொருள்கள்; இவர்கள் அரசரின் அடிமைப் போர்வீரர்களாகப் பணிபுரிந்தார்கள். இவர்களில் பர்மியர்களோ, லாவோஸ் மக்களோ, கம்போடியர்களோ, மலேய் மக்களோ எல்லோரும் ஒன்றுசேர்ந்து

வாழ்ந்தார்கள். அவர்கள் கண்டிப்புடன் மேற்பார்வையிடப் பட்டார்கள். அரசருக்குப் படைப்பணி செய்வதைத் தவிர மற்றப் படி தாய்லாந்து உரிமைபெற்ற மனிதர்கள் போலவே வாழ்ந் தார்கள்.

மிக அதிகமாயிருந்த அயல்நாட்டினர் சீனர்களே. அவர்கள் அபினி வாணிகம் உட்பட, வெளிநாட்டு வாணிகத்தில் ஈடுபட் டிருந்தார்கள். பாங்காக்கிலுள்ள வாணிபத்தை நோக்கினல், அதனை ஒரு சீனர்களின் நகரம் என்றே அழைக்கலாம். கூலி யில்லாத வேலையாள்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாகச் சுறு சுறுப்புடன் வேலை செய்யும் சீனர்களைப் பொதுப்பணித் துறையில் பயன்படுத்தியதால் செலவு குறைவாயிருந்தது. தனிமுறையில் பணிபுரிவதைத் தவிர, அவர்கள் தலைவரி கட்டுவதையே விரும்பி னர்கள்; வரிக் குத்தகையாளர்களாக இருப்பதையே சீனர்கள் விரும்பினர்கள். தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக இரகசிய மன்றங்களை அல்லது ஹியீஸ்களை (Huis) அமைத்திருந்தார்கள். அவர்களில் சிலர் கள்ள வாணிகத்திலும், கள்ளத் தொழில்களிலும் ஈடுபட்டிருந்தார்கள். கி. பி. 1837ஆம் ஆண்டில் சீன-சியாமியர் களின் உறவு மிகவும் இழிநிலையை யடைந்தது; கி. பி. 1948ஆம் ஆண்டில் இது கலகமாய் எழுந்தது.

கி. பி. 1821ஆம் ஆண்டில் ஜான் கிராபர்ட்டு (John Crawfurd) என்ற ஆங்கிலேயர் சியாமிற்கு வந்திருந்தார். இவர் சியாம் மக்களைப்பற்றிப் புகழ்ந்து எழுதியிருக்கிருர்; 'சியாம் மக்கள் தன்னடக்கமுள்ளவர்கள்; அமைதியை விரும்புபவர்கள்; பணிந்து இணங்கி நடப்பவர்கள்; கட்டுப்பாடுகளை மதித்து நடப்பவர்கள்; ஒழுங்கமைதியுடையவர்கள்; பழிக்குப்பழி வாங்கும் இயல்பு இல்லா தவர்கள் எனக் குறிப்பிட்டிருக்கிருர். அவர்கள் குடும்ப வாழ்க்கை யின் நிலை உயர்நோக்க முடையதாயிருந்தது; செல்வம் கொடுக்கும் மனப்பான்மையுடையவர்கள், குடும்பக் கடமைகளைப் பொறுப் போடு செய்பவர்கள். திருமணவிலக்குச் செய்வது எளிது; செல்வர்கள்தாம் பன்மணமுறையைப் (Polygamy) பின்பற்றி னர்கள்.

சியாமைப்பற்றி ஆழ்ந்து ஆராய்ச்சி செய்த தற்கால வரலாற் ருசிரியர்கள் சியாம் மக்களைப்பற்றிப் பின்வருமாறு வரைகிருர்கள்: புத்த மதத்தைப் பின்பற்றுபவர்கள்; சுறுசுறுப்புடன் பணி செய்த சீனர்களைவிட இவர்கள் ஓயில் வாழ்க்கையை விரும்புபவர்கள்; வேலையில் விருப்பமில்லாதவர்கள்; கேளிக்கை, நகையாட்டம் ஆகியவற்றை விரும்புபவர்கள்; மறுநாளைப் பற்றிக் கவலைப்படாத வர்கள்; துன்பக் காலத்தில் பரந்த மனப்பான்மையுடன் உதவி

செய்பவர்கள்; சிறப்பாக இதன்மூலம் கர்மாவை (முன்வினைப்பயனை) அடையலாம் என்ற நோக்கத்துடன் உதவி செய்தார்கள்; தன்னலமே கருதுகின்றவர்கள்; தங்களைச் சாராத விவகாரங்களைப் பற்றிக் கவலையற்றிருப்பவர்கள்; குற்றத்தை மறைக்கும் நோக்கத்துடன் அல்லது மற்றவர்கள் மனத்தைத் துன்புறுத்தக் கூடாது என்ற நோக்கத்துடன் பொய் கூறும் தன்மை உடையவர்கள்; ஒழுங்குமுறையைப் பின்பற்றுபவர்கள்; பண்பட்டமுறையில் திறமையோடு நடந்துகொள்ளத் தெரிந்தவர்கள்; ஆடம்பரமில்லாதவர்கள். அரசரிலிருந்து எளிய மக்கள் வரை அதிகாரமுள்ளவர்களுக்கு மதிப்புக் கொடுத்து நடந்தார்கள்; திறமையுள்ளவர்கள் எனக் கூற முடியாது; முற்போக்குக் கொள்கைகள் உள்ளவர்கள் அல்லர்; சூழ்நிலைக் கேற்றவாறு ஒத்துப்போகும் தன்மையுடையவர்கள்.

மற்றத் தென்கிழக்காசிய மக்களிடையே உள்ள சமய நடவடிக்கைகள் சியாம் மக்களிடமுமிருந்தன. சமய நடவடிக்கைகள் பொதுவாகத் தீங்கான விளைவுகளுள்ள, அலைந்து திரிகிற ஆவி உருவங்களை அமைதியுறச் செய்வதைப் பற்றியே இருந்தன. இதற்குப் பிறகுதான் இந்துக் கடவுளைப் பற்றியும், நாகப் பாம்பைப் பற்றியும், புத்தரைப் பற்றியும் மக்கள் நினைத்தார்கள். இவ்வாறு ஆவியுலகக் கோட்பாடுகள் கொண்ட சமயத்தைப் பின்பற்றியதால் ஆவிகளை அடக்கும் மருத்துவர்களுக்கும், மந்திரவாதிகளுக்கும், சோதிடர்களுக்கும், சாதகத்தைக் கணிப்பவர்களுக்கும், கனவுகளைப்பற்றிப் பொருள் விளக்குபவர்களுக்கும் முதலிடம் கொடுக்கப்பட்டது. பிசாசு ஒருவரைப் பிடித்துக்கொள்வதால்தான் காய்ச்சல் வருகிறது என நம்பினார்கள். நற்குறியுள்ள நாள்களும், மந்திரக் காப்புகளும், தாயத்துகளும், காதலைத் தூண்டும் மருந்துகளும் மிகச் சிறப்பு வாய்ந்தவை.

அவையிலே அந்தணர்கள்தாம் சாதகத்தைப் பார்த்து அலசி ஆலோசனை கூறினார்கள்; ஆவி உலகத்தையும் இவர்களே அமைதியுறச் செய்தார்கள். அரசர் கடவுட்கொத்தவராதலால் வெள்ளத்தையும், பஞ்சத்தையும், இயற்கையால் ஏற்படும் தீங்குகளையும், கொள்ளை நோய்களையும் தம் ஆற்றலின் மூலம் ஒழிக்க முடியும்; முன்னோர்களின் ஆவிகளுடன் அவர் நேசத் தொடர்பு கொள்ள முடியும். புதிதாகக் கட்டிய கோட்டைக்கு ஆவிகளின் பாதுகாப்பிருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மூன்று மனிதர்கள் தூக்கிலிடப்பட்டார்கள் என நான்காவது இராமா அவையிலிருந்த என்னலியோனேவென்ஸ் (Anna Leonouens) கூறுகிறார்.

புத்தமதம் மிகச் செல்வாக்குடையதாயிருந்தது. ஒருவர் உள்ளார்ந்த நலம், தகுதியடைய வேண்டுமென்றால், உணவு முதலிய நுகர்பொருள்களை அளவோடு உண்டு துறவிமடங்களில் வாழவேண்டும்; புத்தவிகாரம், கோவில் முதலியவற்றைக் கட்ட வேண்டும்; துறவிகளின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்ற வேண்டும். இந்துக் கடவுள்களில் ஒரு கடவுளாகப் புத்தர் கருதப் பட்டார். புத்தத் துறவிகளுக்கு மரியாதை கொடுக்கவேண்டும், எண்வகுப்பு வழியில் (Eightfold path) சென்று நன்னெறியுடன் வாழ வேண்டும் எனத் தெரவேதா (Theraveda) புத்தமதம் கூறுகிறது. ஆனால் சடங்குகளுக்கோ, அகநிலைத்தூய்வினை முறை களுக்கோ அது (Sacrament) சிறப்புக் கொடுக்கவில்லை. ஒவ்வொரு வரும் அருட்செயல்களைச் செய்து வீடுபேற்றினை யடைய வேண்டும்.

பர்மாவிலுள்ளதைப்போலவே, சங்காராக் (Sanknarach) அல்லது துறவிகள் சமுதாயம் மன்னரின் அதிகாரத்தின்கீழிருந்தது. சமயப் பணித்துறை அமைப்பின் சட்டம் செயல்படுத்தும் மன்றத்தின் கூட்டத் தலைவராக ஒரு நாட்டுச் சமய முதல்வர் நியமிக்கப்பட்டார். நான்கு சிறந்த சமயக் கிளைப் பிரிவுகளிலிருந்து இம் மன்றத்திற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தவிர, ஒரு புத்த மக்கள் மன்றமும், நான்கு மத குரு மன்றங்களும் செயல் முறையிலிருந்தன. நிருவாகம், கல்வி, புத்தவிகார அடிமை முதலியவற்றை இந்நான்கு மன்றங்களும் தனித்தனியாகக் கவனித்து வந்தன. உயர் பதவியிலுள்ள அமைச்சர்கள் இம் மன்றங்களின் தலைவராக இருந்தார்கள். பாலி சமயத் திருநூல் (pali Scriptures) தொகுதித் தேர்வுகளில் தேறினால்தான் சமயப் பணித்துறை அமைப்பின் முதல் இரண்டு படிநிலைகளை அடைய முடியும். துறவிகளைக் கூலியில்லா வேலைகளைச் செய்யச் சொல்லக் கூடாது. துறவிகளால் சியாம் சமூகத்திற்குத் தன்மானமும், புலமையும், பிறர் துயரைத் தம் துயர்போல் உணரும் இயல்புகளும் கிடைத்தன எனக் கூறினால் மிகையாகாது.

சியாமின் வெளிநாட்டு வாணிபம் கி.பி. 1820

கி.பி. 1688ஆம் ஆண்டில் சியாம் ஐரோப்பியர்களோடு உள்ள வாணிபத் தொடர்பை நிறுத்திவிட்டதால் அதற்கு வாணிபத்தில் அக்கறை இல்லை எனக் கூற முடியாது. தென்கிழக்கு ஆசியாவின் பெருநிலப் பகுதியின் வாணிபம் சீன மரக்கல வகை வாணிபர்களின் தனி உரிமையாயிருந்தது. கி.பி. 1800ஆம் ஆண்டில் வாணிபத் திற்குப் பாங்காங்தான் மையமாயிருந்தது. கி.பி. 1820ஆம் ஆண்டில் பாங்காக்கில் இருந்த வணிகர்களெல்லாம் சீனர்கள்தாம் எனப் பாங்காக்கிற்கு வந்தவர்கள் கூறுகிறார்கள். பாங்காக்

கால்வாய்களில் மிதக்கும் கடைகளிலிருந்து (Floating Bazaars) பண்டகசாலையின் மொத்த வணிகர்கள் வரை எல்லோரும் சீனர்களே. துறைமுகத்திலிருந்த சீன அல்லது சியாமியக் கப்பல்களின் மாலுமிகள் எல்லாரும் சீனர்களே. எத்தகைய கட்டுப்பாடுமில்லாமல் இவர்கள் இங்கு வாணிபம் செய்தார்கள்; ஆனால் சீனர்கள் முட்டுக்கட்டை போட்டதால் மற்றவர்களின் வாணிபம் பாதிக்கப்பட்டது. கி.பி. 1818ஆம் ஆண்டிலும் 1821ஆம் ஆண்டிலும் அமெரிக்கக் கப்பல்கள் வெடிக்கும் போர்க்கருவிகளைக் கொண்டு வந்து வியாபாரம் செய்ய முனைந்தபோது அவர்களைத் தாய்மக்கள் (Thai people) இன்முகத்துடன் வரவேற்றார்கள்.

ஓர் ஆண்டில் ஏறத்தாழ 80 சீன மரக்கலங்கள் வந்து சியாமுடன் வாணிபம் செய்தன எனக் கி.பி. 1821ஆம் ஆண்டில் பாங்காக்கிற்கு வந்த ஓர் ஆங்கிலேயர் கூறுகிறார். பொதுவாக இம் மரக்கலங்களெல்லாம் கேன்டனிலிருந்து (Canton) வந்தன; சில சாங்காயிலிருந்தும், (Sanghai) சில நிங்போவிலிருந்தும் (Ningpo) வந்தன. கி.பி. 1821ஆம் ஆண்டில் சிங்கப்பூருக்கும் பாங்காக்கிற்கும் இடையே வாணிபம் மலரத் தொடங்கியது; ஏறத்தாழ 15 மரக்கலங்கள், முக்கியமாக அபினி, வாணிபத்திற்கும் பயன்படுத்தப்பட்டன. பதினோரு சிறு மரக்கலங்கள் போர்னியோவுடன் (Borneo) வாணிபம் செய்தன. படாவியாவுடனும் (Batavia), மணிலாவுடனும் (Manila), வாணிபத் தொடர்பிருந்தது. மலேயாவின் கிழக்குக் கரை வாணிபம் சியாம் அரசரின் தனி உரிமையாயிருந்தது. அங்குள்ள பன்னிரண்டு துறைமுகங்களுக்குச் சியாம் அரசரின் கப்பல் சென்று அங்குக் கிடைக்கும் பொருள்களை வாங்கிக்கொண்டு சீனாவிற்குச் சென்று விற்றன. இறக்குமதியாகும் பொருள்களை வாங்கும் முதல் உரிமை அரசருக்கே கொடுக்கப்பட்டது. சியாம் வளைகுடாவில் ஆண்டு முழுவதும் வாணிபம் நடந்தது. ஆண்டிற்கு ஒருமுறை சியாம் அரசரும் இரு மரக்கலங்களைக் கேன்டனுக்கு அனுப்பினார்; இக்கப்பல்கள் மட்டும் சுங்கவரி செலுத்தாமல் கேன்டனில் வாணிபம் செய்யலாம். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பாங்காக்கிலிருந்து தூதுவர்கள் பீகிங்கிற்கு (Peking) சென்று திறை செலுத்தினர்.

பொதுவாக, பாங்காக்கில் வாணிபம் செய்யும் கப்பல்களெல்லாம் சியாமில் கட்டப்பட்டவை; சீனக் கடற்கரைகளில் கட்டப்படும் கப்பல்களுடன் ஒப்பிட்டு நோக்கினால் சியாமில் கட்டப்படும் கப்பல்களின் செலவு 25 அல்லது 30 விழுக்காடாவது குறைவாயிருந்தது. பொதுவாக, இக்கப்பல்கள் சிறியவை; ஏறத்தாழ 200 டன்களுடைய கப்பல்கள் கட்டப்பட்டன. சில 1200 டன்கள் கப்பல்களும்

கட்டப்பட்டன. நீர்வழிச் செலவு வசதிகள் (Navigation) இக் கப்பல்களில் மிகக்குறைவு; ஆகையால், இக்கப்பல்களில் மாலுமிகள் அதிகமாகவிருந்தார்கள். நீரை மேலெழச் செய்யும் விசைக்குழாய் வசதிகள் இக்கப்பல்களில் கிடையா; திசையறி கருவிகள் கப்பல் களின் பின்புறம் இருந்தன. சீனக்கப்பல்கள் ஒரு பயணம் செய்யும் நேரத்தில் ஆங்கிலேயக் கப்பல்களும் அமெரிக்கக் கப்பல்களும் மூன்று பயணங்கள் செய்தன.

ஆனாலும், ஐரோப்பியர்களை விடச் சீன வணிகர்களுக்குச் சில நன்மைகள் இருந்தன. சாங்காயிற்குத் தெற்கேயுள்ள சீன அங்காடிகளுக்கு அவர்கள் எளிதில் போகமுடிந்தது; ஐரோப்பியர் களைவிட அவர்களுக்கே தேயிலை, பீங்கான்கள், பட்டு முதலியன அதிகமாக வாங்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஐரோப்பியர்களால் பொதுவாகக் கேன்டனிலுள்ள கோஹோங் (Cohong) வணிகர் களிடமிருந்துதான் பொருள்கள் வாங்க முடிந்தது. ஆசிய அங்காடி களைப் பற்றிய விவரங்கள் சீனர்களுக்கு நன்கு தெரியும். பொதுவாக, முதலாளிகள் கப்பல் சரக்குகளுடன் சென்று கப்பல் நிற்கும் துறைமுகங்களில் சில்லறை வாணிபம் செய்து விற்றார்கள். அவர்கள் சிக்கனமாக வாழ்ந்தார்கள். நறுமணக் கட்டைகள், காண்டாமிருகத்தின் கொம்புகள், கருங்காலிக் கட்டைகள், சாம்பிராணி, கற்பூரம், பதனிட்ட தோல்கள் போன்ற பொருள்களை வைத்துக்கொண்டு வாணிபம் செய்யவில்லை. கி.பி. 1824ஆம் ஆண்டில் சியாமிலிருந்து 44 சீன மரக்கலங்கள் சிங்கப்பூருக்குச் சென்று வாணிபம் செய்து கொண்டிருந்தன. ஆசிய நாடுகளுக்குள் சீனாவிற்குப் பிறகு சியாம்தான் சிங்கப்பூர்த் துறைமுகத்தை மிக அதிகமாய்ப் பயன்படுத்தியது.

கி.பி. 1820ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து வங்காளத் துறைமுகங்களுடன் வாணிபத் தொடர்புகொள்ளப் பாங்காக் முயற்சி செய்தது. இந்தியாவிலிருந்து வெடிக்கும் போர்க் கருவிகள் வாங்கச் சியாம் விரும்பியது. இக்காரணத்தால்தான் வாணிபத் தொடர்பு கொள்வதற்காகக் கிழக்கிந்தியக் கம்பெனி ஜான்கிரா போர்டு (John Crawfurd) என்ற ஆங்கிலேயரைச் சியாமிற்கு அனுப்பியது.

பாங்காக்கில் கிராபோர்டு

மிகுந்த சரக்குகளை எடுத்துக்கொண்டு கி.பி. 1821ஆம் ஆண்டில் கிராபோர்டு பாங்காக்கிற்குச் சென்றார். துணிமணிகள், கண்ணாடிக் கருவிகள், காலாட்படை வீரனின் துப்பாக்கிகள், ஒரு குதிரை முதலியவற்றைச் சியாம் மன்னருக்குப் பரிசுகளாகக்

கொடுக்க எடுத்துச் சென்றார். சியாமுடன் ஒரு வாணிப உடன்படிக்கை செய்யவேண்டும் என்பதே கிராபோர்டின் நோக்கம். சியாம் துறைமுகங்களில் ஆங்கிலேயர்கள் குறைந்த திறை செலுத்த உடன்பாடு வாங்கவேண்டும் என்பதே இவர் நோக்கம்.

மேலும் நதியில் செல்லும் எல்லாக் கப்பல்களும் துப்பாக்கிகளைக் கரையிலே விட்டுவிட்டுச் செல்ல வேண்டும் என்ற கட்டுப்பாட்டினால் கிரோபோட்டிற்குத் துன்பம் ஏற்பட்டது. இந்தக் கட்டுப்பாட்டை வற்புறுத்தாதுவிடவேண்டும் எனக் கிராபோர்டு கேட்டுக் கொண்டார்; வெற்றியும் பெற்றார். ஆனால், இதனால் அவர்மேல் ஐயம் வலுத்தது; இதை உள்ளூர்ச் சீன வணிகர்கள் தூண்டி விட்டார்கள். சியாம் நாட்டில் ஆங்கிலேய வணிகர்களுக்கு மரியாதை கொடுக்கப்பட்டதென்றாலும் அவர்கள்மேல் கவனக் கண்காணிப்பு வைக்கப்பட்டது. சியாம் அரசர்முன் விழுந்து வணங்கவேண்டும் என்ற கட்டுப்பாட்டை விலக்கியபோதிலும், அவர்களுடைய குல்லாய்களையும் புதைமிதிகளையும் (Shoes) நீக்க வேண்டும் என்றும், அவர்கள் அரசர்முன் உட்காரும்போது அவர்களுடைய கால்கள் அரசர் அமர்ந்திருக்கும் இருக்கைக்கு எதிராக நீட்டப்படக் கூடாது என்றும் கட்டுப்பாடு போடப்பட்டது. இங்கிலாந்தில் மன்னருடன் நேரடியாகக் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்வதில்லை என்றும் கம்பெனியின் தலைமை ஆளுநரின் பிரதிநிதியுடன் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்வதில்லை என்றும் சியாம் அரசர் கியாபோர்டிடம் கூறினார். ஆனால், இந்தக் கட்டுப்பாட்டையும் விலக்கும்படி கிராபோர்டு கேட்டுக் கொண்டார். இறுதியாகச் சியாம் அரசரும் ஒப்புக்கொண்டார்.

முதலில், கிராபோர்டு பாக்நம் (Paknam) ஆளுநருடன் பேச்சுத் தொடர்ந்தார்; பின்பு சேனபோதி உறுப்பினருடன் பேச்சு நடத்தினார். இவ்வுறுப்பினர் அயல்நாட்டு அமைச்சராகவும் பண்டகசாலையின் முதலாளியாகவும் பணி புரிந்து கொண்டிருந்தார். சியாம் அரசரின் மூத்த மகன் முன்பு இப் பேச்சு நடந்தது. பொதுவாகச் சியாமியர்கள் செருக்குடனும், பேராசையுடனும் நடந்துகொண்டார்கள்.

கிராபோர்டின் நோக்கம் பின் வருமாறு :

1.) சியாமுடன் தொடக்கத்தில் நேசத் தொடர்புகொள்ள வேண்டும். இதுவே வாணிப உடன்படிக்கை ஏற்படுத்துவதற்குப் பாலமாக அமையவேண்டும்.

2.) கோட்டைகள் கட்டவும், தொழிற்சாலைகள் அமைக்கவும் வழிமரபு வரிகளிலிருந்து விலக்களிக்கவேண்டும். சில பொருள் களின் விற்பனைக்குரிய தனி உரிமை வேண்டும். ஏனைய ஐரோப்பிய நாடுகள் சியாமில் வாணிபம் செய்யக்கூடாது என்பன போன்ற சலுகைகளைக் கேட்கக்கூடாது.

3.) பிரிட்டிஷ் இந்தியா, பினங், சிங்கப்பூர் ஆகியவற்றோடு தொடர்புகொள்ள வேண்டும் என ஊக்கமளிக்க வேண்டும்.

4.) சூழ்நிலை தகுந்ததாயிருந்தால் கேதா, பேராக்கின் பாதுகாப்பைப் பற்றிப் பேசவேண்டும்.

இந்தியாவின் தலைமை ஆளுநருடன் வாணிபத் தொடர்பு கொள்ளச் சியாம் அரசரவை ஆர்வமோ, அக்கறையோ காட்ட வில்லை. கீழோர் அரசாங்கத்திடமிருந்து உயர்ந்தோர் அரசரவைக்கு வந்திருப்பதாகக் கிராபோர்டிடம் சியாம் அரசரவை வலியுறுத்தியது. இத்தகைய மனப்பான்மையிருந்ததால் கிராபோர்டின் நோக்கங்கள் நிறைவேறவில்லை. அரசர் இரண் டாவது இராமா ஒரு சிறிய பரிசளித்துக் கிராபோர்டை அனுப்பி விட்டார்.

ஆங்கிலேய அதிகாரிகளுக்கு அவமதிப்பு ஏற்பட்டது. ஆனால், ஆங்கிலேயத் தனியாள் வணிகர்களும், போர்த்துக்கீசியர்களும், டச்சு வணிகர்களும், பிரெஞ்சு வணிகர்களும் சியாமில் தங்கி வாணிபம் செய்யலாம் என உடன்பாடு அளிக்கப்பட்டது. சியாம் ஐரோப்பியர்களிடம் எச்சரிக்கையுடன் நடந்தது; அவர்கள்மேல் நம்பிக்கையில்லாம லிருந்தது. மேலும் ஆற்றோரமிருந்த பாங்காக் கடல் வாணிபத்திற்கேற்றவாறு அமைந்திருந்தபோதிலும் பாங்காக் அரசரவை மாறுதலை விரும்பாமல் பழைமை பேணும் நாடா யிருந்தது. சீனப் பேரரசருடன் வாணிபத் தொடர்புகொள்ளவே இரண்டாவது இராமா ஆர்வம் காட்டினார். தமக்குக் கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக்கொண்டு சியாமிற்கு அடிமையாக இருந்த நாடுகளின்மேல் அதிகாரம் செலுத்தவே மன்னர் இரண்டாம் இராமா விரும்பினார்.

மூன்றும் இராமா (கி.பி. 1824—1851)

இரண்டாவது இராமாவினது ஆட்சியின்போது சியாம் வழிமரபு பண்பாடுகளையே பின்பற்றியது. மேலை நாட்டுப் பண்பாடுகளைப் பயன்படுத்திச் சியாமைப் புதுப் பாணியில் செலுத்த விரும்பினார், மாங்குட் அல்லது நான்காம் இராமா. ஆகையால், வழிமரபு

ஆட்சிக்கும், தற்காலப் பாணியில் அமைந்த ஆட்சிக்கும் இடை மாறுபாட்டுக் காலமாய்த் திகழ்ந்தது மூன்றும் இராமாவின் ஆட்சி. மூன்றும் இராமா ஆட்சியின்போது வெளிநாடுகளின்மேல் அக்கறை காட்டத் தொடங்கியது சியாம். மேலைநாடுகளுடன் மிகுந்த தொடர்புகொள்ளத் தொடங்கியது. ஆனால், இதனால் இது புதுப் பாணியில் அமைந்த நாடாய் மாறியது எனக் கூறமுடியாது.

முதல் ஆங்கிலேய-பர்மியப் போர் தொடங்கிய சில மாதங்களுக்குப் பிறகு இரண்டாம் இராமா 1824ஆம் ஆண்டு ஜூலை 2ஆம் நாள் இறந்தார். நாட்டின் நிருவாக விவகாரங்களில் வல்லுநரா யிருந்த இளவரசர் சேஸ்தா (Chesde) அடுத்த அரசராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். அரசர் குடும்பத்தைச் சேர்ந்த இருபத் தோராண்டு நிரம்பிய இளவரசர் மாங்குட் துறவியாய்ப் பயிற்சி பெறுவதற்குத் துறவி மடத்தில் சேர்ந்திருந்ததால் அவரை அரசராகத் தேர்ந்தெடுக்கவில்லை. சேஸ்தா அனுபவம் நிரம்பியவ ராயிருந்ததால் மேலை நாட்டுப் பேரரசு தன்மையிலிருந்து வரும் துன்பங்களிலிருந்தும் சியாமை விடுவிப்பார் என்ற நம்பிக்கை எல்லோரிடமும் இருந்தது. நாட்டில் நிலையான சூழ்நிலையேற் படாதிருந்ததால் இவருடைய அனுபவம் நாட்டிற்குப் பயனுடைய தாயிருந்தது.

ஜூலை 21ஆம் நாள் இளவரசர் சேஸ்தா மன்னர் மூன்றும் இராமாவாக மாறினர். இவருடைய மற்ருெரு பெயர் பிராநாங் க்ளாவோ, (Phranangklao) நாட்டின் நிருவாகத்தை வலிமையுறச் செய்யப் பலரைப் பதவியில் அமர்த்தினர். அரசாங்க அதிகாரி களோடு நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார். தம்முடைய தந்தையைப் போலில்லாமல் நாட்டின் நிருவாகத்தைத் தாமே நேரடியாக நடத்த விரும்பினர். புதிய அரசர் மூன்றும் இராமா வினது ஆட்சியின்போது முழுமையான அமைதி நிலவியது எனக் கூற முடியாது. மூன்றும் இராமாவின் மாமனை இளவரசர் ராத்ரோநாரெட் (Ratronnaret) சட்டப்படி உறுதியான பின்னுரிமையுடையவராக (Heir-Apparent) அல்லது உபாரட்டாக (Uparet) இருக்க விரும்பியதால் மூன்றும் இராமாவுக்கும் அவருடைய மாமனுக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது. மூன்றும் இராமாவின் மாமன் திறமை வாய்ந்தவர், ஆனால் பழி பாவங்களுக்கு அஞ்சாதவர். ஆகையால், இவர் தம் அதிகாரங்களைத் தவருன வகையில் பயன்படுத்தியதால் இவரை மூன்றும் இராமவாக கைது செய்தார். கி.பி. 1848ஆம் ஆண்டு டிசம்பரில் இவர் குண்டாந் தடியால் அடிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். நாட்டில் இதைத் தவிரக் குழப்பச் சூழ்நிலையும் இருந்தது. அபினியைக்

கள்ளக் கடத்தல் செய்து கொண்டிருந்த சீன இரகசிய மன்றங்களுக்குள் கி.பி. 1835, 1844, 1848 ஆகிய ஆண்டுகளில் கலகம் ஏற்பட்டது. ஆகையால், அரசாங்கம் இவர்களை அடக்கி ஆள வேண்டியதாயிருந்தது.

மூன்றும் இராமாவின் அரசாங்கம் வழி மரபு முறைகளைப் பின்பற்றியது. மத்திய அரசாங்கம் ஆளும் வகுப்பினர் ஆட்சியின் கீழிருந்தது. பண்ணை நிலவுரிமை முறையும் இருந்தது. இக்காரணத்தால் அரசாங்கம் திறமையில்லாமலிருந்தது. ஒவ்வொரு துறையின் தலைவரும் அரசருக்கு நேரடியாக விடையளிக்க வேண்டும். மத்திய அரசாங்கத்திற்கு மூன்று பொறுப்புகளிருந்தன. 1. அரசியல் சடங்குகளை ஒழுங்காக முறையாகச் செய்யவேண்டும், 2. உள்நாட்டு அமைதியைச் சட்டத்திற்குள் உட்படுத்திப் பாதுகாக்கவேண்டும். 3. வெளி நாடுகளிலிருந்து எத்தகைய ஆபத்தும் வராமல் மக்களைப் பாதுகாக்கவேண்டும்.

மலேய் நாடுகளுடன் தொடர்பு

கி.பி. 1767ஆம் ஆண்டு நாகோன் ஸ்ரீதமாரத்தும் (Nakhon Sritammaret) [ஆங்கிலேயர்கள் இப்பகுதியை லீகோர் (Ligor) என அழைக்கிறார்கள்] சொங்களாவும் (SongKla) சியாம் நாட்டின் மாகாணங்களாயிருந்தன. ஆனால் கி.பி. 1767ஆம் ஆண்டில் அரசர் ஹின்னபயுசின் (King Hsinbyusin) இம்மாகாணங்களைச் சியாமின் ஆட்சியிலிருந்து விடுவித்தார். அடிமை நாடுகள் தாற்காலிகமாகச் சியாம் ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்து உரிமையடைந்தன. கேலன்தான், தெரென்கானு (Trengganu) ஆகியவற்றை இரண்டாம் இராமா தம் மேலாதிக்க உரிமையின் கீழ்க் கொண்டுவந்தார். ஆகையால், முதல் இரண்டு சக்ரி அரசர்கள் இந்நாடுகளை மீண்டும் சியாமின் ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தார்கள். கி.பி. 1818ஆம் ஆண்டிலிருந்து கேதா பேராக்கை (Perak) வென்று சியாம் சார்பில் ஆட்சிபுரிந்து வந்ததை ஏற்கெனவே பார்த்தோம்.

நாகோன் ஸ்ரீதமாரத், சொன்ங்கிளா, பதானி (Patani) பகுதிகளில் குடியேறிய சியாமியர்களினால் ஓரளவு மலேயப் பண்பாடுகளை மாற்றியமைக்கப்பட்டன. மேலும், தெற்கு நோக்கிச் செல்லச் சியாம் விரும்பியது; ஆனால், பினங்கில் ஆங்கிலேயர்களிருந்ததால் மேலும் பல பகுதிகளைக் கைப்பற்றும் துணிவு சியாமிடம் இல்லை.

சியாமின் மலேய அடிமை நாடுகளான கேதா, கேலன்தான், பதானி, தெரன்கானு ஆகியவை ஆண்டிற்கு மூன்றுமுறை

புங்காமாஸ் (Bungamas—அதாவது கப்பம்) செலுத்தின. தான் அனுப்பும் புங்காமாஸ் கப்பம் அன்று வெறும் பரிசுதான் எனத் தெரன்காணு வலியுறுத்தியது. அடிமை நாடுகளின் அயல்நாட்டு விவகாரங்கள் சியாமிடமிருந்தன. அந்நாடுகளின் அரசர்களைச் சியாமின் அரசர் ஒப்புக்கொள்ளவேண்டும். இவ்வரசர்களுக்குச் சியாம் நாட்டுப் பட்டப்பெயர்கள் அளிக்கப்பட்டன. பொதுவாகச் சாவோ பிரியா (Chao Phrya) படிநிலையளிக்கப்பட்டது. இந்நாடுகளுக்கு அயல்நாடுகள் மூலம் ஆபத்து வந்தால் சியாம் பாதுகாப்பளிக்க முன்வந்தது. பதிலாகச் சில சலுகைகளைச் சியாம் எதிர்பார்த்தது:—

1. சியாம் மன்னருக்கு இந்நாடுகளின் அரசர்கள் பற்றுறுதியளிக்கவேண்டும்.

2. சியாம் உரிமைக் கோரிக்கை விடும் சமயங்களில் அவர்கள் இராணுவத் துணை உதவியளிக்கவேண்டும்.

3. சிறந்த விழாக்களில் கலந்துகொள்ளவும், அழைப்பாணையிடும்போது அவர்கள் பாங்காக்கிற்கு வரவேண்டும்.

4. சியாமின் ஆலோசனைப்படி அவர்கள் செயல்படவேண்டும்.

நாகோன் ஆளுநரின் அதிகாரத்தின்கீழ்க் கேதாவும், கேலன்தானும் ஒப்படைக்கப்பட்டன. சொன்ங்கிளா ஆளுநரின் அதிகாரத்தின்கீழ்த் தெரன்காணு வந்தது. ஆங்கிலேயர்கள் பினாங்கிலும் (Penang), வெல்லெஸ்லி மாகாணத்திலும் இருந்ததால் கேதாவுடன் உள்ள சியாமின் தொடர்பிற்கு இடையூறுகள் ஏற்பட்டன. உதாரணமாக, கி.பி. 1822ஆம் ஆண்டில் கூறியபடி, ஜான்கிராபோர்டு பாங்காக்கிற்குச் சென்று சியாம், அடிமை நாடுகள், பிரிட்டன் ஆகியவற்றினிடையே உறவை வலுப்படுத்த முயன்றார்.

கி.பி. 1825ஆம் ஆண்டில் ஹென்ரி பர்னி (Henry Burney) மூன்றும் இராமாவைக் காண வந்தார். முதல் ஆங்கிலேய–பர்மியப் போர் மூண்ட காரணத்தாலும், மலேய நாடுகளில் உருவாகிய சூழ்நிலையின் விளைவாலும் பர்னி சியாமிற்கு வந்தார். பர்மாவிற்கெதிராகப் போர் புரிவதால் சியாம் படைகளின் உதவியை நாடியே பர்னி வந்தார். பினாங்கில் கி.பி. 1825ஆம் ஆண்டில் ஆளுநர் இராபர்ட் புல்லர்டன் (Robert Fullerton) சாவோ பிரியா நாகோன் ஸ்ரீதமாரத்துடன் மோதினார்; ஏனென்றால், சாவோ பிரியா பேராச் செலங்கர் விவகாரங்களில் தலையிட்டார். பர்னியின் தந்திர நடவடிக்கையினால் அவரால் மன்னர் மூன்றும் இராமாவைக் காண

முடிந்தது. பர்னி மெச்சத்தக்கவகையில் நடந்துகொண்டார் என மன்னர் கருதினர். ஆகையால், கி.பி. 1826ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆங்கிலேயர்களோடு உடன்படிக்கை செய்ய ஒப்புக் கொண்டார். சியாம் அவைக்கும், கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் ஏற்பட்ட முதல் உடன்படிக்கை இதுதான். இவ்வுடன்படிக்கையின் சிறந்த பகுதிகள் :

1. கேதாவிலிருந்து சியாமின் மேலாதிக்க உரிமையை ஆங்கிலேய அரசாங்கம் ஒப்புக்கொண்டது. கேதாவிலிருந்த சியாமியர்களைக் கேதாச் சுல்தான் தாக்காமல் தடுக்கப் பாதுகாப் புறுதியளிக்கப்பட்டது. பினங்கில் வசித்து வந்த கேதாச் சுல்தானைப் பினங்கை (Penong) விட்டு வெளியேற்றவும் ஆங்கிலேயர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

2. கேலன்தான், தெரன்காணுவிலிருந்த சியாமின் மேலுரிமை யரசை ஆங்கிலேய அரசாங்கம் ஒப்புக்கொண்டது. (சிக்கலைத்துக் குறிப்பாகச் சுட்டிக் காண்பித்ததால்)

3. பேராக், செலங்காரில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றுவதாகச் சியாம் வாக்குறுதியளித்தது; ஆனால், பேராக் விரும்பிச் சியாமிற்குப் 'புங்காமாஸ்' அனுப்பினால் ஆங்கிலேயர்கள் அதற்குத் தடையாக நிற்கக்கூடாது.

4. பினங், வெல்லெஸ்லி மாகாணத்திலிருந்த ஆங்கிலேய ஆட்சியைச் சியாம் ஏற்றுக்கொண்டது.

5. வாணிபத் தொடர்புகொள்ள இருதிறத்தினரும் ஒப்புக் கொண்டனர்.

பேராக்கைப்பற்றிய கட்டுப்பாட்டைத் தவிர மற்றப்படி பற்று றுதி உடன்படிக்கையின்படியே சியாம் நடந்துகொண்டது. பேராக் சுல்தான் பாங்காக்கிற்குத் திறை செலுத்த முடியாது எனக் கூறியதை அறிந்து கொண்டவுடன் நாகோன் ஸ்ரீ தமாரத்தின் ஆளுநர் சுல்தானை அச்சுறுத்துவதற்காக ஆள்களை அனுப்பினர். சுல்தானுக்கு மனவுறுதியளிக்கும் நோக்கத்துடன் கி.பி. 1826ஆம் ஆண்டில் ஜேம்ஸ் லோவுடன் (James Low) சில படைவீரர்களை ஆளுநர் புல்லர்டன் அனுப்பினர். தமக்கிட்ட கட்டளையை மீறி லோவ் நடந்துகொண்டார். ஏவிவிடவில்லையென்ற போதிலும் தாமாகவே பேராக் சுல்தானுடன் ஓர் உடன்படிக்கையை லோவ் ஏற்படுத்தினர். இவ்வுடன்படிக்கையின்படித் தாம் சியாமிற்குக் கப்பம் இனிமேல் செலுத்தப் போவதில்லையெனச் சுல்தான் வாக் குறுதியளித்தார்.

கேதா விவகாரம் பற்றிச் சியாமும், ஆங்கிலேயர்களும் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டபோதிலும் கேதா மலேயர்கள் இவ்வொப்பந்தத்தின் அம்சங்களை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். தங்களுடைய நாட்டை மீட்பதற்காக மலேயர்கள், சுல்தானின் மருமான் தெங்குதின் (Tengku din—சுல்தானின் மகன் எனச் சியாமிய ஆதாரங்கள் கூறுகின்றன) தலைமையில் கி. பி. 1831 ஆம் ஆண்டில் கொரில்லாப் போர் தொடங்கினுர்கள். அவர்களுடைய வெற்றி சில காலம்தான் நீடித்தது. அவர்களை அடக்கும் நோக்கத்துடன் ஒரு படையுடன் ஸ்ரீதமாரத்தின் ஆளுநர் நாகோன் சென்றுர். இதற்கிடையில் ஆளுநருக்கு உதவியளிக்க ஒரு காலாட் படையையும் கப்பற்படையையும் பாங்காக் அனுப்பியது. சியாமியர்கள் வலிமையோடு கடுமையாகத் தாக்கியதால் மலேயர்கள் பெரிதும் தோற்கடிக்கப்பட்டார்கள். தெற்கிலிருந்து கேதாவிற்கு உதவி செய்யும் நோக்கத்துடன் சென்ற இடர்காப்புதவிப் படையைச் சியாமியர்களுக்கு உதவும் நோக்கத்துடன் ஆங்கிலயர்கள் தடை செய்தார்கள். கி. பி. 1832 ஆம் ஆண்டில் தெங்குதின் தற்கொலை செய்து கொண்டார்.

சியாம் தலைமையிலிருந்து விடுபடக் கேதா, பேராக் மட்டும் முயற்சி செய்யவில்லை. பதானியும், ஒரளவு கேலன்தானும், தெரன்கானுவும் முயற்சி செய்தன. கேதாவில் கொரில்லாப் போர் நடந்துகொண்டிருக்கும் சமயம் சொங்கிளா ஆட்சிக்கெதிராகப் பதானியில் கலகம் ஏற்பட்டது. கேலன்தானும், தெரன்கானுவும் இக்கலகத்தை ஆதரித்தன. கேதா கலகத்தை அடக்கியவுடன் நாகோன் படை வீரர்கள் சொங்கிளா உதவிக்குச் சென்றனர். பதானியில் கலகம் செய்துகொண்டிருந்த மலேயத் தலைவர்கள் புறமுதுகு காட்டித் தப்பி ஓடினுர்கள். கேலன்தானும், தெரன்கானுவும் பின்வாங்கின. இக்கலகங்களை அடக்கியதால் மலேய் நாடுகளில் சியாமின் தலைமை வலுவடைந்து ஓங்கியது. சியாமின் அடிமைகளாகக் கேலன்தானும், தெரன்கானுவும் நீடித்திருந்தன.

கி. பி. 1838 ஆம் ஆண்டில் தெற்கு மாகாணங்களில் மீண்டும் கலகம் ஏற்பட்டது. பதானியை நோக்கி மலேயப்படை வீரர்கள் சென்றனர்; சொங்கிளா முற்றுகையிடப்பட்டது. ஆனுல், மீண்டும் நாகோன் ஸ்ரீ தமாரத் படை வீரர்களால் அவர்கள் முறியடிக்கப்பட்டார்கள். மீண்டும், கேதாக் கடற்கரையை ஆங்கிலேயர்கள் சூழடைப்புச் செய்தார்கள். கி.பி. 1839 ஆம் ஆண்டு பிப்ரவரியில் கேதா மீண்டும் கைப்பற்றப்பட்டது. சொங்கிளா முற்றுகை கைவிடப்பட்டது. மன்னிப்புக் கேட்கச் சுல்தான் தம்

மகனைப் பாங்காக்கிற்கு அனுப்பினவுடன்தான் இரண்டாம் சுல்தான் அஹ்மது தாஜுத்தீன் ஹலிம்உதா மன்னிப்பளித்தார்; இதற்குப் பின்தான் கேதாக் கலகம் முடிவடைந்ததாகக் கருதப் பட்டது. கி. பி. 1841 ஆம் ஆண்டில் சுல்தான் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார். இனிமேல், கடமை தவருத அடிமையாகப் பணியாற்றுவதாக வாக்குறுதியளித்தார். கி. பி. 1842 ஆம் ஆண்டில் சியாமியப் படைவீரர்கள் பாங்காக்கிற்குத் திரும்பினுர்கள். ஆகையால், மூன்றும் இராமாவின் ஆட்சியிறுதியில் மலேய்-அடிமை நாடுகளின் மேலுள்ள சியாமின் அதிகாரம் முழுமையாக அமைக்கப்பட்டது. கி. பி. 1909 ஆம் ஆண்டு வரை இந்நாடுகள் சியாமின் மேலாதிக்க உரிமையின் கீழிருந்தன; பிறகு பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டன.

லாவோஸ் நாடுகளுடனுள்ள சியாமின் தொடர்பு (மூன்றும் இராமா)

தெற்கு நோக்கி எக்காரணங்களால் தன் ஆதிக்கத்தைப் பரப்பச் சியாம் சென்றதோ அதே காரணங்களால் தூண்டப்பட்டு வடக்கு நோக்கியும் சென்றது. மலேய அடிமை நாடுகள் போல லாவோசும், கி.பி. 1767 ஆம் ஆண்டில் சியாமின் ஆட்சியிலிருந்து தப்பி விலகியது; அதாவது, பர்மா சியாமின்மேல் படையெடுத்துச் சியாமை வலிமையிழக்கச் செய்தபோது லாவோஸ் இவ்வுரிமை நடவடிக்கையை எடுத்தது. ஆனுல், கி. பி. 1824 ஆம் ஆண்டுக்கு முன்பு சியாம் ஆட்சியின் கீழிருந்த லாவோஸ் பகுதிகளெல்லாம் மீண்டும் கைப்பற்றப்பட்டன; பல புதிய லாவோஸ் பகுதிகளும் சியாமுடன் இணைக்கப்பட்டன.

பொதுவாக, லாவோஸ் நாடுகளுடன் அமைதியான தொடர்பு இருந்தது. லாவோஸின் அடிமைகள் பணிபுரிய ஆர்வம் காட்டினர். சியாமிய அவையில் பயிலுவதற்காகத் தங்கள் மக்களை லாவோஸ் அரசர்கள் அனுப்பினுர்கள். சியாமியர் அந்தப்புறத்திற்குத் தங்கள் மகளிர்களை அனுப்பினுர்கள். முறை தவருமல் பொன், வெள்ளி, மரம் ஆகியவற்றைக் கப்பமாகச் செலுத்தி வந்தார்கள்.

வியாங்சன் (Wiang chun or vjentiane) கலகம்

ஆனுல், வியாங்சன் கலகம் இவ்வமைதியான சூழ்நிலையைக் குலைத்தது. சியாமுடன் இருந்த உறவு முறையையே இக்கலகம் மாற்றியமைத்தது. கி. பி. 1826 ஆம் ஆண்டில் வியாங்சனின் அரசர் சாவோஅனு (Chvo Anu) தென்கிழக்குச் சியாமின் மேல் மூன்று இடங்களிலிருந்தும் படையெடுத்துச் சென்றுர்; எங்கும்

பரவி இப்பகுதிகள் முழுவதையும் கைப்பற்றுவதே அவர் நோக்கம். சியாமியர்கள் எதிர்த்தாக்குதல் செய்து வியாங்சனைப் கைப்பற்றி னார்கள். சாவோஅனு அன்னாமிற்குள் ஓடி ஒளிந்தார். கி. பி. 1823 ஆம் ஆண்டு 80 அன்னாமியர்களுடனும், 1,000 லாவோஸி யர்களுடனும் வியாங்சனுக்குச் சாவோஅனு திரும்பி வந்தார். தம்மை எதிர்த்து முன்னேறி வரும் சாவோ பிரியா ரத்சசுபா வதியின் (Chao phraya Ratchasupawadi) படையைத் தாக்கு வதற்குத் தயாராக இருந்தார். அனு தோல்வியடைந்தார்; பாங்காக்கிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். பாங்காக்கில் அவரை ஓர் இரும்புக் கூண்டிலே அடைத்தார்கள்; எட்டு நாள்களுக்குப் பின் அவர் இக்கூண்டுக்குள்ளேயே உயிர்நீத்தார். வியாங்சன் நாடு சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டது; இதில் வாழ்ந்த மக்கள் வெளியேறினார்கள். பாங்காக்கில் நேரடி நிருவாகத்தின்கீழ் இந் நாடு கொண்டுவரப்பட்டது. இதற்குப் பிறகு கிழக்கு லாவோஸ் முழுவதும் சியாமின் ஆட்சியின்கீழ் வந்தது.

லாவோசின்மேல் தன் அதிகாரத்தைத் திணிக்க வேண்டும் என்பதுதான் சியாமின் நோக்கம் என்பதைச் சியாமின் போர் நடவடிக்கைகளிலிருந்தே புரிந்துகொள்ளலாம். கைப்பற்றப்பட்ட லாவோஸ் தலைவர்கள் துன்புறுத்தப்படவில்லை; ஆனால் சியாமின் நேரடி ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டார்கள். சியாமை எதிர்க்க முன்வராதவர்களுக்குப் பரிசளிக்கப்பட்டது. மூன்றும் இராமாவினால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசர் ஒருவர் லுவாங் பிரபாங்கின் (Luang Prabang) மன்னராக நியமிக் கப்பட்டார். மேற்கு லாவோசுடன் சியாம் நேசமனப்பான்மை யுடைய தொடர்பு கொண்டிருந்தது. அதன் அயல்நாட்டு நட வடிக்கைகளெல்லாம் பாங்காக்கின் உடன்பாட்டுடன்தான் செயல் படுத்தப்பட்டன. மூன்று சியாமிய ஆணையரின் ஆட்சியின்கீழ் லாவோஸ் வந்தது; ஒருவர் சம்பாஸ்கிலிருந்து (champasak) கிழக்குப் பகுதியை ஆண்டார்; மற்றொருவர் நொங்கையிலிருந்து (Nongkai) தென்கிழக்குப் பகுதிகளை நிருவகித்தார்; மூன்றுமவர் லுவாங்பிரபாங்கை ஆண்டார்.

சியாம்-கம்போடியா உறவு (மூன்றும் இராமா)

லாவோஸின் உறவில் பின்பற்றிய கொள்கையைத்தான் கம்போடிய உறவிலும் மூன்றும் இராமா பின்பற்றினார். பதினான் காம் நூற்றாண்டிலிருந்து பல முறை கம்போடியாவின்மேல் சியாம் படையெடுத்திருக்கிறது. பதினாறும் நூற்றாண்டிற்குள் சியாமிற்குத் திறை செலுத்தும் நாடாகக் கம்போடியா மாறியது. பத்தொன்

பதாவது நூற்றுண்டில் கூடக் கம்போடியாவின்மேல் வலிமை வாய்ந்த அரசியல் அதிகாரத்தைச் சியாம் செலுத்தி வந்தது.

பத்தொன்பதாவது நூற்றுண்டில் தன்னுடைய மேலாதிக்க உரிமையைக் கம்போடியா ஏற்றுக்கொண்டால் போதும் என்ற கொள்கையைச் சியாம் பின்பற்றியது. கம்போடியாவை ஓர் அடிமைநாடாகச் சியாம் கருதியது. ஆகையால், கப்பம் கட்டுவது, சியாம் அனுமதியுடன் அடிமை அரசைச் சடங்கோடு பதவியில் அமர்த்தல், எப்பொழுதாவது படை உதவி செய்வது போன்ற சில சிறந்த முறைகளைத்தாம் கம்போடியாவிடமிருந்து சியாம் எதிர்பார்த்தது.

பலமுறை கம்போடியர்கள் கலகம் செய்திருக்கிருர்கள்; ஒவ்வொரு முறையும் கலகம் செய்தவர்கள் முறியடிக்கப்பட்டார்கள்; இதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு ஒவ்வொரு முறையும் சியாம் தன்னுடைய ஆட்சித் தலைமையைப் பெருக்கிக்கொண்டது; ஆகையால், கம்போடியாவின் பகுதிகள் கைப்பற்றப் பட்டன. இம்முறையிலே கி. பி. 1780 ஆம் ஆண்டுகளில் அங்கோர் (Angkor) பாட்டம்பாங் (Batiambang) பகுதிகள் கைப் பற்றப்பட்டன.

கம்போடியாவின் மேலாதிக்க உரிமைக்காக அன்னுமியர்களுடன் போட்டிபோட வேண்டியதாக இருந்தது. கம்போடியாவை அன்னுமியர்களின் மேலரசு நிலையின்கீழ்க் கொண்டுவரும் கொள்கையைப் பேரரசர் ஜியா-லாங் பின்பற்றினுர். கம்போடியா மன்னர் நாக்ஓங்சன் (Nakongchan) முடிசூட்டிக்கொள்வதற்காகக் கி. பி. 1805 ஆம் ஆண்டில் பாங்காக்கிற்கு வந்தார் எனக் கேள்விப்பட்டவுடன், அன்னுமியர்களின் மேலாட்சி நிலையையும் அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை உரிமையை ஜியா-லாங் வெளியிட்டார். கம்போடியாவும் உடனடியாக இதை ஒப்புக் கொண்டது. இந் நடவடிக்கை மன்னர் இரண்டாம் இராமாவின் சினத்தைக் கிளறியது. பர்மாவுடன் சியாம் நடத்திவந்த போருக்குதவ மன்னர் நாக்ஓங்சன் மறுத்தார் என்ற சாக்கைக் கூறிக் கி. பி. 1811 ஆம் ஆண்டில் இரண்டாம் இராமா கம்போடியாவின்மேல் படை எடுத்தார். ஆனுல், இச் சமயம் அன்னும் தலையிட்டது; ஆகையால் கம்போடியாவின்மேல் சியாம்-அன்னுமின் கூட்டு மேலாதிக்க உரிமையை கட்டாயப் படுத்தியதால் சியாம் ஒப்புக்கொண்டது. இதற்குப்பின் சியாமைவிட அன்னுமிற்குத்தான் அதிக அதிகாரச் செல்வாக்கு கம்போடியாவிலிருந்தது எனத் தெள்ளத் தெளிவாகத்தெரிந்தது.

ஆகையால், முன்பிருந்த சியாமின் தனி மேலாதிக்க உரிமையைத் திணிக்கும் நோக்கத்துடன் கி. பி. 1833 ஆம் ஆண்டில் மூன்றும் இராமா கம்போடியாவின்மேல் படையெடுத்தார். முதல் பர்மிய—ஆங்கிலேயப் போருக்குப் பின் பர்மாவிடமிருந்து சியாமிற்கு வரும் ஆபத்து மறைந்தது. அன்னுமியர்களுக்கு எதிராகக் கலகம் செய்த கம்போடியர்கள் சியாமின் இராணுவ உதவியை நாடியதால் கி. பி. 1833 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கம்போடியாவில் தலையிடச் சியாமிற்கு வாய்ப்பேற்பட்டது.

சாவோபிரியா போதின் (Chao Phraya Bodin), பிரலாங் (Phralang) ஆகியோர் தலைமையின்கீழ் 50,000 சியாமியப் படைவீரர்கள் கம்போடியா வழியாகச் கொச்சின்—சீனுவரை வெற்றிகரமாக முன்னேறினார்கள். அறுதி செய்து முடிக்கிற சாதெக் (Sadek) போரில் தங்கள் எதிரிகளைச் சந்தித்தார்கள். கி.பி. 1834ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தோல்வியடைந்த சியாமியர்கள் பின் வாங்கினார்கள்; ஆகையால், கம்போடியாவை அன்னும் மீண்டும் கைப்பற்றியது.

விரைவில் தன் ஆட்சித் தலைமையைக் கம்போடியாவில் அன்னும் வலுப்படுத்தியது. கி.பி. 1841ஆம் ஆண்டு வரை உண்மையில் அன்னும்தான் கம்போடியாவில் ஆட்சி புரிந்தது. கடும் கண்டிப்புடன் கம்போடியா அன்னும் மயமாக்கப்பட்டது (Annanisation). நிருவாக அமைப்பு மாற்றியமைக்கப்பட்டது. நாம் பென்னின் (Phnom Penn) பெயர் மாற்றப்பட்டு நாம் வியாங் (Nam Viang) என அழைக்கப்பட்டது. அன்னுமியர் முறையிலே ஆடை அணியும்படிக் கம்போடிய அதிகாரிகள் கட்டாயப்படுத்தப் பட்டார்கள். அன்னுமியர் சிறப்புப் பெயர்களைத்தாம் பயன்படுத்த வேண்டுமென வற்புறுத்தப்பட்டார்கள். கம்போடியாவில் ஹீனயான புத்தமதத்திற்குத் (Hinayana Buddhism) தடை விதிக்கப் பட்டது. அரச குடும்பம் கூடக் கொச்சின் சீனுவில் சிறை வைக்கப் பட்டது.

கி.பி. 1840ஆம் ஆண்டு டிசம்பரில் கம்போடியாவில் பல கலகங்கள் ஏற்பட்டன. ஆனால், இவை ஒழுங்கமைதியற்றவையாயிருந்தன. ஓர் இளவரசர் துவாங்கை (A Prince Duang) கம்போடியா மன்னராக நியமிக்கத் தங்களுக்கு உதவுமாறு மன்னர் மூன்றும் இராமாவைக் கம்போடிய உயர்குடி மக்கள் கேட்டுக் கொண்டார்கள். ஆகையால், மீண்டும் சாவோபிரியா போதின், அன்னும் ஆட்சியின்கீழிருந்த கம்போடியாவின் மேல் படையெடுத்தார். கம்போடிய மக்கள் ஆதரவைத் திரட்டுவதற்காக இளவரசர்

துவாங்கைப் பயன்படுத்தினர். ஆகையால், மக்களின் அரசப் பற்றைப் பிரிவு படுத்தும் நோக்கத்துடன் சைகானிலிருந்து துவாங்கின் உடன்பிறந்தவரான இளவரசர் இம்மை (Prince Im) நாம் பென்னிற்கு அன்னமியர்கள் அழைத்து வந்தார்கள். இளவரசர் இம்மைவிடத் துவாங்கையும், அன்னமைவிடக் கம்போடியாவையும் கம்போடிய மக்கள் விரும்புகிறார்கள் எனத் திண்ணமாகத்தெரிந்தது. ஆனால், அன்னமியர்கள் வலிமையுடையவர்களாயிருந்தார்கள். ஆகையால், கி.பி. 1842ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் சியாமிய கம்போடியக் கூட்டுப்படைகள் அன்னமியர்களால் முறியடிக்கப்பட்டன. அதற்குப்பின் கி.பி. 1845ஆம் ஆண்டுவரை இக்கட்டு நிலை நீடித்தது. ஆனால், கி.பி. 1845ஆம் ஆண்டு ஜூலை மாதம் இச் சூழ்நிலை, அன்னமியர்கள் நாம் பென்னைத் தாக்கிக் கைப்பற்றியவுடன் மாறியது. சியாமியர்கள் முன்னேறாமல், உதோங்கில் (Udong) தங்கினர், மீண்டும் ஓர் இக்கட்டான நிலை உருவாகியது.

அன்னமிற்குக் கப்பம் செலுத்தும் அரசியல் படிநிலையைக் கம்போடியா ஏற்றுக் கொள்ளாவிட்டால் போர் தொடர்ந்து நடக்கும் எனக் கம்போடியாவிடம் அன்னம் விளக்கிக் கூறியது. இறுதியாக அன்னம், சியாம் ஆகியவற்றின் அடிமையாக இருக்கக் கம்போடியா ஒப்புக்கொண்டது. கி.பி. 1847ஆம் ஆண்டு மே மாதம் அன்னம் படைவீரர்கள் கம்போடியாவை விட்டு வெளியேறியவுடன் இக் குழப்பச் சூழ்நிலை நீங்கியது. ஜூன் மாதம் சியாமியப் படை வீரர்களும் கம்போடியாவை விட்டு வெளியேறினார்கள். நன்றியுணர்ச்சியுள்ள மன்னர் துவாங் சியாமுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டார்.

இப் போர் மூலம் சியாமிற்குக் கிடைத்த நன்மை, அதற்கேற்பட்ட தீங்கைவிடக் குறைவு. ஆனால், கம்போடியா சியாமின் அடிமையாக வாழ விரும்பியதால் சியாமின் மதிப்பு ஓங்கியது. மேலும் சியாமிற்கும், இடையேயுள்ள இடைத் தடுக்கு நாடாக (Buffer State) கம்போடியா மாறியதால் சியாமிற்குச் சில நன்மைகள் ஏற்பட்டன.

மேலை நாடுகளுடன் தொடர்பு. (Relations with the Western Powers)

மூன்றாம் இராமா ஆட்சியின் போதுதான், முதன் முதலாக, ஆனால், தயக்கத்துடன், ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும் சியாமிற்கு வருவது வரவேற்கப்பட்டு ஆதரிக்கப்பட்டது. தாம் இளவரசர் செஸ்தாவிக் (Prince Chesda) இருக்கும்போதே ஐரோப்பியர்களுடனும், அமெரிக்கர்களுடன் பழகும் அனுபவம்

மூன்றும் இராமாவிற்கு ஏற்பட்டது. வாணிபத்தில் ஆர்வம் உடைய வராயிருந்ததால் மேற்கு நாட்டினரைப் பொறுத்துக்கொள்ளும் தன்மை மூன்றும் இராமாவிடம் இருந்தது. கி.பி. 1818ஆம் ஆண்டில் போர்த்துகீசியர்களுடன் மீண்டும் வாணிபத் தொடர்பு வைத்துக்கொள்வதற்காக எடுத்த முயற்சி தோல்வியடைந்தது. வரையறுக்கப்பட்ட வாணிபத்தில் ஈடுபடக் கி.பி. 1822ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது; ஆனால், அவர் களின் மன்ற வேண்டுகோள்கள் மறுக்கப்பட்டன. ஆகையால், தம்முடைய தூதுக்குழுவின் நோக்கம் நிறைவேறவில்லை எனக் கிராபோர்டு கருதினார். சியாமுடன் கட்டுப்பாடில்லா வாணிபத் தொடர்பை உருவாக்க வேண்டும் என ஆங்கிலேயர்கள் விரும் பினார்கள்.

சீனாவிலிருந்ததைப் போல் சியாமிலும், வெடிக்கும் போர்க் கருவிகளைகளைத் தவிர மற்ற ஐரோப்பிய விளைபொருள்கள், பின் வரும் காரணங்களால், தேவையில்லாமலிருந்தன.

1. சியாமிற்குத் தேவையான பொருள்களெல்லாம் சீனாவிட மிருந்து கிடைத்தன;

2. மேலை நாட்டு வணிகர்களோடு போட்டி போட்டு வாணிபம் செய்து வரும் வினைவின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முனைவதில் சியாமிய வணிகர்கள் ஈடுபட விரும்பவில்லை.

3. அரசியல் எதிரொலி யேற்படுமோ என அஞ்சி மேலை நாட்டவர்களுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளும் துணிவும், ஆர்வ மும் இல்லை.

4. ஆங்கிலேயர்களின் நோக்கங்களை ஐயுற்றார்கள், நம்பிக்கை யற்றவர்களாயிருந்தார்கள்.

வெடிக்கும் போர்க்கருவிகள் தேவைப்பட்டதால் போர்த்துகீசி யர்களை நாடினார்கள். இதே காரணங்களுக்காக அமெரிக்கர்களையும் வரவேற்கத் தயாராக இருந்தார்கள் எனக் கிராபோர்டு கூறினார். பொதுவாக, மேலைநாட்டு வாணிபர்களுடன் வாணிபத் தொடர்பு கொள்ள ஊக்கமளிக்காக் கொள்கையைத்தான் சியாம் பின் பற்றியது. சியாம் கடுமையான விதிமுறைகளை மேலைநாட்டு வணிகர்களுக்கு விதித்தது.

1, சியாமினுள் சுற்றுப் பயணம் செய்வதற்குத் தனியாக உடன்பாடு பெற வேண்டும்.

2. தனியார் படகுகளைப் பயன்படுத்தக் கூடாது.

3. அவர்களின் கப்பல்களின் மேல் 8 விழுக்காடு (விலை மதிப்பீட்டின்படி Ad Valorem) வரி விதிக்கப்பட்டது;

4. அவர்களுடைய சரக்கின் மதிப்பைச் சியாம் நாட்டதிகாரிகள்தாம் போடுவார்கள்; அவர்களுடைய தீர்ப்பே இறுதியானது.

5. அவர்கள் துறைமுகவரிகளைச் செலுத்த வேண்டும்; சியாமிலுள்ள சில செயல் முறைகள் ஆங்கிலேயர்களுக்கு எரிச்சலூட்டின.

6. பொருள்களைக் கூர்ந்து தேர்ந்தாராயச் சியாமியர்கள் மிகுந்த நேரம் செலவழித்தார்கள்;

7. பொருள்களை முதன் முதலாகத் தேர்ந்து எடுத்து விலைக்கு வாங்கும் உரிமை மன்னருக்குத்தான் உண்டு;

8. மன்னரின் தனி உரிமையிலிருந்தன சில விலைப் பொருள்கள்.

பிறகு முதல் பர்மியர்—ஆங்கிலேயர் போர் ஏற்பட்டது; பர்மா அவமானப்படுத்தப்பட்டதைச் சியாமியர்கள் நோக்கினார்கள். சீனாவிற்குப் பின் பர்மாதான் மிக்க வலிமையுள்ள நாடாகச் சியாமியர்களால் கருதப்பட்டது. ஆங்கிலேயர்களின் மேலுள்ள நம்பிக்கையின்மையும், அச்சமும், சியாமியர்களிடையே மிகுந்தன. கி.பி. 1825ஆம் ஆண்டில் ஹென்ரி பர்னி சியாமியர் அவைக்கு வந்ததால் சியாமியர்கள் அச்சம் அடைந்தார்கள். பர்மாவிற்கெதிராகச் சியாமுடன் நேச உடன்படிக்கை செய்வதற்கு வந்ததாகப் பர்னி தெரிவித்தார். சியாமின் மேல் படையெடுக்கும் எண்ணம் ஆங்கிலேயர்களுக்கில்லையென வலியுறுத்தினார். பிறகு சில வாணிபச் சலுகைகளைப் பர்னி கேட்டார். பர்மா தாக்கப்பட்டது மூன்றும் இராமாவிற்கு மகிழ்ச்சியளித்தது; ஆனால், வாணிபச் சலுகைகளுக்காக முறையிட்டது மனக்கசப்பை உருவாக்கியது.

போர் முடிந்தபின், யாண்டபோ உடன்படிக்கை (Treaty of Yandabo) பேரப்பேச்சு நடந்து கொண்டிருக்கும் சமயம், ஆங்கிலேய வாணிபக் கட்டுப்பாடுகளைப்பற்றி மூன்றும் இராமா பர்னி பேச்சு நடத்தினார். பர்னியிடம் நேச மனப்பான்மையுள்ள அமைச்சர்கள் அவருக்குச் சாதகமாக ஆலோசனையளித்தார்கள். பர்னிக்கு மனக் கசப்பேற்பட்டால் சியாமைப் பாதிக்கும்படியான அறிக்கையை இந்தியாவிலுள்ள தலைமை ஆளுநரிடம் கொடுப்பார். இதுவே சியாமியர்—ஆங்கிலேயர் போருக்குக் காரணமாய் விளங்கும் என இவர்கள் எடுத்துரைத்தார்கள். ஆகையால், கி.பி.

1826ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் நாள் பர்னியுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இதனை ஓர் ஒத்தவாய்ப் பளித்த—ஒத்தநிலைப் பொறுப்பளித்த ஒப்பந்தமாகக் கருத வேண்டும். இருதரத்தினரும் வாக்குறுதியளித்தார்கள்; ஒரு சீரான, ஈடான பொறுப்புகள் அளிக்கப்பட்டன; கிடைக்கும் நலன்கள் இருதரத்தினருக்கும் ஒப்ப இருந்தன. உண்மையில் இது ஒரு உடன்பாடான வாணிப ஒப்பந்தம் ஆகும். ஆங்கிலேயர்கள் அரசியல்பற்றிய உரிமைக் கோரிக்கைகளை விடவில்லை. கேதாவிலிருந்த சியாமியர்களின் ஆட்சித் தலைமையைப் பர்னி ஏற்றுக் கொண்டார். பர்னி விண்ணப்பித்த எல்லா வாணிபச் சலுகைகளையும், ஒன்றைத் தவிர மூன்றும் இராமா அளித்தார். சியாமில் ஆங்கிலேய வணிகர் அபினி இறக்குமதி செய்யவும், அரிசி ஏற்றுமதி செய்யவும் தடை விதிக்கப்பட்டது.

ஏறத்தாழ இவ்வகையான உடன்படிக்கை ஒன்றை கி.பி. 1833ஆம் ஆண்டு மார்ச்சு 20ஆம் நாள் சியாம் அமெரிக்கக் குடியரசுடன் செய்தது. எட்மண்டு ராபர்ட்ஸ் (Edmund Roberts) என்பவர் அமெரிக்கத் தூதராகச் சியாமிற்கு வந்தார். சியாமியர்கள் தம்முடைய தூதுக்குழுவை மரியாதையுடன் நடத்தினார்கள் என இவர் அறிவித்தார். ஆங்கிலேயர்களை ஐயுற்றது போல அமெரிக்கர்களை ஐயுறவில்லை என்றாலும், அவர்கள் கேட்ட சலுகைகளெல்லாம் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. சியாமில் ஓர் அமெரிக்க அயலிட நாட்டுப் பேராளர் அலுவலகத்தை அமைக்க அனுமதி கேட்டபோது மூன்றும் இராமா மறுத்தார். சியாமியர்களுக்குச் சினம் வருமோ என அஞ்சி பர்னி இவ்வகையான கோரிக்கையை முறையிடவில்லை.

அமெரிக்கர்களுடன் சியாமியர்கள் ஒப்பந்தத் தொடர்பு கொள்ளும் நோக்கமென்ன ?

1. சியாமியர்களுக்கு அமெரிக்கர்கள் சுடுபடைக்கலன்கள் (Fire arms) அளிக்க முன்வரலாம்; 2. தனித்து ஆங்கிலேயர்களுடன் மட்டும் சியாம் தொடர்புகொள்ள விரும்பவில்லை. 3. ஒரு காலத்தில் அமெரிக்காவும் ஒரு குடியேற்ற நாடாகியிருந்ததால் ஏனைய நாடுகளைக் கைப்பற்றி ஆட்சிபுரியும் நோக்கங்களுக்குப் பரிவு காட்ட மறுத்தார்கள். 4. தங்களுடைய வாணிபத்தைப் பரப்பச் சியாமியர்கள் விரும்பினார்கள்.

வாணிபத்தொடர்பு கொள்ள பிரெஞ்சுக்காரர்களையும் வரவேற்க மூன்றும் இராமா தயாராக இருந்தார்; ஆனால் தற்சமயத்தில் பிரெஞ்சுக்காரர்கள் ஆர்வம் காட்டவில்லை.

மேற்கு நாட்டினர் பற்றிய வாணிபக்கொள்கையில் கி. பி. 1840ஆம் ஆண்டில் சில மாறுதல்கள் தோன்றின. தாம் கொடுத்த சலுகைகளால் சியாமிற்குத் தீங்கு வருவதை மூன்ரும் இராமா நோக்கினர். ஆகையால், முதலில் சர்க்கரை ஏற்றுமதியை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தினர். இதற்கு எதிர்ப்புத் தோன்றுததைக் கண்டு இக் கட்டுப்பாட்டை முழுமையாக்கினர். மேலை நாட்டுச் செலாவணியும் பொருளாதார அமைப்பும் மனக்குறைவுண்டாக்கு வதை மன்னர் புரிந்துகொண்டார். அரசத் தனியுரிமைகளைக் கைவிட்டால் செல்வமிழக்க நேரிடும் என்பதை உணர்ந்தார்.

மீண்டும் ஆங்கிலேயர்களின் மேலுள்ள அச்சத்தால் மேலை நாட்டுக் கொள்கையை மூன்ரும் இராமா திருத்தியமைத்தார். ஹன்டர் (Hunter) என்ற ஆங்கிலேய வணிகரைச் சியாமைவிட்டு நாடுகடத்தினர். ஹன்டருடன் ஏற்பட்ட மனக்கசப்பால் பொது வாக ஐரோப்பியர்களின் மேல் மனஉலேவும் சினமும் கொண்டார். பர்னியுடனும், இராபர்ட்டுடனும் ஏற்பட்ட உடன்படிக்கைகளில் அரசியல்பற்றிய விவகாரங்களும் அடங்கியிருந்ததால் நம்ப முடியாத நிலேயுடைய மனப்பான்மையுடன் மன்னர் தவித்தார். கி. பி. 1839 – 40ஆம் ஆண்டுகளில் அபினிப் போரில் (Opium war) ஆங்கிலேயர்கள் சீனுவைத் தோற்கடித்தார்கள். ஆங்கிலேயர் களின் வலிமையை இதனல் உணர்ந்த பர்மியர்களும், சியாமியர் களும், அதிர்ச்சியடைந்தார்கள். கி பி. 1840ஆம் ஆண்டு சியாம் - மேலைநாடுகளின் தொடர்பு பெரு நெருக்கடிகளடங்கியதாக இருந்தது.

சீனுவில் பெற்ற வாணிபச் சலுகைகளைப் போல் சியாமிலும் பெறுவதற்காகப் பிரிட்டனும், அமெரிக்கக் குடியரசும் தூதுக்குழு அனுப்பத் தீர்மானித்தன. கி. பி. 1860ஆம் ஆண்டில் ஜேம்ஸ் புரூக்கின் (James Brooke) தலைமையின்கீழ் ஓர் ஆங்கிலேய தூதுக்குழு சலுகைகள் பெறுவதற்காகப் பாங்காக்கிற்கு வந்து சேர்ந்தது. புரூக் சென்றபின் அதே ஆண்டில் ஜோஸப் பாலஸ்டியர் (Joseph Ballestier) தலைமையில் ஓர் அமெரிக்கத் தூதுக்குழுவும் பாங்காங்கிற்கு வந்தது. தாங்கள் விரும்பிய சலுகைகளை இவ்விரு குழுவினராலும் பெறமுடியவில்லை. மேலை நாட்டவர்களுக்கு வாணிகச் சலுகைகள் அளித்து மீண்டும் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ள மன்னர் விரும்பவில்லை.

தன்னுடைய நாட்டின் உரிமையை இழக்காமல் பாதுகாக்க வேண்டும்; மேலைநாடுகளுடன் ஒற்றுமைத் தொடர்புகொள்வதற் காக வேண்டிச் சலுகைகளை மட்டும் அளித்தால் போதும் என்பதே

கி. பி. 1840ஆம் ஆண்டிலிருந்து மூன்ரும் இராமா இறக்கும்வரை சியாம் பின்பற்றிய கொள்கைகள் ஆகும்.

மேலை நாட்டினரின் கட்டுப்பாடில்லாக் கொள்கையின் மூலம் வரும் தீமைகளைப்பற்றி மூன்ரும் இராமா புரிந்துகொண்டார். மேலை நாட்டினரின் விண்ணப்பங்களை ஏற்க மறுத்தால் போர் மூளும் சூழ்நிலை உருவாகும் என்பதையும் உணர்ந்தார். ஆனுல், போர் மூலம் விளையும் தீமைகளே குறைவு எனத் தீர்மானம் செய்தார். ஆனுல், இவர்களுக்குப் பின் அரச பதவியேற்ற நான்காம் இராமா வேறு வகையாகக் கருதினுர்.

2. நான்காம் இராமாவின் (மொங்குட்டின்) ஆட்சி (1851-1868)

குடியேற்ற ஆட்சியிலிருந்து சியாமிற்கு விடுதலை அளித்தவர் மன்னர் மொங்குட். இவர் மன்னராக முடிசூட்டிக் கொள்ளும்போது தான் ஐரோப்பியரின் தனித் தலைமை வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது; மேலை நாடுகளுடன் மூன்ரும் இராமா கொண்டிருந்த தொடர்பினுல் மனக்கசப்பு ஏற்பட்டிருந்தது. சியாமிடமிருந்து எதிர் பார்த்ததை அடைய வேண்டுமானுல், சியாமின்மேல் படையெடுக்க வேண்டும் எனத் தங்கள் அரசாங்கத்தை, மனச் சோர்வடைந்திருந்த புரூக்கும், (Brooke) பாலஸ்டியரும் Ballestier) வற்புறுத்தினுர்கள். அரச மரபு வழக்கு முறையிலிருந்து விலகிச் செயல் புரிந்த முதல் சியாம் நாட்டு மன்னர் மொங்குட்டே ஆவார்.

நெடுங்காலம் மொங்குட் மடத்துறவியாய் வாழ்ந்து வந்ததால் அவரால் மிகுந்த அளவில் கல்வி பயிலமுடிந்தது. புத்த சூத்திரங்களைக் கலை நயப்படுத்திக் காட்டுவதிலும், உட்பொருளை வெளிப் படுத்துவதிலும் தனித் திறமை பெற்றிருந்தார்; பாலி, சம்ஸ்கிருதம் மற்ற அண்டை நாடுகளின் மொழிகளை நன்கு கற்றறிந்தவர். அறிவியலில், சிறப்பாக வானூலில் மிக்க ஆர்வம் காட்டினுர். இவர் தாம் கி. பி. 1868ஆம் ஆண்டில் சூரிய கிரகணத்தைப்பற்றிக் கணக்கிட்டுக் கூறினுர்.

துறவியாய் வாழ்ந்தபோது ஐரோப்பியச் சமயப் பரப்பாளர் களுடன் நெருங்கிப் பழகினுர்; அவர்களுடன் தத்துவ விவாதங்கள் செய்தார். உரோமன் கத்தோலிக்க மேற்றிராணியார் பாலிகாய்சிற்குப் (Bishop Pallegois) பாலி மொழி கற்றுக் கொடுத்தார், பதிலாக, அவரிடமிருந்து இலத்தீன் மொழி கற்றுக்கொண்டார்.

முதலில் அருட்டிரு பிராட்டிலியிடமிருந்தும் (Reverend Bradlay) பின்பு அருட்டிரு காஸ்வெல்லிடமிருந்தும் (Reverend Caswell) ஆங்கிலம் கற்றுக்கொண்டார். ஆங்கிலம் நன்கு கற்றுக் கொண்டதால் அறிவியலை மிகுதியாகப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இதனால் ராணி விக்டோரியாவுடனும், அமெரிக்க மக்கள் தலைவர்களோடும் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ள முடிந்தது. ஆகையால் இங்கிலாந்துடனும், அமெரிக்காவுடனும் நேரடியான அரசியல் தூதுவத் தொடர்பைத் தொடங்கினர். இவ்வாறு முதன் முதலாகச் செய்த, ஆங்கிலம் பயின்ற ஆசிய அரசர் இவரே. மொங்குட் ஓர் கற்றறிந்த பேரறிவுடைய அரசர் என ஐரோப்பியர்களால் கொண்டாடப்பட்டார். ஆகையால் பர்மாவின் அரசரைப் போலவும், சீனப் பேரரசுகளைப் போலவும் மொங்குட்டை ஐரோப்பியர்கள் நடத்தவில்லை. மிகுந்த அளவில் கற்றறிந்த பேரறிஞராயிருந்ததால் மூன்றும் இராமாவின் குறுகிய மனப்பான்மையுடைய, தனிமையான கொள்கைகளைப் படிப்படியாக நான்காம் இராமா விட்டுவிட்டார். மேலைநாட்டார் சியாமிற்குள் நுழையும் வாய்ப்பு ஏற்படும் முன்பே சியாமிற்குள் மேலை நாடுகள் நுழையும் சூழ்நிலையை உருவாக்கினர்.

ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் தங்களைத் தாக்குவார்களோ என்ற அச்சம் எப்பொழுதும் சியாமில் நிலவியிருந்தது. மொங்குட் பணிவும், அடக்கமும் நிறைந்தவராயிருந்ததால் சினமூட்டும் மேலைநாட்டார்களின் செயல்களைப் பொறுத்துக்கொண்டார். மேலும், மேலைநாட்டார்களுடன் அவர்கள் மொழியிலே பேசும் திறமையிருந்ததால் பல நன்மைகள் விளைந்தன.

தலைநகரத்திலே வாழ்ந்து வந்த ஐரோப்பியர்களுடன் உள்ள நட்புறவாலும் பல நலன்கள் கிடைத்தன. அவர்களை விருந்துகளுக்கு அழைத்தார்; அவர்களுடைய சமயம், வாணிபம் ஆகியவற்றின் நடவடிக்கைகளுக்கு உதவி புரிந்தார். ஆகையால், பர்மாவிலும் சீனவிலும் நடந்ததைப்போல வாணிபச் சமுதாயம் அரசாங்கத்திடம் விண்ணப்பங்கள் அளிக்கத் தேவை ஏற்படவில்லை. மொங்குட் சமயப் பரப்பாளர்களிடம் கட்டுமீறி நடந்து கொள்ளவில்லை. மொங்குட்டின் பன்மனை மணமுறையைக் (Polygamy) கிறித்தவர்கள் தாக்கிய போதிலும் மக்களிடையே அவர்கள் கிறித்துவச் சமயத்தைப் பரப்ப அவர் தடை விதிக்கவில்லை; மாருக ஊக்கம்கூட அளித்தார்.

வியட்நாமில் பிரெஞ்சின் தனித் தலைமை தழைத்தோங்கும் சூழ்நிலையில், போர் புரியும் கொள்கைகளை விட்டு விட்டுச்

சியாமின் சில பகுதிகளைப் பிரான்சிற்கு விட்டுக் கொடுத்தார். தங்களுடைய பெருமை உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி, சிலசமயங்களில் தன்மானத்தையும் விட்டுக் கொடுக்கும் அரசியல் தந்திரம் சியாமிடம் இருந்ததால்தான், சியாம் எப்பொழுதும் உரிமையுள்ள நாடாக வாழ முடிந்தது. மேலும் நீண்ட காலம் துறவியாய் வாழ்ந்ததால் மொங்குட் போரையோ, போர்க்கருவிகளைப் பயன் படுத்தப்படும் சூழ்நிலையையோ மனமார விரும்பவில்லை.

தங்கள் நடவடிக்கைகளுக்குத் தடை முளைத்தால் வரம்பு மீறி நேர்மையற்ற முறையில் ஐரோப்பியர்கள் நடந்து கொள்வார்கள் என இரண்டு ஆங்கில-பர்மியப் போர்களும், சீனுவில் நடந்த 'அபினி'ப் போர்களும், பிரெஞ்சுக்காரர்கள் வியட்நாமை வலிந்து கவர்ந்ததும் எடுத்துக்காட்டின. இதை உணர்ந்து கொண்டுதான் மேலே நாட்டினர்களை இசைவுபடுத்துவதற்கேற்ற நடத்தையையும் அயல்நாட்டுக்கொள்கையையும் மொங்குட் உருவாக்கினுர். மிகப் பேரளவில் மன்னரின் தனிப் பண்பியல் களினுல்தான் சியாமை உரிமை வழியில் அழைத்துச் செல்ல முடிந்தது.

இரண்டு மிகப் பெரிய குடியேற்ற நாடுகளிடையே போட்டி மனப்பான்மையிருந்ததால் நல்வினையின் பயனுய் அச் சூழ்நிலை சியாமிற்கு நலம் பயப்பதாயிருந்தது. பிரெஞ்சுத் தலைமையின் கீழிருந்த வியட்நாமிற்கும், ஆங்கிலேயர்கள் தலைமையின் கீழிருந்த பர்மாவிற்கும் இடையே சியாமை இடைத்தடுக்கு நாடாக அமைக்க வேண்டும் என எல்லோரும் விரும்பினுர்கள். தங்களிடையே ஒரு பொதுவான எல்லைப் பகுதியிருந்தால் தங்களிடையே மனக் கசப்பும், சண்டையும் பிறக்கும் என அஞ்சி ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் சியாமைக் குடியேற்ற நாடாக மாற்றக்கூடாது என்ற உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டார்கள். ஆகையால், சியாம் உரிமை பெற்ற நாடாக வாழ்ந்ததற்கு உலக அரசியல் சூழ்நிலையும் ஒரு சிறந்த காரணம் ஆகும்.

மூன்றும் இராமா இறப்புப் படுக்கையில் இருக்கும்போது சியாமின் தானைத்தலைவர் சேனபோதி (Senabodi) கி.பி. 1851ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் இளவரசர் மொங்குட்டின் முடிசூட்டு விழாவிற்கு ஏற்பாடு செய்தார். இதற்கு முன்பே அரச பதவிக்கு தகுதியாயிருந்த இரண்டாம் இராமா அவர்களின் உடன் பிறந்தவர்கள் கழுவிலேற்றப்பட்டார்கள். இவர்களில் ஒருவர் இயற்கையாகவே இறந்தார்; மற்ருெவர் நாட்டிற்கெதிராகச் சதி செய்தாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கழுவிலேற்றப்பட்டார். மொங்குட்டின் வழி மரபு

கொள்கைகளை எதிர்க்கும் மனப்பான்மையையும், பழைய மான் முறையைப் (Older Mon Pattern) பின்பற்றிப் புத்த மதத்தைச் சீர்ப்படுத்த வேண்டும் என்ற கொள்கையையும் இறப்புப் படுக்கையிலிருந்த அரசர் விரும்பாததால் ஒன்றுவிட்ட உடன் பிறந்த தமையனை மொங்குட்டைச் சியாமின் அரசராக முடிசூட்ட மூன்றும் இராமா விரும்பவில்லை. ஆனால், மொங்குட்டை எதிர்க்கும் ஆற்றலும் இவரிடம் இல்லை. மொங்கிட்டிற்குச் சியாம் மக்களிடையே செல்வாக்கிருந்தது; துறவியாயிருக்கும்போது நாட்டுப்புறப் பகுதிகளிலே இரவலராகவும், (Mendicant) பயணியாகவும் திரிந்து மக்களிடையே பழகியிருந்தார்.

அரசப் பதவியேற்கும்போது மொங்குட்டிற்கு வயது 47 ஆகும். மொங்குட் தன்னம்பிக்கையுள்ளவர்; அச்சமின்றி, மனம் விட்டு வெளிப்படையாகப் பேசும் இயல்புடையவர்; தமக்குப் பிடித்த கொள்கைகளைத் துணிவோடு பின்பற்றிச் செயல்படுத்துபவர். சூழ்நிலைக்குத் தகுந்தவாறு தம் கொள்கைகளையும், செயல்களையும் மாற்றியமைக்கும் குணம் இல்லாதவர்; சோர்வடையாமல் வேலை புரியும் தன்மையுடையவர்; தம் தேவைகளைச் சிக்கனத்துடன் நிறைவு செய்துகொள்ளும் பழக்கம் உடையவர்; கடமைகளில் முழுக் கவனம் செலுத்தும் திறமையுடையவர். அரசமாளிகையிலே அடைந்து கிடக்கும் இயல்புடையவர். மேலைநாட்டு முறைகளை விரும்பியபோதிலும், சியாமின் தனித்தலைமை அரசியல் அமைப்பை மாற்ற முயற்சியெடுக்கவில்லை. வழிமரபு நோக்கத்துடன் உயர்குடிமக்களின் சலுகைகளை மதித்து நடந்தார். ஆலோசனையாளர்கள் அனைவரும் அரசரின் கட்டுப்பாட்டுக்குள் அடக்கப்பட்டார்கள்; பொறுப்பேற்றுக் கொள்ளவும், புதுவழியமைக்கவும் மன்னர் பேராளராக (Vice-King) இருந்த தம் தம்பிக்குக்கூட வாய்ப்பளிக்கவில்லை.

மொங்குட் ஆட்சியின் மிகச் சிறந்த இரண்டு அம்சங்கள் பின்வருமாறு :

1. சியாம் மக்களின் வாழ்க்கையைச் சீர்ப்படுத்துவதற்காகத் தொடங்கிய சீர்திருத்தங்கள்.

2. சியாமின் உரிமையைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் மேலைநாடுகளின் போக்கிற்குத் தகுந்தவாறு சியாமின் கொள்கைகளை உருவாக்குதல்.

இவ்விரு செய்திகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டவை.

மொங்குட்டின் செயல்கள்

கி.பி. 1851ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் நாள் ஆட்சியிருக்கையில் அமரும்போது சியாமை மேலைநாடுகள் நுழையாமல் பாதுகாக்கும் கொள்கையை மாற்றுவிட்டால் மேலை நாடுகள் படைவலிமையைப் பயன்படுத்திச் சியாமில் நுழையும் என மொங்குட்டுக்குத் தெரியும். தொழில் நுணுக்கத் துறையிலே மேலை நாடுகள் சியாமை விட மிகவும் மிகுதியாக முன்னேறியிருக்கின்றன என்பதும் அவருக்குத் தெரிந்ததே. தம்முடைய பிரதம மந்திரியிடம் அவர் பின்வருமாறு கூறினார்:

'நம்மை இரண்டு அல்லது மூன்று ஆற்றல் வாய்ந்த நாடுகள் சூழ்ந்திருப்பதால், நம்மைப் போலுள்ள சிறிய நாடுகள் என்ன செய்ய முடியும்? இனிமேல், நமக்குப் பாதுகாப்புக் கொடுக்கக் கூடிய ஆற்றல் நம்முடைய வாய்களிடமும், உள்ளங்களிடமும், பகுத்தறிவிடமும், மெய்யறிவிடமும், கூருணர்வுகளிடமும்தான் இருக்கிறது'.

மன்னரின் உரையாடல் அவர் செயல்படுத்திய திட்டங்களைப் பிரதிபலிக்கின்றன எனக் கூறலாம். ஆகையால், சட்டச்சீர் திருத்தங்களைத் தொடங்கினார்; மேலை நாட்டின் அமைப்பைச் சார்ந்த நிருவாக அமைப்பை அமைத்தார். புது நாகரிகப் பண்பாடு வாய்ந்த கருத்துக்கள் என்றாலே நாட்டை மேலை நாட்டு நாகரிக மயமாக்குதல் எனப்பொருள். மோபட் (Moffat) என்ற வரலாற்றாசிரியர் கூறுகிறார்:

'சியாமில் இவர் (மன்னர் மொங்குட்) துளி இரத்தமும் சிந்தாத புரட்சியைச் (Bloodless Revolution) செய்தார். இதுவே ஒரு வலிமை வாய்ந்த உறுதியுள்ள அடிப்படையாய் அரசர் சுலலொங்கோர்னின் (King Chulaiougkorn) புகழ்பெற்ற சீர்திருத்தங்களுக்கு அமைந்தது'.

நிருவாக அமைப்பில் மாறுதல்கள்

பல்வேறு அரசாங்கத் துறைகளை எவ்வாறு திறமையுடன் நிருவகிப்பது எனப் பயிற்சி தருவதற்காக மேலை நாட்டார்கள் நியமிக்கப்பட்டார்கள். காவலர் துறைத் தலைவர்களாகவும், கல்வி வல்லுநர்களாகவும், துறைமுகத் தலைவர்களாகவும் ஆங்கிலேயர்கள் பணி புரியத் தொடங்கினார்கள். மொங்குட்டின் படைத்துறையை ஒரு பிரெஞ்சுக்காரர் சீரமைத்தார். இன்னொரு பிரெஞ்சுக் குடிமகன் அரச குடும்பத்தினர்கள் இசைக் கருவியாளர் குழாமின்

(Band-Master) தலைவராகப் பணி புரிந்தார். சுங்கத் துறை ஓர் அமெரிக்கரிடம் ஒப்படைக்கப்பட்டது. முதல் ஆங்கிலம்-தாய் மொழிச் சொற்களஞ்சியம் (English-Thai Dictionary) தொகுத்து வெளியிட்ட அமெரிக்கச் சமயப்பரப்பாளர் எஸ். ஜி. மாக்பார்லாண்டு (Rev. S. G. Macfarland) கி.பி. 1878ஆம் ஆண்டில் மொங்குட்டின் முதல் பெருமக்கள் பள்ளியான அரசர் கல்லூரியின் (Public School Called King's College) தலைவராக நியமிக்கப்பட்டார். மன்னர் அவையிலிருந்த மகளிர்களுக்குக் கல்வி கற்றுத்தர அமெரிக்கச் சமயப்பரப்பாளர்களின் மனைவிகள் ஆசிரியைகளாக நியமிக்கப் பட்டார்கள். நெடுஞ்சாலைகளையும், கால்வாய்களையும் பாலங் களையும் அமைத்தார். புதிய மோல்மெய்ன்-சிங்கப்பூர் தந்திப் பொறியை (Moulmein-Singapore Telegraph Service) இணைத் தார். செங்கல் கட்டடங்கள் பாங்காக்கில் தோன்றத் தொடங்கின. ஆறுகளில் நீராவிக் கப்பல்கள் மிதக்கத் தொடங்கின. மொத்தம் ஏறத்தாழ 80 ஐரோப்பியர்கள் மொங்குட்டிடம் பணிபுரிந்தார்கள்.

ஒருவரின் பிடியிலும் விழாமலிருப்பதற்காக மூன்றும் இராமா கி.பி. 1830ஆம் ஆண்டின் கொள்கையைப் பின்பற்றி மன்னர் மொங்குட் கேட்டதையெல்லாம் எல்லோருக்கும் வழங்கினர். அமெரிக்கா, பிரான்சு, இங்கிலாந்து முதலிய நாடுகளில் உள்ளவர் களோடு தொடர்ந்து கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டார். 'தங்களுடைய சிறந்த நண்பர்; அரச மரபின் வழியிலுள்ள உள்ளன்புள்ள உடன்பிறந்தவர்; பணிவான மரியாதையுடன் கீழ்ப்படிந்து நடக்கும் பணியாள்' என அரசி விக்டோரியாவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டார். 'உயரிய, நன்னடத்தை யுடைய நண்பர்' என மொங்குட்டை ஜனாதிபதி லிங்கன் (Lincoln) தம் கடிதத்தில் வரைந்தார். பிரெஞ்சு மொழி பயிலாததனால் இவரால் மூன்றும் நெப்போலியனோடு நெருங்கிய தொடர்புகொள்ள முடியவில்லை.

மேலை நாட்டுத் தலைவர்களின் நட்பை நாடியதால் மொங்குட் சியாமிற்கு வந்த மேலை நாட்டு வணிகர்களையும், தூதுவர்களையும் நல்ல மரியாதையுடன் வரவேற்றார். வணிகர்களைக் களிப்பிக்க மூன்று திட்டங்களைச் செயல்படுத்தினர்.

1. பண்டவரிகளைக் குறைத்தார்.

2. மூன்று ஆண்டிற்குத் தேவையான அளவு அரிசி இருந்தால் அரிசி ஏற்றுமதி செய்யலாம்.

3. கடுங் கட்டுப்பாட்டுடன் அபினியை இறக்குமதி செய்யலாம்.

மேலை நாட்டு வணிகர்களும், சமயப்பரப்பாளர்களும் மிகுந்த அளவில் பாங்காக்குக்கு வரத் தொடங்கினர்கள். அயல்நாட்டார் அபினியைச் சியாமில் இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்க வில்லையென்றாலும், சியாம் மக்கள் அபினியை பயன்படுத்துவதற்குத் தடையில்லையென்றாலும் பல கட்டுப்பாடுகள் இருந்ததால் ஐரோப்பியர்கள் சட்டம் மீறி அபினியைக் கள்ளக்கடத்தல் செய் தார்கள். இதை அரசாங்கத்தால் தடுக்க முடியவில்லை.

அரசாங்க அயல்நாட்டுப் பணியாளர்களின் சிறந்த பதவிகளும், சிறப்பாக நிதி ஆலோசனையாளர் (Financial Adviser) பதவியும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கிலேயர்களுக்கு அளிக்கப்பட்டன. கட்டுப்பாடில்லா வாணிபத்தின் மூலம் வரும் நலன்களைப் பின்பற்றிய கொள்கைகள் அமைக்கப்பட்டன. இதோடு பழங்கொள்கையான நன்மை பயக்கும் ஏற்றுமதிக்கும், இறக்குமதிக்கும் இடையே வேறுபாட்டு மிகையைப் (Balance of Trade) பாதுகாக்கவேண்டும் என்ற கொள்கையையும், மிக்க அளவில் பொன்னும், அயல்நாட்டு நாணயமும் சேமிக்கும் கொள்கையும் இணைக்கப்பட்டன. நடைமுறையில் நாணய முறைக்குரிய கொள்கைகள் அயல்நாட்டார் பிடியிலிருந்ததால் பொருளாதார வளர்ச்சிக்காக ஏற்படும் செலவு களும், வாணிபத்தின் மூலம் வரும் பெரும் பொருளும் குறைந்தன. இதன் சிறந்த விளைவால் பொதுநலப் பணித்துறை வேலைகளுக்குத் தடைகள் ஏற்பட்டன. சிறப்பாக, மத்திய மேனும் பள்ளத்தாக்கி லுள்ள நீர்க் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் பாதிக்கப்பட்டன; தொழில் துறை வளர்ச்சித் திட்டங்கள் குறைக்கப்பட்டன. நெல் விளைச்சலையும், மரம், வெள்ளீயம் ஆகியவற்றின் உற்பத்தியையுமே தொடர்ந்து சியாம் நம்பி வாழ வேண்டியதாயிருந்தது. ஆனல், கி.பி. 1855, 1856ஆம் ஆண்டுக்குப் பிறகு சியாமின் செய்பொருள் ஆக்க அளவு நிலையாக மிகத் தொடங்கியது. கி.பி. 1870ஆம் ஆண்டுக்குப் பிறகு இது மேலும் விரைவில் மிகத் தொடங்கியது; ஐரோப்பிய வாணிபம்தான் இதற்குக் காரணமாய் விளங்கியது.

பாங்காக்கைத்தவிர, மற்றப்பகுதிகளில் சியாமிற்குப் பொருளாதார நன்மைகள் கிடைத்தன என்ற அறிகுறிகளைக் காண முடியவில்லை. கி.பி. 1859-1860ஆம் ஆண்டுகளில் லாவோஸைக் (Laos) காணச் சென்ற ஒருவர் மிக்க ஏழ்மையும், இழிந்த வாணிப நிலையும், சிறப்பாக யானைகளையே நம்பியிருக்கும் போக்குவரத்துப் பற்றியும் கூறுகிருர். படை வீரர்கள் வெறுங்காலுடன் நடந்தார் கள்; நீண்ட ஈட்டியையும், குறுக்கு வில்களையும் ஏந்தியிருந்தார்கள் என்றும் கூறுகிருர். சியாமின் தென்கிழக்கு மாகாணம் கோரட் (Korat) இன்னும் இழிந்த நிலையில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

சீன அங்காடி வணிகர்கள்தாம் தொழிற்சாலையிருக்கும் அறிகுறிகளாக விளங்கினார்கள்; ஆனால், இவர்களே அபினி உட்கொள்ளுவதிலும் சூதாட்டத்திலும் மூழ்கியிருந்தார்கள். மேலைநாட்டு முறைகள் சியாமில் வளருவதற்கு நீண்டகாலம் ஆகும் என்றும் அவர் கூறினார்.

சியாம் ஐரோப்பிய வாணிபத்திற்கு ஊக்கம் கொடுக்கும் நோக்கம் என்னவென்றால் அயல்நாட்டு வாணிபத்தினைப் பெரிதும் பற்றியிருந்த சீனர்களை ஒழிப்பதே ஆகும். அயுதியாவைப் (Ayuthia) பர்மியர்கள் அழித்த காலத்திலிருந்து சியாமிற்கு வந்து குடியேறும் சீனர்களின் எண்ணிக்கை மிகவும் பெருகியது. கி.பி. 1850ஆம் ஆண்டில் ஏறத்தாழ 300,000 சீனர்கள் சியாமில் குடியேறியிருந்தார்கள். பொருளாதாரச் செல்வாக்கிருந்த போதிலும் சீன இனங்களுக்குள் ஒற்றுமை மனப்பான்மை யில்லாமலிருந்து. சியாமிற்கு மிக்க நலம்பயக்கக் கூடிய வாணிபத்தைக் கைப்பற்றுவதற்காகவும், வாணிபத் தனியுரிமையை அரசரிடமிருந்து பெறுவதற்காககவும் கன்டோனிஸ் (Cantonese), ஒக்கியன், (Hokkien), தியோசியு (Teochiu) முதலிய சீன இனங்களிடையே கடும் போட்டியும், பொறாமையும் நிலவியிருந்தன. கி.பி. 1852ஆம் ஆண்டில் அபினிக் கட்டுப்பாட்டு நிருவாகம் முற்றிலும் சீன அபினி விவசாயிகளிடமே விடப்பட்டது. ஒரு தனி உரிமையைப் பெறுபவர்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்தினார்கள்.

ஐரோப்பிய-சியாம் உடன்படிக்கைகள் செயல்படுத்தப்பட்டவுடன், பெரும்பான்மையான சீனர்கள் அயல்நாட்டு வாணிபத்தை விட்டுவிட்டு உள்நாட்டு வாணிபத்தில் கவனம் செலுத்தத் தொடங்கினார்கள். இதில் முக்கியமானவை சாராய உற்பத்தியும், விற்பனையும், அபினியைப் பகிர்ந்தளித்தல், சூதாட்டத்திலும் பரிசுச் சீட்டிலும் முதலீடு போடுதல் ஆகியவை. இத்தகைய செய்திகளில் ஒரு தனி உரிமை பெற்றதால் சீனர்கள் தங்கள் வரிபெறும் வேலைகளைப் பெருக்கினார்கள். ஒரு தனி உரிமையைப் பெறுவதற்காக மறைவு மன்றங்கள் மூலம் சீனர்கள் செல்வம் திரட்டக் கடமைப்பட்டிருந்தார்கள். பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதியிலேயே இத்தகைய வரிகள் மூலம் வரும் வருமானம், அரசாங்கத்திற்குக் கிடைக்கும் மொத்த வருமானத்தில் 40 அல்லது 50 விழுக்காடு ஆகி இருந்தது.

படைத்துறையைச் சாராத நிருவாக அமைப்பில் மாறுதல்கள்

வாணிபம் செழிப்பதற்காக உள்நாட்டுப் போக்குவரத்து வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. உற்பத்தியாகும் இடங்கள்

சியாமின் நெடுஞ்சாலையான சாவோ பிரியா மேனமோடு (Chao Phraya Menam) இணைக்கப்பட்டன. இவ்வாறு சாலைகள், நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு உதவினால் நற்கூறுகளும், நற்பயனும் கிடைக்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே இருந்தது. இவை கட்டுவதற்குச் செல்வர்கள் பணம் கொடுத்து உதவினால் நற்பயன் கிடைக்கும் என்றும், ஊதியம் இல்லாமல் உழைத்தால் ஏழைகளுக்கு நற்பயன் கிடைக்கும் என்ற எண்ணமும் நிலவியிருந்தது. இதைத்தவிர, இவற்றைக் கட்டுவதற்காகக் கூலி கொடுத்து வேலைக்கு அமைக்கப்பட்ட வேலைக்காரர்களும் பயன்படுத்தப் பட்டார்கள். கப்பற் கட்டுமானத் தொழிலை ஊக்கமூட்டி வளரச் செய்ததால் நான்காம் இராமாவின் கப்பற்படை பெருகியது.

நல்ல கருத்துகளும், புலமையும் வளர்ந்தோங்க மொங்குட் ஊக்கமூட்டினர். சமயப்பரப்பாளர்கள் மொழிபெயர்த்த இலக்கியங்களை எங்கும் பரப்பும்படி ஆர்வமூட்டினர். அச்சமின்றி எழுதி வெளியிடச் செய்தித் தாள்களுக்கு முழுவுரிமை அளிக்கப்பட்டது. தமக்கு எதிராக ஏதாவது வெளியிட்டாலும் மொங்குட் அதற்குப் பதிலளித்தார். ஆனால் அக் காரணங்களால் செய்தித்தாள்களின் அலுவலகங்களை அவர் மூடும்படிக் கட்டளையிடவில்லை. கி.பி. 1865ஆம் ஆண்டு மே மாதம் பிரெஞ்சுத் தூதுவர் ஆபர்ட்டைப் (Aubert) பற்றிக் குற்றங் கூறுகின்ற தலையங்கக் கட்டுரையைப் 'பாங்காக் ரிகார்டர்' (Bangkok Recorder) செய்தித்தாள் வெளியிட்டது. இதைப்படித்த தூதுவர் சீறியெழுந்து அச்செய்தித்தாள் அலுவலகத்தை மூடும்படி ஆணை பிறப்பிக்க அரசரிடம் விண்ணப்பம் செய்தார். இதைப்பற்றி இனிமேல் கருத்துரைகளை எடுத்துரைப் பதைத் தாற்காலிகமாக நிறுத்திவிடவேண்டும்; இதைப் பற்றி எடுத்துரைக்கவேண்டும் என்ற எண்ணங்கள் எல்லாம் ஏற்கெனவே பிரசுரிக்கப்பட்டதால் நோக்கம் நிறைவேறிவிட்டது என அரசர் அச்செய்தித்தாளின் பதிப்பாசிரியரிடம் கேட்டுக்கொண்டார். அச் செய்தித்தாளின் அலுவலகத்தை மூடுவதற்குப் பதிலாகத் தொடர்ந்து வெளியிடும்படி மொங்குட் வேண்டினர்.

பொதுமக்களிடையே வந்தால் தம்மைப் பார்த்து அஞ்சி ஓடாமல் தம்மைப் பார்க்கும்படி அரசர் ஓர் ஆணையை வெளியிட்டார். வழிமரபு முறைகளை ஒதுக்கி விட்டு, மற்றச் சியாம் அரசர்களைப் போலில்லாமல், மக்களிடையே கலந்து பழகினர். இதனால் மக்கள் இவரை மிகுதியாக விரும்பினர்கள். வழிமரபு முறைப் படியே தமக்கு மரியாதை செய்ய அயல் நாட்டாருக்கு அனுமதி கொடுத்தார். இது பற்றிய ஆணை பின் வருமாறு :—

'அரசர் ஊர்வலம் செல்லும் போது தாய்வழிமரபு (Thai custom) முறைப்படி சீனர்கள் விழுந்து வணங்கலாம்; அல்லது சீனப்

பேரரசரை வழிபடும்முறையில் கீழ்ப்படிதலுக்கு அறிகுறியாக நெற்றி நிலத்தில் படும்படிச் சீனர் வணக்க முறைப்படியே (Kow Tow) வணங்கலாம். தாய் (Thai) வழிமரபு வணக்கமுறையை விரும்பும் பாராங் (Farang) அல்லது மேலை நாட்டார்கள் அம்முறையைப் பின்பற்ற அனுமதி உண்டு. ஆனால், எழுந்து நின்று, தொப்பியைக் தலையிலிருந்து எடுத்து, குனிந்து வணக்கம் செலுத்த விரும் பினாலோ அவர்கள் நாட்டு முறைப்படி வணக்கம் செலுத்த விரும் பினாலோ அயல் நாட்டு ஆசிய நாடுகளின் முறைப்படி வணக்கம் செலுத்த விரும்பினாலோ அதற்கும் அவர்களுக்கு அனுமதி உண்டு'.

இவ்வகையான சலுகைகளை அயல்நாட்டார்களுக்கு அளித்த தால், ஆங்கிலேயர்களோடு இத் தாய் வழிமரபு வணக்கமுறையைக் கட்டாயப்படுத்தியிருந்தால் நிகழக்கூடிய இன்னல்கள் நீக்கப் பட்டன. பர்மாவிலே பர்மிய வழிமரபு வணக்க முறையைப் பின் பற்ற வேண்டும் எனப் பர்மிய மன்னர் கட்டாயப்படுத்தியதால் பர்மாவுடன் உள்ள அரசியல் உறவை இங்கிலாந்து துண்டித்தது. ஆனால், மொங்குட்டின் நடத்தை அவருடைய பரந்த மனப்பான் மையையும், உயர்ந்த குணத்தையும் எடுத்து விளக்குகிறது.

எல்லோருக்கும் சமுதாய நீதி அளிக்க அவர் முயற்சியெடுத்தார். உயர்குடிமக்களின் சலுகைகளைக் கட்டுப்படுத்த முயன்றார். எல்லோரும் நாட்டுச் சட்டத்திற்குப் பணிந்து நடக்க வேண்டும் என அறிவித்தார்; சில சமயங்களில் சில இளவரசர்கள் இத் தடையை மீறிநடக்க அனுமதி கொடுத்தார். அடிமை நிலையை ஒழிக்க முயற்சியெடுத்த போதிலும் வெற்றியடையவில்லை. கி.பி. 1854ஆம் ஆண்டில் வெளியிட்ட ஆணைப்படி தம்முடைய மனைவி யர் விரும்பினால் (அரச மரபு குழந்தைகளின் தாயார்களைத் தவிர) தம்முடைய அந்தப்புரத்தை விட்டு வெளியேறும் உரிமை அளித் தார் விரும்பினால் தம்முடைய முன்னாள் மனைவியர் மீண்டும் திருமணம் செய்து கொள்ளலாம். கி.பி. 1858ஆம் ஆண்டில் இவ் வுரிமைகளைப் பயன்படுத்திக்கொண்டு இவருடைய பன்னிரண்டு மனைவிமார்கள் அந்தப்புரத்தை விட்டு வெளியேறினார்கள்; ஆனால், இவர்களுக்கு ஆண்டுத் தொகை (Annuity) அளிக்கப்படவில்லை.

மொங்குட்டின் இனம், சமயம் ஆகியவற்றில் காட்டிய ஒற்று மைக் கொள்கை அவருக்குப் புகழ் தேடித்தந்தது. அவரே ஒரு பங்குச் சீனர். புத்தமத வழிமுறையில் கல்வி பயின்றதால் எல்லாவற் றிலும் அவருக்குப் பொறுமையிருந்தது. சமயப்பரப்பாளர்களுடனும், அயல்நாட்டுத் தூதுவர்களுடனும், அவருக்கு இருந்த இடை விடாத நட்பு இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இடுகாடு கட்டுவதற்

காகக் கிறித்தவச் சீர்திருத்தக் கோட்பாட்டை ஏற்றவர்களுக்கு (Protestants) நிலம் அளித்தார். அமெரிக்க மெதாடிஸ்டுகளுக்கு (Methodists) கிறித்தவத் திருமுறை பரப்பும் கிளைச் சமயத்தவரின் கொள்கை நடைமுறைக் கோட்பாடுகளைப் (ஒழுங்குமுறை பின் பற்றுபவர்கள்) பின்பற்றும் தொகுதியினர் நிலங்களை வாடகைக்குக் கொடுத்தார். ஒரு கத்தோலிக்கக் கோயில் கட்டுவதற்கும், இஸ்லாமியர்களின் மசூதிக்கும் பணம் அளித்தார். 'மக்கள் எதைச் செய்ய வேண்டும் எனக் கற்றுத்தருவது மெச்சத்தக்கது; ஆனால், அவர்கள் எதன் மேல் நம்பிக்கை கொள்ள வேண்டும் எனக் கற்பிப்பது மடமை' என மேலை நாட்டார்களிடம் மொங்குட் கூறினர்.

மொங்குட் செய்த சீர்திருத்தங்களிலே மிகச் சிறந்தது சியாமை மேலைநாட்டு நாகரிகமயமாக்க முயற்சியெடுத்ததே. இதில் மிகவும் சிறந்தது மேலைநாட்டு முறையைப் பின்பற்றிய கல்வித் திட்டத்தைச் சிறப்பாக ஆங்கில மொழியைக் கற்பிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தியது. சியாம் மொழியைக் கற்றுத் தரும்படிச் சமயப் பரப்பாளர்களை ஊக்குவித்தார். அரச குடும்பக் குழந்தைகளுக்குக் கல்வி கற்றுத்தருவதற்காக மாதம் £ 100 ஊதியம் கொடுத்து ஓர் ஆங்கிலேய ஆசிரியையை நியமித்தார். மொங்குட்டிற்குப் பின் அரச பதவியேற்ற ஐந்தாம் இராமா (அதாவது இளவரசர் சூலலொஜகோர்ன் ஆங்கில மரபு வழியில் பயின்றவர்) ஆங்கிலப் பண்பார்வலராய் (Anglophile) இருந்தார்.

பரந்த மனப்பான்மையுடன் முன்னேற்றக் கொள்கைகளையும் ஓரளவில் மொங்குட் பரப்பினர். எல்லோருக்கும் ஒத்த உரிமைகள் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிற புத்த விகாரத்தில் 27 ஆண்டு வாழ்ந்ததால் இவர் ஒரு தனித்த தலைமை முறையிலே செல்லாமல், ஒத்த வழியிலே செல்ல முயன்றார். இதற்கு ஓர் எடுத்துக் காட்டு; இளவரசர்களையும் உயர்குடி மக்களையும் தகுதிவாய்ந்த தேர்ச்சிபெற்ற நீதித் தலைவர்களைத் தேர்ந்தெடுக்குமாறு வற்புறுத்தியதாகும் 'தங்களால் தேர்ந்தெடுப்பவர்களை அரசர் ஒப்புக் கொள்வாரோ எனத் தேர்ந்தெடுப்பவர்கள் தயங்க வேண்டா' எனவும் அவர் அறிவித்தார்.

ஆனல், மொங்குட் தேவையான அளவு சியாம் நாட்டைச் சீர்திருத்தவில்லை; புது நாகரிகப் பண்பாட்டை உருவாக்கவில்லை, மேலும் பல சீர்திருத்தங்கள் செய்தால்தான் சியாமை ஒரு புது நாகரிகப் பண்பாடு வாய்ந்த நாடு என அழைக்க முடியும். இத் தேவைகளை முழு மூச்சுடன் நிறைவு செய்ய முயன்ற அரசர்,

மொங்குட்டிற்குப்பின் பதவிக்கு வந்த மன்னர் ஐந்தாம் இராமா எனக் கூறலாம்.

ஆங்கிலேயர்களுடன் உறவு—பவ்ரிங் ஒப்பந்தம் (Bowring Treaty)

முடிசூட்டிக் கொண்ட சமயத்திலிருந்து, நடைமுறையிலுள்ள வாணிப உடன்படிக்கைகளை மாற்றியமைக்கவேண்டும் என மொங்குட் விரும்பினார். மிகச் சிறப்பாக ஆற்றல் வாய்ந்த ஆங்கிலேயர்களுடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் என்று விரும்பினார். ஆட்சியில் அமர்ந்த மூன்று வாரங்களுக்குப்பின் சிங்கப்பூரிலே வாழ்ந்த ஆங்கிலேயர்களுடன் கடிதத் தொடர்பு தொடங்கினார். மூன்றாம் இராமாவின் இறுதிச் சடங்கு முடியும் வரை வாணிப ஒப்பந்தம் பற்றிய நடவடிக்கைகளை ஓர் ஆண்டுக் காலம் தள்ளி வைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். கி.பி. 1852ஆம் ஆண்டில் நடந்த நிகழ்ச்சிகள், ஆங்கிலேயர்களுடன் அமைதி முறையில் உடன்படிக்கை செய்ய வேண்டும் எனச் சியாம் விரும்பியதற்கு ஊக்கமளித்தன. ஆங்கிலேய இந்தியப் படை வீரர்கள் கீழைப் பர்மாவின் நடுப் பள்ளத்தாக்கின் (Gentral Valley of Lower Burma) மேல் படையெடுத்து வலிந்து சென்று கைப்பற்றினார்கள். இதனால் தூண்டப்பட்ட மொங்குட் தாமாகவே வலிய வாணிப ஒப்பந்த உரையாடல் தொடங்கு முன் வாணிபக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தினார்.

கி.பி. 1854ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆங்கிலேய உடன்படிக்கையை மாற்றியமைக்கும் நோக்கத்துடன் சர்ஜான் பவ்ரிங் (Sir John Bowring) உரையாடல் தொடங்கினார். இச்சமயத்தில் அவர் சீனாவின் ஆங்கிலேய வாணிபத்தின் தலைமைக் கண்காணிப்பாளராகவும் (Chief Superintendent), ஹாங்காங்கின் ஆளுநராகவும், சிறப்பாகச் சீனாவுடனும், ஜப்பான், சியாம், கொச்சின்—சீனா ஆகியவற்றுடனும் உடன்படிக்கைகள் பற்றிய உரையாடல் செய்ய முழு அதிகாரம் பெற்ற தூதராகவும் (Plenipotentiary) பணிபுரிந்து கொண்டிருந்தார் அவர்.

பவ்ரிங் பாங்காக்கிற்கு வரும் முன்பே கி. பி. 1854ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் அவருக்கும் மன்னர் மொங்குட்டுக்கும் கடிதத் தொடர்பிருந்தது. முதலில் கடிதம் மூலம் தாம் உரையாடல் நடத்துவதற்காகப் பாங்காக்கிற்கு வரப்போவதாகப் பவ்ரிங் மொங்குட்டிற்குத் தெரிவித்தார். தம் பதில் கடிதத்தில் தாம் நேரடியாகப் பவ்ரிங்கை காண விரும்புவதாகவும், இதன் மூலம் இவ்விரு நாடுகளிடையே உள்ள நட்பை வலுப்படுத்த

ஆசைப்படுவதாகவும் மொங்குட் தெரிவித்தார். உடன்படிக்கை பற்றிய பவ்ரிங்கின் கருத்துகளைப் பாங்காக் வருமுன் தெரிவிக்க வேண்டுகோள் விடுத்தார். பதிலாக, பவ்ரிங்கிடமிருந்து மூன்று கடிதங்கள் மன்னர் மொங்குட்டுக்கு அனுப்பப்பட்டன. பிரிட்டிஷ் போர்க்கப்பல் ஒன்றை மேனும் ஆறுவரையில் கொண்டுவரும் நோக்கம் இருப்பதாக இக்கடிதங்கள் ஒன்றில் பவ்ரிங் குறிப்பிட்டிருந்தார். பவ்ரிங் வருகையை ஆவலுடன் எதிர்பார்ப்பதாகவும், போர்க் கப்பல் வந்தால் தம் நாட்டு மக்கள் அதை அனுமதியுடன் வரவேற்க வேண்டிக் கொள்வதாகவும் மொங்குட் பதிலளித்தார். அமெரிக்க-சீன அமைச்சரான ராபர்ட் மெக்லேனையும் (Robert Mclane) கிழக்கு ஆசியாவில் புதிதாக நியமிக்கப்பட்ட அமெரிக்கத் தூதரான டவ்ன்செண்டு ஹாரிசையும் (Townsend Harris) உரையாடல் நடத்த வருமாறு கேட்டுக் கொண்டார்.

கி. பி. 1855ஆம் ஆண்டின் தொடக்கத்திலே பாங்காக்கில் உரையாடல்கள் தொடங்கின. பேச்சுகள் நடந்துகொண்டிருக்கும் போது, பாங்காக்கிற்கு வந்திருந்த ஆங்கிலேயப் போர்க் கப்பல் இருபத்தோறு பீரங்கி வேட்டு மரியாதை(Twenty one Gun salute) செலுத்தின. ஒரு சமயம் உரையாடல் ஒரு முடிவில்லாமல் மனக்கசப்போடு முடிந்தபோது குறிப்பிட்ட நாளில் போர்க்கப்பலைத் திருப்பி அனுப்பும் எண்ணத்தை மாற்றி விடுவோம் எனப் பவ்ரிங் அச்சுறுத்தினர். இறுதியாக கி. பி. 1855 ஆம் ஆண்டில் ஏப்ரல் 18ஆம் நாள் ஒரு ‘நட்புடன்படிக்கை’ (A treaty of Friendship) ஏற்படுத்தப்பட்டது. சியாமுடன் பிரிட்டன் இதுவரை ஏற்படுத்திய உடன்படிக்கைகளுக்குள் இவ் வுடன்படிக்கைதான் ஆங்கிலேயர்களுக்கு மன நிறைவு கொடுக்கக்கூடிய உடன்படிக்கையாக அமைந்தது. இவ் வுடன்படிக்கயின் மிகச் சிறந்த பகுதிகள் பின்வருமாறு:

(1) சியாமிற்குள் ஆங்கிலேயர்கள் இறக்குமதி செய்யும் பொருள்களின் மீது 3 விழுக்காடு வரிக்குமேல் விதிக்கக்கூடாது. ஏற்றுமதியாகும் பொருள்கள்மீது ஒரே வகையான வரி விதிக்கப்பட வேண்டும்.

(2) தலைநகரில் நான்கு மைல் தொலைவுக்குள் பிரிட்டிஷ் குடிகள் நிலங்களை வாங்கவோ வாடகைக்கு எடுக்கவோ உரிமை உண்டு. பாங்காக்கில் வீடுகள் கட்டவும், ஒரு நாள் சுற்றுலா மிகத் தொலைவு செல்லவும் உரிமையுண்டு.

(3) சியாம் துறைமுகங்களை உபயோகப்படுத்த ஆங்கிலேயக் கப்பல்களுக்கு உரிமையளிக்கப்பட்டது.

(4) அரசாங்கக் கட்டுப்பாட்டை மீருமல் சியாமிற்குள் அபினி இறக்குமதி செய்ய ஆங்கிலேயர்களுக்கு உரிமை யுண்டு.

(5) இங்கிலாந்து ஆட்சி எல்லைக்கு அப்பாற்பட்ட உரிமைகள் (Extra-territiorial rights) அளிக்கப்பட்டன.

(6) மன்னர் அவையால் நியமனஞ் செய்யப்பட்ட ஓர் ஆங்கிலேய அயல் நாட்டுப் பேராளர் (consul) தலைநகரில் தங்குவார். இப் பேராளர் அரசருடன் அரசியல் உறவை அமைப் பார். ஆங்கிலேய வாணிபமும், ஆங்கிலேய ஊழியர்களும் இப் பேராளரின் கண்காணிப்பில் விடப்பட்டன.

இவ்வுடன்படிக்கையின் மூலம் சியாம் மிகுதியாக விட்டுக் கொடுத்தது. மற்ற மேலை நாடுகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ள இவ்வுடன்படிக்கை ஓர் உருப்படிவமாய் அமைந்தது. இவ்வுடன்படிக்கையைப் பல ஆற்றல் வாய்ந்த சியாம் இளவர சர்கள் எதிர்த்தார்கள். ஆனால், வற்புறுத்தி அவர்கள் மனத் தையும் மொங்குட் மாற்றினார்.

இவ்வுடன்படிக்கையை உறுதி செய்து செல்லுபடி செய் வதற்காக (Ratification) ஹேரி எஸ். பார்க்ஸ் (Harry S. Parkes) இலண்டனிலிருந்து கி. பி. 1856 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் பாங்காக்கிற்கு வந்தார். இவ் வாய்ப்பைப் பயன்படுத்தி அவர் மேலும் பல சலுகைகளைக் கேட்டார். ஒரு மாதம் உரையாடல் நடந்தது. முறையான அறிமுகச் சான்றுக் கடிதங்கள் இல்லாத போதிலும் தம்முடைய போர்க்கப்பலைப் பாங்காக்கில் நங்கூர மிட்டு நிறுத்த வேண்டும் எனப் பார்க்ஸ் வற்புறுத்தினார். ஒரு முறையான சுங்கவரித் துறையை அமைக்க வேண்டுமென்றும், பொன், அரிசி ஆகியவற்றைக் கட்டுப்பாடில்லாமல் ஏற்றுமதி செய்ய உரிமை வேண்டுமென்றும், தேங்காய் எண்ணெய் மீது உள்ள அரசாங்கத் தனி உரிமையை நீக்கவேண்டுமென்றும், ஆங்கிலேயர்கள் உடைமைகள்மேல் பெயரளவில் ஒரு குறிப்பிட்ட வரியைத்தான் விதிக்க வேண்டும் எனவும் பார்க்ஸ் வலியுறுத் தினார். மொங்குட் இவற்றை ஏற்றுக் கொண்டார்.

பிரிட்டனுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளும் நோக்கத் துடன், வழிவழி மரபுகளைப் புறக்கணித்து மொங்குட் ஒரு சியாமியர் தூதுக்குழுவைக் கி. பி 1857 ஆம் ஆண்டு இலண்டனுக்கு அனுப் பினார். கி. பி. 1855 ஆம் ஆண்டில் பவ்ரிங் உடன்படிக்கை உரை

யாடல்கள் நடத்தும்போது ஒரு தூதுக் குழுவை மன்னர் இங்கிலாந்திற்கு அனுப்ப வேண்டும் என ஆலோசனை கூறினர். 'சியாமியர்களின் வழிவழி மரபுக்குப் புறம்பானது என்றும் எங்களுடைய பிழைபாடான வழிவழி மரபுகளில் வளர்ந்த அறியாமைக்குரிய பண்டைய, தற்காலத்திய அரசாங்கம், போர்புரிவதற்காகச் செல்வதைத் தவிர, மற்றப்படி அரச குடும்பத்தினர்களெல்லோரும் வெளிநாடு செல்வதற்குத் தடை விதித்திருக்கிறது' என்று பவ்ரிங்கிற்குப் பதிலளிக்கப்பட்டது. ஆகையால், கி. பி. 1857 ஆம் ஆண்டு தூதுக் குழுவின் பயணம் வியப்பிற்குரியது. மூன்று உயர் அமைச்சர்கள் (இருவர் மொங்குட்டின் பிரதிநிதிகள்; ஒருவர் இரண்டாவது அரசரின் பிரதிநிதி) இத் தூதுக் குழுவிலிருந்தார்கள். இதனுல் சியாமின் மதிப்பு உயர்ந்தது; எல்லோரும் இத் தூதுக்குழுவை நட்பு மனப்பான்மையுடனும், மரியாதையுடனும் நடத்தினர்கள். கி. பி. 1858 ஆம் ஆண்டில் மே மாதம் இத் தூதுக் குழு சியாமிற்குத் திரும்பியது.

மற்ற நாடுகளுடன் உடன்படிக்கைகள்

பவ்ரிங் உடன்படிக்கையைப் பற்றி அறிந்த மற்ற ஐரோப்பிய நாடுகள் தங்களுக்கும் ஆங்கிலேயர்களுக்குச் சியாம் அளித்த சலுகைகள் போலச் சலுகைகள் கிடைக்கலாம் என நம்பின. அவர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் அளித்த சலுகைபோல் சலுகைகள் அளிக்க மொங்குட் முன்வந்தார் அதனுல் பின்வரும் நாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்யப்பட்டன:

(1) பிரான்சு, அமெரிக்க குடியரசு (1856)

(2 டென்மார்க்கு, ஹான்சியாடிக் நகரங்கள் (Hanseatic countries—1858)

(3) போர்சுகல் (1859)

(4) ஹாலந்து (1860)

(5) புருஷ்ஷியா (Prussia—1862)

(6) பெல்ஜியம், இத்தாலி, நார்வே, ஸ்வீடன் (1868)

மொத்தத்தில் மேலே நாடுகளுடன் மன நிறைவளிக்கும் உறவிருந்த, பிரான்சையும் பிரிட்டனையும் தவிர, மற்ற நாடுகளுடன் உள்ள உறவு சிறப்பாக இல்லை. வியட்நாமிலிருந்து பிரான்சு தன் ஆதிக்கத்தைப் பரப்ப விரும்பியதால் சியாமிற்கும் பிரான்சிற்கும் தொடர்பு அமைதியுடன் அமையவில்லை. இக் காரணத்தால் சியாம் பிரிட்டனுடன் நெருங்கிய தொடர்பை உருவாக்கியது.

சியாமுடன் பவ்ரிங் உடன்படிக்கையைப் போல ஓர் உடன்படிக்கை செய்ய ஆர்வம் காட்டியவர்கள் பிரெஞ்சுச் சமயப் பரப்பாளர்களின் சங்கத்தினர். பிரெஞ்சு ஒப்பந்தம் பேசுதற்காகச் சான்காயில் (Shanghai) அயல்நாட்டுத் துணைப்பேராளராக (Vice-Consul) இருந்த மான்டிக்னி (Montigny) தேர்ந்தெடுக்கப் பட்டார். பிரான்சு அரசாங்கம் முதலில் மாண்டிக்னிக்குப் பின் வருமாறு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளக் கட்டளையிட்டது:

1. பவ்ரிங் உடன்படிக்கையைப்போலவே ஓர் உடன்படிக்கையைச் செய்துகொள்ள வேண்டும்;

2. சியாமியக் கிறித்தவர்களுக்கு மத உரிமைகள் பெற வேண்டும்;

3. பிரெஞ்சுச் சமயப்பரப்பாளர்கள் சியாமின் உட்பகுதிகளுக்குள் செல்ல உரிமை வாங்கித் தரவேண்டும்.

கி. பி. 1856ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் நாள் மான்டிக்னி சியாமிற்கு வந்தார். தடையொன்றும் இல்லாமல் தமக்கு நலன் தரும் உடன்படிக்கை யொன்றைச்செய்துகொண்டார். பாங்காக், அயல்நாட்டார்கள் கேட்டவையெல்லாம் கொடுக்கும் மனப்பான்மையைப் பெற்றிருந்தது. இவ்வுடன்படிக்கையின்படி 1. சமயப்பரப்பாளர்கள் சியாமில் எப்பகுதிக்கு வேண்டுமானாலும் உரிமையோடு செல்லலாம்; 2. சியாமின் உட்பகுதிகளில் நிலையாகத் தங்கி வாழலாம்; 3. மாதாக்கோவில்களும் (Churches) வீடுகளும் கட்டலாம்; 4. சியாம் கிறித்தவர்கள் இனிமேல் துன்புறுத்தப்படமாட்டார்கள்.

மான்டிக்னி, கம்போடிய அரசர் ஆங்டுவாங்குடன் (Angduong) தாம் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ள விரும்புவதாக மொங்குட்டிடம் கூறினர். இதனல் சியாமியர் அதிர்ச்சியடைந்தனர். ஆனல், தம்நாட்டின் மேலாட்சி அரசான (Suzerain) சியாமைத் எதிர்த்து உரிமையோடு பிரான்சுடன் உடன்படிக்கை செய்துகொள்ளும் துணிவு ஆங்டுவாங்கிற்குக் கிடையாது. ஆகையால், மான்டிக்னி கம்போடியாவிற்குக் கப்பலில் சென்றபோது பல சியாம் அதிகாரிகளும் சென்றுர்கள். மான்டிக்னியின் நோக்கம் நிறைவேருமல் தடுக்கும் மனப்பான்மையுடன் சியாமியர்கள் கம்போடியாவிற்குச் சென்றுர்கள்.

கம்போடிய அரசரைப் பார்க்க உடன்பாடு கிடைக்காததால் கம்போட்டில் (Campot) காத்திருந்தார். கம்போடிய அரசரின்

தகவலாளர் மன்னரால் மாண்டிக்னியைச் சந்திக்கமுடியாது என்ற செய்தியை மான்டிக்னியிடம் அறிவித்தபோதிலும் ஒரு முன்வரைவு உடன்படிக்கையை (A Draft Treaty) தாமாகத் [ஒரு சார்பாளரை (பிரான்சை) மட்டும் கட்டுப்படுத்தும் ஒப்பந்தத்தை] தயார் செய்தார். ஒரு சமயப்பரப்பாளர் மூலம் இவ்வுடன்படிக்கையைக் கம்போடிய அரசருக்கு அனுப்பத் தீர்மானித்தார். இவ்வுடன்படிக் கையில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தன:

1. நாட்டு மதங்களுக்குள் கத்தோலிக்க சமயம் ஒரு சமயமாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்;

2. இதை ஏற்றுக்கொள்பவர்களைத் துன்புறுத்தக்கூடாது;

3. வியட்நாமின் கோரிக்கையுரிமையான 40 மைல்கள் நீள முள்ள கரையிலிருந்து சற்று விலகிய தீவைப் பிரான்சிற்கு அளிக்க வேண்டும். இத் தீவைப் பிரான்சிற்கு அளித்தால் கம்போடியா விற்கு, (சியாம் பிரான்சை கேட்டுக்கொண்டபடி பொய்கூறிப்) பிரான்சு வியட்நாமின் படையெடுப்பிலிருந்து பாதுகாப்புத் தரும். இந்த உடன்படிக்கையைக் கம்போடியா மன்னர் ஏற்கவில்லை. இதனால் கம்போடியாவிற்குத் தன் மேலாட்சி அரசுகளுடன் மனக் கசப்பும், துன்பங்களும் வரும் என அஞ்சினர்.

சியாமுடன் ஏற்பட்ட உடன்படிக்கையை உறுதிசெய்யும் செல்லுபடி பத்திரம் (Ratification) பற்றியும், பிரான்சு முறை யுடன் நடக்கவில்லை. எவ்வகையான சடங்கும் இல்லாமல் சியாமில் வாழ்ந்த ஒரு போர்ச்சுக்கீசிய வாலிபர் மூலம் உடன் படிக்கையின் செல்லுபடிப் பத்திரம் அனுப்பப்பட்டது. இச் செய்கையைத் தனக்கு அவமானம் தரும் செய்கையாகக் கருதிய தால் சியாம் இவ்வுடன்படிக்கையை விலக்கிவைத்தது. பிரான்சு அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட அயலிட நாட்டுப் பேராளர் எம். ஹியுடியர் (M. Heutier) கி.பி. 1857ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சியாமிற்கு வந்த பிறகுதான் இவ்வுடன்படிக்கையின் செல்லு படிப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பாரிஸுக்கு ஓர் அரசியல் தூதுவரை அனுப்ப வேண்டும் என மொங்குட் விரும்பினர். ஐரோப்பாவிலுள்ள குழப்பச் சூழ் நிலையின் காரணத்தால் மூன்றும் நெப்போலியன் சியாமின் வேண்டுகோளை உடனடியாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனல் கி.பி. 1861ஆம் ஆண்டில் ஒரு சிறு போர் வேவுக் கலத்தைச் (Frigate) சியாமின் தூதுவர்களைப் பிரான்சிற்கு அழைத்து வருவதற் காக அனுப்பினர்.

பிரிட்டன், பிரான்சு ஆகியவற்றின் மூலம் சியாமிற்குத் தீங்கு வரும் என்று மொங்குட் உணர்ந்தார். ஆகையால் மிக எச்சரிக்கையுடன் இந் நாடுகளுடன் நடந்து கொண்டார். பிரான்சுக்கும், பிரிட்டனுக்கும் ஏறத்தாழ ஒரே வகையான சலுகைகள் அளித்திருந்தபோதிலும், பிரான்சைவிடப் பிரிட்டனுடனேயே மிக்க தொடர்புகொள்ள மொங்குட் விரும்பினர். பிரான்சை விடப் பிரிட்டனுல் சியாமுக்கு வரும் தீங்கு குறைவு என எண்ணினர்.

இருந்தாலும், பிரிட்டன்-சியாமின் உறவில் சிக்கல்கள் முளைக்காமல் இல்லை. வட மலேய் நாடுகளில் சியாமிற்கு இருந்த செல்வாக்கைக் கண்ட ஆங்கிலேயர்கள் பொருமை கொண்டனர். 'தாய்நாட்டு விவகாரங்களில்' தலையிடாக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என இலண்டனிலுள்ள அரசாங்கம் தெரிவித்தபோதிலும், வடமலேய் நாடுகளில் சியாம் தனி மேலாட்சி அரசை அமைப்பதைத் தடுக்கும் நோக்கத்துடன் பினங் ஓரளவு 'தலையிடாக் கொள்கையை'ப் பின்பற்ற வேண்டும் என விரும்பியது. இரண்டு அரச உடன்பிறந்த தலைவர்களுக்குள் சண்டை மூண்டு பாகாங் உள்நாட்டுக் கலகம் (Pahang Civil War) ஏற்பட்டபோது தெரன்கானுவிலிருந்து இக்கலகத்தில் சியாம் தலையிட்டுக் கொண்டிருந்தது. ஒரு போர்க்கப்பலை ஆங்கிலேயர்கள் அனுப்பியதால் சியாம் பின் வாங்கியது. கி.பி. 1862ஆம் ஆண்டில் ஆங்கிலேயப் போர்க்கப்பல் புக்கித்புத்திரியிலுள்ள (Bukit Puteri) கோட்டை மீது குண்டு வீசியதால் சியாமியர்கள் பின் வாங்கினர். இங்கிருந்து இப் போர்க்கப்பல் நேராகப் பாங்காக்கிற்குச் சென்றது. கடற்படைப் பணி முதல்வர் கோமான் ஜான் ஹே (Commodore Lord John Hay) மன்னர் மொங்குட்டைக்காண வேண்டும் எனப் பண்பாட்டுடன் கேட்டார். மன்னர் அவையினரெல்லாம் அஞ்சினர்; மன்னரே துணிவிழந்தார். ஆனுல் கோமான் ஹே அச்சுறுத்தும் நோக்கத்துடன் வரவில்லை. ஆங்கிலேயக் குடியேற்ற நாடுகளில்லாப் பகுதிகளைச் சுற்றிப் பார்க்கத்தான் வந்தார்.

பிரான்சுடன் ஏற்பட்ட அனுபவம் மொங்குட்டை மேலும் மன வருத்தத்தில் ஆழ்த்தியது. இந்தோசீன நாடுகளைப்பிரான்சு வலிந்து கவர்ந்து கொண்டிருந்தது. ஓர் இரகசிய உடன்படிக்கையின்படி கி.பி. 1863ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1ஆம் நாள்தான் சியாமின் நம்பிக்கைக்குரிய, கடமை தவருத குடியாளாக நடந்து கொள்வதாகக் கம்போடிய மன்னர் நோரோடொம் (Norodom) வாக்குறுதி கொடுத்தார். கி.பி. 1864ஆம் ஆண்டில் இதைப்பற்றி அறிந்த பிரான்சு அயல்நாட்டுப் போராளர் கேபிரியல், ஆபரெட் (Consul Gabriel Aubaret) சியாம் நம்பிக்கைத் துரோகம் செய்ததாகக்

குற்றம் சாட்டினர். ஆகையால், கி.பி. 1865ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், கட்டாயப்படுத்தப்பட்டதால், சியாம் பிரான்சுடன் ஓர் உடன்படிக்கை செய்தது. ஆனால், சியாமிற்கு நலம் தருவதாகக் கருதப்பட்ட இவ்வுடன்படிக்கையைச் செல்லுபடி (Ratification) செய்யவில்லை. ஆகையால், இவ்வுடன்படிக்கையை மாற்றியமைக்கும்படி ஆலோசனை தரப்பட்டது. கி.பி. 1866ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆபரெட் சியாமிற்குப் பேச்சு நடத்துவதற்காகத் திரும்பி வந்த பொழுது குழப்பம் ஏற்பட்டது.

கி.பி. 1867ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மொங்குட் பரபரப்புடன் ஒரு தூதுக் குழுவைத் தேர்ந்தெடுத்துப் பாரிஸுக்கு அனுப்பினர்; ஒப்பந்த உரையாடல்களைப் பாரிஸில் நடத்துமாறு கேட்டுக் கொண்டார். சியாம் சார்பில் பிரான்சுடன் பேச்சு நடத்துவதற்காகச் சர் ஜான் பவ்ரிங்கைத் தேர்ந்தெடுத்தார். வாணிப ஒப்பந்த உரையாடல்கள் நடத்துவதற்காகப் பவ்ரிங் முழு அதிகாரம் பெற்ற அமைச்சர் தூதுவராய் (Minister Pleni potientiary) நியமிக்கப் பட்டார். சியாம் தூதுவர்களே அரசியல் செய்திகள்பற்றிப் பேச்சு நடத்தினர்கள்.

பிரான்சு மூலம் சியாமின் சுதந்திரத்திற்கே தீங்குவரும் என மொங்குட் அஞ்சியதில் வியப்பொன்றுமில்லை. சியாமின் முதல் நிலைத் தூதுவராய் (Ambassador) பாரிஸில் இருந்த பிராயா சூரிய வோங்ஸே வயவதன (Phraya Suriya wongse Vayavadhina) பிரான்சுடன் பேச்சு நடத்திக் கொண்டிருக்கும் போது மொங்குட் கி.பி. 1867ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 4ஆம் நாள் பின்வருமாறு எழுதியதிலிருந்து மொங்குட்டின் அச்சம் தெரிகிறது :—

1. பிரான்சு சியாமின்மேல் படையெடுக்கும் என்ற பேச்சு நடக்கிறது.

2. பிரான்சும் பிரிட்டனும் சியாமைத் தங்களுக்குள் பிரித்துக் கொள்வதாக ஒப்பந்தம் செய்திருப்பார்கள்.

3. பவ்ரிங்கும், பிரிட்டனும் சியாமிற்கு மிக ஆர்வத்துடன் பாரிஸ்உரையாடல்களில் உதவிசெய்ய முனைந்தபோதுகூட மொங்குட் அஞ்சினர். ‘வேறு ஒருநாட்டை உரையாடல் நடத்துவதற்காக அனுப்பியதால் பிரான்சு நம்மேல் சீற்றம் கொள்ளும்’ என மொங்குட் கூறியிருந்தார்.

4. மிகுந்த அளவில் பிரிட்டன் உதவியை நாடினல் சியாம் பிரிட்டனின் பாதுகாப்பிற்குக்கீழ் வரவேண்டிய நிலையேற்படும்

என எச்சரிக்கை செய்தார். 'இந்துஸ்தானிலுள்ள பல நாடுகளுக்கு இந்நிலேயேற்பட்டிருக்கிறது. தற்சமயம் பர்மா இதை அனுபவித்துக் கொண்டிருக்கிறது' சியாமை பிரான்சு துன்புறுத்திக்கொண்டிருப்பதால் தன் பாதுகாப்பின்கீழ்ச் சியாமைக்கொண்டு வருவதற்காக பிரிட்டன் காத்துக் கொண்டிருக்கிறது என ஐயுற்ருர்.

5. சியாமிற்கு எத்தகைய தீங்கும் வராது எனப் பாரிஸ் வாக்குறுதி கொடுத்திருக்கிறது. ஆனால், வியட்நாமிலுள்ள பிரெஞ்சுக் கலகக்காரர்களின் நடவடிக்கை தம்மை அச்சுறுத்துகிறது எனக் கூறியிருந்தார். ஒரு வேளை ஆபரெட் போன்றவர்களின் ஆலோசனையைப் பிரெஞ்சு அரசாங்கம் கேட்கலாம்.

6. பிரான்சின் கோரிக்கைகளைத் தூதுவர்கள் ஏற்றுக்கொள்வதே மேல்; இல்லாவிட்டால் பிரெஞ்சு அரசாங்கம் கோபிக்கக் கூடும்.

'கம்போடியர்களைப்போல், நாம் பிரெஞ்சுப் பாதுகாப்பின்கீழ் வர மறுப்பதால் பிரெஞ்சுக்காரர்கள் தற்சமயம் நம்மை இடைவிடாமல் தூற்றுகிருர்கள். நாம் எவ்வகையான தீர்மானம் எடுப்பது என்பது நம்மிடமே இருக்கிறது; ஆற்றில் நீந்திச் சென்று முதலைகளுடன் நட்புக் கொள்வதா? நீந்திக் கடலுக்குச் சென்று திமிங்கிலத்திடம் ஒட்டிக் கொண்டிருப்பதா?

நம்மால் நம்வீட்டுக்குள் தங்க முடிந்தால் போதும்; ஆகையால் நம்மிடம் முன்பிருந்த சில அதிகாரங்களையும், செல்வாக்கையும் இழக்க நேரிடும்'.

கி.பி. 1867ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் நாள் ஏற்பட்ட உடன்படிக்கையின்படிச் சியாம் கம்போடியாவில் தனக்குள்ள செல்வாக்கை இழந்தது. உடன்படிக்கையின் சிறப்புகள் பின்வருமாறு :—

1. கம்போடியா பிரெஞ்சுப் பாதுகாப்பின்கீழ் வருவதைச் சியாம் ஒப்புக்கொண்டது.

2. கம்போடியாவுடன் கி.பி. 1863ஆம் ஆண்டு டிசம்பர் 1ஆம் நாள் செய்து கொண்ட உடன்படிக்கை இனிச் செல்லாது எனச் சியாம் அறிவித்தது.

3. கம்போடியாவின் மேலிருந்த மேலாட்சி அரசைச் சியாம் விட்டுக் கொடுத்தது.

4. மெகாங் ஆற்றிலும், சியாமிலுள்ள அதன் கிளை ஆறுகளி லும் பிரெஞ்சுக் கப்பல்கள் செல்லலாம்.

5. பட்டம்பாங் (Battambang), சியாம்ரீப் (Siemreap) மாகாணங்களைச் சியாம் வைத்துக் கொள்ளலாம்.

இத்தகைய அனுபவங்களுக்குப் பிறகும், சியாமின் உரிமைக் குத் தீங்கு வராமல், மேலை நாடுகளுடன் நட்புணர்ச்சியுடன் மொங்குட் பழகினார். மலேரியா நோயால் பீடிக்கப்பட்ட மன்னர் மொங்குட் கி.பி. 1858ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் நாள் இரவு 9 மணி அளவில் காலமானார்.

3. ஐந்தாம் இராமாவின் (சூலலொங்கோர்னின்) ஆட்சி KING CHULALONGKORN, (1873–1910)

மொங்குட்டின் ஆட்சியின்போது பிரான்சுடன் இருந்த உறவு இழிந்த நிலையிலிருந்தது; ஐந்தாம் இராமாவினது ஆட்சியின்போது வெளிப்படையாக இது மோதலில் முடிந்தது. ஆனால், சியாம் அரச குடும்பத்திற்கும் பிரிட்டனுக்கும் இருந்த நெருங்கிய நட்புறவினால் சியாமின்மேல் படையெடுக்கப் பிரான்சிற்குத் துணிவு வரவில்லை. சூலலொங்கோர்னின் ஆங்கிலப் பண்பார்வத்தினாலும், சிறப்பியல்புகளினாலும்தான் பிரிட்டனுடன் நெருங்கிய உடன்பிறப் பாளர் மனப்பான்மையுடைய நட்பு மலர்ந்தது. பிரிட்டிஷ் அரச குடும்பத்துச் செல்வாக்கைப் பெற்றிருந்த ஓர் அரசரின் நாட்டைத் தாக்க பிரான்சு தயங்கியது.

சியாமின் ஆங்கிலப் பண்பார்வத்தை அறிந்த பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குச் சியாமின்மேல் நம்பிக்கையளிக்கிற, பரிந் துரைக்கிற நன்மதிப்பு எண்ணங்கள் இருந்தன. மற்றத் தென் கிழக்காசிய நாடுகளைப் போலல்லாமல், சியாம் குடியேற்ற நாடாக மாறாததற்கு இது ஒரு சிறந்த காரணமாகும். சியாமை மேலைநாட்டு நாகரிக மயமாக்குவதன்மூலம் அண்மைக் காலத்துக்குரிய நாடாக மாற்ற மன்னர் ஐந்தாம் இராமா எடுத்த முயற்சிகள் பிரிட்டனை மகிழ்வித்தன. மொங்குட்டைவிடச் சூலலொங்கோர்ன் மேலும் மிகப்பரந்த மனப்பான்மையுடையவர்.

இளவரசர் சூலலொங்கோர்ன் கி.பி. 1868ஆம் ஆண்டில் தம்முடைய 15ஆம் வயதில் அரசப் பதவியேற்றார். இவர் தக்க வயது வராத இளைஞராயிருந்ததால் (Minor) மொங்குட்டின் ஆட்சியிலிருந்த அமைச்சர்கள் அரசாங்கத்தை ஐந்து ஆண்டுகள் பொறுப்பேற்று நடத்தினார்கள், பிரதமமந்திரி சாவோபிரயா

சூரியவோங்சே (Chao Phraya Suriyawongse) பகர ஆளுநராக (Regent) நியமிக்கப்பட்டார்.

இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு இளவரசர் மக்களுடனும், அண்டை ஆசிய நாடுகளுடனும் பழகத் தொடங்கினர். கி.பி. 1870-1871ஆம் ஆண்டுகளில் அவர் மலேயாவிற்கும், இந்தோனேசியாவிற்கும் சென்றார். இதற்கு முன் சியாம் வரலாற்றிலே ஒரு சியாம் மன்னர்கூட வெளிநாடு சென்றதில்லை. ஆகையால், இளவரசரின் இப்புரட்சி நடத்தை மேலை நாடுகளின் நன்மதிப்பைப் பெற்றது. மலேயா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் மேற்கொண்ட சுற்றுலாவிற்குப்பின் இளவரசர் கி.பி. 1872ஆம் ஆண்டு டிசம்பரில் இந்தியாவிற்குச் சென்று அரசாங்கம், நிருவாகம் முதலியவை பற்றிய செய்திகளை ஆங்கிலேயர்களிடமிருந்து கற்றறிந்தார். இந்தியாவிலிருந்து சியாமிற்குத் திரும்பி வரும் வழியில் பினுங்கிலும், இரங்கூனிலும் இறங்கினர். சென்ற விடங்களிலெல்லாம் இலக்கியம், அறம் முதலியவற்றைச் சார்ந்த நடவடிக்கைகளுக்குக் கொடை வழங்கினர். பர்மாவில் பர்மியச் சங்கத் தலைவர்களுடன் உரையாடினர்; பிரிட்டிஷ் முதல் பணிமுறைத் தூதரின் (British Chief Commissioner) விருந்தாளியாகச் சிறப்பிக்கப்பட்டார். ஈஸ்திமியன் வழியாகப் (Isthmian-Route) பாங்காக்கிற்குத் திரும்பினர். இவருடைய இருபதாவது வயதில் இரண்டாம் முறையாக, இறுதிமுறையாகக் கி.பி. 1873ஆம் ஆண்டு முடிசூட்டுவிழாப் பெருநிகழ்ச்சியின் பொழுது பதினன்கு நாள்கள் அரச உடையை அணியாமல் மடத்துத் துறவியாக மன்னர் மாளிகையிலிருந்த மடத்தில் தங்கி வாழ்ந்தார்.

முடிசூட்டுவிழா நடந்து மன்னராய்ப் பதவியேற்றவுடனே விழாவில் கலந்த மக்களையெல்லாம் தரையிலிருந்து எழுந்து நிற்கும்படிக் கூறினர். சடங்குகளிலே இது ஒரு மிகப்பெரிய புரட்சி எனக் கூறலாம். மன்னருக்கு முன்னல் எக்காலத்திலும் விழுந்து வணங்கி வந்த உயர்ந்தோர் குழாம், இவர்முன் நின்று கொண்டிருந்தார்கள். அன்றிலிருந்து மன்னருக்கு முன்னல் விழுந்து வணங்கும் சடங்கு நீக்கப்பட்டது.

சமூகச் சீர்திருத்தங்கள்

1. அரசர் முன் விழுந்து வணங்கும் சடங்கு ஒழிக்கப்பட்டது (கி.பி. 1873). இதன் முக்கிய நோக்கம் மேலைநாட்டுத் தூதுவர்களின் தொல்லையை நீக்கிச் சிக்கலின்மை செய்வதே. (பர்மியர் முன் விழுந்து வணங்கும் அவைச்சடங்கை ஐரோப்பியர்கள்

பின்பற்றவேண்டும் எனப் பர்மியர்களின் அரசவை இறுதிவரை கட்டாயப்படுத்தியது.)

2. அடிமைநிலை நேர்மையற்றது எனக் கி. பி. 1874ஆம் ஆண்டில் மன்னர் அறிவித்தார். அமைச்சர் அவையில் இசைவுடன் இதை ஒழிக்கத் தீர்மானித்தார். இருபத்தொரு வயதடைந்த அடிமைகளின் குழந்தைகள் யாவருக்கும் அடிமை நிலையிலிருந்து விடுதலையளிக்கப்பட்டது. அடிமைப் பெற்றோர்களின் குழந்தைகள் அடிமைகள் அல்லர். ஆதலால் கடன் மூலம் அடிமை நிலை அடைவதற்கு மூலகாரணமாயிருந்த சூதாட்டம் தடை செய்யப்பட்டது. கி.பி. 1905ஆம் ஆண்டில் அடிமைநிலை அடியோடு ஒழிக்கப்பட்டது.

3. வலுக்கட்டாய உழைப்பு நீக்கப்பட்டது. நிலப்பண்ணை யாட்சி முறையிலிருந்த ஊழியக் கடமையும், கூலியில்லாவேலையும், (Corvee) படைத்துறைக் கட்டாய ஆள் சேர்ப்பும் (Conscription to the Army) மிகப் பெரிய குற்றங்களாகக் கருதப்பட்டன. வேலைக்கு ஊதியம் கட்டாயமாக அளிக்கப்பட்டது. அடிமைச் சீர்திருத்தங்களைவிட இச் சீர்திருத்தங்களை மக்கள் மனமார வரவேற்றார்கள். மேலைநாடுகள் இவ்விரு சீர்திருத்தங்களையும் பாராட்டிப் புகழ்ந்தன.

4. உயர்ந்தோர் குழாமிற்குக் கல்விபயிலச் சிறப்பாக ஆங்கிலக் கல்விபயில, வசதிகள் செய்தார். கி.பி. 1878ஆம் ஆண்டு ஆணைப்படி உயர்ந்தோர் குழாம் குடும்பங்கள் தங்கள் குழந்தை களைக் கட்டாயமாகப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப வற்புறுத்தப் பட்டன. ஆண்டுக்கு 300 சியாமியக் குழந்தைகள் கல்வி பயிலு வதற்காக ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டார்கள். இவர்களுடன் தம் குழந்தைகளையும் ஐரோப்பாவிற்கு மன்னர் அனுப்பினார். இதனால் நன்கு பயின்ற, திறனுடைய சியாமியர்கள் வெளி வந்தார்கள். உதாரணம் (1) இளவரசர் தேவஓங்சே (Prince Devawongse) ஆவார். இவர் பல்வேறு ஐரோப்பிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்ததால் அயல்நாட்டு அமைச்சராக நியமிக்கப் பட்டார். (2) இளவரசர் தாம்ரோங்கு (Prince Damrong) உள் நாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார்; (3) இளவரசர் ரபி (Prince Rabi) நீதித்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார்; (4) மற்றும் பலர் பல துறைகளில் அமர்த்தப்பட்டனர்.

வருமானச் சீர்திருத்தங்கள்

நாட்டின் வருவாய்—செலவினம் பற்றிக் கண்டிப்பான விவர மான அறிக்கை (கணக்கு) வைக்கப்பட்டது. இதனால் பண்ணை

நிலவுரிமை முறையில் வளரும் இளவரசர்களும் உயர்குடி மக்களும் பாதிக்கப்பட்டதால் மறுப்புத் தெரிவித்தார்கள். கி.பி. 1896ஆம் ஆண்டில்தான் கையூட்டையும், ஊழலையும் குறைப்பதில் வெற்றி யடைந்து கருவூலத்துறையைச் சீரமைத்தார். கி.பி. 1901ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் முதல் வரவுசெலவுத் திட்டப்பட்டியல் வெளியிடப்பட்டது.

நிருவாகச் சீரமைப்பு

நாட்டு நிருவாகம், தீர்வமைவு ஆகியவற்றைப்பற்றித் தமக்கு ஆலோசனை அளிப்பதற்காக இருமன்றங்களை அமைத்தார். உயர் மன்றத்தின் உறுப்பினர்களாக உயர்குடிமக்களும், இளவரசரும் பணிபுரிந்தார்கள்; மன்னர் இம்மன்றத்தின் தலைவராகவும் செயல் புரிந்தார். வருவாய்த்திட்டங்கள், மக்களின் அரசப்பற்று விவரங் கள் முதலியவற்றைப்பற்றி இம் மன்றம் அரசருக்கு ஆலோசனை அளித்தது. அரசனின் தனிப்பட்ட ஆய்வுரையாளர்கள்கீழ்ச் சபை (Lower-Lever Privy Council) கி.பி. 1874ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. சட்டமியற்றும் நடவடிக்கைகளில் சில சமயம் ஆலோசனை அளிப்பதற்காக இம் மன்றம் உருவாக்கப்பட்டது. ஆனால், சட்ட நிறைவேற்ற ஆட்சித்துறைப் பொறுப்பு இம் மன்றத்திற்கு அளிக்கப்படவில்லை. இம் மன்றத்திற்கு உண்மை யான சிறப்பு வாய்ந்த கடமைகள் கிடையா; சிறப்பான நடவடிக் கைகளை, மன்னர் அவை முன் எடுத்து வைத்து கவனத்திற்குக் கொண்டுவரும் பணியே செய்தது.

பல்வேறு துறைகளின் செய்கடமைகளை விரிவுபடுத்திப் பாங் காக்கின் நிருவாகத்தை மையமாக்கினர் மன்னர்; இத்திட்டம் வழி வழியாக வந்த பிரதேச அரசாங்கங்களின் தன்னாட்சி முறையை ஒழித்தது. முன்பு, பிரதேசங்களைக் கட்டுப்படுத்தி ஆட்சி புரியும் அதிகாரங்கள் அரசாங்கத்திடம் மிகுதியாய்க்கிடையா; பிரதேசங் கள் மன்னருக்கு ஒரு குறிப்பிட்ட வருவாய்த் தொகையை அளித் தால் போதும்.

நிருவாகச் சீரமைப்பின் சிக்கல்கள்

சூலலொங்கோர்னின் புதுக்கருத்துக் கோட்பாட்டு முறைக்கு மிகப் பெரிய தடையாயிருந்தது மன்னர் சமுதாயப் படிநிலையே. மன்னரிடம் பரந்த மனப்பான்மை, திறமை, உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் தன்னடக்கம், ஆகியவையிருந்த போதிலும் அவர் மிகுந்த அளவில் வழிவழிமரபில் மலர்ந்த சியாமியர்களின் மன்னர் சடங்குகளின் சிறைக் கைதியாக இருந்ததால் புதுப்பாணியில்

அமைந்த நலமேம்பாடுகளுக்கு இவை தடையாக நின்றன. இச்சூழ்நிலையிலும், சியாமின் அரசர் சட்டப்படி நாட்டின் நிலங்கள், குடிகளின் உடைமை முதலியவற்றின் உரிமையாளர்; எல்லாம் வல்லவர் (Omnipotent); எல்லாம் அறிந்தவர் (Omniscient); எப்பொழுதும் அவர் செயல்களெல்லாம் பிழையற்றவையே; தெய்வமாகக் கருதப்பட்டுப் போற்றப்பட்டவர் அவர். அரசரை எதிர்க்கவோ விருப்பக்கேடு உண்டு பண்ணவோ தலைவர்களில் ஒருவரிடமும் துணிவு இல்லை. பொதுவாக, அடிமைகளைப்போல் நடந்தாலே போதும்; மன்னருக்கு மனநிறைவளித்தது; திறமையுடன் கடமைகளை நிறைவேற்றும் செய்கைகள் கண்டிப்புடன் எதிர் பார்க்கப்படவில்லை. ஆலயம் போல வழிபட்ட அரசாட்சிக்கும், பொதுவாகப் பொதுமக்களுக்கும்,இடையே இருந்த இடைவெளியை பாலம் போல் இணைக்கும் ஓர் அமைப்பு இச்சூழ்நிலையில் உருவாகுவது எவ்வகையிலும் ஒத்துவராது எனக் கூறலாம். அரசர்களை எப்பொழுதும் இருக்கும் தீவினையாகக் கருதிப் பொறுத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் செறிவுமிக்க சோம்பலும் திறமையில்லாமல் செயல்களைப் புரியும் காட்சிகளும் எல்லோருக்கும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தன. பகட்டாரவாரமுள்ள மன்னர் மாளிகையும் அதன் அருகிலுள்ள வாட்பிராகியானும் (Wat prakian) பொறுப்பற்ற, அக்கறையற்ற பணியினால் மாசுபடுத்தப்பட்டன. பாங்காக்கிலுள்ள மற்றப்பகுதிகள் இன்னும் இழிநிலையில் இருந்தன. சிறிதும் ஒழுங்கமைதி முறையில்லாமல் சீனர்களின் இருப்பிடங்கள் இருந்தன; அருவருப்பான அழுக்குப் படிந்த நெடுஞ்சாலைகளில் வீழ்த்திருந்த இறைச்சிகளும், இழிபொருள்களும், அழுக்குநீர் வடியும் கால்வாய்களும் மாசுபடுத்தின; ஆட்டங் கொடுக்கிற உறுதியற்ற ஊர்திகளும், சமையல் செய்யும் காட்சியரங்குக் கடைகளும் தெருக்களை அடைத்து, நெரித்து மூச்சுத் திணற அடித்தன; கொள்ளையடித்த பொருள்களை வாங்கி விற்பனை செய்பவர்கள் கைக் கடிகாரங்களையும் அருங்கலைப் பொருள்களையும், துப்பாக்கிகளையும் மலிவான விலைக்கு விற்றார்கள்.

அரசாங்கத்துறைகளின் நடவடிக்கைகள் அயல்நாட்டார்களுக்கு மனக்கசப்பை அளித்தன எனத் தெரிகிறது. 'அரசர் மாளிகை ஒரு புரியாப் புதிர்; இது பொது மக்களின் அரசப்பற்றை ஈர்க்கும் புறப்பொருள்; நாட்டுப்பற்று மறைந்ததற்கு அடிப்படைக் காரணம்; இது நல்வாழ்வு அளிக்கக்கூடிய சட்டங்களின் மூலத் தோற்றுவாய்; திறமையற்றவர்களை அளிக்கக்கூடிய அரசர்களின் சூற்பை,' என ஓர் ஆங்கிலேயக் கல்வித் துறைத் தலைவர் ஆய்வுரை அளித்தார். சுருங்கக் கூறின் திருட்டு மனப்பான்மையுடைய பணித்துறை உலகின் சோம்பேறித்தன்மை,

சிறுமை, கபடச் செயல் ஆகியவற்றின் மையமாக மன்னர் மாளிகையிருந்தது. வழிவழி மரபின் மேலுள்ள பற்றினல் அதிகாரிகளின் கையூட்டு ஊழல் தீ நடத்தை ஆகியவை மன்னித்து விடப்பட்டன. மேலைநாட்டு நாகரிக முறைகளைக் கடுமையாகச் செயல்படுத்தினல் இவ்வமைப்பையே மிகச் சிறப்பாக மாற்றியமைக்க முடியும். ஆனல், அத்தகைய புரட்சி மனப்பான்மை அரசர் அவைக்கு இல்லாமலிருந்தது. பாங்காக்கிற்கு வெளியிலிருந்த ஆளுநர்கள் வழிவழி மரபுகளைப் பின்பற்றித் தங்கள் பகுதிகளை 'மென்று விழுங்கினர்கள்' (eating their province); மேலைநாட்டுப் புதுமுறைகளை இடைமறித்தார்கள். மிகையில்லாமல் அரசாங்க அதிகாரிகள் பணம் கையாடினல் இயல்பான செல்லுமுறை என ஏற்றுக்கொள்ளப்பட்டது. மரபுவழி வருகிற ஆளுநர்கள் நீக்கப்பட்டு ஊதியம் பெறும் தலைவர்கள் நியமிக்கப்பட்டதனல் வளர்ச்சியேற்பட்ட போதிலும் பொதுவாக அவர்களுக்குத் தங்கள் கடமைகளைப் புரிந்து செயல்படுத்தும் நுண்ணறிவில்லை; நேர்மையும் இல்லை. கி.பி. 1897ஆம் ஆண்டில் சியாமில் இருந்து வந்த எச். டபிள்யூ ஸ்மித்து (H. W. Smith) என்பவர் பின்வருமாறு கூறுகிறர்: 'நீதி அமைச்சர் பெருமைப்படும் அளவில் கண்ணேட்டமில்லாமல் செயல்புரிவதனல் வாதிகளையும், பிரதிவாதிகளையும், (அவரால்) பிடிக்கமுடிந்த எல்லாச் சான்று பகர்வோர்களையும் (witnesses), (அவரால்) பிடிக்க முடியாதவர்களின் தாய்மார்கள், மனைவிமார்கள் உட்பட எல்லோரையும் சிறைப்படுத்தினர்கள். மக்கள், தன்னலக் குட்டையில் ஊறுவதால், புறமுதுகைக் காட்டுகிருர்கள்; இதைப் பார்க்கவோ, மாசற்ற எளியவர்களுக்கு உதவிபுரியவோ மறுக்கிருர்கள்'.

பாங்காக்கில் சிறிது காலம் பணிபுரியலாம் என வந்த அயல்நாட்டு ஆலோசனையாளர்கள் தங்கள் காரியங்களை விரைவில் நிறைவேற்றுவதற்குப் பொறுமையில்லாமல் பதற்றம் அடைந்ததில் வியப்பொன்றுமில்லை. பைத்தியம் பிடிக்கும் அளவிற்குக் காலதாமதம் செய்தல், பொதுவாக நிலவிய சோம்பேறித்தன்மையையும் அவ்வப்போது நிகழ்கிற நேரடியான பணித்துறைகளின் பொருமையையும், எதிர்ப்பையும் அயல்நாட்டு ஆலோசனையாளர்கள் சந்திக்க வேண்டியதாயிருந்தது. மிக நிறைவிலிருந்த முகமலர்ச்சி, பசப்புத்தன்மை, பிச்சை மனப்பாங்கு, செயல்களின் பயனை அடைவதற்காகப் பயன்படுத்தும் அச்சுறுத்தல்கள் முதலியன எரிச்சலுண்டாக்கின. இச் சூழ்நிலையிலும் அயல்நாட்டு ஆலோசனைகள் அடைந்த சில வெற்றிகள் பெருமைக்குரியன எனப் புகழவேண்டும். ஒரு ஜெர்மன் ஆலோசனையாளர் அஞ்சல்-தந்தி அலுவலகத்தை (Post and Telegraph

Office) வளர்த்துத் திறமையாகச் செயல்படச் செய்தார்; 90 மைல் நீளமுள்ள முதல் இரயில் வழியை மற்ருெருவர் மேற்பார் வையிட்டார்; மற்ருெரு ஜெர்மானியர் ஓர் ஆங்கிலேயருடன் கலந்து சுரங்கத் துறையிலுள்ள ஊழல்களையும், பதவியுயர்வு பற்றி முளைத்த பழிப்புக்குரிய செயல்களையும் ஒழித்தார்; மென் னயத் தளர்ச்சிப் பகட்டுடைய படைவீரர்களுக்குச் சுடும் பயிற்சி கொடுக்க ஒரு டென்மார்க் நாட்டவர் முயன்ருர்; ஆனுல், வெற்றி பெற்றிலர். சியாம் குதிரைப் படைவீரர்களைப் பல இருபது தொகுதிகளடங்கிய 'களிப்பான சியாமிய மட்டக் குதிரைகள்' என ஒரு பார்வையாளர் வருணித்தார். கடற்படைகளை வளர்ப் பதில் டென்மார்க் நாட்டவர்கள் சிறிதளவு வெற்றியடைந் தார்கள். ஆனுல், தங்கள் திட்டப்படி இப்பணித்துறைகளில் அவர்களால் உரிமையோடு இயங்க முடியவில்லை. முன்பு பயிற்சி பெறுவதற்காக ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்ட இளவரசர்கள் உயர் பதவிகளை ஏற்றனர். காவல்துறைக்கு உதவவும், சீன இனத்தைக் கட்டுப்படுத்தவும்தான் படைத்துறையைப் பயன் படுத்த முடியும்; அண்டை நாட்டார்களின் எதிரிப் படைகளால் தீங்கு வராது; ஐரோப்பியப் படைகளுடன் போர்புரியும் தகுதி யும், ஆற்றலும் இவைகளிடம் கிடையா. படைப்பயிற்சி அளிக்கும் மாணவர் பள்ளியில் தலைவராக ஓர் இத்தாலியர் பணிபுரிந்தார்.

இளவரசர் தாம்ரோங்கின் நலமேம்பாட்டுத் திட்டம்

பிரெஞ்சுப் படையெடுப்பின் மூலம் சியாமின் உரிமைக்குத் தீங்கு வருவது போன்ற சூழ்நிலை கி.பி. 1892–93ஆம் ஆண்டு களில் உருவாகியதால் அயல்நாட்டு ஆலோசனையாளர்கள் திட்டத் திற்குப் புதியதொரு முக்கியத்துவம் ஏற்பட்டது. கி.பி. 1892ஆம் ஆண்டுக்குமுன் தொழில்நுட்ப வல்லுநர்களாகவும் தாம் அயல்நாட்டவர்கள் பணிபுரிந்தார்கள். ஆனுல், கி.பி. 1892 ஆம் ஆண்டிலிருந்து கொள்கைகளைத் தீர்மானிக்கும் உயர் நிருவாகப் பதவிகள் அவர்களுக்கு அளிக்கப்பட்டன. மயக்கந் தெளிந்த அரசரும், அவரைச் சுற்றியுள்ள ஆலோசகர்களும் கி.பி. 1893ஆம் ஆண்டுக்குப் பிறகு வரையறையில்லாத காலம் வரை ஆங்கிலேயர்களின் பாதுகாப்பை நாடமுடியாது என்றும். ஆகையால், நிருவாகத்தை ஒழுங்குபடுத்தத் தாங்களே பொறுப் பேற்றுக் கொள்ளவேண்டும் என்றும் உணர்ந்தார்கள். இப் புதிய திட்டத்தின் உயிர்நாடியாக இருந்தவர் இளவரசர் தாம்ரோங். இதற்கு முன் தாம்ரோங் வட பகுதியின் அமைச்சராய்ப் பணி யாற்றினுர்; கல்வித் திட்டங்களை வகுத்தார். கடுமையாக உழைக்கும் ஆற்றலும், திட்ட ஆக்கஞ் செய்யும் திறமையும்

இவரிடம் இருந்தன. அரசரின் சிறந்த ஆலோசனையாளராய்ப் பணிபுரிந்ததால் கி.பி. 1893ஆம் ஆண்டில் முளைத்த பிரெஞ்சு நெருக்கடி நிலையை இவரே கவனித்தார்; அரசாங்கத்தை முழுவதும் சீரமைக்கும் பணியையும் ஏற்றார்.

உள்நாட்டு அமைச்சராயிருந்த இளவரசர் தாம்ரோங் முற்றிலும் வேறான பழம்பாங்கான நான்கு தேசங்களையும் கலைத்து, பர்மாவில் ஆங்கிலேய முறையைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட அமைப்பைப்போல, வேறுபாடற்ற சீரான அமைப்பை உருவாக்கினார். பிரதேசங்களுக்குப் பதிலாக வட்டங்கள் (Circles) தோன்றின. ஒவ்வொரு வட்டமும் ஓர் ஆணையரின் தலைமையில் ஒப்படைக்கப்பட்டது. தலைமுறை வழியாக வராத ஆளுநர்களின் நிருவாகத்தை இவர்கள் மேற்பார்வையிட்டார்கள். வட்டங்கள் மேலும் மாவட்டங்களாகவும் (Districts), தன்னாட்சி நகரப் பகுதிகளாகவும் (Cummunes), பத்துக் கிராமங்கள் அடங்கிய பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டன. 'பத்துக் கிராமப் பகுதிகளின் தலைவர்களாகக் கிராமத் தலைவர்கள் (Village Headmen) தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்; குற்றங்களைப் பற்றிக் குறிப்புரை வழங்குதலும் மக்கள் தொகையைப் பதிவு செய்வதும் இவர்களின் கடமை. உள்நாட்டு அமைச்சர் துறைக்கு ஆணையர்கள் நேரடியாக விரிவுரைகள் அனுப்பினார்கள்; மாவட்டங்களின் தன்னாட்சி, நகரப்பகுதிகள் ஆகியவற்றின் உள்ளூர்த் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு ஆணையர்களுக்கும், ஆளுநர்களுக்கும் அளிக்கப்பட்டது.

மரபுவழி வந்த பழங்கால 'மன்னர் மாளிகை சேனபோதி' (Palace Senabodhi) நீக்கப்பட்டு அமைச்சர் அவை (Cabinet of Ministers) அமைக்கப்பட்டது. இது தாம்ரோங்கின் மிகச்சிறந்த புதுவழியாகும். இன்றியமையாத நிதி, நீதி, அயல்நாட்டு விவகாரம், போர்த்துறை, அரசியல் துறையரங்கம் முதலியவற்றிற்குரிய தலைமை இளவரசர்களுக்கு அளிக்கப்பட்டது. கல்வி, வேளாண்மை, சுரங்க நிருவாகம், காட்டுத்துறை முதலியவற்றிற்கு மிக்க தொழில் நுட்பம் வாய்ந்தவர்கள் தேவைப்பட்டார்கள். வழிவழி மரபாக வந்த அரசகுடும்பம், அரசமாளிகை, அரசர் பணியாளர் குழாம் ஆகியவை அமைச்சர் அவையோடு ஒருசேர இணைக்கப்பட்டன.

பல்வேறு துறைகளுக்கு உதவ அயல் நாட்டு ஆலோசனையாளர்கள் நியமிக்கப்பட்டதைத் தவிர, மற்றப்படி இப் புதிய அமைப்பு 'பொருள்களை மிகுதியாக மாற்ற மாற்ற, இன்னும்

மிகையளவில் முன்பிருந்த தன்மையுடனே நிலைமாறுதிருக்கும்' என்ற பிரெஞ்சு முதுமொழியைப் புலப்படுத்தியது. அமைச்சர்கள் பதவியும், சிறப்பாக இளவரசர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பதவிகளும் ஆயுட்காலப்பணி அல்லது உம்பளப்பணி (Sinecures) போல நீடித்தன. பதவியிலமர்ந்தவர்கள் தங்கள் நிருவாகப் பொறுப்புகளை உள்ளார்ந்த அக்கறையுடன் ஏற்றுக்கொள்ள வில்லை. பெருமகளின் உடன்துணைவர்களுக்குக் (Personel retainers) கீழ்ப்படிப் பதவிகள் அளிக்கப்பட்டன; நிதி அமைச்சரிடம் கணக்குக் காண்பிக்காமல் வருவாய் அதிகரிப்புகள் செலவழிக்கப்பட்டன.

மற்ற அயல் நாட்டார்களைவிட ஆங்கிலேய அதிகாரிகளே பாங்காக்கில் மிகுதியாக இருந்தார்கள். முக்கியமாக நிதி, காவல், கல்வி, நில அளவாய்வு, சுரங்கம் ஆகிய துறைகளில் இவர்கள் மிகுதியாக இருந்தார்கள். கி.பி. 1896—1903ஆம் ஆண்டுகளில் மத்திய கருவூலம் வரி உயர்த்தாமலே இருமடங்காகப் பெருகியது. வரி வருவாய் முழுவதும் மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. செலவுகள் கணக்குப் போட்டுச் காண்பிக் கப்பட்டன. ஊதாரித்தனமாக வரிவாடகைக் கட்டணக் குத்தகைத் திட்டம் (Tax–Farming) கி.பி. 1907ஆம் ஆண்டுக்குப் பிறகு வட்டி குறைக்கப்பட்டது. கி.பி. 1903ஆம் ஆண்டில் மிகையளவான புகைவண்டித் துறைக் கடன் வாங்கப்பட்டது; நான்கு மலேய மாகாணங்களின் உரிமைகளைச் சியாம் கி.பி. 1909ஆம் ஆண்டில் விட்டுக் கொடுக்கும் சமயத்தில் இன்னும் மிகப் பெரிய அளவு கடன் புகைவண்டி வளர்ச்சிக்காகப் பிரிட்டனிடமிருந்து வாங்கப்பட்டது. புதிய கணக்கெழுத்தாண்மை முறையை (New Book-Keeping Proclolures) தலைவர்கள் விரும்பவில்லை; கி.பி. 1900ஆம் ஆண்டு வரை படைத்துறை சாராத அரசு குடும்பப் பணியாளர்களின் செலவு நாட்டின் வரவு—செலவுத் திட்டத்தில் எட்டில் ஒரு பங்கு ஆயிற்று.

நீதிச் சீர்மை

இங்கிலாந்தில் கல்வி பயின்ற இளவரசர் இரபி நீதி விவகார அமைப்பைப் புத்தமைவாக்கினர். நல்வினையால் கி. பி. 1892ஆம் ஆண்டிலிருந்து 1899ஆம் ஆண்டுவரை உலகப் புகழ் பெற்ற பெல்ஜிய நாட்டைச் சேர்ந்த வழக்குரைஞர் ரோலின் ஜாக்யுமின்ஸ் (Roilin Jocowemins) இளவரசர் இரபிக்கு ஆலோசனை கூறி உதவினர். சியாமியர்களின் நீதிமன்றங்களில் ஐரோப்பிய நீதிபதிகள் பணிபுரியத் தொடங்கினர்கள்; வழக்கு

ரைஞர்களுக்குப் பயிற்சியளிக்க இவர்கள் உதவிபுரிந்தார்கள். கி.பி. 1894ஆம் ஆண்டில் மேலைநாட்டுப் பாங்கில் அமைந்த குற்றவாளிகள் மன்றங்களும் (Criminal Court) குற்றவியல் சாராத நீதி மன்றங்களும் (Civil Courts) அமைக்கப்பட்டன. மூன்று நீதிபதிகள் அமர்ந்து ஒவ்வொரு வழக்கையும் ஆராய்ந்தறிந்தார்கள். குற்றத்தை மெய்ப்பிக்கும்வரை குற்றம் சுமத்தப்பட்டவர்கள் குற்றமுடையவர்களாகக் கருதப்படமாட்டார்கள் என ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்நீதி மன்றத்திற்கு மேலாக ஒரு மேல் முறையீட்டு நீதி மன்றம் (Court of Appeal) நிறுவப்பட்டது. பெல்ஜிய நாட்டு ஆலோசனையாளர்கள் உதவியுடன் கி. பி. 1897ஆம் ஆண்டில் ஒரு சட்டப்பள்ளி (Law school) அமைக்கப்பட்டது. கி.பி. 1908ஆம் ஆண்டில் பிரதேச நீதிபதிகள் மையப்படுத்தப்பட்ட ஆட்சித் தலைமையர்கீழ் வந்தார்கள், பிரெஞ்சு வழக்குரைஞர்கள் உதவியுடன் கி,பி. 1908ஆம் ஆண்டில் இவர்கள் தண்டனைக்குரிய சட்டங்களைச் சீரமைத்தார்கள். ஆட்சிக்குப் புறம்பான எல்லையைச் சார்ந்தவர்களின் உரிமைகளை ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் நீக்கும் நோக்கத்துடன் சியாமின் சட்டங்கள் முழுவதையும் மாற்றியமைக்கவேண்டிய முயற்சிகளையும் தொடங்கினுர்கள்.

நீதிபற்றிய சீர்திருத்தங்களுடன் சிறைச்சாலைகளும், காவல் துறைகளும் வளரச் செய்தார்கள். பர்மாவிலிருந்து வந்த ஆங்கிலேயத் தலைவர்கள் இவைகளை மாற்றியமைத்துப் புதுப்பாங்கில் நிறுவினுர்கள். வழிமரபில் வந்த உள்ளூர்த் தலைவர்களின் அல்லது காப்பாளர்களின் (Patron) கீழ்ப்பணிபுரியும் குற்றவாளிகளின் வழித்தோன்றல்களான படை வீரர்களை நாட்டுப் படையில் சேர்க்கும் முறை கி.பி. 1904ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது.

கல்விக் குறை நீக்கும் திட்டங்கள்

கி.பி. 1878ஆம் ஆண்டில் அரசமாளிகைப் பள்ளிக்கூடம் (Palace School) நிறுவப்பட்டது. சமயச் சார்பற்ற முறையில் இப்பள்ளி அமைந்த போதிலும், பொதுவாகக் கல்வித்துறை துறவிமடங்களுக்கும், சமயப் பரப்பாளர் பள்ளிகளுக்கும் ஒரு தனியுரிமையாக இருந்தது. ஓர் அரசாங்க அச்சகத்தின் மூலம் புதுப் பாங்கில் எழுதப்பட்டபாட நூல்கள் வெளியிடப்பட்டன; வார இதழாக ராயல் கெஜட்’ (Royal Gazette) அல்லது அரசினர் செய்தியிதழ் வெளியிடப்பட்டது. இளவரசர் தாம்ரோங் கல்வித் திட்டத்தைச் சீர்ப்படுத்த முயன்றுர். இதற்கு மன்னர் சூலலொங்கோர்னின் ஆதரவிருந்தது. கி பி. 1891ஆம் ஆண்டில் கல்வி முறையைப்பற்றி

அறிவதற்காக இளவரசர் ஐரோப்பாவில் பயணம் செய்தார். பயணம் முடிந்து திரும்பியவுடன் பொதுமக்களுக்குக் கல்வி வாய்ப்பும், கல்வி ஊக்கமும் கொடுக்கும் நோக்கத்துடன் ஓர் அமைச்சர் அலுவலகத்தை அமைத்தார். தொடக்கத்தில், உயர் நிலை வகுப்பினர் குழந்தைகளுக்கும், இடைநிலை வகுப்பினர் குழந்தைகளுக்கும் தொடக்கக் கல்வி (Primary Education) தொடங்கப்பட்டது. படிப்படியாக இத்திட்டம் விரிவுபடுத்தப் பட்டது. நடுநிலைக் கல்வியும் தொடங்கப்பட்டது; இரண்டாகப் பகுபட்ட திட்டம் (Dual System) செயலாக்கப்பட்டது.

(அ) கல்விமான்களாகத் தேர்ச்சி பெறும் நோக்கம் இல்லாத வர்களுக்காகச் சியாமிய மொழியைக் கற்பிக்கும் தொடக்கப் பள்ளிக் கூடங்கள் அமைக்கப்பட்டன.

(ஆ) உயர்கல்வி பயிலும் நோக்கமுடையவர்களுக்காக ஐந்தாண்டுக் கல்வி கற்பிக்கும் ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டன.

சியாம் அரசாங்கத்திற்கு உதவிபுரிவதற்காக இங்கிலாந்தி லிருந்து ஓர் ஆங்கிலேயக் கல்வித்துறை வல்லுநர் (Educationist) வரவழைக்கப்பட்டுக் கல்வி அமைச்சர் துறையில் கல்வி இயக்கு நராக (Director of Education) நியமனஞ் செய்யப்பட்டார். இப் பொறுப்பையேற்ற ஜே.ஜீ.டி. கேம்ப்பெல் (J.G.D. Campell) இரண்டாண்டுகள் பணிபுரிந்தார். இங்கிலாந்திலுள்ள பெருமக்கள் பள்ளித் திட்டத்தைப் (Public School System) பின்பற்றிச் சியாம் பள்ளிகளைப் புதுமைப் பாங்கில் அமைத்தார்.

சமயப் பரப்பாளர்கள் நடத்திய பள்ளிகளுக்கும் ஊக்கமும், உதவியும் அளிக்கப்பட்டன. ஆங்கிலேயக் கல்வித் திட்டத்திற்கு முதன்மை கொடுத்தபோதிலும், தனியாரால் நடத்தப்பட்ட சியாம் மொழிப் பள்ளிகளுக்கும் கல்வி அமைச்சரின் ஆதரவு இருந்தது.

செய்தித்தாள் உரிமை அளிக்கப்பட்டது. ஆனால், எழுத்துமூலம் மன்னரைத் தாக்கக் கூடாது; தூற்றக்கூடாது. சமயப்பரப்பாள ராய் ஒரு சமயம் இருந்த ஓர் அமெரிக்கக் குடிமகன் ஆங்கிலத்தி லும், சியாம் மொழியிலும் பல சஞ்சிகைகளை (Periodicals) வெளி யிட்டார்.

மருத்துவ வசதிகள்

கி.பி. 1889ஆம் ஆண்டில் டாக்டர் ஜேம்ஸ் டபிள்யூ. மெக்கீன் சியாமிற்கு வந்த பிறகு சியாமின் மருத்துவ வசதிகளை அமெரிக்கப்

பிராட்டஸ்டன்ட் (Protestant) சமயப்பரப்பாளர்கள் பெருக்கினர்கள். அரசாங்கத்தின் சிறிதளவு உதவியுடன் மெக்கின் கொயினா மாத்திரைகளை (Quinine Pills) உற்பத்தி செய்தார். பெரிய அம்மை நோயை (வைசூரி) விரட்டுவதற்காக அம்மை குத்தும் முறையை அறிமுகப்படுத்தினர். ஒரு தொழுநோய் மருத்துவ மனையை (Leprosorim) அமைத்தார். சியாங் மெய்யில் (Chieng-mai) டாக்டர் எட்வின் சி. கோர்ட் (Dr. Edwin C. Court) கி.பி. 1908ஆம் ஆண்டில் மருத்துவர், செவிலியர் (Nurses) பயிற்சிப் பள்ளி தொடங்கினர். வருங்காலத்தில் இப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் செய்த சமூகத் தொண்டிற்காகச் சியாம் அரசாங்கம் சிறப்புப் பதக்கங்கள் வழங்கியது. பாங்காக்கில் வாந்திபேதி (Cholera) பற்றிய அச்சம் நிலவிவந்ததைத் தடுப்பதற்காகக் கி.பி. 1908ஆம் ஆண்டில் தண்ணீர் வசதிகள் செய்யப்பட்டன.

மற்றும் பல பொதுத் துறை அபிவிருத்திகள்

அயல்நாட்டு வல்லுநர்கள் உதவியுடன் சியாமின் பொது நலத் துறை சீரமைக்கப்பட்டது. கி.பி. 1876, 1880ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய முறையில் அமைந்த ஒரு புதிய அரசமாளிகை கட்டப் பட்டது.கி.பி. 1894ஆம் ஆண்டில் அரசமாளிகையில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டன. புதுக் கருவூலத்துறை, சுங்கவரித்துறை, அரும்பொருட் காட்சிமனை (Museum), அஞ்சல்—தந்தி நிலையம், போர் வீரர் விடுதிகள் (Army—Barracks), மருத்துவமனைகள், அயல்நாட்டு ஆலோசனையாளர்கள் வசிப்பதற்காக ஐரோப்பிய முறையில் அமைந்த வீடுகள் முதலியன கட்டப்பட்டன.

அயல்நாட்டுத் தொழில் நுட்ப நுண்ணறிவாளர்கள் காவலரண் செய்து வலுப்படுத்தப்பட்ட படைக்கலச்சாலை (Fortified Arsenal) ஒன்றைக் கட்டினர்கள். மேனும் நதியின் நுழைவாயில் அருகே பாக்நாமில் (Paknam) நீரின்றி வெற்றிடமாக்கப்படக்கூடிய கப்பல் துறை (Dry—Dock) ஒன்று கட்டப்பட்டது.

தொலைபேசி (Telephones) மின்சார விளக்கு வசதிகள் பாங்காக்கில் அமைக்கப்பட்டன; மேலும் தலைநகரத்தில் அமிழ்தண்டவாள வழிப் போக்குவரத்து (Tram Line) ஏற்படுத்தப்பட்டது. பிரெஞ்சு சைகானுடன் தந்திப் போக்குவரத்து ஏற்படுத்தப்பட்டது; இன்றியமையாத நீர்ப்பாசனக் கால்வாய்கள் வெட்டப்பட்டன. குதிரைப் பந்தய வெளி அமைக்கப்பட்டது. சரக்குக் கப்பல்கள் (Frieght), பயணிகள் செல்லும் நீராவிப் படகுகள் (Steam Boats) ஆகியவை ஆறுகளில் செல்ல வசதி செய்யப்பட்டது.

கி.பி. 1893ஆம் ஆண்டில் பதினாறு மைல்கள் நீளமுள்ள புகை வண்டி வழி பாங்காக்கையும், பாக்னாமையும் இணைக்கப் போடப் பட்டது. இதுவே சியாமின் முதல் புகைவண்டி வழி. இதை ஒரு பெல்ஜியன் டென்மார்க் நாட்டியல் புகைவண்டித்துறை அமைத் தது. நாட்டியல் புகைவண்டித்துறை (Royal State Railway Department) அமைக்கப்பட்டது. பாங்காக்கையும்—கோரட்டை யும் (Korat) புகைவண்டி வழிமூலம் இணைப்பதற்காக ஜெர்மன் பொறி வல்லுநர்கள் (Engineers) வேலைக்கு அமர்த்தப்பட்டார் கள். கி.பி. 1897ஆம் ஆண்டுக்குள் நாற்பது மைல்கள் நீளமுள்ள புகைவண்டி வழி பாங்காக்கையும் அயுதியாவையும் (Ayuthia) இணைத்தது. கி.பி. 1900ஆம் ஆண்டுக்குள் கோரட்டுடன் இணைக்கும் புகைவண்டி வழி வேலை முடிக்கப்பட்டது. இப்பாதை கி.பி. 1901ஆம் ஆண்டில் லோப்பூரி (Lopburi) வரை இழுக்கப் பட்டு இணைக்கப்பட்டது. இதுவரை மொத்தம் 200 மைல்கள் நீள முள்ள புகைவண்டி வழிகள் போடப்பட்டன.

வடசியாமில் புகைவண்டி வழிகள் அமைக்கப்பட்டவுடன் தென்சியாமில் வேலை தொடங்கப்பட்டது. கி.பி. 1903ஆம் ஆண்டுக்குள் பாங்காக் பெட்சாபுரியுடன் (Petchaburi) புகை வண்டி வழி மூலம் இணைக்கப்பட்டது. கி.பி. 1915ஆம் ஆண்டுக் குள் பாங்காக்கிலிருந்து கோலாலம்பூர் (Kualalumpur) வரை புகை வண்டி வழி போடப்பட்டது.

சியாமின் பொருளாதார வளர்ச்சி — பக்கத் தோற்றம்

சூயஸ் கால்வாய் (Suez Canal) திறக்கப்பட்டவுடன் ஐரோப்பிய நாடுகளின் வாணிபத்தில் சியாம் அதிக அளவில் பங்கு பெற முடிந்தது. அரிசி, தேக்கு மரம், வெள்ளீயம் போன்ற புதிய ஏற்றுமதிப் பொருள்களுடன், வாழையடி வாழையாக விற்கும் கால் நடைகள், காடுகளில் விளையும் பொருள்கள், பதனிட்ட தோல்கள் முதலியன அயல்நாட்டு வாணிபத்தில் சிறந்த இடம் பெற்றன.

மர வாணிகத்திலும், வெள்ளீயச் சுரங்கங்களிலும், பிறவாணி பத்திலும் ஆங்கிலேயர்கள் நடவடிக்கைகள் மிகுந்தன. இறக்குமதி யாகும் பயனீட்டாளர்கள் பொருள்களில் (Consumer Goods) மிகுந்த அளவில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் ஆங்கிலே யர்கள் உற்பத்தி செய்த பருத்தி ஆடைகளும், இரும்புப் பொருள் களும், செம்புப் பொருள்களுமே (Hardware) ஆகும். அபினி இறக் குமதி, பெரும்பான்மையாகக் கள்ளவழி மூலம் இரண்டாம் இடம் பெற்றது; இக் கள்ளவழி இறக்குமதியைத் தடுக்கும் ஆற்றல் அரசாங் கத்திடமில்லை; மேலும், அபினிக் குத்தகையை ஒரு தனி உரிமை

யாக விலைக்கு வாங்கும் சீனர்கள் மூலம் அரசாங்கத்திற்கு வரும் வருமானம் நின்று விடுமோ எனவும் அரசாங்கம் அஞ்சியது. கி.பி. 1888ஆம் ஆண்டிலிருந்து 1894ஆம் ஆண்டு வரை பல்வேறு பிரிட்டிஷ் பாங்குகளின் கிளைகள் பாங்காக்கில் அமைக்கப்பட்டன. கி.பி. 1897ஆம் ஆண்டிலிருந்து பிரெஞ்சு இந்தோ—சீனப் பாங்கும் (French Banquedel) பாங்காக்கில் அமைக்கப்பட்டது. கி.பி. 1900ஆம் ஆண்டு வரை சியாமின் கடல் பயணத் தேவைகளை ஆங்கிலேய நீராவிக்கப்பல்கள் கவனித்து வந்தன.

கி.பி. 1893ஆம் ஆண்டில் தேவைக்கு மிகுதியான அரிசி ஏற்றுமதிக்காகக் கிடைத்தது (அரை மில்லியன் டன்கள்). இதற்குப்பின் பத்தாண்டுகள்வரை இது பெருகவேயில்லை. அச்சமயத்தில் பிரெஞ்சுப் படையெடுப்பு ஒரு காரணமாயிருந்த போதிலும், இதன் காரணத்தை அறிய வேறு திசையில் திரும்ப வேண்டும் (1) குறைவான ஊதியம் பெறும் கூலியாட்கள் மிகுந்த அளவில் கிடைக்கவில்லை. (2) வேளாண்மை, போக்குவரத்து ஆகியவற்றின் வளர்ச்சிக்காகத் தேவையான மூலதனம் இல்லை. கி.பி. 1905ஆம் ஆண்டுக்குள் அடிமை நிலையும், கூலியில்லா வேலை முறையும் (Corvee) நீக்கப்பட்டதால் கூலியாள்களின் எண்ணிக்கை குறைந்தது. வாணிபத்தையும், கைவினைஞர்களின் (Crafts men) தொழிலையும் அறவே நீக்கி, ஆலைத் தொழிலாளிகளாகப் பணி புரியவே சீனர்கள் விரும்பினார்கள்; சியாமியர்கள் பயிர்த் தொழிலிலே மூழ்கியிருந்தார்கள். பொதுவாக, உறவினர்களிடமிருந்தும், சிறப்பாக வாடிக்கையாளர்களிடமிருந்தும் (Parton-sources வேளாண்மைத் தேவைக்காகக் குடியானவர்கள் கடன் வாங்கினார்கள். ஆனால், பெரும்படியான நீர்ப்பாசன வசதி, வளர்ச்சித் திட்டங்களில் முதலீடு செய்ய இவர்களிடம் தேவையான செல்வமில்லை. கி.பி. 1855ஆம் ஆண்டிலிருந்து உடன்படிக்கைகள் மூலம் நியமிக்கப்பட்ட வரி திரட்டும் திட்டங்கள் மாற்றப்படாமலிருந்ததால் குறைந்த வருமானம் பெறும் அரசாங்கத்தினாலும் இத் தேவையை நிறைவேற்ற முடியவில்லை. நிலவரி, ஆண்டின் மொத்த விளைவில் ஐந்து அல்லது பத்து விழுக்காடுதான் இருந்தது. உடன்படிக்கைகளால் கட்டுப்படுத்தப்பட்டதால் சுங்க வரியும் பெயரளவில் 3 விழுக்காடுதான். ஆகையால், சியாமின் பொருளாதார வளர்ச்சிக்கு உடன்படிக்கைகள் முட்டுக் கட்டைகள் ஆயின. இறுக்கிப் பிடிக்கும் செலவாணிக் கொள்கை (Tight Money Policy) பொருளாதார வளர்ச்சியைத் தளர்த்தியது; ஊக்கம் கெடுக்கும் ஆற்றலைப் பரப்பியது. சிறப்பாக அரிசி உற்பத்தி, அரிசி விற்பனை, சரக்கேற்றுப்போக்குவரத்து வசதிகள்,

தொழிற்சாலை வளர்ச்சி ஆகியவற்றில் இச் சூழ்நிலையைக் காண முடிந்தது. அயல்நாட்டு வாணிபம், முதலீடு செய்தல் துறைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும், முதலீடு செய்த அயல்நாட்டு மூலதனத்தின் மூலம் வரும் வருவாயை விரைவுபடுத்தவும் நெருக்கடிக்கால அழைப்புச் செலாவணிச் சேமப்பகுதி போதிய அளவில் திரட்டப்பட்டிருந்தது. திறமை வாய்ந்த திரட்டுதல், தணிக்கை முறைகளை அமைத்ததால் கி.பி. 1897ஆம் ஆண்டுக்குப் பிறகு வருவாயில் மிகுபயன் பெருகியது. ஆனால், இச் செல்வம் விரிவடைந்து கொண்டிருக்கும் காவல் துறை, கல்வி, நீதிமன்றங்கள் முதலியவற்றிற்கும், அயல்நாட்டுப் பணியாளர்களின் தேவைகளுக்கும் செலவிடப்பட்டதால், வளர்ச்சி நோக்கமுடைய சிறந்த திட்டங்களுக்காக முதலீடு செய்ய முடியவில்லை.

பிரிட்டிஷ் கொள்கைளால் சில சலுகைகளே கிடைத்தன. கி.பி. 1905ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களின் உடைமைகளின் மேலுள்ள வரிகளை மிகுதியாக்க அனுமதி கிடைத்தது. நிலவரி வருமானத்தை இரண்டு மடங்காக உயர்த்தவும் உடன்பாடு கொடுக்கப்பட்டது; இப் புதுச் சூழ்நிலையில்கூட இவ் வரிகள் மிகக் குறைவு தான். கி.பி. 1855—1856ஆம் ஆண்டுகளில் ஒப்பந்தங்கள் மூலம் தீர்மானிக்கப்பட்ட 3 விழுக்காடு சுங்க வரியைக் கி.பி. 1905ஆம் ஆண்டிலும், 1908ஆம் ஆண்டிலும் பெருக்க முயற்சியெடுத்தபோது ஆங்கிலேயர்கள் இதை எதிர்த்துத் தடுத்தார்கள்; ஏற்றுமதியாகும் பொருள்களின் மீதும் தீர்வை விதிப்பதைத் (Excise Tax) தடுத்தார்கள். கி.பி. 1926ஆம் ஆண்டில் ஒப்பந்தத்தை மாற்றியமைத்த பொழுதுகூடப் பிரிட்டிஷ் இறக்குமதி செய்யும் முக்கியமான பொருள்களின்மீது அடுத்த பத்து ஆண்டுகளுக்கு 5 விழுக்காடுதான் என்றும், சியாம் வாங்கும் அயல்நாட்டுக் கடன்களை ஆங்கிலேய நிதி ஆலோசனையாளர் (Financial-Adviser) அனுமதித்தால்தான் வாங்க முடியும் என்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதன் முக்கிய விளைவுகள் : (அ) சியாமின் பொருளாதார வளர்ச்சி தடுத்து நிறுத்தப்பட்டது; (ஆ) சூதாட்டம், சாராயம், அபினி அனுமதிச் சீட்டு (Opium License) ஆகியவற்றின் விற்பனைகள் மூலம் வரும் வருமானத்தையே தொடர்ந்து அரசாங்கம் நம்பி வாழ்ந்தது.

மடு மலைபோன்ற வேற்றுமையுடைய பொருளாதார வளர்ச்சியினால் விளைந்த பயன்கள் மெச்சத்தக்கவையாக அமையவில்லை. ஒரே வகையாக இருக்கும் பர்மா, சியாம் ஆகியவற்றின் பொருளாதாரத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இது புலனாகும். இரு நாடுகளும் அரிசி ஏற்றுமதி செய்யும் நாடுகள்; சிறிதளவு தேக்குமரம், இயற்கைப்

பொருள்கள் முதலியவற்றின் உற்பத்தியையும் நம்பியிருந்தன. கி.பி 1900ஆம் ஆண்டுக்குள் பர்மாவைவிட மிகக் குறைந்த அளவில் சியாம் ஏற்றுமதி செய்யத் தொடங்கியது. தேக்குமர உற்பத்தி அளவு பாதியாகக் குறைந்தது. கி.பி. 1900ஆம் ஆண்டில் மேனும் பள்ளத்தாக்கிலுள்ள நான்கில் ஒரு பங்கு செழிப்புள்ள நிலங்கள் முதிர்வுறுதிருந்தன (Undeveloped). புகைவண்டி, நெடுஞ்சாலைகள், சரக்கேற்றப் போக்குவரத்து முதலிய வசதிகளில் சியாம் பின் தங்கியிருந்தது; ஆனால் பர்மா சியாமைவிட வளர்ச்சி யடைந்திருந்தது. 'சியாமில் பிரிட்டிஷ் ஆட்சி அமைக்கப்பட்டால் பாதித் தலைமுறைகள் சியாமைச் செழிப்புள்ள நாடாக மாற்றி யமைக்க முடியும்; செல்வத்தை மிகுதியாகப் பெருக்கலாம்' எனக் கி.பி. 1902ஆம் ஆண்டில் ஓர் ஆங்கிலேயக் கல்வித் தலைவர் கூறினர். ஆனால், எளிமை நயமுடைய மதிப்பீடு மயங்கவைக்கக் கூடியது. சட்ட சமூகத் தடங்கல்களை விதிக்கட்டின்றி விருப்பப் படிப் பர்மாவில் ஆங்கிலேய அரசாங்கம் நீக்கியதால் பொருளாதார வளர்ச்சியைப் பெரும்பான்மை அளவில் தூண்டி எழுப்பி எழுச்சி யூட்ட முடிந்தது. அளவில்லாத கடன் தவணைச் சலுகைகள் ஆங்கி லேயர்களிடமிருந்தும், இந்தியர்களிடமிருந்தும் கிடைத்ததாலும், இந்தியாவிலிருந்து மிகுந்த அளவில் கூலியாள்களை இறக்குமதி செய்ததாலும் பர்மா பொருளாதாரத்தில் நலம் பெற்றது. மொத்தச் செய்பொருள் ஆக்க அளவும் முனைத்த மிகுநலமும் கவர்ச்சியூட்டுவனவாய் இருந்த போதிலும், பர்மாவிலுள்ள பொது மக்களின் நிலை சியாமிலுள்ள பொது மக்களின் நிலையைப்போலத் தான் இருந்தது.

வழிமரபு அரசியல், சமூகம், பண்பாடு ஆகிய அமைப்பில் கூறுபடா நிலையும், நேர்மையும் பாதுகாக்கப்பட்டதால் சியாமிற்குப் பல நன்மைகள் ஏற்பட்டன. உதாரணமாகக் கீழை மேனும் பள்ளத்தாக்கில் நெற்பயிர்த்தொழிலை விரிவுபடுத்தியபோது (பர்மா விலுள்ள ஐராவதிக் கழிமுகத்தில் நடந்ததை போலல்லாமல்), பழங்காலத்திலிருந்து அமைக்கப்பட்டு வந்த அரசியல் சியாமின் பண்பாட்டு மையங்கள் (centres) இடப் பெயர்ச்சி செய்யப்பட வில்லை. குறைவாகக் கடன் வாங்கியதாலும், தம்மால் உற்பத்தி செய்யப்பட்ட, விலை கொடுத்து வாங்க முடிந்த பயனீட்டாளர்கள் பொருள்களை மட்டும் வாங்கியதாலும் சியாமியக் குடியானவர்கள் தங்கள் நிலவுரிமைகளை இழக்கவில்லை. மேலும், பர்மாவைப் போல் சட்டமீறிய குழப்பங்கள் சியாமில் களியாட்டம் செய்யவில்லை. உலக வாணிப நிலையின் விளங்காப்போக்கும், கோளாறுகளும் பர்மாவைத் தாக்கியது போலச் சியாமைத் தாக்கவில்லை. சீனர்களைத்

தவிர, மற்றஅயல்நாட்டார்கள் தொழிலாளர்களாகவோ, நில வுடைமையாளர்களாகவோ சியாமில் வந்து குடியேறவில்லை; தங்கள் வாணிபத்தின் மூலம் சீனர்கள்கூட வரி:ஆக்கம் நாடுகிற செயல்களையே புரிந்தார்கள். அரசாட்சி செயலுரமிக்கதாயிருந்ததாலும், ஓரளவு உள்ளூர்த் தன்னாட்சி முறையிருந்ததாலும் ஒழுங்கமைதியை அமைக்க முடிந்தது; சமூக அமைப்பைப் பழுதுபடாமல் பாதுகாக்க முடிந்தது. பொதுநிலையிலிருந்து நோக்கினால் நன்மைகள் சியாமிற்கே அன்பாதரவு அளிப்பதுபோல் தோன்றின.

மதிப்பாய்வு

மன்னர் சூலலொங்கோர்ளைப்பற்றி டி.ஏ. வில்சன் (D. A. Wilson) குறிப்பிடுகிறார்: ‘அவருடைய மிகப்பெரும் சாதனை திறமைவாய்ந்த நயத்திறம் காட்டுகின்ற, அரசியல் செயலாண்மை நயத்துடன், நாட்டின் உரிமையைப் பாதுகாத்ததும், விரைவுடன் மேலைநாட்டு முறைகளைத் தழுவித் தம்முடையனவாகக் கொண்டதும் ஆகும்’.

இவர் ஆட்சியின்போது பிரான்சின் வலியதாக்குதலைத் தடுக்கும் நோக்கத்துடன் பிரெஞ்சு—தாய் (Franco-Thai) சொற்பூசல் சூழ்நிலையில் பிரிட்டனை இடையீட்டாளராகப் பணிபுரியச் செய்தார். கி.பி. 1890ஆம் ஆண்டில் மேகாங்கின் கிழக்கே பல பகுதிகளைச் சியாம் இழந்தது. பிரான்சு கட்டாயப்படுத்தியதால் கி.பி. 1893 ஆம் ஆண்டில் தான் செய்த உடன்படிக்கையின்படித் தன்னிடமிருந்த கம்போடியாவின் பகுதிகளைச் சியாம் விட்டுக் கொடுத்தது. வியட்நாம் வரலாற்றிலே இதைப்பற்றி விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆங்கிலேயர்கள் உதவியை நாடிய சியாம் ஏமாற்றமடைந்தது. பிரான்சின் கோரிக்கைகளை நிறைவேற்றும்படிப் பிரிட்டன் சியாமிற்கு ஆலோசனையளித்தது. சியாமிற்குப் பிரான்சின் மேல் வெறுப்புணர்ச்சியும் சீற்றமும் வந்தது; பிரிட்டன் உதவுவதற்கு முன்வராததால் சியாமிற்குப் பிரிட்டனின் மேலுள்ள நம்பிக்கை குலைந்தது.

இத்தகைய சூழ்நிலையில்தான் சியாம் தன்னுடைய புதுமைப் பாங்குத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் விரைவாக இறங்கியது. இருமுறை வெளிநாட்டுப் பயணத்தால் அரசர் பல செய்திகளை அறிந்து கொண்டார். சியாமின் உரிமையைப் பாதுகாக்கக்கூடிய ஒரே முறை படிப்படியாகப் புதுக்கருத்துக் கோட்பாட்டு முறைகளைச் செயல்படுத்த வேண்டும்; மேலை நாடுகளுக்கு ஏற்றவாறு நடந்துகொள்ள வேண்டும். கி.பி. 1897ஆம் ஆண்டில் ஐரோப்பியப் பயணத்தின் போது சியாமிலுள்ள ஐரோப்பியர்களின் பணி

நில ஆட்சிக் கட்டுப்பாட்டிலிருந்து விலக்குரிமை பெற்ற சலுகைகளை நீக்க மன்னர் முயன்ருர். இதை விலக்கினுல்தான் சியாமிற்கு மீண்டும் முழுத் தாய் மீமுதல் ஆட்சித்தலைமையுரிமை (Thai Sovereignty) கிடைக்கும். கி.பி. 1904, 1907ஆம் ஆண்டுகளில் பிரான்சுடன் ஏற்படுத்திய ஒப்பந்தங்கள் மூலம் பட்டாம்பாங், சியாம்ரீப் ஆகிய பகுதிகளைப் பிரான்சிற்கு அளித்தபோதிலும், கி.பி. 1909ஆம் ஆண்டில் பிரிட்டனுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையின்படி வட மலேய நாடுகளைப் பிரிட்டனுக்கு விட்டுக்கொடுத்த போதிலும், சியாம் பெரும்பான்மை அளவில் தன் அரசுரிமையையும், பிற உரிமையையும் மீட்டுக்கொண்டது.

டி. யீ. நியூசடர் லைன் (D. E. Neuchtier Lien) சூலலொங்கோர்னைப் பற்றிக் கூறுகிருர்:—

'தம் தந்தைதொடங்கிய கற்கால வழிமுறைகளை மிகுந்த அளவில் விரைவு படுத்தினுர். மிகச் சிறந்த பரந்த செயல் விளைவுடைய மாறுதல், அரச மாளிகைப் பள்ளியில் மேலைநாட்டு முறையில் அரச குடும்பத்தினர்களின் குழந்தைகள் பயிற்சி பெற வேண்டும் என அவர் விடாப்பிடியாக வற்புறுத்தியதே. தம் மகன்களில் பலரைக் கல்வி பயிலுவதற்காக இவர் ஐரோப்பாவிற்கு அனுப்பினுர்; அவர்கள் திரும்பிய பிறகு சியாமைப் புது நாகரிகப் பண்பாடு வாய்ந்த நாடாக மாற்றும் செயல்களை விரைவு படுத்த உதவினுர். மேலும், இவ்வமைதியான புரட்சிக்கு உதவுவதற்காகச் சியாமில் போதிய அளவு பயிற்சி பெற்ற வல்லுநர்கள் வளரும் வரையில், பல அயல் நாட்டுத் தொழில் நுட்ப வல்லுநர்களையும், ஆலோசகர்களையும் சூலலொங்கோர்ன் ஊதிய ஒப்பந்தங்கள் மூலம் வரவழைத்தார்'.

சூலலொங்கோர்னின் முனைப்பான திட்டம், கி.பி. 1982ஆம் ஆண்டில் நாட்டு நிருவாகத்தை மையப்படுத்தியதே. அரைகுறை உரிமையோடு பணியாற்றிக் கொண்டிருந்த மாநில ஆளுநர்களை நீக்கி ஊதியம் பெறும் தலைவர்களை நியமித்ததால் நிலப்பண்ணை முறையைச் சார்ந்த கோமான்கள் இனிமேலும் இவ்வாளுநர்களிடமிருந்து திறை (அன்பளிப்புகளைப்) பெற முடியவில்லை. இதன் பயனுய் கையூட்டும் ஊழல்களும் தகர்க்கப்பட்டன; செலவும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது; சில ஆண்டுகளுக்குப் பின் வருவாய் வளர்ந்தது.

ஆனுல், பல குறைபாடுகளும் இருந்தன. மன்னர் அமைச்சர் அவையில் பன்னிரண்டு உறுப்பினர்கள் இருந்தார்கள்; இவர்கள் அரசரால் நியமனஞ் செய்யப்பட்டார்கள். அரசர் விரும்பும்போது

இவர்களைப் பதவியிலிருந்து நீக்கலாம். இக் காரணத்தால் அவர்களுக்கு அரசரை எதிர்த்துப் பேசும் துணிவில்லை. இன்னும் சியாம் வழிவழி மரபில் வளருவதால், மேலை நாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்யும் தீர்மானங்கள் எடுப்பதற்கு வரம்பற்ற தம் விருப்பப்படி ஆளுகிற அரசரால்தான் முடியும் எனச் சூலலொங்கோர்ன் புரிந்து கொண்டார். நடுநிலை மதிப்பீட்டையும், பழிக்கும் திறனாய்வுகளையும், தம்முடைய ஆட்சி அதிகாரங்களைக் குறைப்பதற்காகக் கூறும் யோசனைகளையும் இவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. கி.பி. 1886ஆம் ஆண்டில் ஒரு படித்த தாய்க் (Thai) குழாம் இவரிடம் ஒரு விண்ணப்பம் கொடுத்தது. இதில் பின்வரும் வேண்டுகோள்களை விடுத்தது :—

(அ) சியாமில் ஒரு பாராளுமன்ற அரசியலமைப்போடு இசைவான ஆட்சி (Constitutional Parliamentary System) அமைக்க வேண்டும். இவ்வகையான புதுமைப் பாங்கான அரசியல் அமைப்பை நிறுவி ஐரோப்பியர்களைக் கவர்ந்தால்தான் சியாம் உரிமையோடு வாழும் என்ற நம்பிக்கை கொள்ளலாம்.

(ஆ) சோம்பேறித்தன்மை வாய்ந்த, தீய அமைச்சர்களிடம் மன்னர் கடுமையாக நடக்காமல் சலுகை காட்டுகிறார்.

(இ) பிரதம மந்திரியுடன் இருக்கும் நாடாளுமன்றத்தால், தனி ஒருவரைவிட, இவ்வூழல்களைத் தடுத்து ஒழிக்க முடியும்.

சூலலொங்கோர்ன் இவர்களுக்குப் பின்வருமாறு பதிலளித்தார்:

(அ) ஆட்சி புரியத் தமக்குள்ள தகுதிகளை ஒரு விரிவுரை மூலம் விளக்கிக் காட்டினார்.

(ஆ) அச் சயமத்தில் தனித் திறலாண்மைக் குழுமம் (Talent) சியாமில் இல்லாதிருப்பதை எடுத்துரைத்தார்.

(இ) 'இந் நாட்டில் எவ்வாறு நிருவாகம் நடக்கிறது என்பதை நீங்கள் முதலில் கற்றறிய வேண்டும்; இவ்வாறு முறையுடன் அறிவை வளர்த்த பின்தான் உங்களிடம் எனக்கு ஆலோசனை தரக் கூடிய தகுதியும், அறிவும் இருக்கும்' (சூலலொங்கோர்ன்).

ஆகையால், சூலலோங்கோர்னின் புது நாகரிகப் பண்பாடு வாய்ந்த திட்டம் ஒரு நிறைவற்ற, அரைகுறையான பழங்காலத்த தாயிராத திட்டமாகச் செயல்படுத்தப்பட்டது.

4. தாறுமாறான ஒப்பந்தங்கள்

கி.பி. 1855 – 1856ஆம் ஆண்டுகளில் பிரிட்டனுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையில் ஒரு குறிப்பிட்ட காலம்வரைதான் இவ்வுடன்படிக்கை செல்லுபடியாகும். பிறகு இதை மாற்றியமைக்கப் பேச்சு நடத்தலாம் எனக் கூறப்படவில்லை. இருதரப்பினரும் விரும்பினால்தான் உடன்படிக்கையைத் திருத்தியமைக்க முடியும்; ஆனால், அவ்வாறு திருத்தியமைப்பது ஆங்கிலேய வணிகர்களுக்கும், மூலதனம் போட்டவர்களுக்கும் நலமாயிராது. ஆகையால், ஆங்கிலேயர்கள் உடன்படிக்கையைத் திருத்துவதில் கவனம் செலுத்தவில்லை. சியாம் நாட்டுக் கட்டுப்பாட்டிலிருந்து விலக்குரிமை பெறச் சியாமிற்கு அருகே வாழ்ந்து வந்த தங்கள் குடியேற்றப் பகுதிகளிலிருந்து வரும் மக்களுக்கும் உண்டு எனப் பிரான்சும் பிரிட்டனும் கருதின. இதனால் பர்மிய மலேயர், இந்தோ-சீனாவில் இருந்த இந்தியர்கள், ஜாவா மக்கள், தென் கிழக்காசியக் குடியேற்ற நாடுகளில் பிறந்த சீனர்கள் முதலியவர்கள் சியாம் சட்டம், நீதிமன்றத் துறைகளிலிருந்து தங்களுக்கும் விலக்குரிமையுண்டு எனக் கருதினார்கள். இவ்வகையான சூழ்நிலை உருவாகியதால் இவர்களும் துயிலூட்டும் பொருள்களைக் (Narcotics) கள்ளக்கடத்தல் செய்யவும், சட்டம் மீறிச் சூதாடவும் வாய்ப்பேற்பட்டது. உடன்படிக்கையிலுள்ள கட்டுப்பாட்டினை இவர்கள் தங்களுக்கு மிக்க நலம்பயக்கும் முறையில் பயன்படுத்தியதால் சியாமால் சட்ட நடவடிக்கை யெடுத்து இவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பிறகு, இவ்வயல்நாட்டு இனத்தார்கள் காவல்துறை ஒழுங்கு முறைகள், அடிப்படையான சட்டங்கள் முதலியவற்றில் கூடத் தங்களுக்கு விலக்குரிமையுண்டு எனக் கருதத் தொடங்கினார்கள்.

எடுத்துக்காட்டாக, கி.பி. 1883ஆம் ஆண்டுக் கட்டளை விதியை எடுத்துக்கொள்வோம். பர்மா நாட்டின் பகுதியான ஷான் நாட்டு எல்லைப் பகுதிக்கு இக்கட்டளை விதி எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என நோக்குவோம். பர்மா ஷான் இனத்தவர்கள், ஏனைய எல்லைப்பகுதிகளில் வாழும் பிரிட்டிஷ் குடி உரிமைகளுள்ள அயல்நாட்டினர்கள் பற்றிச் சியாங்மை பகுதியிலுள்ள நீதிமன்றங்கள் மட்டுமே, ஆங்கிலேய அயல்நாட்டுப் பேராளர் (Consul) முன்னிலையில், வழக்காய்வு செய்யலாம். நீதிபதிக்கு ஆலோசனை அளிக்க அயல் நாட்டுப் பேராளருக்கு உரிமை உண்டு; ஆங்கிலேயக் குடிகள்பற்றிய வழக்குகளை ஆணையிட்டு நீதிமன்றத்தைவிட்டு வெளியேற்றலாம். ஆங்கிலேயக் குடிகள்பற்றிச் சியாமிய நீதிமன்றங்கள் குற்றத் தீர்ப்பளித்திருந்தால் அயல்

நாட்டுப் பேராளரிடம் முறையிட்டு, அவர்முன் ஆங்கிலேயக் குடிகள்மேல் வழக்காடும் உரிமையுண்டு. கி.பி. 1909ஆம் ஆண்டில் மேலே எடுத்துரைத்த 1883ஆம் ஆண்டுக் கட்டளை, சியாமில் வாழ்ந்த எல்லாப் பிரிட்டிஷ் குடிகளுக்கும் செல்லுபடியாகும் என ஆங்கிலேயர்கள் கூறினார்கள். ஐரோப்பியப் பெற்றோர்கள் மூலம் பிறந்த கொள்ளுப் பெயரன், கொள்ளுப் பெயர்த்திகள்மேலும், (Great grand-children) ஆசியக் குடிகளின் பெயரக் குழந்தைகள்மேலுமுள்ள ஆங்கிலேய அரசாங்கத்தின் காப்புட்படுநர் (Protege : பாதுகாவலில் வைக்கப்பட்ட) அதிகாரத்தைவிட்டது. ஆனாலும், இக்கொடிய வழக்கைத் தவருகப் பயன்படுத்துவது குறையவில்லை. வடலாவோஸ் பகுதியிலுள்ள பிரெஞ்சுக் குடிகள்பற்றிக் கி.பி. 1904ஆம் ஆண்டில் பிரான்சும் இவ்வகையான மேற்பார்வையிடும் ஆங்கிலேயக் கொள்கைகளையே பின்பற்றியது. பிரெஞ்சு அயல்நாட்டுப் பேராளரும் நீதிபதிகளுக்கு உதவும் உரிமையைச் செயல்படுத்தலாம்; மேலும், இவ்வழக்குகளைப் பிரான்கோ-சியாமியர் நீதிமன்றத்தின்முன் கொண்டுவரலாம்.

இவ்வகையான, சட்டப்படிக்கான தகுதியின்மையிலிருந்து மெதுவாகச் சென்றுதான் சியாம் தப்பிக்க முடிந்தது. கி.பி. 1898ஆம் ஆண்டில் ஜப்பானுடனும், கி.பி. 1899ஆம் ஆண்டில் உருசியாவுடனும் ஏற்படுத்திய உடன்படிக்கைகளில் இவ்வகையான சியாம் நாட்டுக் கட்டுப்பாட்டிலிருந்து விலக்குரிமை பெறும் உரிமைகள் அளிக்கப்படவில்லை. புதிதாதப் பதிவு செய்யும் சியாமில் வாழும் பிரெஞ்சுக் குடிமக்களுக்கு இத்தகைய விலக்குரிமையும், வரி விலக்குரிமையும் செல்லுபடியாகா என 1907ஆம் ஆண்டில் பிரான்சு ஏற்றுக்கொண்டது. இதற்கிடையில் சியாமில் வாழ்ந்து வந்த பிரெஞ்சு ஆசியக் குடிகள் எல்லா வகையான விலக்குரிமைகளையும் பயன்படுத்தி வந்தார்கள். கி.பி. 1909ஆம் ஆண்டில் நான்கு மலேய் நாடுகளை ஆளும் முழு உரிமையைப் பிரிட்டன் பெற்றவுடன், புதிதாகப் பதிவு செய்யும் பிரிட்டிஷ் குடிகளுக்கு இவ்விலக்குரிமைகள் (extra territorial rights) கிடையா எனப் பிரிட்டனும் ஏற்றுக்கொண்டது. சியாமிய நீதிமன்றச் சட்டங்களைத் திருத்தி வெளிப்படுத்தும்வரை கி.பி. 19 9ஆம் ஆண்டின் உடன்படிக்கையின்படிப் பிரிட்டிஷ் குடிகள் பிரதிவாதிகளாகத் தோன்றும் சியாம் நீதிமன்றங்களிலும் ஆலோசகர்களாகப் பணிபுரியும் ஆங்கிலேயர்களின் ஊதியத்தையும் சியாம்தான் அளிக்க வேண்டும். ஐரோப்பியர் பற்றிய வழக்கென்றால் தம்முடைய ஆலோசனையின்படி நீதிபதி நடக்கவேண்டும் எனப் பிரிட்டிஷ் ஆலோசகர் வலியுறுத்தலாம்.

கி.பி. 1920ஆம் ஆண்டில்தான் முதன்முதலாக இவ்விலக்குரிமைத்தடை தகர்ந்து சியாம் தன் உரிமைகளைப் பாதுகாக்க வழி உண்டாக்கப்பட்டது; அமெரிக்கக் குடியரசுடன் ஏற்பட்ட உடன்படிக்கை திருத்தியமைக்கப்பட்டு, இவ்விலக்குரிமை இனி மேல் ஓர் உரிமையாகக் கேட்கப்படமாட்டாது என அமெரிக்கக் குடியரசு அடைக்கலம் அடைந்தது; இனிமேல் இழப்பீடும், ஒன்றுக்கு ஒன்று மாற்றுங் குற்றமும் (Quid Proquo) தேவைப் படா. ஆனால், அமெரிக்கக் குடிமக்கள் பிரதிவாதிகளாகத் தோன்றினால், அமெரிக்க அயல்நாட்டுப் பேராளர், புதிய சியாம் சட்டம் வெளியிட்டபின் ஐந்து ஆண்டுக் காலத்திற்கு இவ்வழக்கு களை ஆணையிட்டு நீதிமன்றத்தைவிட்டு வெளியேற்றலாம்; அமெரிக்க ஆலோசகர்கள் இனிமேலும் நீதிமன்றத்தில் அமர்ந்து தலையிடமாட்டார்கள்; ஆனால் இவ்வகையாக வெளியேற்றப்பட்ட வழக்குகள் சியாம் சட்டப்படித்தான் ஆய்வு செய்யப்படும். எல்லாப் பொதுவரி (fiscal) நிதிபற்றிய சுங்கவரிக் கட்டுப்பாடுகளை யும் இனிமேல் அமெரிக்கக் குடியரசு விதிக்காது; ஆகையால், இவ்வுடன்படிக்கை யேற்பட்டதிலிருந்து இனிமேலும் இக்கட்டுப் பாடுகள் செல்லுபடியாகா என அமெரிக்கக் குடியரசு ஒப்புக் கொண்டது; பத்தாண்டுகளுக்குப்பின், ஓர் ஆண்டு எச்சரிக்கை யளித்த (Notice) பிறகு, இவ்வுடன்படிக்கையை நீக்கிவிடலாம்.

அமெரிக்கக் குடியரசு உடன்படிக்கையைப் பின்பற்றி, சியாம் அயல்நாட்டு அலுவலகத்தில் ஆலோசனையாளர்களாகப் பணி புரிந்து வந்த மக்கள் தலைவர் வில்சனின் மகள் கணவனை பிரான்சிஸ் பி. சாயரி (Francis B. Sayre) வற்புறுத்தலின் பேரில், ஜப்பானியப் பொருள்கள் சியாம் அங்காடியில் கொண்டுவருவதற் காகச் சியாமுடன் கி.பி. 1924ஆம் ஆண்டில் ஜப்பான் ஓர் உடன் படிக்கையைச் செய்துகொண்டது. பிரான்சும் இவ்வகையாக நடக்க விரும்பும் அறிகுறிகளைக் காட்டினாலும், உடனடியாக ஒரு பயனும் ஏற்படவில்லை. இதற்கு முதல் தடையாக இருந்த நாடு பிரிட்டன். சியாமுடன் உள்ள நீண்ட பிரிட்டிஷ் எல்லைப் பகுதி களாலும், ஏறத்தாழச் சியாமின் வாணிபப் பொருள் தனி உரி மையைப் பிரிட்டன் அனுபவித்து வந்ததாலும் (30 விழுக்காடு ஏற்றுமதியில்; 67 விழுக்காடு இறக்குமதியில்) உடன்படிக்கை செய்யும் எல்லா நாடுகளும் பிரிட்டனின் கி.பி. 1909ஆம் ஆண்டின் கொள்கையை ஒரு குறைவெல்லையாக (Minimum) ஏற்றுக்கொண் டால்தான் மேலும் நடவடிக்கைகள் எடுக்க முயற்சி செய்யப்படும் எனப் பிரிட்டன் அறிவித்தது. தொடக்கத்தில் எட்டு ஐரோப்பிய நாடுகள் சலுகை உரிமைகளை விட்டுக்கொடுக்க மறுத்தன.

ஆகையால், ஐரோப்பிய நாடுகளின் இம் மனப்பான்மையை மாற்றும் நோக்கத்துடன் கி.பி. 1925ஆம் ஆண்டில் சாயர் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார்; இறுதியில் இப் பயணத்திஞல் சியாமிற்குப் பல நன்மைகள் விளைந்தன.

கி.பி. 1925ஆம் ஆண்டில் பிரான்சுடன் ஏற்படுத்திய உடன் படிக்கையின்படிப் பிரெஞ்சுக் குடிகளைப்பற்றிய வழக்குகளை ஆணை யிட்டுச் சியாம் நீதிமன்றங்களிலிருந்து வழக்குகளை வெளியேற்றும் உரிமை, பிரெஞ்சு—சியாமியர் நீதிமன்றத்தின்முன் இவ்வழக்கு களைக் கொண்டுவரும் உரிமை, சியாம் நீதிமன்றச் சட்டங்கள் வெளிப்படுத்திய ஐந்து ஆண்டுகளுக்குப்பின் செல்லுபடியாகாது எனப் பிரான்சு ஒப்புக்கொண்டது. சியாம் விதித்த (அதிகப் படுத்திய) சுங்கவரிக் கட்டுப்பாடுகள் எல்லா நாடுகளின் மேலும் சமமாக, ஒரு சலுகையும் தராமல் விதிக்கப்பட வேண்டும்; இனிமேல் சியாமிற்கும், பிரான்சிற்கும் ஏற்படும் கருத்து வேறுபாடு களை நடுநிலைக்கு விட்டுவிடவேண்டும்; பத்து ஆண்டுகளுக்குப் பின் இவ்வுடன்படிக்கையை விலக்குவதற்குரிய உரிமை இருதரப் பினருக்கும் உண்டு.

கி.பி. 1925 ஆகஸ்டு மாதம் பிரான்சுடன் ஓர் எல்லை வரை யறுக்கும் உடன்படிக்கையும் சியாம் செய்தது. மெகாங் எல்லைப் பகுதிகளிலுள்ள இரு நிலப்பரப்புப் பகுதிகளிலும் 25 கிலோ மீட்டர் பகுதிகளைப் போருக்கு அப்பாற்பட்ட எல்லைப்பகுதிகளாக (de-militarised zone) மாற்றியமைத்து அதை நிருவகிக்கும் பொறுப்பை ஒரு நிலையான கூட்டு உயர்தனிப் பேராளர் அலுவல கத்திடம் (Joint-Permanent High-Commission) விட்டுவிட வேண்டும். எல்லைப் பகுதிகளில் வாழும் சியாமியர் இனத்தைச் சேர்ந்த பிரெஞ்சுக் குடிகளுக்குச் சியாம் சட்டப்படி உடைமை உரிமைகள் தொடர்ந்து நீடிக்கும். உயர்தனிப் பேராளர் அலு வலகம் குத்தகை உரிமைகளைப் பற்றிய விவகாரங்களை ஆராயும்; தண்ணீர் எல்லை வரையறுப்பு, மீன் பிடித்தல், ஆற்றின் வழியாகப் பயணம் செய்தல் முதலியவற்றின் உரிமைகளைப்பற்றிய கட்டளை களை முறைப்படுத்தும். சியாமில் வாழும் பிரெஞ்சுக் குடிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிற உரிமைகளே இந்தோ-சீனுவில் வாழும் சியாம் குடிகளுக்கும் அளிக்கப்படும். முன்பிருந்த பிரெஞ்சு-சியாம் உடன்படிக்கைகளைவிட இவ்வுடன்படிக்கையில் முதன்முறையாகப் பிரான்சின் பரந்த மனப்பான்மையை ஓரளவு காணலாம்.

கி.பி. 1925ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிரிட்டனுடன் ஏற் படுத்திய உடன்படிக்கையைச் சாயரின் சிறந்த வெற்றியாகக்

கருதலாம். சியாம் நீதிமன்றங்களிலுள்ள ஆங்கிலேய ஆலோசகர்கள் உடனடியாகத் திரும்ப அழைத்துக்கொள்ளப்படுவார்கள். சியாமின் நீதிமன்றச் சட்டம் வெளிப்படுத்தியவுடன் ஆணையிட்டு வழக்குகளைச் சியாம் நீதிமன்றத்திலிருந்து வெளியேற்றும் உரிமை விட்டுக்கொடுக்கப்படும். பர்மா, மலேயா ஆகியவற்றின் எல்லைப் பகுதிகளில் வாழ்ந்துவந்த பிரிட்டிஷ் குடிகளின் உரிமைகள் தொடர்ந்து செல்லுபடியாகும்; சியாமிலுள்ள பிரிட்டிஷ் குடிகளில் வாணிப உரிமைகள் சில சலுகைகளுடன் உறுதிப்படுத்தப்பட்டன. ஒரு தனி உடன்படிக்கையை நடுநிலைப்படுத்தி, இதன்மூலம் சியாமின் சுங்கவரி உயர்வைக் குறையச் செய்யவேண்டும். ஆங்கிலேய இறக்குமதிப் பொருள்களின்மேல் விதிக்கப்படும் இச் சுங்கவரி உடன்படிக்கை பத்தாண்டுகள் நீடிக்கும். ஆகையால், பருத்தி நூல்களின் துணிமணிகள், இரும்பெஃகுப் பொருள்கள்* ஏனைய ஐந்து ஐரோப்பிய நாடுகளுடனும், கி.பி. 1925ஆம் ஆண்டில் மேலும் நான்கு நாடுகளுடனும் உடன்படிக்கைகள் செய்யப்பட்டன. சியாமில் தனக்குள்ள உடன்படிக்கைச் சலுகைகளை யெல்லாம் இறுதியாகக் கி.பி. 1937ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடியரசு விட்டுக்கொடுத்தது; மற்ற நாடுகள் இதனைப் பின்பற்றிக் கி.பி. 1939ஆம் ஆண்டில் தங்களுடைய சிறப்பு உடன்படிக்கைகளை விட்டுக்கொடுத்தன.

கி.பி. 1925ஆம் ஆண்டில் சீனாவில் சண்டையிடும் தன்மையுள்ள குயோமின்டாங் நாட்டில் அரசு தோன்றியதே சியாமின் சட்டம்பற்றிய முழுவுரிமை அளிக்க ஐரோப்பிய நாடுகள் மனம் மாறி முன்வந்ததற்குச் சிறந்த காரணம் ஆகும். கி.பி. 1925ஆம் ஆண்டுக்கு முன் சியாமில் அயல்தனிப் பேராளர் அலுவலகத்தைச் சீனா அமைக்கவில்லை; சியாமில் வாழும் சீனர்கள் செய்த குறைபாடுகளைக் காதுகொடுத்துக் கேட்கவில்லை. சியாமில் வாழும் 3 மில்லியன் சீனர்களுக்குமேல் சீன அயல் தனிப் பேராளர் அலுவலகத்திற்குச் சட்ட மேலுரிமையுண்டு எனக் குயோமின்டாங் அரசு அறிவித்தது. இக்காலம்வரை சீனர்களின் பொருளாதாரக் கைப்பற்றலே சியாமியர்களை அச்சுறுத்தியது; இனிச் சீன அரசியல் பற்றிய அச்சமும் எச்சரிப்பும் சியாமியர்களை மேலும் வாட்டின.

கி.பி. 1910ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1925ஆம் ஆண்டுவரை சீன இனத்தவரும் சியாம் இனத்தவரும் தங்களுடைய நாட்டின் தனித் தன்மையைப் (Nationalist identity) பாதுகாத்துக் கொண்டால்தான் பிழைத்து வாழமுடியும் என்ற மனப்பான்மை

* முதலியவற்றின் மேல் 5 விழுக்காடு சுங்கவரி போடப்பட்டது சாயரின் உதவியுடன்.

யுடன் இருந்தார்கள். அரசருக்குத் தனிப்பட்ட முறையில் செலுத்த வேண்டியதொன்றும் வேண்டா; சிலவரிகள் மட்டும் செலுத்தினல் போதும் என்ற சலுகைகள் சீனர்களுக்கு முன்பு அளிக்கப்பட்டிருந்தன; இவைகளைச் சியாம் அரசாங்கம் நீக்கியது. கி.பி. 1920ஆம் ஆண்டில் சியாமிற்கு வந்து குடியேறிய சீன மகளிரின் எண்ணிக்கை பெருகியதால் சீனர்களையும் சியாமியர் களையும் முழுமையாக இணைக்கும் நோக்கம் தாமதப்படுத்தப் பட்டது.

கி.பி. 1920ஆம் ஆண்டில் சீனர்களின் வாழ்க்கைத் தொழில், பொருளாதாரப் படிநிலை, பள்ளிகளில் சீனமொழியின் வாயிலாகக் கற்பித்தல் போன்ற உரிமைகள் சியாம் அரசாங்கத்தால் வரை யறுக்கப்பட்டதால் சினமூட்டப்பட்டுப் போர்புரியும் தன்மையுள்ள குயோமின்டாங்கின் நாட்டுணர்ச்சி பொங்கியது. சியாமில் வாழ்ந்த சீனர்களின் ஊர்களான கேன்டனிலும் (Canton), புகியனிலும் (Fukien) இவ்வுணர்ச்சி மிகுதியாக இருந்தது. சியாமில் வாழ்ந்த பெரும்பான்மையான சீனர்கள் சியாம் குடி உரிமைகளின் மூலம் வந்த கடமைகளை ஏற்றுக்கொள்ளத் தயாரா யிருக்கவில்லை; தங்களுடைய தனி வரிச் சலுகைகளை மீண்டும் சியாம் அரசாங்கம் அளிக்க வேண்டும் எனக் கோரிக்கை யுரிமை யிட்டனர். கி.பி. 1932ஆம் ஆண்டில் பாங்காக் புரட்சிக்குப் பின் சூழ்நிலை இன்னும் இழிநிலையுற்றது; பெரும்பான்மையான சீனப் பள்ளிகள் மூடப்பட்டன. ஆண்டிற்கு 10,000 சீனர்கள்தாம் சியாமிற்கு வந்து குடியேறலாம் என்ற நிபந்தனை விதிக்கப் பட்டது.

சியாம் : 1932ஆம் ஆண்டுப் புரட்சிக்கு முன்

மன்னர் வஜ்ராவுத் (Vajiravudh) அல்லது ஆறும் இராமா (Rama VI) ஆட்சியின்போது அயல்நாடுகள் சியாமின் உரிமை யைப் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், சியாமில் அயல்நாட் டினருக்கிருந்த சலுகைகளை ஒழிக்க வேண்டுமென்றும் முயற்சி யெடுக்கப்பட்டது.

ஆறும் இராமா அரசாங்க நிருவாகத்தில் கவனம் செலுத் தாமல் கலைகளின்மேல் ஆர்வம் காட்டினர். அவரே நாடகத் தில் நடிக்க விருப்பமுள்ளவர்; கலைகளைப்பற்றி எழுதுபவர்; சுற்றுலாச் செய்வதிலும், அரச விருந்துகளை நடத்துவதிலும் செல்வத்தைக் கரைத்தார். ஆட்சி அதிகாரங்களையெல்லாம் தம்மிடத்திலே வைத்துக்கொண்டதால் அதிகாரிகளைத் திறமை யுடன் மேற்பார்வையிட முடியவில்லை. ஆகையால், கையூட்

டையும் ஊழலையும் அடக்க முயற்சியெடுக்கவில்லை. பெரும்பான்மையான உயர் அதிகாரிகள் அரச குடும்பத்தினர்களும், உயர் குடி மக்களுமே ஆவார்கள். இவர்களின் கையூட்டும் ஊழலும் வரம்புமீறிச் சென்றன. அரசாங்க ஆலோசகர்களைப் புறக்கணித்தார்; இவரைச் சுற்றி முகப்புகழ்ச்சி செய்பவர்களும், இளம் பசப்பர்களும்தாம் இருந்தார்கள். அந்தப்புரத்தைக் கலைத்தார்; ஐந்து மனைவிகளுடனேயே வாழ்ந்தார். (கி.பி. 1922ஆம் ஆண்டுவரை இவர் மணமாகாதவராகவே யிருந்தார் என வரலாற்றுசிரியர் கில்பெர்ட் கூறுகிறார்).

தம் தந்தையைப்போல மன்னர் ஆறும் இராமாவும் அரச அமைப்புச்கு இசைவான மக்களாட்சியைக் (Constitutional Government) கடுமையாக எதிர்த்தார். ஆனால், இவர் எதிர்ப்பு இருந்தபோதிலும், மேலைநாட்டு முறையில் கல்வி பயின்றவர்களிடையே இவ்வகையான அரசியல் அமைப்பினை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் பெருகியது பதிலாக, மன்னர் நாட்டுத் தன்முனைப்பாட்சியும் தேவை என்ற கருத்தைப் பரப்பினார். ஆனால், இவர் எண்ணம் நிறைவேறவில்லை. மிக ஆர்வமுள்ள தாய் (Thai) நாட்டுத் தலைவர்கள் தங்கள் கருத்தைச் செயல் படுத்துவதற்காக எத்தகைய தியாகமும் செய்யத் தயாராக விருந்தார்கள். ஆட்சி அமைப்பில் பங்கெடுத்துத்தான் மக்களின் நலனைப் பாதுகாக்கவும், வளர்க்கவும் முடியும் என இவர்கள் நினைத்தாகள். ஆகையால், அரசரின் தனித் தலைமை அதிகாரங்களை ஒழிக்கவேண்டும் என்பதே இவர்களின் நோக்கம். இதைத் தவிர, சியாமில் சியாமியர்களுக்கும் சியாமில் குடியேறியிருக்கும் சீன இனத்தாருக்குமிடையே மனக்கசப்பும், இன வெறியும் தழைத்தோங்கியிருந்தன. மன்னரே 'கிழக்கு யூதர்கள்' (Jews of the east) என்ற நூல் எழுதி இவ் வெறியைக் கிளப்பி விட்டார். சீன வணிகர்களுக்கு மறுப்புத் தெரிவித்து 'மீண்டும் சீனர்களின் வேலை நிறுத்தம் நடந்தால் அதை அடக்கும் பொறுப்பையும், அதன் மூலம் கிளம்பும் விளைவுகளையும் நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்' என இந்நூலின் மூலம் மன்னர் எச்சரித்தார்.

மன்னர் ஆறும் இராமா தம்முடைய தனிப்பட்ட மெய்க்காவற் படையாக அச்சுறுத்தும் வேங்கைப் படைப் பிரிவு (Wild Tiger corps) ஒன்றை அமைத்தார். இப் படைப் பிரிவினர்க்குக் கூட்டுப் பொழுதுபோக்கு மனைகளையும் (Club House), படைப் பயிற்சி செய்ய நீண்ட பொது அறைகளையும் (Drill-hall), சீருடைகளையும்,

இரக்பீ காற்பந்தாட்ட (Rugby-Foot ball) வசதிகளையும் அளித்தார். இச் செய்கை மூலம் சியாமின் மற்றப் படை வீரர்களின் மனக்கசப்பிற்கு மன்னர் ஆளானூர். மன்னரை அரசியல் பதவியிலிருந்து நீக்க கி.பி. 1912, கி.பி. 1917ஆம் ஆண்டுகளில் முயற்சியெடுக்கப்பட்டது. சாரணச் சிறுவர் இயக்கம் (Boy Scout Movement) ஒன்றையும் சியாமில் அமைத்தார்.

சூலலொங்கோர்ன் நிருவாகச் சீர்திருத்தங்கள் செய்து புகழடைந்தார்; வஜிராவுத் சமூகச் சீர்திருத்தங்கள்மூலம் புகழ் தேடினூர். சியாமை மேலைநாட்டுக் கருத்துகளுடன் இணைக்கவும், அயல்நாடுகள் சியாமை ஏற்றுக்கொள்வதற்காகவுமே அவர் இச் சீர்திருத்தங்களைச் செய்ய முன் வந்தார்.

(1) ஒரு துணை மணம்தான் (Monogamy) புரிய வேண்டும் என்ற கட்டளையை விதித்தார்.

(2) பதின்மூன்றும் கிரகரியால் (போப்பாண்டவர்) திருத்தியமைக்கப்பட்ட ஆண்டுக் கணிப்பேட்டை (Gregorlan calendar) மேற்கொண்டார்.

(3) சூலலொங்கோர்ன் பல்கலைக் கழகத்தைக் கி.பி. 1917ஆம் ஆண்டில் அமைத்தார்.

(4) கட்டாயத் தொடக்கப் பள்ளித் திட்டத்தை (1921) அறிமுகப்படுத்தினூர். வஜிராவுப் பள்ளியை (Vajiravudh School) நிறுவினூர்.

(5) செஞ்சிலுவைச் சங்கத்தை (Red Cross Society) அமைத்தார்.

(6) அம்மை குத்துதலைக் கட்டாயப்படுத்தினூர்.

சூலலொங்கோர்னைப்போல ஆரும் இராமா அயல்நாட்டார் துணையுடன்தான் ஆட்சி புரிந்தார். நிதி, நீதி, வாணிப வேளாண்மை, உடல் நலம், நீர்ப்பாசனம் ஆகிய துறைகளில் பெரும்பான்மையான உயர் அதிகாரிகள் ஆங்கிலேய ஆலோசகர்கள் ஆவார்கள். சட்டமியற்றும் துறைகளில் பிரெஞ்சுக்காரர்கள் ஆலோசனையளித்தார்கள். பொது நலத் துறைகளில் இத்தாலியர்களும், அயல்நாட்டு விவகாரத்துறைகளில் அமெரிக்கர்களும் பணிபுரிந்தார்கள். முதல் உலகப் போரின்போது சியாமிலுள்ள ஜெர்மன் செல்வாக்கு ஒழிக்கப்பட்டது; போரின் இறுதிக் காலத்தில் அயல் நாட்டினர்களைப் பயன்படுத்துவது குறைக்கப்பட்டது. கி.பி.

1914ஆம் ஆண்டில் ஜெர்மனியிடம் சியாம் பரிவு காட்டியது; ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் சியாம் பகுதிகளைக் கவர்ந்து கொண்டதே இதன் காரணம் எனக் கூறலாம். ஆனால், நடுநிலைக் கொள்கைகளைப் பின்பற்ற மன்னர் தம் செல்வாக்கைப் பயன்படுத்தினார். கி.பி. 1917ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடியரசு உலகப்போரில் கடுமையாக இறங்கியவுடன், வெற்றியுடைய வர்கள் கட்சியிலே சேரும் தன் வழிவழி மரபு கொள்கையைச் சியாம் பின்பற்றியது. பிரான்சிற்கு ஆயிரம் ஆர்வப்படைவீரர் களைச் (Volunteer soldiers) சியாம் அரசாங்கம் அனுப்பியதால் அமைதி மாநாட்டில் (Peace conference) சியாமும் சிறிதளவு பங்குகொள்ள முடிந்தது.

ஏழாம் இராமா

கி.பி. 1925ஆம் ஆண்டில் ஆறும் இராமா இறந்தவுடன் அவருடைய இளைய உடன்பிறந்தவர் பிரசோதிபோக் (Prachothi pok) ஏழாம் இராமா என்ற பட்டப் பெயருடன் அரசப் பதவி யேற்றார். இவர் பரந்த மணப்பான்மையுடையவர்; பொறுப்புள்ள வர். புதுச் சட்டப்படி இவர் ஒரு துணை மணம்தான் (Monogamy) புரிந்துகொண்டார். ஆனால், இவர் ஒரு வலிமையில்லா அரசர்; தம்முடை கொள்கைகளைச் செயல்படுத்தும் திறமையில்லாவர். வெளி நாடுகளுடன், தம் ஆட்சியின்போது சியாமிற்கிருந்த உடன்படிக்கைகளைத் திருத்துவதில் இவர் சிறந்த பங்குகொள்ள வில்லை.

இவர் ஆட்சியின் போதுதான் நாட்டில் இரத்தம் சிந்தாத் திடீர்ப் புரட்சி வெற்றியோடு நிறைவேற்றப்பட்டது (இதைப் பற்றி அடுத்த அத்தியாயத்தில் விரிவாக வரையப்பட்டிருக்கிறது.) இப் புரட்சி முடியாட்சியைக் குழிதோண்டிப் புதைத்தது; அரசமைப்போடு இசைவான மக்களாட்சியை அமைக்க முனைந் தது. பெருஞ் சிறப்பு வாய்ந்த இப் புரட்சியை மன்னரே வரவேற்றார்; ஏனென்றால், மன்னரே சியாமில் அரசமைப்புக்கு இசைவான மக்களாட்சி வருவதை ஆதரித்தார். பரந்த மனப்பான்மையைத் தழுவி வரும் பாராளுமன்ற முறைகள் ஒரு நாட்டின் அடிப்படை உரிமைகள் என மன்னர் கருதினார்.

பதவியேறியவுடன் மன்னர் முதலாவதாகச் செயல்படுத்திய பெரிய திட்டம், நாட்டின் நிதி நிலைமையைச் சரியீடு செய்ததே. தேவையில்லாச் செலவுகள் (ஆறும் இராமா செய்ததைப் போன் றவை) துண்டிக்கப்பட்டன. பின்வரும் செயல்களை மன்னர் நிறைவேற்றினார்:

(1) மன்னர் செலவினப்பட்டி (Civil list) மூலம் அளிக்கப் பட்ட சலுகைகளும் (செலவுத் தொகை) அரச குடும்பச் செலவு களும் மிகவும் குறைக்கப்பட்டன.

(2) அரசு குடும்பத் துணையாள்கள் (Royal corps of pages) பத்தில் ஒரு பங்காகக் குறைக்கப்பட்டார்கள் (மூவாயிரத்திலிருந்து முந்நூருகக் குறைக்கப்பட்டார்கள்). இதனுல் உயர்குடி மக்களின் குழந்தைகளின் வேலைவாய்ப்புக் குறைந்தது; இவர்கள் தாம் பெரும்பான்மையாக இவ்வேலைகளைக் கைப்பற்றிக் கொண்டிருந் தார்கள்.

(3) மிகுதிப்படுத்தப்பட்ட சுங்கவரியுடன் அமைக்கப்பட்ட புது வாணிப உடன்படிக்கைகளை இவர் அறிவித்தார்.

(4) பெரும்பான்மையான 'வேங்கைப்படைப் பிரிவினர்கள்' வேலையிலிருந்து நீக்கப்பட்டதாலும், மற்றப் படை வீரர்களின் ஊதியம் குறைக்கப்பட்டதாலும், படைப் பிரிவினர்களிடையே மனக்கசப்பேற்பட்டது. படைத் துறையைச் சாராத அரசாங்க அலுவலர்களுக்கும் இதே நிலையேற்பட்டது. உதாரணமாக, மாவட்டங்கள் பதினெட்டிலிருந்து பத்தாகக் குறைக்கப்பட்டதால் பல உயர் பதவியிலிருந்த அதிகாரிகள் வேலை இழந்தார்கள்.

மன்னர் ஏழாம் இராமா ஓர் உயர் மன்றத்தை (High Council) அமைத்து, அதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட அரச குடும்பத்தினரின் ஆலோசனைப்படி ஆட்சிபுரிந்தார். ஆரும் இராமாவின் காலத்தில் செயலற்றுப்போன அமைச்சர் அவை யைத் தட்டியெழுப்பிச் செயலாற்றும்படிச் செய்தார். கி.பி. 1927ஆம் ஆண்டில் அரசரின் தனிப்பட்ட ஆய்வுரையாளர் குழு (Privy Council) ஒன்றை 40 உறுப்பினர்களுடன் அமைத்தார். தன்னுல் ஆய்வுக்காசு எடுத்துரைத்த விவகாரங்களை இக்குழு அலசியாராயவேண்டும்; சியாமில் அரசியலமைப்புக்கு இசைவான மக்களாட்சியை அமைப்பதா, தம்முடைய உயர் மன்ற ஆலோ சனையின்படி ஆட்சியமைப்பதா என்ற முரண்பாடான கருத்துச் சிக்கலுக்குள் அகப்பட்டுக் கொண்டு மனம் குழம்பித் தவித்தார்.

5. 1932ஆம் ஆண்டுப் புரட்சியும் அரசியல் அமைப்பும்

ஆரும் இராமா, ஏழாம் இராமா ஆகியவர்களது ஆட்சியின் போது மக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சியும், நாட்டுப்பற்றும் வளர்ந்தன. சிறப்பாக மேலைநாட்டுக் கல்வி முறையிலே பயின்ற

ஆளும் கட்சியினரிடையே இவ் விழிப்புணர்ச்சி ஓங்கியிருந்தது. கி.பி. 1930ஆம் ஆண்டில் வீழ்ச்சியுற்றிருந்த உலகப் பொருளா தாரச் சூழ்நிலையினுல் தாய் மக்களுக்குப் (Thai people) பல இன்னல்கள் விளைந்தன; மனக்கசப்பும், மனக்குறையும் அடைந்த மக்கள் ஒன்றுசேர்ந்து ஆட்சியைக் கைப்பற்ற முனைந்தனர்.

மன்னர் ஆட்சியின் மேலிருந்த மக்களின் நம்பிக்கை குறைந்து கொண்டே வந்தது. கி.பி. 1931ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் போர் அமைச்சருக்கும் (Minister of war) வாணிப அமைச்சருக்கு மிடையே (Minister of Commerce) நிதிபற்றி மூண்ட சண்டை ஓர் அரசியல் குழப்பமாக மாறியது. மேலும், படைத்துறையின ரிடையே மனக்குறை பரவலாக இருந்தது. பிறகு சூலலொங் கோர்ன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வந்த பிரைடி பாஞேம்யாங் (Pridi panomyong) தலைமையில் கி.பி. 1932ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24ஆம் நாள் புரட்சி வெற்றியுற நடந்தது. இவர் ஒரு புதிய அரசியல் சட்டதிட்டத்தை உருவாக் கினுர். மன்னர் ஜூன் மாதம் 26ஆம் நாள் அயல்நாட்டுப் பயணம் செய்துவிட்டுத் திரும்பிய பிறகு இப்புதிய அரசியல் சட்ட திட்டத்தை ஏற்றுக்கொண்டார்; மன்னிப்பளிக்கும் உரிமையைத் (Pardon) தவிர மற்ற எல்லா அதிகாரங்களும் மன்னரிடமிருந்து பறிக்கப்பட்டன.

சிறந்த புரட்சித் தலைவர்கள்

1. படைப் பகுதி முதல்வர் பாஹேன் பான்பாயு ஹசேஞ (Colonel Pahon Panpayu Hasena) பண்புகளை விரும்புபவர்; திடீர் அரசியல் புரட்சியில் கலந்துகொள்ளாதவர். பழைமைப் பற்றுளர் களின் ஆதரவை நாடும் எண்ணத்துடன் பிரைடியின் மக்கள் கட்சியில் (Peoples' party) பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2. பிரைடி பாஞேம் யாங் கி.பி. 1932ஆம் ஆண்டு திடீர்ப் புரட்சியின் தலைவர்; பிரான்சிலே சட்டப்படிப்புப் பயின்றவர்; தாய்-சீன இனக்கலப்பு மூலம் பிறந்தவர். கி.பி. 1928ஆம் ஆண்டில் பாங்காங்கில் சட்டக் கலைக்கழகத்தில் (Law Academy) விரிவுரையாளராகப் பணியாற்றியவர். படைத்துறையைச் சாராத அரச அலுவலர்களின் இடதுசாரிக் கட்சியின் தலைவர்; மார்க்ஸிஸக் கொள்கைகளில் ஆர்வமுள்ளவர். கி.பி. 1932ஆம் ஆண்டு இவருக்கு 30 வயது நிரம்பி யிருந்தது.

3. பீபுன் சொங்கிராம் (Phibun Songkram) பாதுகாப்புத் துறை அமைச்சர். கி.பி. 1938-44ஆம் ஆண்டுகளில் பிரதமராகப் பணியாற்றினுர் இவர்.

4. கூவாங் அபைவொங் (Khung Apaiwong) பிரைடி, பீபுனின் நெருங்கிய தோழர். கி.பி. 1944 ஆகஸ்டு மாதத்திலிருந்து கி.பி. 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டுவரை பிரதமராகப் பணியாற்றினார்.

திடீர்ப் புரட்சியின் காரண விளக்கம்

டி. ஈ. நியுசெடெர்லேன் (D. E. Neucheterlein) நான்கு காரணங்களைக் குறிப்பிடுகிறார் :—

1. மன்னர் பிரஜாதிபோக் (King Prajadhipok) வலிமைக் குறைவும், தளர்ச்சியும் உள்ளவர். பரந்த மனப்பான்மையுடைய இவர் மக்களாட்சியைச் சார்ந்த ஓர் அரசாங்கத்தை விரும்பினார்; ஆனால், தம்முடைய ஆலோசகர்களின் கருத்துகளையும் கவனிக்க வேண்டிய கட்டாயமேற்பட்டது. அவருடைய சமூகம், நிதி ஆகியவற்றின் சீர்திருத்தங்களை நோக்கினால், எல்லாத் துறை களிலும் அவர் வலிமைக் குறைவுடன் செயல்புரிந்தார் எனக் கூற முடியாது.

2. மன்னருடைய பொருளாதாரச் சீர்திருத்தங்கள் படைத் துறை அதிகாரிகளையும், படைத்துறையைச் சாராத அரசாங்க அலுவலர்களையும், மையக்குழு ஆட்சியையும் (Bureaucracy) மிகுதியாகப் பாதித்தது; அவர்களின் எண்ணிக்கை குறைக்கப் பட்டது. பதவி உயர்வு தாமதப்படுத்தப்பட்டது.

3. மன்னரின் 'அச்சுறுத்தும் வேங்கைப் படைப்பிரிவை' (Wild Tiger Corps) கலைத்ததால் படைத்துறை அதிகாரி களிடையே மனக்குறைவு நிலவிவந்தது.

4. சியாமின் அரசியல்-பொருளாதார அமைப்பைத் தற்காலப் பாணியில் அமைக்கக் கடுமையாக நோக்க உறுதியுடன் செயல்பட முனைந்த மேலைநாட்டுக் கல்வி முறையிலே பயின்ற இளைஞர்களின் குழாம்.

நியுசெடெர்லேன் கூறும் காரணங்களை டி. ஏ. வில்சன் (D. A. Wilson) கூறும் காரண விளக்கங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். 'மூன்று ஒருங்கு கூடுகிற இயக்கச் சாய்வே' இப்புரட்சிக்குக் காரணம் என வில்சன் கூறுகிறார் :—

1. மேலைநாட்டு மக்களாட்சித் தொடர்புடைய கருத்துகள் பரவியதால் முடியாட்சியின் மதிப்புக் குறையத் தொடங்கியது; மன்னர் தம்முடைய உரிமைக் கோரிக்கைகளின் கண்டிப்பைத் தளர்த்தியது.

2. அரசகுடும்பத் தனியாட்சி அதிகார உரிமைகளைக் கடுஞ் சின மனக்கசப்புடன் எதிர்க்கும் வாழ்க்கைத் தொழிலாளர்கள் (Professional Class).

3. உலகப் பொருளாதாரத்தின் வீழ்ச்சியினாலும், முன்பு பணம் செலவழித்ததாலும் மிகவும் வீழ்ச்சியடைந்த நிதிச் சூழ்நிலை.

1932ஆம் ஆண்டுப் புரட்சி சக்ரீவம்சத்தாரின் ஆட்சியைக் குழிதோண்டிப் புதைத்தது. தொடக்கத்தில் அறிவித்ததற்கு மேல் மிகுதியான ஆட்சி அதிகாரங்கள் ஏழாம் இராமாவுக்கு அளிக்கப்பட்டன; ஆனால் மக்கள் கட்சி அரசாங்கமே படிப்படியாக முடியாட்சியாக மாறியது. இக் கட்சிக்குள் அடிக்கடி சண்டை மூண்டது. பல திடீர்ப் புரட்சிகள் செய்யப்பட்டன.

அரசியலமைப்புக்கு இசைவான ஆட்சி அமைத்தல் (The Establishment of Constitutional Government)

ஐரோப்பிய முற்போக்குக் கொள்கைகளைப் பின்பற்றும் நாடுகளிலிருந்த அரசியலமைப்பு ஆட்சியைப் போல மேலை நாடுகளில் கல்வி பயின்ற இளைஞர்கள் சியாமிலும் அமைக்க விரும்பியதால் தான் புரட்சியேற்பட்டது. ஆனால், அவர்களுடைய பிற்கால நடவடிக்கைகளை நோக்கினால் உண்மையான குடியாட்சியை அமைக்கும் நோக்கம் அவர்களுக்கில்லையெனத் தெரிகிறது. மன்னருடைய தன் முனைப்பாட்சியையும் (Autocracy), இளவரசர்களின் அரசாங்கச் செல்வாக்கையும் ஒழிப்பதே அவர்களின் சிறந்த நோக்கம்.

மக்கள் கட்சியிலுள்ள இடதுசாரிப் பிரிவினரின் தலைவராக இயங்கிவந்தவர், திடீர் அரசியல் புரட்சியைச் செய்த பிரைடி பானோம்யாங். இக்கட்சியிலுள்ள பழைமைப் பற்றுளர்களின் தலைவர்களாக இருந்தவர்கள் படைப்பகுதி முதல்வர் பாஹோன் பான்பாயு ஹசேனா, படைப்பகுதி முதல்வர் ஷோங் சூராதெட் (Song Suradet) ஆவர். கி.பி. 1932ஆம் ஆண்டுப் புரட்சியில் சிறந்த பங்கெடுக்கவில்லையென்றாலும், பிற்காலத்தில் மக்கள் கட்சியின் செல்வாக்கை மிகுந்த அளவில் பெற்றவர் பீபுன் சொங்கிராம். மேலைநாட்டிலிருந்த மக்களாட்சி அரசியல் அமைப்பைப்போல சியாமில் அமைக்க இராணுவப் பிரிவினர் விரும்பவில்லை; உண்மையில், வலிமையுள்ள முடியாட்சியைத்தான் இவர்கள் விரும்பினார்கள். ஆனாலும், அரச குடும்பத்தினர்களிடம் இருந்த உயர்பதவிகளைப் பார்த்துப் பொறாமையடைந்ததால் இராணுவப் பிரிவினர் புரட்சியை ஆதரித்தனர். முன்பு அரச

குடும்பத்தினர்களிடமிருந்த பதவிகள் இவர்களுக்குக் கிடைத்தவுடன் இவர்கள் வேறு வகையான மாறுதல்களை வரவேற்கவில்லை.

பிரைடி மனக்கசப்புற்ருர்; படைப் பிரிவினர்களின் உதவி இவருக்குத் தேவையாயிருந்தது ஆகையால், காலங்கடத்தத் தயாராயிருந்தார். இதற்கிடையிலே பழைமைப் பற்ருளர்களை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்ததால் அவர்களையே ஒரு புதிய நிலையான அரசியல் சட்ட திட்டத்தை உருவாக்கும்படிக் கேட்டுக் கொண்டார். மேலும், கடுமையான மாறுதல்கள் உண்டாக்கினுல் அயல்நாடுகள் வரவேற்கா; இதனையே ஒரு சாக்குப் போக்காக வைத்துக்கொண்டு தாய் உள்நாட்டு (Thailand) விவகாரங்களில் தலையிட இந்நாடுகள் முன்வந்தாலும் வரும் என அஞ்சினுர். இறுதியில் ஓர் ஒற்றுமைக் கருத்து, நடுநிலையுடைய அரசியல் சட்டதிட்டம் கி.பி. 1932ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் நாள் வெளியிடப்பட்டது. மக்கள் கட்சியிலுள்ள பரந்த மனப்பான்மையுடைய இளைஞர்களின் கருத்துகளும், மன்னரின் முற்போக்கில்லாக் கொள்கைகளும், படைத்துறையிலிருந்த பழைமைப் பற்ருளர்களின் நோக்கங்களும் ஒற்றுமை இணக்கத்துடன் இவ்வரசியல் சட்ட திட்டத்தில் ஒரு சேரக் கலக்கப்பட்டன. ஆனுலும் இதை ஒரு பழைமை பேணும் கருத்துகளடங்கிய அரசியல் சட்டதிட்டமென அழைக்கலாம்; தற்பொழுதைக்கான அரசியல் சட்டதிட்டத்தை விட இவ்வரசியல் சட்டதிட்டம் மன்னருக்கு மிகுந்த அதிகாரங்கள் அளித்தது.

இவ்வரசியல் சட்டதிட்டத்தைப் பின்பற்றி ஆட்சி புரிய மன்னரை அழைத்தார்கள். மன்னருடைய வரம்பற்ற ஆட்சி முடிவடைந்தது என இவ்வரசியல் சட்டதிட்டம் அறிவித்தது. திடீர்ப் புரட்சி செய்த மக்கள் கட்சியிடம் கி.பி. 1932ஆம் ஆண்டு சட்ட திட்டத்தைப் பின்பற்றி ஓர் அரசியல் அமைப்பை உருவாக்கும்வரை, தாற்காலிகமாக ஆட்சி அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.

கி.பி. 1942ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அரசியல் சட்ட திட்டத்தின் சிறப்பான பகுதிகள்

மக்கள் கட்சியின் மக்கள்நல நோக்கமுள்ள ஆறு கொள்கைகள் இவ்வரசியல் சட்டதிட்டத்தில் ஒருங்குதிரட்டிச் சேர்க்கப்பட்டன. இதுவே வருங்காலத் தாய் அரசாங்கத்தின் கொள்கையாதலால் இதைப்பற்றிக் கீழே குறிப்பிடப்பட்டிருக்கிறது :

1. அரசியல், சட்ட, வாணிப விவகாரங்களில் எல்லாத் தாய்க் குடி மக்களுக்கும் உரிமையும் பொதுமையும் அளிக்கப்பட்டன.

2. உள்நாட்டுச் சட்டமும், ஒழுங்கும்.

3. பொருளாதார நலன்கள்; ஒரு திறமையுள்ள பொருளாதாரத் திட்ட மூலம் மக்களுக்கு வேலை வாய்ப்பளிப்பது.

4. எல்லா வகுப்பினருக்கும் பொதுவான சலுகைகள் அளிக்கப்படும்.

5. முதல் நான்கு கொள்கைகளை மீறுமல் நடந்தால் எல்லோருக்கும் உரிமையும், ஆட்சித் தனியுரிமையும் (Liberty) அளிக்கப்படும்.

6. எல்லோருக்கும் கல்வியயிலும் உரிமையும், வாய்ப்பும் அளிக்கப்படும்.

ஒரு நாடாளுமன்ற அரசாங்கம் அமைக்கப்படும்; ஒரு சட்ட அமைப்பும் அதற்குப் பதிலளிக்கக் கடமைப் பட்டிருக்கிற அமைச்சரவையும் அமைக்கப்படும். ஆனல், இச்சட்ட சபையில் பாதி உறுப்பினர்கள் மன்னரால் நியமனஞ் செய்யப்படுவார்கள். அவர்கள் குறைந்தது நான்கு ஆண்டுகள் பணி புரியலாம்; ஆனல், பத்தாண்டுகளுக்குமேல் அவர்களுடைய பதவி நீக்கப்படமாட்டாது. இவ்வாறன ஆட்சி அமைப்பின் அனுபவம் மக்களிடையே யில்லாததால், இத்தகைய பாதுகாப்புக்குட்பட்ட நிலை, சிலகாலம் தேவை எனக் கருதினர்கள். ஆகையால், வரம்பற்ற ஆட்சி அமைப்பிலிருந்து மக்கள் ஆட்சி அமைப்பு முறையை இன்னல்களில்லாமல் அடையலாம்.

மன்னரும், சட்டசபையும் கலந்தாலோசித்து அமைச்சரவை உறுப்பினர்களை நியமிப்பார்கள்.

மன்னரின் அதிகாரங்கள்

1. அமைச்சரவை ஏற்றுக் கொள்ளாவிட்டால்கூட மன்னர் சட்டசபையைக் கலைக்கலாம். ஆனல், சட்டசபையைக் கலைத்த மூன்று மாதங்களுக்குள் ஒரு பொதுத் தேர்தல் நடத்தி மீண்டும் சட்ட சபையைக் கூட்ட வேண்டும்.

2. எச்சட்டத்தின் மேலும் மன்னர் மறுப்பு ஆணையைச் செலுத்தலாம். ஆனல், மன்னரின் மறுப்பு ஆணையைச் சட்டசபை தள்ளி வைக்கலாம்; அவ்வாறு செய்தால் சட்டம் செல்லுபடியாகும்.

3. மன்னிப்பளிக்கும் உரிமை மன்னருக்கு அளிக்கப்பட்டது.

4. மன்னர் நெருக்கடிநிலை வெளியிடலாம்; ஆனால், இதில் ஓர் அமைச்சராவது கையொப்பமிட வேண்டும்.

சில மாதங்களுக்குள் பிரைடியின் பொருளாதாரத் திட்டம் பற்றிப் பிரைடியின் மார்க்ஸிஸப் பிரிவினர்களுக்கும், பிரதமர் பியா மனோபககோர்ன் (1932—33) பழைமை பேணும் பிரிவினர் களுக்கும் இடையே சண்டை மூண்டு பிளவேற்பட்டது.

கி.பி. 1933ஆம் ஆண்டுப் பொருளாதாரத் திட்டம்

நாட்டை வலுப்படுத்தும் நோக்கத்துடன் ஒரு பொருளாதாரத் திட்டத்தைப் பேராசிரியர் பிரைடி ஆய்வுக்காக எடுத்துரைத்தார். இத் திட்டத்தின் நோக்கம் நாட்டின் நிலங்கள் உட்பட, உற்பத்திப் பொருள் வழிவகைகளை, அரசாங்கத்தின் தனியுரிமையின்கீழ்க் கொண்டு வரவேண்டும் என்பது. நாட்டுடைமையாக்கப்பட்ட பொருள்களின் உரிமையாளர்களுக்கு அரசியல் கடனீட்டுப் பத்திரம் மூலம் இழப்பீட்டுத் தொகையளிக்கப்படும். திட்டம் தனியாள்களின் உரிமையைக் கட்டுப்படுத்தினாலும், எல்லா மக்களுக்கும் பொருளா தார நன்மைகளை அளிக்கும், இம்முறையைப் பின்பற்றிப் பழைமைப் பற்றுளர் பியா மனோபககோர்னிடமிருந்து ஆட்சித் தலைமையைக் கைப்பற்றிவிடலாம் எனப் பிரைடி நினைத்தார். இதன் விளைவாகப் பியாமனோபககோர்னின் அமைச்சரவைக்கும், பிரைடியை ஆதரித்த சட்டசபைக்கும் சண்டை மூண்டது. மக்கள் கட்சியில் பிளவு ஏற்பட்டது.

பிரைடியின் பொருளாதாரத் திட்டத்திற்கு மன்னர் மறுப்பைத் தெரிவித்தார். சட்டசபை தொடர்ந்து கூடுவதை நிறுத்திவிடப் பியாமனோபககோர்ன் மன்னரைத் தூண்டினார்; அமைச்சரவை யைப் பற்றி ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சட்ட அவை நிறைவேற்றிவிடுமோ என்று அச்சமுற்றார். ஆகையால், பியா மனோபககோர்னின் ஆலோசனைப்படி மன்னர் சட்டசபையைக் கலைக்கும்படிக் கி.பி. 1933ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் நாள் அறிக் கை வெளியிட்டார் மனோபககோர்னுக்கு முழு அதிகாரங்களையும் அளித்தார். பிரைடி ஒரு பெருங் கம்யூனிஸ்டு என அறிவித்துப் படைப் பகுதி முதல்வர் பாஹோன் உதவியுடன் படைத்துறையின் ஆதரவை மனோபககோர்ன் பெற்றார். பிரைடியை ஒழிப்பதில் மனோபககோர்ன் மும்முரமாக ஈடுபட்டார். ஆகையால், கி.பி. 1933ஆம் ஆண்டு ஏப்ரலுக்குள் பழைமைப் பற்றுளர் வகுப்பினர் அரசியல் மேடையில் நடந்த தலைமைப் போட்டியில் வெற்றி யுடைந்தார்கள்,

பின்வரும் கட்டுப்பாடுகளை மனோபகோரின் செயல் படுத்தினார்:

(1) சட்டசபை தொடர்ந்து கூடத் தாற்காலிகமாக அனுமதியளிக்கப்பட மாட்டாது.

(2) செய்தித்தாள்களின் உரிமை வரையறுக்கப்படும். தமக்கு மறுப்பைத் தெரிவித்ததால் பல செய்தித்தாள்களின் அலுவலகங்களைக் கூட மூடினார்.

(3) கம்யூனிஸ்களை ஒழிக்கும் சட்டம் அமலுக்கு வந்தது; இச் சட்டப்படி பத்தாண்டுச் சிறை தண்டனையளிக்கலாம்.

(4) பிரைடியின் பொருளாதாரத்தைப்பற்றிப் பேச்சு நடத்தும் உரிமை பறிக்கப்பட்டது.

(5) அரசியல் கட்சிகளைத் தொடங்கக்கூடாது எனத் தடை உத்தரவு போடப்பட்டது.

மனோபகோர்னின் இரண்டு மாத ஆட்சிக்குப்பின் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது; மனோபகோர்னும், அவரை ஆதரித்தவர்களும் கைது செய்யப்பட்டார்கள்; போர்க்காலச் சட்டம் அமைக்கப்பட்டது. சட்டசபயை மீண்டும் அமைக்கும் நோக்கத்துடன் படைத்துறையும், கடற்படைத்துறையும் திடீர்ப் புரட்சி செய்தன. மன்னரிடம் எப்பொழுதும் மரியாதையும், நம்பிக்கையும் உடையது படைத்துறை எனப் படைப்பகுதி முதல்வர் பாஹோன் மன்னரிடம் தெரிவித்தார்.

பிரைடியை மீண்டும் அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு பாஹோனை வற்புறுத்தினார்கள்.

இளவரசர் போவோரதெட்டின் (Prince Boworadet) திடீர் அரசியல் புரட்சி முயற்சி

முடியாட்சியை முன்பிருந்த அதிகாரங்களுடன் அமைக்க இறுதி முறையாகக் கி.பி. 1933ஆம் ஆண்டில் அக்டோபர் மாதம் முடியரசுக் கோட்பாளர்கள் முயன்றார்கள். முன்பு பாதுகாப்பு அமைச்சராகப் பணியாற்றிய இளவரசர் போவோரதெட்டு மாநிலப் படைத் தலைவர்களையும், முடியாட்சியை ஆதரித்த படைத்துறையைச் சாராத அரச அலுவலர்களையும் பாஹோன் அரசாங்கத்திற்கெதிராகக் கலகம் செய்யத் தூண்டினார். கோரட்டிலிருந்து (Korat) அணிவகுத்துத் தளராது முன்னேறினார்; பாங்காக் அருகில் தான் போவோரதெட்டு மேலே செல்ல முடியாமல் தடுத்து நிறுத்

தப்பட்டார். புரட்சியின் மெய்க்கருத்தைக் கட்டுமீறி நடத்திய தாலும், மக்களாட்சி அமைக்கிறோம் என மக்களிடம் கூறி நிறை வேற்றுமல் மக்களை ஏமாற்றியதாலும் இராணுவச் சிலவராட்சியைத் (Military Oligarchy) தூக்கியெறியவேண்டும் என்பதே தம் நோக்கம் எனப் பேவோரதெட்டு அறிவித்தார்.

கி.பி. 1933ஆம் ஆண்டு அக்டோபரில், பாஹோனின் படை முடியரசுக் கோட்பாளர்களின் திடீர் அரசியல் புரட்சியை அடக்கி ஒழித்தது. இதனுல், திடீரென்று பொதுமக்கள் மேலும் படை வீரர் களின் ஆதரவைப் படைப்பகுதி முதல்வர் பூபுன்சொங்கிராம் பெற்றுர். இத் திடீர்ப் புரட்சிக்கு மக்களின் ஆதரவு கிடைக்காத தால் வரம்பற்ற முடியாட்சி முறையை மக்கள் விரும்பவில்லை எனத் தெரிந்தது. படையிலுள்ள பழைமைப் பற்றுளர்களும் தம்முடன் கலந்து கொண்டு நகரங்களில் கிளர்ச்சி செய்வார்கள் என இளவரசர் தவருக எடைபோட்டார். இளவரசரின் திடீர்ப் புரட்சி ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என மன்னர் அறிவித்தபோதிலும் அவர் இளவரசரது திடீர்ப் புரட்சியின் வெற்றியை விரும்பினுர் எனப் பலர் ஐயுற்றுர்கள்.

கி.பி. 1933ஆம் ஆண்டுத் தேர்தல்

முடியாட்சிக் கோட்பாடுடையவர்களின் கலகம் அடக்கப்பட்ட வுடன், உடனடியாகச் சியாமின் முதல் பொதுத் தேர்தல் நடக்கப் பிரதமர் பாஹோன் அனுமதித்தார். சட்டசபைக்கு 78 உறுப்பி னர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். (1932லிருந்து மேலும் எட்டு இடங்கள் மிகுதியாக்கப்பட்டன).

மக்களின் மறுமொழி அரைகுறை ஆர்வம்தான் எனக் குறிப் பிடலாம். மக்களாட்சித் தேர்தல்களைப் பற்றிய படபடப்பு பெரும்பான்மையோருக்குப் புரியவில்லை. மொத்த வாக்காளர்கள் 4,278,231; ஆனுல் வாக்களித்தவர்கள் 1,773,532 பேர்கள்தாம். மறைமுகமான வாக்களிப்புமுறை பின்பற்றப்பட்டது. முதலில் கிராமப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தங்கள் கிராம மக்கள் சார்பாக இக் கிராமப் பிரதிநிதிகள் வாக்களித்துச் சட்ட சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். சியாம் மக்களாட்சி வழியில் பயணம் செய்யத் தொடங்கியது. திறமையானவர்கள் தாம் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். வழக்கு ரைஞர்களும், ஊழியத்திலிருந்து ஓய்வுபெற்ற அதிகாரிகளும், நியமனஞ் செய்யப்பட்ட இராணுவ அதிகாரிகளும் சட்டசபை உறுப்பினர்களாகச் சேர்ந்தார்கள்.

பிரஜாதிபோக் முடி துறப்பு (கி.பி. 1935 மார்ச்சு)

கண் அறுவை மருத்துவச் சிகிச்சைக்காகக் கி.பி. 1934ஆம் ஆண்டு சனவரி மாதம் மன்னர் பிரஜாதிபோக் இங்கிலாந்திற்குச் சென்றார். பிரான்சில் சில காலம் தங்கிவிட்டுக் கி.பி. 1934 ஏப்ரல் மாதம் இலண்டனுக்கு வந்தார்.

சியாமிலுள்ள அரசாங்கத்திற்கும் மன்னருக்கும் அதிகக் கருத்து வேறுபாடுகளிருந்தன. தாய் அரசாங்கம் (Thai Government) ஓர் இராணுவப் பிரிவின் சில ஊராட்சி என, இளவரசர் போவோர தெட் போல, இவரும் கருதினார். மக்களாட்சி முறையில் முன்னேறவில்லை எனமறுப்பைத் தெரிவித்தார். ஆகையால், கி.பி. 1935ஆம் ஆண்டு பிப்ரவரியில் முடிதுறக்கத் தீர்மானித்தார். கி.பி. 1935ஆம் ஆண்டு மார்ச்ச மாதம் சடங்கு முறைப்படி முடி துறந்தார்; தம் இறுதிக் காலத்தை இங்கிலாந்திலே கழித்தார்.

மன்னருடைய முடிதுறக்கும் அறிக்கையின் ஒரு பகுதி

'எல்லா மக்களிடையேயும் என் ஆட்சி அதிகாரத்தை மாற்றியளிப்பது எனக்கு மகிழ்ச்சி. ஒரு தனியார்க்கோ, ஒரு பிரிவினருக்கோ மக்களுடைய கருத்துகளைக் கேட்காமல் தம் விருப்பப்படி ஆட்சி அதிகாரங்களை அளிக்க நான் விரும்பவில்லை. என்னுடைய அரசப்பதவிச் சலுகைகளையெல்லாம் துறந்துவிட விரும்புகிறேன். ஆனால், நான் அரசராகப் பதவியேற்குமுன் எனக்கிருந்த சலுகைகளையெல்லாம் நான் தொடர்ந்து நீடித்து வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். சட்டப்படி எனக்குப்பின் யார் ஆட்சிக்கு வரவேண்டும் என்று கூற எனக்கு உரிமையிருக்கிறதென்றாலும், நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. மேலும், என்னை ஆதரித்து (தற்பொழுதிருக்கும்) அரசாங்கத்திற்கெதிராகச் சியாமில் யாரும் கிளர்ச்சி செய்வதில் நான் அக்கறை காட்டவில்லை. அப்படி ஏதாவது கலகம் மூண்டால் நான்தான் அதைத் தூண்டிவிட்டேன் என நினைக்காதீர்கள்; அத்தகைய கலகத்திம் எனக்குப் பங்கு கிடையாது. நான் அதை ஏற்றதாகவும் கருதவில்லை.'

ஸ்விட்ஸர்லாந்திலிருந்து பிரஜாதிபோக்கின் உடன் பிறந்தார் மகனை (Nephew) இளவரசர் அனந்த மஹிதான் (Prince Ananta Mahidon) எட்டாம் இராமா என்ற பட்டப் பெயருடன் மன்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உள்நாட்டு வளர்ச்சியில் அரசாங்கம் கவனம் செலுத்தியது.

சியாம் அரசாங்கம், கி.பி. 1933-1938

கி.பி. 1933 முதல் கி.பி. 1938ஆம் ஆண்டுவரை சியாம் அரசாங்கத்தின் தலைவராக மக்களின் செல்வாக்குப் பெற்றவரும், தந்திரமுள்ளவருமான பாயா பாஹோல் (Phyapahol) பணி புரிந்தார். நோயினால் பீடிக்கப்பட்டு ஓய்வு எடுக்கும் காலம் வரை, போட்டியிடும் வகுப்பினரிடையே ஒற்றுமையுணர்ச்சியை உருவாக்கினார். அமைச்சரவையில் படைப் பிரிவினர்களின் செல்வாக்குத் தொடர்ந்து நீடித்தது; கி.பி. 1937ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபையும் படைத்துறையின் செல்வாக்கை மதித்து நடந்தது. அரசியலிலே அரச குடும்பத்தினரின் செல்வாக்கிருப்பதை அரசாங்கம் எதிர்த்தது; வழிவழி மரபு பட்டப் பெயர்களின் ஆறு மதிப்புப் படிநிலைகள் சட்டப்படி நீக்கப்பட்டன. நிலவரியும், தலைவரியும் (Capitation) ஒழிக்கப்பட்டன; பெயரளவில் ஒரு விழுக்காடு வருமான வரியும், 2 விழுக்காடு வாணிப வரியும் விதிக்கப்பட்டன. அபினி விற்பனை, சுங்கவரிக் கட்டணம், வெளிப் பொருள் வாணிக இணக்க ஆணை, தண்டனை ஆகியவற்றின் மூலம் எப்பொழுதும்போல அரசாங்கத்திற்கு வருமானம் கிடைத்தது. சீனர்கள் நடுநிலைமையின்றி நடத்தப்பட்டார்கள். வருமானம், வாணிபம், வங்கி நிருவாகம், கேலிக்கூத்து ஆகியவற்றிற்குரிய வரிகள் அவர்களுக்கு மிகுதியாக விதிக்கப்பட்டன. குறிப்பிட்ட 26 தொழில்கள் சியாம் மக்களுக்கென்று தனியாக ஒதுக்கப்பட்டன; சீனர்கள் இத்தொழில்களில் நுழைவதைத் தடுக்கப் பள்ளிகளில் சீன மொழி மூலம் கற்பிப்பதும் தடை செய்யப்பட்டது. சியாம் குடி உரிமையை வாங்கி இத் தடைகளினின்றும் தப்பித்துக் கொள்ளலாம் எனச் சீனர்கள் நினைத்தார்கள். ஆனால், அரசாங்கம் குடியுரிமையளிக்கக் கட்டுப்பாடுகளைப் பெருக்கியது. படிப்பு, செல்வம், படைத் துறைப்பணிபோன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. கி.பி. 1940ஆம் ஆண்டுக்குப்பின் ஜப்பானியர்கள் சீன-எதிர்ப்பு உணர்ச்சிகளை விசிறிக் கிளறி விட்டார்கள்.

வாணிக நடவடிக்கைகளில் மிகச் சுறுசுறுப்புடன் அரசாங்கம் இறங்கியது. காகிதத் தொழிற்சாலைகளிலும், நெசவாக்கத் தொழில்களிலும், வடிமனை (Distillery), சர்க்கரை, புகையிலை பதனஞ்செய்வதிலும், எண்ணெய் தெளிவாக்குதல், பட்டு உற்பத்தி செய்தல் முதலியதொழில்களிலும் அரசாங்கம் மும்முரமாக ஈடுபட்டது. திறமையில்லா நிருவாகத்தாலும், கணக்கு விவரத்தைச் சரியாகக் கவனிக்காததாலும், ஒழுங்கற்ற செய்பொருள் ஆக்க அளவாலும், குறைபாடுடைய சரக்கின் தரத்தாலும் அரசாங்கத்திற்குப் பயன் மிகக்

குறைவாகவே ஏற்பட்டது. புகையிலை பதனஞ் செய்வதுபோன்ற தனித்துறைகளில்தான் அரசாங்கத்திற்குப் பயன் கிடைத்த. கி.பி. 1934ஆம் ஆண்டுக்குப்பின் இரப்பர் உற்பத்தி மூலம் அரசாங்கத்திற்குப் பயன் கிடைத்தது. ஐரோப்பிய ஆலோசகர் உதவியுடன் முன்பு அமைக்கப்பட்ட அரசாங்கப் புகைவண்டித்துறை, தந்தி, மின்-இயக்காற்றல் துறை முதலியவை ஓரளவு திறமையுடன் நடத்தப்பட்டன. ஐரோப்பிய ஆலோசகர்களைப் பயன்படுத்துவது மிகவும் குறைக்கப்பட்டது.

மற்றத் தென்கிழக்காசிய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், சியாமின் நாட்டு உணர்ச்சி வேறுவிதமாய் ஐயத்துக்கிடமற்ற தன்னுறுதியுடையதாகவும், தனித்தலைமை நோக்கமுடையதாகவும் இருந்தது. மேற்கு ஐரோப்பியர்கள், அமெரிக்கர்கள் முதலியவர்தம் உதவியுடன் நாட்டின் சட்டமுறை அரசியல் அமைப்பு, பொருளாதார அமைப்பு ஆகியவற்றைப் புதுமைப் பாங்கில் உருவாக்கியதால் ஒரு கட்சி ஆட்சி, தொழிற்சாலையை நாட்டுடைமையாக்குதல், ஜப்பானிய முறையைப் பின்பற்றிய ஆட்சிக்கொள்கையுடைய அரசியல் அமைப்புப்போன்ற புதுமைக் கருத்துகளையும் கி.பி. 1930ஆம் ஆண்டில் பயன்படுத்தச் சியாம்விரும்பியது.

பீபுன் சொங்கிராமும், தாய்லாந்தின் ஆட்சி வல்லாண்மை முறைமைத் தொடர்பிணைவும்

கி.பி. 1938ஆம் ஆண்டில் பிரதமர் பாஹோல் நோயுற்றதால், பதவியைத் துறந்தார். ஆகையால், படைப்பகுதி முதல்வர் பீபுன் சொங்கிராம், படைத் துறையைச் சார்ந்த சட்டசபையினுல் பிரதமராக நியமிக்கப்பட்டார். பிரைடியும் மற்றும் படைத்துறையைச் சாராத அரசாங்க அலுவலர்களும் அமைச்சரவையில் தொடர்ந்து நீடித்துச் சில காலம் பணிபுரிந்தார்கள். ஆனல், படைத்துறையின் கண்காணிப்பின் கீழேதான் அமைச்சரவை பணியாற்றியது. புகழையும், வருமானங்களையும், ஆளுநர் பதவிகளையும் பறிக்க விரும்பும் ஒரு படைத்துறை வகுப்பினர்களின் தலைவராகப் பீபுன் இருந்தார். பீபுனைப் படுகொலை செய்ய முயன்றதால் கி.பி. 1938ஆம் ஆண்டின் இறுதியில் இவ் வகுப்பினர் தங்கள் அரசியல் எதிரிகளின்மேல் வஞ்சம் தீர்த்துக் கொண்டார்கள். பீபுனே ஓர் அரசியல் பச்சோந்தி; பகட்டான அவாவுடையவர்; கிளர்ச்சி செய்யும் போர் மனப்பான்மையுடையவர்; புதுமைப் பாங்கை விரும்புபவர். குடும்பப் பெயர்களை வைத்துக்கொள்ளுதல், தொப்பியும் புதையடியும் அணிதல், ஆங்கிலமொழி அகவுக்குரல் வணக்கமுறையைப்

('Hello') பின்பற்றுதல், அயல்நாட்டார்கள் போல் கடுமையாக உழைத்தல் போன்ற மேலைநாட்டு முறைகளை மற்றவர்களும் பின்பற்ற வேண்டும் எனப் பித்துப் பிடித்துத் தம் கருத்தைப் பரப்பினர். சியாமியரின் இனப்பண்பாடுகளிலும் இறுமாப்பிருக்க வேண்டுமென வலியுறுத்தினர்; புத்தசமய உணர்ச்சியும், நாட்டு உணர்ச்சியும் ஒன்றே என ஆர்வத்துடன் கருதினர். முன் பிருந்ததைப்போல் சீனர்களை எதிர்க்கும் உணர்ச்சியை ஆதரித் தார். சியாமில் அயல்நாட்டு மொழிகள் பேசும் இனத்தார்கள் சியாமுடன் ஒருசேரக் கலக்கும் முழுமையாக்கு தாய் இயக் கத்தைத் (Pan-Thai Movement) தொடங்கினர். தம்முடைய தனித் தலைமை அவாவைத் தெரிவிக்கும் நோக்கத்துடன் கி.பி. 1939ஆம் ஆண்டில் சியாம் நாட்டின் பெயரை மாற்றித் தாய்லாந்து என அழைத்தார். தாய்லாந்தென்றால் தாய்மக்கள் வாழும் நாடு (Land of the Thai or Muang Thai)எனப்பொருள்.கி.பி. 1940ஆம் ஆண்டிலிருந்து ஜப்பானியப் பாதுகாப்புடன் சீன-எதிர்ப்புக் கொள்கையையும், நாட்டின் ஆட்சிப் பரப்பினை விரிவாக்க வேண்டுமென்ற கோட்பாட்டையும் செயல்படுத்த முயன்றார்.

கம்போடிய எல்லையிலிருந்த பல மாகாணங்களையும், மேகாங் கிற்கு அப்பாலுள்ள பகுதிகளையும், பர்மாவின் கிழக்குப் பகுதிகளிலிருந்த ஷான் (Shan) நாடுகளையும், தென்னுசரிம் கடற்கரைப் பகுதிகளையும், தாய்லாந்திடமிருந்து பறிக்கப்பட்ட மலேய் நாட்டுப் பகுதிகளையும், பினங் தீவையும் மீண்டும் கைப் பற்ற வேண்டும் எனத் திட்டமிட்டார். ஆங்கிலேயர்களிடமிருந்த பகுதிகளைக் கைப்பற்றச் செய்த கிளர்ச்சிகளைக் காலமறிந்து செயலாற்றினர்; ஆனால், பிரான்சின் அதிகாரம் மங்கிக்கொண்டு வந்ததால் பிரான்சிடமிருந்த பகுதிகளைக் கைப்பற்றச் செய்த கிளர்ச்சிகளை முன்னெச்சரிக்கையுடன் செய்ய முயற்சி யெடுக்க வில்லை. கி.பி. 1939—1941ஆம் ஆண்டுகளில் தாய்லாந்திலிருந்த அயல்நாட்டு ஆலோசகர்களைப் பதவியிலிருந்து நீக்கி, இராணு வத்தை வலுப்படுத்துவதற்காக நாட்டின் மூன்றில் ஒரு பங்கு வரு மானத்தைச் செலவழித்தார். கி.பி. 1940ஆம் ஆண்டில் பிரான்சு தளர்ந்து வீழ்ந்தவுடன், கி.பி. 1926ஆம் ஆண்டின் உடன்படிக் கையைச் சிறிதளவு ஹநாய் அதிகாரிகள் மாற்றியமைக்கும்படிச் செய்தார். பிறகு கம்போடியா எல்லைவரையிலுள்ள லாவோஸ் முழுவதும், கம்போடியாவின் மூன்று மாகாணங்களும் தாய்லாந் தின் பகுதி என உரிமைக் கோரிக்கை வெளியிட்டார். கி.பி. 1941ஆம் ஆண்டில் ஜப்பானிய நடுவர் தீர்ப்பின் முடிவுப்படி

(Japanese Arbitration Awards) இப்பகுதிகளை உண்மையாகவே கைப்பற்றினர்.

நிகழ்ச்சிகளின் விலக்கமுடியா நிலைப்படிதான் தாய்லாந்து ஜப்பானுடன் நெருங்கித் தொடர்பு கொண்டதை விளக்கமுடியும். கி.பி. 1930ஆம் ஆண்டில் தாய்லாந்துடனுள்ள ஜப்பானிய வாணிபம் பெருகியது; ஆகையால், பிரிட்டனுக்கு அடுத்தபடியாக ஜப்பான்தான் தாய்லாந்துடன் மிக்க அளவில் வாணிபம் செய்தது. மஞ்சூரியா விவகாரம்பற்றிப் பன்னாட்டு மன்றத்தில் (League of Nations) கி.பி. 1933ஆம் ஆண்டில் ஜப்பானைப் பழித்து மறுப்புத் தெரிவித்தபோது சியாம் வாக்களிக்காமல் நடுநிலைமை தாங்கியது (Abstained). கி.பி 1938ஆம் ஆண்டுக்குப் பின் ஒரு நாட்டினைஞர் மன்றத்தைப் பீபுன் தொடங்கினர். ஜப்பானிய முறையைப் பின்பற்றி இம்மன்றம் அமைக்கப்பட்டது. உதாரணமாக, ஜப்பானியப் 'புசிதோ' (Bushido) போல் தாய் நாட்டுத் தன்மதிப்பை 'வீரதம்' (Wiratham) என்ற மொழிச் சொல் மூலம் தெரிவித்தார். முற்றிலும் வேறுபட்ட நாட்டின் பல பண்பாடுகளை ஒருசேரக் கலக்க வைத்தது இச்சொற்கோவை எனக் கூறலாம். நாட்டுப் பற்றுடைய கோட்பாடும், வாய்மை தவறுமையும், பொருளாதாரத் திறமையும், கடுமையான உழைப்பும், புத்தசமயக் கொள்கைகளான அமைதி, ஒற்றுமை, நன்றி, நம்பிக்கை, இளைஞர்களிடத்தும் மூப்பால் தளர்ந்தவர்களிடத்தும் மரியாதை போன்ற பண்புகள் இச் சொற்கோவையால் இணைக்கப்பட்டன.

கி.பி. 1940ஆம் ஆண்டுக்குப்பின் தாய்லாந்தை நயந்து வேண்டும் ஜப்பானியக் கொள்கை உச்சநிலையை அடைந்தது. 'ஆசியாக் கண்டம் ஆசியா இனத்தினருக்கே' (Asia For Asiatics), 'பரந்தகன்ற கிழக்காசியக் கூட்டு வாழ்வுவள வட்டம்' (Greater East Asia Co-prosperity Sphere) புத்த சமயத்திற்கு மரியாதையளித்தல் போன்ற கருத்துகளை ஜப்பான் தாய்லாந்தில் பரப்பி வலியுறுத்தியது. பாங்காக்கில் முழுநிறைவு பெற்ற ஜப்பானியத் தூதுத்தலைவர் அலுவலகம் அமைக்கப்பட்டது; மேலும் மலேய் சவுத்லேண்டிலும் (Malay Southland), வடக்கிலுள்ள சியாங்மையிலும் இரண்டு அயல்நாட்டுப் பேராளர் (Consulates) அலுவலகங்களையும் ஜப்பான் அமைத்தது. ஜப்பானிய மீன் பிடிக்கும் படகுகள், அடிக்கடித் தாய்லாந்தைச் சுற்றி வந்தன. ஜப்பான்தான் உலகப்போரில் வெற்றியடையப் போகிறது எனக் கணக்கிட்டு அரசியல் சூதாட்டத்தில் பீபுன் இறங்கினர்.

தாய்லாந்தும், இரண்டாம் உலகப் போரும்

கி.பி. 1940ஆம் ஆண்டுக்குப் பிறகு அச்சுறுத்துகிற சூழ்நிலை உருவாகியது. பிரிட்டனுடனும், பிரான்சுடனும், ஜப்பானுடனும் கி.பி. 1940ஆம் ஆண்டு ஜூன் மாதம் தாய்லாந்து 'வலுச் சண்டைக்குப் போகா உடன்படிக்கையை (Non - Aggression Pact) செய்து கொண்டது. இரண்டு மாதங்களுக்குப்பின் விசிபிரான்சு (Vichy France), ஹிட்லர் தொல்லை கொடுத்ததால், தொங்கிங்கில் (Tonking) ஜப்பான் வல்லெதிர்ப்பைச் செய்ய உடன்பாடு அளித்தது. இச்சமயத்தில்தான் 'இணைப்பு வல்லரசுகளுடன் (Axis Powers) ஜப்பான் இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டது. இச்சூழ்நிலை தாய்லாந்தின் விழிப்புணர்ச்சியைத் தூண்டியதால் பிரான்சின் ஆட்சி இந்தோ – சீனவில் முடிவடைந்தால், பட்டம்பாங்கு, சியாம் ரீப்பு மாகாணங்கள், சிஸ் மெகாங் லாவோஸ் (Cis-Mekong Laos) பகுதிகளை மீண்டும் தாய்லாந்திடமே அளித்துவிட வேண்டும் என்று வாக்குறுதியளிக்கும்படிப் பிரான்சிடம் முறையிட்டது. ஆனல் பிரான்சு மறுப்பளித்தது. மேலை மேகாங் ஆற்றின் வலக்கரையிலுள்ள, கி.பி. 1904, கி.பி. 1907ஆம் ஆண்டுகளில் பிரான்சு தாய்லாந்திடமிருந்து கைப்பற்றிய பகுதிகளைக் கொடுத்தால்தான் பிரான்சுடன் ஏற்படுத்திய வலுச் சண்டைக்குப் போகாவுடன்படிக்கையைச் செல்லுபடி செய்ய முடியும் (Ratification) எனத் தாய்லாந்து கூறியது. அமெரிக்கக் குடியரசின் ஆய்வுரையைப் புறக்கணித்துக் கி.பி. 1940ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் நாள், வெளிப்படையாக அறிவிக்காமல், இப் பகுதிகளை மீட்பதற்காகத் தாய்லாந்து போர் தொடங்கியது. இரு மாதங்களுக்குப் பிறகு, ஜப்பானிய நடுவர் தீர்ப்பின் உதவியுடன், இப்பகுதிகளைக் கி.பி. 1941ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் பிரான்சுடன் உடன்படிக்கை மூலம் தாய்லாந்து மீட்டுக் கொண்டது.

உலகப்போர் தொடங்கிய சமயம் இந்தோனேசியா, மலேயா ஆகியவற்றின் மேல்தான் ஜப்பான் முழுக்கவனம் செலுத்தியது. தாய்லாந்து, பர்மாவைக் கைப்பற்றினல் மலேயாவிலுள்ள ஆங்கிலேயர்களை ஒழிக்க உதவும் என்ற நோக்கம்தான் ஜப்பானிடமிருந்தது. பொதுவாகத் தென்கிழக்காசியாவில் ஜப்பான் மொழியை மக்களிடையே பரப்பி, இந்நாடுகளுக்குத் தன்னுட்சியுரிமையளித்து, ஜப்பானின் தனித்தலைமை மேற்பார்வையாளர் ஆட்சியை அமைக்க வேண்டுமென்பதே ஜப்பானின் அடிப்படை அரசியல் நோக்கமாகும். ஆகையால்தான் தாய், பர்மா ஆகிய நாடுகளில்

இருந்த புத்தமத இனத்தார்களோடு ஒன்றுசேர ஜப்பான் தனி முயற்சி எடுத்தது.

கி.பி. 1941ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜப்பானியத் தென் கிழக்காசியப் படையெடுப்புத் தொடங்கிய சமயம், தாய்லாந்து வழியாகச் சிங்கப்பூருக்கும் இரங்கூனுக்கும் சென்ற ஜப்பானியப் படையைப் பெயரளவில் தாய்லாந்து தடுக்க முயற்சியெடுத்ததால் விரைவாக ஜப்பான் பர்மாவையும், சிங்கப்பூரையும் கைப்பற்ற முடிந்தது.

தாய்லாந்திலும், பர்மாவிலும், மக்கள் ஆதரவைப் பெறத் தாங்கள் உறுதியான பற்றுடைய புத்த சமயத்தவர்கள் என்னும் செய்தியை ஜப்பானியர்கள் பரப்பினார்கள். தாய்லாந்து, மலேயா, ஜாவா ஆகிய நாடுகளில் தாங்கள் சுரண்டல் செய்யும் சீனர்களின் எதிரிகள் என்று கூறி மக்களின் இன உணர்ச்சிகளை ஜப்பானி யர்கள் கிளறினார்கள். சீனர்களிடமிருந்து செல்வத்தைக் கவர்ந் தார்கள்; சீனர்களின் தனி வாணிப வட்டித் தொழிலர் உரிமைகளை ஒழித்தார்கள்.

பொதுவாகத் தென்கிழக்காசிய நாடுகளின் நிருவாக விவ காரங்களில் ஜப்பான் தலையிட முனையவில்லை. போர் புரிவதற் காகத் தென்கிழக்காசிய நாடுகள் மூலம் போர் வீரர்கள், போக்கு வரத்துக் கருவிகள், போர்க்கருவிகள், உணவுப் பொருள்கள் போன்றவைகளை எடுத்துச் செல்ல இந் நாடுகளைப் பயன்படுத்த ஜப்பான் விரும்பியது பிரெஞ்சு இந்தோ–சீனு, தாய்லாந்து ஆகிய நாடுகளில் அந்நாட்டு மக்கள் நிருவாகப் பொறுப்பை யேற்றுக் கொள்ள உடன்பாடு அளித்ததால் ஜப்பான் அந்நாடுகளில் தீவிர மாகப் பரப்பவில்லை. ஜப்பானின் படைத்தேவைப் பொருள்களில் பெரும்பான்மை தாய்லாந்து அளிக்க வேண்டியதாயிருந்தது; பலநூறு கோடி யென்கள் (Yen-ஜப்பானிய மதிப்பலகு நாணயம்) கடன் தவணைச் சலுகை முறை மூலமாகவும், புதிதாக அச்சடித்த மூவாயிர லட்ச பாட் (Baht—தாய்லாந்து மதிப்பலகு நாணயம்) நாணயமாகவும் தாய்லாந்து ஜப்பானுக்களித்தது. ஜப்பானியப் பண்டங்கள் அனுப்பிக்கூட ஜப்பான் இக்கடனை அடைக்க முயல வில்லை; வாய்ப்புமளிக்கவில்லை. இச்சுமையைத் தவிர மற்றப்படி ஜப்பானியர்களால் எவ்வகைத் தீங்கும் தாய்லாந்திற்கு இல்லை.

பிரதமர் பீபுன் தயக்கத்துடன் ஜப்பானியர்களுடன் ஒத்துழைத்ததால் உலகப் போரினல் பர்மாவிற்கேற்பட்டது போன்று பொருளாதாரச் சீரழிவு தாய்லாந்திற்கு ஏற்படவில்லை;

ஆனல், ஜப்பானுக்கு உதவியாக அவர் கொண்டிருந்த கொள்கை மக்களுடைய நன்மதிப்பைப் பெறவில்லை. மதிப்பில்லாத ஜப்பானியச் செலாவணியை வழங்கீட்டுப் பொருள்களுக்காகப் பயன்படுத்தியதால் அன்ருட வாழ்க்கைச் செலவு தாய்பாட் செலாவணியில் பத்து மடங்காக வளர்ந்தது. பணவீக்கம் ஏற்பட்டதால், உடன் கையூட்டும், ஊழலும் பிணைந்து பெருகின. ஜப்பானிய அதிகாரிகளுடன் தாய் அதிகாரிகள் கள்ளக்கடத்தல் செய்யத் தொடங்கினர்கள். ஜப்பானியர்கள் அளித்த ஊக்கத்தால் தாய்லாந்திலுள்ள சீனர்கள் பீபுன் அரசாங்கத்தால் பலவகையாகத் துன்புறுத்தப்பட்டார்கள். சிஸ்-மெகாங் பகுதிகளைத் தாய்லாந்து கி.பி. 1940ஆம் ஆண்டில் கைப்பற்றியவுடன் பொது மக்களின் ஆர்வமும் ஆதரவும் கிடைத்தன; ஆனல், பின்னல் ஜப்பானிய உதவியுடன் தாய்லாந்து மேலும் சில பகுதிகளைப் கைப்பற்றியவுடன் மக்களின் பாராட்டுகள் கிடைக்கவில்லை. ஜப்பானிய உதவியுடன் தாய்லாந்து (1) கம்போடியாவிடமிருந்து பட்டம் பாங்கும், கியம்ரீப்பும், (2) பர்மாவிடமிருந்து கென்துங்கும் (Kentung), மாங்பானும் (Mangpan), (3) மலேயாவிடமிருந்து பெர்ஸ்ம், கோதாவும், கேலன்தானும், தெரன்கானுவும் கைப்பற்றிய பகுதிகள் ஆகும்.

பீபுனின் பேரெதிரியான பிரைடி பானேம்யாங் ஜப்பானியர்களை எதிர்க்கும் தாய் இயக்கத்தைத் தொடங்கினர். ஜப்பானியப் படையெடுப்பின்போது நிதி அமைச்சராகப் பணிபுரிந்து வந்த பிரைடி தம் பதவியினின்றும் விலகி வட தாய்லாந்திற்குச் சென்ருர். பின்பு, மன்னரின் பகர ஆளுநராக (Regent) நியமிக்கப்பட்டதால் பாங்காங்கிற்குப் பிரைடி திரும்பிவந்தார். அமெரிக்கக் குடியரசுடன் தாய்லாந்து போர் தொடங்குகிறது என்ற செய்தியை அமெரிக்க அரசாங்கத்திடம் தெரிவிக்கும்படித் தாய்லாந்து அரசாங்கம் வாஷிங்டனில் பணிபுரிந்துவந்த தாய்லாந்து நிலைத் தூதரான (Ambassador) இளவரசர் செனிபிரோமாஜுக்குக் (Seni Pramoj) கட்டளையிட்டபோது, அவர் அச்செய்தி ஓலையை அமெரிக்க அரசாங்கத்திடம் கொடுக்க மறுத்தார். செனிபிரோமோஜின் இந்த நடவடிக்கையைப் பிரைடி மறைமுகமாக ஆதரித்தார். இவ்வகையான அமெரிக்கக் குடியரசை எதிர்க்கும் தாய்லாந்து நடவடிக்கைக்குச் சியாம் மக்கள் ஆதரவு அளிக்கவில்லை எனச் செனிபிரோமோஜ் எதிர்ப்பைத் தெரிவித்தார். இவ்விருவரும் செல்வாக்குள்ள நைதிரக்குடன் (Naidirek) சேர்ந்துகொண்டு உரிமைத் தாய் இயக்கத்தை மறைவாகத் தொடங்கினர்கள், அமெரிக்கப் பிரதிநிதிகள் பிறரறியாவாறு தாய்லாந்திற்குள்

நுழைந்தார்கள்; தாய் அதிகாரத்தின்கீழிருந்த ஐரோப்பியப் போர்க் கைதிகளின் கூடாரங்களில் இவர்கள் வந்து தங்க வசதி செய்துதரப்பட்டது. இங்கிருந்து அவர்கள் குற்றலை வானொலி போக்கியின் வாயிலாக (Short-wave radio Transmitters) கொலம்போவிலுள்ள நேச நாடுகளின் வேவுத் தகவலர்களுடன் (Intellizence Agencies) இடைவிடாத் தொடர்புகொண்டார்கள்.

தென்கிழக்குத் தாய்லாந்திலுள்ள பெசாபன்னைத் (Pechabun) தாய்லாந்தின் தலைநகராக மாற்றியமைக்க வேண்டும் என்ற கருத்தைப் பீபுன் தெரிவித்ததால், இதையே காரணமாகக்கொண்டு கி. பி. 1944ஆம் ஆண்டு கோடைக் காலத்தில் தாய்லாந்தின் அரசாங்கம் மாற்றப்பட்டது. பெசாபன் தனியே மையமாக அமைந்திருப்பதால் இங்கிருந்து இறுதியாகத் தொடர்ந்து செயல் பட்டு வரும் ஜப்பானிய ஆட்சித் தலைமையை எதிர்க்கப் பயன்படும் எனக் கருத்து அளிக்கப்பட்டது. பீபுனும் ஜப்பானியர்களையும் அவர்களுடைய திட்டங்களையும் நம்ப மறுத்தார்; அவருடைய காவல் தலைவர் சிலோனிலிருந்த கோமான் மௌன்ட் பேட்டனின் (Mountbatten) தலைமைச் செயலகத்துடன் வானொலி வாயிலாகச் செய்தித் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார். கி. பி. 1944ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புதுப் பெசாபன் தலைநகரத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது; ஆனால், இது மலேரியா மிக்கிருந்த இடம். ஆகஸ்டு 2ஆம் நாள் தலைநகரம் மாற்றுவதுபற்றிச் சட்ட அவையில் எடுத்த வாக்களிப்பில் பீபுன் தோற்றார்; ஆனால், உண்மையில் பஸிபிக் பகுதியில் ஜப்பானியர்கள் தோல்வியடைந்து வந்ததால் தான் பீபுன் பதவியிலிருந்து நீக்கப்பட்டார் எனக் கூறலாம். பீபுன் பதவி விலகியதால் பிரைடின் உரிமைத் தாய் இயக்கக் குழுவினர் பதவிக்கு வரமுடிந்தது; நைகுஅங்அபை ஒங் (Nai Khuang Aphai Wong) பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆகையால், மீண்டும் தலைமைப் பொறுப்புள்ள முதன்மையான அயல்நாட்டுடன் தாய்லாந்து ஒத்துழைக்க முன்வந்தது; இச் சமயத்தில் அமெரிக்கக் குடியரசுதான் முதன்மையான இடம் பெற்றிருக்கிறது என்ற அறிகுறி தோன்றியது. தாய்லாந்து அமெரிக்கக் குடியரசுடன் போர் தொடுத்தவுடன் அமெரிக்கக் குடியரசு அதை ஒரு சிறந்த செயலாகக் கருதவில்லை; இங்கிலாந்து அதை ஒரு சிறந்த நடவடிக்கையாகக் கருதியது.

இரண்டாம் உலகப்போர் முடிந்தவுடன், இளவரசர் செனிபிரோமோஜ் பாங்காக்கிற்கு வரவழைக்கப்பட்டார். சில காலம் பிரதமராக, பிரிட்டனுடன் இன்னல் தரக்கூடிய ஒப்பந்தம்

ஏற்பட்டவரை (அதாவது கி.பி. 1946ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் நாள் வரை), பணியாற்றினர். இங்கிலாந்திற்கெதிராகத் தாய்லாந்து போர் புரிந்தபோதிலும், அமெரிக்க ஆதரவு கிடைத்த தால் தாய்லாந்து தண்டனையடையாமல் தப்பியது. நாட்டின் உயர்ந்த பதவி ஓர் இளவரசருக்கு அளிக்கப்பட்டதால் தாய்லாந் தின் அரசியல் சட்டதிட்டம் திருத்தப்பட்டது (Amended). இளவர சர் செனிபால் திறமையுடன் ஆட்சிபுரிய முடியாமையால் அவர் பிரதமர் பதவியை விட்டு விலகினர். பிரைடி தொடர்ந்து 'பிரதமர்களைப் படைக்கும் ஆற்றலுடைய' பணியை, கி. பி. 1947ஆம் ஆண்டு நவம்பரில், குருதி சிந்தாத் திடீர்ப் புரட்சி மூலம் மீண்டும் பீபுன் ஆட்சியைக் கைப்பற்றும் வரை, புரிந்து வந்தார்.

6. தாய்லாந்து (கி.பி. 1945-65)

இரண்டாவது உலகப்போரினல் தாய்லாந்திற்குப் பல இன்னல்கள் ஏற்பட்டன. ஆயிரமாயிரம் ஜப்பானியப் படை வீரர்கள் தாய்லாந்தில் வாழ்ந்து வந்ததால் தாய்லாந்தின் செல்வம் கரையத் தொடங்கியது. தாய்லாந்தின் முக்கிய நகரங்களும், போக்குவரத்துக் கருவிகளும், இயந்திர ஆற்றல் கருவிகளும் நட்பு நாடுகளின் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டுப் பாழாயின. கடற் போக்குவரத்திற்குத் தடை ஏற்பட்டதால், அயல்நாடுகளுடன் வாணிபம் செய்யமுடியவில்லை; ஆகையால், வேளாண்மை படிப்படியாகக் குறையத் தொடங்கியது. இரண்டாம் உலகப் போரின்போது தாய்லாந்து ஜப்பானுடன் நட்புப் பூண்டதால் இங்கிலாந்து, அமெரிக்கக் குடியரசு, பிரெஞ்சுநாடு, சீன ஆகிய நாடுகள் அதன் எதிரிகளாய் இருந்தன. உலகப்போர் முடிந்த வுடன் தாய்லாந்து அகநிலையில் உணர்ச்சியற்றதாயிருந்தது; அரசியல் வழியில் திக்குத் தெரியாமல் திகைத்திருந்தது; பொரு ளாதார அமைப்பில் நெருங்கி உருக்குலைந்திருந்தது; அரசியல் செயல்திறத்தில் நண்பரில்லாமல் பாலைப் பசுந்திடல்போல் தனித் திருந்தது (ஒதுக்கிவைக்கப்பட்டது). ஆனாலும், பொதுவாகத் தாய் மக்கள் எளியவர்களகயிருந்ததாலும், நேசமனப்பான்மை உள்ளவர்களாயிருந்ததாலும் எத்தகைய சூழ்நிலையையும் சமாளிக்கக் கூடிய ஆற்றல் அவர்களிடமிருந்தது. ஹீனயான புத்த சமயத்தைப் (Hinayana Buddhism) பின்பற்றும் தாய் மக்களுக்கு ஒற்றுமை மனப்பான்மையும் பொறுமைப் பண்பும் இயல்பாகவே இருந்தன.

உலகப் போர் முடிந்தவுடன், தாய் அரசாங்கம் அயல்நாடு களுடன் உள்ள உறவை வலுப்படுத்த முயன்றது; தாய்லாந்தின்

மேல் மனக் கசப்புக்கொண்ட நாடுகளின் மனத்தை மாற்ற முயன்றது. நாட்டுரிமையையும், அரசுரிமையையும் பாதுகாக்க வேண்டுமென்றும், ஆட்சிப் பரப்புச் சார்ந்த பகுதிகளின் ஒருமையைக் கண்காணிக்க வேண்டுமென்றும், நாட்டின் மறு சீரமைப்பிற்காக அயல்நாடுகளின் உதவியைப் பெற வேண்டுமென்றும், உடனடியாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் (United Nations) உறுப்பினராகச் சேரவேண்டும் என்றும் தாய்லாந்து விரும்பியது. தாய்லாந்தின் நோக்கத்தை அமெரிக்கக் குடியரசு ஆதரித்தது. கி.பி. 1941ஆம் ஆண்டில் தாய் அரசாங்கம் ஜப்பானுடன் கூட்டுச் சேர்ந்ததற்குத் தாய் மக்கள் பொறுப்பாளிகளல்லர்; ஆகையால், சலுகை காட்டுகிற அமைவு உடன்படிக்கை ஒன்று தாய்லாந்துடன் ஏற்படுத்தவேண்டும் என அமெரிக்கக் குடியரசு விரும்பியது.

இரண்டாவது உலகப்போரில் ஜப்பான் தோல்வியடைந்ததால் தாய்லாந்தில் தனக்குரிய எல்லாப் பொருள்களையும், சலுகைகளையும், ஜப்பான் விட்டுக் கொடுக்க வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டது. கி.பி. 1946ஆம் ஆண்டு ஜனவரியில் தாய்லாந்திற்கும், பிரிட்டனுக்கும் ஓர் ஒற்றுமை உடன்படிக்கை ஏற்பட்டது. இவ் வுடன்படிக்கையின்படி மலேயா, பர்மா முதலிய நாடுகளிடமிருந்து கைப்பற்றிய பகுதிகளைத் தாய்லாந்து திருப்பிக்கொடுத்தது; இரண்டாவது உலகப் போருக்குமுன் தாய்லாந்தில் பிரிட்டனுக்கு இருந்த பொருளாதார உரிமைகளை மீண்டும் வழங்கியது; பிரிட்டனுக்குக் கொடுக்க வேண்டிய கடனையும் உரிமைகளையும் கொடுப்பதாக உறுதிமொழி அளித்தது. பசியாலும் பட்டினியாலும் வாடும் அண்டை நாட்டினருக்குத் தன்னிடம் மிஞ்சும் அரிசியைப் பகிர்ந்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டது. தவிர, தேசியச் சீனவுடனும் (Nationalist China) ஓர் ஒற்றுமை ஒப்பந்தம் செய்துகொண்டது. இவ்விரு நாடுகளும் தாய்லாந்திலுள்ள சீனர்களின் உரிமைபற்றிப் பேச்சு நடத்தலாம் என்றும், தங்கள் தூதுவர்களை அனுப்பி மாற்றிக் கொள்ளலாம் என்றும் இவ்வொப்பந்தத்தில் கூறப்பட்டிருந்தது. ஜப்பான் உதவியுடன் லாவோஸ், கம்போடியா நாடுகளிலிருந்து கைப்பற்றிய எல்லாப் பகுதிகளை மீண்டும் கொடுப்பதாக 1946ஆம் ஆண்டில் பிரெஞ்சு நாட்டுடன் ஏற்பட்ட அமைவுடன்படிக்கையின்படித் தாய்லாந்து ஒப்புக்கொண்டது. உருசியாவுடன் ஏற்பட்ட அமைவுடன்படிக்கைப்படி கி.பி 1933ஆம் ஆண்டு கம்யூனிஸ்டுகளை எதிர்க்கும் சட்டத்தை நீக்கிக் கம்யூனிஸ்டுக் கட்சி மீண்டும் சட்டப்படித் தாய்லாந்தில் செயலாற்றலாம் எனத் தாய்லாந்து ஒப்புக்கொண்டது. கி.பி. 1917ஆம் ஆண்டில் உருசியாவுடன் இருந்த தூதுவர்களின் முழுக்குழு உறவைத் துண்டித்ததால்,

இவ்வுடன்படிக்கைக்குப் பிறகு உருசியாவைத் தூதுவர்களின் முழுக்குழு உறவை மீண்டும் ஏற்படுத்தும்படித் தாய்லாந்து கேட்டுக்கொண்டது. இவ்வகையான சூழ்நிலை உருவாகியதால் கி.பி. 1946ஆம் ஆண்டு தாய்லாந்து ஐக்கிய நாடுகள் அமைப்பின் (United Nations) உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிலையில்லா உள்நாட்டுச் சூழ்நிலை (கி.பி 1945-48)

அயல்நாட்டு விவகாரங்களில் அடைந்ததுபோல உள்நாட்டு விவகாரங்களில் தாய்லாந்து வெற்றி அடையவில்லை. ஆனாலும், மீப்பேரிடையூறுகளையும் கீழடக்கி வெற்றிவழியில் செல்லத் தாய்லாந்து முயன்றது. நாட்டைப் பழுதகற்றிச் சீர்ப்படுத்தும் புதுவளம் நிரம்பிய முன்னேற்ற வழியில் தாய்லாந்து சென்றது. பொதுவாகத் தாய்லாந்தில் சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றில் உறுதியான நிலையிருந்ததால் உள்நாட்டு இன்னல்களைச் சமாளிக்க முடிந்தது. வளவாய்ப்பு நிறைந்த தொகுதியாயிருந்ததால், சிறப்பாக நெல்வளம் நிரம்பிய நாடாயிருந்ததால் தாய்லாந்து மக்கள் பசியாலும் பட்டினியாலும் வாடி மடியவில்லை; மிகப் பேரிடையூறுகளிலிருந்தும் பாதுகாக்கப்பட்டார்கள். வழிவழிமரபில் வந்த அமைப்புகளான குடும்பம், கிராமம், முடியரசு, புத்தமதம் முதலியவற்றில் உள்ள பற்றுதலினாலும், செருக்கினாலும் இயற்கையாகவே தாய்லாந்து மக்கள் மகிழ்ச்சிமிக்க மக்களாக இருந்தார்கள்.

உலகப்போருக்குப் பிறகு மக்கள் செல்வாக்குள்ள இளம் அரசர் ஆனந்தா (Ananda) சுவிட்ஜர்லாந்திலிருந்து தாய்நாட்டிற்குத் திரும்பி வந்தார்; நாட்டுக்கேற்பட்ட இன்னல்களுக்கு அவர் பொறுப்பாளி எனத் தாய் மக்கள் கருதவில்லை. தவறு முடியாட்சி யின் மேலன்று, ஆட்சி உரிமை பெற்று ஆண்டு வந்த குழுவின் மேல்தான் எனத் தாய் மக்கள் நம்பினார்கள். அடிப்படைக் கோட் பாட்டில் ஆட்சி உரிமை பெற்ற குழு, மக்களாட்சியைப் புலப்படுத் தும் குழு, பிரிட்டனில் உள்ளதுபோல அமைச்சரவை, சட்டமன்றம் முதலியவை உள்ள அரசியல் அமைப்புள்ள நாடு இது; ஆனால் நடை முறையில் உண்மையான அதிகாரம் ஒரு சிறிய உயர்ந்தோர் குழா மிடம், (Little Elite) இருந்தது. நிருவாக அமைப்பு, படைத்துறை காவல் துறை, ஆகியவை இக் குழுவின் தலைமையின்கீழிருந்தன. உலகப்போரின் போது தாய்லாந்திற்கேற்பட்ட அவமானத்திற்காக அப்போரின்போது தாய்லாந்தில் தலைமை அமைச்சராக இருந்த பீபுன் சங்கிராம் (Phibun Songgram) அவர் வீட்டுக்குள்ளே அடைக்கப்பட்டுக் கவனப் பிணிப்பில் வைக்கப்பட்டார். அவருக்

குப் பதிலாக அவருடைய முன்னுள் நண்பரும், உடலுழைப்பாளரு மான பிரைடி பனும்யாங் (Pridi Banomyong) தலைமை அமைச் சராக நியமிக்கப்பட்டார். புதிய தலைமை அமைச்சர் முன்னுள் சட்டப் பேராசிரியராகப் பணி புரிந்தவர்; புரட்சி அரசியல் இடது சாரியின் கோட்பாடுகளில் நம்பிக்கையுள்ளவர்; பின்பற்றுபவர்; அரசரின் முன்னுள் பகர ஆளுநராய் (Regent) பணிபுரிந்தவர்; ஜப்பானியர்களை எதிர்த்த இரகசிய இயக்கத்தின் தலைவராயிருந் தவர். நாட்டு மக்களின் உயிர்நாடிகளுக்குத் தெம்பும் ஊக்கமும் கொடுத்தல், அரசாங்கத்தை திறமையுடன் நடத்தல், ஊழல்களை ஒழித்தல், பொருளாதாரத்தைச் சீரமைத்தல் நாட்டை முற்போக்கு வழியில் செலுத்துதல் முதலியவற்றிற்குரிய பொறுப்பும் கடமையும் இவருக்குக் கொடுக்கப்பட்டன. பொது மக்களுக்கும் ஆட்சியுரிமை பெற்ற குழுவிற்கும் இடையே ஒரு பெரிய பிளவு இருந்தது. அரசாங்கத்தின் திட்டத்தையும், கொள்கைகளையும்பற்றிப் புரிந்து கொள்ளும் ஆற்றல் மக்களிடையே யில்லை; அரசாங்க உயர்ந்தோர் குழாம் எடுக்கும் தீர்மானங்களைத் தடுக்கவேண்டிய விருப்போ, துணிவோ, வழிவகைகளோ இல்லாதவர்களாய்ப் பொதுமக்களிருந் தார்கள்.

ஜப்பானியர்களை ஆதரித்தவர்கள் என்று பெயரெடுத்தவர்களை ஒதுக்கிவிட்டு மற்றப் படையையும், படைத்துறையைச் சாராத அலுவலர்களையும் நம்பித்தான் பிரைடி ஆட்சி புரிந்தார். சூழ்ச்சிக் கட்டுத் தலைவாதமுறை, மாமன்ற வேலைகளுக்கு முட்டுக்கட்டை யிடும் அரசியல் வாதம், பொய் பேசுதல், ஏமாற்றுதல் போன்றவை ஜப்பானியர்களின் ஆட்சியினுல் நாட்டில் உருவாகியிருந்தன. ஆகையால், பொதுவாக நாட்டுமக்கள் ஒழுங்குணர்வு அற்றவர் களாயிருந்தார்கள். குருதியிலே ஊறியிருந்த இம் மனப் பான்மையை ஒழிப்பது எளிதாயில்லை. பிரைடியின் முதல்நோக்க மென்னவென்ருல் அரசாங்க அதிகாரிகளின் கையூட்டுப்போக்கைக் கட்டுப்படுத்திக் குறைக்கவேண்டும்; குடியானவர்களின் வள ஆக்கம் நாடுகிற செயல்களைப் புரியவேண்டும். நெல்விளைச்சல் செய்பவர்களின் வருமானத்தைப் பெருக்க வேண்டும்; ஆனுல், அதே நேரத்தில் அரிசி விலை உயராமல் மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதாம். நகரங்களில் பொருள்களின் விலை மிகவும் உயர்ந்திருந்தது; கடைகள், மக்களுக்குத் தேவையான பொருள்கள் இல்லாமல் வெறுமையாயிருந்தன. ஒருசில தாய் மக்களே செலவு செய்யும் நிலையில் இருந்தார்கள்; மற்றவர்கள் பணம் இல்லாமல் தவித்தார்கள். பாங்காக்கில் செல்வந்தர்கள் தாம் காரில் செல்ல முடிந்தது. மற்றப் பொதுமக்கள் அன்ருடத் தேவைக்

காகத் தங்கள் குடும்பப் பொருள்களை மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

நெல்விளையும் நிலங்களைப் பெருக்க முயலும் என்றும், கூட்டுறவு அங்காடிகளை அமைக்க உதவிபுரிய முன்வரும் என்றும், குடிசைத் தொழில்களுக்கு ஊக்கம் அளிக்க முன்வரும் என்றும் அரசாங்கம் ஒரு மிகப்பெரிய திட்டத்தை அறிவித்தது. நாட்டின் போக்குவரத்து வசதிகளைச் சீர்படுத்தவும், பெருக்கவும் பிரைடி முயன்றார்; அரிசி, இரப்பர், வெள்ளீயம், தேக்குமரம் முதலியவை பற்றிய வாணிபத்தின் மூலம் செல்வம் திரட்ட முயற்சி செய்தார்; பொருளாதார விவகாரத்தில் நாட்டு மனப்பான்மையை உருவாக்கினார். ஆகையால், தாய்லாந்திலுள்ள ஐரோப்பிய (அமெரிக்கர்கள் உட்பட), சீனப் பொருளாதாரச் செல்வாக்கைக் குறைக்கத் தீர்மானம் செய்தார்; தனியார் வாணிபத்துறையில் தாய்மக்கள் மிகுந்த பங்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என விரும்பினார். நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதில் தாய்லாந்து அரசாங்கம் சிறந்த பங்குகொள்ள வேண்டும் என விரும்பினார். ஆனால், இவ் வகையான நடவடிக்கைகள் கையூட்டுக்கும் ஊழலுக்கும் மிக்க வாய்ப்பு அளித்தன; அரசாங்க அதிகாரிகள், நாட்டின் நலத்தை ஒதுக்கிவிட்டுத் தங்கள் நலத்துக்காகப் பதவியைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள்.

நாட்டின் செழிப்பை மிக விரைவாகப் பெருக்கப் பிரைடி முயன்றது வீணாகப் போயிற்று. அரிசிச் சூழ்நிலையில் வளர்ச்சி ஏற்பட்டிருந்ததால் நாடு கேடுகளிலிருந்து தப்பியது. தொழில் துறையிலும், வாணிபத் துறையிலும் தாய்மக்களுக்கு வாய்ப்புக் கிடைத்திருந்த போதிலும் அவர்களால் இத்துறைகளைத் திறமையுடன் நடத்த முடியவில்லை. ஆகையால், தாய்லாந்தில் வாணிபம் செய்வதற்காக மீண்டும் ஐரோப்பியர்கள் வரவழைக்கப்பட்டார்கள். சிறப்பாகப் பெட்ரோல் எண்ணெய்த் தொழில்துறையிலும், அயல் நாட்டு வாணிபத்துறையிலும் ஐரோப்பியர்களின் முதலீடும், தொழில் நுட்பமும் தேவையாயிருந்தன. சில்லறை வாணிபத் துறையிலும் (Retail Business), அரிசி வாணிபத்திலும் சீனர்கள் பயன்படுவார்கள் எனத் தாய்மக்கள் தயக்கத்துடன் ஒப்புக் கொண்டார்கள்.

தாய்மக்களும் சீனர்களும்

2 அல்லது 3 மில்லியன் சீனர்களே தாய்ப் பொருளாதாரச் சூழ்நிலையில் ஏற்படும் கெடுதல்களுக்குக் காரணம் எனத் தாய்மக்கள் கருதினார்கள். இரண்டாம் உலகப்போருக்குமுன் சில பணிமுறை

களில் சீனர்கள் பங்கு கொள்ளக்கூடாது எனத் தடைவிதிக்கப் பட்டிருந்தது. சீனர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களின்மேல் கண்காணிப்பிருந்தது. இரண்டாம் உலகப் போருக்குப்பின், சீனுவில் குயோமின்டாங்கின் ஆட்சி நிலவியிருந்தபோது, வேறு படுத்தி ஒரங்காட்டும் திட்டங்களைத் தாய் அரசாங்கம் அமலுக்குக் கொண்டு வந்தது. தாய்லாந்திற்குள் வந்து குடியேறும் சீனர்களின் ஆண்டிறுதி எண்ணிக்கையை 10,000விருந்து 200 ஆகக் குறைத்தது. புதிதாக அமைக்கப்பட்ட சீன அரசியல் தூதுவர் அலுவலகத்தின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தியது; சீன அரசின் ஆட்சிப்பேராளரின் (Consulates) அலுவலகங்களை மூடியது. சீனப் பள்ளிகள், சீனச் செய்தித்தாள்கள் ஆசியவற்றின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக் கண்காணித்தது.

சீனுவில் கம்யூனிஸ்டு ஆட்சி அமைக்கப்பட்டவுடன் தாய்லாந்திலுள்ள சீனர்களைப் பற்றித் தாய் அரசாங்கம் மிகுதியாக அஞ்சத் தொடங்கியது அயல்நாட்டவருக்குக் குடியுரிமை வழங்கும் சட்டம் மாற்றிக் கடுமையாக்கப்பட்டது. அயல்நாட்டார் கள் பதிவு செய்யும் நுழைவுக் கட்டணம் மிகுதியாக்கப்பட்டது. தாய்லாந்திலுள்ள சீனர்கள் ஐந்தாம் படை (Fifth Column) அல்லது பகை ஒற்றர்களாக மாருமல் இருக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன; ஆனல் வெளிப்படையாகத் தாய்மக்களும் சீனமக்களும் சண்டை போடவில்லை; பொதுவாக இவ்விரண்டு இனங்களும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை யுள்ளவர்களாயிருந்தார்கள். தாய்மக்களும் சீனர்களும் ஒருவருக்கு ஒருவர் தேவையாயிருந்தார்கள். பாங்காக்கிலுள்ள உயர்ந்தோர் குழாமிலுள்ள அரசியல்வாதிகள் பொதுவாகத் தாய்க் குடியுரிமை பெற்றவர்களாயிருந்தாலும், முழுமையாயிராத சீனர்களாகவும் இருந்தார்கள். தாய்மக்கள் செல்வாக்கையும், புகழையும் விரும்பு பவர்கள், அவர்களுக்காகச் செலவு செய்வதற்குச் செல்வ உறவினர் கள் தேவையாயிருந்தனர். இவ்வுறவினர்கள் சீனர்களாயிருந் தாலும் குறைவன்று என்று அவர்கள் கருதினர்கள். தங்களுடைய மகன் அல்லது மகள் உயர்பதவியிலிருந்த தாய் அதிகாரிகளின் குடும்பத்துடன் மணத்தொடர்பு கொள்வதைச் சீனர்கள் வரவேற் ருர்கள். அதனல் அவர்களுக்கு நன்மை ஏற்பட வாய்ப்பிருந்தது. தாய் அரசியல்வாதிகளும், சீன வாணிபர்களும் கையூட்டுகளிலும் ஊழலிலும் ஈடுபட்டிருந்தார்கள்.

கி.பி. 1946ஆம் ஆண்டு ஜூன் 9ஆம் நாள் தாய்லாந்தில் ஒரு சிறந்த நிகழ்ச்சி ஏற்பட்டது. இதற்கு அடுத்தநாள் அரசர் ஆனந்தா அரசியல் தூதுக்குழுவுடன் அமெரிக்காவிற்குச் செல்ல

வேண்டிய திட்டமிருந்தது. ஆனால், ஜூன் 9ஆம் நாளன்று துப்பாக்கிக் குண்டினால் தலையில் தாக்கப்பட்டு அவர் இறந்தார். இது தற்கொலையா, கொலையா, விபத்தா என்பது யாருக்கும் விளங்கவில்லை. ஆனந்தா இறந்தபிறகு இவருடைய 18 ஆண்டுகள் நிரம்பிய உடன்பிறந்தவர் ஆன பூமிபோன் அடுல்டெட் (Phumipon Aduldet) அரச பதவியேற்றார். மன்னர் ஆனந்தாவின் சாவு பற்றி பிரைடி ஒரு காரணமாக யிருப்பாரோ என ஐயுற்றார்கள். ஆகையால், அவர் நாடுகடத்தப்பட்டுச் சீனாவிற்குச் சென்றார்.

அடுத்த ஒன்றரை ஆண்டுகள் திறமையில்லாத பலர் ஆட்சி புரிந்தார்கள்; அரசாங்கம் மாறிக்கொண்டே இருந்தது. ஆனால் இதனால் மன்னரோ மக்களோ மிகுதியாகத் துன்புறவில்லை. கி.பி. 1947ஆம் ஆண்டு நவம்பர் மாதம் திடீர்அரசியல் புரட்சி ஏற்பட்டு, இரண்டாம் உலகப்போரின்போது பிரதமராயிருந்த பீபுன் (Phibun) பதவிக்கு வந்தார். இவர் தாய் மக்களுக்கு ஒரு புதிய சட்டதிட்டத்தைக் கொடுத்தார்; தம்முடைய அரசாங்கத்திற்கு முறைமை உடைமை கொடுப்பதற்காக ஒரு பொதுத் தேர்தலையும் நடத்தினார். ஆனால், கி.பி. 1948ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்தான் இவர் வெளிப்படையாகப் பிரதமர் பதவியேற்றார்.

பீபுன் ஆட்சி (1948—57)

பீபுன் கி.பி. 1948ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1947ஆம் ஆண்டுவரை ஆட்சி புரிந்தார். பிரைடி அரசியலை விட்டு வெளியேறியபோது முடியரசுக் கோட்பாட்டைச் சார்ந்த குடியாட்சிக் கட்சி (Royalist Democrat Party) சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக இயங்கியது. இராணுவத் தலைவர்களும் அரசியலில் தலையிடத் தொடங்கினார்கள். படைப் பிரிவுகளுக்குள் ஒற்றுமை கிடையாது; கப்பற்படைக்கும் இராணுவத்திற்கும் இடையே பூசல் இருந்தது. இராணுவத்திற்குள் இளம் தலைவர்கள் உயர்தர அதிகாரிகளை எதிர்த்தார்கள். இவற்றையெல்லாம் சமாளித்துக்கொண்டு பீபுன் பிரதமராயிருந்தார். கி.பி. 1949ஆம் ஆண்டில் ஒரு சட்டதிட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தார். இச்சட்டத்தில் ஈரவைகளுள்ள சட்டமன்றம் நீடிக்கப்பட்டது; ஆனால், மேல் சட்டசபை உறுப்பினர்களை அரசர் நியமித்தார். முன்பு இவ்வுறுப்பினர்களைக் கீழ்ச்சட்டசபை தேர்ந்தெடுத்தது. அவ்வமைப்பு இரண்டாண்டுகள் நீடித்தது. ஆனால் கி.பி. 1951ஆம் ஆண்டில் பீபுன் இவ்வமைப்பைக் கலைத்து ஒற்றை அவையுடைய அமைப்பை அமைத்தார். இவ்வவையின் பாதி உறுப்பினர்கள் அரசரால் நியமிக்கப்பட்டார்கள்; மறுபாதி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பீபுன் குடியாட்சி முறையைக் கட்டுப்படுத்தியதோடு

அல்லாமல் கம்யூனிஸ்டுகளின்மேல் வன்முறையைப் பயன் படுத்தினர், சில சீனர்களும், சில அரசியல்வாதிகளும் கைது செய்யப்பட்டார்கள். கி.பி. 1951ஆம் ஆண்டுக்குள் பீபுன் ஆட்சியை எதிர்க்கக் காவல்துறை முதல்வர் படைப்பெருந்தலைவர் பாவோஸ்ரீயானோன் (Phaosriyanan) முதற்பெரும் படைத் தலைவர் சாரிட்தனராட் (Sarit Thanarat) ஆகிய இரு தலைவர்கள் தோன்றினர்கள்.

தேசிய உணர்ச்சி, அரசப் பற்று, கம்யூனிஸத்தை எதிர்க்கும் எண்ணம், அமெரிக்காவை ஆதரிக்க வேண்டும் என்ற நோக்கம் ஆகியவற்றை யெழுப்பி எதிர்க்கட்சியினர்களை வலிமையறச் செய்ய வேண்டும் என்பதே இவர்களின் நோக்கம். இவர்களின் ஆட்சித் தொடக்கத்தில் யதேச்சாதிகாரத்தைப் பீபுன் அமைத் தார். ஆனலும், சட்டமன்றக் குடியாட்சி அமைப்பை வெளிப் படையாகக் கலைக்கவில்லை. இராணுவ அதிகாரிகள், காவல்படை வீரர்கள், பணித்துறை ஆட்சி அலுவலர்கள் ஆகியோர்தம் உதவி யுடன் அரசாங்கத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட அரசாங்கத் தொழிற்சாலைகளையும், பொதுவாகச் சொல்லப்போனல் அரசாங் கத்தையுமே இவர்கள் நடத்தினர். சட்ட சபை ஆராயாது ஏற்றுக் கொள்ளும் கைப்பொறிப்பு முத்திரையாக மாறியது; மக்கள் உரிமை கட்டுப்படுத்தப்பட்டது. அரசாங்கத்தைக் குறைவாக எதிர்த்த வர்களை அரசாங்கம் பொறுத்துக்கொண்டது. ஆனல், பல்கலைக் கழகத்திலும், மேலைநாட்டிலும் படித்த பணித்துறை ஆட்சி அலுவலர்களின் முற்போக்கு எண்ணங்களை அரசாங்கம் எதிர்த்து நசுக்கியது.

நாட்டிற்கு எதிராகச் சதி செய்பவர்களின்மீது அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுத்தது. கி.பி. 1952ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கம்யூனிஸ்டுக் கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டது. பீபுன் கொடைப் பண்புள்ளவராயிருந்ததால் அவர் தம்முடைய விருப்பம்போல் நடத்தும் ஆட்சியை மக்கள் எதிர்க்கவில்லை. தமக்கு முன்பு ஆட்சி புரிந்தவர்களின் பொருளாதாரக் கொள்கைகளையே பீபுன் பின்பற்றினர். உண்மையான குடியாட்சி முறையில்லையே என யாரும் வருத்தப்பட்டதாய்த் தெரியவில்லை. கருத்து வேறுபாடு காரணத்தாலும் முடியாட்சி நிலைத்து வந்த காரணத்தாலும் யாரும் பீபுனை எதிர்க்கவில்லை. தனி நோக்கமுள்ளவர்கள்தாம் பீபுனை ஆட்சியிலிருந்து விலக்க முயற்சி செய்தார்கள். அவரை ஆட்சி யிலிருந்து விலக்க மூன்று முறை திடீர் அரசியல் புரட்சி தோன்றியது. ஆனல், இம் முயற்சிகளெல்லாம் தோல்வி யடைந்தன.

அமெரிக்காவின் ஆதரவு இருந்ததால்தான் பீபுனல் தங்கு தடையில்லாமல் ஆட்சிபுரிய முடிந்தது. குடியாட்சி முறையை ஆதரிக்கும் முக்கியத் தலைவரென்றும் தென்கிழக்காசியாவில் கம்யூனிஸத்தை எதிர்க்கும் பெரும்பகைவர் என்றும் எண்ணி அமெரிக்கக் குடியரசு பீபுனை ஆதரித்தது. ஆகையால் கனிசமான பொருளாதாரம், இராணுவம், தொழில் ஆகிய துறைகளுக்கு வேண்டிய உதவியை அமெரிக்கா பீபுனுக்குக் கொடுத்தது. மேலும் கம்யூனிஸ்டுச் சீனவையும், சீனர்களையும் பீபுன் எதிர்த்ததால், அமெரிக்கக் குடியரசுடன் உள்ள நட்பு வலுத்தது. கொரியப்போர் மூண்டவுடன் ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு ஒத்தாசையாக ஒரு சிறிய தாய்ப்படையைக் கொரியாவுக்குப் பீபுன் அனுப்பினர். வடவியட்நாம் அல்லது கம்யூனிஸ்டுச் சீன தாய்லாந்தின்மேல் படையெடுத்தாலும் எடுக்கலாம் என அஞ்சிப் பீபுன் தென்கிழக்கு எல்லையை நன்கு பாதுகாத்துவந்தார். தன்னுட்சி உரிமைத் தாய்மக்கள் அரசாங்கம் (Thailand Autonomous Peoples Government) ஒன்று நிறுவப்பட்டது என்றும், அமெரிக்காவின் தனித் தலைமையையும் அதன் கைப்பாவையான தாய் அரசாங்கத்தையும் தாய் மக்கள் எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்றும் கி.பி. 1953ஆம் ஆண்டில் ஜனவரி 31ஆம் நாள் ஒளிவு மறைவின்றிச் சீனவிலுள்ள வானொலி ஒலி பரப்புச் செய்தது. ஆகையால் தென்கிழக்காசிய நேச உடன் படிக்கை அமைப்பைப் (Seato) பீபுன் மனமார வரவேற்று, ஆதரித்து, அதன் நிலையான தலைமை அலுவலகத்தைப் பாங் காக்கில் அமைக்க உடன்பாடு கொடுத்தார்.

கி.பி. 1955ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் பீபுனின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளில் பெரிய மாறுதல் ஏற்பட்டது. பீபுன் உலகப் பயணம் செய்தார். அமெரிக்கக் குடியரசில் மூன்று வாரம் பயணம் செய்தார். இதன் விளைவாக அமெரிக்கக் குடியரசில் இருந்ததைப்போல் தாய்லாந்திலும் மக்களுரிமையுள்ள முற்போக்கு ஆட்சியை அமைக்க விரும்பினர். படைத்துறை முதல்வரின் பதவியை (Inspector–General of the armed forces) விட்டு விலகினர்; வாணிபத் துறைகளில் தமக்குள்ள பங்கு (Stock) முதல்களை விற்ருர்; பொருளாதாரத் துறையில் தங்களுக்குள்ள சிறப்புரிமைகளை விட்டுக் கொடுக்குமாறு அமைச்சர் அவையிலுள்ள மற்ற அமைச்சர்களை வேண்டிக் கொண்டார். செய்தித்தாள்கள் உரிமையோடு இயங்க உடன்பாடு கொடுத்தார். எதிர்க்கட்சியினரை ஊக்குவித்துக் கி.பி. 1957ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஒரு பொதுத் தேர்தல் நடத்தக் கட்டளையிட்டார்.

அவருடன் கூட்டாட்சிபுரிந்த மற்ற இருவரும் இம் மாறுதல்களை வரவேற்கவில்லை. இவை 'அறிவற்ற கருத்துகள்' என்றும், குடியாட்சியில் உண்மை நிலையைப் பரப்புவதன் மூலம் தம்முடைய பதவியை வலுப்படுத்தப் பீபுன் முயல்கிறார் என்றும் அவர்கள் கூறினார்கள்.

அயல்நாட்டு விவகாரங்களில் தாம் அமெரிக்காவின் கைப் பாவையில்லை; உரிமையை விரும்புபவர் என எடுத்துக்காட்டப் பீபுன் முயன்றார். கம்யூனிஸ்டுச் சீனு தாய்லாந்தின்மேல் படையெடுக்கும் என்ற அச்சம் அவரிடம் தற்சமயம் இல்லாமலிருந்தது. ஏனைய நாடுகளுடன் ஒத்துவாழ விரும்புகிறோம் எனச் சூயென் லாய் (Cho-Enlai) கூறியதைப் பீபுன் வரவேற்றார். அமெரிக்கா தவறான முறையில் தாய்லாந்துடன் நடக்க முயன்றால், உருசியாவின் நட்பை நாடவும் துணிந்தார். கம்யூனிஸம் பரவாமலிருப்பதற்கு வேண்டிய செயல்களைச் செய்ய அமெரிக்கா விரும்பியது; தாய்லாந்தின் பொருளாதார வளர்ச்சிக்காகப் பாடுபடவேண்டும் எனப் பீபுன் விரும்பினார்.

கி.பி. 1957 ஆம் ஆண்டில் தாய்லாந்தில் தேர்தல் நடந்தது. எதிர்பார்த்ததைப்போல் பீபுன் வெற்றிபெற்றார். எதிர்பார்த்ததற்கு மாறாக எதிர்க்கட்சிகள் வலிமையடைந்திருப்பதும் இத் தேர்தல் மூலம் தெரிந்தது. ஆகையால், இப் பணிப் பெருமூவர் (Triumvirate) அடக்கியொடுக்கும் கொள்கைகளைப் பின்பற்றத் தொடங்கினார்கள். கையூட்டும் ஊழலும் நாட்டில் மலிந்திருக்கின்றன எனச் செய்தித் தாள்கள் சுட்டிக்காட்டின. சூலலொங்கோர்ன் பல்கலைக் கழகத்தின் மாணவர்கள் 'நம் குடியாட்சி இறந்துவிட்டது' என்னும் கருத்தைப் பரப்பத் தொடங்கினார்கள்.

ஆகையால், கி.பி. 1957ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் நாள் சாரிட் (Sarit) திடீர்ப் புரட்சி செய்து பீபுனை ஆட்சியிலிருந்து விலக்கினார். இப்புரட்சியினால் யாருக்கும் உயிர் இழப்பு ஏற்படவில்லை. முன்னறிவிப்பின்றி அயல்நாட்டுக் கொள்கையை அரசாங்கம் பின்பற்றியது என்றும், போதிய அளவு மக்களுக்குக் கல்வி வசதிகள் ஏற்படுத்தவில்லையென்றும், விலைவாசிகள் பெருக அரசாங்கம் உடன்பாடு கொடுத்ததென்றும், மக்களின் வாழ்க்கை நிலை மிகவும் இழிவான நிலையை அடைந்திருக்கிறதென்றும், முறையற்ற பொருளாதாரக் கொள்கையை அரசாங்கம் பின்பற்றியதென்றும், கையூட்டிற்கும் ஊழலுக்கும் வாய்ப்பும் ஆதரவும் கொடுத்தது என்றும், பொறுப்பற்ற மக்களாட்சியை எதிர்க்கும்

நிருவாகத்தை நிறுவியது என்றும் பீபுன் அரசாங்கத்தைப் பற்றிப் புரட்சிக்குப் பிறகு சாரிட் பழி கூறினார்.

பிரதம மந்திரி சாரிட் (கி.பி. 1957-63)

பீபுனும், பாவோவும் (Phao) நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டனர். சாரிட் ஆட்சிக்கு வந்தபிறகு, பாதுகாப்புப் படைகளின் தலைவராகப் பதவியேற்றார். பீபுனைப்போல் ஒரு தனித் தலைவராக ஆட்சி புரிந்தார். ஆனால், மக்களாட்சியை ஆதரிப்பதுபோல வேடம் போட்டார். உண்மையில் மக்களின் உரிமைகளைப் புறக்கணித்தார். ஆகையால், அவருடைய போலிக் குடியாட்சி வெற்றிவழியில் செல்லவில்லை; தன்னலமுள்ள அரசியல் வாதிகளும், இடதுசாரிச் செய்தித்தாள்களுமே இத் தோல்விக்குக் காரணம் எனச் சுட்டிக்காட்டினார்.

கி.பி. 1958ஆம் ஆண்டில் மீண்டும் இரண்டாம் முறையாக சாரிட் திடீர்ப் புரட்சி செய்தார்; இச்சமயத்தில் நாட்டின் அரசியல் சட்டதிட்டத்தை நீக்கினார். நாடாளுமன்றத்தைக் கலைத்தார்; தம்முடைய கட்சியைத் தவிர மற்ற அரசியல் கட்சிகளுக்குத் தடைவிதித்தார். போர்க்காலச் சட்ட ஆட்சியின்கீழ் (Martial Law) நாடு வந்தது; அவர் மக்கள் சார்பில் புரட்சியாளர் கட்சி (Revolutionary Party) ஒன்றைத் தொடங்கினார். நாட்டையும், புத்தமதத்தையும், முடியாட்சியையும் பாதுகாக்க வேண்டும் என்பதே இக் கட்சியின் நோக்கம். சாரிட் பிரதம மந்திரிப் பதவியை யேற்றார். நாட்டின் பாதுகாப்பு, அல்லது முடியாட்சி, அல்லது நாட்டின் அமைதியைக் குலைக்கக்கூடிய நடவடிக்கைகளை அடக்கி ஒடுக்க இவரிடம் முழு அதிகாரம் இருந்தது.

கருத்தளவில் இவருடைய ஆட்சியை முடியாட்சி என அழைக்கலாம். ஆனால், நடைமுறையில் இவர் மக்களுக்கு ஓரளவு உரிமை கொடுத்தார் எனக் கூறலாம். ஓர் இடைக்கால அரசியல் சட்டம் வெளியிடப்பட்டது; நாடாளுமன்றமாகவும் இயங்கும் என்ற நோக்கத்துடன் 240 உறுப்பினர்கள் கொண்ட ஓர் அரசியல் நிருணய சபை (Constituent Assembly) உருவாக்கப்பட்டது. அரசாங்கத்திற்கு எதிராக எழும் நடவடிக்கைகளை, சிறப்பாகச் செய்தித்தாள் வெளியிடுபவர்களையும், பல்கலைக்கழக மாணவர்கள் தொடங்கும் செயல்களையும் அரசாங்கம் கடுமையாக எதிர்த்தது. கம்யூனிஸ்டுகள் என ஐயத்திற்கிலக்கானவர்களின்மேல் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. உதாரணமாகக் கம்யூனிஸத்தை ஆதரித்த செய்தித்தாள் ஆசிரியர்களும், எழுத்தாளர்

களும், சில அரசியல் தலைவர்களும், சீனச் சங்கங்களின் தலைவர்களும், தென்கிழக்குத் தாய்லாந்தில் வாழ்ந்துவந்த அகதிகளும், தொழிற்புரட்சியாளர்களும், வணிகர்களும் (பொதுவாக இவர்கள் சீனர்கள்) கைது செய்யப்பட்டார்கள். கம்யூனிஸம் மிகுதியாகப் பரவியிருந்த தென்கிழக்குத் தாய்லாந்திலும், வடமேற்கு எல்லைகளிலும் மலேயாவைப் பிரிக்கும் தென் எல்லைப் பகுதிகளிலும், பாங்காக் நகரத்திலும் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் சாரிட் ஆட்சி உணர்ச்சியற்ற இரக்கமற்ற ஆட்சி ஆகையால், மக்களால் விரும்பப்படாத நிலையில் இருந்தது எனக் கூறமுடியாது. அவருடைய ஆட்சியின்கீழ்த் தாய்லாந்து முன்னேற்றம் அடைந்தது. பொருள்களின் விலையைக் குறைக்கவும், நாட்டின் வாழ்க்கை நிலையை முன்னேற்றவும் சாரிட் முயன்றார். அயல்நாட்டு உதவி கிடைத்ததால் நாட்டின் வேளாண்மை பெருகியது; வாணிபமும் தொழிற்சாலைகளும் வளர்ச்சியடைந்தன; நெடுஞ்சாலைகளின் வளர்ச்சி பெருக்கப்பட்டன; அணைகள் கட்டப்பட்டன; இணைப்பு வழிகள் நாகரிக முறையில் சீர்ப்படுத்தப்பட்டன. தனியார்களின் (அயல்நாட்டாரின்) மூலதனத்தை ஆதரிக்கும் நோக்கத்துடன் கி.பி. 1959ஆம் ஆண்டில் ஒரு புது முதலீட்டுச் சட்டம் (A new investment) அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. வரிச் சலுகைகள் கொடுக்கப்பட்டன; பண அனுப்பீட்டுக்கு ஈட்டுப் பொறுப்புக் கொடுக்கப்பட்டது; வாணிபத் தொழிற்சாலைகள் நாட்டுடைமை யாக்கப்படமாட்டா என்றும், அரசாங்கம் இவற்றுடன் போட்டியிடாது என்றும் உறுதியளிக்கப்பட்டது. தனியார் வாணிபத்தின் மூலம் தாய்லாந்தை முன்னேற்ற வேண்டும் எனச் சாரிட் விரும்பினார்.

புதுக் கல்வித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. பள்ளிக்கூடத்தில் கட்டாயமாக நான்கு ஆண்டுகள் படிக்கவேண்டும் என்று இருந்த சட்டத்தை ஏழு ஆண்டுகள் படிக்க வேண்டும் என மாற்றியமைத்தார். வாழ்க்கை, தொழில் ஆகியவற்றிற்குரிய பயிற்சிகள் பள்ளிகளில் கொடுக்க முயற்சியெடுக்கப்பட்டது. நாடு முழுவதும் உடல்நல வசதிகள் செய்ய முயற்சி யெடுக்கப்பட்டது; சேரிகளையும் பாங்காக்கையும் முன்னேற்றுவதற்குரிய திட்டங்கள் நிறுவப்பட்டன. தூயகுடிநீர் கொடுக்கவும், தூய்மை, உடல்நலம் ஆகியவற்றிற்கு வேண்டிய வசதிகளைச் செய்யவும் சாரிட் முயற்சி செய்தார். சூதாட்டத்தைக் குறைத்தார்; அபினிக்குத் தடை விதிக்கப்பட்டது. ஆனால், கையூட்டையும், ஊழல்களையும் குறைக்க அவரால் முடியவில்லை; கூறப்போனால் சாரிட்டே கையூட்டும்

ஊழலும் நிறைந்தவரா யிருந்தார். இவர் இறந்த பிறகு இவருடைய ஊழல்கள் வெளிப்படையாக அறிவிக்கப்பட்டன.

கம்யூனிஸ்டுச் சீனுவும், வட வியட்நாமும் தாய்லாந்தின்மேல் படையெடுக்கும் என்ற அச்சம் நிலவியிருந்தது. ஆகையால், அமெரிக்கக் குடியரசின் ஆதரவு தாய்லாந்திற்கு இன்றியமையாதது எனச் சாரிட்டுக்குத் தெரியும். இருந்தாலும், தாய்லாந்தை அமெரிக்கக் குடியரசின் கைப்பாவையாக மாற்றச் சாரிட் விரும்பவில்லை. அமெரிக்கப் படைத்தலைவர்களுடன் சாரிட் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த போதிலும், அமெரிக்கச் செல்வாக்கு தாய்லாந்தில் பெருகுவதை அவர் விரும்பவில்லை. அமெரிக்கக் குடியரசின் உதவி தேவையாயிருந்தது; ஆனுல் அமெரிக்காவின் கொள்கைகளை ஐயுற்ருர். அமெரிக்கக் குடியரசையே முழுவதும் நம்பி வாழ்வதைச் சாரிட் விரும்பவில்லை. ஆகையால், அமெரிக்கக் குடியரசின் ஆதரவைத் தேடியபோதிலும், கம்யூனிஸ்டு நாடுகளுடன் ஒற்றுமை பேசும் வாய்ப்பைச் சாரிட் இழக்கவில்லை.

கம்யூனிஸ்டுச் சீனுவைச் சாரிட் விருப்பத்துடன் நோக்கவில்லை, தலைமுறை தலைமுறையாகத் தாய்மக்களுக்குச் சீனர்களின் மேலும், கம்யூனிஸத்தின் மேலும் உள்ள வெறுப்பு சாரிட்டுக்கும் இருந்தது. பார்மோஸா சீனுவைத் (Formosa China) தாய்லாந்து ஒப்புக் கொண்டது; ஆனுல், கம்யூனிஸ்டுச் சீனுவை எதிர்த்தது. (இக் கொள்கையை அமெரிக்கக் குடியரசு மனமார வரவேற்றது); இருந்தாலும் கம்யூனிஸ்டுச் சீனுவின் நட்பையும் சாரிட் நாடினுர். கம்யூனிஸ்டுச் சீனுவுடன் உள்ள வாணிபத் தொடர்புக்குத் தடை விதித்திருந்தார்; ஆனுல் தாய் அரசியல் வாதிகளும், செய்தித்தாள் வெளியீட்டாளர்களும் கம்யூனிஸ்டுச் சீனுவிற்குச் செல்வதைத் தடுக்கவில்லை. தன்னம்பிக்கையில்லாமலிருந்தபோதிலும் பாங்காக்கிலுள்ள உருசியர்களை மரியாதையுடன் நடத்திஞர் நடுநிலைமை அயல்நாட்டுக் கொள்கைகள் மூலம் பல நாடுகள் இருதரப்பினரிடமிருந்தும் உதவி பெறுவது சாரிட்டையும் கவர்ந்தது. வருங்காலத்தில் கம்யூனிஸ்டுச் சீனுவின் நட்பை அமெரிக்கக் குடியரசே நாடும் எனச் சாரிட் நினைத்தார். இருந்தபோதிலும் கம்யூனிஸ்டுச் சீனு தாய்லாந்திற்கு எதிரி என்ற எண்ணத்தைச் சாரிட் விட்டுவிடவில்லை.

கி.பி. 1959, கி.பி. 1960ஆம் ஆண்டுகளில் லாவோஸ் நெருக்கடியின்போது அமெரிக்கக் குடியரசு எடுத்த நடவடிக்கைகளைச் சாரிட் ஐயுற்ருர். மேகாங் எல்லையைக் கடந்து தாய்லாந்து எல்லைக்

குள் லாவோஸோ வடவியட்நாமோ வந்தால் அமெரிக்கக் குடியரசு தாய்லாந்தின் உதவிக்கு வராதோ எனச் சாரிட் அஞ்சினுர். ஆகையால், அமெரிக்கக் குடியரசு வெளிப்படையாக நடைமுறையில் தாய்லாந்தின் உதவிக்கு வரவேண்டும் என வலியுறுத்திஞர். இல்லாவிட்டால் உருசியாவின் உதவியைத் தாய்லாந்து நாடும் எனத் தாய்லாந்துச் செய்தித்தாள்கள் மூலம் மறைமுகமாகச் சுட்டிக் காட்டிஞர். ஆகையால், மக்கள் தலைவர் கென்னடி ஆட்சிக்கு வந்த பிறகு கி.பி. 1962ஆம் ஆண்டு மார்ச்சில் தாய்லாந்திற்கும் அமெரிக்கக் குடியரசுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படி தென் கிழக்காசிய நேச உடன்படிக்கை அமைப்பின் முந்திய ஒப்பந்தம் இல்லாமலே அமெரிக்கக் குடியரசு தாய்லாந்தின் உதவிக்குக் கம்யூனிஸத்திற்கு எதிராக வரும் எனக் கூறப்பட்டது. மேலும், கொரில்லாப் போர் முறைகளில் தாய்ப் படை வீரர்களுக்குப் பயிற்சியளிக்கவும் அமெரிக்கா ஒப்புக்கொண்டது. கி.பி. 1962ஆம் ஆண்டு மே மாதம் 5000 அமெரிக்கக் கடற்படை வீரர்கள் தாய்லாந்தைப் பாதுகாப்பதற்காக அனுப்பப்பட்டனர். லாவோஸ் தாய்லாந்தின் மேல் படையெடுக்கும் என்ற அச்சம் நீங்கியவுடன் ஆகஸ்டு மாதம் அமெரிக்கப் படை வீரர்கள் தாய்லாந்திலிருந்து வெளியேறினுர்கள். கி.பி. 1963ஆம் ஆண்டில் சாரிட் இறந்த போது தாய்லாந்தின் அயல்நாட்டுக் கொள்கை அமெரிக்கக் குடியரசின் நட்பையே நாடியிருந்தது.

படைத்துறை உயர்நிலைப் பணியாளர் தானேம் (Field-Marshal Thanom, 1963)

சாரிட் இறந்த பிறகு அவருடைய நெடுங்கால நண்பரான தானேம் கிட்டி காசோர்ன் (Thanom Kitti Kachorn) பிரதம மந்திரிப் பதவியேற்ருர். பொதுவாக, தானேமின் ஆட்சியில் கையூட்டும் ஊழல்களும் கிடையா எனத் தாய்மக்கள் கருதினுர்கள். நாட்டைப் பாதுகாப்பதற்காகப் படைத்துறையைத் தானேம் வலுப்படுத்தினுர். நாட்டின் முழு அதிகாரமும் தானேமிடமே இருந்தது. கி.பி. 1965ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடியரசு தாய்லாந்து விமான தளத்தை வடவியட்நாமிற்கு எதிராகப் பயன்படுத்தத் தொடங்கியது. ஆறு தாய் (Thailand) விமானதளங்களில் 50,000 அமெரிக்கப் படைவீரர்கள் தங்கியிருந்தார்கள். கி.பி. 1969ஆம் ஆண்டின் இடைக்காலத்திலிருந்துதான், மக்கள் தலைவர் நிக்ஸன் ஆட்சியில், இவ் வமெரிக்கப் படை வீரர்கள் தாய்லாந்தை விட்டுப் படிப்படியாக வெளியேறத் தொடங்கினுர்கள்.

6. இந்தோ-சீன நாடுகள்

(வியட்நாம், கம்போடியா, லாவோஸ்)

வியட்நாம்—சமூக அமைப்பு

தென்கிழக்காசியாவில் உள்ள சிறந்த நாடுகளில் வியட்நாம் தான் இறுதியாக ஐரோப்பியர்களின் தலைமையின்கீழ் வந்தது. பதினேழாவது நூற்றாண்டிலிருந்தே அலெக்சாண்டர் ரோட்ஸ், (Alexander Rhodes) தலைமையின்கீழ் வந்த சமயப்பரப்பாளர்களும் அவர்களுக்குப்பின் வந்த கத்தோலிக்க மதப்பரப்பளர்களும் வியட் நாமின் மீது கவனம் செலுத்தத் தொடங்கினார்கள். என்குயன் மரபினரின் (Nguyen Dynasty) ஆட்சியை நிறுவ உதவிய பிக்நியூ தி பெகைன் (Pigneau De Behaine) மற்றும் பல பிரெஞ்சுத் தலைவர்களின் செல்வாக்குக் கி.பி. 1800—1820ஆம் ஆண்டுகளில் ஓங்கியது. உயர்வகுப்பைச் சேர்ந்த இரு பிரெஞ்சு மாண்டரின்கள் (Mandarins—பிரெஞ்சு ஆட்சி வகுப்பினர்) கி.பி. 1819ஆம் ஆண்டில் (Hue) ஹியூவில் தங்கியிருந்தார்கள்.

தூதுத் தொடர்பை அமைக்கச் செய்த முயற்சிகள் வெற்றி யடைந்து, இறுதியாகப் பிரெஞ்சு அரசாங்கம் ஹியூவுடன் தூதுத் தொடர்பை அமைத்தபோது பிரெஞ்சுக்காரர்களிடம் நேச மனப் பான்மையுடன் நடந்து கொண்டிருந்த ஜியா லாங் (Gia Long) இறந்தார். அவர் இறந்த பிறகு நாட்டுப்பற்றுடையோருக்கும் பழைமைப் பற்றுளர்களான கன்பூசியத் தத்துவத்தினருக்கும் (Confucianists) வியட்நாம் அவையில் மிகுந்த செல்வாக்கிருந்தது. வியட்நாமுடன் உடன்படிக்கையேற்படுத்தப் பிரிட்டனும் பிரான்சும் முயற்சிகள் செய்தன. ஆனால், வியட்நாமின் புதிய அரசர் இக் கருத்துகளை வரவேற்கவில்லை. மேலும், கி.பி. 1825ஆம் ஆண்டிலிருந்து இவர் கிறித்தவ மதப்பரப்பாளர்களுக்கும் சமயம் மாறிய வியட்நாம் மக்களுக்கும் தொல்லை கொடுக்கத் தொடங் கினார். 1833ஆம் ஆண்டில் வியட்நாம் அரசர் செய்த தொல்லை கட்டுமீறிப் போனதால் மன்னர் மின்மாங்கிற்கும், பிரெஞ்ச மதப் பரப்பாளர்களுக்குமிடையே ஓயாச் சண்டை சச்சரவு ஏற்பட்டது. ஆகையால், கிழக்காசியாவிற்கு வரும் பிரெஞ்சுக் கப்பல்களின் உதவியைச் சமயப் பரப்பாளர்கள் நாடினார்கள்,

லூயி நெப்போலியன் (Louis Napoleon) காலத்தில் பிரெஞ்சு அரசாங்கம் வியட்நாமில் வெளிப்படையாகத் தலையிடத் தொடங்கியது; இச் சூழ்நிலையில் சைகானும் (Saigon) அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் பிரெஞ்சு வயம் ஆயின. சீனர்களும், சியாம் அரசாங்கமும் தொந்தரவு கொடுத்த போதிலும், இறுதியாக வியட்நாம், கம்போடியா, லாவோஸ் ஆகிய நாடுகள் பிரான்சின் தலைமையின் கீழ் வந்தன. தொடக்கத்தில் பிரெஞ்சு நாட்டின் மதிப்பை உயர்த்துவதற்காகத்தான் பிரெஞ்சின் தனித் தலைமை இந் நாடுகளில் அமைக்கப்பட்டது. கி.பி. 1897ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் நிருவாகத்தைத் திறமையுடன் நடத்தத் தொடங்கினர்கள்; வாணிபம் மூலமாக இந் நாடுகளைச் சுரண்டவும் இவ்வாண்டிலிருந்துதான் தொடங்கினர்கள். பிரெஞ்சுப் பேராசிரியர்கள் வியட்நாம் வரலாற்றைப்பற்றியும், பண்பாட்டைப்பற்றியும் திறமையுடன் ஆராயத் தொடங்கினர்கள். பண்பாடுகளை ஒன்று படுத்தவும், பேரரசு ஆட்சிமுறையைத் தழைத்தோங்கச் செய்யவும் பிரெஞ்சு அரசாங்கம் செய்த முயற்சியினுல் மேலை நாடுகளுடனுள்ள பொருளாதார அரசியல் தொடர்பை வியட்நாம் மக்களால் சரிப்படுத்திக் கொள்ளவும், சீரமைக்கவும் முடியவில்லை.

வியட்நாம் சமூக அமைப்பு : கி.பி. 1820

கன்பூசியஸின் கோட்பாடுகள் வியட்நாம் சமூகத்தின் அடிப்படையாய் விளங்கின. சீன நாட்டைவிட வியட்நாமே கன்பூசியக் கோட்பாடுகளைக் கடுமையாகப் பின்பற்றியது எனப் பல அறிஞர்கள் கூறுகிருர்கள். கன்பூசியத் தத்துவத்தின்படிப் பேரரசரே அதிகார உச்சியிலிருக்க வேண்டும். பேரரசருக்கே தம் விருப்பப்படி ஆள முழு அதிகாரங்கள் இருக்கின்றன. மக்களை ஆட்சிபுரிய வானுலகத்திலிருந்தே அவருக்கு நீதி மன்றக் கட்டளை உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. பொது நலம் கருதி அரசர் நல்லவராய் நடந்தால் நாடு செழிப்புடனும், இயற்கையால் ஏற்படும் இன்னல்கள் வராமலும் இருக்கும்; போர்கள் வாரா ; மக்கள் செல்வச் செழிப்புடன் இருப்பார்கள். மன்னர்நெறியற்றுக் கொடியவராயிருந்தால் பஞ்சமும் வெள்ளமும், நோயும், சாவும், மற்றும் பல வகையான இயற்கையின் இடையூறுகளும் நாட்டைப் பாழ்படுத்தும். இவ்வகையான சூழ்நிலையேற்பட்டால் வானுலக நீதிமன்றக் கட்டளை அவரிடமிருந்து நீக்கப்பட்டது என்பதற்கு அறிகுறியாகும். கலகத்தின் மூலம் ஒரு கொடிய மன்னரைப் பதவியிலிருந்து நீக்கினுல் அது நேரிதே ஆகும்.

மன்னர்தாம் ஆட்சிபுரிய வேண்டும்; மற்றவர்களுக்கு அத்தகைய அதிகாரங்கள் கிடையா; அவர்கள் மன்னருடைய

பிரதிநிதியாக இருக்கவேண்டும். நாட்டுப் பொறுப்புகள் எல்லா வற்றையும் மன்னரே ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகையால், மன்னர் ஏவலுக்கு மற்றவர்கள் பணிபுரிய வேண்டும் என்பதை மக்கள் ஒப்புக்கொண்டார்கள். நல்லொழுக்கமுடையவர்களே அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத் துடன் சீனர்களின் தேர்ந்தெடுக்கும் முறை பயன்படுத்தப்பட்டது. கன்பூசியக் கோட்பாடுகளே மிகச் சிறந்த படிப்பு என எல்லோரா லும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஒருவர் கன்பூசியக் கோட்பாடுகளைத் திறமையுடன் கற்றறிந்திருந்தாரானல் அவர் நற்குணமுடைய வராய் மாறுவார். இவ்வாறு கல்வி பயிலுவது சில ஆண்டுகளில் இயலாது; பல ஆண்டுகளாகும். இறுதித் தேர்வு மிகவும் கடுமை யானது. ஒருவர் இத் தேர்வில் தேறினல் அவர் சீன மெய்ப்பாடு களையும், சீன இலக்கியத்தையும், சீன, வியட்நாம் ஆகியவற்றின் வரலாற்றையும், கவிதையையும், கன்பூசியச் சடங்கு முறைகளை யும் கற்றறிந்த பேரறிஞர் எனக் கருதப்படுவார். இறுதித் தேர்வில் தேறும் சமயத்தில் ஒருவருக்கு நாற்பது அல்லது ஐம்பது வயதாகி யிருக்கும். முப்பது வயதடைவதற்கு முன்பே இத் தேர்வில் தேறு வது என்பது மிகமிக அரிதே. ஒருவர் படைத்துறையைச் சாராத அரசு அலுவலர் தேர்வில் தேறினல் அவருக்கு மேண்டரின் (Mandarin) பதவியும், நான்காம் மதிப்புப்படிப் பட்டமும் கொடுக்கப்படும். மேண்டரின் என்றல், பொதுவாகச் சீன உயர்தரப் பணிப்படிகள் ஒன்பதிலும் இடம் பெற்றவர்; சீன ஆட்சி வகுப்பினர் எனப் பொருள். மேண்டரின் என்ற சொல்லுக்கு வடமொழியே மூல முதலிடம். இதற்கு மன்ற உறுப்பினர் என்றும், நாட்டின் அமைச்சர் என்றும் பொருள் உண்டு. ஆனல், வியட்நாம் மக்கள் இச் சொல்லைத் தன்னியற்படுத்த முயற்சியே செய்யவில்லை. வியட்நாம் மொழியில் மேண்டரினைக் குவான் (Qwan) என அழைக்கிறார்கள். முதல், இரண்டாவது மூன்ருவது மதிப்புப் படிப்பட்டத் தேர்வில் தேறிய மேண்டரின் மக்களுக்குப் படை வேலையிலிருந்தும், தொழிலாளி வேலையிலிருந்தும், வரி கொடுப்ப திலிருந்தும் விலக்குரிமை யளிக்கப்பட்டது. ஆனல் நான்கு, ஐந்து, ஆருவது படிப்பட்டத் தேர்வில் தேறியிருந்தாலும் சில மேண்டரின்கள் வேலையில் சேராமல் தங்கள் கிராமத்திற்குத் திரும்பிச் சென்று அங்கு ஏழையாகவே வாழ்ந்தார்கள். ஆனல், வரி செலுத்துவதிலிருந்து இவர்களுக்கு விலக்குரிமை கொடுக்கப்பட் டிருந்தது.* சில கூர்மதியுள்ள மேதைகள் முதல் தடவையே நேரடியாக இரண்டாம் மதிப்புப் படிப்பட்டத் தேர்வுக்கு அமரு

* மக்கள் இவர்களுக்கு அதிக மதிப்புக் கொடுத்தார்கள்.

வார்ககள். பேரரசர்கள் எல்லோரும், குறிப்பாக மின்-மாங் (Minh-Mong)—கற்றறிவாளர்களாயும், புலவர்களாயும் திகழ்ந்தார்கள்.

அரசர் கூறியபடிச் செய்யும் அதிகாரிகளாக மேண்டரின்கள் இருக்க வேண்டும். மேண்டரின்களின் வகுப்பு சமூகத்தில் தனித்திருந்தது; அவர்களுக்கு மிகுந்த அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன; பேரரசரைத் தங்கள் விருப்பப்படி நடத்திவைக்க அவர்களுக்குப் பல வாய்ப்புகளிருந்தன. மேண்டரின் பதவி தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வருகிற பதவியன்று. படித்துப் பட்டம்பெற்றே ஒவ்வொருவரும் அப்பதவியைப் பெற்றார்கள். பழமைக் கருத்துகளையுடையவர்களாகவும் நிலையமைதிப் பண்புடையவர்களாகவும் இருந்த மேண்டரின்கள் எல்லோருக்கும் ஒரே மனப்பான்மையிருந்தது; அவர்கள் மாறுதல்களை எதிர்த்தார்கள்; தங்களுடைய வகுப்புப்பிரிவில் மற்றவர்களைச் சேர்த்துக்கொள்ள மறுத்தார்கள். சமூகமும் இவர்களுடைய மனப்பான்மையை ஏற்றுக்கொண்டது. மக்களின் நன்மதிப்பையும், புகழையும் பெற்றவர்களாய்த் திகழ்ந்தார்கள். பேரரசருக்குத்தான் இவர்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள். இவர்களைப் பதவியில் அமர்த்தவும் விலக்கவும் பேரரசருக்கே உரிமையிருந்தது. இவர்களில் உயர்ந்தவர்கள் தங்கள் அதிகாரங்களைத் தவறான வழியில் பயன்படுத்தவில்லை. பத்தொன்பாவது நூற்றாண்டில் செய்த சமூகச் சீர்திருத்தத்தினால் உயர்குடினர் ஆட்சி புரிந்தவர்களுடைய நிலப்பண்ணை முறைத் தனிச் சலுகைகள் குறைந்தன. ஆகையால், பேரரசருக்கும் பொதுமக்களுக்குமிடையே ஓர் ஆற்றல் வாய்ந்த மேற்குடிமக்கள் இல்லாமலிருந்தார்கள். பதிலாகப் படிநிலை அமைப்புப்பணி முதல்வர்களே இருந்தார்கள். தகுதியுள்ளவர்களுக்குச் சிறப்பு வாய்ந்த மதிப்புப் பட்டங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால், இவற்றின் மூலம் அதிகாரங்களோ, பணிபுரியும் கடமைகளோ இவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. பட்டிங்கர் என்னும் அறிஞர் கூறுகிறார் :—

'நிலப்பண்ணை முறைத் தனிச் சலுகைகளுடைய நிலவுடைமையாளர்களும், தொழில் துறையைச் சார்ந்த முதலாளிகளும் இல்லாத இச்சமூகத்தில் உயர்குடிப் பதவியிலுள்ளவர்களுக்கும் அரசியல்வி செல்வாக்கில்லை; படைத்துறைக்கும் ஆட்சி புரிவதற்கும் வாய்ப்புக் கிடையாது; சமய நோக்கத்தையுடையவர்களுக்கு மக்களிடையே செல்வாக்கு இல்லை. கல்விப் பயிற்சிமூலம் அதிகாரம் பெற்ற மேண்டரின்கள்தாம் நாட்டில் ஒரே ஓர் அதிகாரம் பெற்ற வகுப்பினர்கள்; சமூக மாறுதல்களையும்,

தொழில் துறையைச் சார்ந்த முன்னேற்றங்களையும் இவ்வகுப்பினர் எதிர்த்தார்கள்.'

படித்துப் பட்டம்பெற்ற வியட்நாம் மக்களே ஆளும் வகுப்பின ராக இருந்தார்கள். கல்வி பயில்வது இலவசமாயிருந்ததால் ஓர் ஏழைக் குடியானவனுடைய மகன்கூட மேண்டரினாக மாறு வதற்கு வாய்ப்பு இருந்தது. மன்னர்களும், மேண்டரின்களும் புலவர்களாயிருந்ததால் அவர்கள் நேர்மையுடையவர்களாயும், பகுத்தறிவுள்ளவர்களாயும், இருப்பதாய்க் கருதி மக்கள் அவர் களுக்கு மதிப்புக் கொடுத்தார்கள். கொடியவர்கள்தாம் அவர் களுடைய அதிகாரத்தை எதிர்ப்பார்கள்.

வியட்நாம் சமூகத்தில் மிக உயர்ந்த மதிப்புக் கற்றறிவாளர் களுக்கே கொடுக்கப்பட்டது. அடுத்தபடியாகப் பணக்காரர் களுக்கு மதிப்புக் கொடுக்கப்பட்டது. பிறகு கருமான், தச்சன் போன்ற தொழில் வல்லுநர்களுக்குத் தகுநிலை கொடுக்கப்பட்டது. செல்வர்கள், ஏழைப் புலவர்களுக்கு மதிப்புக் கொடுத்தார்கள்; ஆனல் புலிவர்கள் (புலவர்கள்) செல்வர்கள் எல்லோரையும் மதித் தார்கள் எனக் கூற முடியாது. கல்வியும், பகுத்தறிவும் வலிமையைவிட உயர்ந்தவை என வியட்நாம் மக்கள் கருதினார்கள். ஆகையால், மேண்டரின் ஆட்சி வகுப்பினரை எதிர்ப்பவர்களே இல்லை.

ஆனாலும், மேண்டரின் வகுப்பினர் மக்களுக்குச் சுமையா யிருந்தார்கள் எனச் சில இடங்களில் வியட்நாம் இலக்கியங் களில் கூறப்பட்டிருக்கின்றன. இக்காலத்தில் வியட்நாமுக்கு வந்த மேலைநாட்டவர்களும்,சைக்நியூக் கோமகன் (Duke of Chaigneau) உட்பட, மேண்டரின்கள் மக்களைத் துன்புறுத்தினார்கள் எனக் கூறுகிறார்கள்.

கி.பி. 1808ஆம் ஆண்டில் சைக்நியூ கூறுவது

'எல்லா மக்களும் ஆழ்துயர் நிலையிலும், அவல நிலையிலும் இருந்தார்கள். மக்களுக்கு உணவும், ஊதியமும் கொடுக்காமல் அவர்களை வேலை செய்யும்படி மன்னர் கட்டாயப்படுத்துகிறார்; மேண்டரின்கள் துன்புறுத்துகிறார்கள்; முடிந்த அளவு களவாடு கிறார்கள். உரிமைக் கோரிக்கை வழக்குகளில் கொடுக்கும் தீர்மானங்கள் இருதரப்பாருக்கும் கேடு விளைவிக்கின்றன.'

புதுமைப் பாங்கும், மேலை நாட்டினரை எதிர்க்கும் தன்மையும் இருந்ததால் மேண்டரின்கள் வியட்நாமின் அரசுரிமையை அழித்

தார்கள். தொடக்கத்தில் கருத்து வேறுபாடுகள் இருந்ததால் தான் இவர்கள் மேலை நாட்டினரை எதிர்த்தார்கள்; இவ்விரண்டு இனத்தார்களும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளாமல் தவித் தார்கள்.

மேண்டரின் ஆட்சி வகுப்பினர்களுக்கும், வியட்நாம் பொது மக்களுக்கும் ஒரே வகையான பழங்கருத்துகளிலிருந்ததால்தான் வியட்நாம் மக்கள் அவர்களை ஆதரித்தார்கள். இந்த மனப்பான்மை மேலை நாட்டினர்களுக்குப் புரியவில்லை. மேலைநாட்டு அறிவியல் ஆராய்ச்சி முறைகளும், தொழில் நுணுக்கப் பயிற்சி முறைகளும் மேண்டரின்களுக்குப் புரியவில்லை; மேலைநாட்டவர்கள் புரியும்படி விளக்கம் கொடுத்தபோதும் அவைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக யில்லை. மேலை நாட்டினர்களின் புதுமைப் பாங்கான கருத்துகள் வியட்நாமிற்குத் தேவையில்லை. மாறுதல்களை அனுமதித்தால், மேலை நாட்டினரை ஏற்றுக்கொண்டால் வியட்நாம் அயல்நாட்டினர் தலைமையின்கீழ் வரும் என அஞ்சினார்கள்; மதப் பரப்பையும் எதிர்த்தார்கள். ஆகையால், தன்னுடைய மதவுரிமைகளைப் பாதுகாப்பதற்காகப் பிரான்சு படைப்பிரிவைப் பயன்படுத்தியது.

கி.பி. 1820ஆம் ஆண்டில் வியட்நாமுக்குச் சென்ற அயல் நாட்டினர் வியட்நாமிலே பருவமுற்ற பண்பட்டநிலையும், முதிர்ந்த நாகரிகமும் இருப்பதாகக் கருதினார்கள். தென்கிழக் காசிய மக்களுக்குள் வியட்நாமிய மக்களே உயர்ந்த பண்பாட்டு நிலையடைந்திருந்தனர் எனப் பலர் கருதினார்கள். வியட்நாமியர் பட்டுத் துணிகளையும், பருத்தி ஆடைகளையும் பீங்கான்களையும் உருவாக்கினார்கள். உலோகப் பொருள்களையும், சிறப்பாகப் பித்தளைப் பொருள்களையும் செய்வதில் வல்லுநர்களாயிருந்தார்கள். வியட்நாம் மக்கள் குட்டையாகவும், பேச்சில் விருப்பமுடையவர் களாகவும், ஐரோப்பியர்களைப் பார்த்து வியப்படையாதவர் களாகவும் இருந்தார்கள் என அயல்நாட்டார்கள் கூறினார்கள். குடும்ப அமைப்பு சீனர்களின் பாங்கில் அமைந்திருந்தது. குடும்பத்தின் முழு அதிகாரங்களும் தந்தையிடமே இருந்தன. கிராம மக்களின் சமூகப் பொருளாதார அமைப்பு வளம்பெறக் கூடியதாயிருந்தது. நிலங்களும் நீர்ப்பாசன வசதிகளும் கூட்டுறவுச் சங்க முறையில் அமைந்திருந்தன. டொங்கிங்கி லிருந்து (Tongking) தெற்கே போகப்போகச் சீன முறையி லிருக்கும் பண்பாடுகள் படிப்படியாகத் தரம் குறைந்துகொண்டே சென்றன. அடுத்திருந்த கம்போடிய மக்களை நாகரிகமில்லாத காட்டுமிராண்டிகள் என்றும், சியாம் நாட்டு மக்கள் வெறுப்பூட்டு கின்ற அளவுக்கு வீணான பெருமை காட்டிக்கொள்கிற தன்மை

யுடையவர்கள் என்றும் வியட்நாம் மக்கள் கருதினார்கள். டொங்கிங்கிலும், அன்னமிலும் மட்டும்தாம் சீனர்களின் அளவுக் கருவிகளும் எடைவீதங்களும், எடைமானங்களும் உபயோகப் படுத்தப்படுகின்றன.

ஏழ்மையும், நோய்களும் வியட்நாம் முழுவதும் குறிப்பாகத் தென்வியட்நாமிலும், மலைப்பகுதிகளிலும், கி.பி. 1320ஆம் ஆண்டில் பரவியிருந்தன. மேகாங் (Mekong) டெல்டாவின் தெற்கில் அருகிலுள்ள பகுதிகளில்தாம் சீனர்கள் குடியேறியிருந் தார்கள். கடற்கரைப் பகுதிகள் வழியாகவும், உள்நாட்டிலுள்ள கால்வாய்கள் மூலமாகவும் போக்குவரத்து வசதிகள் உள்ளன. தாழ்ந்த கடற்கரையோரத்தில் வாழ்ந்த மக்களின் நிலங்கள் சத்துக் குறைவாக வறண்டு இருந்ததால் அவர்கள் மிகவும் ஏழையாயிருந் தார்கள். பதினாறு வயதிலிருந்து அறுபது வயது வரையுள்ள ஆண்கள் கட்டாயப் படைத்துறைப் பணிக்கும், கூலியில்லா வேலைக்கும் பயன்படுத்தப்பட்டார்கள். நீதிக்கும் விலை உண்டு. ஆகையால், ஏழையைப் பணக்காரர்கள் தங்கள் விருப்பம்போல் தாக்கினார்கள். தூய்மையாயிராமையாலும், அபினி மிகுதியாகக் குடித்ததாலும் மக்களிடையே நோய்களும், ஏழ்மையும் பெருகின.

வியட்னமிலும், கம்போடியாவிலும், சியாமிலும் உயர்குடிப் பதவிகளிலிருந்த மேண்டரின்களின் சமுதாயப் படிநிலை ஒவ்வொரு தலைமுறையிலும் ஒருபடி குறைந்துகொண்டே சென்றது; ஆனால், அரசர் விரும்பியபோது மேல்பதவி நிலைத்து நீடித் திருந்தது. ஒவ்வொரு மாகாணத்திலும் படைத்துறை, படைத் துறையைச் சாராத மேண்டரின்கள் ஆட்சி புரிந்தார்கள். ஒவ்வொரு மாகாணமும் பல பகுதிகளாப் பிரிக்கப்பட்டிருந்தது; இப்பகுதிகள் ஆட்சியரங்கத் தலைவர் பணிமனைகளாகப் பிரிக்கப் பட்டிருந்தன. மேண்டரின்களே எல்லாப் பகுதிகளிலும் ஆட்சி புரிந்தார்கள்.

ஜே.பி. சைக்நியூவின் புதல்வர் நகரத்திலுள்ள உயர் அதிகாரி களின் வாழ்க்கையைப் பற்றி வரைந்திருக்கிறார். மேண்டரினாக இருந்த அவருடைய தந்தை வாழ்ந்த வீட்டைப் பாதுகாப் பதற்காக ஐம்பது காவலர்களும், வீட்டு வேலையாள்களும் கொடுக் கப்பட்டிருந்தார்கள். சீன ஓடுகளால் வீட்டின் கூரை வேயப்பட் டிருந்தது; அழகான விலையுயர்ந்த பொருள்களால் வீடு அணி செய்யப்பட்டிருந்தது; விருந்தினரை வரவேற்பதற்கு வேண்டிய வசதிகளிருந்தன. மகளிர்க்குத் தனி இருப்பிடம் இருந்தது.

வீட்டைச் சுற்றியுள்ள தோட்டங்களில் பூக்களும், தென்னை, பாக்கு முதலிய மரங்களும் மிகுந்திருந்தன. உறுதியான மூங்கில் வேலிகள் போடப்பட்டிருந்தன. பொதுவாக, அரசர் முன் அவைக்குள் நுழைபவர்கள் பல முறை விழுந்து வணங்க வேண்டும்; ஆனால், இரண்டு பிரெஞ்சு மேண்டரின்களும் தலை வணங்கினால் மட்டும் போதும் என அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. அரசர் காட்சி கொடுப்பதும், ஆடல்-பாடல் நடத்துவதும், திடீரென ஏற்படுத்தப்பட்ட வரவேற்புச் சடங்குகளும், மண்ணுக்கும் விண்ணுக்கும் ஆண்டுதோறும் இடும் பலிகளும், அரசரவையின் சிறந்த சடங்குகள். அரசர்களின் முன்னோர்களுக்காக ஓர் அழகான கோவில் கட்டப்பட்டிருந்தது. இராணுவத்தில் 800 யானைப் படை வகுப்புகள் இருந்தன; அவற்றில் 130 யானைகள் அரசவையின் பணிக்காக ஒதுக்கப்பட்டிருந்தன.

மன்னர் வாழ்ந்து வந்த ஹியூ (Hue) நகரமே ஓர் அழகான உறுதியான அரண்; ஒரு பக்கத்தில் ஒன்றரை மைல் தொலைவு வரை நீண்டிருந்தது. இதன் விரிந்த 30 அடி மதில் சுவரில் அழகான வேலைப்பாடுகளைக் காணலாம்; இதன் வெளியே நீட்டிக் கொண்டிருந்த புற அரண்களிருந்தன; ஒவ்வொரு வெளிப்புற அரண்களும் 36 துப்பாக்கிகளால் பாதுகாக்கப்பட்டன. இதன் வெளிச்சுவரின் பக்கவாட்டில் அகழி வளைந்து இருந்தது. உள்ளிருந்த அரண்மனைக் கோட்டை இரண்டு மதில் சுவர்களால் சூழப்பட்டுப் பாதுகாக்கப்பட்டிருந்தது. படைவீடுகள் மிகத் தலைசிறந்த முறையில் கட்டப்பட்டிருந்தன. உள்ளிருந்த போர்க்கருவி உற்பத்திச் சாலையில் பலவகைத் துப்பாக்கிகள் உற்பத்தி செய்யப்பட்டன. பாதுகாப்பு ஏற்பாடுகள் தலைசிறந்த முறையில் பிரெஞ்சு பொறி வல்லுநர்களின் உதவியுடன் அமைக்கப்பட்டிருந்தன. அரணைச் சுற்றியுள்ள அகழி பக்கத்திலிருந்த ஆற்றோடு இணைக்கப்பட்டிருந்தது. கிளைக் கால்வாய்கள் சுவர்களுக்கு உள்ளே ஓடிக்கொண்டிருந்தன. பரந்த நகரப் பெருஞ்சாலைகள் செங்குத்தாக அமைக்கப்பட்டிருந்தன. ஹியூவிற்குள் நுழையும் கடற்கரை ஓரமுள்ள வழிகளையும், டுரேன் (Tourane) துறைமுகத்திலிருந்து வரும் கால்வாயையும் (20 மைல் தூரம்) பிரெஞ்சுக் கைத்துப்பாக்கிகள் வைத்திருந்த படை வீரர்கள் பாதுகாத்தார்கள். கீழை நாடுகளின் படைகளின் தாக்குதலுக்கு அசையாத முறையில் இந்நகரம் அமைக்கப்பட்டிருந்தது எனக் கி.பி. 1820ஆம் ஆண்டில் எல்லோரும் நினைத்தார்கள். வியட்நாமின் தலைநகரத்தை இத்தகைய சிறந்த முறையில் கட்டிய அரசர் ஜியா லாங் (Gia long).

2. ஜியாலாங்கின் சீர்திருத்தங்கள் (1801-1820)

கியாகிங் பேரரசர் அன்னம் நாட்டிற்கு (Annam) வியட்நாம் என்ற பெயரைக் கி.பி. 1803ஆம் ஆண்டில் சூட்டினர். கி.பி. 1801ஆம் ஆண்டு ஜூன் மாதம் என்குயன் (Nguyen) ஹியூ நகரத்தைக் கைப்பற்றியவுடன் அன்னம் அரசுரிமையைப் பெற்றர். பிறகு டொங்கிங் நகரத்தையும் கி.பி. 1802ஆம் ஆண்டு 22ஆம் நாள் ஹநாய் (Hanoi) நகரத்தையும் கைப்பற்றினர். கி.பி. 1802ஆம் ஆண்டு ஜூன் 1ஆம் நாள் என்குயன் ஆன் (Nguyen Anh) ஹியூ நகரத்தில் ஜியாலாங் என்னும் பட்டத்தைச் சூட்டிக்கொண்டார்; தம்மை வியட்நாம் பேரரசர் எனப் பறை சாற்றிக் கொண்டார்; சடங்கோடு பதவியிலமர்ந்ததும் ஒரு தூதுக்குழுவைச் சீனப் பேரரசர் கியாகிங்கிடம் அனுப்பினர். கியாகிங்கும் அதைக் கி.பி. 1803ஆம் ஆண்டில் ஏற்றுக்கொண்டு தமக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை திறை செலுத்த வேண்டும் என்றும், நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை தமக்கு வணக்க வழிபாடு செலுத்த வேண்டும் என்றும் கட்டளையிட்டார். தம் ஆட்சி முழுவதும் இக் கட்டளைகளை ஜியாலாங் பணிவுடன் நிறைவேற்றினர். சில பிரெஞ்சு வரலாற்றாசிரியர்கள் ஜியாலாங் சீனவின் உடன்பாட்டைப் பெறமுயன்றார் என்று கூறவில்லை; ஆகையால், இவர்கள் ஜியாலாங்கைத் தவருக அவருடைய மகன் மின்மாங்குடன் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள்.

ஜியாலாங் புதிய வியட்நாம் நாட்டை மூன்று பெரும் பகுதிகளாகப் பிரித்தார்; ஒவ்வொரு பகுதியிலும் ஒரு நிருவாகத் தலைமை அலுவலகம் இருந்தது. என்குயனுடைய மூதாதையர் வழியில் வந்த நடுப்பகுதி ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றில் ஐந்து பகுதிகள் அரசரின் நேரடி ஆட்சியின்கீழிருந்தன. இப்பகுதிகளின் தலைநகரமான ஹியூவே நாட்டின் தலைநகரமாக விளங்கியது. டொங்கிங் நகரத்தைப் பாக்தானிலிருந்து (Bac-Thanh) வியட்நாம் மைய அரசைச் சார்ந்த தலைமை ஆளுநர் நிருவகித்தார். இந்நகரம் பதின்மூன்று மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தென் முனையில் கொச்சின்-சீனவின் (Cochin-China) நான்கு மாகாணங்களின் நிருவாக மையமான ஜியா-தின் (Gia-Dinh) மைய அரசைச் சார்ந்த தலைமை ஆளுநர் ஆட்சியின் கீழிருந்தது.

நடு நிருவாகம் ஆறு அமைச்சுத் துறையாகப் பிரிக்கப்பட்டது. பொதுத்துறை, நிதி, நீதி, வழிபாட்டு முறை, போர், ஆக்கப் பணி என்னும் துறைகள் ஒவ்வொரு தலைமை அதிகாரியின்

கீழிருந்தன; இவருக்கு இரண்டு உதவித் தலைமை நிலையங்களும் (Vice Residents) இரண்டு அல்லது மூன்று மன்ற உறுப்பினர் களும் (Councillors) உதவிபுரிந்தார்கள். எல்லா அதிகாரிகளும் சேர்ந்திருந்த மீயுயர் மன்றம் (Supreme council) ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. தலைமை ஆளுநர் ஒருவர் குறிப்பிட்ட சில மாகாணங்களை ஆட்சி புரிந்தார். துறையரங்க முதன்மைப் பொருளாளர் ஒருவரும் (Treasurer-General), நீதிமன்றத் துறைத் தலைவர் ஒருவரும் இவருக்கு உதவிபுரிந்தார்கள்.

மாகாணங்கள் டிரான் (Tran–முதலாவது வகுப்பு), தின் (Dinh-இரண்டாவது வகுப்பு), ஃபூ (Phu) அல்லது பிரிபெக்பொஸ் (ஆட்சியங்கத் தலைவர் ஆற்றல் எல்லை), ட்ரிபூ (Tri-Phu). ஹீயன் (Huyen), சௌ (Chau) என்னும் முறையில் பல பிரிவு களாகப் பிரிக்கப்பட்டன.

கி.பி. 1812ஆம் ஆண்டில் ஒரு புதிய சட்டத்தொகுப்பேட்டை வெளியிட்டார் இவர். இது 398 கட்டுரைகள் அடங்கிய 22 சுவடிகள். பழைய சட்டத்தைப் புதுமுறைப்பாணியுடன் மாற்றியமைக்கப் பட்ட சுவடிகளே இவை. ஆனால், மிகப்பெரிய மாறுதல்கள் செய்யப்படவில்லை. இத் தொகுப்பேடு தெளிவாக எழுதப்பட்டி ருந்தது. பொதுவாக மனிதர்கள் நற்குணம் படைத்தவர்கள்; ஆனாலும் அவர்களுள் நல்லொழுக்கம் படைத்தவர்களும், நெறி கடந்து தீமைகள் செய்பவர்களும் இருக்கிறார்கள்; அவர்கள் நல்லொழுக்கத்துடன் நடந்தால் இறுதியாகத் தீச்செயல்களும், பழிபாவங்களும் ஒழிந்துவிடும் என்ற கன்பூசியஸின் கருத்தை அடிப்படையாகக் கொண்டே இந்தச் சட்டம் தொகுக்கப்பட் டிருக்கிறது.

ஜியாலாங் திறமையுடன் நிருவாகம் செய்தார். கொடிய உள்நாட்டுக் கலகங்களை அடக்கி வியட்நாமின் பொருளாதார நிலையை உயரச் செய்தார். நெடுஞ்சாலைகளைப் பழுதுபார்த்துச் செப்பனிட்டார்; சைகானிலிருந்து (Saigon) லாங்சனிற்குப் (Longson) போவதற்குப் புகழ் ஓங்கிய மேண்டரின் நெடுஞ் சாலையை அமைத்தார்; இதைப்போன்று மற்றும் பல நெடுஞ் சாலைகளை அமைத்தார். நெடுஞ்சாலைகளில் திறமையுள்ள அஞ்சல் தொண்டு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இழிநிலையில் இருந்த அறுவடையால் துன்புறும் மக்களுடைய துன்பங்களைத் தவிர்ப்பதற்காகப் பொதுக் களஞ்சியங்களைக் கட்டியிருந்தார். செலாவணிபற்றிய சீர்திருத்தங்களையும் வெற்றியுடன் நிறை வேற்றினார். நில உடைமையை மறு பங்கீடு செய்யவேண்டும்

என்ற கோட்பாடுடையவராயிருந்ததால் இதுபற்றிய சில சீர்திருத்தங்களையும் செய்திருந்தார்.

கி.பி. 1803ஆம் ஆண்டில் கன்பூசியக் கருத்தைப் பின்பற்றிய தேர்ச்சி முறைகளை மீண்டும் நடைமுறையில் கொண்டு வந்தார்.

மன்னர் ஆட்சிக்குத் தீங்கு விளைக்கக்கூடியதாக இருந்த நிலப்பண்ணை உரிமை முறைகள் (Feudalism) ஒழிக்கப்பட்டன. இளவரசர்கள், உயர்குடிமக்கள், உயர் அதிகாரிகள் மிகுந்த நிலங்களையும், பண்ணைகளையும் வைத்துக் கொள்வது ஒழிக்கப்பட்டது. எட்டு நூற்றாண்டுகளாகக் கிராம மக்கள் உயர் அதிகாரிகளுக்குப் பணம் கொடுத்தார்கள். உயர்குடிமக்களுக்கு அவர்கள்மேல் வரி விதிக்கும் உரிமைகளும் இருந்தன. இப் பழக்க வழங்கங்களை ஜியாலாங் சட்டப்படி ஒழித்தார். கி.பி. 1839ஆம் ஆண்டில் மின்மாங் மன்னர் இதை அடியோடு ஒழித்தார். ஆனாலும் குடியானவர்களைச் சுரண்டிக் கொடுங்கோல் ஆட்சிபுரிந்த நிலப்பண்ணை உரிமை முறைகள் ஒழிக்கப்படாமல் நிலைத்திருந்தன. செல்வ நிலவுடைமையாளர்கள் ஒருபக்கமும், நிலமே இல்லாத அல்லது உணவு கிடைக்கக்கூடிய சில நிலங்களுடைய குடியானவர்கள் மற்றொரு பக்கமும் வியட்நாமிலிருந்தார்கள். நிலங்களை மேலும் சரியாகப் பங்கிட்டுக் கொடுத்திருந்தாலும், இந்த ஆழ்துயர்நிலை அழிந்திருக்காது. பயிர்செய்யும் நிலங்களை விட மக்கள் தொகை மிகவும் பெருகியது. ஒரே ஒரு முறை கி.பி. 1806ஆம் ஆண்டில் ஜியாலாங் அரிசி வரியைப் பாதியாகக் குறைத்தார் என டாபௌலெட் (Tabou-let) கூறுகிறார்.

ஜியாலாங் மக்கள் தொகைக்கும், பண்படுத்துதற்குரிய நிலங்களுக்கும் உள்ள இடைவெளியை நீக்க விடாமுயற்சி செய்தார். புதியபிரதேசங்களை அமைக்கும் நோக்கத்துடன் படைத்துறையைச் சார்ந்த, குற்றவாளிகளைத் திருத்துவதற்கு வாய்ப்பு அளிக்கும் சிறைச்சாலைக் குடியேற்றங்களை நிறுவினார். பயிர் செய்யும் நிலங்களைப் பெருக்குவதற்காக வெள்ளத்தைத் தடுக்கும் அணைகளையும், வடிகால் திட்டக் கால்வாய்களையும் கட்டினார். புதிதாகக் கிடைத்த நிலங்களிலிருந்த நிலமில்லாதவர்களுக்குக் கொடுத்த சிறுசிறு நில உடைமைகளை நிலையான சட்டப்படி அவர்களுக்கு உரிமையாக்கினார். சட்டத்திற்குப் புறம்பாகச் செல்வர்கள் எடுத்துக் கொண்ட நிலங்கள் அவர்களுடைய உறவினர்களுக்கே மீண்டும் கொடுக்கப்பட்டன; அல்லது அவை பகிர்ந்து கொடுக்கப்பட்டன. சமூகப் பொதுவுடைமைக்குரிய நிலங்களை

விற்பதற்கோ வேறு விதமாக அடைவதற்கோ தடை விதிக்கப்பட்டது. நடைமுறையில் இருந்த ஆறு ஆண்டிற்கு ஒரு முறை இல்லாமல் மூன்று ஆண்டிற்கு ஒரு முறை நிலங்களைப் பழுது பார்க்க வேண்டும் என்ற சட்டத்தை அறிவித்தார். சமூகத்திலிருந்து ஒவ்வொருவருக்கும் வேறுபாடின்றி நிலங்களைக் கொடுக்க வேண்டும் எனவும் அறிவித்தார்.

இவருடைய பிரெஞ்சு நண்பர்கள் பின்பற்றிய கத்தோலிக்க மதத்திற்கு மதிப்புக் கொடுத்தார்; கத்தோலிக்க மதப் பரப்பாளர்கள் தங்கள் மதத்தைப் பரப்ப முழுஉரிமை அளித்தார். பொதுவாக இவர்கள் டொங்கிங்கிலிருந்த ஸ்பானியர்கள், அன்னும், கொச்சின், சீனு ஆகிய நாடுகளிலிருந்த பிரெஞ்சுக்காரர்கள் ஆவர். அவர் காலத்தில் கிறித்தவர்கள் 300,000 பேர்கள் டொங்கிங்கிலும் 60,000 பேர்கள் கொச்சின் சீனுவிலும் இருந்தார்கள். கி.பி. 1820ஆம் ஆண்டில் ஆறு கிறித்தவப் பாதிரிகளும் வியட்நாம் மக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மதகுருமார்களும் இருந்தார்கள்.

மின்மாங் மன்னர் (Minh Mong, **கி.பி. 1820—1841**)

கி.பி. 1820ஆம் ஆண்டு ஜனவரியில் ஜியாலாங் இறந்தவுடன் மின்மாங் பதவியேற்றார். பல விஷயங்களில் தம் தந்தையின் கொள்கைகளையே பின்பற்றினார் இவர். ஜியாலாங் தொடங்கிய சீர்திருத்தங்களை முழுமூச்சுடன் பின்பற்றி அவைகளை முழுமையாக நிறைவேற்றினார்.

ஜியாலாங் தொடங்கிய நிலச் சீர்திருத்தங்களைக் குறைபாடில்லாமல் நிறைவேற்ற மின்மாங் முயற்சி செய்தார். பயிரிடப்படாத தரிசு நிலங்களும், புதர்மரப் பரப்புகளும் கேட்பவர்களுக்குக் கொடுக்கப்படும் எனக் கி.பி. 1830ஆம் ஆண்டில் அறிவித்தார். நிலவுடைமையாளர்கள் தங்களுக்கு உரிமையாயிருந்த மூன்றில் ஒரு பங்கு நிலங்களைப் பொதுமக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. பிரெஞ்சுக் குடியேற்ற ஆட்சியில்கூடச் செய்யப்படாத அளவு மின்மாங் நீர்ப்பாசன வசதிகள், வெள்ளத்தைத் தடுக்க அணைகள்பற்றிய சீர்திருத்தங்களைச் செய்தார்.

இளவரசர்களுக்கும், உயர்குடிமக்களுக்கும் ஊதியம், ஓய்வு ஊதியம், மற்றப்படி கொடுக்கப்பட்ட பொருள்கள் இனிமேல் பணமாகவும், அரிசியாகவுமே கொடுக்கப்படும் எனக் கி.பி. 1839 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது; இதற்குமுன் இவர்களுக்கு நிலமானியம் மூலமாகத்தான் வருவாய் வந்தது.

பஞ்சம் வந்ததால் குடியானவர்கள் பலமுறை கலகம் செய்தார்கள். கி.பி. 1826, 1827ஆம் ஆண்டுகளில் என்குயன் ஹேன் (Nguyen Han) தலைமையில் வடவியட்நாமிலும், கி.பி. 1833ஆம் ஆண்டில் கொச்சின் சீனுவைக் கைப்பற்ற முயற்சி செய்த லீவான்கோய் (Leevan Khoi) தலைமையில் தென்வியட்நாமிலும், கி.பி. 1833ஆம் ஆண்டிற்கும் 1848ஆம் ஆண்டிற்கும் இடையிலும் பலமுறை கலகங்கள் தோன்றின.

ஆனல் ஜியாலாங், மின்மாங் ஆகியோர் செய்த முயற்சிகள் முழுவதும் வெற்றியடையவில்லை. அவர்கள் செய்த சீர்திருத்தங்கள் சில நடைமுறையில் வரவில்லை. சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதற்குப் பெரிய நிலவுடையமையாளர்கள், மாகாண ஆளுநர்கள் ஆகியோர்களின் ஒத்துழைப்பு வேண்டியிருந்தது. இவர்கள் வலிமை வாய்ந்த ஆளும் இனத்தவர்கள். ஆகையால், இவர்களுடைய அதிகாரத்தைக் குறைப்பது எளிதாக இல்லை. நிலமே இல்லாத அல்லது குறைந்த நிலமுடைய குடியானவர்கள் பற்றிச் செய்த சீர்திருத்தச் சட்டங்களை நடைமுறையில் செயல்படுத்தவில்லை. மேலும், இச் சட்டங்கள் சிறப்புடையவர்களுடைய அதிகாரங்களையும் சிறப்பாக மேண்டரின், செல்வர்களின் அதிகாரங்களையும் குறைப்பனவாக இருந்ததால், இவைகளைச் செயல்படுத்த முயற்சியே செய்யவில்லை.

கிராமங்களில் சிறப்புடையவர்களின் மன்றம் (Council of Notables) ஒன்றிருந்தது. பொதுவாகச் செல்வமுடைய நிலவுடைமையாளர்களும், மக்களால் பாதிக்கப்பட்ட ஒன்றிரண்டு ஏழை முதியவர்களும் இம்மன்றத்தின் உறுப்பினர்களாக இருந்தார்கள். கிராமத்தலைவர் அல்லது வயதில் முதியவர் இம்மன்றத்தின் கூட்டத் தலைவராக இயங்கினுர். கிராமத்திலுள்ள கருவூலத்தைப் பகிர்ந்து கொடுப்பவராகவும், கிராமத்தின் அமைதி காப்பதற்கென நியமிக்கப்படும் பொதுநிலைக் குற்ற நடுவராகவும் (Justice of Peace) கிராமத்தலைவர் பணிபுரிந்தார். நீதிபதியாகப் பணிபுரிந்த ட்ருவுங் (Truong) அல்லது மேயர் (Mayor) என்ற உயர் அதிகாரி அம்மன்றத்தின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். மேண்டரின்கள் மிகப்பெரிய குற்றங்கள்பற்றிய வழக்குகளையே கவனித்தார்கள். வரிகளை வாங்கிப் பங்கிட்டு அளிப்பதும், பொதுநலத்துறைபற்றிய விவகாரங்களைக் கவனிப்பதும், கிராமத்தின் பாதுகாப்பு விவகாரங்களைக் கவனிப்பதும் இம்மன்றத்தின் வேலை.

ஆக்கவளமற்ற வேலைகளில் அரசாங்கத் தொழிலாளர்கள் பயன்படுத்தப்பட்டார்கள். அரிசி விளையும் சில நிலங்கள் பயன் படுத்தப்படாமலிருந்தன. வேலைக்கடுமையில் சில அடிமைத் தொழிலாளர்கள் இறந்து போனார்கள். பொதுவாக உணவு உண்பதற்குக்கூட நேரமில்லாமல் நாள் முழுவதும் அடிமைகள் வேலை செய்தார்கள் எனக் கூறப்படுகிறது. பொருளாதார வளர்ச்சி புறக்கணிக்கப்பட்டது.

குடியேற்ற நாட்டினர் ஆட்சி வருமுன் ஜியாலாங், மின்மாங் ஆகியோர் செய்த சீர்திருத்தங்களால் மேண்டரின்களுக்குத்தாம் அரசியல் அதிகாரங்கள் இருந்தன. செல்வர்களுடைய அதிகாரம் உள்ளூர் விவகாரங்களில் மட்டும்தான் இருந்தது. செல்வ வணிகர்கள் மிகச் சிலரே. மிகப் பெரிய நிலவுடைமையாளர்தம் உயர்ந்த செல்வத்தைக்கொண்டு ஒருவரைப் பணக்காரர் என்று அழைப்பதில்லை; ஆடம்பரமாகச் செலவழிப்பதைப் பார்த்தே ஒருவருக்கு அத்தகைய மதிப்பு சமூகத்தில் கொடுக்கப்பட்டது.

ஜியாலாங்கும், மின்மாங்கும் சீனமொழி கற்றறிந்த அறிஞர்களை நேர்மையான போட்டித் தேர்வுகளின் வாயிலாக மேண்டரின் களாகத் தேர்ந்தெடுத்தார்கள். இத் தேர்வு நடுநேர்மை வாய்ந்த தாயிருந்தது. இவர்களே வியட்நாமின் ஆளும் பிரிவினர்கள். மேலை நாட்டினர்களிடமிருந்து வியட்நாமைப் பாதுகாக்கமுடியாம லிருந்ததற்கு இவர்களே காரணம்.

வியட்நாமின் மேலைநாடுகள் சம்பந்தமான கொள்கைகள் (1802-1847)

ஜியாலாங் பேரறிவுள்ள அரசர்; ஐரோப்பியக் கருத்துகளினால் ஊக்குவிக்கப்பட்டு நிருவாகத்தைச் சீர்ப்படுத்தினார், சட்டங்களைத் தொகுத்தார்; நெடுஞ்சாலைகளையும், பாலங்களையும், கால்வாய் களையும், அணைக்கட்டுகளையும், பண்டகசாலைகளையும், அரண் களையும், துறைமுகங்களையும் அமைத்தார்; ஆனால் மின்மாங், தியுட்ரீ (Thieutri), டுடக் (Tuduc) ஆகிய அரசர்கள் சீனர்களின் பண்பாடுகளைப் பின்பற்றியதால் மேலை நாட்டினர்களை நாகரிகமற்ற காட்டுமிராண்டிகள் எனத் தூற்றினார்கள்; மன்சுப் பேரரசர்களின் கொள்கையைப் பின்பற்றித் தங்களுடைய குடிகள் அயல்நாட்டினர் களோடு உறவுகொள்வதைத் தடுத்து அவர்களைத் தனியார்களாகப் பிரித்தார்கள்; ஐரோப்பியப் பேரரசின் இயல்பு பிடிக்காததால் பின்வாங்கிச் சென்று, தங்களுடைய பண்பாடுகளிலே கவனம் செலுத்தினார்கள் எனப் பிலிப்பி டெவில்லெர்ஸ் (Philippe Devillers)

என்ற பிரெஞ்சுப் பேராசிரியர் கூறுகிறார். ஆனால் இக்கருத்தை எல்லா வரலாற்று ஆசிரியர்களும் முழுமனத்துடன் ஏற்றுக்கொள்ள வில்லை. ஜியாலாங் இறந்ததனால் வியட்நாம் ஒரு தலைசிறந்த அரசரை இழந்தது என்பதில் ஐயமில்லை; அவர் உயிரோடிருந்து மேலைநாட்டினர்களைப் பட்டாங்கமான சச்சரவுடன் எதிர்த் திருந்தால் அவர் நடைமுறையில் செயல்படுத்திய கொள்கைகளும், அவருக்குப் பின் ஆட்சிபுரிந்த அரசர்களின் கொள்கைகளைப் போல அழிவு உண்டாகித் தோல்வி யடைந்திருக்கும் எனப் பட்டிங்கர் என்ற வரலாற்றாசிரியர் கூறுகிறார்.

அயல்நாட்டு விவகாரங்களில் பேரரசர் ஜியாலாங் எப்பொழுதும் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டார். நம்பிக்கை இழந்து மனக் கசப்புள்ள நிலையில்தான் ஐரோப்பியர்களின் உதவியை அவர் நாடினார். நல்ல வேளையாகக் கி.பி. 1787ஆம் ஆண்டில் பிரான்சு தான் கொடுத்த உறுதிமொழியைக் காப்பாற்றியது. டிபெஹைன் (De Behaine) இறந்தபிறகும், தம்மிடத்தில் பணியாற்றிவரும் பிரெஞ்சு மக்களை அன்புடனும் ஆதரவுடனும் நடத்தினார். ஆனால் பிரான்சோ வேறு மேலைநாடுகளோ வியட்நாம் விவகாரங்களில் தலையிடுவதைப் பொறுத்துக்கொண்டு உடன்பாடு கொடுத்திருக்க மாட்டார். டிபெஹைன் மேலுள்ள நன்மதிப்பினால் கத்தோலிக்க மதப்பரப்பாளர்களின் நடவடிக்கைகளைப் பொறுத்துக் கொண்டார். மேலை நாடுகளுடன் வேறு தொடர்புகளை எதிர்த்தார். பட்டிங்கர் கூறுகிறார் :—

'வியட்நாமின் பெருமையையும், மேன்மையையும், வளமையையும் மேலைநாடுகளுடனுள்ள உறவில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றினால்தான் பாதுகாக்கமுடியும்' என ஜியாலாங் நினைத்தார்.

ஆகையால், ஜியாலாங் ஆட்சியில் தலையிடாக்கொள்கையைப் பின்பற்றி வியட்நாம் தனித்திருந்தது. நெப்போலியன் போர்கள் காலத்திலும், மறு வருகை யாட்சியின்போதும் (Restoration) ஜியாலாங்கிடம் தனக்குள்ள செல்வாக்கைப் பிரான்சு பயன்படுத்த முயற்சி யெடுக்கவில்லை. மதத்தைப் பரப்பும் பிரெஞ்சுப் பாதிரிகளே வியட்நாமில் தங்கியிருந்தார்கள். பிக்நியூ (Pigneau) இறந்தபிறகு சைக்நியூக் கோமகன், வன்னியர்(Vannier), பார்சன்ஸ்(Forsans), டெஸ்பியெள (Despiau) என்ற நான்கு பிரெஞ்சுக்காரர்களே ஹியூ (Hue) அவையில் தங்கியிருந்தார்கள். இவர்களுக்கு மேண்டரின் பதவியை ஜியாலாங் கொடுத்தார்.

ஜியாலாங் ஆட்சியின்போது மேலைநாடுகளின் இராணுவத் தொல்லையோ அரசியல் தொல்லையோ இல்லாமல் வியட்நாம் இருந்தது. ஐரோப்பியர்களின் படை உதவி கிடைத்தபோதிலும் இதனால் வியட்நாமின் உரிமைக்குத் தொல்லையில்லாமல் இருந்தது. மேலைநாடுகளின் வாணிபத் தொடர்பு வியட்நாமிற்கு இன்றியமை யாதது என ஜியாலாங் கருதவில்லை. ஆகையால், ஐரோப்பிய நாடுகளுக்குத் தனிச் சலுகைகள் கொடுப்பதைக் கடுமையாக எதிர்த்தார். பிரிட்டன் முயற்சி செய்தபோதிலும், கி.பி. 1804ஆம் ஆண்டில் அதற்குச் சலுகைகள் கொடுப்பதை மறுத்தார் ஜே. டபிள்யூ. ராபெர்ட்ஸ் (J W. Roberts) என்ற ஆங்கிலேயர் கொண்டுவந்த நன்கொடைகளைக்கூட ஏற்றுக்கொள்ள மறுத்தார்; அவருக்கு வரவேற்புக்கூட அளிக்கவில்லை. வியட்நாமுடன் வாணிபம் செய்யத் தம்முடைய வாணிபப்பகுதிகளுக்கு மட்டும்தான் உரிமைகளும் சலுகைகளும் கொடுக்க வேண்டுமென்றும், பெய்போவிற்கு (Faifo) அருகிலுள்ள சாம் தீவைப் (Cham Island) பிரிட்டனுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் இராபர்ட்ஸ் கேட்டுக் கொண்டார்.

ஐரோப்பிய நாடுகளுக்குள் பிரெஞ்சு நாட்டிற்கே ஒருநிலையான சார்புரிமைப் பேச்சாளர் (Permanent Spokesmen) ஜியாலாங் ஆட்சியின் போதிருந்தார். வியட்நாமிலுள்ள மதப்பரப்பாளர் களில் பெரும்பான்மையோர் பிரெஞ்சுக்காரர்கள். நெப்போலியன் ஆட்சிபுரியும்போது பிரெஞ்சு நாட்டிற்கு வியட்நாமுடனே ஏனைய இந்தோ–சீன நாடுகளுடனே வாணிபத் தொடர்பும் அரசியல் தொடர்பும் இல்லை.

வியட்நாமுடன் வாணிபத் தொடர்பு கொள்ளப் பிரெஞ்சுக் காரர்கள் பலமுறை முயற்சி செய்தார்கள். ஆயுதங்களை உற்பத்தி செய்யும் போர்டியோ (Bordeau) தாங்களாகவே வியட்நாமிற்குக் கப்பல்கள் அனுப்பினார்கள்; ஆனால் வெற்றியடையவில்லை; கப்பல்கள் அழிவுற்றன. பிரெஞ்சு வாணிபம் வியட்நாமிலிருந்ததால் நன்மை உண்டாகவில்லை; அவர்கள் சீனர்களுடன் போட்டி போட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. பண்டமாற்றுமுறையில் பிரெஞ்சுப் போர்க்கருவிகளுக்கு ஈடாக வியட்நாம் சர்க்கரைதான் கிடைத்தது; ஆனால், இது ஏன்டிலிஸ் (Antilles) சர்க்கரையுடன் போட்டிபோட முடியவில்லை. முதன்முதலாக வந்த பிரெஞ்சு வணிகர்களை ஜியாலாங் மரியாதையுடன் வரவேற்றார். ஆனால், அவர்கள் கொண்டுவந்த பொருள்கள் வியட்நாமிற்குப் பயன்படா என ஜியாலாங் கூறி அவர்களை வியட்நாமிற்குப் பயனுள்ள பொருள் களைக் கொண்டுவரும்படிக் கூறினார். பிரான்சுக்கும் வியட்நாமிற்கும்

இடையே பண்டமாற்றம் ஏற்படுவதற்கு இடையூறு எதுவும் ஜியாலாங் விதிக்கவில்லை. ஆனால், பிரெஞ்சுக்காரர்களுக்கென்று தனிச் சலுகைகள் கொடுக்க மறுத்தார். பிரெஞ்சு நாடுகளுடன் முறைமையோடு உறவு வைத்துக்கொள்ளுவதை ஜியாலாங் மறுத்தார்; பிரெஞ்சு நாடுகளுடன் வாணிப ஒப்பந்தம் செய்து கொள்வதையும் ஒதுக்கிவைத்தார். கி.பி. 1817ஆம் ஆண்டின் இறுதியில் பிரான்சின் பிரதம மந்திரி கோமகன் டிரிஸ்லியு (Duke Derichlieu), சைபிலி (Cypole) என்ற 52 துப்பாக்கியுள்ள போர்க் கப்பலைக் (Frigate) கடற்படைத் தளபதி கெர்காரியன் (Captain Kergarion) என்பவர் தலைமையில் வியட்நாமிற்கு அனுப்பினார். கெர்காரியனுக்கு நல்ல மரியாதையும் வரவேற்பும் கிடைத்தன; ஆனால், அவர் கேட்டுக்கொண்டபடி அவருக்கு ஜியாலாங் மரபு வழிமுறை வழியில்லாததால், பேட்டி கொடுக்க மறுத்தார். ஆகையால், கெர்காரியன் பிரான்சிற்குத் திரும்பச் சென்றார்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் தொடங்கிய ஜியாலாங்கின் ஆட்சியால் வியட்பாமிற்குத் தீங்கு ஒன்றும் வரவில்லை எனக் கூறலாம். முப்பது ஆண்டுகள் நடந்த போருக்கு ஒரு முடிவு ஏற்பட்டது. நாட்டிலே மீண்டும் ஒற்றுமை யுணர்ச்சி யேற்பட்டது; நாடு விரிவாக்கப்பட்டது; மக்கள்தொகை பெருகியிருந்தது; கம்போடியாவைத் தமக்கடிமையாக்க வேண்டிய முயற்சிகள் வெற்றியுடன் செய்யப்பட்டன.

கம்போடியா ஒரு சிறிய நாடு. ஆகையால், சியாமிற்கும், வியட்நாமிற்கும் இடையே உள்ள போர்க்களமாய்க் கம்போடியாவை மாற்ற அதன் அரசர் விரும்பவில்லை. கி.பி 1803ஆம் ஆண்டில் கம்போடியாவிலிருந்து ஹநாயிற்கு அனுப்பப்பட்ட தூதுக்குழுவை ஜியாலாங் வரவேற்றார்; பதில் மரியாதையாக நன்கொடை அனுப்பினார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு கம்போடிய அரசர் அங்சான் (Angchan) வியட்நாம் பேரரசருக்கு ஆண்டுதோறும் வணக்க வழிபாடு செய்வதற்கு உடன்பாடு தரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்; உடன்பாடும் கொடுக்கப்பட்டது. கி.பி. 1806ஆம் ஆண்டில் அங்சான் தம்முடைய முடிசூட்டு விழாவிற் காகப் பாங்காக் (Bangkok) சென்றார். ஆனாலும், கி.பி. 1807ஆம் ஆண்டில் ஹியூவிற்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பினார். இக் குழு ஜியாலாங்கிற்குக் கப்பம் செலுத்தியது; வியட்நாமின் அடிமை யாகச் சடங்கோடு பதவியில் அமர்த்தவேண்டும் என இக் குழுவின் மூலம் அங்சான் கேட்டுக்கொண்டார். சடங்கோடு பதவியில் அமர்த்தியதற்காக நன்றி செலுத்தும் ஒரு தூதுக்குழுவைக் கி.பி. 1808ஆம் ஆண்டில் கம்போடியா வியட்நாமிற்கு அனுப்பியது.

ஒவ்வோராண்டும் கம்போடியா வியட்நாமிற்குத் தூதுக்குழுவை அனுப்பியது.

அங்சானின் உடன்பிறந்தவர் அங்சங்குவான் (Angsnguon) தமக்கு நாட்டின் ஒரு பகுதியைக் கொடுத்து இரண்டாவது மன்னராக ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கேட்டார். அங்சான் மறுத்ததால் கி.பி. 1812ஆம் ஆண்டில் இவர் கலகம் செய்தார். சியாம் நாட்டு இரண்டாவது அரசரான இராமா (Rama II) அங்சங்குவானுக்கு உதவிபுரிவதற்காக ஒரு படையை அனுப்பினர். ஆகையால், அங்சான் சைகாவிற்கு ஓடி ஒளிந்தார். கி.பி. 1813ஆம் ஆண்டில் அங்சானை மீண்டும் அரசபதவியில் அமர்த்து வதற்காக ஜியாலாங் ஒரு பெரிய படையைக் கம்போடியாவிற்கு அனுப்பினர். இதற்கு அஞ்சிச் சியாம் படை அங்சங்குவானுடன் கம்போடியாவை விட்டு வெளியேறியது. கி.பி. 1822ஆம் ஆண்டில் அங்சங்குவான் சியாமில் இறந்தார். கம்போடியாத் தலைநகரமான நாம்பென்னில் (Phnompenn) வியட்நாம் கோட்டைக் காவற்படை ஒன்று அமர்த்தப்பட்டது. இதனுல் வியட்நாம் சியாம் உறவில் மனக்கசப்பு ஏற்பட்டது. சியாம் கம்போடியாவை மீண்டும் கைப்பற்ற வேண்டும் என்று நினைத்தபோதிலும், போர்செய்து கைப்பற்றுவதில் விருப்பம் காட்டவில்லை.

ஆகையால், ஜியாலாங் ஆட்சியில் கம்போடியா வியட்நாமின் அடிமையாக மாறியது. வியட்நாமின் புதிய எல்லைப்புறங்களுக்கு வியட்நாமின் அருகிலுள்ள நாடுகளால் தொல்லை யேற்படவில்லை. ஜியாலாங் ஆட்சியின்போது வியட்நாமின் செல்வாக்கும், மதிப்பும் ஓங்கின என்பதில் ஐயமில்லை.

மின்மாங்கின் ஆட்சி

ஜியாலாங் இறக்கும் தறுவாயில் தம் மகன் மின்மாங்கை அழைத்து ஐரோப்பியர்களுக்கு, சிறப்பாகப் பிரெஞ்சுக்காரர்களுக்கு முதன்மை கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். ஆனுல், ஐரோப் பியர்களுடன் தொடர்பு கொள்ளாமல் ஒதுங்கியிருக்கும் கொள்கை யைத்தான் மின்மாங் பின்பற்றினர். மேலை நாட்டு அறிவுத் தொகுதிகளை மான்மாங் ஆணவத்துடன் பொருட்படுத்தாமல், வெறுத்தொதுக்கி ஏளனம் செய்தாலும், அவைகளை நன்கு கற்றறிந் திருந்தார்.

லாபர்டெட்டி (Labartette) என்ற பிரெஞ்சுக்காரர் மின் மாங்கைப்பற்றிக் கி.பி. 1822ஆம் ஆண்டில், 'இந் நாட்டு அரசர்,

ஐரோப்பியர்களுடன் உள்ள வாணிபத் தொடர்பை வெறுக்கிருர். நம்மைப்பற்றிச் சிறு குற்றச்சாட்டிருந்தாலும் நாட்டைவிட்டுத் துரத்திவிடுவேன் என அச்சுறுத்துகிருர்' என்று கூறியுள்ளார்.

கி பி. 1819—1820ஆம் ஆண்டுகளில் கோமகன் சைக்நியூ பிரான்சுக்குத் திரும்பினுர். அவர் தாய் நாட்டிற்குத் திரும்பிய வுடன் அவரை ஹியூ நகரத்தில் பிரான்ஸின் அயலிட நாட்டுப் பேராளராகவும் (Consul), ஆணையராகவும் (Commissioner) இருக்கும்படிப் பிரெஞ்சு அரசாங்கம் கேட்டுக்கொண்டது. அவர் இப் பதவியை ஒப்புக்கொண்டால், தூயர் லூயியின் வீரத் திருத் தகை (Knight of St. Louis) பட்டமளிக்கப்படும் எனப் பிரான்ஸின் பேரரசர் பதினெட்டாம்—லூயி (Louis XVIII) அறிவித்தார். வியட் நாமிலுள்ள பிரெஞ்சுக் குடிகளேயும் அவர்களுடைய உடைமைகளே யும் பாதுகாப்பதே இவர் கடமை எனக் கூறப்பட்டது. ஆகையால் சைக்நியூ தம் புதல்வர் மைக்கல் (Michel) போரல் மற்றும் நான்கு பிரெஞ்சு மதப்பரப்பாளர் ஆகியவர்களுடன் கி.பி. 1821ஆம் ஆண்டில் ஹியூவிற்குத் திரும்பி வந்தார்.

பிரெஞ்சுக்காரர்களுடன் வாணிபம் செய்வதற்கு மன்னர் மின்மாங் இணங்கினுர். ஆனுல், தொலேவிலுள்ள பிரெஞ்சு நாட்டுடன் உடன்படிக்கை செய்யவும், சைக்நியூவை அயலிட நாட்டுப் பேராளராக ஏற்றுக் கொள்ளவும் மறுத்தார். இத்தகைய சலுகைகள் பிரெஞ்சு நாட்டுக்குக் கொடுத்ததால் மற்ற நாடுகளும் சலுகைகள் கேட்கும் என்பதை மன்னர் மின்மாங் புரிந்துகொண்டி ருந்தார். கி.பி. 1821ஆம் ஆண்டில் சலுகைகள் கேட்ட பிரிட்டிஷ் இந்தியத் தூதுக் குழுவுக்கும் மறுப்பளிக்கப்பட்டது. ஆனுல், பிரெஞ்சுக் குடிகளின் பாதுகாப்புக்கு யாதொரு தொல்லேயும் ஏற்பட வில்லே. நடைமுறையில் சைக்நியூ அயலிட நாட்டுப் பேராளரின் கடமைகளேச் செய்து கொண்டிருந்தார். டுரேனில் போரல் ஒரு பண்டகசாலே அமைத்தார். பிரெஞ்சு நாட்டுப் படைகளின் சீருடைகளேப்பற்றி வியட்நாம் மன்னர் கேட்டுத் தெரிந்து கொண்டார். உடனடியாக வியட்நாம் படைத் தலேவர்களும் படை வீரர் தலேவரின் தோளில் அணியும் அடையாளங்களே (குறிகளே — Epaulet) அணியத் தொடங்கினுர்கள். இருந்தாலும் பிரெஞ்சுச் செல்வாக்கு ஹியூ அவையில் குறையத் தொடங்கியது.

கி.பி. 1821ஆம் ஆண்டில் பிரெஞ்சுப் பேரரசர் பதினெட்டாம் லூயி வாணிப ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என ஒரு கடிதத்தை மின்மாங்கிற்கு அனுப்பினுர். இக் கடிதத்திற்கு இரண்டாவது மதிப்புப்படியிலுள்ள மேண்டரின் ஒருவர் பின்

வருமாறு பதிலெழுதினர்: 'எங்கள் நாட்டிலுள்ள மக்கள் உங்கள் நாட்டிற்கு வருவது மிக அரிது எங்கள் நாட்டில் உங்கள் நாட்டு மக்கள் வாணிபம் செய்ய விரும்பினல் எங்களுடைய கட்டளை விதிகளுக்கு அடங்கி நடக்க வேண்டும்' இக் கட்டளை விதியின்படி பிரெஞ்சு நாட்டிற்குத் தனிச் சலுகைகள் கொடுக்கப்படமாட்டா. வாணிபம் செய்ய விரும்பும் எல்லா நாட்டினர்க்கும் ஒத்த வாய்ப்புக் கொடுக்கப்படும்'.

'இதற்கு முன்பிருந்த அரசர் ஒளிவுமறைவில்லாது பேசுபவர் ஆகையால், அவர் கூறுவதை யாரும் நம்பலாம்; ஆனல் தற்பொழுதுள்ள மன்னர் தாம் நினைப்பதைப்பற்றி மனம் விட்டுத் தெரிவிப்பதில்லை...இவர் (மின் மாங்) தம்முடைய குடிகளை நன்முக ஆட்சி புரிகிருர்' எனச் சைக்நியூ கி.பி. 1822ஆம் ஆண்டு ஜூன் 15ஆம் தேதி கூறினர்.

கி.பி. 1822ஆம் ஆண்டு பிப்ரவரியில் 'லா கிளியோபாத்ரா' (La Cleopatra) என்ற போர்க்கப்பல் டுரேனுக்கு வந்தது. அதன் கப்பற்படைத் தளபதி செவாலியர் கோர்சன் டி லா வில்லி ஹெலியா (Chavalier Coursondela Ville Hellio) தம் மரியாதையைத் தெரிவிப்பதற்காக வியட்நாம் அரசைச் சைக்நியூ மூலம் பார்க்க முயற்சி செய்தார். ஆனல், மின்மாங் அவரைப் பார்க்க மறுத்தார். மேலும், பிரெஞ்சுக்காரர்களின் எண்ணத்தை ஐயுற்று மின்மாங் டுரேனுக்குப் படையனுப்பினர்.

கி.பி, 1824ஆம் ஆண்டில் மின்மாங் ஐரோப்பியர்களின்மேல் மிகுதியாக ஐயம் கொண்டிருந்தார். சைக்நியூவை வியட்நாமை விட்டு வெளியேறும்படிக் கூறியதால் அவர்கள் கி.பி. 1824ஆம் ஆண்டில் வியட்நாமை விட்டு வெளியேறினர்கள். அமைதியை நிலைநாட்டுவதற்காகவும், வாணிபத்தைப் பாதுகாப்பதற்காவும் பேரரசர் பதினெட்டாம் லூயி பண்ணை நில ஆட்சிக் கோமகன் டி புகைன் வில்லி (Baron de Bogain Ville) என்ற தூதுவர் மூலம் ஒரு கடிதத்தையும், நன்கொடைகளையும் மின்மாங்கிற்கு அனுப்பினர். கி.பி. 1825ஆம் ஆண்டு ஜனவரியில் புகைன்வில்லி வியட்நாமிற்கு வந்தார். அவரை வரவேற்ருலும் அவருக்கு ஹியூவிற்குப் போக உடன்பாடு கொடுக்கவில்லை. யாருமே அவர் கடிதத்தை மொழி பெயர்க்க முடியவில்லை என அவரிடம் கூறப்பட்டது. இவரை இங்ஙனம் நடத்தியதற்குக் காரணம் என்னவென்ருல், இவர் ஒரு பிரெஞ்சுக் கிறித்தவ மதப்பரப்பாளரை மறைமுகமாக அனுப்பப் பார்த்தார் என வியட்நாம் அரசர் நினைத்தார்.

கி.பி. 1826ஆம் ஆண்டில் சைக்நியூவின் புதல்வர் யூஜேன் (Eugene) வியட்நாமிற்கு வந்தார். ஆனால், அவர் தம்முடைய புதிய பதவியில் அமர மன்னர் மின்மாங் உடன்பாடு கொடுக்க வில்லை. ஆகையால், கி.பி. 1829ஆம் ஆண்டில் அவர் தம் தாய் நாட்டிற்குத் திரும்பினார்.

கி.பி. 1831ஆம் ஆண்டில் பிரெஞ்சு அயலிட நாட்டுப் பேராள ருக்கு மன்னர் மின்மாங் சான்றளிக்க மறுத்தார். இவ்வாறு சலுகை களைப் பிரெஞ்சு நாட்டினருக்குக் கொடுத்தால் மற்ற அயல் நாட்டினர்களும் கேட்பார்கள் என மின்மாங் அஞ்சினார். ஆகையால், இத்தகை முயற்சிகளைப் பிரெஞ்சுக்காரர்கள் கைவிட்டார்கள்.

முதல் தடவையாகக் கி.பி. 1820ஆம் ஆண்டில் கப்பற்படைத் தளபதி ஒய்ட் (White) தலைமையில் அமெரிக்கக் கப்பல் சைகா னிற்கு வந்தது. மன்னர் மின்மாங் அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு சில பீரங்கிகள் வெடிக்கும் போர்க்கருவிகள், நூல் கள், சீருடைகள் வாங்குவதற்குத் தயாராகவிருந்தார். இதனால் தமக்கு மிகுபயன் வராது என ஒய்ட் நினைத்து ஒப்பந்தம் செய்து கொள்ள மறுத்தார். போர்த்துகீஸியர்களும், டச்சுக்காரர்களும் இந்தோ சீன நாடுகளுடன் வாணிபம் செய்வதில் மிகுந்த அக்கறை காட்டவில்லை.

கி.பி. 1821ஆம் ஆண்டில் ஜான் கிராபோர்டு (John Crawford) ஹியூவிற்கு வந்தார். பிரெஞ்சு மக்கள் அங்கு என்ன செய்கிறார்கள். அந் நகரம் எப்படி இருக்கிறது என்று அறிய வும், வியட்நாமின் புதிய அரசரோடு உறவு வைத்துக்கொள் வதற்காகவும் கிராபோர்டு அனுப்பப்பட்டார். சைகானிலும், ஹியூவிலும் கிராபோர்டு மரியாதையுடன் வரவேற்கப்பட்டார். அவரை வரவேற்று அவர் கூறியவற்றை மொழி பெயர்த்த பிரெஞ்சு மேண்டரின்கள் அவரிடம் அன்பாகவும், மரியாதையாகவும், நடந்து கொண்டார்கள். வியட்நாமிலுள்ள வெளிநாடு பற்றிய சட்ட நூலை அவருக்குக் கொடுத்தார்கள்; சைகான், குரேன், பைபோ முதலிய துறைமுகங்களைச் சுற்றிப் பார்க்க அழைத்தார் கள்; ஹியூவும், ஹநாயும் கட்டுப்பாடுகளுள்ள துறைமுகங்கள் எனக் கூறினார்கள். கிராபோர்டு ஒரு வாணிபத்தலத்தைச் சேர்ந்தவரா தலால் அவருக்குத் தம்மை நேரில் பார்த்துப் பேச வாய்ப்பளிக்க அரசர் மறுத்தார்; தலைமை ஆளுநருடன் கடிதப்போக்குவரத்தோ பேச்சு நடத்தவோ மிக ஒத்த நிலையில் உள்ளவராயிராததால், மறுத்தார்; நன்கொடைகளை ஏற்றுக் கொள்ளக்கூட மறுத்தார்;

கிராபோர்டும் அரசர் கொடுத்த வெகுமதிகளை ஏற்றுக்கொள்ள மறுத்தார்; ஆகையால், தலைமை ஆளுநருக்காகக் கொடுத்த பதில் கடிதம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது. இதனால் இவ் விருவர் தொடர்பும் ஆர்வமில்லாமல் இருந்தது.

ஆனாலும், தாம் வந்த நோக்கத்தில் கிராபோர்டு வெற்றியடைந் தார். பிரெஞ்சுக் செல்வாக்கு மங்குகிறது என்றும், ஒரு வேளை இந்த ஏழை நாடு பிரெஞ்சு ஆட்சியின் கீழ் வந்தால் அதனால் ஆங்கிலேயர்கள் அஞ்ச வேண்டும் என்றும், இந்தியப் பேரரசுக்கு இந் நாட்டினால் யாதொரு பயனும் கிடையாது என்றும் அறிந்து கொண்டார். இந்தியப் பேரரசின் முயற்சிகளை வியட்நாம் அரசர் ஐயத்தோடு நோக்கியதால், ஒப்பந்தங்களைச் செய்யும் முயற்சி களைக் கைவிட்டுவிடவேண்டும் என்றும் கண்டு கொண்டார். சியாம் நாட்டுடன் உள்ள தொடர்பைத் தமக்கு ஆதரவாகக் கல்கத்தா மூலம் உருவாக்கலாம் என்றும், வியட்நாமுடன் இருக்கும் உறவைப் பிரிட்டிஷ் பேரரசர் மூலம் அமைத்துக் கொள்ளலாம் என்றும் கிராபோர்டு முடிவு எடுத்தார். காண்டனிலும் சிங்கப்பூரிலே வந்து சென்று கொண்டிருக்கும் சீன மரக்கல வகைகள் மூலம் ஆங்கிலேயர் களின் வாணிபத்தை வலுப்படுத்தலாம் என்றும் கிராபோர்டு நினைத்தார்.

கி.பி. 1824ஆம் ஆண்டில் சியாமிற்கு எதிராகப் பர்மாவுடன் ஒன்று சேர்ந்து சண்டை போடலாம் என்ற கருத்தைப் புறக் கணித்தார்.

மின்மாங்கின் மதக் கொள்கை

கி.பி. 1625ஆம் ஆண்டில் அலெக்ஸாண்டர் ஆப் ரோட்ஸ் (Alexander of Rhodes) வந்து சேர்ந்த சமயத்திற்கும், டுரேன் மேல் கி.பி. 1858ஆம் ஆண்டில் படையெடுத்ததற்கும் இடையே பிரெஞ்சு வியட்நாமின் எதிர்கால உறவு பற்றியிருந்த மிகச் சிறப்பு வாய்ந்த பத்து ஆண்டுகள் கி.பி. 1830 முதல் 1840 வரை ஆகும். இந்தப் பத்து ஆண்டுகளிலே மின்மாங்கின் கிறித்துவ எதிர்ப்புக் கொள்கை, பிரெஞ்சு நாடு படையெடுத்துத் தலையிடும் கொள்கை களைச் செய்யும்படிச் சமயப்பரப்பாளர்களைச் தூண்டியது எனப் பட்டிங்கர் என்ற பேராசிரியர் கூறுகிறார்.

நெப்போலியனுடைய ஆட்சி முடிந்த பிறகு ஐரோப்பாவிலே முளைத்த கத்தோலிக்கர் சமயப் புத்தெழுச்சி இயக்கத்தின் விளைவால் சமயப்பரப்பாளர்கள் கீழை நாடுகளின் பல பகுதிகளில் (வியட்நாம் உட்பட) பரவத் தொடங்கினார்கள். இச் சமயப்பரப்

பாளர்கள் தங்களுக்கு இதனால் வரும் தீங்குகளைப் பொருட்படுத்த வில்லை; எவ்வகையான தியாகம் செய்யவும் தயாராக இருந்தார்கள்; அரசியல் தடைகளை ஏளனம் செய்தார்கள்; தங்கள் வலிந்து சண்டை செய்ய முனைகிற செயல்களால் உள்நாட்டு மக்கள் அச்சமடைவார்கள் என்ற எண்ணத்தைப் புறக்கணித்தார்கள். இச் சமயப் புத்தெழுச்சி இயக்கத்தில் பதினெட்டாம் லூயி அரசாங்கம் மீண்டும் அமைத்த பாரிஸ் சமயப் பரப்பாளர்கள் சங்கமும் (Paris Missionary Society), லாஜரிஷ்ட் சமுதாயமும் (Lazarist Society) மிகச் சிறந்த பங்கு கொண்டன.

தம் நாட்டிலுள்ள கன்பூசியஸ் நெறி, புத்த மதம், கிறித்தவ மதம் ஆகிய மூன்று மதங்களையும் அடக்குமுறை வெறியோடு துன்புறுத்தக்கூடாது என ஜியாலாங் தமக்குப் பின் ஆட்சிக்கு வரப் போகும் மின்மாங்கிடம் கேட்டுக்கொண்டார். மின்மாங் கன்பூசிய நெறியைக் கடுமையாகப் பின்பற்றுபவர்; சீனப் பண்பாடுகளை வியந்து பாராட்டுபவர். 'ஜப்பானியர்கள் தங்கள் நாட்டில் கிறித்தவ சமயத்தை ஒழித்ததைப் போற்றிப் பாராட்டுகிறார். அவருடைய கோட்பாடு என்னவென்றால் ஒரு நாட்டில் இரு சமயங்கள் இருப்பது நல்லதன்று. அவர் ஆட்சியணையில் அமர்ந்ததிலிருந்து நம்முடைய சமயம் துளிக்கூட முன்னேறவில்லை' என மின்மாங் ஆட்சியின் போது வியட்நாமிற்கு வந்த லாபார்டெட்டி என்பவர் கூறுகிறார்.

சைக்நியூ வியட்நாமைவிட்டுச் சென்றபிறகு மின்மாங்கிற்கு மொழிபெயர்ப்பாளர்கள் கிடைக்கவில்லை. ஆகையால், மேலைநாட்டு நூல்களை மொழிபெயர்ப்பதற்காகப் பிரெஞ்சுச் சமயப்பரப்பாளர்களை ஹியூவிற்கு வரவழைத்தார். அவர்களும் தயக்கத்துடன் மின்மாங்குடன் ஒத்துழைத்தார்கள். இச்சமயப்பரப்பாளர்களுக்கு உயர்ந்த மேண்டரின் பதவிகளைக் கொடுத்தார்.

ஆனாலும், மின்மாங் பிரெஞ்சுச் சமயப்பரப்பாளர்களை வியட்நாம் நாட்டைக் கவிழ்க்கிற நோக்கமுள்ளவர்கள் என்றே கருதினார். ஆகையால், உண்மையில் இவர் சமயப்பரப்பாளர்களை வெறுத்தார். கி.பி. 1825ஆம் ஆண்டில் சமயகுரு ரீஜரியெள (Father Regereau) என்ற புதிய சமயப்பரப்பாளர் வியட்நாமிற்கு வந்தார். இவர் வந்தவுடன் கத்தோலிக்கர் எதிர்க்கும் அரச ஆணைகளை மின்மாங் கி.பி. 1825ஆம் ஆண்டில் அறிவித்தார். சமயப்பரப்பாளர்கள் வியட்நாமுக்குள் நுழையக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டது ஐரோப்பியர்களின் சமயநெறி கோணலுடையது, குணக்கேடுடையது, கொடியது எனக் கருதப்பட்டது. சமயப்பரப்பாளர்களெல்லோரும் கைது செய்யப்

பட்டார்கள். கொச்சின்–சீனுவின் துணை அரசரான லீவான் டுயெர் (Levanduyer vice king of cochin china) இந்த ஆணைகளை ஒழிக்கும்படிக் கேட்டுக்கொண்டார். இக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள மன்னர் மின்மாங் மறுத்தார். ஆனல் சமயப் பரப்பாளர்களை விடுதலைசெய்து அவர்கள் வியட்நாமை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என ஆணையிட்டார். ஆனல், சமயப்பரப்பாளர் ஒருவர் கூடக் கீழ்ப்படியவில்லை; அவர்கள் தங்கள் வேலைகளைச் செய்யத் தொடங்கினர்கள். மின்மாங்கும் தன்னடக் கத்துடன் நடந்துகொண்டார்.

ஜாக்கார்டு (Father Jaccard) என்ற சமய குருவிற்கு மின்மாங்கிடம் செல்வாக்கிருந்தது. மின்மாங்கின் பிறந்த நாளின் போது இயேசுநாதர் வழிபாட்டு முறையை அரசர்முன் இவர் ஓதுவதற்குக்கூட உடன்பாடு கொடுக்கப்பட்டது.

கி.பி. 1828ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மேண்டரின்கள் மன்னரிடம் ஒரு விண்ணப்பம் கொடுத்தார்கள். ‘கிறித்தவ சமயம் அறிவுக்குப் பொருத்தமான கொள்கைக்கு எதிர்மறையானது; முரண்பாடானது; மக்களைத் தவருன வழியில் தூண்டிப் பழி, குற்றம் முதலியவற்றைச் செய்யத் தூண்டுகிறது; எளிமையைப் பழிகூறி, ஏசித் தவருகப் பயன்படுத்துகிறது; வலிமையற்றவர்களை நரகத்தில் பல துன்பங்களுக்கு ஆளாக்கப்படுவார்கள் என அச்சுறுத்துகிறது; வானுலகத்தில் இன்பம் வரும், விருப்பங்கள் நிறைவேறும் என்று உறுதியளித்து ஏனையவர்களை வஞ்சகமாகக் கவர்கிறது; முன்னேர்களை வழிபடும் முறையில்லாமல் இருக்கிறது; தெளிவில்லாமல் இருக்கிறது’ என இவ்விண்ணப்பத்தில் கூறப்பட் டிருந்தது.

லீவான் டுயெட் ‘நாங்கள் பசி பட்டினியால் வாடிய சமயத்தில் சமயப்பரப்பாளர்கள் அளித்த அரிசி எப்போதும் எங்கள் பற்களிடையே இருக்கிறது’ என மன்னருக்கு எழுதினர். ஆகையால், தெற்கிலுள்ள ஆறு மாகாணங்களில் கிறித்தவர்களை அடக்கித் துன்புறுத்தும் செயல்கள் நிறுத்தப்பட்டன. கி.பி. 1833ஆம் ஆண்டில் லீவான் டுயெட் இறந்த பிறகு கிறித்தவர்களை அடக்கித் துன்புறுத்த வேண்டும் எனக் கி.பி. 1834ஆம் ஆண்டில் மின்மாங் ஆணையிட்டார்.

மின்மாங் ஆணையிட்டதால் லீவான் டுயெட் கல்லறையை அவமதிக்கும் நோக்கத்துடன் அவர் கல்லறையின்மேல் நூறு சாட்டையடிகள் கொடுக்கப்பட்டன. ஆகையால், கி.பி. 1833ஆம்

ஆண்டு ஜூலை மாதம் லிவான் டுயெட்டின் வளர்ப்புமகன் லீவான் காய் (Levan Khoi) தலைமையில் ஒரு கலகம் ஏற்பட்டது. கொச்சின்-சீனுவில் தன்னுட்சியை ஒழித்ததால் இக் கலகம் ஏற்பட்டது என லீதான் காய் (Leethan Khoi) என்பவர் கூறுகிருர். கலகக்காரர்கள் கொச்சின்-சீனுவைக் கைப்பற்றினுர்கள். மின்மாங்கை அரசுரிமையிலிருந்து தள்ளுவதற்கும், இளவரசர் கேன்னுடைய (Prince Canh) மகனை மன்னராக நியமிப்பதற்கும் லீவான் காய் முயற்சி செய்தார். மறைந்திருந்த சமயகுரு மார்சாந்து (Father Marchan) என்பவரை, கிறித்தவர்களின் உதவிநாடும் நோக்கத்துடன், லீவான் காய் சைகானுக்கு வரும்படி வேண்டினுர். சியாம் நாட்டு அரசரைத் தம் உதவிக்கு ஒரு படையை அனுப்பும்படியாகவும் கேட்டுக்கொண்டார். ஆனுல், சியாம் நாட்டுப் படை மின்மாங்கிடம் தோல்வியடைந்தது. மின்மாங் கொச்சின்-சீனுவை மீண்டும் கைப்பற்றினுர். கோட்டையிலுள்ள எல்லோரும் 2,000 பேர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். லீவான் காயும், அவருடைய ஏழு வயது மகனும் கொல்லப் பட்டார்கள். சமயகுரு மார்சார்ந்து கி.பி. 1835 செப்டம்பர் 30ஆம் நாள் தூக்கிலிடப்பட்டார். இவருக்குமுன் கி.பி. 1833ஆம் ஆண்டு அக்டோபர் 17ஆம் நாள் முதன்முதலாக ஒரு பிரெஞ்சுச் சமயப்பரப்பாளர் சமயகுரு காகெலின் (Father Gagelin) கழுத்து நெறித்துக் கொல்லப்பட்டார். கி.பி. 1835-1838ஆம் ஆண்டு களுக்கு இடையே மேலும் ஐந்து சமயப்பரப்பாளர்கள் தூக்கிலிடப் பட்டார்கள்.

ஜியாலாங், மின்மாங் ஆட்சியின்போது பிரெஞ்சு-வியட்நாம் உறவை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். கி.பி. 1817ஆம் ஆண்டு முதல் 1831ஆம் ஆண்டு வரை வாணிகச் சலுகைகள் பெறவும், வியட்நாமுடன் நெருங்கிய அரசியல் தொடர்புகொள்ளவும், பிரெஞ்சு நாடு வியட்நாமில் முயற்சி செய்தது. ஆனுல், இம் முயற்சியில் பிரெஞ்சுக்காரர்கள் வெற்றி பெறவில்லை.

கி.பி. 1831ஆம் ஆண்டிலிருந்து பிரெஞ்சு நாடு வியட்நாமில் மிக்க அக்கறை காட்டவில்லை. தனிப்பட்ட வியட்நாம் கொள்கை களும் பிரெஞ்சு நாட்டிற்கு இச்சமயத்தில் கிடையா. வியட்நாமுடன் பிரெஞ்சு நாட்டிற்குத் தனிப்பட்ட முறையிலோ அரசியல் முறையிலோ தொடர்புகிடையாது. பிரெஞ்சுச் சமயப்பரப் பாளர்கள் மட்டும்தாம் வியட்நாமில் இருந்தார்கள். இச் சமயப் பரப்பாளர்களை மின்மாங் துன்புறுத்தியதனுல் பிரெஞ்சு நாடு வியட்நாமில் தலையிடவேண்டும் எனப் பிரெஞ்சு மக்கள் கோரிக்கையிட்டார்கள். இதன் விளைவாகக் கி.பி. 1837ஆம்

ஆண்டிலும், 1838ஆம் ஆண்டிலும் சில பிரெஞ்சுப் போர்க் கப்பல்கள் டுரேனுக்கு வந்தன. சமயப்பரப்பாளர்களைப் பாது காக்க வேண்டும், மின்மாங்குடன் ஓர் உடன்படிக்கை யேற்படுத்த வேண்டும் என்பதே பிரெஞ்சு அரசாங்கத்தின் நோக்கம். ஆனால், சமயப்பரப்பாளர்களைக் காண இக்கப்பல்களில் வந்த பிரெஞ்சுக் காரர்களுக்கு உடன்பாடு கொடுக்கப்படவில்லை. இவர்கள் வருகை வியட்நாமிற்குள் தேவையில்லை என்றும் கூறப்பட்டது.

கி.பி. 1838ஆம் ஆண்டில் பொரிசன் (Fourichon) என்ற இளம் பிரெஞ்சுக் கப்பற்படைத் தலைவர் டுரேனில் படைஉதவி களுடன் திடீர் என அரசியல் புரட்சி (Coup ditat) செய்ய வேண்டும் எனக் கூறினர். ஆனால், இதை மற்றவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. கி.பி. 1840ஆம் ஆண்டில் பிரெஞ்சுக் கப்பற் படைத்தலைவரும் இத்தகைய எண்ணத்தை எடுத்துரைத்தார். ஆனால், பிரெஞ்சு நாடு வியட்நாமில் தலையிடத் தயாராயிருக்க வில்லை.

வியட்நாம் மேலைநாடுகளுடன் எவ்வகைத் தொடர்பும் கொள்ளக்கூடாது என்ற நோக்கத்துடன் மின்மாங் கி.பி. 1820ஆம் ஆண்டிலிருந்து முயற்சிசெய்தார். கி.பி. 1832ஆம் ஆண்டு இவருடைய எண்ணம் ஏறத்தாழ நிறைவேறியது என்றே கூறலாம். பிரெஞ்சுச் சமயப்பரப்பாளர்கள் மட்டுமே வியட்நாமில் இருந்தார்கள். ஆனால், தம்முடைய ஆட்சியின் இறுதிக் காலத்திலே ஐரோப்பியர்களின்மேல் உள்ள தம் கொள்கைகளை மாற்றிக்கொள்ள இவர் விரும்பினர். மேலும், கி.பி. 1839ஆம் ஆண்டு நவம்பரில் பிரிட்டனுக்கும் சீனுவிற்கும் இடையே போர் மூண்டதால், இத்தகைய சூழ்நிலையில் வியட்நாம் தனித்திருந்தால் தீங்குகள் வரும் என மின்மாங் கருதினர். ஆகையால், கி.பி. 1840ஆம் ஆண்டில் இவர் இரண்டு மேண்டரின்களையும், இரண்டு மொழிபெயர்ப்பாளர்களையும் பாரிஸுக்கும் இலண்டனுக் கும் அனுப்பினர். கி.பி. 1840ஆம் ஆண்டு நவம்பரில் பாரிஸ் நகரத்தில் இவர்களைப் பிரதமமந்திரி படைத்துறை மீயுயர் அலுவலர் சோல்ட்டும் (Marshall Soult), வாணிபத்தொடர்பு அமைச்சர் குனின்-கிரிடெய்ண்டும் (Minister of commerce Gunin-Gridained) வரவேற்றார்கள். இவர்கள் வந்த பிறகு மின்மாங் கத்தோலிக்கர்களைத் துன்புறுத்துவதைப் பற்றிப் பாரிஸி லிருந்த கத்தோலிக்கர்கள் விளம்பரம் செய்யத் தொடங்கினர்கள். இதனல் அச்சம் கொண்ட பேரரசர் லூயி பிலிப் (Louis Philippe) இவர்களுக்குப் பேட்டி கொடுக்கவில்லை. பிரெஞ்சு நாட்டுடன் வாணிபத் தொடர்பு கொள்ள இவர்கள் விருப்பம் தெரிவித்தார்கள்.

ஆனால், இவர்கள் மேற்கொண்ட பணியில் இவர்கள் வெற்றியடையவில்லை. ஆனால், இவர்கள் பிரெஞ்சு நாட்டிலிருந்து திரும்பிவருவதற்குள் மின்மாங் கி.பி. 1841ஆம் ஆண்டு ஜனவரியில் இறந்தார்.

4. தியு—திரி (Thieu-Tri) கி.பி. 1841—1847

மின்மாங்கிற்குப் பின்வந்த தியு-திரியும் சமயப் பரப்பாளர்களை மிகுதியாகத் துன்புறுத்தத் தொடங்கினர். 'தந்தையைவிட இவருக்குப் பகுத்தறிவு குறைவு; இவர் ஆட்சியிலமர்ந்த மாதத்தில் ஆங்கிலேயர்கள் ஹாங்காங்கைக் கைப்பற்றியதாலும், சீனாவின் ஐந்து துறைமுகப்பட்டினங்களில் ஐரோப்பியர்களுக்கு வாணிபம் செய்ய உடன்பாடு கொடுக்கப்பட்டதாலும் தூரக்கிழக்கு நாடுகளின் வரலாற்றில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இவர் உணரவில்லை. சமயம்பரப்பாளர்களும், வாணிபர்களும் படும் துன்பத்தை இனிமேலும் பிரெஞ்சு அரசாங்கம் பொறுத்துக்கொண்டு ஏற்றுக்கொள்ளாது' என ஹால் (Hall) என்னும் வரலாற்று ஆசிரியர் கூறுகிறார்.

மின்மாங்கின் ஆட்சி இறுதியிலே வியட்நாம் தூதுக்குழு பிரெஞ்சு நாட்டிற்கு வந்தபோது துணிவுள்ள கத்தோலிக்கச் சமயப்பரப்பாளர்கள் பிரெஞ்சு நாட்டுக் குடிகளான போதிலும் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பது பிரெஞ்சு நாட்டின் கடமையன்று எனப் பிராட்டெஸ்டன்ட் கிறித்தவ மதத்தைப் பின்பற்றிய பிரதம மந்திரி கைஜாட் (Gaizot) அறிவித்தார். கைஜாட் எச்சரிக்கையுடன் நடந்துகொண்ட போதிலும் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு பிரெஞ்சு நாடு ஆசிய நாடுகளின் விவகாரங்களில் தலையிடவேண்டிய சூழ்நிலை உருவாகியது. கி.பி. 184 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் ஹாங்காங்கைக் கைப்பற்றியதால் கீழைநாடுகளில் பிரெஞ்சுப் தலைமையின் கீழிருக்கும் சில துறைமுகங்களும் தேவையெனக் கைஜாட் கருதினர். ஆனாலும், இந்தோ-சீன நாடுகளைக் கைப்பற்றுவதில் இவர் அக்கறை காட்டவில்லை. பஸிபிக் பெருங்கடலிலிருந்த சில தீவுகளின்மேல்—பிலிப்பைன்ஸிற்குத் தெற்கேயுள்ள, பெரும்பாலும் மொலூகாஸிலுள்ள தீவுகளின்மேல் இவர் தனிக் கவனம் செலுத்தினர். இந்தோ-சீன நாடுகளைப் பற்றித் தமக்கு மிகுதியாகத் தெரியாது என்று கூறி, அவைகளைக் கைப்பற்றினால் ஆங்கிலேயர்களுடன் சண்டையிடும் சூழ்நிலையேற்படுமோ என அஞ்சியும் இவர் இந்நாடுகளைக் கைப்பற்றுவதை விரும்பவில்லை.

ஆகையால், போர்னியோவிற்கும், பிலிப்பைன்ஸிற்கும் இடையேயுள்ள சுலுக்கடலிலுள்ள பாஸிலான் (Bosilon) தீவைக் கைப்பற்றுவதாக முடிவு செய்தார் அவர். இனிமேலும் பிரிட்டிஷ், டச்சு, போர்த்துகீசியர் ஆகியவர்களின் உதவியைப் பிரெஞ்சுக் கப்பல்கள் தென்கிழக்காசியாவில் தேடுவதை இவர் விரும்பவில்லை. சூழ்நிலை ஏற்றதாயிருந்தால் இத்தீவிலுள்ள தலைவர்களுடன் அல்லது அரசருடன் ஒரு தாற்காலிகமான உடன்படிக்கையைச் செய்துகொள்ளும்படியாகவும், இத்தீவிலுள்ள அரசரைப் பிரெஞ்சு நாடு ஒப்புக்கொள்கிறதென்று கூறும்படியாகவும் லாக்ரெனிவிடம் (Lagrene) கைஜாட் கூறியனுப்பினர். ஆனல், ஆங்கிலேயர்கள் இதை எதிர்ப்பார்களோ என அஞ்சி, மறைவாக இந் நடவடிக்கையை எடுக்கும்படிக் கூறியனுப்பினர். ஆனல், ஸ்பெயின் நாட்டிடமிருந்து வரும் எதிர்ப்பை அவர் எதிர்பார்க்கவில்லைபோல் இருந்தது.

ஆனல், இவர் திட்டம் கருச்சிதைவடைந்தது. பிரெஞ்சுக் கடற்படைத் தலைவர் செஸிலி (Admiral Cecille) தலைமையின்கீழ் இருவழித் துணைக்கப்பல்கள் (Coruettes) கி.பி. 1844ஆம் ஆண்டு அக்டோபரில் இத்தீவிற்குச் சென்ற 'சமயம் கரைக்குச் சென்ற ஐந்து பிரெஞ்சு மாலுமிகள் கடத்திச் செல்லப்பட்டார்கள். இம் மாலுமிகளை விடுவிப்பதற்காக ஜாம்போங்கா (Zamboonga) விலிருந்த ஸ்பானியர்களின் உதவியை நாடினர்கள். இம் மாலுமிகளைக் கண்டுபிடித்தபோது அவர்களில் இருவர் கொலையுண்டிருப்பதைக் கண்டார்கள்; மற்ற மூவருக்கும் 8000 பியாஸ்டர்கள் (Piasters–ஸ்பானிய வெள்ளி நாணய வகை) மீட்புப்பணம் கொடுக்கவேண்டியதாயிருந்தது. ஸ்பானியர்களிடமிருந்து கடன் வாங்கிய சிறு பீரங்கிப் போர்க்கப்பல் (Gun–boat), இதற்கெல்லாம் காரணயிருந்த தலைவரின் வேலியிடப்பட்ட தலைநகரை வெடிகுண்டுகளால் கடுமையாகத் தாக்கியது; ஆனல், கடலிலுள்ள அலைகள் கீழே இறங்கியதால் ஐரோப்பியர்கள் பின்வாங்கிச் சென்ருர்கள். மணிலாவிலிருந்து வாங்கிய தட்டைப் படகுகளைப் (Flat-bottom boats) பயன்படுத்தி இரண்டாம் முறை ஏழு வாரங்கள் பிரெஞ்சுக்காரர்கள் இத்தீவைத் தாக்கினர்கள். இதன் பயனகச் சுலுத் தலைவருடன் ஒரு தாற்காலிக உடன்படிக்கை (Counvention) ஏற்பட்டது. இத்தீவு பிரெஞ்சு நாட்டிற்கு உரியதாகிவிடும் என்றும், அதற்குப் பதிலாக ஆறுமாதத் தவணைக்குள் 100000 டாலர்கள் கொடுக்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டதாக இவ்வொப்பந்தத்தில் எழுதப்பட்டிருந்தது. இதற்குப்பிறகு கடற்படைத் தலைவர் செஸிலியின் கப்பல்கள் சிங்கப்பூருக்கும்,

பிறகு படாவியாவுக்கும் சென்றன. கி.பி. 1845ஆம் ஆண்டு ஜூலையில் அவை மகாவோ (Macao) விற்குத் திரும்பி வந்தன.

பாஸிலன் செய்கையினால் பிரெஞ்சின் பெருமைக்கு இழுக்கு ஏற்பட்டது. செல்வம் அதிகவளவில் செலவழித்ததாலும் ஒரு சிறிய சுலுத் தலைவர் பாஸிலனை அவமானப்படுத்தியதாலும் இப் படையெடுப்பின் சிறப்புக் குறைக்கப்பட்டது. ஆனால், சுலுத்தீவு ஸ்பெயினுக்குத் திறை செலுத்துவது எனக் கூறிப் பிரெஞ்சுப் படையெடுப்பை எதிர்த்து மணிலா மாத்ரிட் (Madrid) வழியாகத் தன்னுடைய மறுப்பைத் தெரிவித்தது. ஆங்கிலேயர்கள் மனம் கலங்கினார்கள்; ஒருவகையில் பிரெஞ்சு நடவடிக்கை அவர் களுக்கு ஒரு வேடிக்கையாகவும் இருந்தது. இத்தீவுபற்றி எடுத்த எல்லா நடவடிக்கைகளையும் கைஜாட் ஏற்க மறுத்தார். மேலும், இத் தீவிற்குப் பிரெஞ்சு நாட்டின் தளமாகத் தகுதியில்லை யென்றும், இதனால் பிரெஞ்சுக் கப்பல்களுக்கு ஒரு பயனும் கிடையாது என்றும் இவர் அறிவித்தார்.

பாஸிலன் படையெடுப்பிற்குமுன் டொங்கிங்கிலுள்ள சமயப் பரப்பாளர்கள் தங்களைப் பாதுகாப்பதற்காக வியட்நாமில் தலை யிடும்படி லாக்ரெனியிடமும், செஸிலியிடமும் முறையிட்டார்கள். போர்புரியும் கப்பற்படை தளராமல் தொடர்ந்து டுரேனையோ டொங்கிங் கடற்கரையருகேயோ தாக்கினால் சமயப்பரப்பாளர் களின் நண்பர்களும் வியட்நாம் அரசைக் கைப்பற்ற விரும்பும் லீ மன்னர்களின் வழிவழி மரபினர்களும் (Le dynasty Partisons) துணிவுபெற்று ஊக்கத்துடன் ஹியூவின் தலைமையை எதிர்க்க முன் வருவார்கள் என இவர்கள் கூறினார்கள். லீ அரசர் பதவி யேற்றால், பிரெஞ்சு நாட்டிற்குக் கப்பல் தளமும், சமயப்பரப் பாளர்களுக்குச் சலுகைகளும் கிடைக்கும் என இச் சமயப்பரப் பாளர்கள் கூறினார்கள். பிரெஞ்சு உதவியை நாடுவதற்காக மகாவோவிற்கோ பாரிசுக்கோ ஒரு லீ மரபினர் வருவது நல்லது என்றும், சமயப் பரப்பாளர்கள் தங்களிடம் கூறியதையும் பற்றி கடற்படைத் தலைவர் செஸிலி பாரிஸில் உள்ள கடல்துறை அமைச் சருக்குச் செய்தியனுப்பினார். பாஸிலனுக்குப் பதிலாக ஒரு பிரெஞ்சு டொங்கிங்கை உருவாக்குவலத விரும்புவதாக லாக்ரெனி னும் தெரிவித்தார். இச் சூழ்நிலையில்தான் டஹிதி (Tahiti) தீவு பற்றிப் பிரெஞ்சு நாடு பிரிட்டனுடன் போர் புரிந்துகொண் டிருந்தது. ஆனால், பிரிட்டனுக்குப் பணம் செலுத்திப் பிரெஞ்சு நாடு இத் தீவை மீட்டது. ஆகையால், இச் சூழ்நிலையில் பிரதம மந்திரி கைஜாட் செஸிலியின் கோரிக்கைகளைப் புறக் கணித்தார்.

தூரக்கிழக்கு நாடுகளிலிருக்கும் பிரஞ்சுக் கடற்படைத் தலைவர்கள் இதனுல் நம்பிக்கை குலைந்தார்கள். போர்த்துகீசிய, ஸ்பானிய, ஆங்கிலேயக் கடற்படைகள் தங்கள் நாடுகளுக்குச் செய்யும் தொண்டுகளைப்போல் தாங்கள் பிரெஞ்சு நாட்டிற்குச் செய்ய முடியவில்லை என இவர்கள் வருந்தினுர்கள். ஆசியாவில் உள்ள பிரெஞ்சுச் சமயப்பரப்பாளர்களும், பிரெஞ்சு நாட்டில் இவர்களை ஆதரித்த அரசியல்வாதிகளும், பிரெஞ்சுக் கடற்படைத் தலைவர்கள் எண்ணத்தை வரவேற்றுர்கள். படைவீரர்களும், தூதுவர்களும் செய்யும் உடன்படிக்கைகளுக்குக் கீழைநாட்டில் தேவையான விவரங்களும், அந்நாட்டு மொழிகளும் சமயப் பரப்பாளர்களுக்குத்தாம் தெரியும். டஹிதி விவகாரங்களில் கூட இரு சமயப்பரப்பாளர்கள்தாம் பிரெஞ்சு நாட்டிற்கு உதவினுர்கள். 'சிறு நாய்கள் தூரத்திலிருந்து குரைக்கும்; ஆனுல் கடிக்கமாட்டா' என்பதைப்போல் பிரெஞ்சு நாட்டின் நடவடிக்கைகள் தூரக்கிழக்கு நாடுகளில் இருக்கின்றன என உரோமன் கத்தோலிக்கக் குழுவின் உறுப்பினரான சமயகுரு டுயுஅய் (Jesuit Father Douai) வெறுப்புடன் கூறினுர்.

பிரெஞ்சு நாட்டின் வெளியிலே ஏற்பட்ட நடவடிக்கைகளுக்குள், மின்மாங் கத்தோலிக்க மதத்திற்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள் பிரெஞ்சு நாட்டிலுள்ள கத்தோலிக்க மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டின. துன்புறுத்தப்பட்ட சமயப் பரப்பாளர்களின் சார்பாகப் பிரெஞ்சு நாடு வியட்நாமில் தலையிட வேண்டும் என்னும் கருத்தை இவர்கள் வெளிப்படையாகப் பரப்பத் தொடங்கினுர்கள். இவர்களுடைய தொல்லையினுல் 'பிரெஞ்சுச் சமயப்பரப்பாளர்களின் உயிருக்குத் தீங்கு ஏற்படும் சூழ்நிலையேற்பட்டால், சண்டையிடாமலும், பிரெஞ்சு நாட்டை இதில் ஈடுபடுத்தாமலும், அவர்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும்' எனக் கைஜாட் பிரெஞ்சுக் கப்பற்படைத் தலைவர்களுக்குக் கி.பி. 1843ஆம் ஆண்டில் கட்டளையிட்டார்.

பல வீம்புமிக்க பிரெஞ்சுக் கப்பல் தலைவர்களும் டுரேனுக்கு அடிக்கடி வரத் தொடங்கியதால் தியு—திரீக்குப் பிரெஞ்சுக்காரர்களின் மேல் உள்ள வெறுப்பு மிகுந்தது. ஹீரோயின் (Heroine) கப்பலின் தலைவர் பாவின்-லிவெக்யூ டுரேனுக்குக் கி,பி. 1843ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வந்து தியு-திரீ கைது செய்திருந்த ஐந்து பிரெஞ்சுச் சமயப்பரப்பாளர்களை விடுதலை செய்தார். வியட்நாமிற்குள் நுழைந்து சமயத்தைப் பரப்பக் கூடாது என்ற தடைச் சட்டத்தைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது எனப் பாவின் தியு—திரீக்குக் கூறியதால்தான் அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

பெருந்தகை (Monsignor—போப்பாண்டவரின் அவை அலுவலர்களுக்கு வழங்கும் பட்டம்) லீபெப்விரீ (Lepebvre) கி.பி. 1835ஆம் ஆண்டில் வியட்நாமிற்கு வந்தார். வியட்நாம் மொழியைக் கற்றுக்கொண்டு கொச்சின்-சீனவில் மதத்தைப் பரப்பிக் கொண்டிருந்தார். கி.பி. 1844ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் நாள் அவர் கைது செய்யப்பட்டார். பின் அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்தோ-சீன அருகிலுள்ள கடலில் பிரெஞ்சுக் கப்பல்கள் சுற்றியுலாவிக் கொண்டிருந்ததால் தியு-திரீ அஞ்சினர்; ஆகையால், லீபெப்விரியின் தூக்குத் தண்டனையைத் தள்ளிவைத்தார். கி.பி 1845-ல் கப்பற்படைத் தலைவர் ஜான் பெர்சிவல் (Commander John Percival) என்ற அமெரிக்கர் வியட்நாமிற்கு வந்தார். அவர் ஒரு பிரெஞ்சுக் கப்பலில் வந்திருக்கிருரோ என நினைத்து லீபெப்விரீ தமக்கு உதவும்படி அவருக்குச் செய்தியனுப்பினர். பெர்சிவலுக்கு வணக்கம் செலுத்துவதற்காக அவரது கப்பலுக்குள் மூன்று அல்லது நான்கு மேண்டரின்கள் வந்தார்கள். லீபெப்விரியைத் தியு-திரீ விடுதலை செய்தால்தான் தம் கப்பலுக்குள் வந்த மேண்டரின்களை விடுதலை செய்ய முடியும் எனப் பெர்சிவல் தியு-திரீக்குச் செய்தி அனுப்பினர். ஆனல், தியு-திரீ லீபெப்விரியை மேண்டரின்களுக்குப் பதிலாக விடுதலை செய்யத் தயாராக இல்லை. தோல்வியுற்ற பெர்சிவல் மேண்டரின்களை விடுதலை செய்துவிட்டு டுரேன் துறைமுகத்தைவிட்டுச் சென்றர். மேண்டரின்கள் தங்களைப் பெர்சிவல் கைது செய்யும்படியான சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டதால் அவர்களைத் தியு-திரீ கைது செய்து தண்டனை விதித்தார். அமெரிக்கக் குடியரசு அரசாங்கம் தங்கள் அரசாங்கத்திற்கும் பெர்சிவலுக்கும் தொடர்பில்லை எனக் கூறி, மனமார்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கவும், ஒற்றுமை கொள்ளவும் சிங்கப்பூரிலிருந்த அமெரிக்க அயலிட நாட்டுப் பேராளரை ஹியூவிற்கு அனுப்பியது. பிரெஞ்சு அரசாங்கம் கடற்படைத் தளபதி பார்னியர்-டுப்லானை (Farnier-Duplan) வியட்நாமிற்கு அனுப்பியது. அவர் லீபெப்விரியை விடுதலை செய்ததோடல்லாமல் தமக்கும் தம் கப்பல் மாலுமிகளுக்கும் தியு-திரீ கொடுத்த நன்கொடைகளையும் எடுத்துக் கொண்டு பிரெஞ்சு நாட்டிற்குத் திரும்பினர். தியு-திரீ ஆட்சியில் ஒரு சமயப்பரப்பாளர்கூடத் தூக்கிலிடப்படவில்லை. கி.பி. 1846ஆம் ஆண்டு மே மாதம் லீபெப்விரீ மீண்டும் வியட்நாமிற்கு வந்தார்; ஆனல், உடனடியாகக் கைது செய்யப்பட்டார். அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. லீபெப்விரியை விடுதலை செய்யவெண்டும் என்ற நோக்கத்துடனும், கத்தோலிக்கர்களுக்குத் தங்கள் சமயத்தைப் பின்பற்ற முழுவுரிமை கொடுக்க

வேண்டும் என்ற நோக்கத்துடனும் கடற்படைத் தளபதி லாபியரி (Captain Lapierre) தலைமையில் இரண்டு போர்க் கப்பல்களை டுரேனுக்குக் கடற்படைத் தலைவர் செஸிலி அனுப்பினார். ஆனால், லாபியரி வியட்நாமிற்கு வருவதற்கு முன்பே லீபெப்விரியைத் தியு-திரீ சிங்கப்பூருக்குக் கி.பி. 1847ஆம் ஆண்டு பிப்ரவரியில் கடத்தினார். லீபெப்விரி சிங்கப்பூரிலிருந்து கொச்சின் சீனாவிற்குச் சென்றார். கி.பி. 1864ஆம் ஆண்டில்தான் பிரெஞ்சு நாட்டிற்குத் திரும்பினார். கி.பி. 1865ஆம் ஆண்டில் அவர் இறந்தார். தளபதி லாபியரி கி.பி. 1847ஆம் ஆண்டு மார்ச்சு 23ஆம் நாள் வியட்நாமிற்கு வந்தார். லீபெப்விரி நாடுகடத்தப்பட்டது இவருக்குத் தெரியாது. துறைமுகத்திலிருந்த வியட்நாம் கப்பல் களின் கப்பற்பாய்களைத் தளபதி லாபியரியின் படைவீரர்கள் அகற்றினார்கள். தங்கள் கோரிக்கைபற்றி வியட்நாம் பேரரசர் பதில் கொடுப்பார் என நினைத்து இரண்டு வாரங்கள் காத்திருந் தார்கள். ஆனால், ஏப்ரல் 14ஆம் நாள் வியட்நாம் கப்பல்கள் லாபியரியின் கப்பல்களைத் தாக்கும் நோக்கத்துடன் நெருங்கி வந்தன. தம் கப்பல்களுக்கு வரும் தீங்கைக் கண்டவுடன் லாபியரியும் மற்றப் பிரெஞ்சுப் படைவீரர்களும் 70 நிமிடங்கள் துப்பாக்கியால் இடைவிடாமல் சுட்டனர். இவ்வளவு காலமாக வியட்நாம் பேரரசர்களின் துன்புறுத்தலின் காரணமாக இறந்த பிரெஞ்சுச் சமயப் பரப்பாளர்களைப் போல நூறு மடங்கு வியட் நாமியர்கள் இப் போரில் மாண்டார்கள். இப் போருக்குப் பின் லாபியரி டுரேனைவிட்டு வெளியேறினார். கி.பி. 1847ஆம் ஆண்டில் கடற்படைத் தலைவர் செஸிலி மீண்டும் கீழைநாடுகளுக்கு வந்தார். இனிமேல் வியட்நாமுடன் துப்பாக்கி மூலம் பேச்சு நடத்த வேண்டும் என்றும், தியு-திரீக்குப் பிறகு ஒரு நல்ல மன்னர் பதவிக்கு வரவேண்டும் என்றும் பிரெஞ்சு அரசாங்கத்திடம் விண்ணப்பித்துக் கொண்டார். வியட்நாமிற்கு எதிராகத் தாம் படையெடுத்துச் செல்லவும் தயார் என அவர் கூறினார்; ஆனால் பிரெஞ்சு அரசாங்கம் அவருக்கு உடன்பாடு கொடுக்கவில்லை. டுரேன் போர் முடிந்த சில மாதங்களுக்குப் பிறகு கி.பி. 1847ஆம் ஆண்டு நவம்பரில் தியு-திரீ இறந்தார்; அவர் சாகும் தறுவாயில் மேலைநாட்டினரின்மேல் உள்ள அவர் வெறுப்புப் பெருகியிருந்தது.

டுடக் (Tuduc) 1848—1883

கி.பி. 1848ஆம் ஆண்டு டுடக் வியட்நாமின் பேரரசராகப் பதவியேற்றார். தியு - திரீயின் ஆட்சியின்போது பிரெஞ்சு அரசாங்கம் நடந்த முறையால் டுடக் வியட்நாம் அரசாங்கத்தின் கத்தோலிக்கச் சமயப் பரப்பாளர்களை எதிர்க்கும் கொள்கையைக்

கைவிடத் தயாராக இருக்கவில்லை. ஆகையால், மேலும் பல பிரெஞ்சுப் போர்க்கப்பல்கள் வியட்நாமிற்கு வந்து டுடக்கிற்குத் தொல்லை கொடுக்கவேண்டும் எனக் கத்தோலிக்கச் சமயப் பரப்பாளர்கள் விரும்பினார்கள். மேலும், பிரெஞ்சுக் கடற்படைத் தலைவர்களுக்கு வியட்நாம் அரசாங்கத்தின் பல இரகசியங்களை இவர்கள் கூறினார்கள். பிரெஞ்சு நாட்டில் அவர்களை ஆதரித்த பிரெஞ்சுக்காரர்கள் வியட்நாமின்மேல் பிரெஞ்சு நாடு படையெடுக்க வேண்டும் எனக் கூறத் தொடங்கினார்கள். மேண்டரின்களும், டுடக்கும் இங்ஙனம் சூழ்நிலை உருவாவதைப் பற்றிய விவரங்களை நன்கு அறிந்திருந்தார்கள்.

'டுடக் அறிவுக் கூர்மையுள்ளவர்; இரக்க நெஞ்சமுடையவர்; தமக்குமுன் ஆட்சிபுரிந்த மன்னரைப் போல் சீறியெழுந்து பிதற்றமாட்டார். ஆழ்ந்து கற்றவர்; கல்விமான்; அன்புடன் பழகுபவர்; அளவான மிதப்போக்குள்ளவர்' எனக் கோசலின் (Gossalin) என்ற வரலாற்றாசிரியர் கூறுகிறார். 'இவர் முரட்டு வெறியும் கொலைவெறியும் கொண்ட கொடிய விலங்கு என இவரைப் பற்றிப் புனைந்துரைக்கப்படுகிறது. குறுகிய மனப்போக்குடையவர்களே இவ்வாறு கூறுவார்கள். தன்னிறைவு உள்ளவர்களே தங்களுடைய எதிரியை இழிவுபடுத்துவதற்காக இவர்கள் கூறுவதை ஒப்புக்கொள்வார்கள். ஆனால், இவரைக் கடுகடுத்த முரட்டுக் காட்டுமிராண்டியின் இயல்புடையவர் என்று அன்னும் மக்கள் கருதவில்லை. இதற்கு நேர் எதிராக இவருடைய கனிவுடைய, தன்வயப்படுத்திக்கொள்ளும் இயல்பை இவர் தந்தை பேரரசர் தியு-திரீ விரும்பியதால், கடுஞ்சினம் கொள்ளும் ஆட்சித் தலைமையியல்புடைய தம் மூத்த புதல்வருக்குப் பதிலாக இவரையே பேரரசராக நியமித்தார்' என்று லெப்பால்டு பால்லுடிலா பாரியர் (Leopald Palludela Barriere) கூறுகிறார். 'இந்தக் கீழை நாட்டு ஆளுநருடன் நான் ஒரு மணிக்குமேல் உரையாடினேன். இவரைப்பற்றி என்மனத்தில் ஒப்புமையற்ற மேம்பட்ட எண்ணங்கள் உருவாகின... அச்சந்தருகிற ஒருவரைக் காணப்போவதாக நான் நினைத்தேன். ஆனால் பண்பட்ட மேன்மை வாய்ந்த ஒருவரைத் தான் நான் கண்டேன். டுடக்கிற்கு மஞ்சள்நிற நீள்வட்ட வடிவமுடைய முகம்; அறிவாழமிக்க கருங்கண்கள்; எவரும் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு இவருடைய கைகள் வனப்புடையனவாகவும் கவர்ச்சிமிக்கனவாகவும் இருந்தன. இத்தகைய உறுப்பமைதியைக் கொச்சின்-சீனவில் பொதுவாகப் பார்க்கலாம். ஆனால் இவ்வரசரின் துப்புரவுள்ள உடலைப்போல் காண்பதரிது' எனக் கேப்ரியல் ஆபரெட் (Gabriel Aubaret) என்பவர் கூறுகிறார்.

சமயப் பரப்பாளர்களை அச்சுறுத்தி வியட்நாமைவிட்டு வெளியேற்ற வேண்டும் என்றும், வியட்நாமியர் கத்தோலிக்க மக்களை அச்சமூட்டு முறைகளைக் கையாண்டுத் தமக்கு அடிபணியச் செய்ய வேண்டும் என்றும் டூடக் விரும்பினர். கி.பி. 1851ஆம் ஆண்டில் டூடக்கிற்குப் பதிலாக அவரை எதிர்த்த அவர் உடன்பிறந்தவர் ஒருவரைப் பதவியில் அமர்த்தும் நோக்கத்துடன் வடவியட்நாமில் கத்தோலிக்கர்கள் ஆதரித்த ஒரு கலகம் மூண்டது. ஆனால் இக் கலகத்தைப் பேரரசர் அடக்கினர்; ஒரு பிரெஞ்சுச் சமயப்பரப்பாளரைக் கழுவிலேற்றினர்.

முன்னோர் வழிபாட்டு முறையாகக் கத்தோலிக்கர்கள் எதிர்க்கிறார்கள் என்ற முக்கியக் காரணத்தால் தூண்டப்பட்டு டூடக் ஐரோப்பியக் கத்தோலிக்கர்களுக்கு எதிராக இரண்டு அரசாணைகளை 1848ஆம் ஆண்டிலும் 1851ஆம் ஆண்டிலும் வெளியிட்டார். இந்த ஆணைகளைமட்டும் ஒழுங்காகத் திட்டப்படி முழுநிறைவாக மேண்டரின்கள் வியட்நாம் முழுவதிலும் நிறைவேற்றியிருந்தால் கத்தோலிக்கச் சமுதாயமே அறிந்திருக்கும். இவ்வாணைகளின்படி ஐரோப்பியச் சமயப்பரப்பாளர்களைக் கடலிலோ ஆறுகளிலோ தூக்கியெறிந்து கொலை செய்ய வேண்டும்; வியட்நாமிய சமயப்பரப்பாளர்களை இருபகுதிகளாக நீளவாட்டில் துண்டிக்க வேண்டும். அரசாங்க அதிகாரிகளிடம் ஓர் ஐரோப்பியச் சமயப் பரப்பாளரைப் பிடித்துக் கொடுத்தபின் அவருக்கு எட்டு வெள்ளி டேயல்களும் (Tael—சீன வெள்ளி) அச்சமயப் பரப்பாளரின் பாதிச்சொத்தும் கொடுக்கப்படும்; மிஞ்சிய பாதிச் சொத்தினை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும். சமயப்பரப்பாளர்கள் ஒளிந்து கொண்டு தப்புவதற்கு எவராவது உதவினால், அவர் தூக்கிலடப் படுவார். கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றுபவர்கள் தூக்கிலடப் படமாட்டார்கள்; அவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள்; அல்லது நாட்டிலிருந்து விரட்டப்படுவார்கள். ஆகையால், சமயப் பரப்பாளர்கள் தலைமறைவாகத் திரியத் தொடங்கினர்கள். ஆனால், இவ்வாணைகளை அரசியல் அதிகாரிகள் செயல்முறையில் பயன்படுத்தவில்லை. இதற்கு ஒரு சிறந்த முக்கியக் காரணமென்னவென்றால், மேண்டரின்கள் கையூட்டும் ஊழலும் நிறைந்தவர்களாய் இருந்தமைதான்.

பிரெஞ்சு நாட்டிலுள்ள சூழ்நிலையினால் தூண்டப்பட்டுத்தான் டூடக் இவ்வாணைகளை வெளியிட்டார். கி.பி. 1848ஆம் ஆண்டு பிப்ரவரியில் பிரெஞ்சு நாட்டி* புரட்சி முறையில் தூக்கியெறியப்

* 'ஜூலை முடியாட்சி (July Monarchy) ஆர்லியன்ஸ் அரசர் குலம்',

பட்டது. இதற்குப் பின் நான்கு ஆண்டுகள், உள்நாட்டு விவகாரங்களில் மூழ்கியிருந்ததால், பிரெஞ்சு நாடு கிழக்காசிய விவகாரங்களில் தலையிடவில்லை. திடீர் அரசியல் புரட்சி செய்யும் முன் லூயி நெப்போலியனுக்கும் நாடாளுமன்றத்திற்கும் இடையே பிணக்கு முற்றிக்கொண்டு வந்திருந்தது. இச் சூழ்நிலையினால் கத்தோலிக்கர்களை ஒழிக்கும் வியட்நாம் முயற்சிகளைப் பிரெஞ்சு நாட்டால் எதிர்க்க முடியாது என மேண்டரின்கள் நினைத்தார்கள். வட வியட்நாமில் பெருந்தகை ரிடோர்டு (Monsignor Retord) சிறையிலிடப்பட்டார். ஆனால், தமக்கு அரசியல் விவகாரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவோ அதில் தலையிடவோ விருப்பமில்லை என இவர் கூறியதால் இவரை மேண்டரின்கள் விடுதலை செய்தார்கள். மேண்டரின்களுக்கு மிகுந்த அளவில் கையூட்டுக் கொடுத்ததால் பல சமயப்பரப்பாளர்களுக்கு விடுதலை கொடுக்கப்பட்டது.

நாற்பது சமயப்பரப்பாளர்கள் இரகசியமாகத் தங்கள்வேலைகளை இடைவிடாமல் செய்து கொண்டிருந்தார்கள். கி.பி. 1848ஆம் ஆண்டில் டுரேன் போருக்குப் பிறகு இச் சமயப்பரப்பாளர்கள் மிக்க துன்பத்திற்குள்ளானார்கள்.

கி.பி. 1852ஆம் ஆண்டுக்குப் பிறகு சமயப்பரப்பாளர்களின் குற்றச்சாட்டுகளையும், திட்டங்களையும் பிரெஞ்சு நாட்டை ஆட்சி புரிந்தவர்கள் செவிசாய்த்துக் கேட்கத் தயாராயிருந்தார்கள். கி.பி. 1851ஆம் ஆண்டுக்குப் பிறகு சமயப் பரப்பாளர்களின் குற்றச்சாட்டுகள் பெருகத் தொடங்கின. படை வலிமையைப் பயன்படுத்தி வியட்நாமுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் எனப் பெருந்தகை ரிடோர்டு கூறினார். வியட்நாமில் ஒரு பகுதி பிரெஞ்சு நாட்டிற்கு உரியது என வியட்நாம் ஒப்புக்கொண்டால் தான் வியட்நாமுடன் பிரெஞ்சு நாடு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என ரிடோர்டு கூறினார். சமயப்பரப்பாளர்களுக்கு உதவிசெய்ய வலிமையற்றதாயிருப்பதால்தான் பிரெஞ்சு நாடு முன் வரவில்லை என மற்றவர்கள் நினைக்கும் எண்ணத்தை உடைத்து எறியும் நோக்கத்துடன் பிரெஞ்சுநாடு ஒரு கப்பற் படையை வியட்நாமிற்கு அனுப்ப வேண்டும் என லூயி நெப்போலியனிடம், கீழை நாடுகளில் குடியேறியிருந்த எட்டுப் பிரெஞ்சுச் சமயப்பரப்பாளர்கள் முறையிட்டார்கள். அமைதியுடன் ஒற்றுமைக்குச் செய்யும் முயற்சிகள் பயன்தரா என்றும், வியட்நாமிலுள்ள சமயப்பரப்பாளர்களைப் பாதுகாப்பதற்காகவும் கிறித்தவ மதத்திற்குக் கருத்து உரிமை கிடைப்பதற்காகவும் டுரேனைப் பேச்சு மூலமாகவோ போர் முறை மூலமாகவோ கைப்பற்ற வேண்டும் என்றும் இவர்கள் கூறினார்கள்.

சீனவில் பிரெஞ்சு நாட்டின் முதல் தூதுவராயிருந்த கோமான் போர்பௌலன் (Count Bourboulon) இச் சமயப் பரப்பாளர்களின் தலையிடு கொள்கைகளை ஆதரித்தார். கொரியாவின் மீதும் வியட்நாமின் மீதும் பிரெஞ்சு நாடு படையெடுக்க வேண்டும் என இவர் வலியுறுத்தினர். இதுபற்றி விறுவிறுப்பான நடவடிக்கைகள் எடுத்தால் மனித இனத்திற்கே நன்மை பயக்கும்; இந்த 'இழிந்த, திமிர் பிடித்த, மதியாமல் பேசுகிற காட்டுமிராண்டிகளைப் பிரெஞ்சு நாடு தண்டித்தால், பண்பு நிறைந்த நாகரிக நாடுகள் பாராட்டைத் தெரிவிக்கும். சமயப்பரப்பாளர்களின் நடவடிக்கைகளை ஒற்றுமை மனப்பான்மையுடன் வியட்நாம் அரசர் ஏற்றுக்கொள்ளவேண்டும்; அல்லது பிரெஞ்சு ஸ்பானியர் சமயப் பரப்பாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்; அல்லது 30 ஆண்டுகளாகப் பல சமயப்பரப்பாளர்களைக் கொலை செய்ததற்கு ஈடாக டுரேனை வியட்நாம் பிரெஞ்சு நாட்டிற்கு விட்டுக் கொடுக்க வேண்டும்; இதற்கு வியட்நாம் இணங்கவில்லையென்றால் பிரெஞ்சுக் கப்பற்படை டுரேனையும், அதைச் சுற்றியிருக்கும் பகுதிகளையும் கைப்பற்ற வேண்டும்; இத்தகைய சூழ்நிலையை உருவாக்கினல் நடுநிலை அளவான முற்போக்குக் கொள்கையுடைய நெருங்கிய வாணிபத் தொடர்பு, பிரெஞ்சு நாட்டிற்கும் வியட்நாமிற்கும் இடையே அமைக்கலாம்; இவ்வகையான செய்தியைப் பிரெஞ்சு நாட்டின் அயல்நாட்டு அமைச்சருக்கு அனுப்பினர் இவர். இவருடைய கருத்துகளைப் பிரெஞ்சு அராசங்கமும் ஏற்றுக்கொண்டது.

டூடக்கிற்கும் சமயப் பரப்பாளர்களுக்கும் இடையே உள்ள சச்சரவு மிகுந்து கொண்டிருந்தது. கி.பி. 18.5ஆம் ஆண்டில் கிறித்தவர்களை எதிர்க்கும் பல புதிய சட்டங்களை அறிவித்தார் டூடக். லீ மரபினரில் ஒருவர் கத்தோலிக்கச் சமயத்தை ஏற்றுக்கொண்டதாலும், அவர் டூடக்கிற்கு எதிராகக் கலகம் செய்யத் தயாராக இருந்ததாலும் அவருக்குப் பிரெஞ்சு நாடு ஆதரவளிக்க வேண்டும் என்று சமயப் பரப்பாளர்கள் முறையிட்டார்கள். வியட்நாமைப் பிரெஞ்சு நாடு கைப்பற்றவேண்டும் என இவர்கள் இடைவிடாமல் வலியுறுத்தினர்கள். கொச்சின்—சீன டொங்கினில் உள்ள பொருளாதாரச் செழிப்பைப் பிரெஞ்சு வாணிபம் பயன்படுத்தவேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக டுரேனைக் கைப்பற்றவேண்டும் எனக் கூறினர்கள். சமயப் பரப்பாளர்களுக்கு உதவுவதற்காக எம்.டி. மான்டிக்னி (Mde Montigny) என்பவர் வியட்நாமிற்குத் தூதுவராக அனுப்பப்பட்டார். பல போர்க் கப்பல்களும் மான்டிக்னிக்கு உதவுவதற்காக வியட்நாமிற்கு அனுப்பப்பட்டன. இவைகளைப் பார்த்தாவது வியட்நாமிலுள்ள சமயப்பரப்பாளர்களைப் பாதுகாக்கப் பிரெஞ்சு நாடு கடுமையான நடவடிக்கைகளை

எடுக்கத் தயாராயிருக்கிறது என்பதை உணரலாம். ஆனால் பிரெஞ்சு இராணுவத்திற்கும், பிரெஞ்சு அரசியலில் ஈடுபட்டவர்களுக்கும் இடையே ஒத்திசைவு ஏற்படவில்லை. கி.பி 1856ஆம் ஆண்டு செப்டம்பரில் 'கேடிநெட்' (Catinet) என்ற கப்பல் டுரேனுக்கு வந்தது. ஆனால், அக் கப்பற்படைத் தலைவர் டூடக்கிற்காகக் கொடுத்த கடிதத்தை மேண்டரின்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். ஆகையால், அக்கடிதம் ஹியூவிற்கு அனுப்பப்படவில்லை. உடனடியாகக் 'கேடிநெட்' டுரேன் துறைமுகத்திலுள்ள பாதுகாப்பு அரண்களைத் தாக்கியது. இரண்டாவது கப்பல் கேப்ரிஸ் (Caprice) செப்டம்பரில் வியட்நாமிற்கு வந்தது. ஆனால், கி.பி. 1857ஆம் ஆண்டு ஜனவரி மாதம்தான் அதனால் டுரேனுக்குச் செல்லமுடிந்தது. இது வருவதற்குள் 'கேடிநெட்' டுரேனை விட்டுச் சீனாவிற்குச் சென்றது. ஹியூ அவையுடன் நேரடியான தொடர்பு வைத்துக்கொள்ள மான்டிக்னி உடன்பாடு கேட்டார். ஆனால், இவருடைய வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டது. ஆகையால், கி.பி. 1857ஆம் ஆண்டு பிப்ரவரி 7ஆம் நாள் அவர் டுரேனை விட்டு வெளியேறினார். 'நாங்கள் அழைக்காமலே இவர்கள் வந்தார்கள்; இரண்டுங் கெட்ட நிலையை உருவாக்கித் திரும்பிச் சென்றுவிட்டார்கள். சினமூட்டும்படியான நடவடிக்கையைத் தொடங்கிவிட்டு, கோழையாகப் பின்வாங்கி இறுதியில் திரும்பிப் போனார்கள் எனப் பெருந்தகை ரிடோர்டு கூறினார். பாங்காக்கிலும் கம்போட்டிலும், ஹியூவிலும் மான்டிக்னியின் ஒற்றுமைக்கான பேச்சு முயற்சிகள் தோல்வியடைந்ததால், தென்கிழக்காசியாவில் பிரெஞ்சு நாட்டின் மதிப்பும் பெருமையும் மிகவும் குறைந்திருந்தன. பிரெஞ்சுக்காரர்கள் 'நாய் போல் குரைக்கிறார்கள்; ஆடுபோல் அஞ்சி ஓடிவிடுகிறார்கள்' என்று பேரரசர் டூடக்கின் சார்புரிமைப் பேச்சாளர் கூறினார்.

டொங்கிங்கிலே தங்கம், வெள்ளி, செம்பு, நிலக்கரி, மரத்துண்டுகள் முதலியன ஏராளமாகக் கிடைப்பதாலும், வியட்நாம் கடற்கரைகளுக்கு, சிறப்பாக ஹியூவின் பாதுகாப்பிற்கு, இப்பட்டணம் உபயோகமாயிருக்கும் என்பதாலும் இதன்மேல் பிரெஞ்சு நாடு படையெடுக்க வேண்டுமென்று ரிடார்டு அறிவுறுத்தி இணங்கவைக்க முயன்றார்.

பெருந்தகை ரிடார்டைத் தவிர, சமயகுரு ஹக்கும் (Father Huc), பெருந்தகை பெல்லரினும் (Monsignor Pellerin) வியட்நாமின்மேல் பிரெஞ்சு நாடு படையெடுக்கவேண்டும் என விண்ணப்பித்துக்கொண்டார்கள். பெல்லரின் வியட்நாமில் மிகவும் துன்புறுத்தப்பட்டார். அவர் உயிருக்கே தீங்கு வந்த சமயம்

கி.பி. 1856ஆம் ஆண்டில் நவம்பரில் டுரேனுக்கு வந்த ஒரு பிரெஞ்சுக் கப்பலில் ஏறித் தப்பி மறைந்தார். பாரிஸில் உள்ள மாதாக்கோவில்களிலே வியட்நாமில் கிறித்தவர்கள் படும் துன்பத்தைப்பற்றி அவர் கூறினர். அவர்களைப் பாதுகாப்பது பிரெஞ்சு நாட்டின் கடமை என வலியுறுத்தினர். வியட்நாமில் பிரெஞ்சு நாடு தலையிடுவதற்காகப் போப்பாண்டவரின் அருள்வளத்தையும் பெற்றார்.

கி.பி. 1857ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வியட்நாமின் சில துறைமுகப்பட்டினங்களைப் பிரெஞ்சு நாடு கைப்பற்ற வேண்டும் என்று சமயகுரு ஹக்கின் கோரிக்கையை, நெப்போலியனுடைய வெளிவிவகார அமைச்சர் கோமான் வாலெவ்ஸ்கி (Count Walewski) ஏற்றுக்கொள்ள மறுத்தார். நடைமுறையிலிருக்கும் உடன்படிக்கைகளுக்கும், அனைத்து நாட்டு உரிமைகளுக்கும் புறம்பாயிருக்கும் இவ்வகையான செயல்கள் எனக் கோமான் கூறினர். ஆனால், நான்கு மாதங்களுக்குப் பிறகு கி.பி. 1857ஆம் ஆண்டு ஜூலை மாதம் வியட்நாமில் பிரெஞ்சு நாடு தலையிட வேண்டும் என்ற தீர்மானத்தைப் பிரெஞ்சு நாட்டு அமைச்சர் அவை எடுத்தது. போப்பாண்டவர் மன்ற உறுப்பினர் ஹென்ரி பாய்ச் நார்மண்டு டி. பெல்லிகாஸ் (Cardinal Henry Boisnormand de Bellaehose),ருவனின் தலைமைக்குரு (Archi Bishop of Roaen), சீனவில் பலகாலம் வசித்த சமயகுரு லிபாய்ஸ் (Father Libois), பேரரசர் மூன்றாம் நெப்போலியன் பற்றிப் பல நூல்களை எழுதிய சமயகுரு லி கிராண்டு டி லாலிமாயி (Father La Grand de La Limaye), சமயகுரு ஹக், பெருந்தகை பெல்லரின் போன்றவர்கள் தாம் நெப்போலியனுடைய மனத்தில் இத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தியதற்குக் காரணமாய்த் திகழ்ந்தார்கள். ‘வியட்நாம் படையெடுப்பு பிரெஞ்சு நாட்டு கொள்கைகளுக்கு மதிப்புண்டாக்கும்; நம்முடைய சமயத்திற்குப் பயன்படும்; நம்முடைய வாணிப வளர்ச்சிக்குப் பயனுள்ளதாயிருக்கும்; பொதுவாக நம் நாட்டின் நன்மையைப் பேணுவதாயிருக்கும்’ எனக் கோமான் வாலெவ்ஸ்கியும் கூறினர். பேரரசர் நெப்போலியனுடைய மனமாற்றமே வாலெவஸ்கியின் மனமாற்றத்திற்குக் காரணமாய்த் திகழ்ந்தது எனக் கூறலாம்.

கி.பி. 1857ஆம் ஆண்டில் இந்தியாவிலே இடையூறுகளாலும், கிரிமியன் போரின்போது பிரெஞ்சு நாட்டுடன் சேர்ந்து போரிட்டதாலும் சீனவில் பிரெஞ்சு நாட்டின் உதவி தேவையாயிருந்ததாலும், பிரிட்டன் கொச்சின்—சீனவில் பிரெஞ்சின் தலைமை பரவுவதை எதிர்க்கவில்லை. வியட்நாமின்மேல் படையெடுக்கும்

மூன் பேரரசர் நெப்போலியன் கி.பி. 1857ஆம் ஆண்டு ஆகஸ்டில் அரசி விக்டோரியாவை (Queen Victoria) ஆஸ்போர்னுக்குச் (Osborne) சென்று சந்தித்தார். வியட்நாமில் பிரெஞ்சு நாடு தலையிடுவதைப்பற்றிப் பிரிட்டனுக்கு தடையில்லையென்றும், ஆனால் பிரிட்டன் இச்செயலில் பிரெஞ்சுடன் ஒத்துழைக்க முடியாது என்றும் அரசி விக்டோரியா நெப்போலியனிடம் கூறினர். வியட்நாமுடன் பிரன்சு நாடு போரிட்டால் கத்தோலிக்கப் பிலிப்பினே உடைகளைப் பிரெஞ்சு நாட்டிற்கு உதவியாக ஸ்பெயின் அனுப்பும் என்ற உறுதிமொழியைக் கி.பி. 1857ஆம் ஆண்டு அக்டோபர் 12ஆம் நாள் கோமான் பேரிர் பௌவன் நெப்போலியனுக்குக் கொடுத்தார். 'கொச்சின்-சீனவைப் படையெடுத்து வலிந்து கவர்வது எளிய செயல். தங்களுக்கு நல்லது செய்தவர்களென்றும் பிரெஞ்சு நாட்டு மக்களை வியட்நாம் மக்கள் வரவேற்பார்கள். இவர்களையெல்லாம் கத்தோலிக்க மதத்தைத் தழுவச் செய்வதற்கும், பிரெஞ்சு நாட்டின்மேல் பற்றுக்கொள்ளச் செய்வதற்கும் சில ஆண்டுகளே போதும்' எனச் சமயகுரு ஹக் பேரரசர் நெப்போலியனிடம் கி பி. 1858ஆம் ஆண்டு ஜனவரியில் கூறினர். பிரெஞ்சு நாடு டுரேனைக் கைப்பற்றுவிட்டால், பிரிட்டன் அதைக் கைப்பற்றிவிடும் எனவும் அவர் கூறினர்.

சமய நோக்கத்துடனும், நாட்டின் மதிப்பை உயர்த்தும் கருத்துடனும், தங்களுடைய படைவலிமையின் பெருமையைப் பெருக்குவதற்காகவுமே பிரெஞ்சு நாடு வியட்நாமின்மேல் படையெடுக்கத் தீர்மானித்தது. கி பி. 1850ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரெஞ்சு நாடு மிகுதியான பொருளாதார வளர்ச்சியடைந்ததால், தான் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பதற்காக அயல் நாட்டு வாணிபத் தலங்களின் உதவியை நாடியது. பிரெஞ்சு நாட்டின் பொருளாதார விவகாரங்களை அலசிப் பார்த்தவுடன்தான் வியட்நாமின்மேல் படையெடுக்கப் பிரெஞ்சு நாடு தீர்மானித்தது.

படைவலிமையைப் பயன்படுத்தி டுரேனைக் கைப்பற்ற வேண்டும் எனத் தூரக்கிழக்கு நாடுகளிலுள்ள பிரெஞ்சுக் கப்பற் படைக்குக் கி.பி. 1857ஆம் ஆண்டு நவம்பர் 25ஆம் நாள் கட்டளையிடப்பட்டது. கி.பி. 1857ஆம் ஆண்டு ஜுலை 15ஆம் நாள் கடற்படைத்தலைவர் ரிகௌல்ட்டிஜீநௌயிலி (Admiral Rigault de Genoely) தூரக்கிழக்கு நாடுகளிலுள்ள பிரெஞ்சுப் படைகளின் முதற்பெரும் படைத் தலைவராக (Commander-in-Chief) நியமிக்கப்பட்டார். காலத்தை வீணுக்காமல் பிரெஞ்சுச் சமயப் பரப்பாளர்களுக்கு ஏற்படும் இன்னல்களுக்கு ஒரு முடிவு காண

வேண்டும் என்றும், டுரேனைக் கைப்பற்றிப் பிரெஞ்சுத் தலைமையின் கீழ்க் கொண்டுவர வேண்டும் என்றும், மிக்க இழப்பில்லாமல், முடிந்தால் கொச்சின்-சீனுவைப் பிரெஞ்சுக் காப்பாட்சியின் Protectorate) கீழ்க் கொண்டு வரவேண்டுமென்றும், முடியா விட்டால் வாணிபம், கடற்பயணம், நட்புறவு முதலியவை பற்றிய உடன்படிக்கையை ஏற்படுத்தவேண்டுமென்றும், உயிரிழப் படைந்த பிரெஞ்சுச் சமயப் பரப்பாளர்களுக்கு இழப்பீடு பெற வேண்டுமென்றும், அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்ற உறுதி மொழியப் பெறவேண்டுமென்றும் என ரீகௌல்ட்டிற்குக் கட்டளையிடப்பட்டது. டுரேனைக் கைப்பற்றிய வுடன் அடுத்தபடியாக எந்த நடவடிக்கையெடுப்பது என்பதைப் பற்றி ரிகௌல்ட்டே தீர்மானித்தால், அந்நடவடிக்கை பிரெஞ்சு-பிரிட்டன்-சீனுப் படையெடுப்புக்கு இடையூறு செய்யக்கூடாது என்றும் கட்டளையிடப்பட்டது.

சீனப் படையெடுப்பின் காரணமாகக் கி.பி. 1858ஆம் ஆண்டு ஆகஸ்டில்தான் ரிகௌல்ட் டுரேன்மேல் படையெடுத்தார். அவரிடம் 14 போர்க்கப்பல்களும், 2500 படைவீரர்களும் இருந் தார்கள். ஸ்பெயின் தேசம் ஒரு போர்க்கப்பலையும், 450 படை வீரர்களையும் கொடுத்துதவியது. கி.பி. 1858ஆம் ஆண்டு ஆகஸ்டு 31ஆம் நாள் இப் படைவீரர்கள் டுரேன் விரிகுடாவிற்கு வந்து சேர்ந்தார்கள். செப்டம்பர் 1ஆம் நாள் டுரேன் துறைமுகத்தின் பாதுகாப்பு அரண்கள் தாக்கப்பட்டன. வியட்நாமியர்களின் எதிர்ப்புக் கடுமையாயில்லாததால் மறுநாள் டுரேன் பட்டினம் பிரெஞ்சுப் படைத் தலைமையின்கீழ் வந்தது. வியட்நாமியர்கள் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்கள் கொண்டாட வில்லை. எதிர்பார்த்ததைப்போல் வீயை ஆதரித்த கிறித்தவர்கள் வியட்நாம் அரசிற்கெதிராக வடவியட்நாம் பகுதிகளில் கிளர்ச்சி செய்து பிரெஞ்சுப் படைவீரர்களை வரவேற்கவில்லை. வியட்நாமியத் தொழிலாளர்கள் கிடைக்காததாலும், மழை பெய்துகொண்டிருந்த தாலும் கடலிலிருந்து பெர்ப்யூம்டு ஆற்றின் (Perfumed River) வழியாக ஹியூவிற்குச் செல்வதற்குத் தேவையான சுமைதாங்கும் வாயகலமான படகுகள் (Shallow draft boats) கிடைக்காததாலும் ரிகௌல்ட் டுரேனை தாண்டிச் செல்லமுடியவில்லை. கி.பி. 1859ஆம் ஆண்டு ஏப்ரல் மழைக் காலம் முடியும் வரை அவர் டுரேனில்தான் தங்கியிருக்க வேண்டும் என்ற நிலைமை யேற்பட்டது. பெருந்தகை பெல்லரின் தவருகத் தூண்டிவிட்டுத் தவருக வழிகாட்டினுர் என்று ரிகௌல்ட் பெல்லரின்மேல் குற்றஞ்சாட்டினுர். வியட்நாமிலுள்ள கிறித்தவ மக்கள்தொகையிலே டொங்கிங்கில்தான் மிகுந்த

கிறித்தவர்களிருக்கிறார்கள். ஆகையால், வடவியட்நாம்மேல் ரிகௌல்ட் படையெடுக்கவேண்டும் எனப் பெருந்தகை பெல்லரின் கூறினார். ஆனால், முதற்பெரும் படைத்தலைவர் ரிகௌல்ட் தென் வியட்நாமிலுள்ள சைகானைக் கைப்பற்றத் தீர்மானித்தார். குளிர் கால மழை தொடங்குமுன்னே அக்டோபர் 20ஆம் நாளிலிருந்து பல பிரெஞ்சுக்காரர்கள் இறக்கத் தொடங்கினார்கள். வெயில் கடுமையாயிருந்தது; உணவுப் பொருள்கள் பாழ்படுத்தப்பட்டன. குடிநீர் அழுக்குடன் வந்தது. வாந்திபேதியும், ஊட்டச் சத்துக் குறைவினால் ஏற்படும் சொறி, கரப்பான், பல் எதிர்வீக்க நோய்கள் (Scurvy) முதலியன படையெடுக்கத் தொடங்கின. இதனால் பிரெஞ்சுப் படையின் வலிமை குறையத் தொடங்கியது.

சமயப் பரப்பாளர்கள் கூறிய அளவு வியட்நாமில் மிகுதியாக விளைபொருள்கள் இல்லையென்றும், வியட்நாமில் வியட்நாம் படையில்லையென்று கூறியதற்கு மாறாக மிகுந்த படைகளிருக்கின்றன என்றும், நெல்விளையும் நிலங்கள் மிகுதியாயிருந்ததால் வியட்நாமில் நெடுஞ்சாலைகள் இல்லையென்றும், ஆழமில்லாத ஆற்றைக் கடந்துதான் ஹியூவை அடையமுடியுமென்றும், ஐரோப்பிய நகரங்களைப்போல ஹியூ நன்றாகத் திறமையுடன் பீரங்கிப் படை வீரர்களால் பாதுகாக்கப்பட்டிருக்கிறதென்றும் கடற்படைத் தலைவர் ரிகௌல்ட்டு குறை தெரிவித்தார். ஆகையால், சைகானைக் கைப்பற்றுவதே நல்லதென்றும், அதனைக் கைப்பற்றினால் சியாம், கம்போடியா ஆகியவற்றின் மன்னர்களிடையே வியட்நாம் அரசரின் மதிப்புக் குறையும் என்றும், ஐரோப்பியர்களின் தலைமையின்கீழ் வந்தால் சைகான் ஒரு புகழ்வாய்ந்த முக்கிய வாணிபத்தலமாக மாறும் என்றும் இவர் கூறினார்.

டுரேனை ஒரு சிறு பிரெஞ்சுப் படையிடம் ஒப்படைத்துவிட்டுக் கி.பி. 1859ஆம் ஆண்டு பிப்ரவரி 2ஆம் நாள் ரிகௌல்ட்டு தம் படைகளுடன் தெற்கு நோக்கிச் சென்றார். பிப்ரவரி 17ஆம் நாளுக்குள் சைகானைக் (Saigon) கைப்பற்றினார். ஆனால் வியட்நாமியக் கிறித்தவர்கள் பிரெஞ்சுப் படைகளை ஆதரித்து வரவேற்கவில்லை. அவர்கள் உணவுதான் கொடுத்தார்கள்; வேறு வகையான உதவிகள் எவையும் செய்ய முன்வரவில்லை. ஆகையால், வியட்நாம் மக்களின் ஆதரவு பிரெஞ்சுப் படை வீரர்களுக்குக் கிடைக்காது என்பது தெரிந்தவுடன் தம்முடைய படை வீரர்களைப் பெருக்கி 3000ஆக மாற்றினார் ரிகௌல்ட்டு. சைகானைத் தாண்டி மேலும் தெற்கே பிரெஞ்சுப் படை வீரர்களால் செல்ல முடியவில்லை. சைகான் முழுவதையுமே அடக்கி ஆள முடிய

வில்லை. தம்முடைய படையில் ஒரு பகுதியைச் சைகானை ஆட்சி புரிவதற்காக விட்டுவிட்டு ரிகௌல்டு டுரேனுக்குத் திரும்பினார்.

மே, டிசம்பருக்கு இடையில் சராசரியாக 100 பிரெஞ்சுப் படை வீரர்கள் நோயினால் இறந்தார்கள். பிரெஞ்சு நாட்டிலிருந்து மேலும் 1000 படை வீரர்கள் டுரேனுக்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால், மாதங்கள் ஆக ஆக வியட்நாமியர்களின் எதிர்ப்புப் பெருகத் தொடங்கியது. இப் படையெடுப்பில் உள்ள ஆர்வம் ஸ்பெயினுக்குக் குறைந்தது. கி.பி. 1859ஆம் ஆண்டு மே மாதம் மூன்றும் நெப்போலியன் இத்தாலியின்மேல் படையெடுத்ததால், ரிகௌல்டிற்குப் பிரெஞ்சு நாட்டினால் மேலும் உதவியளிக்க முடிய வில்லை.

ரிகௌல்ட்டு வியட்நாமுடன் போர் தொடங்கினார்; மூன்று கட்டுப்பாடுகளை விதித்தார் :

1. சமயப்பரப்பாளர்களுக்கும், வியட்நாமியக் கிறித்தவர் களுக்கும் தங்கள் சமயத்தைப் பின்பற்ற முழுச்சுதந்திரம் அளிக்க வேண்டும்.

2. பிரெஞ்சு நாட்டிற்கு வியட்நாமில் வாணிபம் செய்யச் சுதந்திரம் அளிக்க வேண்டும்.

3. வியட்நாமின் அரசர் தம் சொல்லைக் காப்பாற்றுவதற்காக வியட்நாமின் ஒரு பகுதியைப் பிரெஞ்சு நாட்டிற்கு விட்டுக் கொடுக்க வேண்டும்.

அடிப்படையில் இந்தக் கட்டுப்பாடுகளை ஒப்புக்கொள்ளுவ தாகக் கூறிப் பேச்சு நடத்தத் தொடங்கினார் வியட்நாம் பேரரசர். ஆனால், வேண்டுமென்றே ஒரு முடிவு மெடுக்காமல் இப் பேச்சுகளை வளர்த்துக் கொண்டே போனார். ஆகையால், ஆகஸ்டு 11ஆம் நாள் வியட்நாமின் ஒரு பகுதியை விட்டுத்தரவேண்டும் என்ற கட்டுப்பாட்டை நீக்கினார். ஆனால், ஓர் அயல்நாட்டுப் பேராளரின் (Consulate) அலுவலகத்தை வியட்நாமில் அமைக்க அனுமதிதர வேண்டுமென்றும், சமயப்பரப்பாளர்களைப் பாதுகாக்கும் உரிமை பிரெஞ்சு நாட்டிற்கு அளிக்கவேண்டும் என்றும் ரிகௌல்டு கூறினார். இந்தக் கட்டுப்பாடு கி.பி. 1859ஆம் ஆண்டு செப்டம்பர் 7ஆம் நாளுக்குள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் மீண்டும் போர் தொடங்கும் என்று இறுதி யெச்சரிக்கையும் (Ultimatum) வெளி யிட்டார். குறிப்பிட்ட நாள்வரை வியட்நாம் மன்னரிடமிருந்து பதில் கிடைக்காததால், சூழ்நிலை மேலும் இழிவடைந்திருந்த

போது பிரெஞ்சுப்படை மீண்டும் போர் தொடங்கியது. ஆனால் ரிகௌல்ட்டால் வியட்நாமியப் படைவீரர்களைத் தோற்கடிக்க முடியவில்லை. ஆகையால், தம்மைக் கடற்படைத்தலைவர் பதவியிலிருந்து நீக்கும்படி முறையிட்டுவிட்டுக் கி.பி. 1859ஆம் ஆண்டு அக்டோபர் 3ஆம் நாள் பிரெஞ்சு நாட்டிற்குத் தம் பயணத்தைத் தொடங்கினார்.

ரிகௌல்ட்டுக்குப் பதிலாகக் கடற்படைத் தலைவர் பேஜ் (Admiral Paze) கி.பி. 1859ஆம் ஆண்டு அக்டோபர் 19ஆம் நாள் டுரேனுக்கு வந்து பதவியேற்றார். அவருடைய சமரசப் பேச்சுகள் தோல்வியடைந்தன. ஆகையால், பாரிஸிலிருந்த பிரெஞ்சு அரசாங்கம், வியட்நாமின் ஒரு பகுதியைப் பிரெஞ்சு நாட்டிற்கு விட்டுக்கொடுக்கவேண்டும் என்ற கட்டுப்பாட்டை நீக்குவதாகத் தீர்மானம் செய்தது. மேலும், கி.பி. 1860ஆம் ஆண்டு பிப்ரவரியில் பிரெஞ்சுப் படைவீரர்கள் டுரேனிலிருந்து வெளியேறத் தொடங்கினார்கள். கடைசிப் பிரெஞ்சுப் படைவீரர் டுரேனைவிட்டு மார்ச்சு 22ஆம் நாள் வெளியேறினார்.

கி.பி. 1860ஆம் ஆண்டில் வியட்நாமில் பிரெஞ்சுக்காரர்களால் முன்னேறவே முடியவில்லை. பிரெஞ்சு நாடும் பிரிட்டனோடு கலந்து சீனப்போரில் மும்முரமாக ஈடுபட்டிருந்தது. கடற்படைத் தலைவர் பேஜும், தம் படைவீரர்களோடு சீனாவிற்கு அனுப்பப்பட்டார்.

ஆனால் சைகான், கடற்படைத் தளபதி ஜாரி கைபெரி (Captain Jaure Guiberry) தலைமையின் கீழிருந்தது. அவர் ஆட்சியின்கீழ் ஐரோப்பாவிலிருந்து வரும் கப்பல்கள் சைகான் துறைமுகத்திற்கு வந்து போய்க்கொண்டிருந்தன. தளபதி ஜாரி கைபெரியின்கீழ் 600 பிரெஞ்சுப் படைவீரர்களிருந்தார்கள். படைப்பகுதி முதல்வர் கார்லோஸ் பாலன்காவின் (Cal. Carlos Palanca) கீழ் 230 ஸ்பானியப் படைவீரர்களும், 4 பிரெஞ்சுப் போர்க் கப்பல்களும் இருந்தன.

சைகானைப் பாதுகாப்பதற்காகப் பிரெஞ்சு நாட்டிற்கு ஸ்பெயின் உதவியதால், டொங்கிங்கை அல்லது அதன் ஒரு பகுதியைக் கைப்பற்றுவதற்காகப் பிரெஞ்சுப் படை உதவவேண்டும் என ஸ்பானியர்கள் கேட்டார்கள். கி.பி. 1861ஆம் ஆண்டில் சமரசப் பேச்சு வார்த்தைகள் தொடங்கியவுடன், வடவியட்நாமின் ஒரு பகுதியில் முக்கியமாக ஹநாயில் ஸ்பானியர்களின் ஆட்சி அமைக்கப் பிரெஞ்சு நாடு உதவவேண்டும் என்று பாலன்கா முறையிட்டார். ஆனால், தம்முடைய படைவீரர்களை ஸ்பெயினுக்கு

உதவுவதற்காகக் கொடுக்க முடியாது; பதிலாகப் பணவுதவி செய்யமுடியும் என்று பிரெஞ்சுத் தளபதி கூறியதை ஸ்பெயின் ஒப்புக்கொண்டது.

வியட்நாமில் எத்தகைய கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதைப்பற்றி நெப்போலியனுல் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. பிரிட்டனை அண்டிப் பிரெஞ்சு நாடு திரிவதாகப் பல பிரெஞ்சு மக்கள் குற்றஞ்சாட்டத் தொடங்கினர்கள். வியட்நாமைப் பிரெஞ்சு நாடு கைப்பற்ற வேண்டும் என்றும், உலகத்திலுள்ள மஞ்சள் கறுப்புநிற இனத்தாருக்குப் பிரெஞ்சு நாடு தலைமை தாங்க வேண்டுமென்றும் பல பிரெஞ்சுக்காரர்கள் கூறத் தொடங்கினர்கள்.

பிரெஞ்சு நாட்டார்கள் கூச்சலிட்டு உரக்கப் பேசுவதையும். மிக விரைவில் மட்டுமீறிப் பொங்கும் வெஞ்சினம் கொள்வதையும் பார்த்து வியட்நாம் மக்கள் அதிர்ச்சியடைந்தார்கள். பிரெஞ்சு நாட்டார்களின் வெண்ணிற முகமும், வேறு நிறமுள்ள மயிரும், அவர்கள் உடலிலிருந்து வரும் வேறுவகையான வாடையும் பார்த்து வியட்நாம் மக்கள் திகைத்தார்கள்.

சாஸலுப்-லவ்பாட் (Chasseloup-Laubat) கடல், குடியேற்றம் ஆகிய துறைகளின் அமைச்சராக ஆனவுடன் வியட்நாமில் தலையிடும் கொள்கையை ஆதரித்தார். ஆகையால், மீண்டும் ஒருமுறை வியட்நாமின்மீது படையெடுக்கும்படிக் கடற்படைத் தலைவர் சார்நெருக்கு (Admiral Charner) கி.பி. 1860ஆம் ஆண்டு அக்டோபரில் உத்தரவிட்டார். கி.பி. 1861ஆம் ஆண்டு பிப்ரவரி 7ஆம் நாள் 800 படைவீரர்களுடனும், 3000 ஆள்களுடனும், 70 கப்பல்களில் சார்நெர் வியட்நாம்மீது படையெடுத்தார். ஜூன் இறுதிக்குள் சைகானைச் சுற்றியுள்ள கடலுக்கும், கம்போடியாவின் எல்லைக்கும் இடையேயுள்ள மூன்று மாகாணங்களைக் கைப்பற்றினர். கி.பி. 1861ஆம் ஆண்டு ஜூலை 1ஆம் நாள் சைகான் பிரெஞ்சு நாட்டிற்குச் சொந்தமாகிவிட்டது என அறிவித்தார். தாம் அறிவிக்கும் கட்டுப்பாடுகளை வியட்நாம் பேரரசர் ஏற்றுக்கொள்வார் எனச் சார்நார் நினைத்தார். ஆனுல், பிரெஞ்சுப் படைவீரர்கள் வியாதியினுல் துன்புற்றிருக்கிறுர்கள் என்பதை அறிந்த டூடக்கும், மேண்டரின்களும் கொரில்லாப் போர் முறையைப் பிரெஞ்சுப் படைகளுக்கெதிராகப் பயன்படுத்தினர்கள். பிரெஞ்சுப் படைகளைச் சைகானை விட்டு வெளியேற்ற வேண்டும் என்பதே அவர்கள் நோக்கம்.

கி.பி. 1861ஆம் ஆண்டு நவம்பரில் சார்நெருக்குப் பதிலாகக் கடற்படைத் தலைவர் போனுர்டு (Admiral Bonard) தலைமைப்

பதவியேற்றார். பியன்-ஹோவாவிலும் (Bien-Hoa) சைகானின் கிழக்கேயும், வடகிழக்கேயும் உள்ள பகுதிகளில் வியட்நாம் படைவீரர்களைத் தோற்கடித்து, மேகாவ் டெல்டாவின் மேற்குப் பகுதிகளில் பிரெஞ்சு ஆதிக்கத்தைப் போனார்டு அமைத்தார். கி.பி. 1862ஆம் ஆண்டு ஏப்ரலுக்குள் மைதோவைத் (Mytho) தாண்டியிருக்கும் வின்லாங் (Vinnlong) மாகாணம்வரை பிரெஞ்சு ஆதிக்கத்தைப் பரப்பினார். ஆனால், வலிந்து மேற்சென்று தாக்குகிற வலிமை பிரெஞ்சுப் படைக்குக் குறைந்தது. ஆகையால், சமரசப்பேச்சுகள் நடத்தப் போனார்டு தயாராக இருந்தார்.

எனவே, கி.பி. 1862ஆம் ஆண்டு ஜூன் 6ஆம் நாள் ஓர் உடன்படிக்கை யேற்பட்டது. இவ்வுடன்படிக்கையின்படி சைகானைச் சுற்றியுள்ள மூன்று மாகாணங்களும் பௌலோ கண்டோர் (Poulo Condore) தீவும் பிரெஞ்சு நாட்டிற்குக் கொடுக்கப்பட்டன; மேலைநாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொள்வதற்கு மூன்று வியட்னாம் துறைமுகங்கள் மேலைநாட்டு வணிகர்களுக்குத் திறக்கப்பட்டன; தங்கள் சமயத்தைப் பரப்பச் சமயப் பரப்பாளர்களுக்கு முழுச் சுதந்திரம் கொடுக்கப்பட்டது; மிகாஸ் வழியாகக் கம்போடியா எல்லைவரை பிரெஞ்சுப் போர்க்கப்பல்கள் சுதந்திரமாகச் செல்வதற்கு உரிமை கொடுக்கப்பட்டது; பிரெஞ்சு நாட்டின் உடன்பாடில்லாமல் வியட்நாம் தன் நாட்டின் ஒரு பகுதியைக் கூட மற்ற நாடுகளுக்கு விட்டுக்கொடுக்கக்கூடாது என்ற கட்டுப்பாடும் விதிக்கப்பட்டது; டூடக், 4 மில்லியன் பியாஸ்டர்ஸ் (Piasters) போரில் தோற்றதற்காக இழப்பீட்டுத் தொகையாய் கொடுக்கவேண்டும்.

டூடக் ஏன் இவ்வுடன்படிக்கையைச் செய்தார்? சைகானைப் பிரெஞ்சுப் படைவீரர்கள் கைப்பற்றும் முன் சைகானிலிருந்து ஹியூவிற்கு அரிசி வந்துகொண்டிருந்தது. சைகானுடைய தட்பவெப்ப நிலையால் பிரெஞ்சுக்காரர்கள் கேடுறுவார்கள்; நோய் வந்து இறப்பார்கள். அச் சூழ்நிலை உருவாகும்வரை சமாதானம் செய்துகொள்வதேமேல் என டூடக் நினைத்தார். வியட்நாம் மக்கள் மேண்டரின்களின் ஆட்சியை வெறுத்தார்கள். ஆகையால், அவர்களைப் பிரெஞ்சுப் படைகளுக்கு எதிராகச் சண்டைபோட மேண்டரின்களால் ஊக்குவிக்கமுடியவில்லை. மேலும் சண்டைபோடும் வியட்நாம் மக்களுக்கு மேண்டரின்கள் போர்க்கருவி கொடுக்கவில்லை. போர்க்கருவிகள் இல்லாமலிருந்தாலும் 50000 வியட்நாம் மக்கள் ஒன்றுசேர்ந்து பிரெஞ்சுப் படைவீரர்களைக் கடலுக்குள் தூக்கியெறிந்திருக்கமுடியும். அயல்நாட்டினரை எவ்வகையிலாவது தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணம்

வியட்நாம் மக்களிடமில்லாமல் இருந்தது. தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கமே அவர்களிடம் மேலோங்கியிருந்தது. வியட்நாம் குடியானவர்கள் பிரெஞ்சுப் படைவீரர்களை மட்டுமல்லாமல், மேண்டரின்களைப் பார்த்து அஞ்சினார்கள்; வெறுத்தார்கள்; வியட்நாம் படைவீரர்கள் போர்முனையில் துணிவோடுதான் போர் புரிந்தார்கள்; ஆனால், இதற்குமுன் பலமுறை சீனாவை எதிர்த்துப் போரிட்டு நின்ற அவர்களது ஊக்கமும் ஆற்றலும் தற்பொழுது கிராமத்திலோ டூடக் போர்வீரர்களிடையோ இல்லாமல் இருந்தது என்பதில் ஐயமில்லை.

தெற்கு வியட்நாமில் பிரெஞ்சுப் படையெடுப்பைத் தடுக்க டூடக் முயற்சி செய்துகொண்டிருந்த சமயம் வட வியட்நாமில் குடியானவர்கள் கலகம் செய்யத் தொடங்கினார்கள். சமயப் பரப்பாளர்கள் பிரெஞ்சுப் படை உதவி கொடுக்கிறோம் எனக் கூறியதால் லீ மரபைச் சேர்ந்த ஒருவர் செவ்வாற்றுப் பள்ளத்தாக்கில் (Red river Valley) கலகம் செய்யத் தொடங்கினார். இக் கலகத்தில் 10 விழுக்காடு குடியானவக் கிறித்தவர்களே பங்கு கொண்டார்கள். ஆனால், மன்னர் டூடக் இக்கலகத்தைக் கடுமையாக அடக்கி ஒழித்தார். தம்முடைய முழு இராணுவ வலிமையையும் இக் கலகத்தை அடக்குவதற்காக டூடக் பயன்படுத்தினார். இக் காரணத்தால்தான் பிரெஞ்சுப் படையுடன் சமரசப் பேச்சு நடத்த மன்னர் டூடக் முன்வந்தார். டொங்கிங்கில் கலகக்காரர்கள் கைப்பற்றிய மாகாணங்களை மீட்பதற்காகப் பிரெஞ்சுப் படைக்குக் கொச்சின்–சீனாவைக் கொடுக்க முன் வந்தார். டொங்கிங் கலகக்காரர்களுக்கும் பிரெஞ்சுப் படை உதவவேண்டும் எனச் சமயப் பரப்பாளர்கள் கேட்டுக் கொண்டார்கள். ஆனால், ஏற்கெனவே டூடக்குடன் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டதால் போனார்டு, மன்னர் டூடக்கிற்கு வடவியட்நாமில் நடந்த கலகத்தை அடக்க முழுச்சுதந்திரம் கொடுத்தார். மேலும், பிரெஞ்சுப் படைக்கும் ஸ்பானியப் படைக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி டொங்கிங்கை ஸ்பானியர்கள் தங்கள் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர விரும்பினார்கள். ஆகையால், படைப்பகுதி முதல்வர் பாலன்கா, பிரான்சும் ஸ்பெயினும் சேர்ந்து டொங்கிங்கில் தலையிடவேண்டும் என விண்ணப்பித்தார். ஆனால், போனார்டு இதனை ஒப்புக்கொள்ள மறுத்தார். மீண்டும் டொங்கிங்கில் உள்நாட்டுப்போர் ஏற்பட்ட சமயம் பாலன்கா திரும்பவும் தம் தலையிடும் விருப்பத்தைத் தெரிவித்தார். ஆனால், போனார்டு மீண்டும் இசையவில்லை. ஆகையால், கி.பி. 1863ஆம் ஆண்டு ஏப்ரலில் பிரெஞ்சு நாட்டிற்குப் போட்டியாக இல்லாமல் இந்தோ

சீனுவிலிருந்து ஸ்பெயின் வெளியேறியது. ஆகையால், சமயப் பரப்பாளர்களையும் சமயத்தையும் பாதுகாக்கவேண்டும் என்ற நோக்கத்தை ஒரு முக்கியக் காரணமாக வியட்நாமில் தலையிடு வதற்குப் பிரெஞ்சு நாடு பயன்படுத்தவில்லை. சமயப்பரப்பாளர்கள், வியட்நாமில் பிரான்சு தலையிடுவதற்கும் தூரக்கிழக்கு நாடுகளில் பிரெஞ்சு ஆதிக்கம் அமைப்பதற்கும் ஒரு சாக்காயிருந்தனர் என நாம் கூறலாம்.

சைகான் உடன்படிக்கையை உறுதிசெய்ய (ratification) வியட்நாம் காலதாமதம் செய்தது; டூடக் இத்தகைய சூழ்நிலை உருவாகியதால் மனம் வருந்தினர். நெப்போலியன் இவ்வுடன் படிக்கையை உறுதி செய்தவுடன் பல கொடிய கலகங்கள் இடைவிடாமல் தென்வியட்நாமில் எழுந்தன. வியட்நாம் கொரில் லாப் போர் வீரர்களுக்குக் குடியானவர்கள் உதவினர்கள்; பாது காப்பளித்தார்கள். தென் வியட்நாமில் பிரெஞ்சு அதிகாரிகள் தங்களுடைய அதிகாரத்தை அளவுக்கு மீறி அடக்கியாளப் பயன்படுத்தியதால்தான் குடியானவர்களுக்குப் பிரெஞ்சு ஆட்சி யின்மீது மனக்கசப்பும் அறுவறுப்பும் ஏற்பட்டன. கி.பி 1862ஆம் ஆண்டு டிசம்பரில் ஒரு வியட்நாம் படைப் பெருந்தலைவர் (General) பிரெஞ்சு ஆட்சிக்கெதிராகக் கலகம்செய்தார். இக் கலகத்தால் தூண்டப்பட்டு வியட்நாமியர்கள் கண்டோர் தீவில் கிளர்ச்சி செய்தார்கள். ஆனல் பிரெஞ்சு அரசாங்கம் இக் கல கத்தை அடக்கியது.

சைகான் உடன்படிக்கையை விலக்கீடு (annulment) செய்ய வேண்டுமென்றும், கொச்சின்–சீனுவின் மூன்று மாகாணங்களை மீண்டும் டூடக்கிடம் கொடுத்துவிடவேண்டுமென்றும் கி.பி. 1862ஆம் ஆண்டு டிசம்பர் 12ஆம் நாள் டூடக்கின் தூதுவர் சைகா னிலுள்ள பிரெஞ்சு அரசாங்கத்திடம் கூறினர். இதற்குப் பதில்கூட எதிர்பார்க்காமல் இத் தூதர் ஹியூவிற்குத் திரும்பிச் சென்றார். டிசம்பர் 16ஆம் நாள் கொச்சின்–சீனுவிலுள்ள கலகம் கடுமையாகப் பரவியது. பிரெஞ்சுகாரர்களைவிட வியட்நாமியர்கள் அதிகமா யிருந்தபோதிலும், தங்களிடம் உயர்ந்த போர்க்கருவிகளிருந்த தால் பிரெஞ்சுப் படைவீரர்கள் வியட்நாமியர்களுடன் சண்டை போட முடிந்தது. மேலும், ஸ்பானியப் படைவீரர்களும், சீனுவி லிருந்து வந்த பிரெஞ்சுப் பேரரசின் ஆப்பிரிக்கப் படைவீரர்களும் போனுர்டுக்கு உதவினர்கள். வலுப்படுத்தப்பட்டவுடன் கி.பி. 1863ஆம் ஆண்டு பிப்ரவரி 25ஆம் நாள் வியட்நாமியர்களின் தாக்குதலை எதிர்த்துப் போனுர்டுப் படைவீரர்கள் தாக்கினர்கள்.

பிரெஞ்சுப் படைவீரர்களுக்கு வெற்றி கிடைத்தது. டூடக், சைகான் உடன்படிக்கையை உறுதிசெய்ய மறுத்தால் கொச்சின்-சீனுவின் அருகிலுள்ள மூன்று மாகாணங்களைப் பிரெஞ்சுப் படை கைப்பற்றும் என்றும், டொங்கிங் கலகக்காரர்களுக்குப் பிரெஞ்சுப் படை உதவிசெய்ய முற்படும் என்றும் போனூர்டு ஓர் இறுதி எச்சரிக்கை அறிக்கையை வெளியிட்டார். ஆகையால், போனூர்டின் கட்டுப் பாடுகளைப் புரிந்துகொண்ட டூடக், ஏப்ரல் 14ஆம் நாள் சைகான் உடன்படிக்கையை உறுதிசெய்தார் (ratified). கி.பி. 1863ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் நாள் போனூர்டையும் பலன்கா வையும் மன்னர் டூடக் அரசவையில் முறைப்படி வரவேற்றூர்; மன்னரை விழுந்து வணங்குகிற கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது; இச் சடங்கின்போது உடைவாள் வைத்துக்கொள்ளக்கூட இவ் விருவருக்கும் அனுமதியளிக்கப்பட்டது.

கி.பி. 1863ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் நாள் போரில் தோற்ற இழப்பீட்டுத் தொகையின் முதல் தவணைப் பணத்தை டூடக் கொடுத்தார். பிரான்சுக்கு எதிராக மக்கள் செய்யும் கலகங்களுக்கு மன்னர் வெளிப்படையாக மறுப்பும் தெரிவித்தார்; ஆனுல், உள்ளுக்குள் இக் கலகங்கள் வெற்றியடைய வேண்டுமே என இறைவணக்கம் செய்தார்.

கி.பி. 1863ஆம் ஆண்டு மே மாதம் போனூர்டுக்கு அடுத்த படியாகக் கடற்படைத் தலைவர் டிலா கிராண்டியரா (Admiral Dela Grandierra) பதவியேற்றூர். கி.பி. 1863-லிருந்து 1867 வரை மெக்ஸிகோ அரசியல் விவகாரங்களில் ஈடுபட்டிருந்ததால் பேரரசர் நெப்போலியன் வியட்நாம் விவகாரங்களில் மிகுதியாக அக்கறை காட்டவில்லை. பிரெஞ்சுக்காரர்கள் தங்களுடைய அதிகாரக் கோரிக்கைகளைக் குறைத்துக்கொண்டால் அவர்களுடன் ஒத்துழைக்கத் தயார் எனப் பேரரசர் டூடக் கூறினூர்.

டூடக் டொங்கிங் கலகத்தை அடக்கியாண்டபோதிலும், டுரேனுக்குப் பிரெஞ்சுப் படை வந்ததிலிருந்து அவர் அதிகாரங்கள் குறைந்துபோயிருந்தன. வியட்நாம் படையின் கட்டுப்பாடும் அமைதியும் குலைந்திருந்தன. போரினுல் ஏற்பட்ட செலவாலும், உள்நாட்டுக் கலகங்களாலும், தென்வியட்நாமிலிருந்து வரும் அரிசி நின்றதாலும் பொருளாதாரச் சூழ்நிலை கீழ்நிலையை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. சீனர்கள் வாழ்ந்த தெற்கிலுள்ள ஹாடியாம் மாகாணத்தைத் தவிர மற்றப் பகுதிகளில் அபினி குடிக்கக்கூடாது எனத் தடையிருந்தது. ஆனுல், பொருளாதாரச் சூழ்நிலையை வளர்க்கும் நோக்கத்துடன் டொங்கிங்கில் இறக்குமதி வணிகம்

செய்யும் சீனர்களுக்கு அபினி விற்கும் உரிமை கொடுக்கப்பட்டது. ஆனுல், இதன்மேல் அவர்கள் மிகுதியான வரி செலுத்தவேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது. மேலும், அரசாங்கப் பதவிகளையும் ஒருவர் விலை கொடுத்து வாங்கலாம் என்ற சூழ்நிலை யேற்பட்டது. வியட்நாமின் ஆயிரம் ஆண்டுச் சுதந்திர ஆட்சியிலே இதற்குமுன் ஒரே ஒருமுறைதான் அரசாங்கம் அரசாங்கப் பதவிகளைப் பணத் திற்காக விற்றது. ஒன்பதாவது மதிப்புப் படியிலுள்ள மேண்டரின் பதவியின் விலை 1000 லிகாடர்ஸ் (Ligatures or quant—வியட் நாம் மொழியில் 'குவான்' என அழைக்கிருர்கள்). 6ஆவது மதிப் புப் படியிலுள்ள மேண்டரின் பதவியின் விலை 10000 லிகாடர்ஸ்; படிப்பிருக்கிறதோ இல்லையோ, பணமிருந்தால் யார் வேண்டு மானுலும் கடைசி மூன்று படியிலுள்ள மேண்டரின் பதவிகளைத் தற்சமயம் விலைகொடுத்து வாங்கலாம். இத்தகைய சூழ்நிலையின் காரணமாகப் பிரெஞ்சு நாட்டுடன் நிலையான சமரச உடன்படிக்கை யேற்படுத்த மன்னர் டூடக் விரும்பினுர்.

ஆகையால், வயதிலே மூத்தவரும் மிகத் திறமையான வருமான பான் தான் ஜியாங் (Phan Than Giang) என்ற மேண்ட ரின் பிரெஞ்சு அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதற்காக அனுப் பப்பட்டார். (தாம் மேற்கொண்ட செயலில் தோல்வியடைந்ததால் இவர் பின்னுல் தற்கொலை செய்துகொண்டார்.) கி.பி. 1862ஆம் ஆண்டுக்கு முன்பு தாம் நினைத்துக்கூடப் பார்த்திருக்காத சலுகை கள் எல்லாம் தற்பொழுது பிரெஞ்சு நாட்டிற்குக் கொடுக்க டூடக் தயாராக இருந்தார். இவ்வுடன்படிக்கையின்படி கொச்சின்-சீனு முழுவதும் பிரெஞ்சு நாட்டின் காப்பாட்சியின்கீழ் வந்தன. இதுவரை வியட்நாம் முழுவதையும் கொச்சின்-சீனு எனப் பிரெஞ்சு நாடு அழைத்தது; ஆனுல், இதற்குப்பின் தன் காப்பாட்சியின்கீழ் வந்த நாடுகளையே கொச்சின்-சீனு என அழைத்தது; இந்தோ சீனுவின் நடுப்பகுதிகளை அன்னும் (Annam) என அழைத்தார்கள்; சீனு விற்கு அருகேயிருக்கும் வடபகுதியை டொங்கிங் என அழைத்தார் கள். சைகான், சோலோன் (Cholon), சைகான் நதியின் மேலுள்ள செயின்ட் ஜாக்விஸ் முனை (Cape St. Jaques) ஆகியவை பிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ் வந்தன என வியட்நாம் ஒப்புக்கொண்டது; ஆண்டுதோறும் பிரெஞ்சு நாட்டிற்குக் கப்பம் கொடுக்க ஏற்றுக் கொண்டது; வியட்நாமில் பிரெஞ்சு வாணிகர்கள் வாணிகம் செய்யலாம் என்று அனுமதி கொடுத்தது. கி.பி. 1864ஆம் ஆண்டு ஜூன் மாதம் இவ்வுடன்படிக்கை நடைமுறைக்கு வந்தது.

பொதுவாகப் பிரெஞ்சு மக்கள் இந்தோ சீனுவில் பிரெஞ்சு நாடு போர் புரிவதை வரவேற்கவில்லை. ஆகையால், இப் புதிய உடன்

படிக்கைக்கு எதிர்ப்புகள் இருந்தன. பிரிட்டனுக்கு இந்தியா போன்றும், டச்சு அரசாங்கத்திற்கு ஜாவா போன்றும் வியட்நாம் பிரெஞ்சு ஆட்சியின்கீழ் வந்தால் பிரான்சுக்குப் பயன்படும் எனச் சாஸலுப்-லவ்பாட் கூறினர். சைகானைச் சுற்றியுள்ள மூன்று மாகாணங்களைப் பிரெஞ்சு அரசாங்கம் தன் ஆட்சிக்குள் கொண்டு வராவிட்டால் சைகான் பிரெஞ்சு நாட்டிற்குப் பயன்படாதென்றும், தென் வியட்நாம் வழியாகச் சீனவுடன் வாணிபத் தொடர்பு கொள்ளவேண்டும் என்றும் பல இராணுவத் தலைவர்கள் முறையிட்டார்கள். மேகாங் நதி, யூனங் எல்லைவரை பிரெஞ்சு நாட்டின் ஆதிக்கத்தின்கீழ் வந்தால் பிரெஞ்சு நாடு மேற்குச் சீனவுடன் வாணிபத்தில் தனித் தலைமையுறலாம் என்று கார்னியரும் அவருடைய நண்பர்களும் கூறினர்கள். தாற்காலிகமாகச் சீனக் கடற்கரை ஓரமாக உள்ள பகுதிகள் ஆங்கிலேயச் சமயப்பரப்பாளரின் கீழுள்ளன என்பதை மறக்கக் கூடாது என இவர்கள் வலியுறுத்தினர்கள். இவ் வுடன்படிக்கையால் டூடக்கிற்கு மிகுபயன் இருக்கிறது எனச் சமயப்பரப்பாளர்கள் குற்றஞ்சாட்டினர்கள். பேரரசர் மூன்றும் நெப்போலியன் இந்தோ சீனவில் பிரெஞ்சு நாடு கைப்பற்றிய பகுதிகளை விட்டுவிடக் கூடாது எனக் கருதினர்.

வியட்நாம் குடியேற்றத்தைப் பிரெஞ்சு நாடு விடாது வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தைப் பேரரசர் மூன்றும் நெப்போலியன் மனத்தில் உருவாக்கியவர் சாஸலுப்—லவ்பாட். கீழை நாடுகளில் பிரெஞ்சு நாட்டின் பெருமை ஓங்கவேண்டும் என்றும், நாகரிகத்தைப் பரப்புவது பிரெஞ்சு நாட்டின் கடமையென்னும் நோக்கத்துடன்தான் மூன்றும் நெப்போலியன் இந்தோ-சீனவில் பிரெஞ்சு ஆதிக்கத்தை நிலைநாட்ட விரும்பினர்.

கடற்படைத் தலைவர் டிலா கிராண்டியரி கொச்சின்-சீனவின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். பிரெஞ்சு அரசாங்கத்தின் கட்டளைகளையோ ஆலோசனைகளையோ எதிர்பார்க்காமல் இவர் நடவடிக்கைகள் எடுக்கத் தொடங்கினர்; அனுமதியற்ற நடவடிக்கைகள் எடுத்து பிரெஞ்சு ஆதிக்கத்தை வியட்நாமில் பரப்பத் தொடங்கினர்.

சைகானில் இருந்த பிரெஞ்சுக் கடற்படை வீரர்கள் கம்போடியாவுடன் வலியச் சண்டை செய்ய முனைந்தார்கள். சமயகுரு மிசேவுக்கும் (Father Miche) அவருக்குத் துணைபுரிந்தவர்களுக்கும் யாதொரு தீங்கும் கம்போடிய அரசாங்கம் செய்யவில்லை; கம்போடியாவைப் பற்றி யாதொரு மனக்குறையும் கிடையாது. கம்போடியா வியட்நாம் ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டதால்,

வியட்நாமிற்கு அடுத்தபடியாக வந்த பிரெஞ்சு அரசாங்கத்தின் ஆதிக்கத்தையும் கம்போடியா ஏற்றுக்கொள்ளவேண்டும் என இவர்கள் கருதினர்கள். கி.பி. 1858ஆம் ஆண்டில் கம்போடியா விற்குச் சென்று திரும்பிவந்த ஒரு பிரெஞ்சுப் பார்வையாளரும் பிரெஞ்சுக் கடற்படை வீரர்களின் ஆசையைப் பெருக்கினர். கம்போடியாவின் துயரந்தரத்தக்க, பாதுகாப்பற்ற சூழ்நிலையைப் பிரெஞ்சு ஆதிக்கத்தின் மூலம்தான் திருத்தமுடியும் என இவர் உறுதியாகக் கூறினர். பிரெஞ்சு ஆட்சியின்கீழ்க் கம்போடியாவில் அடிமைநிலை ஒழிக்கப்படும்; அமைதியையும் பாதுகாப்பையும் அமைக்க முடியும்; பிரெஞ்சு நாடு தன்னுடைய முடிக்கு மற்றொரு வைரக்கல்லைப் பொருத்திக்கொள்ளலாம்; மேலும், கம்போடியாவி லுள்ள பருத்தி ஆடைகளும் தாதுப் பொருள்களும், புகையிலையும், சர்க்கரையும் பிரெஞ்சு அரசாங்கத்திற்குக் கிடைக்கும். இதனல் பிரெஞ்சு நாட்டின் மதிப்பும் கீழைநாடுகளில் உயரும் என இப் பார்வையாளர் கருதினர்.

கி.பி. 1863ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஆளுநர் டிலா திராண் டியரி கம்போடியாவுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். இவ்வுடன்படிக்கை பற்றி அறிய டௌடார்ட் டி லாக்ரீ(Doudart De Lagree) மன்னர் நோரோடோமைச் (King Norodom) சந்தித்தார். டெரிடார்ட்டும், சமயகுரு மிசேவும் மன்னர் நோரோடோமை இவ் வுடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி செய்தார்கள். இவ்வுடன் படிக்கையின்படி கம்போடியாவின் வெளிநாட்டு விவகாரங்கள் பிரெஞ்சு அரசாங்கத்தினது ஆதிக்கத்தின்கீழ் விடப்பட்டன; சில வெளிநாட்டு ஆட்சிப் பேராளரின் அலுவலகங்களைப் பிரெஞ்சு நாடு கம்போடியாவில் அமைக்கலாம், கம்போடியாத் தலைநகரமான நாம் பென்னில் (Phnom Penh) ஒரு பிரெஞ்சுத் துணைக்காப்பரசின் பேராளர் (Resident) நியமிக்கப்படுவார். சியாம் பேராட்சி யிலிருந்து கம்போடியாவைப் பிரெஞ்சு அரசாங்கம் பாதுகாக்கும். இவ்வுடன்படிக்கை இரகசியமாகவே வைத்துக்கொள்ளப்பட்டது.

பாரிஸில் உள்ள கப்பற்படை அலுவலகம் வற்புறுத்தியதால் தான் பேரரசர் நெப்போலியன் இவ்வுடன்படிகையை ஒப்புக்கொண் டார்; கம்போடியாவின்மேல் பிரெஞ்சுப் படைவீரர்கள் படையெடுப் பார்கள் என லாக்ரீ பயமுறுத்தியதால்தான் மன்னர் நோரோடோம் இவ்வுடன்படிக்கையை உறுதிசெய்தார் (ratification). பாங்காக் அரசாங்கம் தம்மைச் சடங்கோடு பதவியில் அமர்த்தவேண்டும் எனக் கம்போடிய அரசர் விரும்பியதைப் புறக்கணித்துக் கி.பி. 1864ஆம் ஆண்டு ஜூன் மாதம் பிரெஞ்சு அரசாங்கம்தான்

மன்னர் நோரோடோமைச் சடங்கோடு ஆட்சியில் அமர்த்தியது. ஆகையால், மன்னர் நோரோடோம் இனிமேல் சியாம் நாட்டின் அடிமையாகவிருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு விலக்கப்பட்டது. கி.பி. 1867ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் நாள் சைகானிலுள்ள பிரெஞ்சு அதிகாரிகள் கம்போடியாவின்மேல் உள்ள பிரெஞ்சு ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ள வைத்தார்கள்.

பதிலாகக் கம்போடியாவில் உள்ள பாட்டம்பாங் (Battambang), சியம்ரீப் (Siemreap) அல்லது அங்கர் (Angkor) மாகாணங்களில் உள்ள சியாம் நாட்டு ஆதிக்கத்தைப் பிரெஞ்சு அரசாங்கம் ஒப்புக்கொண்டது. சியாம் நாட்டிற்கும் கம்போடியாவிற்கும் நடைமுறையிலிருந்த உடன்படிக்கை இனிமேல் சட்டப்படி செல்லுபடியாகாது. தன்னுடைய கொச்சின்-சீனுப் பகுதியுடன் கம்போடியா நாடு இணைக்கப்படமாட்டாது எனப் பிரெஞ்சு அரசாங்கம் உறுதிமொழியளித்தது.

கம்போடியாவின் விவகாரங்களில் வியட்நாம் பேரரசு தலையிடக் கூடாது என்ற நோக்கத்துடன் கொச்சின்-சீனுவிலிருந்த எஞ்சிய மூன்று மாகாணங்களையும் கடற்படைத் தலைவர் டிலா கிராண்டியரி கி.பி. 1967ஆம் ஆண்டு ஜூன் 17ஆம் நாள் கைப்பற்றினர். வியட்நாமியப் படைவீரர்களால் பிரெஞ்சுப்படை வீரர்களை வலிமையுடன் எதிர்க்க முடியவில்லை. பான்தான் ஜியாங் அடைக்கலம் புகுந்தார்; பிறகு தற்கொலை செய்துகொண்டார். மேகாங்கிற்கும், சியாம் வளைகுடாவிற்கும் இடையேயுள்ள எல்லாப் பகுதிகளும் பிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ் வந்தன.

தென் வியட்நாமைக் கைப்பற்றுவதற்குப் பிரெஞ்சு நாட்டிற்கு எட்டு ஆண்டுக்காலம் தேவையாயிருந்தது. கி.பி. 1859ஆம் ஆண்டுப் பிப்ரவரியில் சைகானின்மேல் தொடர்ந்த படையெடுப்பு, கி.பி. 1867ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கொச்சின்-சீனுவிலுள்ள எஞ்சிய பகுதிகளைக் கைப்பற்றியவுடன்தான் முடிந்தது. இந்தோ சீனுவில் பிரெஞ்சு ஆதிக்கத்தை நிலைநாட்டும் முதற் பகுதி முடிவடைந்தது. இதற்குப் பிறகு பல ஆண்டுகள் பிரெஞ்சு வீரர்கள் இந்தோ சீனுவில் படையெடுத்துச் செல்லவில்லை. தங்களுடைய ஆட்சி அதிகாரத்தை வியட்நாம் பேரரசர் ஒப்புக்கொள்ள வேண்டும் எனப் பிரெஞ்சு அதிகாரிகள் எடுத்த முயற்சிகள் வீணுயின.

முற்போக்கான கொள்கைகளுடைய ஒரு சிறு வியட்நாமியர் குழாம், பிரெஞ்சு ஆதிக்கத்தை ஒடுக்கும் நோக்கத்துடன், பேரரசர்

டுடக்கிடம் பல திட்டங்களை ஆய்வுக்காக எடுத்துரைத்தது. பழம் பண்புப் பாதுகாப்புக் கொள்கையுடைய மேண்டரின்கள் எதிர்த்த தால் இத் திட்டங்களைச் செயல்படுத்த முடியவில்லை. உதாரண மாக, பிரெஞ்சு நாட்டிற்கும் இத்தாலிக்கும் கி.பி. 1863ஆம் ஆண்டில் சென்று திரும்பிவந்த என்குயன் ட்ரூயங் தோ (Nguyen Truong To) என்ற இளைஞர் சியாம் நாட்டில் பின்பற்றும் சில திட்டங்களைப்போல் பல திட்டங்களை வகுத்து வியட்நாம் பேரரசரி டம் எடுத்துரைத்தார். எல்லா அயல்நாடுகளுடனும் வியட்நாம் சமமாகப் பழகி ஒத்துழைக்க வேண்டுமென்றும், உள்நாட்டு வாணிப வரிகளைக் குறைக்க வேண்டுமென்றும், புகையிலை, அபினி சாராயம் முதலியவற்றின்மீது வரிவிதிக்க வேண்டுமென்றும், புதியதாக அமைத்திருக்கும் தொழிற்சாலைகளின் ஏற்றுமதி-இறக்கு மதிகளுக்குச் சுங்கவரிப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்றும் அரசாங்க அதிகாரிகளைக் குறைத்து ஊதியத்தை உயர்த்திக் கையூட்டையும் ஊழலையும் கட்டுப்படுத்த வேண்டுமென்றும், படைத்துறையை மீண்டும் பிரித்திணைத்து ஒழுங்கு செய்யவேண்டு மென்றும், போர் புரியும் காலத்தில் பயன்படக்கூடிய நெடுஞ்சாலை களை அமைக்க வேண்டுமென்றும், நடைமுறையிலிருக்கும் சீனக் கையெழுத்து முறையை ஒழிக்க வேண்டுமென்றும், சில முக்கிய மான ஐரோப்பிய அறிவியல்களை மொழிபெயர்க்கவேண்டுமென்றும், வேளாண்மை, தொழில்துறை, வாணிபம், சுரங்கம் முதலிய தொழில்களின் வளர்ச்சிக்காக ஐரோப்பியர்களின் உதவியை நாட வேண்டும் என்றும் இவர் கூறினர்.என்குயன் ட்ரூயங் தோ தம்முயற் சியில் முழுவதும் வெற்றியடைய முடியவில்லை; மேலும், கொச்சின்-சீனுவையும் கம்போடியாவையும் பிரெஞ்சு அரசாங்கம் கைப்பற்றி யவுடன் புதுமைப் பாங்கை எதிர்க்கும் மேண்டரின்களுடைய ஆட்சி ஹியூமில் ஓங்கியது. உண்மையான அரசியல் சூழ்நிலையைப் பற்றிய விவரங்களை மேண்டரின்கள் மன்னரிடமிருந்து மறைத்தார் கள். சீர்திருத்தத் திட்டங்கள் தேவை என்று குரலெழுப்பியவர் களின் குரலொலி செவிடன் காதில் சங்கு ஊதியது போலாயிற்று.

பேரரசர் லூயி நெப்போலியன் கி.பி. 1861ஆம் ஆண்டுக்குப் பிறகு கொச்சின்-சீனுப் படையெடுப்பில் அக்கறை காட்டவில்லை. பொதுவாகப் பிரெஞ்சு மக்கள் கி.பி. 1860ஆம் ஆண்டிலும் அதற் குப் பிறகும் கொச்சின்-சீனு விவகாரங்களில் அக்கறை காட்டாமல் தான் இருந்தார்கள். கொச்சின்-சீனுப் படையெடுப்பின் காரணமாக அரசர் குலத்தின் மதிப்பு மங்கத்தொடங்கியது. சமயப்பரப்பாளர் களுக்கும் கொச்சின்-சீனுவின்மேல் மிகுந்த ஊக்கம் கிடையாது ; உதாரணமாக, கி.பி. 1867ஆம் ஆண்டில் பிரெஞ்சுப் படைவீரர்கள் கொச்சின்-சீனு முழுவதும் கைப்பற்றினர்கள் என்ற செய்தி

மக்களிடையே மகிழ்ச்சியூட்டவில்லை; கீழைநாடுகளுடன் பிரெஞ்சு அரசாங்கம் வாணிபம் மிகுதியாகச் செய்யவில்லை; சைகானைக் கைப்பற்றிப் பாதுகாப்பதனால் பிரெஞ்சு நாட்டிற்குத்தான் மிக்க செலவாகும். கி.பி. 1871ஆம் ஆண்டில் ஐரோப்பியப் பிரெஞ்சு நாட்டின் நிலைமை கவலைக்கிடமாயிற்று; இதனால் வெளிநாட்டு விவகாரங்களில் தலையிடும் எண்ணத்தை ஊக்கத்துடன் பின்பற்றப் பிரெஞ்சு அரசாங்கம் தயாராயிருக்கவில்லை. மூன்றாவது குடியரசு ஆட்சியின் (Third Republic) கீழ் வெளிநாட்டு விவகாரங்களில் மிக முக்கியமாகப் பங்கேற்றுக் கொண்டவர், ஆதிக்க வெறியை எதிர்த்த டக் டி ப்ரோக்லீ (Duc de Broglie). பாரிஸிலுள்ள கடற்படைத் துறையும், பாரிஸ் நிலஇயல் சங்கமும் (Paris Geographical Society) தென்கிழக்காசியாவில் பிரெஞ்சு ஆதிக்கத்தை முன்னேற்ற வேண்டும் என விரும்பின. கி.பி. 1867ஆம் ஆண்டுவரை பாரிஸ் நிலஇயல் சங்கத்தின் தலைவராகக் கடற்படைத் துறை அமைச்சர் சாஸலுப் லவ்பாட் இருந்தார். பிறகு ஜெநௌலி (Genouilly) இப் பதவியேற்றார். இச் சங்கம் எடுத்த முயற்சியினால் லாக்ரீயும் கார்னியரும் கி.பி. 1866-1868ஆம் ஆண்டுகளில் மேகாங் பள்ளத்தாக்கில் ஆய்வுப் பயணம் செய்தார்கள். இப் பயணம் செய்யும் சமயத்தில் லாக்ரீ இறந்தார். ஆகையால், கார்னியர்தாம் இந்தப் பயணத்தைப் பற்றிய அறிக்கையை வெளியிட்டார்.

மேற்குச் சீனாவுடன் வாணிபத் தொடர்புகொள்ள மேகாங் பள்ளத்தாக்குப் பயனுள்ளதாயிராது. டொங்கிங்கிலுள்ள செவ்வாற்றுப் பள்ளத்தாக்கின் மூலம்தான் மேற்குச் சீனாவுடன் வாணிபத் தொடர்புகொள்ளலாம். ஆங்கிலேயர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு யூனானுடன் (Yunan) பிரெஞ்சு நாடு வாணிபத்தொடர்பு அமைக்க வேண்டுமென்றால் டொங்கிங் வழியாகத்தான் இத் தொடர்பை அமைக்கமுடியும். செவ்வாற்று வழியை வாணிபத்திற்குத் திறந்தால் ஷாங்காயைப் (Shanghai) போல் சைகான் ஒரு சிறந்த துறைமுகப்பட்டினமாய் விளங்கும். பிரெஞ்சின், பண்பாடுகள் வியட்நாம் பண்பாடுகளைவிட உயர்ந்தனவாயிருந்ததால் இப் பகுதிகளில் பிரெஞ்சுநாடு தன் பண்பாடுகளைப் பரப்ப வேண்டும். மேற்சொன்னவாறு கார்னியர் தம் அறிக்கையில் எழுதியிருந்தார். தம் அறிக்கையை முடித்தவுடன் கார்னியர் மத்திய சீனாவிற்குச் சென்றார்.

கடற்படைத் தலைவர் டியூப்ரே (Admiral Dupre) சைகானின் ஆளுநராயிருந்தார். கி.பி. 1873ஆம் ஆண்டில் வியட்நாமை வலிந்து கைப்பற்றத் திட்டமிட்டார். சீனாவிலிருந்து பிரெஞ்சு

வியாபாரி ஜீன் டுபுயிஸ் (Jean Debuis) என்பவர் யூனுனுடன் வாணிபம்செய்ய முயன்றார். இதற்குப் பாரிஸில் இருந்த பிரெஞ்சுக் கப்பற்படை உடந்தையாயிருந்தது. ஆனால், இச் செயலில் பொறுப்பேற்றுக் கொள்ளமுடியாது எனப் பிரெஞ்சு அரசாங்கம் உறுதியாகக் கூறியது.

வியட்நாம் சட்டப்படி உப்பு ஏற்றுமதி செய்யக்கூடாது; செவ்வாற்றை அயல்நாட்டுக் கப்பல்கள் பயன்படுத்தக் கூடாது. ஆகையால், யூனுனுக்குப் பயணம் செய்யும்போது உப்புமூட்டைகளை எடுத்துக்கொண்டு செல்லக்கூடாது என டுபுயிஸுக்கு அறிவிக்கப்பட்டது. எதிர்பாராவகையில் படைக்கலம் தாங்கிய 50 ஆசிரியர்களுடனும், 25 ஐரோப்பியர்களுடனும் டுபுயிஸ் ஹநாயின் (Hanoi) ஒரு பகுதியைக் கைப்பற்றி அங்குப் பிரெஞ்சுக் கொடியேற்றினார்; சைகான் அரசாங்கத்திடம் உதவி அளிக்கும்படி விண்ணப்பித்துக்கொண்டார். இத்தகைய வாய்ப்புக்காகக் கடற்படைத் தலைவர் டியூப்ரே காத்துக் கொண்டிருந்தார். 'தூரக் கிழக்கு நாடுகளில் நம் ஆட்சியை நிலைப்படுத்த சைனு எல்லையிலுள்ள இச் செழிப்பான நாட்டைக் கைப்பற்றுவது அவசியம்' என டியூப்ரே கூறினார்.

இத்தகைய சூழ்நிலையில் உதவிசெய்வதற்கென்றுதான் கார்னியரை டியூப்ரே சீனுவிலிருந்து வரவழைத்திருந்தார். ஆகையால், ஹநாயிலிருந்து டுபுயிஸ் உதவி கேட்டவுடன் டியூப்ரே கார்னியர் தலைமையில் நூறு பிரெஞ்சுக்காரர்களைச் சமரசப் பேச்சுக்காக அனுப்பினார். ஹநாயைக் கைப்பற்றினால் கம்போடியாவிலும், கொச்சின்-சீனுவிலும் உள்ள பிரெஞ்சு ஆதிக்க உடன்படிக்கையை வியட்நாம் அரசாங்கம் உறுதிசெய்ய முன்வரும் என டியூப்ரே நம்பினார். டொங்கிங் வாணிபத் தொடர்புக்கு அவசியம்; ஆகையால், அதைப் பிரெஞ்சு நாடு கைப்பற்றுவிட்டால் வேறு ஓர் ஐரோப்பிய நாடு கைப்பற்ற முயலுவது உறுதி என டியூப்ரே பிரெஞ்சு அரசாங்கத்திற்குக் கி.பி. 1873ஆம் ஆண்டில் ஜூலை 28ஆம் நாள் செய்தியனுப்பினார். ஆனால், டொங்கிங்கில் தலையிடவேண்டாம் எனப் பிரெஞ்சு அரசாங்கம் டியூப்ரேவுக்கு எச்சரிக்கை செய்தது.

பசியால் வாடிய குடியானவர்களும், கையூட்டும் ஊழலும் நிறைந்த திறமையற்ற மேண்டரின்களும், புண்படுத்தப்பட்ட கிறித்தவர்களும், கலகம் செய்யும் நோக்கமுடைய மலைச்சாதியர்களும், அரசாங்கத்திற்கெதிராகக் கிளர்ச்சி செய்யும் மனப்பான்மையுள்ள லீ மரபினர்களும் (Lee Tribe) டொங்கிங்கில் இருந்தார்கள்,

மேலும், வியட்நாம் அதிகாரிகளால் தோற்கடிக்க முடியாத சீனக் கடற்கொள்ளைக்காரர்களும் டொங்கிங்கில் உள்ள மக்களுக்குத் தொல்லைகொடுத்தார்கள்; இவர்களால் வியட்நாம் படையின் வலிமை குன்றியது. டொங்கிங்கில் கலகச் சூழ்நிலை நிலவியது. பிரெஞ்சு அரசாங்கம் வடவியட்நாமின்மேல் படையெடுத்து வந்தால் அந் நாட்டு மக்கள் கிளர்ச்சிசெய்து தமக்கு ஆதரவளிப்பார்கள் என்ற நம்பிக்கையை டூடக் இழந்தார். டுபுயிஸை ஹநாயை விட்டு வெளியேற்றுவதாக டூடக்கிற்கு உறுதியளித்துவிட்டு, மன்னர் டூடக்கின் அரை மனதான அனுமதியுடன் கார்னியர் ஹநாயினுள் நுழைந்தார். இராணுவத்தைப் பயன்படுத்தி டொங்கிங் விவகாரத்திற்கு முடிவுகாணக் கார்னியர் முயன்றார். செவ்வாற்றை இனிமேல் உலகத்தில் உள்ள எல்லா வணிகர்களும் பயன்படுத்தலாம் என்றும், அங்கு வியட்நாம் அரசாங்கத்தால் விதிக்கப்படும் ஏற்றுமதி–இறக்குமதிச் சுங்கவரிகள் நீக்கப்படும் என்றும், நாகரிகத்தையும் பிரெஞ்சு நாட்டையும் பாதுகாப்பதற்காக டுபுயிஸுக்குச் சாதாரண முறையிலே வரிகள் விதிக்கப்படும் என்றும் கார்னியர் கி.பி. 1873ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் நாள் அறிவித்தார். கார்னியருக்கு உதவச் சைகானிலிருந்து படையனுப்பப்பட்டது. இப் படை வீரர்களுடன் கி.பி. 1873ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் நாள் கார்னியர் ஹநாய்க் கோட்டையைத் தாக்கினார். தம்மை 'மிகப் பெரும் பிரெஞ்சு மாண்டரின்' என்று அழைத்துக்கொண்டார். தம்முடைய கட்டளைகளை ஏற்றுக் கொண்டு நடக்காமல் புறக்கணிக்கும் எந்த அதிகாரிக்கும் குடிகளுக்கும் கடும் தண்டனை விதிக்கப்படும் என அறிவித்தார். ஹநாயிக்கும், கடலுக்கும் இடையே பாதுகாப்பு அரண்களுடன் உள்ள இடங்களைப் பீரங்கிகளால் தாக்கினார். உந்தி வீசப்படும் எறிபடைகளைப் பயன்படுத்தினார் மூன்றுவாரக் கடும் போரிற்குப் பிறகு நாம் பென்னையும் கீழைடொங்கிங்கையும் பிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தார். ஆனால் 1873 டிசம்பர் 21ஆம் நாள் 35 வயது நிரம்பிய கார்னியர் ஹநாயிக்கு வெளியே கொல்லப்பட்டார். வியட்நாம்-பிரெஞ்சுப் போர்ப் புரட்சியிலே தோன்றிய பிரெஞ்சுத் தலைவர்களுக்குள் கார்னியரே முதன்மை யானவர். இவர் இறந்ததால் பிரெஞ்சு முடியாட்சிக்கு (தனித் தலைமைக்கு) ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது என உறுதியாகக் கூறலாம்.

கி.பி. 1872ஆம் ஆண்டிலிருந்து கொச்சின்–சீனுவின் பொருளாதாரச் சூழ்நிலை கவலைக்கிடமாயிருந்தது. பிரெஞ்சு ஆதிக்கத்தைத் தென்வியட்நாமிலிருந்து மற்றப் பகுதிகளுக்குப்

பரப்பி, அங்குள்ள பிரெஞ்சு ஆதிக்கத்தை வலிமையற்றதாய் மாற்றப் பாரிஸில் உள்ள பிரெஞ்சு அரசாங்கம் விரும்பவில்லை. ஹநாயில் பிரெஞ்சு ஆதிக்கத்தை அமைக்க விரும்பவில்லை எனப் பாரிஸில் உள்ள பிரெஞ்சு அரசாங்கம் கி.பி. 1874ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் நாள் டியூப்ரேவிடம் கூறியது. சைகானிலுள்ள வடவியட்நாமில் பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்க்கும் குழுவினரும் தெற்கிலே பிரெஞ்சு ஆட்சியைத் திடப்படுத்தி நிலைப்படுத்தவே விரும்பினர். டொங்கிங் படையெடுப்புக்குப் பிலாஸ்த்ரீ (Philastre) என்னும் பிரெஞ்சுக் குடியேற்ற நிறுவனத்தின் தலைவர் மறுப்புத் தெரிவித்தார். ஆகையால், ஹநாயை விட்டு வெளியேறுவது என்ற தீர்மானத்தை டிசம்பரில் டியூப்ரே எடுத்தார். வியட்நாம் உடன்படிக்கையைப்பற்றிப் பேசப் பேரரசர் டூடக் டியூப்ரேவை அழைத்தார். ஆகையால், பிலாஸ்த்ரீ ஹநாயிக்கு அனுப்பப் பட்டார். டிசம்பர் 24ஆம் நாள் அவர் ஹநாயிக்கு வந்து சேர்ந்தார். உடனடியாகப் பிரெஞ்சுப் படைவீரர்களெல்லாம் வடவியட்நாமைவிட்டு வெளியேற வேண்டும் எனக் கட்டளை யிட்டார். இந்தப் போரின் விளைவாக 20,000 வடவியட்நாம் கிறித்தவர்கள் இறந்தார்கள். 70,000 வியட்நாமியர்கள் வீடு வாயில் இழந்தார்கள். இதை எதிர்த்த டியூப்ரே கொச்சின்-சீனு ஆளுநர் பதவியிலிருந்து விலகினர். கப்பல்களும், செல்வமும் இல்லாமல் டியூப்ரே ஹநாயைவிட்டு வெளியேறினர்.

கி.பி. 1874ஆம் ஆண்டு மார்ச்சு 15ஆம் நாள் வியட்நாமுடன் ஓர் உடன்படிக்கை யேற்பட்டது. இவ்வுடன்படிக்கையின்படி (1) கொச்சின்-சீனு முழுவதும் பிரெஞ்சு ஆட்சியின்கீழ் வந்தது; (2) தலைநகரமான ஹியூவில் ஒரு பிரெஞ்சுத் துணைக்காப்பரசின் ஆளுநர் தங்கலாம்; (3) ஹநாய், டூரேன் க்யூ-நோன் (Qui–Nonh) துறைமுகப்பட்டினங்கள் பிரெஞ்சு வாணிபத்திற்குத் திறக்கப் பட்டன; (4) இம் மூன்று துறைமுகங்களிலும் மூன்று பிரெஞ்சு அயலிட நாட்டுப் பேராளர்களைப் பிரெஞ்சு அரசாங்கம் நியமிக்க லாம்; (5) யூனுன்வரைச் செவ்வாறு மூலம் கடற்பயணம் செய்யலாம்; (6) வியட்நாமிலுள்ள கிறித்தவர்கள் அரசாங் கத்தின் தொல்லையில்லாமல் தங்களுடைய மதத்தைப் பின்பற்ற லாம்; (7) பிரெஞ்சு அரசாங்கத்திற்கு இனிமேல் வியட்நாம் போர் இழப்புப் பணத்தைக் கொடுக்கவேண்டாம்; (8) டூடக் தம் எதிரிகளான 'கருப்புக் கொடி' வீரர்களுடன் போரிடுவதற்குப் பிரெஞ்சு அரசாங்கம் துப்பாக்கிகளும் மற்றப் போர்க் கருவிகளும் கொடுக்கும்.

பிலாஸ்த்ரீ இட்ட ஆணையினுல் டுபுயிஸ் டொங்கிங்கை விட்டு வெளியேற்றப்பட்டு, நாடுகடத்தப்பட்டார். டுபுயிஸ் வெளியேறும் போது அவருடைய கப்பல்களையும் பொருள்களையும் எடுத்துச் செல்ல அனுமதி கொடுக்கப்படவில்லை. மிகுபயன் வேண்டும் என்ற நோக்கத்துடன் டுபுயிஸ் டொங்கிங்கிற்குச் சென்ருர். ஆனுல், ஏழையாகத் திரும்பினுர். டியூப்ரே தமக்குப் பதவி உயரும் என்ற நோக்கத்துடன் டொங்கிங்கிற்குச் சென்ருர்; ஆனுல் இறுதியிலே தம் பதவியினின்றும் விலகினுர். கார்னியர் தம்முடைய புகழ் ஓங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் டொங்கிங்கிற்குச் சென்ருர். ஆனுல், தம்முடைய உயிரை நீத்துத்தான் அவரால் அப் புகழை எய்த முடிந்தது. டொங்கிங்கில் பிரெஞ்சு நாட்டிற்கு யாதொரு பயனும் கிடைக்கவில்லை. ஆனுல், தென்வியட்நாம் முழுவதும் அதன் ஆட்சியின்கீழ் வந்தது.

டியூப்ரேவின் டொங்கிங் வீரச்செயல் முடிந்த பத்து ஆண்டுகளுக்குப் பிறகு வியட்நாம் பிரெஞ்சு நாட்டுக் காப்பாட்சியின்கீழ் வந்தது. டொங்கிங்கின் விவகாரம்பற்றிச் சிறு கிளர்ச்சிகள் பிரெஞ் நாட்டிலே நடந்துகொண்டே இருந்தன. கி.பி. 1879ஆம் ஆண்டு டொங்கிங்கிலும் சியாமிலும் பிரெஞ்சு நாட்டுக் காப்பாட்சி வேண்டும் என்று கேட்கும் இயக்கங்கள் பெருகின. உள்நாட்டு விவகாரங்களுக்கு ஒரு முடிவு எடுத்தவுடன்தான் கி.பி. 1880ஆம் ஆண்டிலிருந்து பிரெஞ்சு அரசாங்கம் இந்தோ-சீனு பிரெஞ்சின் முடியாட்சியைப் (தனித்தலைமையை) பற்றி அக்கறை காட்டத் தொடங்கியது. பின்வரும் காரணங்களே இம் மாற்றத்திற்குக் காரணமாய்த் திகழ்ந்தன :

1. பிரெஞ்சு நாட்டு உற்பத்திப் பொருள்களின் வாணிபத்திற்குப் பிரெஞ்சு நாட்டுக் குடியேற்ற நாடுகள் தேவையாயிருந்தன.

2. மற்ற ஐரோப்பிய நாடுகள் புதிய குடியேற்ற நாடுகளை நிறுவத் தொடங்கின.

3. பிரெஞ்சு நாட்டிலே ஒரு புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டிருந்தது. பிரெஞ்சு நாட்டுத் தனித்தலைமை முடியாட்சிக் கொள்கையைப் பின்பற்றும் டிபிரேய்சினெனட் (Defrycinent–வெளிவிவகார மந்திரி), ஜூலஸ் பெர்ரி (Jules Ferry—பிரதம மந்திரி) போன்ற அரசியல் தலைவர்கள் பதவிக்கு வந்தார்கள்.

4. பிரெஞ்சு நாட்டுப் பண்பையும் நாகரிகத்தையும், பின் தங்கியுள்ள வியட்நாம் மக்களிடையே பரப்பவேண்டும் என்ற வெறிக்கருத்துகள் ஆழ்ந்திருந்தன.

வியட்நாமிலுள்ள சூழ்நிலையும் பிரெஞ்சுத் தனித்தலைமை அமைப்பதற்கு உறுதுணையாயிருந்தது. என்குயன் அரசர்குலம் சிதைவு வழியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. கடற் கொள்ளைக்காரர்களாலும், வடக்கிலிருந்துவரும் அகதிகளாலும் உருவாக்கப்பட்ட ஒழுங்கற்ற நிலையையும், குழப்பத்தையும் டூடக்கால் சீர்ப்படுத்த முடியவில்லை. கார்னியர் செவ்வாற்று வழி யாகப் படையெடுத்துவந்த காரணத்தால் தூண்டப்பட்ட வியட் நாம் மன்னர் சமயப் பரப்பாளர்களையும் வியட்நாமியக் கத்தோலிக்க மக்களையும் துன்புறுத்திக் கொண்டிருந்தார்.

சைகானிலுள்ள பிரெஞ்சு அதிகாரிகளே இரண்டாவது டொங்கிங் படையெடுப்பின் தொடக்கத்திற்குக் காரணமாய்த் திகழ்ந்தார்கள். வியட்நாம் மக்களிடையே நாகரிகத்தைப் பரப்புவது பிரெஞ்சு நாட்டின் கடமை என்ற நோக்கம்தான் இப் படையெடுப்பிற்குக் காரணம். மேலும், வியட்நாம் தன்னுடைய அடிமை நாடு என்று சீனு வலியுறுத்தத் தொடங்கியது. சீனு கூறியதை வியட்நாம் அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளத் தயாரா யிருந்தது. இதனுல் வியட்நாமிலுள்ள பிரெஞ்சு அதிகாரிகள் அச்சமுற்றுர்கள்; மேலும், அன்னுமில் பிரெஞ்சுக் காப்பாட்சியை அமைக்க வேண்டும் என்று கி.பி. 1881ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரெஞ்சு நாட்டுப் பிரதம மந்திரி பெர்ரீ விரும்பினுர்.

ஆகையால், கொச்சின்-சீனுவின் ஆளுநரான லீ மெய்ரீ டிவிலர்ஸ் (Le Myre Devillers) கடற்படைத் தளபதி ஹென்ரீ ரிவியெரியை (Captain Henry Riviere) 233 ஆள்களுடன் ஹநாயிற்கு அனுப்பினுர். வலிந்து நுழையும் சீனர்களைத் தடுக்க வேண்டும் என்றும் கருப்புக் கொடிக் கடற்கொள்ளைக்காரர்களை ஒழிக்கவேண்டும் என்றும் ரிவியெரி ஹநாயிக்குச் சென்றுர்.

கி.பி. 1883ஆம் ஆண்டு ஏப்ரல் 3 ஆம் நாள் ரிவியெரி ஹநா யிக்கு வந்துசேர்ந்தார். வியட்நாம் மக்களின்மேல் உள்ள அருவறுப்பைத் தவிர மற்றப்படி அவர் கார்னியர் நடந்துகொண் டதைப்போலவே நடந்துகொண்டார். தம்முடைய படை வீரர்களை 600ஆகப் பெருக்கினுர். ஹநாயின் கோட்டையை முற்றுகையிட்டார்; கார்னியர் முன்பு கைப்பற்றிய எல்லா இடங் களையும் கைப்பற்றினுர். டொங்கிங்கைப் பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்தார். ஆனுல் கி.பி 1883ஆம் ஆண்டு மே 19ஆம் நாள் சீனக் கடற்கொள்ளைக்காரர்கள் ரிவியெரியைக் கொலை செய்தார்கள்.

ஆகையால், கி.பி. 1883ஆம் ஆண்டு மே மாத இறுதியில் பிரெஞ்சு வீரர்கள் கடுமையாகப் போர்புரிய முனைந்தனர். கி.பி. 1883ஆம் ஆண்டு ஆகஸ்டில் பிரெஞ்சுப் படையெழுச்சியினால் செவ்வாற்றுப் பள்ளத்தாக்குப் பிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ் வந்தது; பன்னிரண்டு ஆண்டுப் படுகொலை தொடங்கியது. பிரெஞ்சுப் போர்க்கப்பல்கள் ஹியூவை வெடிகுண்டுகளால் கடுமையாகத் தாக்கின.

தம்முடைய நாட்டை வெளிநாட்டார் படையெடுத்துப் பாழாக்கினார்களே என்ற எண்ணத்தினால் வாடிய மன்னர் டூடக் கி.பி. 1883ஆம் ஆண்டு ஜூலை மாதம் இறந்தார். பிரெஞ்சுக்காரர்களின் கொடிய போரை நோக்கிய மேண்டரின்களும் அடைக்கலம் புகுந்தார்கள். இப் படையெடுப்பில் பிரெஞ்சுப் படையோடு சேர்ந்து சீனாவும் போரிட்டது.

கி.பி. 1883ஆம் ஆண்டு ஆகஸ்டு 25ஆம் நாள் பிரெஞ்சு நாடு புதிய வியட்நாம் பேரரசரான ஹியெப்-ஹோவாவுடன் (Hiep-Hoa) ஓர் உடன்படிக்கை செய்துகொண்டது. இவ்வுடன்படிக்கையின் விவரம் பின்வருமாறு :

1. பிரெஞ்சுக் காப்பாட்சியை வியட்நாம் பேரரசர் ஏற்றுக் கொண்டார்.

2. வியட்நாமின் வெளிநாட்டு விவகாரங்களைப் பிரெஞ்சு நாட்டு ஆலோசனையைக் கேட்டுத்தான் நடத்தவேண்டும்.

3. எல்லா நகரங்களிலும் பிரெஞ்சுத் துணைக் காப்பரசின் ஆளுநர்கள் நியமிக்கப்படுவார்கள்; வியட்நாம் பணிமுதல்வர்கள், துணைக்காப்பரசின் ஆளுநர்களின் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டு நடக்கவேண்டும்.

4. எல்லாக் கோட்டைகளும் பிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ் வரும்.

5. வியட்நாமின் சுங்கவரி நிலையங்கள் பிரெஞ்சு அதிகாரிகளின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்படும்.

6. செவ்வாறு வாணிபத்திற்குத் திறக்கப்படும்.

7. பின்-துவான் (Binh-Tuan) மாகாணத்தை பிரெஞ்சு நாட்டிற்கு விட்டுக்கொடுக்க வேண்டும்.

8. போரில் தோற்றதால் மிகுந்த இழப்பீட்டுப் பணத்தை வியட்நாம் பிரெஞ்சு நாட்டிற்குக் கொடுக்க வேண்டும்.

9. சட்டமுறையில் ஒழுங்கையும் அமைதியையும் நிறுவுவதாகப் பிரெஞ்சு அரசாங்கம் உறுதியளித்தது.

10. வியட்நாம் முழுவதும் எவ்வளவு படைவீரர்களை வேண்டுமானாலும் பிரெஞ்சு நாடு விரும்பினால் நிறுத்தலாம்.

ஆகையால், வியட்நாம் முழுவதும் பிரெஞ்சு ஆதிக்கம் தொடங்கியது. கி.பி. 1954ஆம் ஆண்டு வியட்நாமை விட்டுப் பிரெஞ்சு நாடு வெளியேறுமுன் ஹியூனிலும், ஹநாயிலும் 71ஆண்டுகளும், சைகானில் 93 ஆண்டுகளும் ஆட்சி புரிந்தது.

ஆனால் போர் முடியவில்லை. பிரெஞ்சு நாடு வியட்நாமில் சீனாவுடன் போரிட வேண்டிய நிலைமை யேற்பட்டது. வியட்நாமிற்கு உதவிசெய்யும் சாக்கில் சீனா டொங்கிங்கைக் கைப்பற்ற முயற்சி செய்தது. தங்களுடைய ஒப்பந்தம் இல்லாமல் வியட்நாமுடன் செய்துகொள்ளும் உடன்படிக்கை சட்டப்படிச் செல்லாது எனச் சீனா கூறியது. யூனானில் உள்ள தன் படைகளை வியட்நாமுக்குள் சென்று போரிட சீனா ஏவியது. படைப்பெருந் தலைவர் போயட் (Genarel Bouet) தலைமையில் பிரெஞ்சுப்படை சீன எல்லையை நோக்கிச் செல்லத் தொடங்கியது. சீனாவின் வலிகுன்றிய படைகளைப்பற்றி அறிந்திருந்த போயட் சீனாவுடன் சமாதானப் பேச்சு நடத்த மறுத்தார். பேச்சு நடத்தியிருந்தால், பிரெஞ்சு நாட்டிற்கு டொங்கிங்கில் உள்ள சில பகுதிகளே கிடைத்திருக்கும். பிரெஞ்சு வீரர்களைச் சீனாவால் போரில் தோற்கடிக்க முடியவில்லை. ஆகையால், கி.பி. 1884ஆம் ஆண்டு ஜூனில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி வியட்நாமில் நடக்கும் பிரெஞ்சு ஆட்சியில் தலையிடவில்லை எனச் சீனா உறுதிமொழி கொடுத்தது

ஆனால், சீன-வியட்நாம் எல்லையில் இருந்த பாக்லியில் மீண்டும் போர் தொடங்கியது. ஆகையால், டொங்கிங்கில் மீண்டும் போர் நடந்தது. பிரெஞ்சுப் போர்க் கப்பல்கள் சீனாவைத் தாக்கின; பார்மோசாவில் பிரெஞ்சுப் போர்வீரர்கள் வந்திறங்கினார்கள். இதன் பயனாகக் கி.பி. 1885ஆம் ஆண்டு ஜூன் மாதம் சீனாவுக்கும்-பிரான்சுக்கும் இடையே ஒரு புதிய உடன்படிக்கை யேற்பட்டது. டொங்கிங்கிலும் அன்னமிலும் இருந்த பிரெஞ்சுக் காப்பாட்சியைச் சீனா ஒப்புக்கொண்டது. டொங்கிங்கிற்கு அருகிலுள்ள சீனாவின் பகுதிகளில் பிரெஞ்சு வணிகர்கள் வாணிபம் நடத்தலாம் என்ற ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டது. ஆனால், இவ்வணிகர்கள் சீனாவிற்கு 4 விழுக்காடு ஏற்றுமதி-இறக்குமதி

களுக்குச் சுங்கவரி கொடுக்க வேண்டும். மிகக்குறுகிய பெரும் பான்மையுடன்தான் இவ்வொப்பந்தம் பிரெஞ்சு நாட்டில் உறுதி செய்யப்பட்டுச் செல்லுபடியாகியது.

டொங்கிங் போருக்குப் பிறகு பல ஆண்டுகள் குழப்பமும் சீர்குலேவும் மிகுந்த சூழ்நிலே யேற்பட்டது. 'தலேநகரம் நம் வயமிருக்கிறது. ஆனால் அதற்கு மிக நெருங்கிய இடங்களில்கூடப் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது; கலகங்கள் எல்லா இடங் களிலும் வெற்றியடைகின்றன; நமக்கு நண்பர்கள் இல்லே; நாம் உருவாக்கிய அரசரைச் சுற்றியிருப்பவர்கள்கூட நம்மை ஆதரிக்கவில்லே' எனக் கி.பி. 1886ஆம் ஆண்டில் பால்பெர்ட் (Paulbert) என்ற பிரெஞ்சு அதிகாரி எழுதியிருக்கிறார்.

டூடக் படைகளே எதிர்த்த பிரெஞ்சுப் படைகளேவிடத் தற் போது இந்தோ-சீனவில் பிரெஞ்சுப் படைகள் மிகுதியாயிருந்தன. வியட்நாம் கொரில்லாப் போர்வீரர்கள் அமைதியைக் குலேத்தார்கள். வியட்நாமைக் கைப்பற்றினலும், பிரெஞ்சு ஆட்சியை எதிர்க்கும் வியட்நாம் மக்களேப் பிரெஞ்சு அரசாங்கம் கைப்பற்ற முடியவில்லே.

இத்தகைய கடுமையான எதிர்ப்பைப் பிரெஞ்சு அரசாங்கம் எதிர்பார்க்கவேயில்லே. தங்களுடைய ஏழ்மைக்குப் பிரெஞ்சு ஆதிக்கமே காரணம் என வியட்நாம் மக்கள் குற்றஞ்சாட்டத் தொடங்கினர்கள். பிரெஞ்சுக்காரர்களுக்குத் தன்னடக்கமும், கல்வியும் இல்லே என மேண்டரின்கள் கருதினர்கள். புதுவகையான வரிகளேப் பிரெஞ்சு அரசாங்கம் விதிக்கத் தொடங்கியதால் மக்களுக் குப் பிரெஞ்சுஆட்சியின்மேல் வெறுப்பேற்பட்டது. ஆகையால், மக்களேப் பிரெஞ்சு அரசாங்கம் அடக்கி ஆளத்தொடங்கியது. கி.பி. 1885ஆம் ஆண்டு ஜூலே மாதம் அவையிலிருந்த வியட்நாம் படைவீரர்கள் பிரெஞ்சுப் படைவீரர்களே எதிர்பாராத வகையில் தாக்கினர்கள். ஆனல், வியட்நாம் போர்வீரர்களின் முயற்சி தோல்வியடைந்தது. வியட்நாம் பேரரசர் ஹீயெப்-ஹோவா பிரெஞ்சுக்காரர்களுடன் ஒத்துழைக்கலாம் எனக் கூறியதால் அவர் தற்கொலே செய்துகொள்ள வேண்டியநிலே ஏற்பட்டது. அவருக்குப்பின் டூடக்கின் உடன்பிறந்தார் மகன் அரசராக நியமிக்கப்பட்டார்; ஆனல், கி.பி. 1884ஆம் ஆண்டு ஜூலே மாதம் அவரும் பதவியிலிருந்து நீக்கப்பட்டுப் பன்னிரண்டு வயதுச் சிறுவன் ஒருவன் அரசராக நியமிக்கப்பட்டான். ஓர் ஆண்டுக்குப் பிறகு இவ்வரசரின் துணைக் காப்பரசின் ஆளுநரா யிருந்த டோன் தட் துயெட் (Ton That Thuyet) பிரெஞ்சு ஆட்சிக்கு எதிராகத் திடீரென ஓர் அரசியல் புரட்சி செய்து

தோல்வியுற்றார். பன்னிரண்டு வயதுடைய நாம் என்கீதாம் (Nam Nighi) வியட்நாமியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கடைசி வியட்நாம் பேரரசர். அவருக்குப்பிறகு பிரெஞ்சு அரசாங்கம் ஆதரித்த மன்னரே வியட்நாமின் பேரரசராக நியமிக்கப்பட்டார். ஆகையால், நாம் என்கீயைப் பதவியிலிருந்து நீக்கிப் பிரெஞ்சு அரசாங்கம் டான்கானே (Dong Khanh) அரசராக நியமித்தது. நாம் என்கீ ஓடி ஒளிந்து கொரில்லாப் போர் செய்யத்தொடங்கினார். இதனால் பிரெஞ்சு அதிகாரிகள் அடக்குமுறை ஆட்சியைப் பயன்படுத்தினார்கள். ஆனாலும், அவர்களால் சீறியெழும் வியட்நாமியர்களை அடக்கி ஒடுக்க முடியவில்லை. படை வலிமையைப் பயன்படுத்தி வியட்நாமியர்களை அடக்கி ஆளமுடியாது எனக் கி.பி. 1888ஆம் ஆண்டில் பதவியேற்ற பால்பெர்ட் கூறினார். நாம் என்கீ கைது செய்யப்பட்டார்; அவருடைய படைகலைக்கப் பட்டது. கல்விமான் பான் தின் புங் (Phan Dinh Phung) தலைமையின்கீழ் வட அன்னமில் கி.பி. 1896ஆம் ஆண்டுவரை பிரெஞ்சு ஆட்சிக்குக் கடுமையான எதிர்ப்பு இருந்து வந்தது. ஆனால், கி.பி. 1895ஆம் ஆண்டில் அவர் இறந்தவுடன் கிளர்ச்சி முறிவடைந்தது. இக் காரணங்களால் அடக்குமுறை ஆட்சிமுறை வலுத்தது; கலகக்காரர்கள் தூக்கிலிடப்பட்டார்கள். கலகங்கள் இருந்து கொண்டே இருந்தன. டொங்கிங்கிலுள்ள யூயி (Yui) மலைப்பகுதியிலிருந்து தோற்கடிக்கமுடியாத வீரரான டிதாம் (Detham) பிரெஞ்சுப் படைவீரர்களோடு போராடிக்கொண்டிருந்தார். ஆகையால், கி.பி. 1897ஆம் ஆண்டில் அவருடன் ஒரு தாற்காலிக உடன்படிக்கையைப் பிரெஞ்சு அரசாங்கம் செய்துகொண்டது. அவர் கேட்டவற்றையெல்லாம் பிரெஞ்சு அரசாங்கம் கொடுத்தது. 22 கிராமங்களின் தலைவராக அவரைப் பிரெஞ்சு அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. அவர் வசிக்கும் இடங்கள் நெடுஞ்சாலைகள் போடப்பட்டு இணைக்கப்பட்டவுடன் கி.பி. 1909ஆம் ஆண்டில் அவருடைய படை கலைக்கப்பட்டது கி.பி. 1913ஆம் ஆண்டில் பிரெஞ்சு அரசாங்கம் அவரைக் கொலை செய்தது.

இந்தோ-சீனாவில் பிரெஞ்சு இனத் தனித்தலைமையை எதிர்த்த பிரெஞ்சு அரசியல்வாதிகள் வியட்நாமில் பிரெஞ்சு ஆட்சிக்கு ஏற்பட்ட இடையூறுகளைப் பார்த்து எக்களித்தனர். இந்தோ-சீனாவினால் தங்களுக்கு யாதொரு பயனும் கிடையாது எனத் தாங்கள் கூறியது சரியே என இவர்கள் நினைத்தார்கள். வியட்நாமில் பற்றுக்குறை யேற்பட்டதால் கி.பி 1887ஆம் ஆண்டிலிருந்து 1895ஆம் ஆண்டுவரை 40 மில்லியன் ஃப்ரேன்க்ஸ் (Francs) பிரெஞ்சு நாடு செலவழித்தது. கி.பி. 1891ஆம் ஆண்டு

வரை வியட்நாமின் பொருளாதார வளர்ச்சிக்காகப் பணம் ஒதுக்க முடியாத நிலையேற்பட்டிருந்தது. கொச்சின்-சீனுவில் மட்டும் தான் திறமையான உள்ளூர் நிருவாகம் அமைக்கப்பட்டிருந்தது.

கடற்படைத் தலைவர்களின் ஆட்சி

கொச்சின்-சீனுவில் ஐரோப்பிய அதிகாரிகள் நேரடியாக ஆட்சி புரிந்தார்கள். பிரெஞ்சுக் கடற்படைத்தலைவர்களுக்கு உயர்தரப் பதவிகள் அளிக்கப்பட்டன; பிரெஞ்சு நாட்டிலுள்ள படைத்துறையைச் சாராத அரசாங்க அலுவலர்களில் பலர் வியட்நாமிற்கு மாற்றப்பட்டு நடுநிலைப் பதவிகளைக் கைப்பற்றினர். இவர்களில் சிலருக்கு அல்ஜீரியாவில் (Algeria) ஆட்சிபுரிந்த அனுபவம் இருந்தது. பிரெஞ்சுப் பண்புகளோடு ஒன்றுபட்டிணைக்க வேண்டும் என்ற கொள்கையைப் பிரெஞ்சு அதிகாரிகள் பின்பற்றினுர்கள். உயர்பணியர் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தனிச் சலுகைகள் கொடுக்கப்பட்டன. பிரெஞ்சு அதிகாரிகள் பலருக்கு வியட்நாம் மொழி தெரியாது. வியட்நாமின் வழிமுறையில் வந்த ஆட்சி அமைப்பைப் பற்றியோ ஒன்றுமே தெரியாது. நடுநிலையி லுள்ள பண்டைய குடியைச் சார்ந்த வியட்நாமியர்களின் நிருவாக நிறுவன அதிகாரிகளின் ஆலோசனையும் அனுமதியும் கேட்காமல் நேரடியாகவே நகராட்சித் தலைவர்களுடன் பிரெஞ்சு அதிகாரிகள் தொடர்புகொள்ள முயன்றனர். கி.பி. 1885ஆம் ஆண்டுக்குள் இவ்வாருன ஆட்சிமுறை கொச்சின்-சீனுவில் நிலைக்கத் தொடங்கியது.

கி.பி. 1884ஆம் ஆண்டிலிருந்து 1891ஆம் ஆண்டுவரை வியட்நாமில் ஆட்சி புரிந்த தலைமைத் துணைக் காப்பரசின் ஆளுநர்கள் ஒன்றுபட்டுத் திட்டமிட்ட ஒரு கொள்கையைப் பின்பற்றவில்லை. கி.பி. 1886ஆம் ஆண்டு பால்பெர்ட் ஆட்சி புரிந்த 7 மாதங்களில்தான் சில நன்மைகள் விளைந்தன. முன்னுள் மேண்டரின்களை அவர்களுடைய இயல்பான ஆட்சி அமைப்பு முறையிலே நடக்கவேண்டிய சூழ்நிலையை யேற்படுத்திப் பயன் படுத்தினுர். மேலும், சட்டத்திற்கு அப்பாற்பட்ட சிறப்பு மன்றம் (Assembly of Notables) மூலம் ஆட்சி நடத்தினுர். ஆனுல், இவர் ஆட்சி புரியும்போதே இறந்து விட்டார். சீன எல்லையோர முள்ள பகுதிகள் பிரெஞ்சுப் படைவீரர்களின் ஆட்சியின கீழிருந்தன; டொங்கிங்கிலுள்ள பெரும்பான்மையான பகுதிகளில் கலகங்கள் முளைத்திருந்தன; கடற்கரை அன்னும் பகுதி ஒத்துழைக்கும் நிலையில் இல்லை. கம்போடியாவில் மறைமுகமான காப்பாட்சிமுறை அமைக்கப்பட்டிருந்தது. ஆனுல், திறமையுடன்

ஆட்சிபுரியவோ பொருளாதாரத்தை வளர்க்கவோ இங்குள்ள கடற்படை அதிகாரிகள் முயற்சி செய்யவில்லை.

டிலானெஸன் கி.பி. 1891ஆம் ஆண்டில் இந்தோ-சீனவின் முதல் தலைமை ஆளுநராகப் பதவியேற்ருர். இவர் பதவியேற்ற போது கடற்கொள்ளைக்காரர்கள் சீன எல்லையிலுள்ள பகுதிகளில் அட்டூழியம் செய்து கொண்டிருந்தார்கள். இரண்டு பகுதிகளைத் தவிர, டொங்கிங்கிலுள்ள மற்ற எல்லாப் பகுதிகளும் கலகக்காரர் களின் ஆதிக்கத்தின் கீழிருந்தன. தெற்கிலிருந்து ஏற்றுமதியாகும் அரிசியிலிருந்து வரும் வருமானம் பிரெஞ்சு அதிகாரிகளுக்கு ஆதரவளித்துக் காப்பாற்றுவதற்கே பயன்படுத்தப்பட்டது. 'கிராமங்களைக் கொளுத்துவதையும், கும்பல் கும்பலாக மக்களைச் சுட்டுக் கொலை செய்வதையும், குண்டுகள் வீசிப் படுகொலை செய் வதையும், சிறப்புடையவர்களைத் தூக்கிலிடும் முறைகளையும் நாம் மாற்றி அமைக்கவேண்டும். இனிமேல் வன்முறையான முறைகளை அதிகமாகப் பயன்படுத்தக்கூடாது' என டிலானெஸன் கி.பி. 1892ஆம் ஆண்டில் எழுதியிருந்தார். இவர் பதவியேற்கும் முன் மக்களுடைய நலனுக்கு யாதொரு திட்டமும் செயல்படுத்தவில்லை. அன்னமையும், டொங்கிங்கையும் ஆட்சிபுரிய ஒரே சீரான வடிவொத்த நிருவாகத்தை அமைத்தார்; வியட்நாமிய மேண்டரின் களுக்கு நிருவாகப் பொறுப்புகள் கொடுத்தார். உள்நாட்டுப் படைகள் மேண்டரின்கள் அதிகாரத்தின்கீழ் அமைக்கப்பட்டன. புகைவண்டிப் போக்குவரத்திற்காகவும், துறைமுகங்களை வளர்ப் பதற்காகவும், நெடுஞ்சாலைகள் அமைப்பதற்காகவும் கடன் மூலமாகவும், உள்நாட்டு வரிகள் மூலமாகவும் செல்வம் குவித்தார். இவர் ஆட்சி புரிந்த நான்கு ஆண்டுகளில் அரசாங்க வருமானம் 90 விழுக்காடு பெருகியது.

பிரெஞ்சு நாடு லாவோஸைக் கைப்பற்றுதல் (கி.பி. 1893)

லான்சாங்கின் (Lan Chalng) ஏலாலோ-நாட்டின் (கி.பி. 1353ஆம் ஆண்டுக்குப் பிறகு) எல்லை அன்னம் மலையடுக்குத் தொடரின் ஒரு வரிசையிலிருந்து (Cordillera) கிழக்கிலும் வடக்கிலும், கறுப்பு நதியிலிருந்து மேனம் ஆற்றுப் பள்ளத்தாக்கு வரை தெற்கிலும், மேற்கிலும் பரவியிருந்தது லாவோ மக்கள் புத்த மதத்தைப் பின்பற்றுபவர்கள்; இந்தியப் பண்பாடுகளே இங்குச் சிறப்பைப் பெற்றிருந்தன. லாவோ மொழி தாய்மொழி (Thai language) மரபைச் சார்ந்தது. கி.பி. 1697ஆம் ஆண்டுக்குப் பிறகு லான்சாங் மூன்ருகப் பிரிந்தது. ஷியூ ஆதரித்த இளவரசர், மத்தியிலுள்ள வியன்சியனை (Vientiane) ஆட்சி புரிந்து வந்தார்.

வடக்கிலுள்ள லுவான்ங்பிரபாங்கும் (Luang Prabang), தெற்கி லுள்ள சம்ப்பஸாக்கும் (Champassak) பெயரளவில் சியாமின் அடிமையாக இருந்து வந்தன. கி.பி. 1778ஆம் ஆண்டுக்குப் பிறகு வியன்சியன் சியாம் நாட்டின்கீழும், வியட்நாம்கீழும் அடிமையாக இருக்க ஒப்புக்கொண்டது.

மேகாங் நதிப்பள்ளத்தாக்கிலும், அதனுடைய முக்கியக் கிளை நதிப் பகுதிகளிலும்தான் லாவோஸ் மக்கள் வசித்து வந்தார்கள். மக்கள் எண்ணிக்கை மிகாத மாவட்டங்களில் பலவகையான நாகரிகமற்ற இனக்குழுவினர்கள் வாழ்ந்து வந்தார்கள்; இவர்களில் சிலர் லாவோ மக்களைப் போலிருந்தார்கள்; மற்றவர்கள் கெம்மர் மக்கள் போலவும் தென்சீன மக்கள் போலவும் இருந்தார்கள் வடமேற்குச் சியாம் நாட்டிலுள்ள சியாங்மை (Chiengmai) மக்களைப் போலவும் சியன்கிரை (Chiengrain) மக்களைப் போலவும் லாவொஸ் மக்களிருந்தார்கள். இவர்கள் பாலிமொழியை ஆதாரமாகக் கொண்டிருந்த சியாம் கையெழுத்து முறையைப் பயன்படுத்தி னார்கள்; சியாம் மொழியிலிருந்து புதுச்சொற்களைக் கடன்வாங்கி னார்கள். சில சமயங்களில் லாவோஸ் மக்களைச் சியாம் மக்கள் இழிவாக நடத்தினார்கள். ஆனால், வியட்நாம் மக்களின்மேல் இவர்கள் நம்பிக்கைகொள்ளத் தயங்கினார்கள்; இவர்களுக்குப் பொதுவான வரலாறும் பண்பும் வியட்நாமுடன் கிடையாது.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடையிலே வியன்சியன் மேலுள்ள சியாம் மேலாதிக்க உரிமையை (Suzerainty) வியட்நாம் எதிர்த்தது. எதிர்ப்பை அடக்கி ஒழித்தவுடன் வியன்சியன் மக்கள் தொகை குறைக்கப்பட்டது; சியாம் நாட்டரசர் மூன்றாம் இராமா வியன்சியனைக் கைப்பற்றிச் சியாம் நாட்டுடன் இணைத்தார். ஆகையால், தலைமுறை தலைமுறையாக லாவோஸ் மக்கள் சியாம் நாட்டை வெறுக்கத் தொடங்கினார்கள். கி.பி. 1860ஆம் ஆண்டுக்குப் பிறகு லாவோஸின் மற்ற இரு பகுதிகளான லுவாங் பிரபாங்குக்கும், சம்ப்பஸாக்குக்கும் சியாம்நாட்டு ஆளுநர்களுக்கு இருந்த தகுதிலேதான் இருந்தது.

வியட்நாமிற்குள் நுழைந்த பிரெஞ்சுக்காரர்கள் லாவோஸின் மேல் கவனம் செலுத்தினார்கள். ஆகையால், கி.பி. 1885ஆம் ஆண்டில் டொங்கிங்கிலுள்ள பிரெஞ்சுப் படைவீரர்களிடமிருந்து லுவாங் பிரபாங்கிற்குத் தீங்கு நெருங்கியது. சீனக் கடற்கொள்ளைக் காரர்களை அடக்கும் சாக்குடன் ஒரு சியாம் படை லுவாங் பிரபாங்குக்குள் நுழைந்தது. இறுதியாக, அதன் அரசாங்கப் பதில் ஆளுநர் (Viceroy) ஜாமீனாகப் பாங்காக்கிற்குத் தூக்கிச் செல்லப்

பட்டார். லாவோஸில் பிரெஞ்சுப் படை நுழைய வேண்டிய சமயத்தை நோக்கிப் பர்மாவிலுள்ள தீபாவிற்குப் (Thibaw) போர்ப் படைக்கலங்களை அனுப்புவதாக ஜூலிஸ்பெர்ரி கூறினார். மேகாங்கிற்குக் கிழக்கிலுள்ள எல்லாப் பகுதிகளும் பிரெஞ்சு நாட்டைச்சேர்ந்தவை எனப் பிரெஞ்சு அரசாங்கம் அறிவித்தவுடன் சியாம் மக்கள் அஞ்சினார்கள். பிரிட்டனும் இதை எதிர்த்தது.

கி.பி. 1886ஆம் ஆண்டில் ஹியூவிலுள்ள பிரெஞ்சு அரசாங்கம் லுவாங்பிரபாங் வியட்நாமைச் சேர்ந்தது என அறிவித்தது. ஆகையால், சியாம் நாட்டுடன் சண்டை மூண்டது. ஆனால், உடனடியாக ஓர் உடன்படிக்கையேற்பட்டது. இவ்வுடன்படிக்கையின்படி லுவாங் பிரபாங்கில் ஒரு துணை அயல்நாட்டுப் பேராளரைப் (Vice-Consul) பிரெஞ்சு அரசாங்கம் நியமிக்கலாம். அகஸ்டே பேவி இப் பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

லாவோஸைப் பிரெஞ்சு நாடு கைப்பற்றும் முயற்சியை அகஸ்டேபேவி (Augustepave) தான் தொடங்கினார். லாவோஸைக் கைப்பற்றும் எண்ணம் பிரெஞ்சு நாட்டிற்கு இருக்கிறது என்று சியாமிற்குத் தெளிவாகத் தெரிந்தது. ஆகையால், சியாம் நாடு பிரிட்டன் உதவியை நாடியது. சியாம் நாட்டை இடைத்தடுக்கு நாடாய்ப் பயன்படுத்தப் பிரிட்டன் விரும்பியது. ஆகையால், சியாம் நாடு லாவோஸ் நாட்டை அடிமையாக்கும் முயற்சிகளுக்குப் பிரிட்டன் ஆதரவு கொடுக்கவில்லை. இதன் பயனால் லாவோஸில் பிரெஞ்சுக் காப்பாட்சியை அமைக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கப் பிரெஞ்சு நாடு அஞ்சவில்லை. பிரிட்டன் ஒருவேளை சினந்துகொள்ளுமோ என இதற்குமுன் பிரான்சு தயங்கியது. ஆனால், பிரெஞ்சு லாவோஸ் பற்றி அறிவித்த திட்டத்தைப் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் கோமான் ரோஸ்பெரி கடுமையாக எதிர்க்கவில்லை. பிரெஞ்சு அரசாங்கம் படைவலிமையைப் பயன்படுத்தும்படியான சூழ்நிலையை உருவாக்க வேண்டாம் என ரோஸ்பெரி (Lord Roseberry) சியாம் நாட்டிற்கு ஆலோசனை கூறினார். லாவோஸைப் பாதுகாப்பதற்குப் பிரிட்டன் உதவிசெய்ய முன்வராது என்று தெரிந்தவுடன் சூலலொங்கோர்ன் (Chulalong-korn) மிகவும் வருந்தினார்.

லாவோஸ் மக்களிடையே சியாம் நாட்டின் மீதுள்ள வெறுப்பு மிகவேண்டும்; படிப்படியாக அவர்கள் பிரெஞ்சுக் காப்பாட்சியை வரவேற்க வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் அகஸ்டிபேவி லாவோஸில் நடவடிக்கைகள் எடுத்தார். ஒரு சமயம் சீனக் கடற்கொள்ளைக்காரர்கள் வயதான ஆளுநரையும் அவருடைய

குடும்பத்தையும் தாக்கியபோது அவருக்குப் பாதுகாப்பளிக்காமல் சியாம் படைவீரர்கள் அஞ்சி ஓடினார்கள். அச்சமயம் பேவிதான் அவர்களுக்குப் பாதுகாப்பளித்தார்.

இந்தோ-சீனாவில் கைப்பற்றக் கூடிய பகுதிகளை எல்லாம் கைப்பற்ற வேண்டுமென்பதே பிரெஞ்சு அரசாங்கத்தின் நோக்கம். லாவோஸில் பிரெஞ்சுக் காப்பாட்சி அமைக்கவேண்டிய சூழ் நிலையை அகஸ்டேபேவி உருவாக்கியிருந்ததால் அவர் கி.பி. 1892ஆம் ஆண்டில் பாங்காக்கில் தங்கியிருக்கும் பிரெஞ்சு அமைச்சராக நியமிக்கப்பட்டார். கி.பி. 1893ஆம் ஆண்டு பிப்ர வரியில் இரண்டு பிரெஞ்சுப் பிரதிநிதிகள் சியாம் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். இதைச் சாக்காகக் கொண்டு பிரெஞ்சு அரசாங்கம் இழப்பீடு செய்யும்படிக் கேட்டது. மேகாங் நதியின் இடக்கரைகள் முழுவதையும் பிரெஞ்சு நாட்டிற்குக் கொடுக்க வேண்டுமென்றும் அங்கிருந்த சியாமின் பாதுகாப்பு சம்பந்தமான கருவிகளை உடனடியாக நீக்கவேண்டுமென்றும் பேவி கோரிக்கை விட்டார். சியாம் பிரிட்டன் உதவியை நாடியது. ஆனால் பிரெஞ்சுக் கோரிக்கைகளை நிறைவேற்றும்படிப் பிரிட்டன் சியாமிடம் கூறிய தோடல்லாமல், சியாம் அரசு கைப்பற்றியிருந்த மேகாங் எல்லை யைத் தாக்கிய பிரெஞ்சுப் படைத் தலைவரையும் விடுதலை செய்யுமாறு கூறியது.

கி.பி. 1893ஆம் ஆண்டு ஜூலை மாதம் இரண்டு பிரெஞ்சுப் போர்க் கப்பல்கள் பாங்காக்கிற்குப் போக முடிவு செய்தன. கி.பி. 1856ஆம் ஆண்டின் உடன்படிக்கையின்படி இச் செயலுக்குத் தடை விதிக்கிறது எனச் சியாம் நாடு கூறியது. பக்னம் (Paknam) வரைதான் போர்க்கப்பல்கள் வரலாம். ஆனால், பிரெஞ்சுப் போர்க்கப்பல்கள் பக்னத்தை நெருங்கியபோது சியாம் நாட்டுப் படைவீரர்கள் அவற்றின்மேல் குண்டு வீசினார்கள். ஆகையால், பிரெஞ்சுப் போர்க் கப்பல்களும் பதிலுக்குக் குண்டு வீசின; பிறகு பாங்காங்கிற்குச் சென்றன.

பிரிட்டனும் இச் செய்கையைக் கடுமையாக எதிர்க்கவில்லை. கி.பி. 1893ஆம் ஆண்டிலிருந்து ஐரோப்பியச் சூழ்நிலையினால் பிரிட்டன் எச்சரிக்கையுடன் நடந்துகொண்டது. ஆப்பிரிக்காவில் பல பகுதிகளிலே பிரெஞ்சு ஆங்கிலேயர்களிடையே சண்டைகள் நிலவியிருந்தன. ஆசியாவிலே பிரிட்டனுடைய எதிரியாயிருந்த உருசியாவுடன் பிரெஞ்சு அரசாங்கம் நேசநாட்டுறவு ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருந்தது; இச்சமயத்தில்தான் கைசர் பிஸ்மார்க்கைப் பதவியிலிருந்து நீக்கியிருந்தார். பிரெஞ்சு

அரசாங்கம் லுவாங் பிரபாங்கையும், வியன்சியனையும் சியாமிடம் கேட்ட தருணத்தில்தான், பிரிட்டன் பிரெஞ்சு நாட்டை எதிர்த்து, சியாம் பிரெஞ்சுக் கோரிக்கைப்படி நடந்த பிறகு ஓர் இடைத் தடுக்கு நாட்டைப் பேச்சு மூலம் உருவாக்க வேண்டும் என்ற உறுதி மொழியைப் பிரெஞ்சு அரசாங்கத்திடமிருந்து பெற்றது.

மேனுமிலிருந்த பிரெஞ்சு முற்றுகையைப் பார்த்த அரசர் சூலலொங்கோர்ன் மனமுடைந்தார். மேகாங்கிலிருந்து சியாம் படைவீரர்கள் அனைவரும் வெளியேற வேண்டும்; சண்டை பூசல்களை நிறுத்தவேண்டும் என்று பேவி சியாம் நாட்டிடம் கோரிக்கை விட்டார். சியாம் நாடும், வேறு வழியின்றி, இதை ஏற்றுக்கொண்டது. ஆனால், பாரிஸிலிருந்த பிரெஞ்சு அரசாங் கத்திற்கு இக்கோரிக்கை மனநிறைவு அளிக்கவில்லை. ஓர் இறுதி யெச்சரிகையைக் கொடுக்கும்படிப் பிரெஞ்சு அரசாங்கம் பேவிக்குக் கட்டளையிட்டது. ஆகையால், இவ்விறுதி யெச்சரிக் கையின் மூலம் பின்வரும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன:

(1) மேகாங்கிற்குக் கிழக்கிலுள்ள எல்லாப் பகுதிகளையும் (லுவாங்பிரபாங் உட்பட) பிரெஞ்சு நாட்டிற்கு விட்டுக் கொடுக்க வேண்டும்.

(2) பிரெஞ்சுக் கப்பல்களைத் தாக்கிச் சேதம் விளைவித்ததால் போரில் தோல்வியுற்ற 3 மில்லியன் பிரான்க்ஸ் (Francs) இழப்பீட்டுப் பணம் கொடுக்க வேண்டும்.

(3) பக்னமில் பிரெஞ்சுக் கப்பலின்மேல் குண்டுவீசிய படைத் தலைவர்களைத் தண்டிக்க வேண்டும்.

கி.பி. 1893ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் நாள் இவ்விறுதி யெச்சரிக்கை கொடுக்கப்பட்டது. கடைசி இரண்டு கட்டுப்பாடு களையும் சியாம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. ஆகையால், ஜூலை 25ஆம் நாள் பிரெஞ்சுப் படைவீரர்கள் மேனமை முற்றுகையிடத் தொடங்கினார்கள். சியாம் அரசாங்கம் எல்லாக் கட்டுப்பாடு களையும் ஏற்றுக் கொண்டதால் ஆகஸ்டு 3ஆம் நாள் முற்றுகை முடிவடைந்தது. சியாம் நாடு காலதாமதம் செய்ததைத் தண் டிக்கும் நோக்கத்துடன் பிரெஞ்சு அரசாங்கம் மேலும் பின்வரும் சில கட்டுப்பாடுகளை விதித்தது.

(1) மேகாங்கின் கிழக்குக் கரையிலிருந்து சியாம் படை வெளிறேுவதற்கு ஈடாகச் சன்தபன் (Chantabun) பிரெஞ்சு ஆட்சியின்கீழ் வரும்.

(2) மேகாங்கின் மேற்குக் கரையிலிருந்து சியாம் படை வீரர்கள் 25 கிலோ மீட்டர்கள் வரை பின்வாங்கிச் செல்ல வேண்டும்.

(3) கம்போடியாவிற்கு ஒரு காலத்தில் சொந்தமாயிருந்த பட்டம்பாங்கு (Battembang), சியம்ரீப் (Siemreap) மாகாணங் களைச் சியாம் நாட்டிலிருந்து பிரெஞ்சு அரசாங்கம் எடுத்துக் கொண்டு தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும்.

கி.பி 1883ஆம் ஆண்டு அக்டோபரில் சியாம் நாட்டரசர் சூலலொங்கோர்ன் பிரெஞ்சு அரசாங்கத்துடன் ஏற்படுத்திய உடன் படிக்கையின் விளைவால் லாவோஸ் நாடு பிரெஞ்சுக் காப்பாட்சியின் கீழ் வந்தது.

சியாம் நாட்டுடன் உடன்படிக்கையேற்பட்டவுடன் பிரிட் டனின் கெங்துங்கின் (Kengtung) பகுதிகளாகக் கருதப்பட்ட பூவாங்கிரபாங்கிலுள்ள மாகாணங்கள் பிரெஞ்சு நாட்டிற்குச் சொந்தமானவை என அமைச்சர் பேவி கூறினர். ஆகையால் கி.பி. 1896ஆம் ஆண்டு ஜனவரியில் பிரிட்டனுக்கும் பிரெஞ்சு நாட்டிற்கும் ஓர் ஒற்றுமை இணக்கம் ஏற்பட்டது. இவ்விணக்கத் தின்படி மேகாங் நதி கெங்துங்கின் வடகிழக்கு எல்லையாக அமைக் கப்பட்டது. மேலும், சியாம் அதிகாரத்தின்கீழுள்ள மத்திய மேனும் பள்ளத்தாக்கில் பிரெஞ்சு நாடு தலையிடாது என உறுதி மொழி கொடுத்தது. கி.பி. 1904ஆம் ஆண்டின் கார்டியலி நட்புற வொப்பந்தத்திற்குப் பின் (Entente cordialle) சன்தபுனைவிட்டுப் பிரெஞ்சு நாடு வெளியேறியது. ஆனல் கி.பி. 1907ஆம் ஆண்டில் பட்டம் பாங்கையும் சியாம் ரீப்பையும், மேகாங்கின் மேற்பகுதி யிலுள்ள மாநகராட்சிப் பகுதிகளையும் சியாம் பிரெஞ்சு நாட்டிற்குக் கொடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கி.பி. 1893ஆம் ஆண்டிலிருந்து 1907ஆம் ஆண்டுவரை 96,000 சதுர மைல்களைச் சியாம் தன் கிழக்கு எல்லைகளில் விட்டுக் கொடுக்கவேண்டி யிருந்தது.

இந்தோ சீனவைப் பிரெஞ்சு நாடு கைப்பற்றிய முக்கியமான குறிப்புகள்

முதல் நிலை

டுரேனைக் கைப்பற்றுதல்-சில மாதங்கள் அதன் எதிர்ப்பு (கி.பி. 1858)—சைகானையும் அதனைச்சுற்றியிருக்கும் மூன்று மாகாணங் களையும் கைப்பற்றுதல் (1859—62).

இரண்டாம் நிலை

பிரெஞ்சு ஆட்சி கம்போடியாவில் பரவுதல்: கி.பி. 1863ஆம் ஆண்டில் கம்போடியாவில் பிரெஞ்சுக் காப்பாட்சி தொடங்குதல்.

மூன்ருவது நிலை

மேற்கு மேகாங் டெல்டாவிலிருந்து புலோ கண்டோர்வரை பரவியுள்ள மூன்று கொச்சின்—சீன மாகாணங்களேயும் கி.பி. 1867ஆம் ஆண்டில் பிரெஞ்சு அரசாங்கம் கைப்பற்றுதல்.

நான்வது நிலை

கி.பி. 1883ஆம் ஆண்டில் டொங்கிங்கிலும் அன்னுமிலும் பிரெஞ்சுக் காப்பாட்சி அமைத்தல். கி.பி. 1893ஆம் ஆண்டில் லாவோஸில் பிரெஞ்சுக் காப்பாட்சி அமைத்தல்.


8. பிரெஞ்சு நிருவாகம்

டாங்-காணப் பேரரசராய் நியமித்தவுடன் அன்னுமில் உள்ள தன் காப்பாட்சியைப் பிரெஞ்சு அரசாங்கம் இறுக்கி வலுப்படுத்தியது. அன்னுமிலிருந்த ஒன்பது மாகாணங்களிலும் துணைக்காப்பரசின் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டார்கள். அன்னுமிலும் டொங்கிங்கிலும் ஆட்சிபுரிந்த துணைக்காப்பரசின் ஆளுநர்களின் தலைவருக்கு (Senior Resident) உதவிபுரிய ஒரு சிறப்புத் துணைக்காப்பரசின் ஆளுநர் (Special Resident) சிறப்புச் செயலாளராய் (Private Secretary) நியமிக்கப்பட்டார். இச்செயலாளர் அன்னுமிலே குடியிருக்கவேண்டும். டொங்கிங்கிலும் ஒரு சிறப்புத் துணைக்காப்பரசின் ஆளுநர் நியமிக்கப்பட்டார். அன்ருட நிருவாகத்தைக் கவனிப்பதற்காகப் படைத் துறையைச் சாராத அரசாங்கத் துணைக்காப்பரசின் ஆளுநர்கள் இவ்விரண்டு துணைக்காப்பரசின் ஆளுநர்கள் கீழே நியமிக்கப்பட்டார்கள்.

கம்போடியாவிலுள்ள காப்பாட்சி இன்னும் இழி நிலையில் நடந்தது. மேண்டரின்கள் கையூட்டும் ஊழலும் நிறைந்தவர்கள்; ஆகையால், அவர்களிடமிருந்து அதிகாரத்தைப் பிடுங்க வேண்டும் என மன்னர் நோரோடோமிடம் கூறப்பட்டது. அரசாட்சி ஒரு துணைக்காப்பரசு ஆளுநர்களின் தலைவரிடம் ஒப்புவிக்கப்பட்டது. ஒவ்வொரு மாகாணமும் ஒரு துணைக்காப்பரசின் ஆளுநர்கீழ் ஒப்படைக்கப்பட்டது. இதை எதிர்த்து இளவரசர் சிவத்தா (Sivattha) கி.பி. 1885ஆம் ஆண்டு ஜனவரியில் கலகம் செய்தார். கி.பி. 1886ஆம் ஆண்டு ஜூலையில் தான் இக் கலகத்தை அடக்க முடிந்தது.

டொங்கிங்கிலும், கம்போடியாவிலும் குழப்பம் இருந்த காலத்தில் சைகானில் ஒரு கலகம் தோன்றியது. ஆனால், இவையெல்லாம் வன்முறைகளைப் பயன்படுத்தி அடக்கப்பட்டன. கி.பி. 1887ஆம் ஆண்டில் இச் சூழ்நிலையில் வளர்ச்சியேற்பட்டது. டொங்கிங், அன்னாம், கம்போடியா ஆகியவற்றில்உள்ள காப்பாட்சி அரசாங்கங்களை ஒன்றுபடுத்தி ஒரு மத்திய அரசாங்கத்தின்கீழ்க் கொண்டு வரவேண்டும் எனக் கப்பற்படை, குடியேற்றம் ஆகியவற்றின் துறை அமைச்சர் (MInister of Marines and Colnies) விரும்பினார். இந் நாடுகளை ஒன்று சேர்த்தவுடன் இந்தோ-சீனா கூட்டரசு நாடுகள் (Union Indo Chinese) என அழைக்கப்பட்டன.

இக்கூட்டரசின் நிருவாகப்பொறுப்பு ஒரு தலைமை ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர் கப்பற்படை, குடியேற்றம் ஆகியவற்றின் அமைச்சர் அலுவலகத்திற்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவர். கி.பி. 1897ஆம் ஆண்டில் ஒரு தனிக் குடியேற்றங்களின் அமைச்சர் அலுவலகம் உருவாக்கப்பட்டது. இதன் அமைப்புப் பின்வருமாறு:



தலைமை ஆளுநர் நிருவாகத்தின்கீழ் ஐந்து அலுவலகங்கள் அமைக்கப்பட்டன:

(1) படைத்துறை அலுவலகம் (Under the charge of the Commandant Superiear des Troupes).

(2) கடற்படைத் துறை அலுவலகம் (Uuder the Commandant Superiear de la Marine).

(3) செயலாளர்-முதல்வர் நிருவாகத்தின் கீழுள்ள அரசாங்கத் தலைமைச் செயலகம்.

(4) நீதி நிலையத் துறை (Unnder the Chief de Service Judiciarire).

(5) சுங்கவரி விதிக்கும் பொதுப்பணித்துறைப் பிரிவு (Under the Directear des Douanes ei Regies)

பொதுவாகத் தலைமை ஆளுநர்கள் அனுபவமில்லாத நிருவாகிகள். இவர்களுக்குக் கீழே ஒரு பொருளாதார நிதிச் செல்வாக்குள்ள உயர் மன்றம் (Grand Council of Economic and Financial interests) அமைக்கப்பட்டது. பிரெஞ்சு, வியட்நாமிய உயர் அதிகாரிகளும், விவசாய, வாணிப இனத்தைச் சார்ந்த உறுப்பினர்களும் இம்மன்றத்தின் உறுப்பினர்களாகப் பணி செய்தார்கள். தலைமை ஆளுநருக்கு ஆலோசனை கூறுவதே இம் மன்றத்தின் கடமை. தலைமை ஆளுநருக்கு அனுபவம் இல்லாததால் மிகச் சில சட்டதிட்டங்களைப்பற்றியே தீர்மானங்கள் எடுத்தார். குடியேற்றங்களின் அமைச்சர் தமக்கு முன்னதாகவே சட்டதிட்டங்களை அனுப்பவேண்டும் என இவர் நம்பி வாழ்ந்தார்.

பிரெஞ்சுக் குடியேற்ற அரசாங்கத்தில் மிக அதிகமான அலுவலர்கள் நியமிக்கப்பட்டார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் சாதாரணத் திறமை யுடையவர்கள். இவர்களுக்கு நிருவாக அனுபவம் கிடையாது; அவ்வளவு பண்புடையவர்களாகவும் இவர்கள் திகழவில்லை. வியட்நாமிய மக்களின் நடத்தையையும், பண்பையும், வாழ்க்கை முறையையும் பார்த்து இவர்கள் ஏளனம் செய்தார்கள்; சகிப்புத் தன்மையற்றவர்களா யிருந்தார்கள்.

அரசாங்க அலுவலர்களுக்கு ஊதியம் கொடுத்ததால் நிருவாகச் செலவு அதிகரித்தது. 1897 வரை அரசாங்கத்திற்கு வந்த வருமானமோ மிகக் குறைவு. இந்நிலையைச் சீர்ப்படுத்தியவர் தலைமை ஆளுநர் பால் டூமர் (Paul Doumer, 1897–1902)

ஆவார். இவர் பல துறைகள் மூலம் அரசாங்கத்திற்கு வருமானம் தேடினர். இவர் ஆட்சிக்கு வந்தபோது கொச்சின்-சீனவில் திறமையற்ற, ஊழல் நிறைந்த அலுவலர்கள் மிகவும் அதிகரித்திருந்தார்கள். அன்னமிலே அரசாங்கத்திடம் பற்றுறுதியற்ற மேண்டரின்கள் இருந்தார்கள்; டொங்கிங்கிலே குழப்பச் சூழ்நிலை நிலவியிருந்தது; கம்போடியா செயலற்று வளர்ச்சியடையாமல் இருந்தது. ஆனல், தம் ஆட்சியின் மூலம் வரி கொடுக்கும் பிரெஞ்சு மக்களைப் பாதிக்காமல் வாணிபக் குழாம்கள் இந்தோ சீனவிலிருந்து இலாபம் அடைய முடியுமென்றும், இந்நாட்டில் ஒரே சீரான நிருவாகத்தை அமைக்க முடியுமென்றும், இந்நாட்டின் மூலம் அதிகப் பொது வருமானம், பொருளாதாரச் சாதனங்களைப் பெறமுடியும் என்றும் இந்தச் சுறுசுறுப்பான, செல்வாக்கு மிக்க தலைமை ஆளுநர் நிருபித்தார்.

இந்தோ-சீனவில் படிநிலை அமைப்பில் பிரெஞ்சு நிர்வாகம் உருவாகியிருந்தது. கொச்சின்-சீன குடியேற்ற நாடாயிருந்ததால் இதை நேரடியாகவே நிருவகித்தார்கள். அன்னம், டொங்கிங், கம்போடியா, லாவோஸ் காப்பாட்சிப் பகுதிகளில் அரைகுறை அளவில் அதிகாரமிருந்தது. ஆனல், இந் நாடுகள் சைகானிலுள்ள தலைமை ஆளுநர் ஆட்சியின்கீழ் வந்தன.

கொச்சின்-சீனவின் நிருவாக அமைப்பு

கொச்சின்-சீனவின் ஆட்சி ஓர் ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவருக்கு உதவிசெய்யத் தனிப்பட்ட ஆய்வுரையாளர் குழுவும் (Privy Council), குடியேற்ற மன்றமும் (A Colonial Council) இருந்தன. தனிப்பட்ட ஆய்வுரையாளர் குழு, சட்ட நிறைவேற்ற ஆட்சி மன்றமாய் விளங்கியது; குடியேற்ற மன்றத்திற்குச் சட்டமியற்றும் உரிமையிருந்தது. குடியேற்றச் சட்டசபையின் உறுப்பினர்களின் ஒரு பகுதியினர் பிரெஞ்சுக் குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தலைமை ஆளுநருக்கு ஆளுநர் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிருர். ஆளுநரின்கீழ் மாகாணங்களின் துணைக் காப்பரசின் ஆளுநர்கள் இருந்தார்கள். வியட்நாம் மக்களுடன் கூடி ஆலோசனை செய்து நிருவாகம் செய்யவேண்டும் என்ற கொள்கை யிருந்தபோதிலும், மிகச் சில வியட்நாமியர்களே நிருவாக அலுவலகங்களில் சேர்க்கப்பட்டார்கள்.

பிரெஞ்சு ஆதிக்கம் கொச்சின்-சீனவில் கிராமங்கள் வரை பரவியிருந்தது. கிராமப் பெரியவர்களிடமிருந்த நீதி, காவல்துறை ஆகியவற்றின் அதிகாரங்களைப் பிரெஞ்சு அதிகாரிகள் கைப்பற்றினர்கள். பிரெஞ்சுக் கல்விமுறையைத் தொடங்கியவுடன்

மேண்டரின்கள் அதிகாரிகளாகப் பணிபுரியும் முறை முடிவடைந்தது.

காப்பாட்சி நாடுகளின் நிருவாக அமைப்பு

கொச்சின்-சீனவிலிருந்ததைப்போல அன்னம், டொங்கிங், கம்போடியா, லாவோஸில் ஆகியவற்றில் உள்ளாட்சி முறை அதிகமாக மாற்றப்படவில்லை. கி.பி. 1897ஆம் ஆண்டில் டொங்கிங்கில் ஆளுநர் பதவி ஒழிக்கப்பட்டது; இதுவரை வியட்நாமிய மேண்டரின்கள்தாம் இப் பதவியிலிருந்தார்கள். பகர ஆளுநர்களுக்குப் பதிலாக ஒரு துணைக்காப்பரசு ஆளுநர்களின் தலைவர் நியமிக்கப்பட்டார்; இவர் பிரெஞ்சு நாட்டின் குடிமகனாக இருக்க வேண்டும். படிப்படியாக நிருவாகம் பற்றிய எல்லா அதிகாரங்களும் இவர்கீழ் வந்தன.

ஒவ்வொரு காப்பாட்சி நாட்டிலும் மிக உயர்ந்த பதவியிலிருந்தவர் துணைக்காப்பரசின் ஆளுநர்களின் தலைவர்.இவர் சைகானிலுள்ள தலைமை ஆளுநருக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவர். அன்னம், கம்போடியா, லாவோஸ் முதலிய காப்பாட்சி நாடுகளில் பிரெஞ்சு நிருவாக அமைப்போடு அரசர், அரசரவை, மேண்டரின்கள் ஆகியவையும் தொடர்ந்திருக்க அனுமதி கொடுக்கப்பட்டது. ஆனால், துணைக்காப்பரசின் ஆளுநர்களின் தலைவருக்கும், அவருடைய தனிப்பட்ட ஆய்வுரையாளர் குழுவிற்கும் காப்பாட்சி மன்றங்களிடம் தான் அதிகாரங்கள் இருந்தன. தலைமை ஆளுநரின் எண்ணப்படி அரசர்கள் பதவியில் அமர்த்தப்பட்டார்கள்; அல்லது விலக்கப்பட்டார்கள்.

பிரெஞ்சுத் துணைக்காப்பரசின் ஆளுநரே மாகாணங்களின் தலைவராய்த் திகழ்ந்தார். ஆனால் கொச்சின்-சீனவில் உள்ளது போல இந் நாடுகளில் பிரெஞ்சு நேரடியாட்சியில்லை. பிரெஞ்சு அதிகாரிகளுக்கும், மக்களுக்குமிடையே வியட்நாமிய அதிகாரிகள் நிருவாகம் செய்து வந்தார்கள். இந்தோனேசியாவிலிருந்த டச்சு மறைமுக ஆட்சிபோல் வியட்நாமிலும் பிரெஞ்சு ஆட்சி இருந்தது.

வியட்நாம் பேரரசர்கள் ஆட்சிபுரிந்தபோது கோ-மட் (Co-Mat) என்ற மன்றம் அவருக்கு ஆலோசனை கூறி வந்திருந்தது. ஆனால், பிரெஞ்சு ஆட்சியின்போது அம் மன்றம் தன் அதிகாரங்களையெல்லாம் இழந்தது. அமைச்சர் மன்றத்தின் கூட்டங்களில் பிரெஞ்சுத் துணைக் காப்பரசின் ஆளுநரே தலைமை தாங்கினர். வரி வாங்கும் அதிகாரமும், பொதுமக்களிடமிருந்து அரசாங்கம் நிதிதேடும் அதிகாரமும் துணைக் காப்பரசு ஆளுநரிடமிருந்தன.

படிப்படியாக எல்லா அதிகாரங்களையும் பிரெஞ்சு அதிகாரிகள் கைப்பற்றியதால் படைசாராப் பிரெஞ்சு இந்தோ-சீன அரசாங்க அலுவலர்கள் (A French Indo-Chinese Civii Service) உருவாக்கப் பட்டார்கள்.

இந்தோ-சீன பொருளாதார நிருவாக அமைப்பு (A French Indo-Chinese Civil Service)

பிரெஞ்சு அதிகாரிகளுக்குக் கொடுத்த ஊதியமே அரசாங்கப் பொது வருவாய்த் துறையின் செல்வத்தைக் கரைத்தது. ஆகையால், தலைமை ஆளுநர் பால்டுமர் சில சீர்திருத்தங்களைச் செய்தார்.

கொச்சின்-சீனவில் கடன் வாங்கியும் நெடுஞ்சாலைகள், கால்வாய்கள், துறைமுக வசதிகள், புகைவண்டிப் போக்குவரத்து முதலியவை அமைப்பதற்காகவரி விதித்தும் டுமர் அரசாங்கத்திற் காகச் செல்வம் திரட்டினர். அதிகமாயிருந்த அரசாங்க அலுவலர்களைப் பதவிகளிலிருந்து நீக்கினர்.

இரண்டு வகையான முறைகளைப் பயன்படுத்தி டுமர் அரசாங்க நிதியைத் திரட்டினர்:

1. செலவை ஒழுங்குபடுத்துவதற்காகக் கூட்டரசு மைய அமைப்பின் வரவு செலவுத் திட்டப்பட்டியல் உருவாக்கப்பட்டது.

2. சுங்க வரிவிதித்து வருமானம் திரட்டப்பட்டது; உப்பு, அபினி, சாராயம் முதலியவை பற்றிய விவகாரங்கள் அரசாங்கத் தனி உரிமையின்கீழ் வந்தன; நிலவரியும், தலைவரியும் விதிக்கப்பட்டன.

இச் சீர்திருத்தங்களால் செலவைவிட வருமானமே அரசாங்கத்திற்குப் பெருகியது. ஆனல், வரிசெலுத்தும் வியட்நாமியர்கள், முக்கியமாகக் குடியானவர்கள், இதனல் துன்பத்திற்குள்ளானர்கள். பிரெஞ்சு நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதற்காக இந்தோ சீன மக்களின் செல்வத்தைச் சுரண்ட வேண்டும் என்பது பிரெஞ்சு அதிகாரிகளின் கருத்தாகும்.

டுமர் ஆட்சியின் போது பலவகைப் பொருளாதாரத் திட்டங்கள் வரையறுக்கப்பட்டன. அவர் ஆட்சியின்கீழ் நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டன; ஹநாயையும் சைகானையும் இணைக்கவும், ஹைபாங்கையும் (Haiphong), குன்மிங்கையும் (Kunming), இணைக்கவும் புகைவண்டிப் போக்குவரத்து அமைக்கப்பட்டது. ஹைபாங்,

டுரேன், சைகான் ஆகியவற்றின் துறைமுகங்களில் வசதிகள் பெருகின. அவர் ஆட்சியின்கீழ் 1,700 மைல்கள் நீளமுடைய புகை வண்டிப் பாதைகள் அமைக்கப்பட்டன.

பிரெஞ்சுப் பொருளாதாரத் திட்டங்களால் வியட்நாம் குடியான வர்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டது. அரசாங்கப் பொருளா தாரத் திட்டங்கள், அரசாங்க அயல்நாட்டு முதலீடு செய்பவர் களுக்கே நன்மை செய்தன; வியட்நாம் மக்களுக்கு நன்மையேற் படவில்லை. நில உடைமையைச் சார்ந்த பொருளாதாரச் சூழ் நிலையே வியட்நாமில் நிலவியிருந்தது. நிலங்களைப் பிரித்துப் பங்கு போட்டதால் சிறிய அளவில்தான் நிலங்கள் கிடைத்தன. ஒன்று அல்லது அரை ஏக்கர் நிலத்தை உழுது பயிரிட்டதனுல் யாதொரு பயனும் கிடைக்கவில்லை. இவ்வாறு ஒரு சூழ்நிலை டொங்கிங்கில் நிலவியிருந்தது. டொங்கிங்கில் கொச்சின்-சீனுவை விட, மக்கள் நெருக்கடி மிகுந்திருந்தது. கி.பி. 1880ஆம் ஆண்டி லிருந்து 1937ஆம் ஆண்டு வரை பயிரிடும் நிலங்கள் 4,500,00 ஏக்கர்கள் ஆகப் பெருகின. உற்பத்தி 2,84,000 டன்களிலிருந்து, 15,48,000 டன்களாக மிகுந்தது பெரும்பான்மையான நெல் விளையும் நிலங்கள் பிரெஞ்சு முதலாளிகள், வியட்நாம் நிலவுடை மையாளர்கள் ஆகியோரின் வயமிருந்தன. பெரும்பான்மையான பொதுமக்கள், குத்தகைக்குப் பயிர் செய்யும் குடியானவர்களாக இருந்தார்கள்.

குடியானவர் வாழ்க்கை துன்பமயமாயிருந்தது. நிலக் குத்த கையின் வாடகைகள் மிக அதிகமாயிருந்தன; கடன் வாங்கினுல் வட்டி மிக அதிகமாயிருந்தது; ஆகையால், கடன்பட்டவர்கள் கிராமத்தில் மிகுந்திருந்தனர். வட்டிக்காகப் பணம் கொடுத்தும், நிலக் குத்தகையிலிருந்து வாடகை வாங்கியும் வியட்நாம் நில வுடைமையாளர்கள் செல்வத்தைக் குவித்தார்கள். கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாதவர்கள் வட்டிக்குப் பணம் கொடுக்கும் நிலவுடைமையாளர்களுக்குத் தங்கள் நிலங்களின் விளைபொருள் களில் 50 விழுக்காடு கொடுக்க வேண்டும். இவ்வாறுன சூழ்நிலை தான் தென்கிழக்காசியா முழுவதும் பத்தொன்பது இருபதாவது நூற்றுண்டுகளில் நிலவியிருந்தது.

மேலும், உப்பின் விலை மிக அதிகமாயிருந்ததால் மக்களின் துன்பம் பெருகியது. வியட்நாமியக் குடியானவர்கள் பொதுவாக மீன் சாப்பிடுபவர்கள். தேவைக்கு மேல் மீன்களைப் பிடித்திருந்தால் அவற்றைப் பாதுகாப்பதற்கு உப்புத் தேவையாயிருந்தது. அரசாங்கத் தனி உரிமையின்கீழ் உப்பு வந்தது. ஆகையால்,

உப்பை அரசாங்கத்திற்காக உற்பத்தி செய்த உழவர்கள் மிகுந்த பணம் கொடுத்து வாங்க வேண்டும் அல்லது தாங்கள் பிடித்த மீன் கள் அழுகும்படி விட்டு விட வேண்டும் என்ற நிலைமையேற்பட்டது. அரசாங்கத் தனி உரிமைகளால் தாங்கள் சாதாரணமாக வேறுவகை யில் ஊதியம் பெறும் உரிமைகளையும் குடியானவர்கள் இழந்தார் கள்.

இரப்பர் பயிரிடத் தொடங்கியதால் தொடக்கத்தில் பல இன்னல்கள் ஏற்பட்டன. ஆனால், பல ஆண்டுகள் கழித்து நன்மை விளைந்தது. தெற்கு வியட்நாமின் இரப்பர்த் தோட்டங்களில் வேலை செய்வதற்காக டொங்கிங்கிலிருந்து கூலியாள்கள் வந்தார்கள். கி.பி. 1905ஆம் ஆண்டில் முதன் முதலாக இரப்பர்த் தோட்டங்கள் பயிரிடப்பட்டன. பல ஆண்டுகளுக்குப் பிறகு இது முதன்மை பெற்று அரசாங்கத்திற்கு அதிக வருமானம் தேடித்தந்தது. இரப்பர்த் தோட்டங்களின் வளர்ச்சிக்காகப் பிரெஞ்சு அதிக மூலதனம் இட்டது. சுரங்கப்பொருள்களும் பிரெஞ்சுக்காரர்களால் சுரண்டப் பட்டன.

வாணிப வசதிகள் சைகானிலிருந்ததால் வணிகர்கள் சைகானை நாடி வந்தார்கள். அரிசி ஏற்றுமதி பெருகியது. பணிமுறைசாராத முதலாளிகள் மிக அதிக வட்டிக்குப் பணம் கடன் கொடுத்தார்கள். படிப்படியாகச் செலாவணி வாழ்க்கை முறையில் வியட்நாம் மக்கள் ஈடுபடத் தொடங்கினார்கள். கி.பி. 1885ஆம் ஆண்டில் இந்தோ-சீன வங்கி அமைக்கப்பட்டது. தொழில் துறைகள் வளரத் தொடங்கின; தொழிற்சாலைகளே தங்களுக்குத் தேவையான செலாவணிகளை அச்சிட்டன. தொடக்கத்திலே தொழிற்சாலைகள் அரசாங்கத்தின் முக்கிய அங்கமாக மாறின. தொழிற்சாலைகளுக்கும், வாணிபத்திற்கும், குடியானவர்களுக்கும் முதலீடு கொடுத்ததால் இந்தோ-சீன வங்கியின் புகழ் ஓங்கியது. இந்த வங்கிக்கு வந்த மிகுபயனின்மேல் பிரெஞ்சு அரசாங்கம் 20 விழுக்காடு வட்டி விதித்தது; வங்கியின் 20 மேலாளர்களில் ஆறு மேலாளர்கள் பிரெஞ்சு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார்கள்.

வியட்நாமில் பிரெஞ்சு ஆட்சி செய்த வளர்ச்சிகள் பிரெஞ்சு மக்களுக்கும், ஒரு சில வியட்நாம் செல்வர்களுக்குமே நன்மை செய்தன. 95 விழுக்காடு மக்களுக்கு இதனால் நன்மையே ஏற்பட வில்லை. சுகாதாரம், கல்வி ஆகிய துறைகளில் அதிக வளர்ச்சி யிருந்தது எனத் திண்ணமாகக் கூறலாம். பாஸ்டர் நிறுவனங் களும் பிரெஞ்சு அரசினர் இடைநிலைப் பள்ளிகளும் (French lycees) வருங்கால வியட்நாம் நாட்டின் வளர்ச்சிக்குக் கால்கோள் நாட்டின.

பிரெஞ்சுப் பொருளாதார, நிருவாக அமைப்பு முறையை இந்தோ-சீனுவில் புகுத்தியதால் அந்நாட்டு வழிமரபில் வந்த சமூக, அரசியல் அமைப்பில் பெருமாறுதல்கள் ஏற்பட்டன.

சமுதாயஞ் சார்ந்த நிருவாக அமைப்பு

கூட்டாண்மை முறையில் பொறுப்பேற்றிருந்த கிராம அமைப்பு மாற்றப்பட்டுத் தனிப்பட்ட முறையில் பொறுப்புகள் அளிக்கப் பட்டன. பிரெஞ்சு நிருவாக முறையினுல் வியட்நாம் மக்களின் சமுதாய அமைப்புத் தகர்த்தெறியப்பட்டது. தங்களுடைய இன்னல்களை ஒழிப்பதற்காகச் சமுதாய உதவியைக் குடியானவர் கள் நாட முடியவில்லை. கிராமப் பெரியோர்களிடம் முறையிடும் வாய்ப்பு நீக்கப்பட்டது; அவர்களுக்குப் பதிலாகப் பிரெஞ்சு அதிகாரி கள் சட்ட மூலமாக ஒழுங்கை நிலைநாட்ட முயன்றுர்கள். மேண்ட ரின்களின் நற்பெயருக்குக் கேடு வந்ததால் மாகாணங்களில் அவர் களுக்கு யாதொரு பதவியும் கொடுக்கப்படவில்லை. ஹியூவில் இருந்த மத்திய அரசாங்கத்தில்கூட அவர்களுடைய அதிகாரங்கள் மிகவும் குறைக்கப்பட்டன. குடியேற்ற ஆட்சிமுறையிலும் மேண்டரின்களுக்கு மக்களை நிருவகிக்க வேண்டிய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. ஆனுல், தங்களுடைய அதிகாரங்களை மேண்டரின்கள் தவருகப் பயன்படுத்திஞல், அதை எதிர்க்கக் கூடிய அதிகாரங்கள் மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. பிரெஞ்சு ஆட்சியில் மேண்டரின்களை எதிர்த்து மக்கள் முறையீடு செய்யலாம்

சில குடியானவர்கள் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்திருந் தார்கள்; மற்றும் பலர் நிலமில்லாது கூலியாள்களாக அலைந் தார்கள். வட்டிப்பணம் தவணையில் கொடுக்க முடியாததால் இரண்டு மூன்று அறுவடைக்குப் பிறகு குடியானவர் முதலாளி களின் அடிமைகளாக மாறினுர்கள். குடியானவர்களில் சிலர் வேலை தேடிப் பட்டணங்களுக்குச் செல்லத் தொடங்கினுர்கள்; அங்குக் கூலியாள்களாக வேலை செய்தார்கள். எஞ்சியவர்கள் ஒன்றுகூடிப் பருவமுறை வேலைகளைத் (Seasonal Labour) தேடிச்சென்றுர்கள். இந்த வேலையாள்களே வருங்காலப் பாட்டாளி மக்களாக மாறிப் பிற்காலத்தில் பிரெஞ்சு ஆட்சியை எதிர்த் தார்கள்.

குடியானவர்களும், தொழிலாளிகளும் பலவகை வரிகளைச் செலுத்திஞர்கள்; அதஞல் அவர்களுடைய துன்பங்கள் மிகுந் தன. மேலும், கூலியில்லா வேலை (Corvee) செய்யவேண்டி யிருந்ததாலும், உப்புவரி (Gabelle) செலுத்த வேண்டியதாயிருந்

ததாலும் அவர்களுடைய துன்பங்கள் பெருகின. இத்தகைய பொருளாதாரச் சூழ்நிலையில் அவர்களால் சேமிப்புச் செய்ய முடியவில்லை. செழிப்புள்ள நிலங்களிருந்ததால் பெருகும் மக்கள் தொகையைத் தாங்கும் ஆற்றல் இருந்தது. பிரெஞ்சு ஆட்சியின் போது மக்கள் தொகை மிகவும் வளர்ந்தது. ஆனால், வாழ்க்கை நிலை மிகவும் இழிந்த நிலையை யடைந்திருந்தது.

வியட்நாமைக் கைப்பற்றிய சமயத்தில் நிலங்களைப் பிரெஞ்சு அரசாங்கம் பிரித்துக் கொடுத்ததால் ஒரு நடுநிலை வகுப்பு (middle class) உருவாகியது. பிரெஞ்சு நிருவாக முறைக்குக் கீழ்ப்படியிலுள்ள படைத்துறை சாராத வியட்நாமிய அரசாங்க அலுவலர்கள் தேவையாயிருந்தார்கள். இவ் வகுப்பினரும் கல்வி கற்ற வகுப்பினர்களும் (intellectures) வியட்நாமின் நடுநிலை வகுப்பினராக மாறினார்கள். தொழிற்சாலையைச் சார்ந்தவர்களையும், வாணிப வகுப்பைச் சார்ந்தவர்களையும் வாணிய நடுநிலை வகுப்பில் நாம் சேர்க்கலாம். ஆனால், இந் நடுநிலை வகுப்புச் சிறியதாக இருந்தது. இவர்களுக்கு முக்கியமான பொறுப்புள்ள அரசாங்கப் பொருளாதாரம் பற்றிய பதவிகள் கொடுக்கப்படவில்லை.

அதிக நிலங்களை வாங்கிய வியட்நாமியர்கள் தங்கள் நிலங்களை நெல்பயிர் செய்யும் ஏர் உழவர்களுக்குக் குத்தகைக்கு விட்டார்கள். விளைபொருள்கள் விளையாத காலத்தில் இக் குடியானவர்கள் தங்கள் நிலவுடைமையாளர்களிடமிருந்து கடன் வாங்கினார்கள். ஆனால், வட்டிப்பணம் மிக அதிகமாயிருந்ததால் இவர்களால் தங்கள் கடன்களை அடைக்க முடியவில்லை. நிலக் குத்தகை, அரசாங்க உத்தியோகங்கள், வாணிபங்கள் முதலியவற்றின் மூலமாக நடுத்தர வகுப்பினர்கள் செல்வர்களாக மாறினார்கள். ஆகையால், இவர்கள் தங்களுடைய குழந்தைகளைப் பிரெஞ்சு கல்வி முறையில் படிக்க வைக்க முடிந்தது; அரசாங்க உத்தியோகம் கிடைக்கப் பிரெஞ்சுக் கல்வி தேவையாயிருந்தது.

பிரெஞ்சுக் கல்வி முறையை வியட்நாமில் தொடங்கியதால் சமுதாயத்தில் வளர்ச்சியேற்பட்டது. இக் கல்வி முறைமூலம் ஒரு புதிய அறிவுத்திறனுடைய வகுப்பு உருவாகியது. பிரெஞ்சுக் குடியேற்ற ஆட்சி தகர்த்தெறியப்பட்டதற்கு இவர்களே காரணமாய்த் திகழ்ந்தார்கள். மேலும், வியட்நாமிலுள்ள அரசியல் அமைப்பையே இவர்கள் அடியோடு மாற்றினார்கள்.

இருபதாம் நூற்றுண்டுத் தொடக்கம்வரை வியட்நாம் மக்கள் 'இணைதல்' கொள்கையைப் (Policy of Association) பிரெஞ்சு

அரசாங்கம் பின்பற்றியது. ஆனால், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இக் கொள்கையை விலக்கித் 'தன்னியற்படுத்துதல்' கொள்கையைப் (Policy of Assimilation) பின்பற்றத் தொடங்கியது. பிரெஞ்சுப் பண்புகளையும், நாகரிகத்தையும் கற்பித்தால் பிரெஞ்சு ஆட்சியின் மேல் பரிவும் விருப்பமும் வியட்நாம் மக்களிடையே உருவாகும் எனப் பிரெஞ்சுக்காரர்கள் நினைத்தார்கள்.

உரோமன் வழிவந்த மொழியில் வியட்நாம் கையெழுத்துப் படிவம் மாற்றியமைக்கப்பட்டது. சீனமொழி, சீனக்கல்வி முறையில் அமைக்கப்பட்டிருந்த வரலாறு, நீதிமுறைப்படி நடக்க வேண்டும் என்ற கோட்பாடுகள் எல்லாம் நீக்கப்பட்டன.

தலைமை ஆளுநர் பால் பியோ (Paul Beau) புதுக் கல்விப் பயிற்சித் திட்டத்தைத் தொடங்கினர். வியட்நாம் தொடக்கப் பள்ளிகளில் படித்த அறிவுக் கூர்மையுள்ள குழந்தைகளே இப் புதிய வியட்நாம்–பிரெஞ்சுத் தொடக்கப்பள்ளிகளிலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். ஆகையால், உயர்நிலைக் கல்வி அமைப்புகளிலும் இவ்விரு பிரிவுகள் அமைக்கப்பட்டன. முதன் முதலாக அன்னமிலும், டொங்கிங்கிலும்தான் புதுமுறைப் பள்ளிகள் கி.பி. 1906ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. இப்புதிய முறைக்கு ஆதரவிருந்ததால் கி.பி. 1909ஆம் ஆண்டில் கொச்சின்–சீனவில் புதுமுறைப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டன. [ஆனால் கம்போடியாவிலும், லாவோஸிலும் துறவிமடப் பள்ளிகள் (Monassic School) தொடர்ந்திருந்து வந்தன.]

தீவிர தேசியவாதிகள் முறையிட்டதால் கி.பி. 1907ஆம் ஆண்டில் ஹநாயில் பால்பியோ ஹநாய்ப் பல்கலைக்கழகத்தை அமைத்தார். மாணவர்கள் கலகம் செய்ததால் இப் பல்கலைக் கழகம் கி.பி. 1908ஆம் ஆண்டில் மூடப்பட்டது; கி.பி. 1917ஆம் ஆண்டுவரை இது திறக்கப்படவில்லை.

நடுநிலைப் பிரெஞ்சுப் பள்ளிகளில் படித்த திறமைவாய்ந்த பணக்கார மாணவர்கள் மேல்படிப்பிற்காகப் பிரெஞ்சு நாட்டிற்குச் சென்று பிரெஞ்சுப் பல்கலைக் கழகங்களில் பயின்றார்கள். ஆகையால், மேலைநாட்டு அரசியல் தத்துவங்களோடு அவர்கள் தொடர்புகொள்ள முடிந்தது; இதனால் அவர்களிடையே மன மாற்றம் பெரிதும் உருவாகியது.

வியட்நாமிற்குத் திரும்பி வந்தவுடன் பிரெஞ்சுக் குடியேற்ற அரசாங்கம் பிரெஞ்சுக்காரர்களுக்கு அதிக மரியாதை கொடுப்பு

தையும், வியட்நாமியர்களுக்கு அத்தகைய மரியாதை கொடுக்காமல் இருப்பதையும் அவர்கள் கண்டார்கள். ஹநாய்ப் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் பிரெஞ்சு வாயிற்காவலர்கள் (French Janitor), பாரிஸ் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றுப் பேராசிரியராகப் பணிபுரியும் வியட்நாமியர்களைவிட அதிக ஊதியம் பெற்றுர்கள்.

இதனுல், மனக்கசப்பும், மனக்குறையும் வியட்நாம் கல்விமான்களிடையே ஏற்பட்டது. இதுவே வியட்நாமியர்களின் தேசிய இயக்கத்திற்கு அடிகோலியது. இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் உள்ள சூழ்நிலைபோல வியட்நாமிலும் அறிவுத் திறனுடையவர்களின் தலைமையிலே குடியானவர்களின் சமுதாயம் அரசாங்கத்திற்கெதிராகக் கிளர்ச்சி செய்யத் தயாராயிருந்தது.

ஆகையால், பிரெஞ்சுக் குடியேற்ற ஆட்சி முறையால் வியட்நாமியர்களின் அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம், சமுதாயம் ஆகியவற்றின் அமைப்புத் தகர்த்தெறியப்பட்டது. உயர்படியிலுள்ள வியட்நாமியர்களின் ஆட்சி அமைப்பைப் பிரெஞ்சு அரசாங்கம் இடித்துத் தள்ளியதால், வியட்நாமியர்களின் நிருவாக அமைப்பே சாய்ந்து மறைந்தது. பிரெஞ்சு நிருவாகத்தின் ஓரங்காட்டி வேறுபாடுபடுத்தும் கொடுங்கோலாட்சி முறையினுல் வியட்நாமியர்களுடைய மேன்மையும், உண்மையான மதிப்பும், முயற்சி எடுக்கும் ஆர்வமும் படுகொலை செய்யப்பட்டன. பல புதுத் திட்டங்கள் மூலம் நாட்டினுடைய சூழ்நிலையை மாற்றிய போதும், அத் திட்டங்களைப் பொது மக்கள் பாராட்டவில்லை.

இத் திட்டங்களால் வியட்நாம் குழந்தைகளிடையே உள்ள பசிக்கொடுமை நீக்கப்படவில்லை. சைகானிலிருந்து சீனுவை இணைக்கும் வடக்கு எல்லைவரைப் போடப்பட்டிருந்த மிகப் பெரிய முதலாம் குடியேற்ற நெடுஞ்சாலை (Colonial Highway) மிக நீளமாயிருந்ததால் மக்களால் அதன்மேல் நடந்து செல்ல முடியவில்லை. குடியேற்ற அரசின் திட்டங்கள், பிரெஞ்சுக்காரர்களுக்குத்தாம் நன்மை செய்தன; வியட்நாமியர்களுக்கு அவ்வளவு நன்மை செய்யவில்லை. 90-95 விழுக்காடு நிலச் சீர்திருத்தத் திட்டங்களே வியட்நாம் மக்களுக்குத் தேவையாயிருந்தன. ஆனுல், பிரெஞ்சு அரசாங்கம் இத் திட்டங்களை உருவாக்கிச் செல்வமுள்ள குடியானவர் சமுதாயத்தை உருவாக்கவில்லை; ஆகையால், மனக்குறைவு மனக் கசப்பாய்—மனமுறிவாய்

மாறியது. குடியானவர்களையே ஆதாரமாய்க் கொண்டிருக்கும் புரட்சிக்கு வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகியது.

குடியானவர்கள் ஏழ்மையினால் பாதிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் நடுநிலை வகுப்பினர்கள் அதிகச் செல்வம் சேர்த்தனர். பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே இருந்த இடைவெளி அதிகமாகப் போய்க்கொண்டிருந்தது. நடுத்தர வகுப்பினரிடையே வேறுவிதமான மனக்கசப்பு நிலவியிருந்தது. படித்துப் பட்டம் பெற்ற தங்களுடைய மக்களுக்குப் பிரெஞ்சு அரசாங்கம் உத்தியோகம் கொடுக்கவில்லை என்று வருத்தம் அடைந்தார்கள். ஒரே வேலையை ஒரு பிரெஞ்சுக்காரரும், வியட்நாமியரும் செய்தபோதிலும், வியட்நாமியருக்கு பிரெஞ்சுக்காரரைவிடக் குறைந்த ஊதியம் கொடுக்கப்பட்டது. தங்களுடைய மனக்கசப்பையும், குடியானவர்களின் மனக்குறைகளையும் படித்துப்பட்டம் பெற்ற வகுப்பினரே எடுத்துரைத்தார்கள். வியட்நாம் தேசிய இயக்கம் மலர்ந்தது; மக்களும் அதைப் பேணி வளர்த்தார்கள். தேசியவாதிகளையும், அவர்களுக்கு ஆதரவு தந்த மக்களையும் இணைத்து உருவாக்குவதுதான் இச்சூழ்நிலையில் தேவையாயிருந்தது.

பிரெஞ்சு ஆட்சிமுறை, கி.பி. 1920—1941

கி.பி. 1920ஆம் ஆண்டிலே பன்னிரண்டில் ஒரு மாணவனும், நூற்றில் ஒரு மாணவியும்தான் தொடக்கப்பள்ளியிலே படித்தார்கள். நடுநிலைக் கல்வி வசதிகள் அதிகமாக இல்லை. உயர்ந்த நடுநிலைப்பள்ளி ஹநாயிலிருந்தது. கி.பி. 1925ஆம் ஆண்டில் இப்பள்ளியில் 800 மாணவ, மாணவியர் படித்துக் கொண்டிருந்தார்கள். ஆளுநர் சாரௌட் (Saraut) கி.பி 1917ஆம் ஆண்டில் ஹநாய்ப் பல்கலைக் கழகத்தை நிறுவினார். பிரெஞ்சுமொழி தெரிந்தவர்களே இப்பல்கலைக் கழகத்தில் படிக்க அனுமதிக்கப்பட்டார்கள். பன்னிரண்டு தொழிற்சாலைச் சார்ந்த பள்ளிக்கூடங்கள் இப்பல்கலைக் கழகத்திலிருந்தன. கி.பி. 1923ஆம் ஆண்டில் இப் பன்னிரண்டு தொழிற்சாலைகளைச் சார்ந்த பள்ளிக்கூடங்களில் 11,000 மாணவர்கள் கல்வி பயின்று கொண்டிருந்தார்கள். பிரெஞ்சுப் பள்ளிக்கூடங்களில் இருந்த ஆசிரியர்களில் பெரும்பான்மையோர் பிரெஞ்சுக்காரர்களே.

பிரெஞ்சு ஆட்சியின் கோட்பாடு செல்வம்தான். மூலதனம் அதிகரிக்க அதிகரிக்கப் பிரெஞ்சு அரசாங்கத்தின் இக் கோட்பாடு விடாப்பிடிக் கோட்பாடாய் மாறியது. வழிவழி மரபு அரசாங்க அமைப்புத் தொடர்ந்து நீடித்தபோதிலும் பிரெஞ்சு அரசாங்கம் நேரிடை

யாக ஆட்சிபுரிந்தது. கொச்சின்—சீனுவிலுள்ள அரசாங்க உத்தியோகங்கள் பிரெஞ்சுப் படைத்துறையைச் சாராத அரசு அலுவலர்களின் தனி உரிமையாயிருந்தது. வியட்நாமின் பொருளாதாரம் பிரெஞ்சு முதலாளிகளின் வயத்திலும், குடியேறிய சீனர்களின் வயத்திலுமிருந்தது. முதல் உலகப் பெரும் போரின்போது இந்தோ-சீனர்களுக்கு அரசாங்க அலுவலகத்தில் அதிக வாய்ப்புக்கொடுக்கப்படும் எனப் பிரெஞ்சு அரசாங்கம் அறிவித்தது; பின்பு இவ் வுறுதிமொழியைப் புறக்கணித்தது. கி.பி. 1924ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரெஞ்சுக்காரர்கள் வியட்நாமில் அதிக மூலதனம் போட்டதால் வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்தது. அரசியலில் குழப்பம் ஏற்படக்கூடாது என்ற நோக்கத்துடன் உயர்நிலைக் கல்வி வாய்ப்பு மிகச் சிலருக்கே கொடுக்கப்பட்டது. நிதிநிலைக்குரிய சேம ஒதுக்கீடு அதிகமாயிருந்ததால் பிரெஞ்சுக் குடியேற்ற வணிகர்கள் உலகப் பொருளாதாரச் சூழ்நிலை இழிநிலையடைந்த காலத்தில்கூடப் பாதிக்கப்படவில்லை. கி.பி. 1935ஆம் ஆண்டுக்குப் பிறகு பொருள் உற்பத்தி நிலையில் வளர்ச்சியிருந்தது. பிரெஞ்சு ஆட்சியின்கீழ் இந்தோ-சீன வரலாற்றிலே பார்க்காத அளவு டொங்கிங்கிலிருந்தும் அன்னுமிலிருந்தும் வியட்நாமியர்கள் நாடு பெயர்ந்து கொச்சின்-சீனுவிற்கும், கம்போடியாவிற்கும் சென்று கொண்டிருந்தார்கள். கம்யூனிஸ்ட் தலைவர்களின்கீழ்த் தேசிய இயக்கமும் வலுத்தது.

திட்ட வளர்ச்சிக்குப் பணம்தான் உயிர்நாடி

இந்தோ-சீனுவில் முதன் முதலாகப் பிரெஞ்சு ஆட்சி தொடங்கிய சமயத்தில் பிரெஞ்சுக் கப்பற்படையின் மதிப்பையும், தன்மானத்தையும் பாதுகாப்பதே பிரெஞ்சு அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது. மேலும், வியட்நாமில் பிரெஞ்சுப் பண்பையும், நாகரிகத்தையும் பரப்பவேண்டும் என்பதே அவர்களுடைய குறிக்கோள். ஆனால், கி.பி. 1900ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தோ-சீனுவைப் பயன்படுத்திப் பணம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் வளரத் தொடங்கியது. இந்தோ-சீனுவின் பற்றுக் குறைக்காக வட்டி செலுத்தும் பிரெஞ்சு மக்கள் நாணய விவகாரங்களில் இந்தோ-சீன தன் கால்களிலேயே நிற்கவேண்டும் என வலியுறுத்தத் தொடங்கினர்கள். குடியேற்ற நாடுகளின் வாணிபத் தளங்கள் தங்களுடைய தனி உரிமையில் இருக்க வேண்டும் எனப் பிரெஞ்சு ஆக்கத் தொழில் அதிபர்கள் விரும்பினர்கள். இந்தோசீனுவில் அயல்நாட்டு வாணிபர்களுக்குள் போட்டி ஏற்படக்கூடாது என்ற நோக்கத்துடன் பிரெஞ்சு மூலதனத்தைத் தவிர மற்ற அயல்நாட்டு மூலதனங்கள் நுழையப் பிரெஞ்சு அரசாங்கம் அனுமதி கொடுக்கவில்லை.

இந்தோ-சீனவில் நுழைந்த சுங்கவரியில்லாத பிரெஞ்சுப் பொருள்களோடு இந்தோ-சீனர்களின் தொழில்துறை போட்டியிட முடியவில்லை. இதன் விளைவாகக் கூடை, பானை, பருத்தி, பட்டு நெசவு, மரவேலை, பசைமாப் பொருள் முதலியன செய்பவர் களும், எண்ணெய் பிழிந்தெடுத்துப் பிழைப்பவர்களும் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். பிரெஞ்சு வணிகர்களின் தனி உரிமைகளை எதிர்க்க வேண்டிய திறனும், மூலதனமும் வியட்நாம் வணிகர் களிடம் இல்லை. ஆகையால் நிலக்கரி, இரும்பு மற்றும் பல தாதுப் பொருள்கள், ஆடை உற்பத்தி செய்யும் சாதனங்களும், அதிக அளவு தொழிலாளிகளும் இந்தோ-சீனவிலிருந்த போதிலும் அங் குத் தொழில் துறைகள் முன்னேறி வளர்ச்சியடையவில்லை. அரிசி, சர்க்கரை, புகையிலை, தேயிலை போன்ற பொருள்கள்தாம் பதனஞ் செய்யப்பட்டன. வட டொங்கிங்கில் மிக அதிக அளவில் வெள் ளீயம், துத்தநாகம், நிலக்கரி முதலியன கிடைத்தன; தவிர டங்ஸ்டன், ஈயம், காரீயம், நீலாஞ்சனக்கல், மாங்கனீசம் முதலி யவை கிடைத்தன. டொங்கிங்கில் கிடைத்த நிலக்கரியில் மூன்றில் இரண்டு பங்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. சிமென்ட். செங்கல், ஓடு முதலியவை உள்நாட்டுத் தேவையைத்தான் நிறைவு செய்தன. கி.பி. 1904ஆம் ஆண்டில் சுரங்க வேலை தொடங்கியது; ஆனல், முதல் உலகப் போரினல் இவ் வேலை நிறுத்தப்பட்டது; போருக்குப்பிறகு சுரங்க வேலை தொடங்கிய போதிலும் இது அதிகவளர்ச்சியடையவில்லை. சுரங்கத் தொழிலாளர் களைத் தவிர மற்றத் தொழில் துறையில் கி.பி. 1930ஆம் ஆண்டில் 86,000 தொழிலாளர்கள்தாம் இருந்தார்கள்.

கி.பி. 1900ஆம் ஆண்டுக்குப் பிறகு வாணிபத்தில் வளர்ச்சி யிருந்தது. இறக்குமதியைவிட ஏற்றுமதியே படிப்படியாக அதி கரித்து வந்தது. ஏற்றுமதியாகும் பொருள்களிலே மிக முக்கிய மான பொருள் கொச்சின்-சீனவில் விளைந்த அரிசியாகும். கி.பி. 1937ஆம் ஆண்டில் இது 2 மில்லியன் டன்கள் ஆக உயர்ந்தது. ஆனல் பர்மா, சியாம் ஆகிய நாடுகளில் விளைந்த அரிசியை விடக் கொச்சின்-சீன அரிசி தரத்தில் குறைந்ததுதான். இதன் ஏற்றுமதியிலிருந்து வரும் வருமானத்தில் பாதி வணிகர்களுக்கும், சுமைக் கூலிக்காரர்களுக்கும் சென்றது; குடியானவர்களுக்கு 26 விழுக்காடு வருமானம்தான் கிடைத்தது. ஏற்றுமதியாகும் பொருள்களில் பாதிக்குமேல் ஆக்கத் தொழில் பொருள்கள். உலோ கங்கள், இயந்திர சாதனங்கள், மின்சார சாமான்கள், வாகனங்கள், காகிதங்கள், மதுபானங்கள்போன்ற ஆக்கத் தொழில் பொருள்கள் பிரெஞ்சுச் சமூகத்திற்குத் தேவையாயிருந்தன. கி.பி. 1921ஆம் ஆண்டுக்குப் பிறகு இறக்குமதியாகும் பொருள்களின்மேல் விதித்த

சுங்கவரி மிக அதிகமாயிருந்தது. குறைவான ஊதியத்திற்குக் கூலி யாள்கள் கிடைத்ததாலும், விருப்பப்படியான வாணிபக் கட்டுப் பாடு இருந்ததாலும் பிரெஞ்சுக் குடியேற்ற ஆட்சியின் கொள்கைகள் வெற்றியடைந்தன எனக் கூறலாம்.

ஆனால் இவ்வகையான கொள்கைகளும், திட்டங்களும் இந்தோ-சீனு மக்களுக்கு நன்மை விளைவிக்கவில்லை. ஆசியாவி லிருந்து வந்த எல்லா இறக்குமதிகளின் மேலும் கடுமையான வரிகள் விதிக்கப்பட்டன. ஆனால், பிரெஞ்சு நாட்டில் வியட்நா மியப் பொருள்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்படவில்லை. இந்தோ-சீன மத்திய அரசாங்கத்திற்கு நுகர்வோர் வாங்கும் பொருள்களின் மேல் விதித்த சுங்கவரி மூலம்தான் முக்கியமாக வருமானம் வந்தது.

குடியேறிய அயல் நாட்டினரும் இந்தோ-சீனுவும்

கி.பி. 1935ஆம் ஆண்டில் இந்தோ-சீனுவிலிருந்த 20,500 பிரெஞ்சுப் பணியாளர்களில் 72 விழுக்காடினர் அரசாங்க ஓய்வுச் சம்பளம் வாங்குபவர்கள். இவர்களில் 53 விழுக்காட்டினர் படைத் துறை அல்லது கப்பல்படைத் துறையைச் சார்ந்தவர்கள்; 19 விழுக்காட்டினர் படைத்துறை சாராத அரசாங்க அலுவலர்களா யிருந்தவர்கள். இந்தோ-சீன மக்களில் 2,000 பேர்கள்தாம் பிரெஞ்சுக் குடிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். வாணிபம், வங்கி, காப்புறுதி அலுவலகங்கள், போக்குவரத்து அலுவலகங்கள் ஆகியவற்றில் ஏறத்தாழ 2,200 ஐரோப்பியர்கள் பணிபுரிந் தார்கள்; 629 சமயப்பரப்பாளர்களிருந்தார்கள். இந்தோனேசியா விலிருந்த டச்சு மக்களுடன் ஒப்பிட்டால் அதில் ஒரு பாதி பிரெஞ் சுக்குடிகள்தாம் இந்தோ-சீனுவிலிருந்தார்கள். ஆனால், 20 விழுக் காடு டச்சுக்காரர்கள் அரசாங்க அலுவலர்களாயிருந்தார்கள்; 70 விழுக்காடு பிரெஞ்சுக்காரர்கள் அரசாங்க அலுவலர்களா யிருந்தார்கள். இந்தோ-சீனுவில் விரைவும் சுறுசுறுப்பும் குறைந்த வாழ்க்கையை ஐரோப்பியர்கள் நடத்தி வந்தார்கள்; அவர் களில் 60 விழுக்காட்டினர் 5 ஆண்டு ஒப்பந்தத்துடன் வாழ்ந் தார்கள்; 26 விழுக்காட்டினர் 15 ஆண்டுகளுக்குமேல் இந்தோ-சீனுவில் வாழ்ந்து வந்தார்கள்.

பிரெஞ்சுக் குடியேற்றங்களுள் இந்தோ-சீனுவிலே பணிபுரிந்த பிரெஞ்சுக்காரர்களுக்கே அதிக ஊதியம் கிடைத்தது. இந்தோ-சீனுவில் ஐரோப்பியர்கள் நடத்திய வாழ்க்கைக்கு அதிகம் செல வாகியது. அவர்களுக்குக் கிடைத்த உதவித்தொகை, ஊதியத்

தைவிட அதிகமாயிருந்தது. அவர்களுக்குப் பிரெஞ்சு நாட்டு வாழ்க்கைநிலைப் பாணியில் வீடுகளும், வீடுகளிலுள்ள தட்டு முட்டுச் சாமான்களும் கொடுக்கப்பட்டன. ஹநாய், சைகானி லுள்ள பிரெஞ்சு நீதி மன்றங்களில்தாம் பிரெஞ்சுக் குடிகளை வழக்கு விசாரணை செய்யலாம். உள்நாட்டுக்குடிகள் வெளிப்படை யாக அமைதியும், அடக்கமும் கொண்டிருந்தார்கள்.

பிரெஞ்சு ஆட்சியின் மூலம் இந்தோ-சீனுவில் மிகுபயன் அடைந்த மற்றொரு அயல்நாட்டினர் சீனர்கள்; அவர்களில் ஐந்தில் நான்கு பங்கினர் கொச்சின்-சீனுவிலே வாழ்ந்து வந்தார்கள். மற்றத் தென்கிழக்காசிய நாடுகளில் செய்துகொண்டிருந்த பணி களையே இந்தோசீனு விலும் அவர்கள் செய்துகொண்டிருந் தார்கள். அவர்கள் உள்நாட்டு மொழிகளைத் தயங்காமல் கற்றுக் கொண்டார்கள்; எளிமையாக வாழ்ந்தார்கள்; சுறுசுறுப்பாகவும் கடுமையாகவும் உழைத்தார்கள்; நிலைமைக்குத் தக்கபடித் தங்களை மாற்றியமைத்துக்கொள்ளும் இயல்புடையவர்கள்; இன்முகச் செவ் வியியல்பு படைத்தவர்கள். மூன்று தலைமுறையாக வாழ்ந்து வந்த சீனர்கள் இந்தோ-சீன மக்களுடன் ஒன்றுபட்டு இணைந் தார்கள். வாணிபத்தில் தனி உரிமை பெற்றிருந்ததாலும், தகாவட்டி முறையைப் பயன்படுத்தியதாலும் அவர்களை இந்தோ-சீன மக்கள் வெறுத்தார்கள்; எதிர்த்தார்கள். சீனர்கள் இரக சியச் சங்கங்கள் மூலம் தங்கள் செயல்களைச் செய்தார்கள்; அரசாங்கக் கட்டுப்பாடுகளினின்றும் சூழ்ச்சி செய்து தப்புவதில் வல்லவர்கள் அவர்கள். கொச்சின்-சீனுவிலுள்ள அரிசி கொப்பரை, மீன் முதலியவற்றின் வாணிபம் இவர்கள் வயமே இருந்தது. நதிப் போக்குவரத்தில் அவர்களை மிஞ்சியவர்கள் யாரும் இல்லை. கம்போ டியாவிலும், லாவோஸிலும் குடியேறியிருந்தார்கள். அங்கும் வாணிபமும், தகாவட்டி அமைப்புகளும் இவர்கள் வயம் இருந்தன. ஆனுல், டொங்கிங்கில் அவர்களுக்கு அதிக வாய்ப்புக்கிடைக் கவில்லை. அங்கு அவர்கள் வேண்டாதவர்களாயிருந்தார்கள். சீனப் படையெடுப்பை எதிர்த்தவர்கள்தாம் இந்தோ-சீனுவின் தேசியத் தலைவர்களாக இந்தோ-சீன வரலாற்றிலே திகழ்ந்தார்கள்; டொங்கிங் சீன எல்லையிலிருந்தது. கி.பி. 1931ஆம் ஆண்டில் 420,000 சீனர்கள் இந்தோ-சீனுவில் குடியேறியிருந்தார்கள். ஆனுல், பல சீனர்கள் இந்தோ-சீனுவில் வேரூன்றி வாழவில்லை; உலகப் பொருளாதாரச் சூழ்நிலை வீழ்ச்சியடைந்தபோது அவர் களில் பலர் சீனுவிற்குத் திரும்பினுர்கள். ஆனுல், வேறு சீனர்கள் கி.பி. 1930ஆம் ஆண்டின் இடைப் பகுதியிலே இந்தோ-சீனுவிற்கு

வரத் தொடங்கினுர்கள். ஆகையால் அவர்களின் மக்கள் தொகை அச்சமயத்தில் 3,26,000 ஆக இருந்தது.

பிரெஞ்சு ஆட்சியின் அடிப்படைக் கூறுகள்

பிரெஞ்சு இந்தோ-சீனக் கூட்டாட்சி முறை மையத்தை உட்கொண்ட ஆட்சி முறையாய் அமைக்கப்பட்டிருந்தது. ஆனுல் இந்தோ-சீனக் கூட்டாட்சிப் பகுதிகளுக்குள் முக்கிய வேறுபாடு களிருந்தன. ஊழல் நிறைந்த மேண்டரின் ஆட்சி முறையை ஒழிக்காததால் டொங்கிங்கில் கிளர்ச்சியேற்பட்டது. பட்டணங் களின் வரவுசெலவுத் திட்டங்கள் தலைமை ஆளுநரின் அதிகாரத் தின்கீழிருந்தன. அரசாங்கம் கடன் வாங்குவதற்கும் தலைமை ஆளுநரின் அமைதி பெறவேண்டும். பொருளாதாரக் கொள்கை களும் ஒரேசீராக இருக்கவில்லை. டொங்கிங்கில் நில உடைமை மாற்றும் கொள்கை (Land Alienation) செயல்படுத்தப்படவே யில்லை. ஆனுல், ஐரோப்பியப் பண்ணையாளர்களிருந்த கொச்சின்-சீனுவில் 75 விழுக்காடு நிலவுடைமை மாற்றம் ஏற்பட்டது.

கம்போடியா அரசர் துணைக்காப்பரசின் ஆளுநர் தலைவர் அதி காரத்தை ஒப்புக்கொண்டார். அரச அவையிலுள்ள அலுவலர் களும், நாம்பென்னிலிருந்த அமைச்சர்களும் தேச சுதந்திரமும் அரசரின் அதிகாரமும் நடைமுறையிலிருப்பனபோல் நினைத்துப் பொய்த் தோற்றத்துடன் வாழ்ந்து வந்தார்கள். கம்போடியாவி லிருந்த பண்டைய உயர்குடி மக்களும் தலைமுறை தலைமுறை யாகப் பணிபுரிந்த குடும்பத்தினர்களும் பதவியிலிருந்து நீக்கப் பட்டார்கள். பதிலாக, படிநிலையிலுள்ள படைத்துறையைச் சாராத அரசாங்க அலுவலர்கள் பதவியேற்றுர்கள்.

கி.பி. 1913ஆம் ஆண்டிலிருந்த மத்திய ஆலோசனை அவை யின் (Central Consultative Assembly) உறுப்பினர்களாகத் துணைக்காப்பரசின் மன்ற உறுப்பினர்களும், உயர் அதிகாரிகளும் இருந்தார்கள். இச்சபை அரசாங்கக் கொள்கையைப்பற்றி விவா தித்து மக்களுக்கு அறிவிக்கலாம். ஆனுல், இச்சபையிலே முக் கியமான அரசியல் விவகாரங்களைப்பற்றி விவாதிக்கக்கூடாது. நிதியமைப்புகளையும், நாட்டின் வருமானத்திற்குரிய அமைப்பு களையும் பிரெஞ்சு அதிகாரிகள்தாம் நிருவகிக்கலாம். ஆகையால், நிருவாகச் சுயாட்சியோ பிரெஞ்சு நேரடியில்லா ஆட்சி முறையோ கம்போடியாவில் இல்லை. சட்டத்தையும் நாட்டின் அமைதி யையும் துணைக்காப்பரசின் ஆளுநர்கள் பாதுகாத்தார்கள்; உள் நாட்டு அதிகாரிகளையும் அவர்களே மேற்பார்வையிட்டார்கள்.

பிரெஞ்சு ஆட்சியின் அனுமதியில்லாமல் அரசர் கடன் வாங்கக் கூடாது; தம் கீழிருந்த நில உரிமைகளையும் அரசர் விட்டுக் கொடுத்தார்.

லாவோஸ் நாடும் பிரெஞ்சு அதிகாரிகளின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தது. உள்ளூர்த் தலைவர்கள் மூலம் பலமுறை இவர்கள் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தினர்கள். வியன்சியன், ஜியங் கோவாங் (Xieng Khouang), கீழை லாவோஸில் இருந்த மூன்று அரசகுலங்களை மீண்டெழுப்பப் பிரெஞ்சு அரசாங்கம் முயற்சி செய்யவில்லை. அவ்வரச பரம்பரையின் முன்னாள் நாடுகள் எட்டுப் புதிய மாகாணங்களாக அமைக்கப்பட்டன. ஓர் இளவரசர் பாஸாக் கின் (Bassac) ஆளுநராக நியமிக்கப்பட்டார். மேலைகோங் பள்ளத் தாக்கிலிருந்த லுவாங் பிரபாங் அரசருக்கே அரசப் பட்டமும், அரசரின் சலுகைகளும், பாதுகாப்பும் கொடுக்கப்பட்டன. லுவாங் பிரபாங்கின் காவல்துறைபற்றிய அதிகாரங்களும், நாட்டின் வருமானத்திற்குரிய அதிகாரங்களும், கொள்கைகளும், வியன்ஸி யனிலிருந்த துணைக்காப்பரசின் ஆளுநர்களின் தலைவர் கீழிருந் தன. யூனன் எல்லையைத் தொட்டுக்கொண்டிருந்த உட்பகுதிகள் பிரெஞ்சு இராணுவ ஆட்சியின் கீழிருந்தன. லாவோஸிலுள்ள எட்டு மாகாணங்களில் நிதி, கல்வி ஆகிய துறைகளில் பிரெஞ் சின் செல்வாக்கு ஓங்கியிருந்தது; பின் சுகாதார வசதிகளும் அதிகரித்தன. பொதுவாக மரபு வழக்கங்களுக்கு மதிப்புக் காட்டப் பட்டது. அமைதியை நிலைநாட்டவும், வாணிபம் செய்யவும் உள்நாட்டு உயர்குடி மக்கள், குலமரபு சார்ந்த தலைவர்கள் ஆகிய வர்களின் ஒத்துழைப்பைப் பிரெஞ்சு அரசாங்கம் நாடியது.

லாவோஸ் மக்களால் மிகச் சில இன்னல்களே பிரெஞ்சு ஆட்சிக்கு ஏற்பட்டன. அடிமை முறையை ஒழித்ததால் கி.பி. 1900ஆம் ஆண்டிலிருந்து 1907ஆம் ஆண்டுவரை காகுலமரபு குழுக்கள் (Kha tribesmen) கலகம் செய்தனர். பொதுவாக, வியட்நாம் மக்களை வன்முறையில் கடத்திச் சென்று மலைமேற் பகுதிகளில் கா மக்கள் விற்றனர். இனம், வரலாறு ஆகியவற்றில் மாறுபாடுகளிருந்ததால், லாவோஸ் தனித்திருந்தது; வியட் நாம், கம்போடியாவிலிருந்து பிரிக்கப்பட்டிருந்தது. பொருளா தாரம், நிருவாகச் செயல் ஆகிவற்றிற்காக லாவோஸை அன்னு முடன் ஒன்று சேர்க்கப் பிரெஞ்சு அரசாங்கம் விரும்பியது; இந்த எண்ணத்தை லாவோஸ் மக்கள் கடுமையாக எதிர்த்ததால் பிரெஞ்சு அரசாங்கம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவில்லை. வியட்நாம் மக்கள் லாவோஸில் கூலிவேலைகளே செய்தபோ திலும், லாவோஸ் மக்களுக்கு வியட்நாமியர்களின்மேல் நம்பிக்கை

யில்லாமல் இருந்தது. வியட்நாம் மக்கள் தகாத துணிவு வாய்ந்தவர்களென்றும், தன்மூப்புடையவர்களென்றும், சுறுசுறுப்புடனும் வலிமையுடனும் செயலாற்றுகின்றவர்களென்றும், ஆனால், கம்போடியர்கள் வலுவிழந்தவர்களென்றும், முற்றிலும் களைத்துப்போனவர்களென்றும், விறுவிறுப்பில்லாதவர்களென்றும் லாவோஸ் மக்கள் ஏளனம் செய்தார்கள்.

போக்குவரத்து வசதிகள் மூலம் தங்களுடைய இந்தோ-சீனப் பேரரசை ஒன்றுபடுத்த அரசாங்கம் விரும்பியது. சைகானுக்கும் ஹநாயிக்கும் இடையே 1000 மைல் நீளமுள்ள புகைவண்டிப் பாதை போடப்பட்டது. இது செவ்வாறு மேகாங் ஆற்றுக்கழி முகங்களின் வழியாகச் சென்றது; கி.பி. 1913ஆம் ஆண்டில் இது கட்டி முடிக்கப்பட்டது. ஹநாயிக்கும், சீனாவிலுள்ள யூனான் பூவிற்கும் புகைவண்டிப் போக்குவரத்திலிருந்ததால் தென் சீனாவுடன் வாணிபம் வளர்ந்தது. மொத்தம் 3,000 கிலோ மீட்டர்கள் புகை வண்டிப் பாதை போடப்பட்டிருந்தது. ஆனால், புகைவண்டிப் போக்குவரத்தினால் அரசாங்கத்திற்குக் குறைந்த பயன்தான் ஏற்பட்டது.

இணைவரிசையான மலையடுக்குத் தொடரின் ஒரு வரிசை வழியாகக் கரையோரத்திலிருந்து மேகாங் பள்ளத்தாக்குவரை நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டன; இச் சாலை வடலாவோஸ் வரை வளர்ந்து சென்றது. மொத்தம் 36,000 கிலோ மீட்டர் அளவு சாலைகள் இருந்தன. செவ்வாற்றுப் பள்ளத்தாக்கில் அணை கரைகள் கட்டப்பட்டதால் நதிப்போக்குவரத்திற்கும், வடிகால் செல்வதற்கும் வசதி பெருகியது. அன்னும் கரைக்கு இணையாக ஓடிக் கொண்டிருந்த பண்டைக்காலக் கால்வாய் பயனில்லாமல் போயிற்று. சைகான் ஓர் ஐரோப்பிய நகரம் போல் விளங்கியது. தள வரிசையிட்ட சாலைகளும், ஓரநடைப் பாதைச் சிற்றுண்டிச் சாலைகளும், நாகரிகமான தாற்காலிக முறையில் கட்டப்பட்டிருந்த இல்லங்களும், அலுவலகங்களும் சைகானை அணி செய்தன. சைகானுக்குப் பின்னேக்கி ஐரோப்பியப் பண்ணைகளுக்குச் செல்ல இந் நெடுஞ்சாலைகள் பயன்படுத்தப்பட்டன. தண்ணீர்ப் போக்கு வரத்து வசதிகளிலிருந்ததால் மேகாங் கழிமுகத்திற்கும், கம்போடியாவின் தலைநகரமான நாம்பென்னிற்கும் எளிதில் செல்லமுடிந்தது. நாம்பென்னும் பிரெஞ்சுக்காரர்களால் கட்டப்பட்ட நகரம்; கம்போடியாவின் உள்நாட்டுப் புகைவண்டிப் போக்குவரத்தும், சாலைகளும் பொதுவாகப் பாங்காக்கிற்குச் செல்லும் திக்கிலே அமைக்கப்பட்டிருந்தன.

போருக்குப்பின் செய்த சீர்திருத்தங்கள்

முதல் உலகப் போரின் போது 50,000 வியட்நாமியத் தொழிலாளர்களும், 50,000 சுழல் துப்பாக்கி வீரர்களும் பங்கு கொண்டார்கள். பல மில்லியன் பிரெஞ்சு நாணயச் செலாவணி அலகு நாணயம் கடனாகக் கொடுக்கப்பட்டது. இத்தகைய ஒத்துழைப்பினால் உணர்ச்சியடைந்த தலைமை ஆளுநர் சாரெளட் கி.பி. 1917ஆம் ஆண்டில் வியட்நாம் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்றும், நாகரிகத்தைப் பரப்பவேண்டுமென்றும் கூறினார். குடியேற்றச் சட்டசபைகளில் வியட்நாமியர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுமென்றும், அதிக வியட்நாமியர்களுக்குப் வாக்களிக்கும் உரிமைகள் கொடுக்கப்படுமென்றும், கல்வி வசதிகள் அதிகரிக்கப்படுமென்றும் பிரெஞ்சு நாட்டிற்குச் சென்று குடியேற்ற நாடுகளின் அமைச்சராய்ப் பதவியேற்கும் முன் கி.பி. 1919ஆம் ஆண்டு ஏப்ரலில் இவர் வாக்குறுதியளித்தார். ஆனால் இவர் பாரிஸுக்குச் சென்ற பிறகு தம் வாக்கை நிறைவேற்றவில்லை. வியட்நாமில் மக்களின் கிளர்ச்சிகள் அதிகரிக்கத் தொடங்கின.

கி.பி. 1905ஆம் ஆண்டிலிருந்து நடுநிலை வகுப்பினர்களும், மாணவர்களும் தங்கள் பற்றுதியின்மையைத் தெரிவிக்கத் தொடங்கினார்கள். சீனாவில் மன்சு மன்னர்களை எதிர்த்த காங்யூவைச் சன்யாட்சென் போன்ற தலைவர்களுடன் வியட்நாம் தேசியவாதிகள் தொடர்பு கொண்டிருந்தார்கள். கி.பி. 1910 ஆம் ஆண்டுக்குள் வியட்நாமில் இரகசிய அரசியல் மன்றங்கள் தோன்றத் தொடங்கின. கி.பி. 1912, 1913ஆம் ஆண்டுகளில் வியட்நாம் குடியரசு மீட்டியற் கழகம் ஒன்று நிறுவப்பட்டது. நடுநிலை வகுப்பினருக்குக் குடியேற்ற மன்றங்களில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்றும், வாணிபத் தடைகளைக் குறைக்க வேண்டுமென்றும் ஒரு மிதவாதி அரசியல் அமைப்புக் கட்சி கி.பி. 1920ஆம் ஆண்டின் தொடக்கத்திலே கேட்கத் தொடங்கியது.

மிகக் குறைந்த அளவிலே பிரெஞ்சு அரசாங்கம் சீர்திருத்தம் செய்ய முன் வந்தது. கிராமங்களிலுள்ள உயர்குடி மகன் மன்றங்களை (Council of Notables) நீக்கித் தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாக மன்றங்களைத் தலைமை ஆளுநர் லாங் (1919-1923) அமைத்தார். செலவு பற்றிய விவகாரங்களை இம் மன்றங்களே கவனிக்கலாம். கி.பி. 1925ஆம் ஆண்டுக்குள் இப் புதிய மன்றங்கள் 2000 கிராமங்களில் அமைக்கப்பட்டன. ஐரோப்பிய அரசியல் அதிகாரிகள் இரண்டு மடங்கு ஆனார்கள்; அவர்களுடைய ஊதியமும் உதவிப்பணமும் மிகுந்தன. கி.பி. 1922ஆம் ஆண்டில் குடியேற்ற மன்றங்களிலிருந்த வியட்நாமிய உறுப்பினர்களின்

எண்ணிக்கை பெருகியது. வரிகட்டுபவர்களுக்கு ஓட்டுரிமை கொடுக்கப்பட்டது. இதற்கு முன்பு சிறப்புடையவர் மன்றங்களிலிருந்து தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளின் உறுப்பினர்களும் கல்லூரியின் உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். நிருவாக மன்றங்களில் பத்து வியட்நாமியர் உறுப்பினர்களும், 12 முதல் 14 பிரெஞ்சு உறுப்பினர்களும் இருந்தார்கள்; ஆலோசனை கொடுப்பதே இம் மன்றத்தின் வேலை. புதிய திட்டத்தின்படி 21,000 பேர்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. கூட்டாட்சிக் கொள்கைகளைப்பற்றித் தலைமை ஆளுநர்தாம் தீர்மானங்கள் எடுக்கலாம். பொருளாதாரம், நாட்டின் வருமானம், நாட்டின் பாதுகாப்புப் பற்றிய அதிகாரங்கள் முதலியவை வியட்நாமில் ஆட்சி புரிந்த பிரெஞ்சு அதிகாரிகளிடமே இருந்தன. ஆனால், இச் சீர்திருத்தங்கள் வியட்நாமியர்களுக்கு மன நிறைவு அளிக்கவில்லை. ஆகையால், வியட்நாமியர்கள் முக்கியமாக அன்னமிலும் டொங்கிங்கிலும் கிளர்ச்சி செய்தார்கள்.

தலைமை ஆளுநர் லாங்கிற்குப் பிறகு பதவியிலமர்ந்த பிரெஞ்சு அதிகாரிகள் அதிகமான சீர்திருத்தங்களைக் கொண்டுவரவில்லை. கி.பி. 1924ஆம் ஆண்டில் இடதுசாரி அரசியல் வகுப்பினர்கள் பிரெஞ்சு நாட்டில் பதவிக்கு வந்தார்கள். வியட்நாமில் குடியேறியிருந்த பிரெஞ்சுக்காரர்கள் எதிர்த்ததால் அவர்களால் வியட்நாமில் சீர்திருத்தங்கள் செய்யவியலவில்லை. கி.பி. 1928ஆம் ஆண்டில் தலைமை ஆளுநர் பாஸ்குயிர் (Pasquier) பதவியேற்றார். ஒரு முதன்மை வாய்ந்த பொருளாதார, நீதிமன்றத்தை இவர் கொச்சின்-சீனவில் அமைத்தார். வருவாய், வாணிபம் ஆகியவற்றைச் சார்ந்த வகுப்பினர்களிலிருந்து 23 வியட்நாமிய உறுப்பினர்களும், 28 பிரெஞ்சு உறுப்பினர்களும் இம் மன்றத்தின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கடன் வாங்குவதைப் பற்றியும், நேரடியில்லாத வரிகளைப் பற்றியும் இம் மன்றம் தீர்மானங்கள் எடுக்கலாம்.

வியட்நாம் மக்கள் தங்கள் பசிக்கொடுமையைத் தீர்ப்பதைப் பற்றி முக்கியத்துவம் கொடுத்ததால் பிரெஞ்சு அரசாங்கம் குடியாட்சி உரிமைகளைப் புறக்கணித்தது. வியட்நாமில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியில் தங்களுக்குப் பங்கு வேண்டும் என்றுதான் வியட்நாமியர்கள் நினைத்தார்கள். ஆகையால், அரசியல் பற்றிய சீர்திருத்தங்களுக்காக அவர்கள் கிளர்ச்சி செய்யவில்லை; தங்களுக்குக் கல்வித் துறையில் அதிக வாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்றுதான் அவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். கி.பி. 1923ஆம் ஆண்டில் வியட்நாமிலிருந்து 11 தொழில்துறைப் பள்ளிக்கூடங்களில்

1091 மாணவர்கள் தாம் படித்துக் கொண்டிருந்தார்கள்; பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தவர்களும் சிலரே. வியட்நாமின் பொருளாதார வளர்ச்சியில் கூலிவேலை செய்யும் வாய்ப்புதான் வியட்நாமியர்களுக்குக் கிடைத்தது.

கி.பி. 1920ஆம் ஆண்டுக்குப்பின் பொருளாதார வளர்ச்சி

பிரெஞ்சுக்காரர்கள் அதிக முதலீடு செய்ததால் கி.பி. 1920-1940ஆம் ஆண்டுக்கு இடையே வியட்நாமில் அதிகப் பொருளாதார வளர்ச்சியேற்பட்டது. கி.பி. 1914ஆம் ஆண்டுக்கு முன் பிரெஞ்சுக் காரர்கள் 100 மில்லியன் டாலர்கள் வியட்நாமில் முதலீடு செய் திருந்தனர்; இதில் பாதிக்குமேல் சுரங்க வேலைகளிலும், தொழில் துறையிலும் போடப்பட்டிருந்தது; எஞ்சிய மூலதனம் போக்குவரத் திலும், மின் ஆற்றலிலும் (Electric Power), பண்ணைகளிலும், பிற துறைகளிலும் போடப்பட்டிருந்தது.

கி.பி. 1924ஆம் ஆண்டிலிருந்து 1930ஆம் ஆண்டுவரை 29 மில்லியன் பிரான்குகள் (Franc) இந்தோ-சீனாவில் மூலதனமாகப் போடப்பட்டது. இரப்பர்த் தோட்டங்களில் 700 பத்து இலட்சங் களும் (மில்லியன்கள்), சுரங்கவேலைகளில் 654 பத்து இலட்சங் களும், தொழில் துறையில் 606 பத்து இலட்சங்களும், தேயிலை, காபி, பருத்தி, கோகோ முதலியவற்றின் பண்ணைகளில் 500 பத்து லட்சங்களும் மூலதனமாகப் போடப்பட்டன. இந்தோ-சீனாவி லுள்ள வங்கிகளில் 750 பத்து இலட்சம் பிரான்குகள் இருந்தன. இதனால் வங்கிகள் அதிகக் கடன்கள் கொடுக்க முன்வந்தன. சீன, இந்திய வட்டித் தொழிலாளர்களுக்கும் வங்கிகள் கடன் கொடுத்தன. ஆனால் மூலதனமும், தொழில் நுட்பமும் இந்தோ-சீனர்களிடம் இல்லை.

நெல்விளையும் நிலங்களில் பிரெஞ்சுக்காரர்கள் அதிக மூலதனம் போட்டார்கள்; அவர்களுக்குச் சொந்தமான இந்நிலங்களில் 6ல் 5 பகுதி கொச்சின் சீனாவிலிருந்தது. கி.பி. 1924ஆம் ஆண்டி லிருந்து 1930ஆம் ஆண்டுவரை 5,32,000 ஹெக்டேர் நிலங்களை பிரெஞ்சுக்காரர்கள் வளப்படுத்தினர். சைகானிலும், ஹநாயிலும், நாம்பென்னிலும் ஐரோப்பிய நாடுகளிலுள்ளதுபோல வசதிகளைச் செய்வதற்குப் பிரெஞ்சுக்காரர்கள் தங்களுடைய செல்வத்தைச் செலவழித்தார்கள். கி.பி. 1929ஆம் ஆண்டுக்கும் 1938ஆம் ஆண்டுக்கும் இடையே இரப்பர் ஏற்றுமதி ஆறு மடங்கு அதிகமா யிருந்தது.

இருபதாம் நூற்றாண்டின் முதல் நாற்பது ஆண்டுகளில் வியட்நாம் மக்கள் தெற்கு நோக்கிக் கொச்சின்-சீனாவிற்கு இடம்

பெயர்ந்து சென்று கொண்டிருந்தார்கள். அங்கிருந்த கம்போடியர்கள் இதனால் பாதிக்கப்பட்டார்கள். மாய் (Moi), லாவோ (Lao) மக்கள் திறமையற்ற தொழிலாளர்களாயிருந்தார்கள். கொச்சின்-சீனுவில் வியட்நாமியர்கள் கம்போடியர்களைவிட 12 மடங்கு அதிகமாயிருந்தார்கள். செல்வத்தைத் தேடித்தான் வியட்நாமியர்கள் கொச்சின்-சீனுவிற்கு வந்து குடியேறினார்கள். டொங்கிங் மாகாணங்களில் மக்கள் நெருக்கடியிருந்ததால் 3 சதுர கிலோமீட்டருக்கு 400 மக்கள் வீதம் இருந்தார்கள்; கொச்சின்-சீனுவில் உள்ள கிராமங்களில் மக்கள் நெருக்கடி இதைவிட இரு மடங்கு குறைவாயிருந்தது. கி.பி. 1924ஆம் ஆண்டுக்குப் பிறகு தொழில் ஒப்பந்தம் செய்துகொண்டு கூலியாள்கள் மேகாங் கழிமுகத்திற்குச் சென்றார்கள். சராசரியாக ஆண்டுக்கு 15,000 டொங்கிங் மக்கள் கொச்சின்-சீனுவிற்குச் சென்றார்கள்; கி.பி. 1927ஆம் ஆண்டில்தான் இவர்கள் மிக அதிகமாக இடப்பெயர்ச்சி செய்தார்கள்.

பஸிபிக் பெருங்கடலிலிருந்த பிரெஞ்சுக் குடியேற்றங்களான நியூ ஹெப்ரைட்ஸ் நியூ கலிடோனியா ஆகிய தீவுகளிலுள்ள சுரங்கங்களிலும், பண்ணைகளிலும்கூட டொங்கிங் கூலியாள்கள் தொழில் ஒப்பந்தம் செய்துகொண்டு வேலை செய்து கொண்டிருந்தார்கள். பொதுவாக இவ்வகையான தொழில் ஒப்பந்தங்கள் மூன்று ஆண்டுக்குச் செல்லுபடியாகும்; அவர்களுக்கு மருத்துவ வசதிகளும் இருந்தன; தொழில் ஒப்பந்தத்தில் எழுதியிருக்கிறபடி குறிப்பிட்ட நேரங்களில் வேலை செய்தால் போதும்.

வியட்நாமியர்களும், சீனர்களும் சுறுசுறுப்புடனும் திறமையுடனும் வேலை செய்ததால் மேகாங் கழிமுகத்திலுள்ள நெல் நிலங்கள் மிகவும் வளர்ச்சியடைந்தன. ஆண்டுக்கு 1.5 மில்லியன் டன் அரிசி மிகுதியாக விளைந்தது; இதை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தார்கள். கி.பி. 1920ஆம் ஆண்டுக்குப் பிறகு ஐரோப்பியர்கள் நெல்நிலங்களில் முதலீடு போடத் தொடங்கினார்கள். குடியேற்றம் செய்திருந்த டொங்கிங் மக்களும், கம்போடியர்களும் கடனாளிகளாயிருந்தார்கள். பிரெஞ்சு நாட்டில் தொழிலாளிகளுச்குக் கிடைத்த கூலியைவிடப் பன்னிரண்டு மடங்கு குறைவாயிருந்தது அவர்களுக்குக் கிடைத்த கூலி. அரசாங்கத்தொழில் கிடைக்காததாலும், கல்வி பயில அதிக வாய்ப்பு இல்லாமல் இருந்ததாலும், உயர்ந்தோர் குழாம் பிரெஞ்சு ஆட்சியை வெறுத்தது. ஆனால், கொச்சின்-சீனுவில் வெளிப்படையாக நிலவியிருந்த அமைதிச் சூழ்நிலையைப் பார்த்து எல்லோரும் ஏமாந்துவிட்டார்கள்.

மலைச்சாதி மக்களுக்குள் மாய் மக்களே பிரெஞ்சு ஆட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். அவர்களுடைய வழிமரபு பழக்க வழக்கம் ரை (Rai) பயிரிடுவது; மருந்துச் சாமான்களையும் காடுகளிலிருந்து கிடைத்த உயர்விலைப் பொருள்களையும் விற்கும் வணிகர்களாகவும் இருந்தார்கள். மாய் மக்கள் குடியேறியிருந்த பகுதிகளில் படைவீரர் காவலிடங்களைப் பிரெஞ்சுக்காரர்கள் அமைத்திருந்தார்கள். பண்ணைகளிலும் தோட்டங்களிலும் வேலைசெய்யவும், கீழ்ப்படிகளிலுள்ள அரசாங்க உத்தியோகங்களில் சேர்ந்து பணிபுரியவும் டொங்கிங் மக்களை இப் பகுதிகளுக்குப் பிரெஞ்சு அரசாங்கம் அழைத்து வந்தது. சில மாய் மக்கள் கூலியில்லா வேலையாள்களாகவும் பணிபுரிந்தார்கள். அவர்களுடைய மருந்துச் சாமான் வாணிபமும் பாதிக்கப்பட்டது; இத்தகைய சூழ்நிலையை எதிர்க்கவும் அவர்களுக்கு ஆற்றல் இல்லாமல் இருந்தது. அவர்களை மாற்றுவதற்காக, அமெரிக்கச் சமயப் பரப்பாளர்கள் அவர்களிடம் தங்கள் மதத்தைப்பரப்பினுர்கள். ஆனுல், மியோ மக்கள் பிரெஞ்சு ஆட்சியால் அவ்வளவு பாதிக்கப்படவில்லை.

கம்போடியாவிலிருந்த வழிமரபு சமூதாய அமைப்பு பிரெஞ்சு ஆட்சியால் அதிகமாகப் பாதிக்கப்படவில்லை. அரசர் உயர் அதிகாரச் சின்னமாக விளங்கினுர். அரசரவை நடவடிக்கைகள் மாற்றப்படவில்லை. அரசாங்க உரிமைக் கட்டளைகளில் அரசரும் கையொப்பமிட்டார்; கம்போடியப் புத்தமதத்தின் மிகவும் உயர்ந்த தலைவராக விளங்கினுர்; அவரிடமிருந்த ஆறு அமைச்சர்களில் ஒருவர் சமய அமைச்சராய்ப் பணிபுரிந்தார். பொதுக்கல்வி புத்த மதத் தத்துவங்களைத் தழுவியிருந்தது.

வரி செலுத்தும் உள்நாட்டுக் கம்போடியர்கள் கிராமத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள்; இத் தலைவர்களே எல்லா வேலைகளையும் செய்தார்கள்; உண்மையாகவே அவர்களிடமே அதிகாரமிருந்தது. உள்நாட்டுக் காவலர்களை அவர்கள் கண்காணித்தார்கள்; வெளியார்களைப்பற்றிய விவரங்களைப் பதிவு செய்தார்கள்; குற்றவாளிகள் வழக்குகளை ஆராய்ந்தார்கள்; வரி திரட்டினுர்கள்; (கூலியில்லா வேலை, கார் வரி, நிலவரி, தலைவரி, வாணிக இணக்க ஆணைக் கட்டணம்), கட்டடங்களையும் உள்நாட்டுச் சாலைகளையும், அஞ்சல் அலுவலகத்தையும் பாதுகாத்துப் பராமரித்தார்கள். கம்போடிய மக்களின் வழக்கங்களைப்பற்றியும், நடைமுறைகளைப் பற்றியும் (முக்கியமாகச் சட்டமன்ற நிகழ்ச்சிமுறை) கம்போடிய மக்களின் நீதிமன்றத்தில் பணிபுரிந்த நீதிபதிகளுக்கும் வழக்குரைஞர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டது.

வியட்நாம் தேசியத் தன்னாட்சிக் கொள்கைகளும் இயக்கங்களும்

இந்தோ-சீனாவில் பிரெஞ்சு ஆட்சி தொடங்கியதிலிருந்து நாட்டுப்பற்றுடையவர்கள் அயல்நாட்டினரின் ஆட்சியை எதிர்க்கத் தொடங்கினார்கள். முதலில் அரசகுலத்தினரும், உயர்பதவியிலிருந்த மேண்டரின்களும் தேசிய இயக்கத்தின் தலைவராக இருந்தார்கள்; பிரெஞ்சுக்காரர்களைத் தோற்கடித்து, வழிமரபு அரசியல் அமைப்பை மீண்டும் நிறுவவேண்டும் என்பதே அவர்கள் நோக்கம். கி.பி. 1917ஆம் ஆண்டுவரை இவ்வகையான தேசிய எதிர்ப்பு இருந்தது ஆனால், கி.பி. 1917ஆம் ஆண்டுக்குப் பிறகு முற்போக்கான கோட்பாடுகளையுடைய வியட்நாம் தேசியத் தலைவர்கள் தோன்றினார்கள்.

பிரெஞ்சுக் கல்வித் திட்டம், மேலைநாட்டவர் தத்துவங்களைப் பயின்ற புதுமைப்பாங்கான தேசியவாதிகளை உருவாக்கியது. புது நாகரிகப் பண்பாட்டு முறையின் மூலம்தான் வியட்நாமின் சுதந்திரத்தைப் பெறமுடியும் என இவர்கள் நினைத்தார்கள். புதுக் கருத்துக் கோட்பாடுகளென்றால் மேல்நாட்டு நாகரிகப் பாங்கு எனப் பொருள் என்று கி.பி. 1910ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து இவர்கள் புரிந்துகொண்டார்கள். ஆகையால், நாட்டில் தொழிற் புரட்சி தோன்றவேண்டும், பொருளாதார வசதிகளைப் பரப்ப வேண்டும், சமூக அமைப்பைச் சீர்திருத்தவேண்டும், அரசியல் அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்காகக் கிளர்ச்சி செய்யவேண்டும் என இவர்கள் கருதினார்கள்.

கி.பி. 1920ஆம் ஆண்டில் தேசிய இயக்கம் மிதவாதிகளின் தலைமையின் கீழிருந்தது. ஆகையால், பிரெஞ்சுக் குடியேற்ற அரசாங்கத்தோடு ஒத்துழைத்துத் தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என இவர்கள் நினைத்தார்கள். ஆனால், இத்தகைய கொள்கையுடைய அரசியல் தலைவர்கள் கி.பி. 1930ஆம் ஆண்டுக்குள் தேசிய இயக்கத்திலிருந்து நீக்கப் பட்டார்கள்; தீவிரவாதிகள் தோன்றினார்கள்; நாட்டின் அமைதியைக் குலைத்தார்கள்; எங்கும் கிளர்ச்சியும் குழப்பமும் நிலவின.

கி.பி. 1930ஆம் ஆண்டில் ஹோசிமின் தலைமையில் கம்யூனிஸ்டுகள் பிரெஞ்சு ஆட்சியைத் தீவிரமாக எதிர்க்கத் தொடங்கினார்கள்; ஆகையால், அவர்களும் நாட்டுப்பற்றுறுதியுடைய தேசிய வாதிகளாகக் கருதப்பட்டார்கள். கி.பி. 1930ஆம் ஆண்டு பிப்ரவரியில் வியட்நாம் தேசியக் கட்சி புரட்சி செய்தது. இப் புரட்சியை அரசாங்கம் அடக்கியதோடல்லாமல் வியட்நாம் தேசியக் கட்சியையும் அடக்கி ஒடுக்கியது. இந்தோ-சீனக்

கம்யூனிஸ்ட் கட்சி வியட்நாம் தேசிய இயக்கத்தில் முக்கியப் பங்கு கொள்ள இச் சூழ்நிலை உதவியது. பிரெஞ்சு அடக்குமுறை ஆட்சியிஞல் இக் கட்சியின் வலிமை பாதிக்கப்பட்டபோதிலும், இது அடங்கி ஒடுங்கி அழியவில்லை.

இரண்டாவது உலகப் பெரும்போரின்போது ஜப்பானியர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே ஒரு சிறந்த ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படி ஜப்பான் பிரெஞ்சு மீ முதல் ஆட்சித் தலைமையுரிமையை ஒப்புக்கொண்டது; உள்நாட்டு நிருவாகம், பாதுகாப்பு விவரம் முதலியன பிரெஞ்சுக்காரர்களிடமே விடப்பட்டன; பதிலாக, இந்தோ-சீனுவிலுள்ள இராணுவம், வருவாய், மற்ற வசதிகள் ஜப்பானியர்களுக்குக் கொடுக்கப்பட்டன. கி.பி. 1945ஆம் ஆண்டு மார்ச்சு 9ஆம் நாள் இவ்வொப்பந்தம் முறியடிக்கப்பட்டது. படை வலிமையைப் பயன்படுத்தி ஜப்பான் இந்தோ-சீனு முழுவதையும் கைப்பற்றியது. ஜப்பானியர்களின் அனுமதியுடன் பேரரசர் பாஒடாய் வியட்நாம் சுதந்திர நாடாயிற்று என அறிவித்தார்.

தேசிய இயக்கம், கி.பி. 1916 வரை

பிரெஞ்சுக் குடியேற்ற ஆட்சி தொடங்கியவுடனே வியட்நாமியர்கள் கொரில்லாப்போர் செய்தார்கள். இவர்களை அடக்கி ஆளுவதற்காகப் பிரெஞ்சு இராணுவ ஆட்சி அமைக்கப்பட்டது. ஆனால், கொரில்லாப்போர் கி.பி. 1897ஆம் ஆண்டுவரை நீடித்திருந்தது. டிநாம் தலைமையில் கடைசிக் கொரில்லாப்போர் நிகழ்ந்தது. பிரெஞ்சு ஆட்சியாளர்களுக்கு டிநாமிடம் அச்சமும் பற்றும் கலந்திருந்தன.

கி.பி. 1905ஆம் ஆண்டில் உருசியாவிற்கும் ஜப்பானுக்கும் நடந்த போரிலே உருசியா தோற்கடிக்கப்பட்டது. உருசியாவை ஓர் ஆசிய நாடு தோற்கடித்ததால் வியட்நாமியர்களுக்கு ஊக்கமும், மகிழ்ச்சியும் பிறந்தன. இதன் விளைவாகக் கி.பி. 1906ஆம் ஆண்டில் கில்பர்ட் சியூக் கலகம் (Gilbert Chieu Rebellion) மூண்டது. இக் கலகக்காரர்களைப் பழிவாங்கும் நோக்கத்துடன் பிரெஞ்சுக்காரர்கள் படுகொலை செய்தார்கள்.

கி.பி. 1905ஆம் ஆண்டு ஜப்பானியர்களின் வெற்றி மற்ற வியட்நாமியத் தேசியவாதிகளுக்கும் ஒரு பாடமாய் அமைந்தது. வியட்நாமியர்கள் மேலைநாட்டு ஆய்வறிவும், தொழில் நுட்பமும் கற்றுக்கொண்டால் பிரெஞ்சு ஆட்சியிலிருந்து வியட்நாமை விடுதலை செய்யமுடியும் எனப் பான் பாய் சௌ (Phan Boi Chou), பான்

சௌ திரின் (Phan Chau Trinn) போன்ற தேசியத் தலைவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். இதற்காக ஜப்பானியர்களின் உதவியை நாடவேண்டும் எனப் பான்பாய் சௌ வலியுறுத்தினர். பிரெஞ்சு அரசாங்கத்தை இணங்கவைத்து வியட்நாமியப் புதுமைப் பாங்கான கருத்தைப் புகுத்தவேண்டும்; இவ்வகையான மன நிலையை உருவாக்கி இறுதியாக வியட்நாமின் சுதந்திரத்தைப் பெறவேண்டும் எனப் பான் சௌ திரின் விளக்கிக் கூறினர்.

தம் நோக்கத்தைச் செயல்படுத்தும் எண்ணத்துடன் சௌ ஜப்பானுக்குச் சென்றார். தொழில்நுட்பத் துறையில் வியட்நாமியர் களுக்கு ஜப்பான் உதவவேண்டும் என முறையிட்டுக் கொண்டார். ஜப்பான் உதவியுடன் வியட்நாமைப் பிரெஞ்சுக் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து விடுவிக்க முடியும் என இவர் நம்பினர். இளவரசர் குவாங் டி (Cuong De) பல இளந்தேசியவாதிகள் உட்பட, பாவ்தை (Bao Dai) வியட்நாமின் பேரரசராகப் பணிபுரியும் காலத்தில், ஜப்பானிய உதவியை நாடி அவர்களிடம் அடைக்கலம் புகுந்தார்கள்.

கி.பி. 1913ஆம் ஆண்டில் பாய்சௌ சட்டத்திற்குப் புறம்பான வியட்நாம் குவாங்புக்ஹோய் (Vietnam Quang Phuc Hoi or Association for the Restoration of Vietnam)—வியட்நாம் மீட்டளிப்புக் கழகம் என்ற கழகத்தை அமைத்தார்; இதுவே வியட்நாமின் தேசிய இயக்கத்தின் முதல் கழகம்; இக் கழக நடவடிக்கைகளை நோக்கிய பிரெஞ்சு அரசாங்கம் அஞ்சி இக் கழகக்காரர்களைத் துன்புறுத்தியது. பாய்சௌ கைது செய்யப் பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்.

ரூஸோ (Roussea), மான்டெஸ்க்யூ (Montesquieu), வால்டேர் (Voltaire) முதலியவர்களின் இலக்கியங்களைப் படித்த வியட்நாம் தேசியவாதிகள் கி.பி. 1789ஆம் ஆண்டுப் பிரெஞ்சுப் புரட்சியின்போது செய்யப்பட்ட 'விடுதலையுரிமை, தோழமை, சமநிலை உரிமைகள்' (Liberty, Traternity and Equality) போன்ற தத்துவங்கள் செயல்முறையில் வியட்நாமில் இல்லையே என வருத்தப்பட்டார்கள். வியட்நாமியர்களுக்குச் சிறிதளவே விடுதலை யுரிமை கொடுக்கப்பட்டது; தோழமை மனநிலை உயர்குடிச் சமூகத்தில்தான் இருந்தது. சமநிலை உரிமைகள் திண்ணமாக இல்லவே இல்லை. காவலர் படை கொடுங்கோன்மையுடன் அடக்கி ஆட்சி புரிந்ததாலும், விடுதலையுரிமையில்லாமல் இருந்ததாலும் வியட்நாமியர்கள் உளமுறிவுற்றார்கள். அரசியல் காரணமாகக் கைதுசெய்யப்பட்டதாலும், மனிதப் பண்பற்ற தன்மையுடன்

பலவாறு துன்புறுத்தப்பட்டதாலும், நீதிமன்றங்கள் காவலர் துறையின் கைக்கூலியாயிருந்ததாலும் வியட்நாமியர்கள் பிரெஞ்சு ஆட்சியில் குறைகண்டு குற்றஞ் சாட்டினர்கள். கூடிப்பேசுவதற்கும், செய்தித்தாள் மூலம் எழுதிக் கருத்தைப் பரப்பவும் சுதந்திரம் கொடுக்கப்படவில்லை. அரசியல் கட்சியை உருவாக்கவும், தொழிலாளர்கள் சங்கத்தை நிறுவவும் உரிமை கொடுக்கப்படவில்லை.

சோஷியலிச மனப்பான்மையுள்ள தலைமை ஆளுநர் சாரௌட் பல முற்போக்கான சீர்திருத்தங்களைச் செய்தார்; ஆனால், இச்சீர்திருத்தங்கள் வியட்நாமியர்களைத் தன்னுட்சி வழியில் நடத்திச் செல்லவில்லை.

ஒரு மேண்டரின் குழு கி.பி. 1916ஆம் ஆண்டு மே மாதம் கலகம் செய்ய முயன்றது. அவர்களில் ஒருவர் பேரரசர் டய்தானுடன் (Duy Tan) தொடர்பு கொண்டதால், அவர் இக்கலகத்திற்குப் பரிவு காட்டினர். இக் கலகத்திற்குப் பொதுமக்கள் ஆதரவைத் தேடும் எண்ணத்துடன் கலகம் நடந்தபோது பேரரசர் தாம் கலகக்காரர்கள் பக்கம் இருப்பதைக் காட்டிக் கொண்டார். ஆனால், உடனடியாக இக் கலகத்தைப் பிரெஞ்சு அரசாங்கம் அடக்கியது. டய்தான் ஓடிஒளிய முயன்றார்; ஆனால் அவர் கைது செய்யப்பட்டு ரியூனியன் தீவிற்கு நாடுகடத்தப்பட்டார். தேசிய இயக்கத்தைப் பேரரசர் தலைமை தாங்கி நடத்தியது இதோடு முடிவடைந்தது.

தேசிய இயக்கம் (கி.பி. 1917—1927)

ஐரோப்பாவில் நடந்த முதல் உலகப் பெரும்போர் மறைமுகமாக வியட்நாம் தேசிய இயக்கத்தின் இரண்டாம் கட்டத்தில் மாறுதலை உருவாக்கியது. பிரெஞ்சு மேற்குத் தலைவாயிலில் சண்டைபோடுவதற்காக 100,000 வியட்நாமியப் படைவீரர்களைப் பிரெஞ்சு அரசாங்கம் புதிதாகச் சேர்த்தது. இப் போரிலிருந்து பல வியட்நாமியர்கள் பிரெஞ்சு அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்கத்துடன் திரும்பி வந்தார்கள். அரசியல் கட்சிகளை உருவாக்கினல் நன்மை விளையும் எனப் புரட்சி நோக்கம் கொண்ட சில சீனர்களும் சியாமியர்களும் பல வியட்நாமியர்களிடம் கூறினர்கள். இந்தியத் தேசிய இயக்கத்தைப் பார்த்துச் சிலருக்கு ஊக்கம் பிறந்தது; மற்றும் பலர் கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பரிவு காட்டினர்கள்.

அரசியலமைப்புக் கட்சி (கி.பி. 1923)

கி.பி. 1923ஆம் ஆண்டில் சைகானில் அரசியல் நோக்கம் மிகக் கொண்ட ஆய்வறிவாளர்களும், அதிகாரிகளும், நிலவுடைமை

யாளர்களும் அரசியலமைப்புக் கட்சியை அமைத்தார்கள். காப்பாட்சி நாட்டிலிருந்ததாலும், கொச்சின்-சீனவில் அரசியல் கழகங்களுக்குத் தடைவிதிக்காதிருந்ததாலும் சட்டத்திற்குட்பட்ட முதல் தேசியக் கட்சியை இவர்களால் உருவாக்க முடிந்தது. இக் கட்சியின் தலைவர்களான புயி குவாங் சியூவும் (Bui Quang Chieu), என்குயன் பான்லாங்கும் (Nguyen Phanlong) தாங்கள் நட்புமைதி நோக்கம் உள்ளவர்கள் எனப் பிரெஞ்சு அரசாங்கத்திற்குத் தன்னம்பிக்கை ஊட்டினர். பிரெஞ்சு அரசாங்கத்திடம் பல விண்ணப்பங்களை இக் கட்சி அளித்தது. ஆனால், அரசாங்கம் இவற்றையெல்லாம் புறக்கணித்தது.

1. வியட்நாமிற்கு ஒரு சட்ட திட்டத்தைக் கொடுக்க வேண்டும்.

2. நிருவாகத் துறைகளில் வியட்நாமியர்களுக்கு வேலைசெய்ய வாய்ப்புக் கொடுக்கவேண்டும்.

3. கழகங்கள் அமைக்கவும், கூட்டங்கள் கூட்டவும் வியட்நாமியர்களுக்கு உரிமை கொடுக்கவேண்டும்.

4. குடியேற்ற மன்றங்களில் மேலும் அதிக வியட்நாமியர்களுக்கு இடம் கொடுக்கவேண்டும்.

5. வியட்நாமியர்களுக்குச் செய்தித்தாள்களை நடத்த முழுச் சுதந்திரம் கொடுக்கவேண்டும் என இக் கட்சி வலியுறுத்தியது. ஆனால், தன் நோக்கங்களை நிறைவேற்ற முடியாமல் இக் கட்சி மங்கி மறைந்தது.

வியட்நாம் மக்களின் முற்போக்காளர் கழகம் (The Vietnamese Peoples' Progressive Party)

சோஷியலிஸ மனப்பான்மையுடைய தலைமை ஆளுநர் அலெக்ஸாண்டர் வாரெனி (Alexander Varenne) (கி.பி. 1925 நவம்பர்-1925, ஜனவரி) பதவியேற்றவுடன் முற்போக்கான கொள்கைகளையுடைய சீர்திருத்தங்களைச் செய்வார் எனப் பல வியட்நாமியர்கள் நம்பினர்கள். பாம் க்யூயென் (Pham Qu ynh) பிரெஞ்சு அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் ஒரு புதிய கட்சியை அமைக்கவேண்டும் என்றார்.

கி.பி. 1923ஆம் ஆண்டில் உருவாகிய வியட்நாம் மக்களின் முற்போக்காளர் கழகத்தின் உறுப்பினர்களாகப் பல அரசியல் மிதவாதிகள் சேர்ந்தார்கள், இக் கட்சியைச் சட்டத்துக்கு

ஒத்திருக்கும்படிச் செய்யப் பிரெஞ்சு அரசாங்கம் மறுத்தது; ஆகையால், இம் மிதவாதிகள் தலைமறைவாகத் திரியத் தொடங்கினர்கள்; இரகசியத் தேசிய இயக்கங்களில் சேர்ந்தார்கள்.

காவோதைக் கழகம், கி.பி. 1926 (The cao doi organisation)

கி.பி 1926ஆம் ஆண்டில் காவோதைச் சமய இயக்கம் அமைக்கப்பட்டது. சில அரசியல் அமைப்புக் கட்சி உறுப்பினர்கள் இந்த இயக்கத்தில் சேர்ந்தார்கள். சில உறுதிவாய்ந்த அரசியல் கொள்கைகளை இந்த இயக்கம் பின்பற்றத் தொடங்கியவுடன் மக்கள் செல்வாக்கைப் பெற்றது; வெளிப்படையாகப் பிரெஞ்சு ஆட்சியை எதிர்த்தது. பிரெஞ்சு ஆட்சியைக் கவிழ்த்துக் குவாங்தீயை (Cuong De) அரசியல் இருக்கையில் அமர்த்த வேண்டும் என்பதே இதன் நோக்கம். கி.பி. 1930ஆம் ஆண்டு ஒரு மில்லியன் மக்கள் இதன் உறுப்பினர்களாகச் சேர்ந்திருந்தார்கள்.

இதுவரைத் தேசிய இயக்கம் மிதவாதக் கொள்கைகளைத்தாம் பின்பற்றியது. காவோதைக் கழகம் இதற்கு ஒரு விதிவிலக்கு. இம்மிதவாதிகளின் திட்டங்களை அரசாங்கம் புறக்கணித்ததாலும், அவர்களைக் கொடுமையாக அடக்கி ஆண்டதாலும் தேசிய இயக்கத்தில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. மிதவாதிகள் புரட்சிக்காரர்களாக மாறினர்கள்.

வியட்நாம் தேசியக் கட்சி, கி.பி. 1927

கி.பி. 1927ஆம் ஆண்டில் என்குயன் தாய் ஹாக் (Nguyen Thai Hoc) தலைமையில் பல நூல் வெளியீட்டாளர்கள் சேர்ந்து இரகசியமாக வியட்நாம் தேசியக் கட்சியை (Vietnam Nationalist Party) நிறுவினர்கள். புரட்சிச் செயல்களைப் புரிந்து பிரெஞ்சு அரசாங்கத்தைக் கவிழ்க்கவேண்டும்; பிறகு சீனுவிலிருப்பது போல ஒரு குடியரசு அரசாங்கத்தை அமைக்கவேண்டுமென்பதே இதன் நோக்கம்.

கம்யூனிஸ்டு அல்லாத கட்சிகளில் தேசியக் கட்சிதான் கி.பி. 1941ஆம் ஆண்டுவரை மிகச் சிறப்பு வாய்ந்த கட்சி. குயோமின்டாங் (Kuomintang) சீனத் தேசியக்கட்சி. இக் கட்சிக்கு ஆதரவளித்ததால் இதோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. டொங்கிங்கில் வசித்த வியட்நாமியச் செல்வர்கள் இக் கட்சிக்குப் பணம் வாரி இறைத்தார்கள். கி.பி. 1929ஆம் ஆண்டில் இக் கட்சியில் 1500 பதிவு செய்த உறுப்பினர்கள் இருந்தார்கள்,

கி.பி. 1929ஆம் ஆண்டில்தான் மறைந்திருந்த தேசியக் கட்சியைப் பிரெஞ்சு அரசாங்கம் கண்டுபிடித்தது. கி.பி. 1929ஆம் ஆண்டில் தலைமை ஆளுநர் பியரிபாஸ்குரைக் (Pierre Pasquier) கொலை செய்ய முயன்றபோது தவறுதலாகத் தொழிலாளர் சங்கத் தலைவர் பாஸினை (Basin) இக் கட்சி உறுப்பினர்கள் கொலை செய்தார்கள். ஆகையால், பிரெஞ்சுப் பாதுகாப்புத் துறை பல வியட்நாமியர்களைக் கைது செய்தது; இவர்களைப் பலவகையில் துன்புறுத்தியதால் இக் கட்சியைப் பற்றிய எல்லா விவரங்களையும் இவர்கள் எடுத்துரைத்தார்கள். ஆசிரியர்கள், மாணவர்கள், படைவீரர்கள் முதலியவர்கள் இக் கட்சியின் உறுப்பினர்களாக இருந்தார்கள். இவர்களில் பாதிக்குமேல் பிரெஞ்சு அரசாங்கம் கண்டுபிடித்தது. தேவையானவர்களை உடனடியாகக் காவலர்கள் கைது செய்தார்கள்; தவிர இக் கட்சியின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கத் தொடங்கினார்கள். புரட்சிக்காரர்கள் இனிமேலும் காத்திருக்கக்கூடாது; உடனடியாக வெளிப்படையாகப் புரட்சி செய்யவேண்டும் என என்குயன் தாய் ஹாக் தீர்மானம் எடுத்தார். அரசாங்கத்திற்குச் செய்தி கொடுக்கும் இக் கட்சியின் உறுப்பினர்களில் சிலர் அரசாங்கத்திடம் என்குயன் தாயின் நோக்கத்தைத் தெரிவித்தார்கள்.

கி.பி. 1930ஆம் ஆண்டு பிப்ரவரியில் யென்பேவிலிருந்த (Yen Bay) படைவீரர்கள் கிளர்ச்சி செய்து தங்களுடைய பிரெஞ்சு மேலதிகாரிகளைக் கொலை செய்தார்கள்; ஹநாயில் வெடிகுண்டு போட்டார்கள். கான்தாவோ (Canthao), ஹங் ஹாவா (Hung Hoa), ஹய் டுவாங் (Hai Dwoug) முதலிய மாகாணங்களில் சிறிதளவில் கிளர்ச்சி தோன்றியது. என்குயன் தாய் ஹாக்கும், மற்றும் பன்னிரண்டு வியட்நாமியர்களும் கைது செய்யப்பட்டுக் கி.பி. 1930ஆம் ஆண்டு ஜுன் மாதம் தூக்கிலிடப்பட்டார்கள். இதற்குப் பிறகு பதினைந்து ஆண்டுகள் இக் கட்சி தலைதூக்கவில்லை. ஆனால், இரண்டாவது உலகப் பெரும் போரின்போது சீனர்களின் உதவியுடன் இக் கட்சி மீண்டும் தோன்றியது.

பிரெஞ்சு அரசாங்கம் பழிவாங்கும் நோக்கத்துடன் வியட்நாமியர்களைச் சுட்டுக் கொன்றது; ஆயிரமாயிரம் வியட்நாமியர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

இந்தோ-சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, கி.பி. 1930 (The Indochinese Communist Party)

கி.பி. 1931ஆம் ஆண்டில் வியட்நாம் தேசியக் கட்சியை ஒழித்தவுடன் அவ்வியக்கம் தலைமையில்லாமல் இருந்தது. இக்

குறையை ஹோசிமின்னின் கம்யூனிஸ்டுக் கட்சி நீக்கியது. தேசியக்கட்சிக்குக் கிடைத்த ஆதரவைவிடக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு வியட்நாமில் இன்னும் அதிக ஆதரவு கிடைத்தது. மேலும் கம்யூனிஸ்டுக்கட்சி திறமையுடன் நிருவகிக்கப்பட்டது; அயல்நாட்டு ஆதரவும்கிடைத்தது. கம்யூனிஸ்டுக்கட்சியை அமைக்கச்சீனு ஊக்கமும், ஆதரவும் அளித்தது. வியட்நாமியர்களைப் புரட்சிக்காரர்களாக மாற்றிப் பயிற்சி கொடுக்க ஹோசிமின் கேண்டனில் (Canton) ஒரு பயிற்சிக் கூடத்தை அமைத்திருந்தார். அங்கே பயிற்சி பெற்றவுடன் வியட்நாமியர்கள் வியட்நாமுக்கு அனுப்பப்பட்டார்கள்.

இதனுல் வியட்நாம் தேசிய இயக்கத்திற்கு ஓர் ஆற்றல் வாய்ந்த, செயல் விரைவுடைய கழகம் கிடைத்தது. கம்யூனிஸ்டுக் கட்சி மார்க்ஸிஸ்டு, லெனினிஸ்டுத் தத்துவத்தைப் பின்பற்றியது. இது ஒரு திறமை வாய்ந்த கழகமாய் விளங்குவதற்காகச் சோவியத் உருசியாவும், சீனுவும் இதற்கு உதவின. இக்கட்சியின் தலைவரான ஹோசிமின் திறமை வாய்ந்த அரசியல் புரட்சிக்காரர்; அமைப்பாளர்.

மூன்று வியட்நாமியர் மார்க்ஸிஸ்டுக் குழுக்களை இணைத்துக் கி.பி. 1930ஆம் ஆண்டில் ஹாங்காங்கில் கம்யூனிஸ்டுக் கட்சியை ஹோசிமின் அமைத்தார். இக்கட்சிக்கு இந்தோ-சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி எனப் பெயரிட்டார். வியட்நாம் விடுதலை அடைவதற்காக இரு படிநிலைகள் தேவை என இவர் கருதினுர். முதலில் நடுத்தர வகுப்புக்குரிய வாழ்க்கை முறை கருத்துகளுடையவர்களின் மக்களாட்சியை நிறுவவேண்டும் (a bourgeoisie Democratic State). பின்பு பாட்டாளிகளின் புரட்சியை (Proletarian Revolution) தொடங்க வேண்டும் என இவர் கூறினுர். கி.பி. 1925ஆம் ஆண்டில் இளம் வியட்நாமியர்களின் புரட்சிச் சங்கத்தைக் (Vietnamese Revolutionary Youth) கேண்டனில் நிறுவிய போது முதன் முதலாக இக் கருத்துகளை ஹோசிமின் வெளியிட்டார். இச்சங்கம் 250 இளம் தேசியவாதிகளுக்குப் பயிற்சியளித்து அவர்களைக் கம்யூனிஸ்டுகளாக மாற்றியது.

கம்யூனிஸ்டுகளிடம் ஒரு திறமையான கழகம் இருந்ததால் அவர்களால் புரட்சி நோக்கங்களை நிறைவேற்ற முடியும் எனப் பல தேசியவாதிகள் நம்பிக்கை கொண்டார்கள்.

நிலச் சீர்திருத்தம் செய்யப்படும் என வாக்களித்ததால் குடியானவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சியை ஆதரித்தார்கள், வியட்நாம்

முழுவதும் குடியானவர்களின் சங்கத்தை அமைத்து அக் குடியானவர்களின் ஆதரவைக் கம்யூனிஸ்ட் பெற்றது. மோசமான அறுவடைகள் ஏற்பட்டதால் டொங்கிங்கிலுள்ள விவசாயிகளை ஒன்று சேர்த்து கி.பி. 1931ஆம் ஆண்டில் கம்யூனிஸ்டுக் கட்சி புரட்சி செய்தது. குடியானவர்கள் ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடத்தினர்கள்; டொங்கிங்கில் உள்ள பண்ணைகளிலும், தொழிற்சாலைகளிலும் வேலை நிறுத்தம் செய்தார்கள். இதற்கு ஆதரவாக மத்திய அன்னமிலும், கொச்சின்-சீனவிலும் கிளர்ச்சிகள் எழுந்தன இரண்டு அன்னம் மாகாணங்களில்—ஹாதின் (Hatinh), என்கீஅன் (N ghe Ant) கம்யூனிஸ்டுகள் 'சோவியத்' (உருசிய நாடு)களை அமைத்தார்கள். பொருளாதார நிலைமையைத் தகர்த்தெறிவதற்காகப் பேரச்சம் தரும்படியான முறைகளைப் பயன்படுத்தினர்கள். மின்னல் வேகத்தில் பிரெஞ்சு அரசாங்கம் கொடுமையான அதிரீடடு நடவடிக்கைகள் எடுத்தது. கம்யூனிஸ்டு என ஐயுற்றவர்களைக்கூட அரசாங்கம் துன்புறுத்தியது. ஏறத்தாழ 10,000 அரசியல் கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். ஆயிரமாயிரம் வியட்நாமியர்கள் கொலை செய்யப்பட்டார்கள்; பல கம்யூனிஸ்டுத் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டார்கள். கி.பி. 1931ஆம் ஆண்டில் ஹாங்காங்கில் ஆங்கிலேயர்கள் ஹோசிமின்னைக் கைது செய்தார்கள். கம்யூனிஸ்டுக் கட்சி மிகவும் பாதிக்கப்பட்டதால் பல ஆண்டுகள் நடவடிக்கைகள் எடுக்க முடியவில்லை.

இம்மாதிரி அடக்குமுறைகளைப் பயன்படுத்தியதால் கம்யூனிஸ்டுத் தலைமையின் கீழிருந்த வியட்நாம் தேசிய இயக்கத்திற்கு ஒரு முடிவு வந்தது. இதன் விளைவால் மீண்டும் மிதவாதிகள் அரசியலில் தோன்றத் தொடங்கினர்கள். ஜப்பானியர்களின் ஆதிக்கம் வரும்வரை இச்சூழ்நிலை நீடித்தது.

தேசிய இயக்கமும், பேரரசர் பாவோதையும் (Baodai)

பிரெஞ்சுக் கல்வி முறையில் அயல்நாடுகளில் கல்வி பயின்றுவிட்டு கி.பி. 1935ஆம் ஆண்டில் இளம் பேரரசர் பாவோதை (Baodai) வியட்நாமிற்குத் திரும்பினர். பிரெஞ்சு நாட்டின் ஒத்துழைப்புடன் பிரெஞ்சுக்காரர்களால் பாதுகாக்கப்பட்ட முடியாட்சியைப் புதுமைப்பாங்குக் கருத்துகளுடன் மீண்டெழுப்ப வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரு மிதவாதிகளின் தேசியக் கட்சியை அமைத்தார் அவர். கி.பி. 1933ஆம் ஆண்டில் என்கோ தின்தியம் (Ngho Dinh Diem), பாகுவின் (Phamqugnh) என்ற இரண்டு புகழ்பெற்ற மேண்டரின்கள் உதவியுடன் வியட்நாம் அரசாங்கத்திற்குத் தன்னுட்சி உரிமை கேட்பதற்காக ஒரு வன்முறை

யில்லாத போரைப் பாவோதை தொடங்கினர். என்கோ தின்தியம் கொடுத்த சீர்திருத்தத் திட்டங்களையெல்லாம் பிரெஞ்சு அரசாங்கம் ஏற்க மறுத்தது. ஆகையால், அவர் பதவியினின் றும் விலகினர். ஆனல், பாம்குவின் தன்னுட்சிக்காகப் பேரரசர் தலைமையில் போர் புரிந்து கொண்டிருந்தார். சட்டப்படியான உடைமையாட்சியுரிமை (Dominion status) கொடுத்திருந்தால் கூடப் பேரரசருக்கு மனநிறைவு உண்டாகியிருக்கும். ஆனல் வியட்நாமிற்கு வந்திருந்த பிரெஞ்சுக் குடியேற்றப் பகுதிகளின் அமைச்சர் பால்ரேனுடு (French Colonial Minister Faul Reynatud) இதையும்புறக்கணித்தார். வியட்நாமில் நடுநிலை வகுப்பினர் இல்லா ததாலும், எழுதப்படிக்கத் தெரியாத பாமர மக்கள் அதிகரித் திருந்ததாலும் சட்டப்படியான உடைமையாட்சி முறை கொடுக்கப் படமாட்டா. அப்படி அதைக் கொடுத்தால் இத்தகைய சூழ்நிலை யில் தீங்குகள் வரும் என அமைச்சர் ரேனுடு கூறினர்.

முடியாட்சி முறையை வெறும் சின்னமாகத்தான் பயன் படுத்தப் பிரெஞ்சு அரசாங்கம் விரும்பியது. பேரரசரும், அவரு டைய அவை உறுப்பினர்களும் சட்டமியற்றும் கூட்டங்களில் வந்து அமர்ந்தால் பிரெஞ்சு அரசாங்கம் வியட்நாமியர் வழிவழி மரபு பண்புகளை மதிக்கிறது என மக்கள் கருதுவார்கள் என்ற ஒரே நோக்கத்துடன்தான் முடியாட்சியைப் பிரெஞ்சு அரசாங்கம் பாதுகாத்தது. வியட்நாமியர்களுக்கு அதிகாரங்கள் கொடுக்கும் நோக்கம் இல்லை. டென்னீஸ் (Tennls) குழிப்பந்தாட்டம் (golf), குதிரைச் சவாரி, வேட்டையாடுதல் போன்ற கேளிக்கை களில் பேரரசர் தம் நேரத்தைச் செலவழிக்கட்டும் எனப் பிரெஞ்சு அரசாங்கம் கூறியது; அரசாங்க விவகாரங்களைத் துணைக்காப்பரசின் ஆளுநர்களின் தலைவரிடமே விட்டுவிட வேண்டும் எனக் கூறியது.

கொச்சின்-சீனுவில் எதிர்ப்பு

கி.பி. 1931ஆம் ஆண்டில் வடவியட்நாமில் பிரெஞ்சு ஆட்சியை எதிர்த்தவர்களை ஒழித்தவுடன், கொச்சின்-சீனுவில் பிரெஞ்சு ஆட்சிக்கு எதிராகப் புரட்சிவாதிகளின் இயக்கம் தோன்றியது. தொடக்கத்தில் இத் தேசிய இயக்கத்திற்குக் காவ் தாய் (Coa Dai), ஹோவா ஹாவா (Hoa Hao) என்ற இரு சமயப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் தலைமை தாங்கினர்கள். காவ்தாயின் தலைவர் லீவான் ரங் (Levau Trung). இச் சமயத் தவரை எதிர்த்து மற்ருெரு சமயப் பிரிவான ஹோவா ஹாவோவை ஹியூன் பூசோ (Huynh Phso) என்றவர் அமைத்தார். ஆனல்,

இவ்விரு சமயப் பிரிவுகளும் அரசியலில் முக்கியப் பங்கு கொள்ள வில்லை. கி.பி. 1940ஆம் ஆண்டுக்குப் பிறகு அவர்கள் ஜப்பானியர் களை ஆதரித்ததால், அவர்கள் பிரெஞ்சு ஆட்சியை எதிர்த்தார்கள் எனக் கூறலாம். இச் சமயப் பிரிவுகளின் தலைவர்கள் கூர்மதியற்ற வர்களாயிருந்ததாலும், அவர்களை ஆதரித்தவர்கள் வலிமையற்றவர் களாயிருந்ததாலும், ஜப்பானியர்கள்கூட இப்பிரிவினரைக் கைவிட்டு விட்டார்கள். தென் வியட்நாமிலுள்ள கம்யூனிஸ்டுகள் இவர்களை விடத் தேசிய இயக்கத்தில் முக்கியப் பங்கேற்றனர்கள்.

கி.பி. 1932ஆம் ஆண்டில் பேரரசர் பாவோதை வியட் நாமிற்குத் திரும்பி வந்த சமயத்தில் இரண்டு கம்யூனிஸ்டுக் கல்வி மான்களும் சைகானுக்குத் திரும்பி வந்தார்கள். ட்ரான் வான் ஜியோ (Tran Vangio) மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர். தா தூ தவ் (Tha Thu Thau) பிரெஞ்சு பல்கலைக் கழகத்தில் பயின்றவர். ஜியோ ஸ்டாலின் கோட்பாடு களையுடைய ஒரு மன்றத்தை நிறுவினர்; சுவ் ட்ராஸ்ட்ஸ்கீ தத்து வங்களையுடைய ஒரு சங்கத்தை அமைத்தார். கி.பி. 1933ஆம் ஆண்டில் நகர மன்றத் தேர்தல் நடந்த போது இவ்விரு பிரிவினர் களும் தாற்காலிகமாக ஒன்று சேர்த்து ஒத்துழைத்தார்கள். இவர் களில் இருவர் நகர மன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். கி.பி. 1935ஆம் ஆண்டில் அனைத்து நாட்டுப் பொது உடைமை அமைப்பின் மகாவோ மாநாட்டின் போது (Macao Conference of the Comintern) ஆட்சி வல்லாண்மை முறைமை யைச் செலுத்தும் கட்சியிடமிருந்து தீங்கு வந்ததால், குடியேற்ற நாட்டாரின் அரசாங்கத்துடன் கம்யூனிஸ்டுகள் ஒத்துழைக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 'அனைத்து நாட்டுப் பொது உடைமை அமைப்பின் தீர்மானத்தைப் பின்பற்றிக் கம்யூனிஸ்டுகள் தாற்காலிகமாகச் சமுதாயப் போராட்டத்தையும் (Class Struggle) ஆட்சி முறை எதிர்ப்பையும் கைவிட்டு விட்டு, ஆட்சி வல்லாண்மை முறைக்கு எதிராக ஒரு கூட்டிணைவான முன்னணியை அமைக்க முயலும்' என்ற தீர்மானத்தைக் கி.பி. 1936ஆம் ஆண்டில் கம்யூனிஸ்டுக் கட்சி எடுத்தது. அதே ஆண் டில் சோஷியலிஸ்டுக் கொள்கையும் கம்யூனிஸ்டுக் கொள்கையும் முற்போக்கான கொள்கையுமுடைய அரசாங்கம் பிரெஞ்சு நாட்டில் அமைக்கப்பட்டது. ஆகையால், கூடிப் பேச வியட்நாமியர்களுக்கு அனுமதி கிடைத்தது. மேலும், நிலமில்லாத குடியானதர்களுக்கு நிலம் கொடுக்க வெண்டுமென்றும், வேலை செய்பவர்களின் நிலைமையைச் சீர்ப்படுத்த வேண்டுமென்றும், கம்யூனிஸ்டுக் கட்சி கிளர்ச்சி செய்யத் தொடங்கியது. மீண்டும் வியட்நாம்

தேசிய இயக்கத்தின் தலைமையைக் கம்யூனிஸ்டுக் கட்சி பிடித்தது. ஆனுல், இச் சமயத்தில் ஆட்சி வல்லாண்மை முறைமையைச் செலுத்துபவர்களை இது தீவிரமாக எதிர்த்தது; பிரெஞ்சு ஆட்சியை அவ்வளவு தீவிரமாக எதிர்க்கவில்லை.

கி.பி. 1939ஆம் ஆண்டில் கம்யூனிஸ்டுகளுக்குச் சுதந்திரம் கொடுத்த பிரெஞ்சு அரசாங்கம் கவிழ்ந்தது; ஆகையால், கம்யூனிஸ்டுக் கட்சியின்மீது தடை விதிக்கப்பட்டது; விலக்காணையிடப் பட்டது; வியட்நாமிலுள்ள கம்யூனிஸ்டுகளை ஒழிக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பிரெஞ்சுப் பாதுகாப்புத் துறை எடுத்தது. கி.பி. 1930ஆம் ஆண்டு நவம்பரில் ட்ரான்வான்ஜியோ கம்யூனிஸ்டுப் பிரிவினர்கள் பிரெஞ்சுக்கு எதிராகக் கலகம் செய்தது. ஆனுல், இதைத் திறமையுடன் பிரெஞ்சு அரசாங்கம் அடக்கியது. கம்யூனிஸ்டுகள் தலைமறைவாகத் திரியத் தொடங்கினுர்கள். அரசாங்கத்திற்கு எதிராகப் புரட்சி செய்ய மற்ருெரு வாய்ப்பை எதிர்நோக்கியிருந்தார்கள். இச் சூழ்நிலை கி.பி. 1945ஆம் ஆண்டு வரை நீடித்தது.

வியட்நாமில் ஜப்பானியர்களின் ஆக்கிரமிப்பு

கி.பி. 1939ஆம் ஆண்டில் ஐரோப்பியப் போர் தென் கிழக்கு நாடுகளுக்கும், உலகத்தின் மற்றப் பகுதிகளுக்கும் பரவியது. கி.பி. 1940ஆம் ஆண்டில் ஹிட்லர் பிரெஞ்சு நாட்டைக் கைப்பற்றினுர். ஜெர்மனி அதிகாரத்தின்கீழ்ப் படைத்துறை மீயுயர் அலுவலர் பீடைனின் (Marshall Petain) விசி அரசாங்கம் (Vichy Government) அமைக்கப்பட்டது. ஆகையால், இந்தோ-சீனுவில் பிரெஞ்சு அரசாங்கம் தலையிடவில்லை. ஆனுல், பசிபிக் போர் இன்னும் தொடங்கவில்லை.

சீனுவில் கி.பி. 1937ஆம் ஆண்டிலிருந்து ஜப்பான் போர் புரிந்து கொண்டிருந்தது. ஜப்பானியர்களின் போருக்கு வேண்டிய பொருள்களைச் சீனுவிற்கு அனுப்பக் கடினமாயிருந்தது. கேண்டனை யும், ஹைலன் தீவுகளையும் ஜப்பான் கைப்பற்றியது. ஆகையால், பர்மா நெடுஞ்சாலை வழியாகவும் ஹைபாங்—குன்மிங் புகைவண்டிப் போக்குவரத்து மூலமும்தான் யூனுனிலிருந்து சீனர்களுக்குப் போருக்குத் தேவையான பொருள்களை அனுப்ப முடியும்.

சீனுவையும், தென் கிழக்காசியாவையும் கைப்பற்றும் நோக்கத்துடன் வியட்நாமின்மேல் ஜப்பான் கவனம் செலுத்தியது. வியட்நாமிலிருந்து சீனுவைத் தாக்குவதும், பிலிப்பைன்ஸ், மலேயா இந்தோனேசியா, தாய்லாந்து, பர்மா ஆகியவற்றைக் கைப்பற்றுவதும் எளிது என ஜப்பான் நினைத்தது.

மேலும், வியட்நாமிலுள்ள பொருள்கள் ஜப்பானியர்களின் போர்த் தேவைகளை நிறைவு செய்யும் என ஜப்பான் நினைத்தது. மேலும், வியட்நாமிலே மிஞ்சி இருக்கும் அரிசி ஜப்பானியப் படைகளுக்குப் பயனுள்ளதாயிருக்கும் வியட்நாமிலுள்ள தாதுப் பொருள்களை ஜப்பானின் இராணுவத் திட்டங்களுக்குப் பயன் படுத்தலாம்; தெற்கு நோக்கிப் படையெடுப்பதற்கு வியட்நாமின் துறைமுகப்பட்டினங்கள் பயனுள்ளனவாக இருக்கும்.

சீனர்கள் விலைகொடுத்து வாங்கிய அமெரிக்கப் படைத்துறைப் படைபெயர்ப்பு உந்து வண்டிகளையும் (Trucks), எண்ணெயும் (Petrol) ஹைபாங்கிலிருந்து யூனனில் உள்ள சியாங்கை–சேக் (Chiang kai Shek) படைகளுக்குப் பிரெஞ்சு நாடு அனுப்பியது. ஜபபானியர்கள் இதை எதிர்த்ததால் இவ்வாறு அனுப்புவதைப் பொதுவாகப் பிரெஞ்சு அரசாங்கம் நிறுத்தியது. ஆகையால் கி.பி. 1940ஆம் ஆண்டு ஜூன் மாதம் தலைமை ஆளுநர் கேட்ரௌக்ஸிடம் (Catroux) ஓர் இறுதி எச்சரிக்கையை (Ultimatum) ஜப்பான் கொடுத்தது. இவ்வெச்சரிக்கைப்படி சீனாவிற்கு ஹைபாங் துறைமுகத்தின் மூலம் பொருள்கள் அனுப்பக்கூடாது; டொங்கின்-சீன எல்லையை ஜப்பான்—பிரெஞ்சு நாடு இணையாகச் சேர்த்து ஆட்சி புரியும். தலைமை ஆளுநரால் இதைப் புறக்கணிக் முடியவில்லை. பிரெஞ்சு நாடு வியட்நாமிற்கு உதவி செய்ய முடியாது என்பதை இவர் அறிவார்; பிரெஞ்சு நாட்டு ஆலோசனையைக் கேட்கவும் தொடர்பில்லாமலிருந்தது. அமெரிக்க ஆங்கிலேய அரசாங்கங்கள் தங்களால் உதவி செய்ய முடியாது என எச்சரித்தன. வியட்நாமிலுள்ள படை வலிமையைக் கொண்டு ஜப்பானியர்களை எதிர்ப்பது கடினம். ஆகையால், இவர் ஜப்பானியர்கள் கேட்டதை விட்டுக்கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது; வியட்நாமை வலுப்படுத்தி ஜப்பானியர்களைத் தக்க சமயத்தில் எதிர்க்கலாம் என இவர் நினைத்தார்.

கடைசியாக மூன்றுவது குடியரசு அரசாங்கத்துடன் (Third Republic Government)தொடர்பு கொண்டவுடன் கெட்ரௌக்ஸின் நடத்தையை அரசாங்கம் கண்டித்தது; அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். துணைக் கடற்படைத் தலைவர் ஜீன் தீகௌஸ் (Jean Decoux) தலைமை ஆளுநராய் நியமிக்கப்பட்டார். மேலும், விசி அரசாங்கத்தின் அயல்நாட்டு அமைச்சர் பால் பவ்டுயின் (Paul Baudouin) எடுத்த முயற்சியால் இனிமேல் பிரெஞ்சு இந்தோ-சீனாவைப்பற்றி நேரடியாகப் பிரெஞ்சு அரசாங்கத்திடம் தொடர்பு கொள்கிறோம் என ஜப்பானியத் தூதுவர் சாவாதா (Sawada) உறுதி மொழி அளித்தார்.

கி.பி. 1940ஆம் ஆண்டு ஆகஸ்டு 2ஆம் நாள் ஜப்பான் மீண்டும் ஓர் இறுதியெச்சரிக்கையைத் திகௌஸுக்குக் கொடுத்தது. இவ் வெச்சரிக்கையில்—

1. டொங்கிங் வழியாக ஜப்பானியப் போக்குவரத்து நடைபெற உரிமை கொடுக்க வேண்டும்.

2. வியட்நாமிலுள்ள விமான நிலையங்களைப் பயன்படுத்த அனுமதி கொடுக்க வேண்டும் எனக் கூறியிருந்தது. ஆகஸ்டு 30ஆம் நாள் விசி அரசாங்கம் இந்தக் கட்டுப்பாடுகளை ஒப்புக் கொண்டது. ஆனால், இதுபற்றிய விவகாரங்களை வியட்நாமிலுள்ள பிரெஞ்சு அரசாங்கத்திடம் பேசிக் கொள்ளுமாறு கூறியது. மேலும், பேச்சுத் தொடர்ந்தபோது வேண்டுமென்றே திகௌஸ் காலம் கடத்தினர். ஆகையால், செப்டம்பரில் ஜப்பானியர்கள் பொறுமையிழந்து லாங்-சன் (Lang-Son), டோங்-டாங் (Dong-Dong) ஆகிய பிரெஞ்சுத் துறைமுகங்களைத் தாக்கினர்கள். ஹைபாங்கின் மேலும் குண்டு வீசப்பட்டது; பிறகு ஜப்பானியப் படை வீரர்கள் ஹைபாங்கில் வந்து இறங்கினர்கள். ஜப்பானியர்கள் கேட்பதைக் கொடுத்துவிடுமாறு பிரெஞ்சு நாடு திகௌஸுக்குத் தந்தியடித்தது.

உடனடியாக ஏற்பட்ட உடன்படிக்கையின்படி ஜப்பானியப் படைகளுக்கு டொங்கிங்கில் பல வசதிகள் கொடுக்கப்பட்டன. பதிலுக்கு, இந்தோ-சீனுவிலிருந்த பிரெஞ்சு ஆட்சியை ஜப்பான் ஒப்புக்கொண்டது. இவ்வுடன்படிக்கை கி.பி. 1940ஆம் ஆண்டு செப்டம்பர் 22ஆம் நாள் ஹநாயில் ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கையின்படி:

1. டொங்கிங்கில் உள்ள மூன்று விமான நிலையங்களை ஜப்பான் பயன்படுத்தலாம்.

2. டொங்கிங்கில் 6,000 படைவீரர்களை ஜப்பான் நிறுத்தி வைக்கலாம்.

3. ஒவ்வொரு முறையும் 25,000 படை வீரர்களுக்குமேல் இந்தோ-சீனு வழியாகச் செல்லக்கூடாது.

அமெரிக்கப் போர்க் கப்பல்களைப் பேர்ல் துறைமுகத்தில் (pearl Harbour) ஜப்பான் நொறுக்கியவுடன் வியட்நாமிற்கு மற்றுமோர் இறுதி எச்சரிக்கையைக் கொடுத்தது. தென்கிழக்காசிய நாடுகளின்மேல் ஜப்பான் படையெடுத்துச் சென்றால், பிரெஞ்சு நாடு அதற்குத் தடையாக இருக்கக்கூடாது; பிரெஞ்சு

அரசாங்கம் இந்த நிபந்தனையை ஏற்க மறுத்தால் ஜப்பானியப் படைவீரர்கள் வியட்நாமைக் கைப்பற்றுவார்கள் என ஜப்பான் கூறியது. மேலும், வியட்நாமின் பொருளாதார வாய்ப்புகளை ஜப்பானிடம் ஒப்படைக்க வேண்டும். வேறு வழியில்லாமல் திகௌஸ் ஜப்பானியர்களுக்கு விட்டுக் கொடுத்தார். இதனால் ஜப்பானிய அரசை எதிர்ப்பவர்களை ஒதுக்கிவைக்கும் குடியேற்றப் பகுதிகளிலிருந்து 40,000 பிரெஞ்சுக்காரர்கள் விடுதலை செய்யப் பட்டார்கள்; வெளிப்படையில்தான் வியட்நாமில் பிரெஞ்சு அதிகாரம் இருந்தது. இத்தகைய உடன்படிக்கையேற்பட்டதால் இந்தோ-சீனுவிலிருந்த பிரெஞ்சுத் தலைவர்களையும், தொழில் நுட்ப வல்லுநர்களையும், படைவீரர்களையும் ஜப்பான் பயன்படுத்தியது. ஆகையால், ஜப்பானுல் ஆக்கிரமிக்கப்பட்ட மற்றப் பகுதிகளுக்கும் ஜப்பானிய வல்லுநர்களால் போகமுடிந்தது. குடியேற்ற அரசாங்கத்திலிருந்த மேலைநாட்டு அலுவலர்கள் சென்றவுடன் அப் பதவிகளில் அந்நாட்டிலுள்ள பழங்குடிமக்களை ஜப்பான் அமர்த்தியது. மேலும், உள்நாட்டுப் படைவீரர்களுக்குப் பயிற்சி கொடுத்துத் தனக்கு உதவி செய்யத் தூண்டியது. வியட்நாமில் 40,000—50,000 பிரெஞ்சுப் படைவீரர்களிருந்தார்கள். இவர்கள்மேல் மிக்க கவனம் வைத்துக்கொள்வதற்காக இந்தோ-சீனுவிற்கு ஜப்பானியப் படைவீரர்கள் அனுப்பப் பட்டார்கள்.

பிரெஞ்சு வியட்நாம் வலிமையிழந்ததால் மேகாங் நதியின் மேற்கிலுள்ள லாவோஸ் நாட்டின் பகுதிகளையும், பட்டம்பாங், சியாம்ரீப், சிசோபோன் (Sisophon) முதலியவற்றையும் தனக்குக் கொடுக்குமாறு சியாம் கேட்டது. ஆகையால், சியாமிற்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் போர் மூண்டது. இத்தகைய ஒரு தருணத்தைத் தான் ஜப்பானியர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவ்விருவருக்கும் இடையே நடுவராயிருந்து தீர்ப்புக்கூற ஜப்பான் முன்வந்தது. விவாதிக்கப்பட்ட இப் பகுதிகள் சியாமையே சேர்ந்தவை என ஜப்பான் தீர்ப்புக் கூறியது. கி.பி. 1941ஆம் ஆண்டு மே மாதம் இதுபற்றித் தாய்லாந்திற்கும் வியட்நாமிற்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையின்படி இப் பகுதிகளைப் பிரெஞ்சு அரசாங்கம் சியாமிற்குக் கொடுத்தது. (ஆனல் கி.பி. 1945ஆம் ஆண்டில் ஜப்பான் தோல்வியடைந்தவுடன் இப்பகுதிகளைக் கம்போடியாவிற்கும், லாவோஸுக்கும் சியாம் கொடுக்க வேண்டியிருந்தது).

நேசநாடுகளின்மேல் ஜப்பான் போர் தொடுத்தபோதிலும் பிரெஞ்சு அரசாங்கம்தான் வியட்நாமில் ஆட்சிபுரிந்து வந்தது.

தென்கிழக்காசியாவில் வியட்நாமில்தான் குடியேற்ற ஆட்சி விட்டுக் கொடுக்கப்பட்டது. ஜப்பானியர்கள் பிரெஞ்சுக்காரர்களின்மேல் அதிகாரம் செலுத்தியபோதிலும், பிரெஞ்சு நிருவாகத்தில் தலையிடவில்லை. இவர்களுக்குள்ளிருந்த மௌன உடன்படிக்கையின்படி வியட்நாமில் ஜப்பானியப் படைவீரர்கள் கோட்டைகளைப் பாதுகாக்கலாம்; ஜப்பானியப் படைவீரர்களைத் திரட்டித் தயார் செய்யலாம்; ஆனால் நிருவாக அலுவலகங்கள் பிரெஞ்சு அதிகாரத்தின் கீழிருந்தன.

ஜப்பானியப் படைவீரர்கள் கிராமங்களுக்குச் செல்லவில்லை; நகரங்களிலும், பட்டினங்களிலும்தாம் இருந்தார்கள். பொதுவாக, வியட்நாம் பொதுமக்களுக்கு இம் மாறுதலினுல் ஒருவகையான நன்மையும் ஏற்படவில்லை; அவர்களுக்கு இவ் வேறுபாடும் தெரியவில்லை. மாகாணங்களைப் பிரெஞ்சுத் துணைக்காப்பரசின் ஆளுநர்கள் தாம் நிருவகித்தார்கள். தங்களிடைப் போர்த் தேவைகளைப் பிரெஞ்சுக்காரர்கள் நிறைவு செய்ததால் ஜப்பானும் நிருவாகத்தில் தலையிடாமலிருந்தது. ஆட்சி வல்லாண்மை முறைமையை ஆதரித்த விசி அரசாங்கம் கூறியபடி அதனை ஆதரித்த இந்தோ-சீனப் பிரெஞ்சு அரசாங்கம் நடந்துகொண்டது.

கொச்சின்-சீனுவிலுள்ள போர்த்திற நடவடிக்கைக்குப் பயன்படத்தக்க இடங்களுக்குச் செல்வதற்காக ஜப்பானியப் படைவீரர்கள் சைகான் வழியாகக் கடந்து செல்ல அனுமதி தரவேண்டும் எனக் கி.பி. 1941ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிரெஞ்சு அரசாங்கம் திகௌஸுக்கு உத்தரவிட்டது. இதைப்பற்றி அமெரிக்கா கேட்டபோது இடைவிடாமல் உணவுப் பண்டங்கள் ஜப்பானியர்களுக்குக் கிடைப்பதற்காக இத்தகைய சூழ்நிலையை உருவாக்கியிருப்பதாகவும், சீனப்போர் முடிந்தவுடன் ஜப்பானியப் படைவீரர்கள் கொச்சின்-சீனுவைவிட்டு வெளியேறி விடுவார்கள் என்றும் ஜப்பான் பதிலளித்தது. கி.பி. 1941ஆம் ஆண்டு டிசம்பருக்குள் ஜப்பானியப் படைவீரர்கள் கொச்சின்-சீனுவிற்குள் நுழைந்தார்கள்; டிசம்பர் 7ஆம் நாள் அவர்கள் ஹநாயிற்கு வந்து சேர்ந்தார்கள். மறுநாள் 'நேசநாடுகள்' மேல் போர் தொடுப்பதாக ஜப்பான் அறிவித்தது; இச் செய்தியைத் திகௌஸிடமும் கூறியது. இந்தோ-சீனுவிலிருந்த பிரெஞ்சுக்காரர்கள் ஒத்துழைத்தால்தான் பிரெஞ்சுக் குடியேற்ற அரசாங்கம் நீடித்து ஆட்சிபுரியலாம்; இல்லாவிட்டால் ஜப்பானியப் படைவீரர்கள் இந்தோ-சீனுவைக் கைப்பற்றுவார்கள்.

ஆழ்ந்து ஆராய்ந்த திகௌஸ் ஜப்பானியர்கள் கூறியதை ஏற்றுக் கொண்டார். பிரெஞ்சு முதல் ஆட்சித் தலையுரிமை ஒப்புக் கொள்ளப்பட்டது. பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் படைகளைத் தங்கள் அதிகாரத்தின்கீழ் வைத்துக் கொள்ளலாம்; நாட்டையும் தாங்களே பொறுப்பேற்று நிருவகிக்கலாம். இந்தோ-சீனாவிலிருந்து நேச நாடுகளை எதிர்த்துப் போர்புரிய ஜப்பானியர்களுக்கு உரிமையும் அதிகாரமும் இருந்தன.

போரின்போது பொருளாதார வளர்ச்சி

ஜப்பானுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஒரு பொருளாதார உடன்படிக்கையேற்பட்டது. இவ் வொப்பந்தத்தின்படி உணவுப் பண்டங்களையும் (முக்கியமாக அரிசி), போருக்குத் தேவையான பொருள்களாகிய மக்கனம், மின்னிழைமம் (Tungsten), மற்றும் பல தாதுப் பொருள்களையும் வாங்க ஜப்பானுக்கு உரிமை கொடுக்கப் பட்டது. வியட்நாமில் பிரெஞ்சு வணிகர்களுக்கு இருந்தவை போன்ற பல சலுகைகள் ஜப்பானியர்களுக்கும் கொடுக்கப்பட்டன.

ஜப்பானியக் கப்பல்களைப் பிரிட்டிஷ் கப்பல்களும் அமெரிக்கக் கப்பல்களும் தாக்கித் துன்புறுத்தியதால் நுகர்வோர் பொருள்கள் மிகவும் குறைந்தன; அதனால் இறக்குமதி நிறுத்தப்பட்டது. எண்ணெயும் எரிபொருள்களும் தீர்ந்தன; தொழிற்சாலைகள் மூடப் பட்டன. பிரெஞ்சுத் தொழில்நுட்ப வல்லுநர்கள் மீண்டும் வேலை செய்யத் தொடங்கியதால் செயற்கை மசகுப் பொருள்களும் (Synthetic lubricants) எரி எண்ணெய்ப் பொருள்களும் உற்பத்தி செய்யப்பட்டன. அரிசியிலிருந்து எடுக்கப்பட்ட சாராயமும், புல்லினமர எண்ணெயும் பயன்படுத்தியதால் இயந்திரங்கள் வேலை செய்யத் தொடங்கின.

வியட்நாமியப் பொருள்கள் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டன. அரிசி, இரப்பர், தாதுப்பொருள்கள் முதலியவை வியட்நாமிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன; பதிலாக, தொழிற் சாலை ஆக்கத்தொழில் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. ஏற்றுமதியைவிட இறக்குமதி குறைவாயிருந்ததால் பொருள்களின் விலை வியட்நாமில் ஏறிக்கொண்டே சென்றது. கையுறு பொருள்களை விடத் தேவை அதிகமாயிருந்தது. கி.பி. 1943ஆம் ஆண்டி லிருந்து நேசநாடுகளின் கடல் நிலவழித் தடை பெருகியதால் இறக்குமதி நின்றுவிட்டது. ஜப்பானுக்குச் செல்லவேண்டிய தாதுப்பொருள்கள் சரக்கேற்றி இறக்கும் மேடையிலிருந்து நீக்கப் படவில்லை. ஜப்பானியக் கப்பல்களாலும் இப் பொருள்களை எடுத்துக்கொண்டு செல்ல முடியவில்லை.

சுரசுரப்பான சவர்க்காரக் கட்டிகளையும் (Soap), தாள்களையும் உற்பத்தி செய்தார்கள். நெய்ப்பொருள்கள் குறைவை ஈடுகட்டச் சணல் பயிரிட்டார்கள்; பாஸ்தியர் (Pasteur) நிறுவனம் மருந்துச் சரக்குகளை உற்பத்தி செய்தது; மலேரியாவைப் போக்குவதற்குத் தேவையான கொயினை (quinine) உற்பத்தி செய்யப்பட்டது; வெப்பக் காற்றூட்டப்பட்ட உலைகள் மிகவும் தேவைப்பட்ட தேனிரும்பை (Pigiron) செய்வதற்காகக் கட்டப்பட்டன. இரப்பர் டயர்கள் உற்பத்தி செய்வதற்காக உள்நாட்டு இரப்பர்கள் பயன் படுத்தப்பட்டன. வியட்நாமில் முதல்முதலாக மின்கலங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. வியட்நாமில் பிரெஞ்சு அதிகாரத்தின் கீழ் அச்சடிக்கப்பட்ட செலாவணியும் நடைமுறையிலிருந்தது. ஜப்பானியர்கள் அச்சடித்த 'வாழைப்பழக் காகிதச் செலாவணி' களைவிட (banana notes) இதன் மதிப்பு அதிகமாயிருந்தது.

ஜப்பானியர்களின் கலாசாரப் பிரசாரத்தை எதிர்க்கும் நோக்கத்துடன் திகௌஸ் சமுதாயச் சீர்திருத்தங்கள் செய்யத் தொடங்கினார், 'இளைஞர்களும் போட்டி விளையாட்டுகளும்' என்ற இயக்கத்தைக் கடற்படைத் தளபதி டுயூகோராய் (Captain Ducoroy) தலைமையில் தொடங்கினார். தலைமையேற்று நடத்தும் ஆற்றல், ஒழுங்குமுறை, முயற்சி தொடங்குநிலை, தன்திற நம்பிக்கை ஆகியவற்றைப் பற்றி ஆயிரமாயிரம் வியட்நாம் இளைஞர் களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது. ஜப்பானியர்களின் பள்ளிக் கூடங்களின் செல்வாக்கைக் குறைப்பதற்காகப் பிரெஞ்சுக் கல்வி முறை வியட்நாம் எங்கும் தீப்போல் பரவியது. கலைத் திறனுக்கும் ஊக்கம் கொடுக்கப்பட்டது. ஹநாய்ப் பல்கலைக்கழகத்தில் ஒரு அறிவியற் கலைக்குழு அமைக்கப்பட்டது.

ஊதியங்கள் உயர்த்தப்பட்டதால் வியட்நாமியர்களுக்கு நன்மை விளைந்தது. வியட்நாமியர்களுக்கும் பிரெஞ்சுக்காரர் களுக்கும் ஒரேவகையான வேலைக்கு ஒரேவகையான ஊதியம் கொடுக்கப்பட்டது; பொதுநலத்துறை வளர்க்கப்பட்டது; ஹைபாங்கில் அதிக சிமெண்ட் கிடைத்ததால் நாகரிகமான கட்டடங் களும், பாலங்களும், சாலைகளும் அமைக்கப்பட்டன. லுவாங் பிரபாங்கிலிருந்து சைகானுக்குச் செல்லும் நெடுஞ்சாலை 1000 மைல் கள் நீளம் உடையது ஆகும். நிலச் சீர்திருத்தங்கள் செய்ததால் வியட்நாமியர்களுக்கு நன்மை விளைந்தது. கூட்டரசு அமைப்பு மன்றத்திற்கு 30 வியட்நாமிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டார்கள்; 23 பிரெஞ்சு உறுப்பினர்கள் இருந்தார்கள். வியட்நாமியர்களுக்கு இம் மன்றத்தில் பெரும்பான்மையிருந்தபோதிலும், தலைமை

ஆளுநருக்குச் சர்வாதிகாரங்கள் இருந்தன என்பதை மறக்கக் கூடாது.

ஜப்பானிய ஆதிக்கத்தின்போது வியட்நாமியர்களின் தேசிய இயக்கம்

வியட்நாமியர்களுக்குப் பிரெஞ்சு அரசின்மேல் பற்று வருவதற்காகத் திகௌஸ் முயற்சி செய்தார். ஆனல், பிரெஞ்சு ஆட்சியின் மேல் நம்பிக்கை வருவதற்குப் பதிலாக வியட்நாமியர்களின் வியட்நாம்மேல் அவர்களுக்கு ஆசை கிளம்பியது. ஜப்பானியர்களின் 'பரந்தகன்ற கிழக்காசிய'த் திட்டத்தை (Greater East Asia) எதிர்க்கும் நோக்கத்துடன் இந்தோ-சீனக் கூட்டாட்சி அமைப்புத் திட்டத்தைப்பற்றித் (Indo-Chinese Federation) திகௌஸ் அறிவித்தார். ஆனல், பிரெஞ்சு ஆட்சியின்மேல் அன்பைக் கிளப்பவில்லை; வியட்நாம் சுதந்திரத்தைப்பற்றிய செய்தியைத்தான் வியட்நாமியர்கள் பரப்பத் தூண்டியது. இளைஞர் சங்கங்களிலிருந்த ஒரு மில்லியன் வியட்நாமியர்களுக்குப் படைப் பயிற்சி கொடுக்கப்பட்டது. இச் சங்கங்களே வியட்நாமின் தேசிய வளர்ச்சிக்குகந்த இடமாய் மாறின. ஆகையால், இளம் வியட்நாமியர்கள் ஒன்றுசேர்ந்து புரட்சி செய்யத் தயாராக இருந்தார்கள்.

தேவையான அளவுக்குப் பிரெஞ்சு நிருவாகிகள் இல்லாமலிருந்ததால் அதிக வியட்நாமியர்களுக்கு அரசாங்க உத்தியோகங்களைத் திகௌஸ் கொடுத்தார். இதன்பயனுல் தங்களால் நாட்டை நிருவகிக்க முடியும் என்ற தன்னம்பிக்கை வியட்நாமியர்களிடம் பிறந்தது. திகௌஸ் திட்டங்கள் வியட்நாமியர்களின் தன்னுட்சி ஆசையை வளர்த்தன. வியட்நாமிய உயர்குடிமக்களுக்குச் சலுகைகள் கொடுத்துப் பிரெஞ்சு அரசாங்கத்திற்கு ஆதரவு தேட வேண்டும் என்பதே திகௌஸின் நோக்கம். தேசிய இயக்கங்களை எதிர்ப்பதாக அவரே கூறினுர். ஏனென்ருல் 'எல்லாவகையான தேசிய இயக்கங்களும் அன்னியர் வாடையை எதிர்க்கின்றன, அன்னியப் பொருள்கள் மீது வெறுப்புக் கொள்கின்றன. பிரெஞ்சுக்காரர்களை எதிர்க்கும் எண்ணம் படைத்தவை, வெளிநாடுகளிலிருந்து அறிவுரைகள் பெறுகின்றன' எனத் திகௌஸ் கூறினுர்.

அயல்நாடுகளிலிருந்த தேசியவாதிகள்

குவாமின்டாங்கையும் கம்யூனிஸ்டுகளையும் ஆதரித்த, அல்லது வியட்நாமை ஆதரித்த வியட்நாமியர்கள் கி.பி. 1941ஆம் ஆண்டில் வியட்நாமை விட்டு வெளிநாடுகளில் சென்று ஓடி ஒளிந்தனர். இவர்களெல்லாம் இறுதியாக டொங்கிங் எல்லையருகிலுள்ள தென் சீனுவில் ஒன்றுசேர்ந்து சந்தித்தார்கள். சீனுவிலிருந்த குவாமின்

டாங் ஆட்சியாளர்கள் இவர்களுக்கு உதவித்தொகை கொடுத்தும், வியட்நாமிலுள்ள பிரெஞ்சு ஜப்பானிய ஆட்சியைக் கவிழ்ப்பதற்காகப் பயிற்சி கொடுத்தும் ஆதரித்தார்கள்.

ஹோசிமின் தலைமையில் வியட்நாமியக் கம்யூனிஸ்டுகள் சீனுவில் ஒரு மாநாட்டை நடத்தினுர்கள். வியட்நாம் தேசிய இயக்கத்திற்குச் சிறப்புக் கொடுப்பதென்றும், கம்யூனிஸ்டு நோக்கத்தைத் தாற்காலிகமாக ஒதுக்கிவைப்பதென்றும் இம் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆகையால், நிலச் சீர்திருத்தங்களுக்கும், சமுதாயப் பிரிவுப் புரட்சிக்கும் முதன்மை கொடுக்காமல், வியட்நாமியச் சுதந்திரப் போராட்டத்திற்கே இவர்கள் முதன்மை கொடுத்தார்கள். இவ்வாறுன குறிக்கோளிருந்த தால்தான் வியட்நாமிலுள்ள எல்லா மக்களின் ஆதரவும் கிடைக்கும் என நம்பினுர்கள். ஆகையால், வியட்நாம் சுதந்திரத்திற்காகப் போராடும் சங்கம் (League for the Independence of Vietnam) ஒன்றை நிறுவினுர்கள். இச் சங்கம் வியட்மின் (Viet Minh) என்று எல்லாராலும் அழைக்கப்பட்டது. ஹோசிமின் இதன் பொதுச் செயலாளராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். கம்யூனிஸ்டு அல்லாத தேசியவாதிகளும் இச் சங்கத்தின் உறுப்பினர்களாகச் சேர்ந் தார்கள்.

ஹோசிமினின் உண்மையான பெயர் என்குயன் அய் க்வாக் (Nguyen Ai Quoc). என்குயன் என அழைக்கப்பட்ட காலத்தில் இவர் கம்யூனிஸ்டாயிருந்ததால் குவாமின்டாங் ஆட்சியாளர்கள் இவரைக் கைது செய்தார்கள். வியட்நாமிலுள்ள ஜப்பானியர்களின் நடவடிக்கைகளைப்பற்றி அச்சமயத்தில் கம்யூனிஸ்டு அல்லாத தேசியவாதிகள் சீனுவிற்குச் செய்தி அனுப்பினுர்கள். ஆனுல், இவர்களிடம் வலிமையும் திறமையுடைய ஒரு கழகம் இல்லாததால் சரிவரச் செய்திகளை அனுப்ப முடியவில்லை. வியட்மின்தான் இத்தகைய செய்திகள் அனுப்புவதற்கேற்ற சங்கம் எனச் சீனு தீர்மானித்து, கி.பி. 1943ஆம் ஆண்டில் என்குயன் அய்க்வாக்கைச் சீனச் சிறையிலிருந்து விடுதலை செய்தது. ஹோசிமின் (Hoch Minh) ஒளியூட்டும் ஹோ (Ho The Enlightened) என்ற பெயரை வைத்துக்கொண்டார். உடனடியாகப் புரட்சிக்காரர்களைக் கூட்டி ஒன்றுபடுத்த முயற்சியெடுக்கத் தொடங்கினுர்.

கி.பி. 1944ஆம் ஆண்டில் வியட்மின் வியட்நாமில் இரகசியமாக ஊடுருவிப் பரவியது. ஜப்பானியர்களைக் கவிழ்க்கவேண்டிய சதி வேலைகளைச் செய்யத் தொடங்கினுர்கள் வியட்மின்கள். நேச நாடுகளின் உதவியை நாடி வியட்நாமை ஜப்பானியர்களின் ஆதிக்கத்தி

லிருந்து விடுவிக்க வேண்டும் என்பதே இவர்கள் நோக்கம். இவர்களுக்கு நேசநாடுகள் பதிலளிக்கவில்லை; பிரெஞ்சு அரசாங்கம் இவர்களின் வேண்டுகோளை மறுத்தது. ஆண்டின் இறுதியில் ஹோசிமின் டொங்கிங்கிற்குத் திரும்பினர்; வியட்மின்னுடன் சேர்ந்தார். நேசநாடுகள் இந்தோ-சீனுவிற்குள் நுழையும் முன்பே மக்களை ஒன்றுதிரட்டிப் புரட்சி செய்து ஜப்பானியர்கள் போர்க் கருவிகளைக் கீழே போடும்படிச் செய்யவேண்டும்; பிறகு வியட்மின் இந்தோ-சீனுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் வியட்நாமியர்களின் சுதந்திரத்தை ஏற்றுக்கொள்ளும்படி நேசநாடுகளை வற்புறுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் இவர்கள் தக்க தருணத்திற்காகக் காத்திருந்தார்கள்.

வியட்நாமில் பிரெஞ்சு எதிர்ப்பு இயக்கம்

கி.பி. 1945ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 9ஆம் நாள் ஜப்பானியர்கள் வியட்நாமில் பிரெஞ்சு ஆட்சியைக் கவிழ்க்காதிருந்தால் வியட்மின்னுடைய நோக்கம் நிறைவேறியிருக்காது. திடீரென்று எதிர்பாராதவிதமாக ஜப்பானியர்கள் கி.பி. 1945ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் அரசியல் மாறுபாட்டைச் செய்தார்கள். பிரெஞ்சுக்காரர்களுக்கு இது வியப்பை விளைவித்தது. இரகசியமாக ஜப்பானியப் போர்வீரர்கள் அவர்களுடைய இடங்களில் வந்து சேர்ந்து இச் செயல்புரிந்தார்கள். என்ன நடக்கிறது என்று பிரெஞ்சுக்காரர்களுக்குப் புரியவேயில்லை.

கி.பி. 1945ஆம் ஆண்டு மார்ச்சு 9ஆம் நாள் திகௌஸிடம் ஜப்பானியர்கள் ஓர் இறுதி எச்சரிக்கையைக் கொடுத்தார்கள்; இதன் விளைவால்தான் அரசியலில் இவ்வகையான திருப்பம் தோன்றியது. திகௌஸ் கைது செய்யப்பட்டார். போர்த்திற நடவடிக்கைக்குப் பயன்படத்தக்க இடங்களிலிருந்த ஜப்பானியப் படை வீரர்கள் சூழ்ந்துகொள்ளத் தொடங்கினர்கள். சில இடங்களில் சண்டை நடந்தது. ஆனால், விரைவிலேயே பிரெஞ்சுப் படைவீரர்கள் போர்க்கருவிகளைக் கீழே போட்டார்கள். அவர்கள் சிறையிலே அடைக்கப்பட்டார்கள். பிரெஞ்சு ஆட்சியிலிருந்து வியட்நாம் விடுதலை அடைந்துவிட்டதென்று மன்னர் பாவோதையிடம் ஜப்பான் மார்ச்சு 10ஆம் நாள் அறிவித்தது. மறுநாள் பாவோதையை இணங்கவைத்து வியட்நாம் சுதந்திரம் அடைந்துவிட்டது என அறிவிக்கப்பட்டது. ஆனல், இப்போது இவ்வறிவிப்பை வியட்மின் ஏற்றுக்கொள்ளவில்லை.

எக்காரணத்தை முன்னிட்டு ஜப்பான் இத்தகைய நடவடிக்கைகளை எடுத்தது? கி.பி. 1944ஆம் ஆண்டுக் கோடைக்காலத்தில்

ஐரோப்பியச் சூழ்நிலேயே இதற்குக் காரணமாகவிருக்கலாம். நேசநாடுகள் பிரெஞ்சு நாட்டை விடுதலே செய்ததால் விசி அரசாங்கம் கவிழ்ந்தது. ஆகையால், திகௌஸ் விசித் தலேவரின் கீழ்த் தொடர்ந்து பணிபுரிய முடியவில்லே; ஆகையால் ஜப்பானும் வியட்நாமிலுள்ள பிரெஞ்சு ஆட்சியைத் தொடர்ந்து ஒப்புக்கொள்ள வேண்டும் என்ற நிலேமை நீங்கியது. மேலும், ஜப்பானியர்களே வியட்நாமில் எதிர்ப்பதற்காகப் பிரெஞ்சுக்காரர்கள் முயற்சிசெய்து கொண்டிருக்கிருர்கள் என்பது வெளிப்படையாக எல்லோருக்கும் தெரிந்ததே. நேசநாடுகளின் படை வியட்நாமிற்குள் நுழையும் நேரத்தைத்தான் அவர்கள் எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள்; வந்தவுடன் ஜப்பானியர்களுடன் போர்புரியலாம் எனக் காத்துக் கிடந்தார்கள். 'வான்குடை மிதவை' (Parachute) மூலம் கிடைத்த போர்க்கருவிகளே அவர்கள் சேர்த்து வைத்திருந்தார்கள்; ஜப்பானியர்களேத் தாக்குவதைப்பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்கள். அமெரிக்கர்களுடன் சேர்ந்து இந்தோ-சீனுவை ஜப்பானிய ஆட்சியிலிருந்துவிடுதலே செய்யவேண்டும் என்பதே அவர்கள் நோக்கம். ஆகையால், பிரெஞ்சுக்காரர்கள் தங்களேத் தாக்கும்வரை காத்திருக்காமல், ஜப்பானியர்களே பிரெஞ்சுக்காரர்களே முதலில் தாக்கினுர்கள். வியட்நாமைப் பிரெஞ்சுக்காரர்கள் வைத்துக்கொள்ளவேண்டும் என்ற நோக்கத்துடன் அமெரிக்கர்கள் பிரெஞ்சுக்காரர்களுக்கு உதவிசெய்யமாட்டார்கள் என ஜப்பானுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் தெரியாது. கி.பி. 1943ஆம் ஆண்டில் இவ்வாருன தீர்மானத்தை மக்கள் தலேவர் எப்.டி. ரூஸ்வெல்ட் கொண்டு வந்தார். வியட்நாமைப் பிரெஞ்சுக்காரர்களுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக ஏதாவது ஒருவகையான பொறுப்பாண்மை ஆட்சியமைக்க வேண்டும் என்ற கருத்தை அவர் தெரிவித்தார். வின்ஸ்ட்டன் சர்ச்சில் மட்டும் இதை எதிர்த்தார். தம்முடைய பொறுப்பாண்மைக் கருத்தை மீண்டும் 1945ஆம் ஆண்டு பிப்ரவரியில் ரூஸ்வெல்ட் தெரிவித்தார். அமெரிக்கப் படைவீரர்கள் எக்காரணத்தைக் கொண்டும் பிரெஞ்சுக்காரர்களுக்கு இந்தோ-சீனுவில் உதவிபுரியக் கூடாது என ரூஸ்வெல்ட் கட்டளேயிட்டார். போர்க்கருவிகளேயும் மற்றும் பிரெஞ்சுக்காரர்களுக்குத் தேவையான பொருள்களேயும் பிரிட்டன் மட்டும் வான்குடை மிதவை மூலம் கொடுத்தது. மக்கள் தலேவர் ரூஸ்வெல்ட்டின் மனத்தை மாற்றத் தீவிரமான முயற்சிகள் செய்யப்பட்டன. அவரும் இறுதியாகக் கி.பி. 1945ஆம் ஆண்டு மார்ச்சில் தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டார். ஆனுல், இம் மனமாற்றம் மிகத் தாமதமாக வந்ததால் பிரெஞ்சுக்காரர்களுக்கு உதவிபுரிய முடியவில்லே. அறுபது ஆண்டுக் குடியேற்ற ஆட்சிக்குப் பிறகு பிரெஞ்சு ஆட்சி வியட்நாமில் முடிவடைந்தது. அந்த

அறுபது ஆண்டுகளையும் வியட்நாமியர்கள் மனமார வெறுத்தார்கள் என்பது பிரெஞ்சுக்காரர்களுக்குத் தெரியாது.

கி.பி. 1945ஆம் ஆண்டு மார்ச்சு 11ஆம் நாள் ஜப்பானியத் தூதுவர் பேரரசர் பாவோதையைச் சந்தித்து வியட்நாமின்-கொச்சின்-சீனவைத்தவிர சுதந்திரத்தை ஜப்பானியர்களின்கீழ் ஏற்றுக்கொள்ளும்படி வலியுறுத்தினர். பேரரசரும் இதை ஏற்றுக் கொண்டார். மக்கள் விருப்பப்படிப் பேரரசர் என்பகோதின்தியமைப் பிரதம மந்திரியாக இருக்கும்படிக் கேட்டுக்கொண்டார். தியம் ஒரு தீவிர தேசியவாதி; வியட்நாமுக்கு முழுச் சுதந்திரத்தைத் தவிர வேறு எவ்வகையான கட்டுப்பாடுகளுள்ள சுதந்திரத்தையும் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்பது ஜப்பானியர்களுக்கு நன்கு தெரியும். பேரரசர் கொடுத்த தந்தி தியமுக்குக் கிடைக்கவே யில்லை. ஆகையால் ட்ரான்ட் ரோங் கிம் (Tran Trong Kim) கி.பி. 1945ஆம் ஆண்டு பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

கிம்முடைய அமைச்சர் அவை வலிமையில்லாமலிருந்தது. ஜப்பானியர்களுடன் ஒத்துழைத்தார்கள் எனப் போருக்குப் பிறகு குற்றம் சாட்டப்படுமோ என அஞ்சி எச்சரிக்கையுடன் திறமை யில்லாமல் ஆட்சிபுரிந்தார்கள். ஜப்பானியர்கள் தொடர்ந்து வியட்நாமை ஆட்சிபுரிந்ததால் தங்களிடம் அதிகாரம் இல்லை என்பதும் இவர்களுக்குத் தெரியும். கொச்சின்-சீனவிலுள்ள பொருள்களை—முக்கியமாக அரிசி, இரப்பர் சுரண்டுவதற்காக ஜப்பானியர்கள் அப் பகுதியில் அதிகமாகக் கவனம் செலுத்தி னர்கள். டொங்கிங்கில் ஒரு ஜப்பானியப் படைவீரர்கூடக் கிடையாது. ஆகையால், இப் பகுதிக்குள் வியட்நாமின் வீரர்கள் நுழைந்தார்கள்; அங்கிருந்து இவர்கள் வடவியட்நாம் முழுவதும் பரவினர்கள்.

தங்களுடைய வடதளங்களிலிருந்து வியட்மின் ஒரு புதிய வியட்நாமை அறிவித்தது; ஜப்பானியர்களுக்கு எதிராக எழுந்து அதனிடம் அடைக்கலம் புகுந்தது. ஆகஸ்டு 16ஆம் நாள் மக்கள் தேசிய விடுதலைக்குழு ஒன்றை ஹோசிமின் தலைமையில் வியட்மின் அமைத்தது. ட்ரான் ட்ரோங் கிம் அரசாங்கம் ஜப்பானியர்களின் கைக்கூலி எனப் பிரசாரம் செய்து வியட்மின்னை ஒப்புக்கொள்ள மறுத்தது. ஆனல், எல்லாத் தேசியவாதிகளும் வியட்மின்னை ஆதரித்தார்கள்.

இச் சூழ்நிலையில் பேரரசர் பாவோதை பதவியைத் துறக்க முடிவு செய்தார்; தம்முடைய அதிகாரத்தை வியட்நாம் குடியரசிடம் ஒப்படைக்கப் போவதாகவும் அறிவித்தார். இதை

வியட்மின் மகிழ்ச்சியுடன் வரவேற்றது. கி.பி. 1945ஆம் ஆண்டு ஆகஸ்டு 26ஆம் நாள் பேரரசர் பதவியிலிருந்து விலகினர்; பின்னர் அவர் வின்துய் என்ற பெயருடன் பொதுமக்களில் ஒருவராயிருந்தார். வியட்நாம் குடியரசு பிறந்தது; குடியரசு அரசாங்கத்தின் உயர் அதிகாரம் உள்ள அரசியல் ஆலோசகராக வின்துய் நியமிக்கப் பட்டார். வியட்நாம் சுதந்திர அறிக்கையை 5,00,000 வியட் நாமியர்கள் முன்பு ஹோசிமின் படித்தார்.

வியட்நாம், கம்போடியா, லாவோஸ் (கி.பி. 1966 வரை)

இரண்டாம் உலகப்போர் முடிந்தவுடன் இந்தோ-சீன மக்கள் இந்தோனேசியர்களைவிட மிகவும் துன்புற்றனர். ஏழு ஆண்டுப் போருக்குப்பின்தான் பிரெஞ்சு நாடு கம்போடியா, லாவோஸ், வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு விடுதலை அளிக்க முன்வந்தது.

வியட்நாம்

ஜப்பானியர்கள் பொறுத்துக்கொண்டதால் விசி (Vichy) அரசாங்க அதிகாரத்தின் கீழிருந்த பிரெஞ்சு நாடு 1945 மார்ச் 9 வரை இந்தோ-சீனுவுடன் சேர்ந்திருந்தது. இதன் பிறகு ஜப்பானியர்கள் பிரெஞ்சு அரசாங்கத்தை இந்தோ-சீனுவிலிருந்து வெளியேற்றி, நேர்முக இராணுவ ஆட்சியை அமைத்தார்கள். வியட்நாமியத் தேசியவாதிகள் வியட்மின் அல்லது வியட்நாம் சுதந்திரக் கழகம் (League for the Independence of Vietnam) ஒன்றை நிறுவினர்கள். இக் கழகம் அமெரிக்கக் குடியரசின் உதவியுடன் இரகசிய இயக்கத்தின் மூலம் வியட்மின் ஜப்பானியர் களை எதிர்த்தது. பிரெஞ்சு அரசாங்கத்தினல் ஆதரிக்கப்பட்ட அன்னம் (Annam) பேரரசர் பாவோ தை (Bao Dai) தம் கீழிருந்த பகுதிக்குச் சுதந்திரமளிக்க, விழும் நிலையிலுள்ள ஜப்பானியர்கள் அனுமதி கொடுத்தார்கள். சில காலம் கழித்து இப் பகுதிக்கு வியட்நாம் எனப் பெயரிட்டது. இவ்வாறே கம்போடியா, லாவோஸ் ஆகிய நாடுகளின் அரசர்களுக்கும், தங்கள் நாடு களுக்கும் சுதந்திரம் கிடைத்துவிட்டது என அறிவிக்க அனுமதி கொடுக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போர் முடிந்த பிறகு, ஒரு கூட்டாயிருந்த இந்தோ-சீனக் குடியேற்ற நாடு மூன்று சுதந்திரப் பகுதிகளாய்ப் பிரிந்தது.

பிரெஞ்சு ஆட்சியின் வருகை

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, சுதந்திரப் பிரெஞ்சு அரசாங்கம், பாதியளவில் சுதந்திரமடைந்த இந்தோசீனு (Quasi-

Independent Indochina) பிரெஞ்சுக் கூட்டரசின் உறுப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என அறிவித்தது. பாட்ஸ்டாமில் (Potsdam) கி.பி. 1945ஆம் ஆண்டு ஜூலையில் இந்தோ-சீனச் சுதந்திரம்பற்றி நட்புநாடுகள் ஒரு திட்டம் வகுத்தன. இத் திட்டத்தின்படி சியாங்-கை-சேக் (Chiang-Kai-Shek) தலைமையில் சீனு வடக்கிலிருந்தும், ஆங்கிலேயர்கள் தெற்கிலிருந்தும் படையெடுக்க வேண்டும். இதற்கிடையில் டொங்கினில் (Tongkin) வியட்மின் தாற்காலிகமாக ஓர் அரசாங்கத்தை அமைத்தது. ஜப்பானியர்கள் அடைக்கலம் தந்தவுடன், பாவோதை தம் அரசப்பதவியைத் துறந்து, அதிகாரத்தைத் தாற்காலிகமான வியட்நாம் அரசாங்கத்திடம் ஒப்படைத்தார். இவ் வரசாங்கம் ஹநாய்க்கு மாற்றப்பட்டது. ஹோசிமின் (Hochi Minh) தலைமையின்கீழ் கி.பி. 1945ஆம் ஆண்டு செப்டம்பர் 21ஆம் நாள் வியட்நாமிற்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று அறிவிக்கப்பட்டது. கி.பி. 1946ஆம் ஆண்டு பிப்ரவரிக்குள் பிரெஞ்சு ஆட்சி மீண்டும் இந்தோ-சீனுவில் ஏற்பட்டது. கம்போடியாவிலும் லாவோஸிலும் பிரெஞ்சுக் காப்பாட்சி (Protectorates) அமைக்கப்பட்டது. ஆனல், வியட்நாமின் வரலாற்றில் வேறுவகையான திருப்பம் ஏற்பட்டது. சைகோனில் போர் மூண்டது. இப்போரில் பிரிட்டனும் பிரான்சும் வெற்றியடைந்தன. பதினும் இணைத் தொகு கோட்டிற்கு (16th Parallel) வடக்கே, அதாவது ஹநாய்க்கு அருகே, ஹோசிமின் ஆட்சி புரிந்தார். ஹோசிமின் பாவோதையைத் தம்முடைய பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்து ஹாங்காங்கிற்கு அனுப்பினர். ‘எல்லோரும் சுதந்திரத்திற்காக ஏங்குவதை நீங்கள் நேரடியாகப் பார்த்தால்தான் புரிந்துகொள்வீர்கள். நீங்கள் மீண்டும் பிரெஞ்சு ஆட்சியை அமைத்தால், யாருமே அதற்கு அடங்கி நடக்கமாட்டார்கள். ஒவ்வொரு கிராமமும் உங்களை எதிர்க்கும் நாடாக மாறும். உங்களுடைய அதிகாரிகளே இதைப் பார்த்து நாட்டைவிட்டு வெளியேற விரும்புவார்கள்’ என டிகாலுக்கு (De Gaulle) பாவோதை கடிதம் எழுதினர். இதற்கிடையே ஹோசிமினுடன் ஆட்சி அதிகாரத்திற்காகப் போட்டியிட்ட சீனகுயோ மின்பங்கை ஹோசிமின் முறியடித்தார். ஹோசிமின் திட்டங்களை வியட்நாமின் உழவர்கள் வரவேற்றனர்கள். குறைந்த வரியும், குறைவான வாடகையும் வன்முறையில் கூலி வேலையும் இனிமேல் இருக்காது என்று ஹோசிமின் அறிவித்தார். உணவுப் பண்டங்கள் அதிகமாகக் கொடுப்பதாகவும், சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்வதாகவும், கல்வி வசதிகளை அதிகரிப்பதாகவும் ஹோசிமின் வாக்களித்தார். கி.பி. 1945ஆம் ஆண்டு நவம்பரில் தம்முடைய கம்யூனிஸ்டுக் கட்சியைக் கலைத்து, மாருக

மார்க்ஸிஸம் கற்பிக்கும் சங்கம் (Association for the Study of Marxism) ஒன்றை நிறுவினர்.

கி.பி. 1946ஆம் ஆண்டு பிப்ரவரி 28ஆம் நாள் ஹோசிமின்னும், பிரான்சும் சீனர்களுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். இவ் வொப்பந்தத்தின்படி வியட்நாமில் அட்டூழியம் செய்துகொண்டிருந்த சீனப்படை வியட்நாமை விட்டு வெளியேறியது. ஒரு வாரத்திற்குப் பிறகு மார்ச்சு 6ஆம் நாள் ஹோசிமின்னுக்கும், பிரான்சுக்கும் ஓர் உடன்படிக்கை யேற்பட்டது. இவ் வுடன்படிக்கையின்படி வியட்நாமைக் கட்டற்ற (free), ஆனால் சுதந்திரமில்லாத நாடாகப் பிரெஞ்சுக் கூட்டரசுக்குள் பிரான்சு ஏற்றுக்கொள்ள வேண்டும். வடக்கு வியட்நாமிற்குப் பிரெஞ்சுப் படை திரும்பி வரும் சமயத்தில், மீண்டும் வியட்நாமிற்குள் நுழையும் பிரெஞ்சு ஆட்சி எவ்வாறு அமையவேண்டும் என்பதைப் பற்றிக் கலந்து பேச ஹோசிமின் பிரான்சுக்குச் சென்றார். கி.பி. 1946ஆம் ஆண்டு செப்டம்பரில் இவர் ஓர் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டார். கி.பி. 1954ஆம் ஆண்டுவரை இவ் வுடன்படிக்கையே இவ்விரு கட்சிகளிடம் ஏற்பட்ட கடைசி உடன்படிக்கையாகும்.

வியட்நாமில் உள்நாட்டுப் போர் (கி.பி. 1946—1954)

ஹோசிமின் திரும்பிய பிறகு வியட்நாமியர்களுக்கும், பிரான்சுக்கும் போர் மூண்டது. இவ்விரு கட்சியினரும் ஒருவரை ஒருவர் தாக்கிப் பழி சுமத்தினர். தொடக்கத்தில் இப்போர் சாதாரணமாக இருந்தது. அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸில் நடந்து கொண்டது போலவும், ஆங்கிலேயர்கள் இந்தியாவில் நடந்து கொண்டது போலவும் பிரான்சு நடந்து கொண்டால், வியட்நாமியர்கள் பிரெஞ்சு அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் என ஹோசிமின் அறிவித்தார். ஹோசிமின் பிடியிலிருந்து வியட்நாமை விடுவிக்க வேண்டும் என்ற எண்ணம் கி.பி. 1947ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பிரெஞ்சு அரசாங்கத்திடம் வலுவடைந்திருந்தது. ஹோசிமின் அரசாங்கம் மாஸ்கோவின் கைப்பாவை எனப் பிரான்சு கருதியது. வியட்நாமியர்களின் தேசிய இயக்கத்தை அவமதித்தது, பிரான்சு செய்த மிகப்பெரிய தவறு ஆகும். இதன் காரணமாகத் தேசிய இயக்கத்தின் தலைமைப் பதவியை ஹோசிமின்னும் அவர் நண்பர்களும் எளிதாகக் கைப்பற்றினர்கள்.

போர் தொடர்ந்து நடந்துகொண்டிருந்த சமயத்தில், வியட்நாமைப் பிரிக்கப் பிரான்சு முயற்சி செய்தது. சீனவில்

கம்யூனிஸ்டு வெற்றியடைந்ததால் வியட்நாமின் சூழ்நிலையில் மாறுதல்கள் ஏற்பட்டன. கம்யூனிஸத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் நடக்கும் உலகப்போர், அடுத்தபடியாக வியட்நாமில் நடக்கும் என்ற சூழ்நிலை உருவாகியது. ஹோசிமின்னிற்கு எதிராகப் பாவோதையின் தலைமையின்கீழ் ஓர் அரசாங்கத்தை பிரான்சு அமைத்தது. கி.பி. 1949ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் நாள் தென்வியட்நாமில் பாவோதையின் ஆட்சி தொடங்கியது. இதிலிருந்து 'வியட்நாம்' என்ற சொல்லுக்கு இரு பொருள் தோன்றின. வியட்நாம் என்றால், வடக்கிலுள்ள 'வியட்நாம் குடியரசைக் (Democratic Republic of Vietnam—DRV) குறிக்கிறது. என ஹோசிமின் அறிவித்தார். ஆனால் இச் சொல், சைகானில் அமைக்கப்பட்ட புது 'வியட்நாம் குடியரசைச்' (Republic of Vietnam) சுட்டிக் காண்பிக்கிறது எனப் பாவோதையும் பிரான்சும் கூறினர். வியட்நாம் தேசிய இயக்கப்போரில் பாவோதையால் ஹோசிமின்னுடன் போட்டியிடமுடியவில்லை. கி.பி. 1950ஆம் ஆண்டு பிப்ரவரிக்குள் சோவியத் ரஷ்யாவும், ஏனைய கம்யூனிஸ்டு நாடுகளும் ஹோசிமின் அரசாங்கத்தை ஒப்புக்கொண்டன. பிரான்சு, அமெரிக்கக் குடியரசு, பிரிட்டன் ஆகியவை பாவோதையின் ஆட்சியை ஏற்றுக்கொண்டு ஆதரித்தன. கி.பி. 1950ஆம் ஆண்டு ஜூனில் கொரியப் போர் மூண்டவுடன் பாவோதைக்கும் பிரான்சுக்கும் கொடுக்கும் உதவியை அமெரிக்கக் குடியரசு பெருக்கியது.

கி.பி. 1950 முதல்—1954ஆம் ஆண்டு வரை இந்தோ-சீனுவில் நடந்த உள்நாட்டுப் போரில் பலவகைத் திருப்பங்கள் ஏற்பட்டன. தம்முடைய அதிகாரத்தை ஹோசிமின் வலுப்படுத்தினார். கி.பி. 1951ஆம் ஆண்டில் தம் மார்க்ஸிஸம் கற்பிக்கும் சங்கத்தைக் கலைத்து லாவோ டாங் (Lao Dong) அல்லது 'தொழிலாளர்கள் கட்சி' (Working People's Party) ஒன்றை அமைத்தார். லியன் வியட் (Lien Viet) அல்லது 'தேசியக் கூட்டு முன்னணி' (United National Front) ஒன்றையும் நிறுவினார். வியட்நாம் போர் ரஷ்யாவின் தலைமையின்கீழ் நடக்கும் உலகப் புரட்சியின் ஒரு முக்கியப் பகுதியென ஹோசிமின் அறிவித்தார். 'முதலில் மக்களைத் தம் பக்கம் கவர்ந்து விடு; பிறகு தங்கள் தேவைகளை அளிக்கும் இணைப்பு வழிகளைக் கைப்பற்று. இதற்குப்பின் கோட்டைகளைத் தாக்கு'—இவையே ஹோசிமின்னின் புதிய படைத்திறத் தந்திரங்கள். வோ என்குயன் ஜியாப் (Vo Nguyen Giap) என்ற படைவீரர் வியட்நாம் கொரில்லாப் போர்வீரர்களை வலிமை வாய்ந்தவர்களாய் மாற்றினார்.

இதற்கு மாருக, தென்வியட்நாமில் பாவோதை, நாட்டின் நிருவாகப் பொறுப்புகளைச் செல்வம் கொழித்த பிரான்சில் பயின்ற மாண்டரின் வகுப்பினர்களிடம் கொடுத்தார். ஹோசிமின்னுடன் நடக்கும் போரை, பிரெஞ்சுக்காரர்களிடம் விட்டுவிட்டார். தமக்கு அதிகச் சுதந்திரம் வேண்டும் எனப் பிரான்சுடன் பேச்சு நடத்தினுர். வடவியட்நாமியர்கள் அல்லது வியட்மின், பிரெஞ்சு அதிகாரிகளைப் போரில் கொலை செய்து, வெற்றிப்பாதையில் சென்று கொண்டிருந்தனர். பிரான்சு நாட்டாலும், அமெரிக்கக் குடியரசாலும் போர் செய்து கொண்டிருக்கும் தங்கள் படைகளின் தேவைகளை உடனடியாக நிறைவு செய்ய முடியவில்லை.

கம்யூனிஸ்டுச் சீனுவின் உதவியுடன் வியட்மின், பிரெஞ்சுக் காரர்களின் வயமிருந்த பகுதிகளைக் கைப்பற்றியது. இறுதியாக, லாவோஸ் எல்லையின் அருகே பிரான்ஸின் வயமிருந்த டியன்பியன் பூவைக் (Dien Bien Phu) கி.பி. 1954ஆம் ஆண்டு மே 7ஆம் நாள் வியட்மின் கைப்பற்றியது. இத் தோல்விக்குப் பிறகு வட வியட்நாமில் பிரான்சின் குடியேற்ற ஆட்சிக்குச் சமாதி கட்டப் பட்டது. கம்யூனிஸ்டுகளின் வெற்றிக்கு இடையில் கி.பி. 1954ஆம் ஆண்டு ஏப்ரலிலிருந்து ஜூலை வரை ஜெனிவாக் கூட்டம் (Geneva Conference) நடந்தது.

கம்போடியாவும், லாவோசும்—ஜெனிவாக் கூட்டத்திற்கு முன்பு

வியட்நாமில் உள்நாட்டுப்போர் நடந்துகொண்டிருந்தபோது இந்தோ-சீனுவின் மற்றப் பகுதிகளான கம்போடியாவும் லாவோசும் பிரெஞ்சுக் கூட்டரசுக்குள் இருக்கும் தங்கள் நிலையை அதிகரிக்க முயன்றன. கம்போடியாவில் ஆட்சி புரிந்து வந்த இளம் அரசர் நோரோடம் சிஹாநுக் (Norodom Sihanouk) தம் விருப்பம் போல ஆட்சி புரிந்து வந்தார். சிஹாநுக் கம்யூனிஸத்தைக் கடுமையாக எதிர்த்தார்; வியட்நாமியர்களை வெறுத்தார். அவருக்கு எதிராகக் கம்போடியாவிற்குள் இஸாரக் (Issarak) அல்லது சுதந்திரம் விரும்பும் கெம்மர்கள் (Free Khemer) கலகம் செய்து வந்தார்கள். மேலும், வியட்நாம் கம்போடியாவின்மேல் படையெடுக்குமோ என்ற அச்சம் அவரிடம் நிலவியிருந்தது. பிரான்சின் கைப்பாவை யாகவும் இருக்க அவர் விரும்பவில்லை. வியட்நாமில் பிரான்சுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் தோல்வியைப் பயன் படுத்திக்கொண்டு அவர் பேச்சு நடத்திப் பல கூட்டு ஒப்பந்த மூலப்படிகளை (Protocol) ஏற்படுத்தினுர். இவ்வொப்பந்தத்தின்படி, பொருளாதாரம், நீதி, படை முதலியவற்றின் விவகாரங்களில் கம்போடியாவிற்கு முழுச் சுதந்திரம் கொடுக்கப்பட்டது. கி.பி. 1953ஆம் ஆண்டு நவம்பர்

9ஆம் நாள் கம்போடியாவில் சுதந்திர தினமாகக் கொண்டாடப் பட்டது.

தம்முடைய அதிகாரத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் லாவோசின் அரசரும் பிரான்சுடன் பேச்சு நடத்தினர். கி.பி. 1953ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பிரான்சுடன் ஏற்பட்ட உடன்படிக்கையின் படிப் பிரெஞ்சுக் கூட்டரசுக்குள் லாவோசிற்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டது. இச் சமயத்தில்தான் வியட்மின் லாவோசின்மேல் படையெடுக்குமோ என்ற அச்சம் வலுத்திருந்தது. தவிர, லாவோசில் பாதட்லாவோ (Pathet Lao) என்ற கம்யூனிஸ்டுக் கலகக்காரர்கள் வலுவடைந்திருந்தார்கள். பாதட்லாவோ பிரான்சையும், முடியரசையும் கடுமையாக எதிர்த்தார்கள்.

ஜெனிவாக் கூட்டமும் ஜெனிவா ஒப்பந்தமும், கி.பி. 1954

லாவோஸ், கம்போடியா, வியட்நாம் ஆகிய நாடுகள் ஜெனிவாக் கூட்டத்தில் கலந்துகொண்டன. இக் கூட்டத்தின் முடிவுப்படி, இம் மூன்று நாடுகளுக்கும், சுதந்திரம், மீளுதல் ஆட்சித் தலைமையுரிமை (Sovereignity), கூட்டொருமை(Unity), நாட்டின் உருக்குலையா முழுமை (Territorial Integrity) ஆகியவை கொடுக்கப்பட்டன. ஆனால், இக் கூட்டம் இந்தோ-சீன உள் நாட்டுப் போரை நிறுத்தவில்லை. ஜெர்மனி, கொரியா ஆகிய நாடுகளைப்போல வியட்நாம் பிரிக்கப்பட்டது. கி.பி. 1956ஆம் ஆண்டு கோடைக்காலத்தில் நடக்கும் தேர்தலே வியட்நாம் மீண்டும் ஒன்றுசேருவதைப் பற்றித் தீர்மானம் எடுக்கும் என்று முடிவு செய்யப்பட்டது. இதனை வியட்மின்னும் பிரான்சும் ஒப்புக் கொண்டன. தம்முடைய வருங்காலத்தைப் பற்றித் தீர்மானிக்கத் தமக்குப் பேச்சுரிமை கிடைக்கவில்லையெனத் தென்வியட்நாம் கருதியதால் இவ் வொப்பந்தத்தில் கையொப்பமிடவில்லை. அமெரிக்கக் குடியரசும் ஜெனிவா ஒப்பந்தத்தில் கையொப்பமிட மறுத்தது.

வியட்நாம் குடியரசு (வடவியட்நாம்):

தனக்கு வெற்றி கிடைத்துவிட்டது என்ற எண்ணத்துடன் தான் வடவியட்நாம் ஜெனிவாவைவிட்டு வெளியே வந்தது. அமைதியான முறையில் மிக விரைவில் வியட்நாம் - முழுவதும் தம் அதிகாரத்தின் கீழ்வரும் என ஹோசிமின் நம்பினர். வடவியட்நாம் சீரமைப்புக்குப் பாடுபடலாம் என ஹோசிமின் நினைத்தார்.

தம்முடைய கட்சி, அரசாங்க அமைப்பு ஆகியவற்றை வலுப் படுத்தினுர்; படை வலிமையைப் பெருக்கினுர். ஜெனிவா ஒப்பந்தத்தை நடைமுறையில் செயல்படுத்த வேண்டும்; இவ் வொப்பந்தத்தில் கூறியபடிக் கி.பி. 1956 ஆம் ஆண்டு கோடைக் காலத்தில் தேசியத் தேர்தல் நடத்தவேண்டும் என வடவியட்நாம் வலியுறுத்தியது தேர்தல் நடத்துவதைப்பற்றிப் பேச்சு நடத்தத் தென் வியட்நாம் முன்வரவில்லை. என்ருலும், வடவியட்நாம் படை வலிமையைப் பயன்படுத்தவில்லை. ஒருவேளை வடவியட் நாமிற்கு ஆதரவளித்த அயல்நாடுகள் கூறிய ஆலோசனையால் வடவியட்நாம் இவ்வாறு நடந்துகொண்டதோ எனப் பலர் நினைத்தார்கள். இச் சமயத்தில் வடவியட்நாம் மக்களின் வாழ்க்கை நிலை மிக இழிந்த நிலையிலிருந்தது. வருமானமோ மிகக் குறைவா யிருந்தது. அன்ருட வாழ்க்கைத் தேவையை நிறைவு செய்யத் தான் பணமிருந்தது. தங்கள் நிலைமையைச் சீரமைக்கவேண்டும் எனக் குடியானவர்கள் அமளி செய்தனர். ஒருவகையான கூட்டாண்மை (collectivization) அமைப்பை ஹோசிமின் நிறுவினுர்.

தொழில்துறைமூலம் மக்களுடைய துன்பத்தை நீக்கலாம் என்பது ஒரு கனவாய் இருந்தது. ஏனென்ருல் வட வியட்நாமில் அதற்குத் தேவையான பொருள்களோ, மக்களோ, அனுபவமோ இல்லை. இரயில் போக்குவரத்தையும், சாலைகளையும் சீர்ப்படுத் தவும், சுரங்கங்களைப் பழுதகற்றிச் சீர்ப்படுத்தவும், தொழிற்சாலை களைக் கட்டவும் புதிய தொழிற்சாலைகளை உருவாக்கவும், கப்பற் போக்குவரத்துத் தேவைகளை அதிகரிக்கவும், ஹநாய், ஹைபாங் முதலிய நகரங்களில் வாணிபத்தை வளர்க்கவும் நீண்டகாலம் தேவையாயிருந்தது. இருந்தாலும் நாட்டைச் சீரமைக்கவேண்டிய திட்டங்களை வட வியட்நாம் செயல்படுத்த முயன்றது. சீனு, ரஷ்யா உதவியுடன் புது நாகரிகப் பண்பாட்டுப் பாதையில் வடவியட்நாம் மெதுவாகச் செல்லத் தொடங்கியது.

அயல்நாட்டுக் கொள்கைகளில் தன்னை மற்றச் சோஷலிஸ நாடுகளின் கைப்பொம்மை என வடவியட்நாம் கருதவில்லை. தன்னுடைய கோட்பாடுகலைச் சுதந்திர மனப்பான்மையுடன் வெளியிட்டது. கம்யூனிஸ்டுச் சீனு அல்லது ரஷ்யா ஆகியவற்றின் கைப்பாவையாக இருக்க வட வியட்நாம் மறுத்தது. பிரான்சுடன் ஹோசிமின் கலாசாரத் தொடர்பு வைத்துக்கொண்டார்; சுதந்திர அயல்நாட்டுக் கொள்கைகளுடைய தென்கிழக்காசிய நாடுகளுடன் நட்புறவு வைத்துக்கொண்டார்.

வியட்நாம் குடியரசு (தென் வியட்நாம்)

ஜெனிவாக் கூட்டத்திற்குப்பின் தென் வியட்நாமின் வருங் காலம் மிக மங்கலாயிருந்தது. இதை ஆதரித்த பிரான்சு தோல்வி யடைந்தது. இதைப் பாதுகாக்க முன்வந்த அமெரிக்கக் குடியரசு எவ்வாறு நடந்துகொள்ளப்போகிறது என்பதைப்பற்றி எவரும் சரியாகக் கூறமுடியாத நிலையில் இருந்தார்கள். இதன் அரசிய லமைப்பு நொடித்த நிலையிலிருந்தது; நிருவாகம் தாறுமாறாக இருந்தது. பொருளாதாரம் சீர்கேடாயிருந்தது; கஜானா காலியா யிருந்தது. படைக்கலம் பூண்ட, மதம் சார்ந்த அரசியல்வாதிகள் நாட்டிலுள்ள முக்கியப் பகுதிகளைக் கைப்பற்றி இருந்தார்கள். படையோ சரியாக உருவானதாக இல்லை. மக்கள் தொகையில் பத்தில் ஒரு பங்கினர் அகதிகள். இவர்களுக்கு உணவு உடை முதலிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டியிருந்தது. தென் வியட்நாமின் மூன்று எதிரிகள் கம்யூனிஸம், குடியேற்றநாட்டு வாழ்க்கை மரபு, நிலப்பண்ணை உரிமைமுறை ஆகியவையாகும். இம் மூன்று எதிரிகளையும் சமாளித்துத் தென்வியட்நாமை ஒரு நிலையான சுதந்திர நாடாக அமைக்க முடியும் என்ற அறிகுறியே இல்லை.

நாடு முன்னேறுவதற்காகப் புதுத் தலைவர் என்கோ டின் டியமை (Ngo Dinn Diem) நம்பியிருந்தது. இவர் ஆட்சியின் கீழ் நாடு சட்டக் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. ஒழுங்கு நிலை நாட்டப்பட்டது. அவர் தம்மைப் பின்பற்றிய தோழர்களுக்கே நிருவாகப் பொறுப்பும் அதிகாரமும் கொடுத்தார்; படைத் துறையைச் சீரமைத்தார்.

வியட்நாமில் உள்நாட்டுப் போர் நடந்ததால் பொதுமக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டது. மக்களாட்சி முறையில் மக்களுக்குப் பயிற்சி கொடுக்க வாய்ப்பேதும் இல்லாமல் இருந்தது. அடிப் படையேயில்லாததால் குடியாட்சி முறையை நிறுவ முடியவில்லை. மக்களுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்துவதே என்கோ டின் டியமின் முதற் பொறுப்பாயிருந்தது.

நாட்டின் பொருளாதார அமைப்பில் அயல்நாட்டாரின் ஆதிக்கம் ஓங்கியிருந்தது. முக்கியமாகப் பிரெஞ்சுக்காரர்களும், இந்தியர்களும், சீனர்களும் அதிகச் செல்வாக்குடன் இருந்தார்கள். இவர்களின் ஆதிக்கத்தை நீக்கி வியட்நாமியர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க டியம் முயன்றார். சீனர்களுக்குப் பொருளாதாரச் சலுகைகள் அளித்த ஒப்பந்தங்களை ஒழித்தார். வியட்நாம் மக்களுடன் ஒன்றுபட்டு இணைந்து (assimilation) வாழுங்கள்

அல்லது நாட்டைவிட்டு வெளியேறுங்கள் எனச் சீனர்களிடம் கூறினர். நில உடைமைச் சீர்திருத்தங்களைச் செய்தார். குடியான வர்களின் பணத் துன்பங்களைக் குறைக்கவும், நாகரிகப் புதுமை யான பாசன முறைகளை உழவுத்துறையில் புகுத்தவும், குத்தகைக் காரர்கள் சிறுநிலச் சொந்தக்காரர்களாக மாற வாய்ப்பு ஏற்படுத்த வும் நிலங்களைச் சரிசமமாகப் பங்கீடு செய்யவும், நிலவுடைமை யாளர்களுக்குத் தொழிற்சாலைகள் நிறுவவேண்டிய ஊக்கமளிக்கவும் முயன்றார். சோஷியலிஸத் தத்துவத்தைப் பற்றியோ, தனியார் தொழில்முறைத் தத்துவத்தைப் பற்றியோ அவர் கவலைப்பட வில்லை. தமக்குத் தோன்றியதைச் செயல்முறையாக்க முயன்றார். அயல்நாட்டார் தென்வியட்நாமில் முதலீடு செய்யத் தடை விதிக்கவில்லை.

கொள்கையளவில் மக்களின் நல்வாழ்வை நாடித்தான் திட்டங் களைத் தீட்டவேண்டும்; மக்களில்லாமல் அரசியல்வாதிகள் வாழ முடியாது என்ற கருத்தை அவர் பரப்பினர். மக்கள் உரிமைகளைப் பாதுகாக்கவேண்டியதும், மக்கள் சுதந்திரத்தைப் பறிபோகாமல் பாதுகாக்க வேண்டியதும் அரசாங்கத்தின் கடமை எனக் கூறினர். கம்யூனிஸம் கொடியது; கடவுள் நம்பிக்கையற்ற இயற் பொருள் வாதம் (atheistic materialism) அது; மக்களாட்சிமுறை தான் நன்மையைக் கொடுக்கும்; மக்களின் உள்ளடங்கிய ஆற்றல் சுதந்திரமாக மலர இவ் வரசியல் முறைதான் தேவை எனும் தம் கருத்தை டியம் வெளியிட்டார்.

ஆனல், மேலைநாட்டவர்களின் அரசியல் முறை நடை முறையில் ஆசியநாட்டுச் சமூக அமைப்புக்கு ஏற்றதில்லை. ஆகையால், ஆசியநாட்டுச் சூழ்நிலைக்கேற்றவாறு பொறுப்புடன் தலைமைதாங்கி மக்களை நல்ல பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும். இக் காரணத்தைக் கூறித் தம்மை முதலில் பிரதம ராகவும், அதன்பின் மக்கள் தலைவராகவும் என்கோ டின்டியம் நியமித்துக் கொண்டார். நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினர்; இம் மன்றம் அவருடைய அரசியல் அமைப்பு எண்ணத்தைச் சட்டமாகக் கி.பி. 1956-ஆம் ஆண்டு அக்டோபர் 26ஆம் நாள் நிறைவேற்றியது. சட்ட நிறைவேற்ற ஆட்சித் துறைக்கு (executive) அதிக அதிகாரம் கொடுக்கவும், நாட்டில் குழப்பம் இல்லாத சூழ்நிலையில்தான் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கப் பொறுப்பேற்றுக் கொள்ளவும் முடியும் என இச் சட்டத்தில் கூறப்பட்டிருந்தது. கம்யூனிஸத்திற்குச் சிறப்பைக் கொடுக்காமல் நாட்டின் நலனுக்கு முதலிடம் கொடுத்தால்தான் இரு வியட்நாம்

நாடுகளையும் இணைக்க ஒப்புக்கொள்ள முடியும் என டியம் கூறினார்.

சுதந்திரத்துடனும், ஆசிய நாடுகளின் சுலாசாரத்தைப் பின்பற்றியும், அமைதியை நிலைநாட்டும் நோக்கத்துடனும், முற்போக்குக் கொள்கைகளை அனுசரித்தும்ததான் தென் வியட்நாமின் அயல்நாட்டுக் கொள்கை அமைக்கப்பட்டிருக்கிறது என டியம் கூறினார். நாட்டின் வரவுசெலவுப் பட்டியலில் 85 சதவீதம் பண உதவி அமெரிக்கக் குடியரசு கொடுத்தது. ஆகையால், வியட்நாமியர்கள் அமெரிக்கர்களைப் போற்றினர்.

உள்நாட்டுக் கலகமும் வியட்நாமும்

கி.பி. 1956ஆம் ஆண்டில் சமரச முறையில் இரு வியட்நாமையும் இணைக்க ஹோசிமின் எடுத்த முயற்சி தோல்வியடைந்த பிறகு, இரு வியட்நாம் நாடுகளிடையே உள்நாட்டுப் போர் மூண்டது. தொடக்கத்தில் தென்வியட்நாம் வழிகளில் செல்வோர் பதுங்கியிருந்து தாக்கப்பட்டார்கள் (ambushed); சைகானில் சில இடங்களில் குண்டு வீசப்பட்டது. ஆசிரியர்களும், அரசாங்க அலுவலர்களும் துன்புறுத்தப்பட்டனர்; சிலர் கொலை செய்யப்பட்டார்கள். கம்யூனிஸ்டுகள்தாம் இச் சூழ்நிலையேற்படுவதற்குக் காரணம் என மக்கள் தலைவர் டியம் அறிவித்தார். கம்யூனிஸத்தை எதிர்த்து டியம் எடுத்த திட்டங்கள்தாம் இத்தகைய சூழ்நிலையை உருவாக்குவதற்குக் காரணமாயிருந்தன என டியமை எதிர்த்த சில அரசியல்வாதிகள் எடுத்துரைத்தார்கள். கி.பி. 1958ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் இம்மாதிரியான கொடிய நடவடிக்கைகள் மிகவும் அதிகரித்தன. ஆகையால், தென்வியட்நாமில் சந்தேகிக்கப்பட்ட பல வியட்நாமியர்கள் கைது செய்யப்பட்டார்கள்; பலர் அரசாங்கத்திற்குப் பயந்து காட்டிற்குள் ஓடி மறைந்து வாழ்ந்தனர். இதனால் கொரில்லாப் போர் (Guerilla movements) அதிகரித்தது. ‘வியட்நாமில் போர் நடக்கிறது’ என மக்கள் தலைவர் டியம் வெளிப்படையாகக் கி.பி. 1954ஆம் ஆண்டில் அறிவித்தார். இரண்டு ஆண்டிற்குள் தென் வியட்நாம் 80 சதவீத நிலப் பகுதியையும், பாதி மக்கள் தொகையையும் இழந்தது.

டியமின் வல்லாட்சி முறையையும் சர்வாதிகாரத்தையும் தேசிய விடுதலை முன்னணி [National Liberation Front (NLF)], மக்கள் விடுதலைப்படை [Peoples Liberation Army (PLA)] ஒன்றை நிறுவிக் கடுமையாக எதிர்க்கத் தொடங்கியது. இவர்களை ‘வியட்காங்’ (Vietcong) அல்லது ‘வியட்நாம் கம்யூனிஸ்டுகள்’ என டியம் அரசாங்கம் அழைத்தது. சுருங்கக் கூறினால் டியம்

அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் எல்லோரையும் 'கம்யூனிஸ்டுகள்' என அரசாங்கம் எதிர்த்தது. கடலிலே மீன் கவலையில்லாமல் நீந்துவதுபோல வியட்காங் மக்களிடையே ஆதரவு பெற்று அரசாங்கத்தைச் கடுமையாக எதிர்த்தது.

தேசிய விடுதலை முன்னணியின் முக்கிய நோக்கம் மக்கள் தலைவர் டியமைப் பதவியிலிருந்து நீக்குவதே. கம்யூனிஸ்டுகள் இதற்குத் தலைமை தாங்கியபோதிலும் இதைப் பின்பற்றுபவர்கள் பொதுமக்களாயிருந்தார்கள். சைகானில் ஒரு முன்னேற்றக் கொள்கையையுடைய அரசாங்கத்தை நியமிக்க வேண்டுமென்றும், அவ் வரசாங்கம் தேசிய விடுதலை முன்னணியின் தத்துவங்களைப் பின்பற்றவேண்டும் என்றும் இம் முன்னணி விரும்பியது. தேசிய விடுதலை முன்னணி கம்யூனிஸம் பரவுவதற்கு உதவும் ஊன்று கோல். இம் முன்னணியை உருவாக்கி வழிகாட்டுவது, அறிவுரை அளிப்பது, ஆதரவு கொடுப்பது ஹநாயில் உள்ள வடவியட்நாம் கட்சியே என டியம் அரசாங்கமும், அமெரிக்கக் குடியரசும் கூறின.

இதனால் தென்வியட்நாமிலுள்ள கலகச் சூழ்நிலை, உள்நாட்டுக் கலகத்தின் விளைவன்று; அயல்நாட்டுக்காரர்கள் உள்ளே நுழைந்து வலுச் சண்டைக்கு வந்ததன் (aggression) விளைவு என அமெரிக்கக் குடியரசு கருதித் தென்வியட்நாம் கலகத்தில் படிப் படியாக அதிகப்பங்கு எடுத்துக்கொண்டு தலையிடத் தொடங் கியது. தென்வியட்நாமை ஒரு வலிமையுள்ள நாடாக அமைக் கவும் படை வலிமையைப் பயன்படுத்தி, வலுச் சண்டைக்கு வருவதையும், நாட்டின் உள்ளேயே இரகசியமாக அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்வதையும் தடுப்பதற்கு மக்கள் தலைவர் டியமிற்கு உதவிபுரிய அமெரிக்கா முன்வரும் என அமெரிக்க மக்கள் தலைவர் ஐஸன்ஹோவர் கி.பி. 1954ஆம் ஆண்டு அறிவித்தார். பொருளாதார இராணுவ உதவிகளை மிக அதிக அளவில் மக்கள் தலைவர் கென்னடியும் கொடுத்துதவினார். போர் நடவடிக்கைக்குப் பயன்படத்தக்க ஆயிரமாயிரம் சிறு கிராமங்களை (Strategic hamlets) அமைக்கவும், படை வலிமையைப் பெருக் கவும் அமெரிக்கக் குடியரசு உதவியது. குறுகிய நோக்கமற்ற கொள்கைகளை மக்கள் தலைவர் டியம் பின்பற்ற வேண்டும் என அமெரிக்கக் குடியரசு முயற்சி எடுத்தபோதிலும், அதன் நோக்கம் நிறைவேறவில்லை. மக்கள் தலைவர் டியமின்கீழ்ப் பணிபுரிந்த வர்களே இம்முறை மக்கள் தலைவரின் மாளிகையைத் தாக்கினார்கள். சினமுற்ற மக்கள் பொது ஆர்ப்பாட்டங்கள்மூலம் காவலர்களின்

மீது கல்வீசிக் காயப்படுத்தினர். அரசாங்கத்தின் அடக்குமுறையை எதிர்த்து கி.பி. 1931ஆம் ஆண்டில் சில புத்தமத குருமார்கள் வெளிப்படையாகப் பொதுமக்கள் எதிரே தங்கள்மீது நெருப்பு வைத்துக்கொண்டு தற்கொலை செய்துகொண்டார்கள். மாணவர்களும் பொது ஆர்ப்பாட்டங்களில் பெருவாரியாகப் பங்கு கொண்டார்கள். பொதுமக்களின் எதிர்ப்புப்போலவே, டியமின் அடக்குமுறை ஆட்சியும் கடுமையாக இருந்தது.

மக்கள் தலைவர் டியமின் பிடிவாதக் குணமே அவருடைய சாவுக்குக் காரணமாக இருந்தது. கி.பி. 1963ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2ஆம் நாள் நடந்த திடீர்ப் புரட்சியால் டியமும், அவரது சகோதரரும் கொல்லப்பட்டார்கள். இவருடைய ஆட்சிக்குப்பின் இராணுவ ஆட்சி ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்ந்து வந்தது. வியட்காங்கிற்கு எதிராகக் கடுமையாகப் போர்புரிவதாக இவர்களெல்லோரும் கூறினார்கள். அமெரிக்கத் தென்வியட்நாம் கூட்டணியின் முயற்சி தோல்வியடைந்தது. அவர்களின் எதிரிகள் வலிமை அடைவதை அவர்களால் முறியடிக்க முடியவில்லை. கி.பி. 1964ஆம் ஆண்டில் சைகான் அரசாங்கம் நொறுங்கிவிடுமோ என அஞ்சவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதற்குப் பிறகு தான் அமெரிக்கப் படைவீரர்கள் வியட்நாமில் மிக அதிகமாக நுழையத் தொடங்கினார்கள்.

கம்போடியா

ஜெனிவா ஒப்பந்தத்தின்படி கம்போடியாவில் சண்டை சச்சரவுகளை நிறுத்திவிட வேண்டும்; கம்போடியாவிலிருந்த அயல் நாட்டுப் படை முழுவதும் அதனைவிட்டுத் தொண்ணூறு நாட்களுக்குள் வெளியேற வேண்டும்; கெம்மர் கலகக்காரர்களைத் (Khemer rebels) தேசியப் படையில் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஐக்கிய நாட்டமைப்பின் ஒப்பந்தப்பத்திரத்திற்குப் புறம்பாக கம்போடியாமற்ற நாடுகளுடன் இராணுவ ஒப்பந்தம் ஏற்படுத்தாது; கம்போடியாவின் பாதுகாப்பிற்குத் தீங்கு வராதவரை அயல்நாட்டுப் படைவீரர்கள் கம்போடியத் தளத்தைப் பயன்படுத்த அனுமதி தரப்படாது எனக் கம்போடியா ஒப்புக்கொண்டது. நாட்டின் நிலப்பரப்பைப் பாதுகாப்பதற்காக மட்டும்தான் போர்க்கருவிகளையும், பணியாளர்களையும், கல்வி அளிப்பவர்களையும் அயல்நாடுகளிலிருந்து கம்போடியா வரவழைக்கும்; வேறு காரணங்களுக்காக இவ் வகையான அயல்நாட்டு உதவியை நாடாது எனக் கம்போடிய அரசாங்கம் அறிவித்தது.

ஜெனிவா ஒப்பந்தத்திற்குப்பின் கம்போடியா இளவரசர் நேரோடோம் சிஹானுக்கின் முழு அதிகாரத்தின்கீழ் வந்தது. இவரே கம்போடியாவின் மறுபெயராக விளங்கினார் எனக் கூறினால் மிகையாகாது. சில காலங்களில் இவர் பிரதம மந்திரியாகப் பணி புரிந்தார். சில சமயங்களில் பிரதம மந்திரி என்ற பெயரைச் சூட்டிக்கொள்ளவில்லை. இவருக்குக் கம்போடிய மக்களிடையே மிக அதிகச் செல்வாக்கிருந்தது. தென்கிழக்காசியாவிலிருந்த வேறு எந்த அரசியல் தலைவர்களும் இவருக்கு இணையாக மக்களின் முழு நன்மதிப்பைப் பெற்றிருந்தார்கள் எனக் கூறமுடியாது. இவர்தாம் நாட்டின் முதல்வர்; புத்தமதத்தைப் பாதுகாத்து வளர்த்த தலைவர்; சங்கும் (SangKum) அல்லது பொதுமக்கள் சார்ந்த சோஷியலிச சமுதாயத்தை (Popular Socialist Community) உருவாக்கிய அரசியல்வாதி. பொதுத் தேர்தல்களில் எப்பொழுதும் சங்கும் பேராதரவு பெற்றதால் நாடாளுமன்றத்தில் இதைப்போல வலுவுள்ள கட்சி வேறொன்றும் தோன்றவில்லை. கம்போடியாவின் படை சிஹானுக்கின் கைபோல் விளங்கியது. இதை நன்கு அடக்கிக் கண்காணித்து வந்ததால் இது ஒரு தனிப்பட்ட முக்கிய அரசியல் பிரிவாய்த் திகழவில்லை.

கம்யூனிஸத்தின்மேல் வெறுப்புற்று மறைமுகமாக ஆதரிப்பவர் எனச் சிஹானுக்கின் எதிரிகள் அவரைப்பற்றி அடிக்கடி கண்டனம் தெரிவித்தார்கள். இதைச் சிஹானுக் தீவிரமாக எதிர்த்தார். தாம் அரச பரம்பரையைச் சேர்ந்தவரயிருந்ததாலும், செல்வந்தரா யிருந்ததாலும், கம்யூனிஸ்டுகள் தம்மை வெறுக்கிறார்கள் என்பதை சிஹானுக் அறிவார். ஆனாலும், கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தடை விதித்து, அதை இரகசிய இயக்கமாக மாற்றுவதை அவர் விரும்பவில்லை. பதிலாக, கம்யூனிஸ்டுகள் வெளிப்படையாக இயங்குவதையே அவர் விரும்பினார். ஏனென்றால் அவ்வாறான சூழ்நிலையில் கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளைக் கவனித்து, தக்க நடவடிக்கை எடுக்க வாய்ப்புக் கிடைக்கும் என அவர் நம்பினார்.

கம்போடியாவிலுள்ள நிலங்கள் செழிப்பு வாய்ந்தனவா யிருந்தன. அதன் நதிகளில் ஏராளமான மீன்கள் வாழ்ந்தன. நாட்டில் அதிக மக்கள் தொகை கிடையாது. மிக்க ஏழ்மையினால் நாடு துன்புறவில்லை. மற்றத் தென்கிழக்காசிய மக்களைவிடக் கம்போடிய மக்கள் வாழ்க்கைத் தேவை தேடுவதற்கு அதிகமாகத் துன்புறவில்லை. மனநிறைவு, சோம்பேறித்தனம், அக்கறையின்மை, தன்னலம் முதலியவை கம்போடிய அரசியல் வளர்ச்சிக்கும், சமூக மாற்றங்கள் ஏற்படுவதற்கும் தடைகளாக நின்றன. கம்போடியக் கிராமப் பகுதிகள் அமைதியின் மறுபிறப்போ எனத்

தோன்றியது. ஒரு குடும்பத்திற்கு, ஆண்டிற்கு ஏறத்தாழ நூறு அமெரிக்க டாலர்கள் கிடைத்தன. ஆகையால் தொழிற்சாலைகள் தோன்றுவதற்குத் தேவையான சூழ்நிலையில்லையெனத் தெரிகிறது.

நடுநிலை அயல்நாட்டுக் கொள்கையைக் கம்போடியா கடுமையாகப் பின்பற்றியது. லாவோஸிலிருந்து பர்மாவரை உள்ள நாடுகள் ஒன்று சேர்ந்து ஒரு புத்தமத நாடுகளின் கூட்டரசை (Buddhist Federation) அமைக்கவேண்டும் என்பதே சிஹாநுக்கின் நோக்கம். ஆனாலும் அண்டை நாடுகளான தாய்லாந்தையும், வியட்நாமையும் இவர் வெறுத்தார். நாட்டின் இரண்டாவது மொழியாகப் பிரெஞ்சு மொழியை ஏற்றுக்கொண்டபோதிலும், பிரான்சுடனிருந்த குடியேற்றத் தொடர்புகள் முழுவதும் துண்டிக்கப்பட்டன. எல்லா நாடுகளிலிருந்தும் சிஹாநுக் உதவிகளை ஏற்றுக்கொண்டார். அமெரிக்கக் குடியரசு, ரஷ்யா, சீனு ஆகிய நாடுகளின் ஆதரவு கம்போடியாவிற்குக் கிடைத்தது. இவரால் உலக மேடையிலே கம்போடியாவிற்கே ஒரு தனி மதிப்புக் கிடைத்தது. ஆனல், கி.பி. 1964ஆம் ஆண்டுக்குப் பிறகு வியட்போர் தோல்வியடைந்தவுடன் கம்போடியாவின் சூழ்நிலையும் பாதிக்கப்பட்டது.

லாவோஸ்

ஜெனிவா கூட்டத்திற்குப்பின் சுதந்திரமடைந்த நாடுகளுக்குள் மிகச் சிறிய நாடு, கம்போடியாவின் அண்டை நாடான லாவோஸ் போர்த்திற நடவடிக்கைக்குப் பயன்படத்தக்க இடத்தில் இந் நாடு இருந்தது. தனித்தே வாழ்ந்ததால் லாவோஸ் மிகவும் பின்தங்கிய நாடாகவும் புதுப்பாங்கான சமுதாயத்திற்குப் புறம்பாகவும் அமைந்திருந்தது. தெற்கிலுள்ள நிலப்பண்ணை முறையைச் சார்ந்த சாம்பசக் (Champassac) குடும்பத்தார்க்கும், வடக்கேயுள்ள லுவாங் பிரபாங்கிற்கும் (Luang Prabang) வழிவழி மரபாக வேறுபாடு இருந்ததால் லாவோஸ் தேசிய விழிப்பு இல்லாமல் இருந்தது. மிக அதிகமான ஏழ்மையும், பிற்போக்கான கல்வி சுகாதார வசதிகளும் மொழி வேறுபாடுகளும், மூலக்குல மரபு அமைப்பு முறைகளும் (tribal organisation) ஓங்கியிருந்ததால் லாவோஸை நாகரிக முதிர்ச்சியற்ற நாடென்று கூறலாம். அரசரும், பண்ணை நில ஆட்சிக் கோமான்களும் (land holding barons), புத்தமதக் குருக்களும், பிரெஞ்சு நாடு ஆதரித்த சிறு புதுச் செல்வந்தர்களின் குழாமும் ஒன்றுசேர்ந்து லாவோஸின் ஒரு மிகச் சிறிய உயர்ந்தோர் குழாம் (tiny elite) எனக் குறிப்பிடலாம். வெளி உலக நிழலே லாவோஸில் பட்டதாகத் தெரியவில்லை. தங்கள் குடியேற்ற

ஆட்சியின்போது பிரெஞ்சு அரசாங்கம் இத்தகைய சூழ்நிலையைத் தான் லாவோஸில் உருவாக்கியது.

கி.பி. 1954ஆம் ஆண்டு ஜெனிவா ஒப்பந்தத்தின்படி அயல் நாட்டுப் படை லாவோஸைவிட்டு வெளியேற வேண்டும்; தன் நாட்டின் பாதுகாப்புத் தேவைக்குத் தவிர மற்றப்படி அயல்நாடு களிடமிருந்து ஆயுதங்களைப் பெறக்கூடாது எனத் தடை விதிக்கப் பட்டது. நாட்டின் பாதுகாப்பிற்குத் தீங்கு வராதவரை எவ் வகை யான இராணுவ ஒப்பந்தமும் ஏற்படுத்தாது எனவும் லாவோஸ் ஒப்புக்கொண்டிருந்தது. ஆனால், இராணுவப் பயிற்சி தொடர்ந்து கொடுக்கவும், ஜியன்கோ உவாங் (Xien Khouang), செனோ(Seno) படைத்தளங்களைத் தொடர்ந்து பயன்படுத்தவும் பிரான்சுக்கு அனுமதியளித்தது. மன்னர் ஆட்சியின் கீழிருந்த அரசாங்கத் திற்கும் பதட் லாவோ (Pathet Lao) கலகக்காரர்களின் தலைவர் களுக்கும் இடையே இறுதியாக ஒப்பந்தம் ஏற்படும் வரை தென் கிழக்கிலுள்ள போங் சாலியிலும் (Phong Saly), சாம் நீயுவாவிலும் (Sam Neua) கம்யூனிஸ்டுகளை ஆதரித்த பதட்லாவோப் படை வீரர்கள் தங்கஏற்பாடு செய்யப்பட்டது.

ஜெனிவாக் கூட்டத்திற்குப்பிறகு, கம்யூனிஸத்தின் செல்வாக்கைக் குறைப்பதற்காகப் பிரான்சும் அமெரிக்கக் குடியரசும் சேர்ந்து கடுமையான நடவடிக்கை யெடுத்தன. அமெரிக்கக் குடியரசு மிக அதிக உதவி அளித்தது. கம்யூனிஸ்டுகளிடமிருந்து இந்தோ-சீன நாடுகளைப் பாதுகாப்பதற்காகத் தென்கிழக்காசிய நேச நாடுகளின் உடன்படிக்கை அமைப்பை (Seato) உருவாக் கியது. ஆனால், அரசியல் பிரிவினர் குழாங்களிடையே லாவோஸில் இடைவிடாமல் சச்சரவு ஏற்பட்டது. நடுநிலைவாதியான இளவரசர் சுவன்னு பௌமாவும் (Prince Souvanna Phouma), ஹோசிமின் சீடரும் பதட்லாவோவின் தலைவரான இளவரசர் சுபனுவோங்கும் (Prince Souphernouvong) இரண்டரை ஆண்டுகள் பேச்சு நடத்திய பின்தான் ஒரு கூட்டரசாங்கம் (Coalition Government) அமைக்க ஒப்புக்கொண்டனர். நடுநிலைவாதிகளுக்குப் பிரதம மந்திரி பதவி கிடைக்க வேண்டும் என்றும், அரசியல் இடதுசாரி உறுப்பினர்களுக்கு இரண்டு அமைச்சர்கள் பதவி கொடுக்கப்பட வேண்டும் என்றும் கி பி. 1959ஆம் ஆண்டில் ஒப்பந்தமேற்பட்டது. இரண்டு தென்கிழக்கு மாகாணங்களிலிருந்த கம்யூனிஸ்டுத் தளங் களை நாட்டின் மற்றப் பகுதிகளுடன் ஒன்றுசேர்க்க வேண்டுமென் றும், பதட்லாவோப் படை தேசியப்படையோடுத் இணைக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது லாவோஸ் தேசாபிமான முன்னணி (Laos Patriotic Front) அல்லது நியோ லாவோ ஹக்சட்

(Neo Lao Hak Sat—NLHS) என்ற பெயரில் கம்யூனிஸத்தை விரும்பும் அரசியல்வாதிகள் ஒரு புதிய கட்சியை அமைக்கலாம் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது. கி.பி. 1958 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தல் நடத்துவதாகவும் ஒப்பந்தம் ஏற்பட்டது. நடுநிலையாளர்களிடையே ஒரு வலதுசாரிப் பிரிவு முக்கியமாக இராணுவத்திலே தோன்றியது.

வலதுசாரியினர், இடதுசாரியினர், நடுநிலைமையாளர் ஆகியோர்களிடையே இடைவிடாமல் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகப் போட்டி யேற்பட்டது. மன்னர் இம்மூன்று அரசியல்வாதிகளின் போட்டிகளுக்கு அப்பாற்பட்டவராய் நடந்து கொண்டார். இம் மூன்று கட்சிகளைப் பின்பற்றுபவர்கள் அடிக்கடி கட்சி மாறியதால் யார் யாருடன் சண்டை போடுகிறார்கள் என்பது சரியாக விளங்கவில்லை. அரசியல் தலைவர்கள் தீவிரக் கொள்கை யுடையவர்களாகவோ, தங்கள் கோட்பாடுகளைக் கடுமையாகப் பின்பற்றுபவர்களாகவோ இருக்கவில்லை. ஆகையால், இவர்கள் சமரசப் பேச்சுப் பேசுவதற்குத் தடங்கலாக இருக்கவில்லை. தீவிரவாதிகளாக இருந்த தலைவர்கள் கொலைசெய்யப்பட்டார்கள். அவர்களின் படை தாக்கப்பட்டது. கம்யூனிஸ்டுகளை எதிர்க்கும் அமெரிக்கக் குடியரசு வலதுசாரியினரை ஆதரித்தது. கம்யூனிஸ்டு நாடுகளான வடவியட்நாம், ரஷ்யா, சீனு ஆகிய நாடுகள் இடது சாரியினரை ஆதரித்தன. நடுநிலையினரான இளவரசர் சுவன்ன பௌமாவின்மேல் இவ்விரு கட்சியினரும் உறுதியான நம்பிக்கை வைக்கவில்லை. ஆனால், நாட்டின் அமைதியை நிலைநாட்டுவதற்கு அவரையேதான் நம்பியிருந்தார்கள். ‘சுதந்திரம், நடுநிலை அரசு, அமைதி’ (Independence, Neutrality, Peace) ஆகியவை லாவோசுக்குக் கொடுக்க வேண்டும் என ஜனாதிபதி கென்னடிக் கிடையேயும், பிரதம மந்திரி குருஷேவிற்கிடையேயும் கி.பி. 1961ஆம் ஆண்டில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. கி.பி. 1962ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஜெனிவாவில் 14 நாடுகள் இதை ஒப்புக்கொண்டதாக அறிவித்தன. இவ்வொப்பந்தத்தின்படி அயல்நாட்டுப் படைகள் முழுவதும் லாவோஸிலிருந்து வெளியேற வேண்டும்; அனைத்துலகக் கட்டுப்பாட்டு அதிகாரமுடைய குழு (International Control Commission) இவ்வொப்பந்தத்தில் கூறிய தைச் செயல்படுத்த வேண்டும். இந்தியா, கனடா, போலந்து ஆகிய நாடுகள் இக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டன. இடவகையில் லாவோஸ் போர் எல்லையிலிருந்து விலக்கி வைக்கப் பட்டது (Neutralised). அயல்நாட்டு இராணுவப் பாதுகாப்பிலிருந் தும், தென்கிழக்காசிய நேசநாடுகள் உடன்படிக்கை அமைப்பிலிருந்

தும் லாவோஸ் விடுவிக்கப்பட்டது. லாவோஸ் உள்நாட்டு விவகாரங்களில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தலையிடுவதில்லை என இவ்வொப்பந்தத்தில் கையொப்பமிட்ட நாடுகள் அறிவித்தன. மேலும், மற்ற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்காக லாவோஸ் நாட்டுப்பகுதிகளைப் பயன்படுத்துவதில்லை என்றும் அறிவித்தன. வடவியட்நாமிலிருந்து லாவோஸ் மூலம் தென்வியட்நாமிற்குச் சென்ற படைகளுக்கும் ஆயுதங்களுக்கும் இவ்வொப்பந்தத்தில் தடை விதிக்கப்பட்டது. பிரதம மந்திரி இளவரசர் சுவன்ன பௌமா தலைமையில் ஒரு புதிய கூட்டரசு அரசாங்கம் தொடங்கப்பட்டது. அவருடைய எதிரியும், வலது சாரிக் குழுவைச் சார்ந்தவருமான படைத் தலைவர் பௌமி நோசோவன் (General Phoumi Nosovan) நிதிமந்திரியாக நியமிக்கப்பட்டார். இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த இளவரசர் சுபனுவோங் பொருளாதார விவசாய அமைச்சராக நியமிக்கப் பட்டார்.

வலதுசாரியார் மனமார அரசாங்கத்தை ஆதரிக்கவில்லை; இடதுசாரியினர் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த அமைச்சர் பதவிகளை வியன்சின் (Vientiane) வந்து ஏற்றுக்கொள்ளவில்லை. எல்லாக் கட்சிப் படைகளும் தேசியப்படையில் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், ஒவ்வொரு கட்சியும் தங்கள் படைகளின்மேல் உள்ள அதிகாரத்தையும், செல்வாக்கையும் குறைக்கவோ, நீக்கவோ இல்லை. அமெரிக்கக் குடியரசும் ரஷ்யாவும் இராணுவப் பொருளாதார உதவியை மத்திய அரசாங்கத்திற்கு அளித்தன. ஒவ்வொரு கட்சித் தலைவரும் இவ்வுதவிப் பொருள்களைத் தங்கள் கட்சிப்படைப் பிரிவினர்களுக்கு அனுப்பப் போட்டியிட்டார்கள். கி.பி. 1963ஆம் ஆண்டு உதவி கொடுப்பதை ரஷ்யா நிறுத்தியது. பதட்லாவோவும், வடவியட்நாமும் ஜெனிவா ஒப்பந்தத்தின்படி, ஒப்பந்தம் ஏற்பட்டதிலிருந்து நடந்துகொள்ளவில்லை யென்றும், தாங்கள் ஜெனிவா ஒப்பந்தத்திற்கு மாருக ஒருபோதும் நடந்து கொள்ளவில்லையென்றும் கி.பி. 1963ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்கா அறிவிக்கத் தொடங்கியது. உதாரணமாக, பல ஆயிரக்கணக்கான படைவீரர்களை பதட்லாவோவின் முதுகெலும்பாயிருந்தனர். தங்கள் ஆட்சியின்கீழிருந்த இடங்களுக்கு லாவோஸ் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களோ, அனைத்துலகக் கட்டுப்பாட்டு அதிகாரமுடைய குழுவின் உறுப்பினர்களோ செல்ல அனுமதி கொடுக்க மறுத்ததோடல்லாமல் தடைவிதித்தது என அமெரிக்கக் குடியரசு அறிக்கை வெளியிட்டது. இக்காரணங்களைக் கூறி வியட்நாம் போருக்காக லாவோஸை அமெரிக்கக் குடியரசு பயன்படுத்தியது.

7. பிலிப்பைன்ஸ்

1. ஸ்பானியர் ஆட்சியும் தேசிய எதிர்ப்பும்

கி.பி. 1815ஆம் ஆண்டுக்குப் பிறகு மணிலா ஒரு பெரிய துறைமுகப் பட்டினமாகத் திகழவேண்டும் என ஸ்பானியர்கள் விரும்பினார்கள். மெக்சிகோவிலிருந்து வெள்ளி வரவில்லையாதலால் அவர்கள் நோக்கம் நிறைவேறவில்லை. கி.பி. 1840-1842ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேயப் போருக்குப்பிறகு இன்னும் பல துறைமுகப்பட்டினங்கள் வளர்ந்ததால் மணிலாத் துறைமுகப் பட்டினம் வளர்ச்சியடையவில்லை. அதற்குப் பிறகு விவசாயத்தை வளர்க்க ஸ்பானியர்கள் முயன்றார்கள். பிலிப்பைன்ஸில் புகையிலை விவசாயம் மட்டும் வளர்ச்சியடைந்தது; மற்ற விளைபொருள்கள் வளர்ச்சியடையவில்லை. ஆகையால், ஸ்பானியர்கள் நினைத்தபடி ஒன்றும் நடக்கவில்லை. ஸ்பெயின் நாட்டுடன் நேர்முகத்தொடர்பு இருந்ததால், ஐரோப்பியத் தனித்துறை வாணிபக் குழுவும், கிறித்தவச் சமய குருமார்களும் பிலிப்பைன்ஸுக்கு வந்தார்கள். பிலிப்பைன்ஸின் பொருளாதார வளர்ச்சியைப்பற்றியும், கிறித்தவத் திருக்கோயில்களைப்பற்றியும், அரசியல் ஆட்சிமுறைகளைப்பற்றியும் அவர்கள் விமரிசனம் செய்து பிழைகளை எடுத்துக்காட்டினார்கள். இதனால் பிலிப்பைன்ஸ் நாட்டுச் சுதந்திரப் போர்வீரர்களுக்கும், ஸ்பானியர்களுக்கும் மனத்தாங்கலும் பகைமையும் ஏற்பட்டன. தங்களுடைய உயர்ந்த பொருளாதார நிலைமையையும், சமூகத்தில் தங்களுக்கு இருந்த உயர்ந்த பதவியையும் ஸ்பானியர்கள் பாதுகாத்துக்கொண்டார்கள். லூஜானில் உள்ள விவசாயிகளிடையேயும், ஸ்பானியர்களுக்குச் சமமாகக் கருதப்பட்ட பிலிப்பைன்ஸ் சமயக்குருமார்களிடையேயும், ஐரோப்பாவிற்குச் சென்று திரும்பி வந்த படித்துப் பட்டம்பெற்ற பிலிப்பைன்ஸ் மக்களிடையேயும் இதனால் குழப்பமான நிலை ஏற்பட்டது.

கி.பி. 1898ஆம் ஆண்டில் ஸ்பானியர்கள் போரின்போது, எதிர்பாராத வகையில் அமெரிக்கக் கடற்படை மணிலாவில் தலையிட்டதால், பிலிப்பைன்ஸ் வரலாற்றில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. சுதந்திரமாகத் தங்கள் நாட்டை ஆட்சிபுரியப்

பிலிப்பைன்ஸ் மக்கள் தயாராகவில்லை; ஆகையால், அவர்களிடம் ஆட்சி கொடுக்க நேரிட்டால் வேறு ஏதாவது நாடு பிலிப்பைன்ஸ் நாட்டில் தலையிட்டு ஆட்சிபுரியத் தொடங்கலாம் என அஞ்சி அமெரிக்கா பிலிப்பைன்ஸ் நாட்டிற்குச் சுதந்திரம் கொடுக்காமல் தானே ஆட்சிபுரியத் தொடங்கியது. இதைப் பிலிப்பைன்ஸ் நாட்டுச் சுதந்திரப் போர்வீரர்களும், அமெரிக்க நாட்டு டெமோகிராடிக் கட்சியினரும் தீவிரமாக எதிர்த்தனர். சமயத் தொண்டிலீடுபட்ட மடத்துத்துறவிகளின் நில உரிமைகளையும், அரசாங்கத்தில் மதகுருக்கள் தலையிடுவதையும் அமெரிக்க ஆட்சி பிலிப்பைன்ஸில் ஒழித்தது.

கி.பி. 1815ஆம் ஆண்டுக்குப்பிறகு ஸ்பானிய அமெரிக்காவின் (Spanish America) கிளையாகப் பிலிப்பைன்ஸ் இல்லை. ஸ்பெயி னுடன் நேரடியான பொருளாதார, கலாசாரத் தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆகையால், ஸ்பெயின் தீபகற்பத்தைச் சேர்ந்த மக்கள் மணிலாவுக்கு அதிகமாக வரத் தொடங்கினுர்கள். அவர்கள் புதுக் கருத்துகளையும் புதுமலர்ச்சி வாய்ந்த ஆற்றலையும் தங்களுடன் கொண்டு வந்தார்கள். ஆகையால், ஸ்பெயின் நாட்டு இருசட்டமன்றங்களும் அடங்கிய பேரவை கோர்டிஸுக்குப் (Cortes) பிலிப்பைன்ஸ் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பியது. ஆனுல், நாட்டின் எல்லா விவகாரங் களிலும் மாறுதல்கள் ஏற்படவில்லை. கிறித்தவச் சமய குருமார்களின் ஆதிக்கம் தொடர்ந்து நடந்து வந்தது. இவர்கள் மாத்ரித் (Madrid) மணிலாப் பாதிரியின் ஆட்சியை எதிர்த்தார்கள்; கிறித்தவ மதமும், ஸ்பானியர்களின் ஆட்சியும் தங்கள் மூலம் பரவியதாக மடத்துத்துறவிகள் கருதினுர்கள். ஆகையால், ஸ்பானியர்கள் ஆட்சியை எவ்வகையாகப் பாதுகாக்க வேண்டும் என்பது தங்களுக்குத்தான் தெரியும் என அவர்கள் கருதினுர்கள். கி.பி. 1835ஆம் ஆண்டுக்குப் பிறகு ஸ்பெயினில் துறவிமடங்களை வன்முறையில் கட்டுப்படுத்த முயன்றதால் மடத்துத் துறவிகள் கீழைநாடுகளுக்குச் (Orient) செல்ல ஆரம்பித்தனர்.

கி.பி. 1815ஆம் ஆண்டுக்குப் பிறகு தனியார் வாணிபத்தினுல் மணிலாத் துறைமுகம் தழைத்தோங்கத் தொடங்கியது. கி.பி. 1840ஆம் ஆண்டுக்குள் பன்னிரண்டு ஸ்பானியர்களின் கூட்டு வாணிக நிலையம் மணிலாவில் வாணிபம் செய்து கொண்டிருந்தது. சீன நாட்டு வாணிபப் பொருள்களை விற்பதற்காகவும், ஸ்பெயின் நாட்டு வெள்ளியை வாங்குவதற்காகவும் சீனுவிலிருந்தும் இந்தியா விலிருந்தும் வணிகர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு வந்தார்கள். ஆனுல், கி.பி. 1840ஆம் ஆண்டிலிருந்து சீனநாட்டு வாணிபப்

செய்தார்கள். இவர்களால் வியக்கத்தக்க தெய்வீகச் செயல்களைச் செய்யமுடியாது என்று நிரூபிக்க இவர்களுடைய உடல்களை அருவருக்கத்தக்க முறையில் காவல்துறைப் படையினர் துண்டித்தார்கள். எஞ்சிய கோலோரும் இயக்கத்தினர் மலைக்குகைகளில் ஓடி ஒளிந்துகொண்டனர். அங்கு அவர்கள் புதிய ஜெருசலம் என்ற இயக்கத்தைத் தொடங்கினார்கள். கிறித்தவப் பெயர்களையும் கிறித்தவத்துறைச் சொல்களையும் அவர்கள் பயன்படுத்தத் தொடங்கினார்கள். ஆனால், அவர்கள் ஸ்பானியர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு வராத காலத்தில் இருந்த கோட்பாடுகளையும், சமயச் சடங்குகளையும் பின்பற்றி நடக்கத் தொடங்கினார்கள். இந்த இயக்கம் புகழ் அடைந்ததால், மற்ற ஆட்சி எதிர்ப்பாளர் இயக்கத்தினர்களும் பத்தொன்பதாவது நூற்றாண்டு முழுவதும் இந்த இயக்கத்தின் யெயரையே வைத்துக்கொண்டார்கள்

கி.பி. 1869ஆம் ஆண்டுக்குப் பிறகு அரசாங்கத்தை எதிர்க்கும் இயக்கம் பிலிப்பைன்ஸில் ஓங்கி வளரத் தொடங்கியது. ஸ்பெயினில் புரட்சி ஏற்பட்டதாலும்; சூயஸ் கால்வாயைத் திறந்ததாலும் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் ஐரோப்பாவிற்கு அதிக அளவில் செல்லத் தொடங்கினார்கள். ஸ்பெயின் நாட்டிலிருந்து குறுகிய மனப்பான்மையற்ற முற்போக்காளர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு வந்தார்கள். கி.பி. 1872ஆம் ஆண்டில் படைத்துறைக் கலகம் ஒன்று ஏற்பட்டது. பழங்காலத்திலிருந்து பிலிப்பைன்ஸ் நாட்டில் வசித்துவந்த மக்களைச் சார்ந்த மத குருமார்கள் இந்தக் கலகத்தைத் தூண்டினார்கள். அதிகமான நிலங்களைச் சொந்தமாக்கிக்கொண்டிருந்த மதகுருமார்களைத் தேசிய இயக்கத்தினர் தாக்கத் தொடங்கினார்கள். மதகுருமார்கள் (Friars) செறுக்குடைய ஸ்பானியர்கள் என்றும், பிலிப்பைன்ஸ் மக்களைத் தாழ்வாக எண்ணுபவர்கள் என்றும் கருதப்பட்டார்கள். புகையிலைத் தோட்டங்களும், வாணிபமும் அரசாங்கத்தின் தனி உரிமையில் இருந்தன என்று ஸ்பானிய அரசாங்கத்தை மக்கள் வெறுத்தார்கள். கி.பி. 1872ஆம் ஆண்டிலிருந்து 1898ஆம் ஆண்டுவரை இடைவிடாமல் தேசிய இயக்கத்தை வன்முறையில் அடக்க அரசாங்கம் முயன்றது.

ஜோஸ் ரிஜால் மெர்காடோ ஒய் ஆலோன்ஸோ (Jose Rizal —Mercado Y Alonoso) என்பவர்தாம் தெளிவாகவும், நுட்பமாகவும் ஆராய்ந்து பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள ஸ்பானியர்களின் ஆட்சியை எதிர்த்து வாதாடினார். கி.பி. 1861ஆம் ஆண்டில் அவர் பிறந்தார். லூஜானில் உள்ள குத்தகைப் பயிர் செய்யும் ஒரு மதகுருமாரின் குமாரர் இவர். இவருடைய

இதனுல், பழங்குடி மக்களிடம் மனக்கசப்பு நிலவியிருந்தது. பிற்போக்கு மதகுருக்களை இனவுணர்ச்சி மனப்பான்மையுள்ளவர்கள் என்றும், அவர்களால் நாட்டின் பொருளாதாரம், அரசியல் ஆகிய வற்றின் வளர்ச்சிக்குத் தடை ஏற்படுகிறது என்றும் கி.பி. 1840ஆம் ஆண்டில் படித்த பிலிப்பைன்ஸ் மக்கள் இடித்துரைத்தார்கள். மனக்கசப்புற்ற மதகுருமார்கள் ஸ்பெயின் நாட்டு ஆட்சியாளர்கள் தங்களுடைய கொள்கைகளைக் குறுகிய நோக்கமற்றனவாய் மாற்ற வேண்டும் எனக் கி.பி. 1843ஆம் ஆண்டில் கிளர்ச்சி செய்தார்கள். பாதிரி பெலாயிஜ் (Pelaez) என்பவரும், அபொலிநாரியோ (Apolinario) என்பவரும் மதச் சார்பற்ற இயக்கத்தின் தலைவர்கள்.

விவசாயிகளும் வருந்தத்தக்க நிலையில் இருந்தார்கள். அவர்களுக்குக் கடன்காரர்களின் தொல்லை அதிகமாயிருந்தது. நிலங்களை வாங்கும் மதகுருமார்களுடன் போட்டியிட்டுக்கொண்டு விவசாயிகளால் நிலங்கள் வாங்க முடியவில்லை. இதனுல் அவர்களில் பலர் துன்பத்தை ஏற்றுக்கொண்டு சுறுசுறுப்பில்லாத வாழ்க்கையில் ஈடுபட்டார்கள். இன்னும் சிலர் சினமூண்டு வன்முறைச் செயல்களில் ஈடுபட்டார்கள். ஸ்பானிய நிலச் சொந்தக்காரர்களிடமிருந்தும், மெஸ்டிஜோ (ஸ்பானிய வழக்கில் கலப்பினப் பிறவியான குழந்தை) நிலச்சொந்தக்காரர்களிடமிருந்தும் கொள்ளை அடித்தார்கள். மத்திய வாஜானில் மதகுருமார்களைத் தாக்கினுர்கள். திருச்சபைக் குரு மரபுக்குரிய பிலிப்பைன்ஸ் மக்கள் இவர்களின் தலைவர்களாய்த் திகழ்ந்தார்கள்.

பத்தொன்பதாவது நூற்றுண்டின் இடையிலே வளர்ந்த கோலோரும் இயக்கமும் (Colorum movement) கிளர்ச்சி செய்யத் தொடங்கியது. இந்த இயக்கத்தை ஏற்படுத்தியவரும், இதற்காக உயிரை நீத்தவரும், தயாபாஸ் மாகாணத்தைச் சேர்ந்தவருமாகிய அபோலிநாரியோ டி லாகிரஸ் (Apolinario de lacruz) என்பவர் கி.பி. 1841ஆம் ஆண்டில் மணிலாவில் உள்ள மத குருமார்களின் பணித்துறை அமைப்பின் உறுப்பினராகச் சேர முயற்சி செய்தார். ஆனுல் இவரை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையால், பொதுப் பணிக்காகக் கோலோரும் என்ற உடன்பிறப்பு மன்றத்தை தொடங்கினுர். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர்களையும், மெஸ்டிஜோஸ் மக்களையும் இதில் உறுப்பினர்களாக அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இது ஒரு மதம், சமூகம் ஆகியவற்றின் இயக்கம். இது வழக்கத்திற்கு மாறுன கொள்கைகளைப் பரப்பியது. ஆகையால், காவல்துறைப் படை இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களைக் கைது செய்யமுயற்சி செய்தது. கடைசியாக அபாலிநாரியோவையும் அவருடைய சீடர்களையும் காவலர்கள் பிடித்துக் கொலை

...செய்தார்கள். இவர்களால் வியக்கத்தக்க தெய்வீகச் செயல்களைச் செய்யமுடியாது என்று நிரூபிக்க இவர்களுடைய உடல்களை அருவருக்கத்தக்க முறையில் காவல்துறைப் படையினர் துண்டித்தார்கள். எஞ்சிய கோலோரும் இயக்கத்தினர் மலைக்குகைகளில் ஓடி ஒளிந்துகொண்டனர். அங்கு அவர்கள் புதிய ஜெருசலம் என்ற இயக்கத்தைத் தொடங்கினார்கள். கிறித்தவப் பெயர்களையும் கிறித்தவத்துறைச் சொல்களையும் அவர்கள் பயன்படுத்தத் தொடங்கினார்கள். ஆனால், அவர்கள் ஸ்பானியர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு வராத காலத்தில் இருந்த கோட்பாடுகளையும், சமயச் சடங்குகளையும் பின்பற்றி நடக்கத் தொடங்கினார்கள். இந்த இயக்கம் புகழ் அடைந்ததால், மற்ற ஆட்சி எதிர்ப்பாளர் இயக்கத்தினர்களும் பத்தொன்பதாவது நூற்றாண்டு முழுவதும் இந்த இயக்கத்தின் பெயரையே வைத்துக்கொண்டார்கள்

கி.பி. 1869ஆம் ஆண்டுக்குப் பிறகு அரசாங்கத்தை எதிர்க்கும் இயக்கம் பிலிப்பைன்ஸில் ஓங்கி வளரத் தொடங்கியது. ஸ்பெயினில் புரட்சி ஏற்பட்டதாலும்; சூயஸ் கால்வாயைத் திறந்ததாலும் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் ஐரோப்பாவிற்கு அதிக அளவில் செல்லத் தொடங்கினார்கள். ஸ்பெயின் நாட்டிலிருந்து குறுகிய மனப்பான்மையற்ற முற்போக்காளர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு வந்தார்கள். கி.பி. 1872ஆம் ஆண்டில் படைத்துறைக் கலகம் ஒன்று ஏற்பட்டது. பழங்காலத்திலிருந்து பிலிப்பைன்ஸ் நாட்டில் வசித்துவந்த மக்களைச் சார்ந்த மத குருமார்கள் இந்தக் கலகத்தைத் தூண்டினார்கள். அதிகமான நிலங்களைச் சொந்தமாக்கிக்கொண்டிருந்த மதகுருமார்களைத் தேசிய இயக்கத்தினர் தாக்கத் தொடங்கினார்கள். மதகுருமார்கள் (Friars) செறுக்குடைய ஸ்பானியர்கள் என்றும், பிலிப்பைன்ஸ் மக்களைத் தாழ்வாக எண்ணுபவர்கள் என்றும் கருதப்பட்டார்கள். புகையிலைத் தோட்டங்களும், வாணிபமும் அரசாங்கத்தின் தனி உரிமையில் இருந்தன என்று ஸ்பானிய அரசாங்கத்தை மக்கள் வெறுத்தார்கள். கி.பி. 1872ஆம் ஆண்டிலிருந்து 1898ஆம் ஆண்டுவரை இடைவிடாமல் தேசிய இயக்கத்தை வன்முறையில் அடக்க அரசாங்கம் முயன்றது.

ஜோஸ் ரிஜால் மெர்காடோ ஒய் ஆலோன்ஸோ (Jose Rizal —Mercado Y Alonoso) என்பவர்தாம் தெளிவாகவும், நுட்பமாகவும் ஆராய்ந்து பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள ஸ்பானியர்களின் ஆட்சியை எதிர்த்து வாதாடினார். கி.பி. 1861ஆம் ஆண்டில் அவர் பிறந்தார். லூஜானில் உள்ள குத்தகைப் பயிர் செய்யும் ஒரு மதகுருமாரின் குமாரர் இவர். இவருடைய

பெற்றோர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றாலும் இவர்களுடைய முன்னோர்கள் ஸ்பெயினிலிருந்தும், சீனாவிலிருந்தும் வந்தவர்கள். இவர் மிக அறிவுக் கூர்மையுடைய மாணவரா யிருந்தார். செயின்ட் தாமஸ் டோமினிகன் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். இலக்கியத்திலும், மொழிகளிலும் தேர்ச்சி யடைந்த மாணவராய்த் திகழ்ந்தார்; தத்துவம், மருத்துவம் ஆகியவற்றின் மேல்படிப்பிற்காகக் கி பி. 1879ஆம் ஆண்டில் ஸ்பெயினுக்குச் சென்றார்; ஆறு ஐரோப்பிய மொழிகளில் வல்லவரா யிருந்தார்; ஐரோப்பா முழுவதும் பயணம் செய்தார். ஸ்பானியர்கள் வருமுன் பிலிப்பைன்ஸ் நாட்டுக் கலாசாரத்தைப்பற்றி விவரிக்கும் சஸசாஸ் டிலாஸ் இஸ்லாஸ் பிலிபினஸ் (Sucesos de las Islas Filipinas—Events in the Philippines) என்ற புத்தகத்தைத் தேர்ந்து திரட்டித் திருத்தியமைத்தார். பரந்த மனப்பான்மைக் கொள்கைகளுடன் ஸ்பெயினில் தொடர்புகொண்டார். ஆனால், பிலிப்பைன்ஸில் இக் கொள்கைகளுக்கு மத குருமார்கள் தடை விதித்திருந்தார்கள். பிலிப்பைன்ஸ் ஸ்பெயின் நாட்டுப் பிடியி லிருந்து விடுதலையடையவேண்டும் என்று கூறியவரும், பிலிப் பைன்ஸ் தேசிய இயக்கத்தை நிறுவியவருமான மார்செலோ ஹெச் டெல் பிலார் என்பவருடன் இவர் ஐரோப்பாவில் தொடர்பு கொண்டார். இவரைவிட ஹெச் டெல்பிலார் அறிவுக் கூர்மை யுடையவர் என்றும், நேர்மையானவர் என்றும் பலர் கருதினர். ஸ்பெயின்மூலம் பிலிப்பைன்ஸ் தீவுகள் அடைந்த வளர்ச்சியை இவர் குறை கூறவில்லை. ஆனால் தீவிரவாத முறையிலும், வன் முறைச் செயல்கள் மூலமும் ஸ்பெயின் நாட்டு ஆட்சியை எதிர்க்க இவர் விரும்பவில்லை. அமைதியான முறையிலே நிலச் சீர்திருத்தம் செய்யவும் அரசாங்கத்தைத் திருத்தவும் இவர் விரும்பினர். ஆனால், பிற்போக்கான மதகுருமார்களின் ஆக்கிரமிப்பு ஒழிந்தால் தான் பிலிப்பைன்ஸ் முன்னேற முடியும் எனக் கருதினர். தம் கொள்கைகளைப் பிலிப்பைன்ஸ் மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் தம் புனைகதைகள்மூலம் பிரசாரம் செய்தார். பிலிப்பைன்ஸ் மக்களிடம் உள்ள தவறுகளையும் இவர் சுட்டிக் காட்டத் தயங்கவில்லை. இவருடைய நூலான 'நோலி மீ டாங்கரே' விற்குப் (Noli Me Tangere) பிலிப்பைன்ஸில் தடை விதிக்கப் பட்டது.

ஹாங்காங்கில் சில காலம் வசித்துவிட்டு ரிஜால் கி.பி. 1892ஆம் ஆண்டில் மணிலாவிற்குத் திரும்பி வந்தார். உடனே இவர் நாடு கடத்தப்பட்டு மிண்டானோ தீவிற்கு அனுப்பப்பட்டார். கி.பி. 1892ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸ் இணைக்குழு ஒன்றைத்

தொடங்கினர். இக்குழுவின் மூலம் அஹிம்சை முறையில் அரசாங்கத்திற்கு விண்ணப்பங்கள் அனுப்பினர். ஆனால், அரசியல் விவகாரங்களில் இம் முறைமூலம் இவர் வெற்றியடையவில்லை. பிலிப்பைன்ஸ் நாட்டில் வளர்ந்துவரும் தேசிய இயக்கத்திற்கு இவர் ஒரு சின்னமாக விளங்கினர். மற்றத் தேசியத் தலைவர்கள் அஹிம்சை முறையைப் பின்பற்றவில்லையென்றாலும் அவர்களுடைய கொள்கைகளையும், செய்கைகளையும் இவர் மன்னிக்கவில்லை. கோலோரும் குழு தேசிய இயக்கத்தில் ஈடுபட்டிருந்தது. ஆண்டிரஸ் போனி பாஸியோ (Andres Boni facio) என்பவர் தொடங்கிய கடிபுனன் சங்கத்தை இவர்கள் வரவேற்றார்கள்.

கி.பி. 1896ஆம் ஆண்டு ஆகஸ்டில் லூஜானில் தீவிரக் கலகமும், புரட்சியும் தொடங்கின. ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர்களையும், அவர்களின்மேல் இரக்கம் கொண்டவர்களையும் கொலை செய்யக் கடிபுனன் சங்கத்தார்கள் சூழ்ச்சி செய்தார்கள். ஆனால், இந்தத் திட்டத்தை அரசாங்கம் கண்டுபிடித்துவிட்டது. இதனால் பயம் கொண்ட ஐரோப்பியர்கள் இவர்களைக் கொலை செய்ய முற்பட்டார்கள். இக் கலகத்தின்போது ரிஜால் மணிலாவிற்குத் திரும்பி வந்தார். முதலில் மணிலாவின் ஆளுநர் கடிபுனன் சங்கத்தாரின் சூழ்ச்சியில் ரிஜால் பங்குகொள்ளவில்லை என்று கூறிய போதும், பின்பு அவரைக் கைது செய்தார்கள். வழக்கு விசாரணைக்குப்பிறகு ரிஜாலுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

கி.பி. 1896ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் தேதி ரிஜால் தூக்கி லிடப்பட்டார். தேசிய இயக்கத்தின் வீரனும், தெய்வமகனுமாகிய ரிஜால் கொலை செய்யப்பட்டதால் ஸ்பெயின் நாட்டு ஆட்சிக்கு எதிர்ப்பு வலுத்தது. சினத்தால் உந்தப்பட்ட டகலாக் தீவிரவாதிகள் ஆகுயிநால்டோ (Aguinaldo) தலைமையில் ஸ்பெயின் நாட்டு ஆட்சியை எதிர்த்தார்கள். இரண்டு ஆண்டிற்குப் பிறகுதான் இத் தீவிரவாதிகளின் இயக்கத்தை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடிந்தது. கி.பி. 1898ஆம் ஆண்டில் பியக் நோபாடோ (Biak Nobato) என்ற தாற்காலிகப்போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது. நாடுகடத்தப்பட்டு வெளியேற அகுயிநால்டோ ஒப்புக்கொண்டார். தோற்றவர்மீது கோரப்படும் இழப்பீட்டுத் தண்டத் தொகையைத் தேசியவாதிகளுக்குக் கொடுக்க ஸ்பானியர்கள் ஒப்புக்கொண்டார்கள். நகராட்சியைச் சீர்திருத்தவும், ஆலோசனை சபை ஒன்றை அமைக்கவும் ஸ்பானியர்கள் முன்வந்தனர். இவை தேசியவாதிகளின் உணர்ச்சிகளை இன்னும் அதிகமாகத் தூண்டிவிட்டன.

பாதிரி கிரிகோரியோ அக்லிபே (Gragario Aglipay) என்பவரும் தம்முடைய மத இயக்கத்தின் மூலம் பிலிப்பைன்ஸ் தேசிய இயக்கத்தில் பங்கு கொண்டார். மாதாக்கோவில்களில் அயல் நாட்டினருடைய ஆதிக்கம் இருப்பதை இவர் கண்டித்ததால் இவரைச் சமூகத்திலிருந்து தள்ளி வைத்தார்கள். தேசியத் தொண்டர்களின் படையில் சட்டம் – ஆட்சி - எல்லை ஆகியவற்றில் ஆலோசனை கூறும் சமய மாமுதல்வராக (Vicar-General) இவரை அகுயினால்டோ நியமித்தார். சுதந்திரப் பிலிப்பீனிய மாதாக் கோவில்களின் தலைமைப் பாதிரியாக இவர் கி.பி. 1902ஆம் ஆண்டில் பதவியேற்றார். இவர் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்களைத் தாம் மத குருக்களாகச் சேர்த்துக்கொண்டார். அவர்கள் மணம் செய்துகொள்ள அனுமதி கொடுத்தார். பிலிப்பைன்ஸ் நாட்டு மொழிகளில் வழிபாடு செய்ய அனுமதி கொடுத்தார். மேலும், இக் கோவில்களைச் சார்ந்தவர்கள் தேசிய அரசியல் விவகாரங்களில் தீவிரமாகப் பங்கு கொண்டார்கள். இதை எதிர்த்து மேரியினுடைய பெருமையைப் பாதுகாக்கும் காப்பாளர்கள் (Guards in Honour of Mary) என்ற இயக்கத்தை அக்லீபே இயக்கத்திற்கு எதிராக டோமினிகன் சமயத்துறவுப் பணித்துறை தொடங்கியது. ஆனால், இந்த இயக்கம் பயனற்றதாய்ப் போயிற்று. ஆனால், பொதுவாக எல்லாப் பிலிப்பைன்ஸ் மக்களும் கத்தோலிக்க மதத்தையே பின்பற்றினார்கள். கி.பி. 1898ஆம் ஆண்டில் அமெரிக்கா பிலிப்பைன்ஸ் நாட்டிற்குள் வந்தபோது மதகுருமார்களுடைய நில ஆக்கிரமிப்பை ஒழிக்க வேண்டும் என்றும், ஸ்பானியர்களை ஸ்பெயின் நாட்டிற்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்றும் எல்லாப் பிலிப்பைன்ஸ் தேசிய இயக்கவாதிகளும் கேட்டுக்கொண்டார்கள்.

பிலிப்பைன்ஸ் நாட்டை அமெரிக்கா கைப்பற்றல்

கியூபாப் போரினை முன்னிட்டு (Cuba War) அமெரிக்கக் கடற்படை பிலிப்பைன்ஸ் அரசியல் விவகாரத்தில் கி.பி. 1898ஆம் ஆண்டு மே மாதம் தலையிட்டது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கை அமெரிக்க மக்களுக்கும், பிலிப்பைன்ஸ் மக்களுக்கும் வியப்பை விளைவித்தது. கடற்படைத் தளபதி மகான் (Mahan), சட்டமாமன்ற மேலவை உறுப்பினர் ஹென்றி கேபோட் லாட்ஜ் (Henry Cabot Lodge), கப்பற்படையின் நேருதவிச் செயலர் (Under Secretary of the Navy) தியடோர் ரூஸ்வெல்ட் முதலியோர் அமெரிக்கா இந்த நடவடிக்கை எடுப்பதற்குக் காரணமாய்த் திகழ்ந்தார்கள். ஸ்பெயின் நாட்டுப் போரின்போது அமெரிக்கா தென் கிழக்கு ஆசியாவில் ஒரு பகுதியைக் கைப்பற்ற வாய்ப்புக் கிடைத்தது. கி.பி. 1898ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் தேதி

அமெரிக்க அரசாங்க அமைச்சர் ரூஸ்வெல்ட் தூரக்கிழக்கின் கப்பற்படைத்தலைவர் ட்யூவியை மணிலா குடாக் கடலில் இருந்த ஸ்பெயின் கப்பற்படைகளை அழிக்குமாறு உத்திரவிட்டார். இந்த உத்தரவே அமெரிக்கா பிலிப்பைன்ஸ் நாட்டைக் கைப்பற்றுவதற்கு ஊன்றுகோலா யிருந்தது.

பலநாடுகள் உலகத்தில் உள்ள பல பகுதிகளைக் கைப்பற்ற முயற்சி செய்து கொண்டிருந்த சமயத்தில்தான் அமெரிக்காவும் பிலிப்பைன்ஸைக் கைப்பற்ற முயற்சியெடுத்தது. வட சீனாவின் பல முக்கியத் துறைமுகப் பட்டினங்களை ஜெர்மனியும், உருசியாவும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. தென்கிழக்கு ஆசியாவில் நுழைவதற்கு ஜெர்மனி முயன்று கொண்டிருந்தது. ஜெர்மனி, உருசியா ஆகியவற்றின் நுழைவைக் கிழக்கு ஆசியாவில் பிரிட்டன் வரவேற்கவில்லை. அவர்களை எதிர்த்து ஈடுகொடுக்கும் சக்தி அமெரிக்காவுக்கு இருக்கிறது என எண்ணி இப் பகுதிகளில் அமெரிக்காவின் நுழைவைப் பிரிட்டன் வரவேற்றது; அமெரிக்காவிற்கு உதவியும் செய்தது. அமெரிக்காவில் உள்ள பிராடெஸ்டென்ட் (protestant) மதப் பரப்பாளர்களும், அமெரிக்க ஆட்சிஉலகத்தில் பல நாடுகளில் பரவ வேண்டும் என்று நினைத்த பல அமெரிக்கர்களும் கடவுளே அமெரிக்காவுக்கு இத்தகைய வாய்ப்பை உருவாக்கியிருப்பதாகக் கருதினார்கள். கி.பி. 1898ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் தேதி மணிலாக் குடாக் கடலில் ட்யூவியின் வெற்றிக்குப் பிறகு 'ட்யூவி தொப்பிகள்', 'ட்யூவி விருந்துக் கூட்டங்கள்' (Dewey Cocktails), 'ட்யூவி குடியரசுத் தலைவராக வேண்டும்' எனும் பல இயக்கங்கள் அமெரிக்காவில் முளைத்தன. அமெரிக்க வாணிபத் தலங்களும், ஆதாயத்தை நாடி முதலீடு செய்பவர்களும் இந்த இயக்கங்களில் பங்கு கொண்டார்கள்.

அமெரிக்கா கைப்பற்றிய பிலிப்பைன்ஸ் தீவுகள் அமெரிக்கப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாயிருக்கும் என ரூஸ்வெல்ட் நினைத்தார். ஆனால், அமெரிக்காவில் அயல்நாட்டு வாணிபத்தில் தூரக்கிழக்கு நாடுகளின் பங்கு மிகமிகக் குறைவே. பிலிப்பைன்ஸ் குடியேற்றத்தால் அமெரிக்காவிற்குச் செலவு அதிகமாயிற்று. இதை ரூஸ்வெல்ட்டே ஒப்புக்கொண்டார். மேலும், கிழக்கு ஆசியாவில் ஜப்பானின் செல்வாக்கு அதிகரித்ததால் பிலிப்பைன்ஸ் நாட்டில் அமெரிக்கக் கப்பற்படையை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு ஹவாயும், பனாமாவும்தாம் (Panama) அவசியமாயிருந்தன; பிலிப்பைன்ஸ் தேவையற்றதாயிருந்தது. அமெரிக்கக் குடியரசுக் கட்சியின் தலைவர் வில்லியம்ஸ் ஜன்னிங்ஸ் பிரயன் முதலிலிருந்தே அமெரிக்காவின்

தனித்தலைமைக் கொள்கையை வரவேற்கவில்லை. ஆகையால், பிலிப்பைன்ஸில் அமெரிக்காவிற்கு ஏற்பட்ட இடையூறுகளினால் அவர் அமெரிக்க நாட்டின் ஆளும் கட்சியின் தனித்தலைமை கொள்கைகளைத் தீவிரமாக எதிர்த்தார்.

பிலிப்பைன்ஸில் ஸ்பெயின் நாட்டு அதிகாரத்தை தொலைப்பதற்காகக் கப்பற்படைத் தளபதி ட்யூவி பிலிப்பைன்ஸ் மக்களின் உதவியை நாடினார். அதற்காக அகுயிநால்டோவைச் சிங்கப்பூரிலிருந்து ஹாங்காங்கிற்கு வரவழைத்தார். மே மாதம் 19ஆம் நாள் கடிபுனன் தலைவர் அகுயிநால்டோ மணிலாவிற்கு வந்தார். வந்த ஒரு மாதத்திற்குள் தேசியப் புரட்சி அரசாங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த அரசாங்கம் கி.பி. 1896ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1898ஆம் ஆண்டுவரை ஆட்சி புரிந்தது. அகுயிநால்டோ உதவியுடன் எட்டாயிரம் அமெரிக்கப் படை வீரர்கள் மணிலாக் கோட்டையைக் கைப்பற்றக் கி.பி. 1898ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆயத்தமாயினர். ஆகஸ்டு மாதம் 13ஆம் தேதி மணிலாவைக் கைப்பற்றினார்கள். இதை கைப்பற்றுவதற்குச் சில மணி நேரத்துக்குமுன் அமெரிக்காவும் ஸ்பெயினும் ஒரு சமாதான உடன்படிக்கை முதற்குறிப்பில் (peace protocol) கையொப்பமிட்டன. இதற்குப் பிறகு இவ்விரு நாடுகளுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படிப் பிலிப்பைன்ஸ் தீவுகளை ஸ்பெயின் அமெரிக்காவிற்குக் கொடுத்தது. ஸ்பெயினிற்கு 20 மில்லியன் டாலர் இழப்பீட்டை அமெரிக்கா கொடுத்தது. அகுயிநால்டோவிற்குத் தான் எவ்வகையான வாக்குறுதியும் கொடுக்கவில்லை என ட்யூவி கருதினார். ஆனால், அமெரிக்காவிற்கு உதவி செய்த பிலிப்பீனியத் தேசியவாதிகள் பிலிப்பைன்ஸ் சுதந்திரத்திற்காகத் தாங்கள் போராடுவதாகக் கருதினார்கள். ஆகையால், பிலிப்பைன்ஸ் தீவுகளுக்குச் சுதந்திரம் கிடைக்கவில்லை என அறிந்தவுடன் அவர்கள் கலகம் செய்யத் தொடங்கினார்கள்.

பிலிப்பீனிய மக்களின் கலகங்களை அடக்குவதற்கு அமெரிக்க இராணுவப் படைக்கு 3½ ஆண்டுக்காலம் பிடித்தது. மோரோஸ் மக்களை வெல்வதற்கு இன்னும் அதிகக்காலம் தேவையாயிருந்தது. கி.பி. 1900ஆம் ஆண்டில் அகுயிநால்டோ கைது செய்யப்பட்டார். அவர் அமெரிக்க ஆட்சியை ஒப்புக்கொண்டார்; விசுவாசத்துடன் அமெரிக்காவிற்குத் தொண்டு செய்வதாகவும் வாக்குறுதி கொடுத்தார். மற்றக் கலகக்காரர்களையும் அமெரிக்க ஆட்சியை ஒப்புக்கொள்ளும்படி அவர் கேட்டுக் கொண்டார். அகுயிநால்டோ படையில் படைத்தலைவராயிருந்த பெல்பி சால்வடோர் (Pelipe Salvador) என்பவர் பத்தாண்டுக்காலம் சிறு கூட்

டத்தார் செய்யும் ஒழுங்கற்ற போர் முறையில் (Guerilla Warfare) அமெரிக்கத் தனித்தலைமையை எதிர்த்தார். கி.பி. 1907ஆம் ஆண்டுக்குள் அமெரிக்காவிற்கு எதிராகத் தோன்றிய எல்லாக் கலகங்களும் அடங்கின. கி.பி. 1920ஆம் ஆண்டிலிருந்து பிலிப்பைன்ஸ் தீவுகளின் சட்டசபை அகுயிநால்டோவிற்கு ஓய்வு ஊதியம் கொடுத்து வந்தது. அதற்குப்பிறகு பல முறை அரசியலில் ஈடுபட்டிருந்த மேன்யுல் கியுஜான் (Manuel Quezon) தலைமையை அகுயிநால்டோ எதிர்த்தார். பொதுமக்களுடைய நலத்தை வளர்க்கவேண்டும் என்றும், தீவுகள் சுதந்திரமடைய வேண்டும் என்றும் அகுயிநால்டோ விரும்பினர்

கலகங்களை அடக்கியவுடன், பிலிப்பைன்ஸ் தீவுகளில் நிலையாக ஆட்சிபுரிய அமெரிக்க அரசாங்கம் தீர்மானித்தது. பிலிப்பைன்ஸ் மக்களால் தங்கள் சுதந்திரத்தைப் பாதுகாக்க முடியாது என்றும், பிலிப்பைன்ஸ் தீவுகளின் வளர்ச்சிக்காக அமெரிக்க நாட்டின் அதிகாரம் பிலிப்பைன்ஸில் நீடிக்க வேண்டும் என்றும் அமெரிக்க நாட்டு மக்கள் தலைவர் கூறினர். அமெரிக்கக் குடிகளுக்குரிய முழுக் குடிமுறை உரிமைகளும் பிலிப்பைன்ஸ் மக்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆயுதங்கள், துப்பாக்கிகள் முதலியன எடுத்துச் செல்லும் உரிமையும், குற்றத்தை ஆராய்ந்து ஒருமனதாகத் தீர்ப்புக் கூறும் 12 பேர் கொண்ட ஆய உரிமையும் (Trial by Jury) பிலிப்பைன்ஸ் மக்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அவர்கள் அமெரிக்க ஆட்சிக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்ற கட்டாய நிலை உருவாகியது. அவர்களுக்குச் சுய ஆட்சி கொடுப்பதற்காக அவர்களைத் தயார் செய்ய அமெரிக்கா முற்பட்டது. கி.பி. 1901ஆம் ஆண்டு அமெரிக்க இராணுவ ஆட்சி பிலிப்பைன்ஸில் நீக்கப்பட்டது.

சுய ஆட்சித் தொடக்கமும் நிலச் சீர்திருத்தச் சட்டங்களும்

பிலிப்பைன்ஸில் அமெரிக்க ஆட்சியை உருவாக்கி அமைத்தவர் டாப்ட் (Taft). இவர் கி.பி. 1901ஆம் ஆண்டிலிருந்து 1904ஆம் ஆண்டுவரை அமெரிக்கப் பிரதிநிதியாகப் (Commissioner) பணிபுரிந்தார். அதன் பிறகு மக்கள் தலைவர் ரூஸ்வெல்ட்டின் படைத்துறை ஆட்சி அலுவலகத்தில் அமைச்சராய்ப் பணிபுரிந்தார். கி.பி. 1909ஆம் ஆண்டிலிருந்து 1913ஆம் ஆண்டுவரை அமெரிக்கக் குடியரசுத் தலைவராகவும் பணிபுரிந்தார். பிலிப்பைன்ஸில் இராணுவ ஆட்சியை டாப்ட் ஒழித்தார். பிலிப்பைன்ஸ் குடிமக்களுக்கெல்லாம் சமஉரிமைகள் கொடுத்தார்.

கிறித்துவத் திருச்சபையையும், அரசியலையும் தனித்தனியாகப் பிரித்தார். செய்தித்தாள் உலக்கத்திற்குச் சுதந்திர எழுத்துரிமையையும், மக்கள் ஒன்றுகூடும் உரிமையையும் அளித்தார். கி.பி. 1902ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடியரசு சட்டசபைக் கூபர் சட்டத்தை [Cooper Act (or) Organic Act] நடைமுறைக்குக் கொண்டுவந்ததால், கி.பி. 1903ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸில் முதல் தேர்தலை டாப்ட் நடத்தினர். ஆகையால் நகராட்சி, கிராம ஆட்சி ஆகியவற்றைப்பற்றிப் பிலிப்பைன்ஸ் பொதுமக்களை அமெரிக்க அரசாங்கம் ஆலோசனை கேட்க முடிந்தது. வரி செலுத்துபவர்களும், படித்தவர்களும் மட்டும் வாக்களித்துத் தேர்ந்தெடுத்த ஒரு பொதுச் சட்டசபை கி.பி. 1907ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. கி.பி. 1909ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸுக்குத் தலைமை ஆளுநர் நியமிக்கப்பட்டார். கல்வி வளர்ச்சிக்கும், உடல் வளர்ச்சிக்கும் (Health) டாப்ட் பொருளுதவி செய்தார்; பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு ஒரேவகையான சட்டங்களைக் கொடுத்தார். பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த நீதிபதிகளையே இச் சட்டங்களுக்கு விளக்கம் கூறவும் தீர்ப்புக் கூறவும் செய்தார். ஆனால், மோரே பழங்குடிகளின் சமூகப் பழக்கவழக்கங்களைப் பாதுகாக்கிற பிலிப்பீனியரை மாற்றவில்லை. பழைய பழக்கவழக்கச் சட்டங்களை மட்டும் அவர் மாற்றவில்லை. பண்டைய பழக்க வழக்கங்களைப் பாதுகாக்கின்ற பிலிப்பீனிய மக்களில் சிலரைக் கி.பி. 1901ஆம் ஆண்டில் கமிஷன் குழுவின் உறுப்பினராக நியமித்தார். கி.பி. 1908ஆம் ஆண்டில் அவர்களில் சிலருக்கு அமைச்சர் அவையில் இடம் கிடைத்தது. அதற்குப் பிறகு நீதித்துறையிலும், நிதித்துறையிலும், தொழிற்சங்கத்திலும் பிலிப்பீனிய மக்களுக்குப் பதவி கிடைத்தது. கி.பி. 1909ஆம் ஆண்டுக்குப் பிறகு குறிப்பிட்ட ஒரே பணிக்காக அமைக்கப்பட்ட அரசியல் மேல்சபை அமைக்கப்பட்டது. இச் சபை, தலைமை ஆளுநருக்கு ஆலோசனை கொடுக்க வேண்டும். கீழ்ச்சபை, மேல்சபையின் தலைவர்களாகவும், பெரும்பான்மையோர் கட்சியின் தலைவர்களாகவும் பிலிப்பீனியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மக்களுக்கு அறிவுரை கூறும் அமைச்சர் பதவியைத் தவிர, மற்ற எல்லா அமைச்சர் பதவிகளும் பிலிப்பீனிய மக்களுக்கே சென்றன. ஆனால், அமெரிக்கக் குடியரசில் இருப்பதுபோல் அமைச்சர் அவை தலைமை ஆளுநருக்குத்தான் பதிலளிக்கக் கடமைப்பட்டிருந்தது. சட்டசபைக்குப் பதிலளிக்கக் கடமைப்படவில்லை.

கி.பி, 1907ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸ் சட்டசபை தேர்ந்தெடுக்கப்பட்டது. உள்நாட்டு விவகாரங்கள்பற்றிச் சட்டமியற்றவும், நீதி, நிதி முதலியவற்றைப்பற்றித் திட்டங்களை வரை

யறுக்கவும் இச் சட்டசபைக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. கி.பி. 1907ஆம் ஆண்டில் சட்டசபை தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், அமெரிக்க அரசாங்கம் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கு முழுச் சுதந்திரம் கொடுக்கவேண்டும் என்ற உறுதிமொழியை அமைச்சர் டாப்ட் கொடுத்தார். ஆனல் அரசியல், பொது விவகாரங்களைக் கவனிக் கவும், உள்நாட்டு அமைதி காக்கவும், ஏழைகளுக்கும், பணக் காரர்களுக்கும் சமமான பாதுகாப்பு அளிக்கவும், பிலிப்பைன்ஸ் மக்களுக்குத் தகுதியுண்டாகப் பயிற்சியளிக்கவும் வேண்டும் என அவர் விரும்பினர். குடியரசுத் தலைவர் வில்சனல் நியமிக்கப்பட்ட ஆளுநர் கி.பி. 1913ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸ் குழு (Appointive Philippines Commission) ஒன்றை அமைத்தார். இக் குழு மேல் சட்டசபையாகச் செயல்புரிந்தது. இரு சட்டசபைகளிலும் பிலிப்பைன்ஸ் மக்களுக்குப் பெரும்பான்மையிருந்தது. ஆனல், பிலிப்பைன்ஸ் தேசியவாதிகளுக்கு டாப்ட் ஏற்படுத்திய சீர்திருத் தங்கள் மன நிறைவு அளிக்கவில்லை.

மதகுருமார்களுக்கு அரசாங்கத்தில் உள்ள செல்வாக்கைக் குறைத்து அடக்கி, அவர்கள் நிலச் சொந்தக்காரர்களாக இருப்பதை ஒழித்தால்தான் லூஜானில் உள்ள விவசாயக் குடி மக்களின் ஆதரவைப் பெறமுடியும் என்பதை அமெரிக்க அரசாங்கம் கண்டு கொண்டது. பிலிப்பைன்ஸில் உள்ள எல்லாப் பொது மக்களும் இதையே விரும்பினர்கள். 4,30,000 ஏக்கர் நிலங்கள் மதகுருமார்களிடமே இருந்தன. இவற்றில் பாதி நிலங்கள் மணிலா வுக்கு அருகிலிருந்தன. பிலிப்பைன்ஸில் உள்ள பல செழிப்பான நிலங்களும் இம் மதகுருமார்களிடமே இருந்தன. பொதுவாக இந் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டிருந்தன. இக் குத்தகைகள் மூலம் மதகுருமார்களுக்கு நல்ல பயன் கிடைத்தது. இந் நிலங்களுக்கு அருகில் இருக்கும் முழு வளர்ச்சியடையாத பல நிலங்களையும் தங்களுக்கு உரியன எனப் பல மதகுருமார்கள் உரிமை கொண் டாடினர்கள். ஆகையால் இந் நிலங்களில் விவசாயிகள் விவசாயம் செய்யமுடியவில்லை. மேலும், உள்நாட்டு அரசாங்க விவகாரங் களில் மதகுருமார்களுக்கு நிறையச் செல்வாக்கிருந்தது. பிலிப் பைன்ஸ் பொதுமக்களுக்கு இது பிடிக்கவில்லை. உதாரணமாக, குடி வாழ்க்கைப் புள்ளிவிவரத் தொகுப்புத்துறையிலும் உடல்நலம், சிறை நிருவாகம் முதலிய துறைகளிலும், காவற்படைத் துறையி லும் இம் மதகுருமார்களுக்குச் செல்வாக்கு இருந்தது. நகர நிருவாகம் பற்றிய வரவு, செலவுத் திட்டத்தை மதகுருமார்கள் தணிக்கை செய்தார்கள்; வரிபற்றி அரசாங்கம் கொண்டுவரும் திட்டங்களில் மாறுதல்களை ஏற்படுத்தினர்கள்; பொதுக் கல்விபற்றிய திட்டங்களை

நிருவகித்தார்கள். நேர் தாயக ஆட்சிக்குட்பட்ட நிலங்களைப் பயன்படுத்தும் முறையிலும், அவைகளைப் பிரிவினை செய்யும் முறையிலும் மேற்பார்வையிடவும், தடை விதிக்கவும் அவர்களுக்கு அதிகாரம் இருந்தது. ஆகையால், மத குருமார்களின் நில உரிமைகளை ஒழிக்கவும், உள்நாட்டு விவகாரங்களில் குருமார்களுக்குள்ள செல்வாக்கை அழிக்கவும், கல்விபற்றிய விவகாரங்களை மதச் சார்பற்றனவாக ஆக்கவும் அமெரிக்க அரசாங்கம் விரும்பியது; பிலிப்பைன்ஸ் மக்களின் ஆதரவைத் தேடவும் விழைந்தது.

கி.பி. 1900ஆம் ஆண்டில் நியூஆர்லியன்ஸிலிருந்து மணிலாவுக்குச் சென்ற போப்பாண்டவருடைய பிரதிநிதி கிறித்தவத் தலைமைக்குரு (Arch Bishop) பி. எல். சேப்பல்லி (P. L. Chappelle) மதகுருமார்களின் செல்வாக்கைக் குறைப்பதற்குத் தடையாக விருந்தார். மத குருமார்களின் நில உரிமைகளையும், அரசாங்கத்தில் உள்ள செல்வாக்கையும் அமெரிக்க இராணுவ அரசாங்கம் பாதுகாக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்; கிறித்தவத் திருச்சபையையும் (மதத்தையும்), அரசியலையும் தனித்தனியாகப் பிரித்ததைப்பற்றி மறுப்பைத் தெரிவித்தார். நேர் தாயக ஆட்சிக்குட்பட்ட நிலங்கள்மேலும், பள்ளிக்கூடங்கள்மேலும், மாதாக் கோவில்கள்மேலும், வட்டிக்கடைகள்மேலும் ஆதிக்கம் செலுத்த மதகுருமார்களுக்கு உரிமையுண்டு என வாதாடினர். அரசாங்கம் மத குருமார்களின் நிலங்களை வாங்கி, அவைகளைக் குத்தகையளவுக்குக் குறைவான நில உடைமைகளாக்கி (Small-Holdings) அதன் குத்தகையாளர்களுக்கு விற்க வேண்டும் என்று டாப்ட் கூறிய திட்டத்தை அவர் வரவேற்கவில்லை. அமெரிக்க அரசாங்கத்தின் பாதுகாப்பு இல்லாததால் மதகுருமார்கள் தங்களுடைய நிலங்களுக்குச் சென்று குடியேறினார்கள். விவசாயிகளின் கிளர்ச்சி தீவிரமாக எழுந்தது.

ஆனால், கி.பி. 1902ஆம் ஆண்டில் கூபர் சட்டப்படி (Couper or Organic Act) எல்லா மதகுருமார்களின் நிலங்களும் அரசாங்கத்தின் பொதுச் சொத்தாயின. அந்நிலங்களை விற்கவும், சொத்துரிமை மாற்றவும், நிலத்தின் குத்தகையாளர்களுக்குக் குத்தகைவிட முன்னுரிமையைக் கொடுக்கவும் அரசாங்கத்திற்கே உரிமையிருந்தது. அமெரிக்க அரசாங்கப் பிரதிநிதிகளுக்கு இச் சட்டம் பக்கபலமாயிருந்தது. இது பற்றி உரோமிலும், மணிலாவிலும் பேச்சு நடந்தது. ஆனால், ஒரு முடிவும் ஏற்படவில்லை. கடைசியில் கிறித்தவத் தலைமைக்குரு சேப்பல்லிக்கும், இத்தாலியிலிருந்து வந்த குருவுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது.

7.24 மில்லியன் டாலர்களுக்கு மதகுருமார்களுக்குச் சொந்தமான பெரும்பான்மையான நிலங்களை அரசாங்கம் வாங்கியது. நான்கு விழுக்காடு அரசியல் கடனீட்டுப் பத்திரம் விற்று, அரசாங்கம் இப் பணத்தைத் திரட்டியது மத குருமார்களின் சில நிலங்களை அரசாங்கம் வாங்க முடியவில்லை. ஏனென்றால், அவைகளை எவ்வளவு விலைக்கு வாங்கலாம் என்ற ஒப்பந்தம் ஏற்படவில்லை. மாதாக்கோவில் மதகுருமார்கள் கேட்டதைவிட 2.5 மில்லியன் டாலர்கள் குறைவாகத்தான் அரசாங்கம் இந்நிலங்களை வாங்கப் பணம் அளித்தது. ஆனால், கி.பி. 1898ஆம் ஆண்டில் இந் நிலங்களுக்கு இருந்த மதிப்பைப்போல் இருமடங்குப் பணம் அரசாங்கம் மதகுருமார்களுக்குக் கொடுத்தது.

இந்நிலங்களைப் பற்றிய செய்திகளை அறிதல், மதிப்பிடல், விற்றல் போன்றவை அரசுக்கு மிக்க இடையூறு அளித்தன. பெரும்பான்மையான பிலிப்பீனியக் குத்தகைக்காரர்கள் தாங்கள் வசித்து வந்த நிலங்கள் தங்களுக்குச் சொந்தம் என்றும், அவை சட்டப்படி அரசாங்கத்தின் சொத்தில்லை என்றும் எதிர்த்தார்கள். அரசாங்கத்திற்கு இதனால் மிகுந்த இழப்பு ஏற்பட்டது. 16 ஹெக்டருக்கு மேல் (40 ஏக்கர்) ஒரு தனி மனிதருக்கு விற்கக் கூடாது என்றும், 1,024 ஹெக்டருக்குமேல் (2,470 ஏக்கர்) தனி நிறுவனங்களுக்கு (கம்பெனிகளுக்கு) விற்கக்கூடாது என்றும் அரசாங்கம் கட்டுப்பாடு விதித்தது. இக் கட்டுப்பாடுகளைப் பிலிப்பைன்ஸ் சட்டசபை கி.பி. 1907ஆம் ஆண்டில் ஒப்புக் கொண்டது. பொருளாதார வளர்ச்சியை மிக விரைவில் அடையக் கட்டுப்பாடுகளை ஒழிக்கவேண்டும் எனப் பல ஆண்டுகள் கழித்து அரசாங்கம் விரும்பியது. ஆனால் இதைப் பிலிப்பைன்ஸ் சட்டசபை எதிர்த்து வெற்றிபெற்றது.

அரசாங்கம் விற்காத மதகுருமார்களின் 60 மில்லியன் ஏக்கர் நிலங்களைப் பிலிப்பைன்ஸ் சட்டசபை விற்கலாம் எனக் கி.பி. 1916ஆம் ஆண்டில் அரசாங்கம் உரிமையளித்தது. ஆனால், பழைய கட்டுப்பாடுகளின்படித்தான் இந் நிலங்களை விற்கவேண்டும் என அரசு கூறியது. பண முதலீடு செய்யும் அமெரிக்கர்கள் இதை எதிர்த்தார்கள். ஆனால், அமெரிக்கத் தனித்தலைமையை அமெரிக்க நாட்டுக் குடியரசுக் கட்சி எதிர்த்ததாலும், சர்க்கரை, வெள்ளி முதலியவைகளை விற்கும் அமெரிக்க வணிகர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்ததாலும் இவ்வெதிர்ப்பை அரசாங்கம் சமாளிக்க முடிந்தது. பிலிப்பைன்ஸ் தீவுகளின் சட்டசபை மன்றத்தினர் அயல்நாட்டினருடைய மறைவான நில உரிமைகள் பிலிப்பைன்ஸில் உருவாகக்கூடாது என முயற்சி யெடுத்துக்கொண்டார்கள்.

பிலிப்பைன்ஸ் மக்கள் பெரிய பண்ணைகளையும், தோட்டங்களையும் சொந்தமாக வைத்துக்கொள்வதை அவர்கள் எதிர்க்கவில்லை. இக் கொள்கையினால் 7·5 மில்லியன் ஏக்கர் நிலங்களில்தாம் விவசாயம் செய்யப்பட்டது ஆனால் 20 மில்லியன் ஏக்கர் நிலங்களில் விவசாயம் செய்யலாம் எனத் தோராயமாக மதிப்புப் போடப்பட்டது.

சமூகச் சீர்திருத்த முயற்சிகள்

பிலிப்பைன்ஸ் தீவுகளின் செழுமைக்காகவும், வளர்ச்சிக்காகவும், அமைதி நிலை நாட்டுவதற்காகவும், பிலிப்பைன்ஸ் மக்களின் மகிழ்ச்சிக்காகவும், அவர்களுடைய பழைய பழக்கவழக்க முறைகளைப் பின்பற்றி நடக்கவும், அமெரிக்க அரசாங்கம் அத்தீவின்மேல் ஆட்சி புரிய விரும்பியது. ஆகையால், முதன் முதலில் பிலிப்பைன்ஸ் நாட்டு மக்களின் நலத்தை வளர்க்க அமெரிக்க அரசாங்கம் விழைந்தது. கி.பி. 1898ஆம் ஆண்டில் இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை சில பகுதிகளில் 80 விழுக்காடு ஆகும்; மணிலாவில் ஆண்டிற்கு ஆயிரத்தில் 40 முதல் 50 பேர் வரை இறந்தார்கள். எலும்புருக்கி நோயினாலும், 'மலேரியா', குஷ்டம், பெரிய அம்மை, வாந்திபேதி, 'டைபாய்டு', சீதபேதி, 'பிளேக்', வீக்கநோய் முதலியவற்றால் பாதிக்கப்பட்டுப் பலபேர்கள் இறந்தார்கள். மேலும், படிப்பில்லாத கிராமமக்கள் அம்மை குத்துதலையும், காலரா, ஜுரம், தொற்றுநோய்கள் முதலியன பரவாமல் தடுக்க மக்களைப் பிரித்து வைக்கும் முறையையும் (Quarantine) எதிர்த்தார்கள்.

குடிதண்ணீர் வசதிகளும், சாக்கடை நீர் செல்லும் வசதிகளும் அந்நாட்டில் குறைவாக இருந்தன. ஆகையால் 1,000 மருத்துவச் சாலைகளையும், 40 மருத்துவமனைகளையும், 12 குஷ்டவைத்தியசாலைகளையும் அரசாங்கம் அமைத்தது. கி.பி 1914ஆம் ஆண்டுக்குப்பிறகு வளர்ச்சி குறைந்தது. ஏனென்றால், அமெரிக்கர்களின் மேற்பார்வை இவற்றில் குறைந்தது. கி.பி. 1914ஆம் ஆண்டில் மணிலாவில் ஓராண்டில் 1,000 பேருக்கு 23 பேர்தாம் இறந்தார்கள். இதுவே கி.பி. 1935ஆம் ஆண்டில் ஆண்டிற்குப் பன்னிரண்டாகக் குறைந்தது. ஆனால், மாகாணங்களில் இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை குறையவில்லை. ஆகையால், பொதுவாக இறந்தவர்களின் எண்ணிக்கை குறையவில்லை. காரபாவோ (Carabao) என்னும் அம்மைகுத்தும் முறையை விவசாயிகள் அரைமனத்துடன் தான் ஏற்றுக்கொண்டார்கள்.

தொடக்கப்பள்ளிகளில் எல்லோருக்கும் இலவசமாக மதச் சார்பற்ற கல்வி கற்றுத் தரவேண்டும் என்று அரசாங்கம் அறிவித்தது. மத்திய வரவு செலவுத் திட்டத்தில் மூன்றில் ஒருபகுதி கல்விக்காக ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும் மக்களுக்கு வேண்டிய அளவில் பள்ளிக்கூடங்கள் கட்டப்படவில்லை. ஆங்கிலத்தின் மூலம் கல்வி கற்றுத் தந்ததாலும், அமெரிக்க நாட்டின் பாடநூல்களைப் பயன் படுத்தியதாலும் தொடக்கத்தில் மாணவர்கள் துன்புற்றார்கள். பள்ளிக்கூடங்களை நடத்துவதற்காக அமெரிக்காவிலிருந்து நிறைய ஆசிரியர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கு வந்தார்கள். கி.பி. 1915ஆம் ஆண்டில் தொடக்கப் பள்ளிக்கூடங்களில் அமெரிக்க ஆசிரியர்கள் பத்தில் ஒரு பகுதியிருந்தார்கள். மற்றப் பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும் இதற்குமேல் அமெரிக்கர்கள் இருந்தார்கள். கி.பி. 1930ஆம் ஆண்டுவரை பொதுவாக அமெரிக்கர்களே வட்டாரக் கல்வி மேலதிகாரிகளாக இருந்தார்கள். பொதுமக்கள் பள்ளிகள் (Public Schools) அரசியல் கொள்கை களால் பாதிக்கப்படவில்லை. பிலிப்பைன்ஸ் தீவுகளில் பத்துக்கு மேல் பல மொழிகள் இருந்ததால் அவர்களுக்கு என்று ஒரு பொது மொழியில்லை. ஆனால், ஆங்கிலம் வந்தவுடன் அதுவே பிலிப்பைன்ஸ் தீவுகளின் பொதுமொழியாயிற்று. கி.பி. 1935ஆம் ஆண்டில் ஸ்பானிய மொழியைப் பேசுபவர்களைவிட ஆங்கிலம் பேசுபவர்களே மிக அதிகமாயிருந்தார்கள். சட்டதிட்டங்கள் பற்றிய ஆதாரப் பத்திரங்கள், அரசாங்க அறிக்கைகள், அலுவலகத் தாள்கள், அரசாங்கச் செய்திகள் ஆகியவை எல்லாம் ஆங்கிலத் திலேயே வெளியிடப்பட்டன. நான்காவது வகுப்பில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை நான்கில் மூன்று பங்கு குறைந்து வந்தபோதிலும், படித்தவர்களின் எண்ணிக்கை கி.பி. 1898ஆம் ஆண்டில் 20 விழுக்காட்டிலிருந்து கி.பி. 1940ஆம் ஆண்டில் 40 விழுக்காடாகப் பெருகியது.

சாண்டோ தாமஸ் ஆப் தி டொமினிகன்ஸ், புரொக்ரஸிவ் அடிநியோ டி மணிலா ஆப் தி ஜெசுயிட்ஸ் போன்ற ஸ்பானியர்கள் அமைத்த பல்கலைக் கழகங்களைத் தவிர, நீக்ரோஸ் மாகாணத்தில் மற்றும் பல்வேறு தனியார் பள்ளிக்கூடங்களையும் அமெரிக்கர்கள் அமைத்தார்கள். பிலிப்பைன்ஸ் அரசாங்கப் பல்கலைக் கழகத்தை யும் நிறுவினார்கள். இந்தப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவை பத்துக் கல்லூரிகள்; லூஜானுக்கு வெளியே இதன் கிளைகளும் இருந்தன. கி.பி. 1916ஆம் ஆண்டில் கல்வித் துறையும் உடல் நலத்துறையும் ஒன்று சேர்க்கப்பட்டன. ஓர் அமெரிக்கரே இந்தத் துறைகளைக் கவனிக்கும் அமைச்சராகப் பல காலம் இருந்தார்

அமெரிக்க ஆட்சியின் போதுகூட பிலிப்பைன்ஸ் தீவுகள் மற்றத் தென்கிழக்காசிய நாடுகளுடன் கலாசாரத் தொடர்பு கொள்ள வில்லை.

80 விழுக்காடு பிலிப்பைன்ஸ் மக்கள் ஒரே மதத்தைப் பின் பற்றிய போதிலும், ஒரே வகையான வரலாற்று அனுபவத்தைப் பகிர்ந்த போதிலும் பிலிப்பைன்ஸ் நாட்டுப்பற்று வேர் ஊன்ற வில்லை. பத்தொன்பதாவது நூற்றுண்டில் தொடங்கிய ஸ்பானியர் களை வெறுத்து எதிர்க்கும் உணர்ச்சி பல காலம் நீடிக்கவில்லை. இதைத் தவிர பொதுவான அரசியல் அனுபவம் இல்லாததால் பல்வேறு மொழிகளைப் பேசுபவரும் பல்வேறு தனித் தனித் தீவு களில் வசிப்பவரும் ஆகிய பிலிப்பைன்ஸ் மக்களைப் பிணைத்து ஒன்று படுத்த வேறொரு சக்தியும் இல்லை. நகரங்களில் வாழும் ஸ்பானிய மொழி பேசும், செல்வப் பிரமுகர்கள் அமெரிக்க ஆதிக் கத்தைப் படிப்படியாக ஒப்புக் கொண்டார்கள். இவர்களில் பெரும் பான்மையோர் அமெரிக்கக் கலாசாரத்தைப் பின்பற்றினுர்கள். ஆனுல், கிராம மக்கள் ஆங்கில மொழியைக் கற்றுக்கொள்ளவில்லை. தங்கள் கிராமத்தில் உள்ள அரசாங்க நிருவாகிகளின் மேலும் மத்திய அரசாங்கத்தின் மேலும் நம்பிக்கை கொள்ளவில்லை; இவர் களை அவநம்பிக்கையுடனும் ஐயத்துடனும் நோக்கினுர்கள். தற்கால வழிமுறைகளையும், புதுக்கருத்துகளையும் இவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். தங்கள் இனத்தாரைச் சார்ந்தவர் களிடையே மட்டும் தொடர்பு கொண்டார்கள். ஆகையால், இவர் களிடையே தாங்கள் எல்லாம் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணம் மலரவில்லை. தெற்கிலே உள்ள தீவுகளில் வசிக்கும் முஸ்லிம்களுக்கும், பெரும்பான்மையான கிறித்தவர் களுக்கும் பொதுவானதாக ஒன்றுமேயில்லை. கிராமப்பாரியோவில் (Barrios) ஆட்சி புரியும் ஸ்பானியர்களும் காசிக்யூ (Cacigue), தலைவர்களும் தங்கள் செல்வத்தையும், உயர் பதவியையும் காப்பதையே கருத்தாகக் கொண்டனர். இச் சுயநலவாதிகள் தங்கள் உறவினர்களுக்கும், தங்களுக்குப் பணம் கொடுத்தவர் களுக்குமே சலுகை காட்டினுர்கள்; விவசாயிகளை அலட்சியம் செய்தார்கள். அமெரிக்க ஆட்சியின்கீழ்த் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பைத் தங்கள் சுய நலத்திற்கே பயன் படுத்தினுர்கள் இவ் வாறுன நிலைமையில் நாட்டு உணர்ச்சியோ, சமூக உணர்ச்சியோ வளர்வது இயலாது. சுய ஆட்சியை வளர்க்க விரும்பும் அமெரிக்கர் களின் கொள்கை வெற்றியடைவதற்கு இன்னும் பல ஆண்டுகள் வேண்டும் என்பதில் ஐயமில்லை.

பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகள்

அமெரிக்கக் குடியரசு ஆட்சியின் முதல் பத்தாண்டின் போது பொருளாதார வளர்ச்சி குறைவாகவிருந்தது. ஸ்பெயினுக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின் காரணத்தால் பிலிப்பைன்ஸ் தீவில் முதல் பத்தாண்டு அமெரிக்க ஆட்சியின் போது ஏற்றுமதி இறக்குமதி வரிக்கான சட்ட முறைகளை நிறைவெற்ற முடியவில்லை. அமெரிக்காவைத் தவிர மற்ற வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட பிலிப்பைன்ஸ் தீவுகளின் பண்டங்களின் மேல் ஏற்றுமதி வரி மட்டும் விதிக்கப்பட்டது. கி.பி. 1909ஆம் ஆண்டிலிருந்த சட்டசபை சட்டங்களை நிறைவேற்ற முடிந்ததால் அரையளவான வாணிகக் கொள்கைகள் தோன்றத் தொடங்கின. கட்டற்ற வாணிகத்தின் மூலம் அமெரிக்காவும் பிலிப்பைன்ஸ் தீவுகளும் தங்கள் நாட்டுப் பண்டங்களை மாற்றிக்கொண்டன. அமெரிக்கப் பண்டங்களுடன் போட்டியிடும் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கு இறக்குமதிப் பொருள்கள் மீது புது வரிகள் விதிக்கப்பட்டன. அமெரிக்க இறக்குமதி வியாபாரிகளுக்கும், ஆதாயத்தை நாடி முதலீடு செய்பவர்களுக்கும் இது உதவியாயிருந்தது. ஆகையால், பிலிப்பைன்ஸ் தீவுகளின் பண்டங்களின் மேல் அமெரிக்காவிற்குத் தனி உரிமை கிடைத்தது. சர்க்கரை, புகையிலை, அரைகுறை வேலைப்பாடுடைய வெட்டு மரங்கள், தாவரங்களிலிருந்து எடுக்கும் எண்ணெய்கள், சணல்கள் ஆகியவை அமெரிக்கக் கூட்டு வாணிக நிலையங்களின் வளர்ச்சிக்குத் காரணமாயிருந்தன. கி.பி. 1913ஆம் ஆண்டில் அண்டர்வுட் சைமன்ஸ் ஏற்றுமதி இறக்குமதி வரிக்கான சட்டம் ஏற்றுமதிப் பொருள்களின் மேல் விதித்த வரிகளை நீக்கியது. ஏற்றுமதி இறக்குமதி வரிக்கான சட்டங்களைப் பிலிப்பைன்ஸ் சட்டசபை மற்ற அயல்நாடுகளுடன் கலந்து நிருணயிக்கலாம் என்று கி.பி. 1916ஆம் ஆண்டில் ஜோன்ஸ் சட்டத்தில் கூறப்பட்டது.

இருபது ஆண்டு ஆட்சிக்குள் அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டின் பொருள்கள் மேல் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினார்கள். பிலிப்பைன்ஸ் நாட்டில் அமெரிக்கர்களின் மூலதனம் 25 மில்லியன் டாலர்களுக்கு மேல் இருந்தது. மதகுருமார்களுடைய நிலங்களின் மேல் எடுத்த நடவடிக்கை யில்லாமலிருந்திருந்தால், இந்த மூலதனம் இன்னும் மிகப் பெருகியிருக்கும். செல்வப் பிலிப்பைன்ஸ் வணிகர்களுடன் அமெரிக்கத் தனித் தலைமை ஒத்துழைத்தது. பிலிப்பைன்ஸ் சணல்கள் ஜப்பானில் பதனஞ் செய்யப்பட்டன. கி.பி. 1930ஆம் ஆண்டிலிருந்து சுரங்க வேலைகளும் தொடங்கின.

பிலிப்பைன்ஸிலிருந்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகும் பொருள் களில் நான்கில் மூன்று பகுதி அமெரிக்காவுக்குச் சென்றன; இறக்கு மதியாகும் பொருள்களில் 85 விழுக்காடு அமெரிக்காவிலிருந்து வந்தன.

உற்பத்தி பெருகியதால் வரிகளிலிருந்து வரும் வருமானம் பெருகியது. இவ் வருமானம் கட்டடங்கள் கட்டுவதற்கும், பாதை கள் போடுவதறகும், கல்வி, உடல்நலம் முதலியவற்றில் செலவிடு வதற்கும் பயன்படுந்தப்பட்டது. ஆனால், கிராமத்தில் உள்ள விவசாயிகளின் நிலைமை வளர்ச்சியடையவில்லை. அவர்களுக்கு எவ்வித வகையான பயனும் வரவில்லை. நிலவுடமைச் சீர்திருத்தம் எதுவும் அரசாங்கம் செய்யவில்லை. மற்றத் தென்கிழக்காசியா வில் உள்ள விவசாயிகள் போல் பிலிப்பைன்ஸ தீவுகளில் உள்ள விவசாயிகளும் மிக அதிக வட்டிக்குக் கடன் வாங்கினார்கள். நிலக் குத்தகையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. ஊரிலில்லாத நிலவுடைமையாளர்களின் (Abbentee Land lords) அட்டூழியமும் கொடுமையும் அதிகரித்தன. நிலவுடைமையாளர்களிடையேயும், சீன ஆலைக் குத்தகைக்காரர்களிடையேயும் அகப்பட்ட அரிசி உற்பத்தி அதிகரிக்கவில்லை. தேவைக்கு வேண்டியவளவு அரிசி உற்பத்தி பெருகவில்லை. கி.பி. 1906—1907ஆம் ஆண்டுகளில் விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்காக விவசாயிகளுக்கென ஒரு வங்கி ஏற்படுத்தப்பட்டது. இந்த வங்கியைப்பற்றி அரசாங்கம் விளம்பரம் செய்யாததாலும், இதன் கிளை நிறுவனங்கள் விவசாயி கள் வசிக்கும் இடங்களில் ஏற்படுத்தப்படாததாலும், விவசாயி களின் சோம்பலாலும், இந்த வங்கியின் நோக்கம் நிறைவேறவில்லை. ஏழை விவசாயிகள் இந்த வங்கியில் கடன் வாங்கவில்லை. நிறைய மூலதனம் இடும் செல்வர்கள்தாம் இந்த வங்கியில் கடன் வாங்கிக் கரும்பு ஆலைகள் கட்டினார்கள். சிறு சிறு நிலமுடையவர்கள் தங்களுடைய பண்ணைகளிலேயே இன்பமாக வாழ்ந்தார்கள். தாம் உழும் நிலத்தையே எந்த விவசாயியும் வாங்கும் நிலையில் இல்லை. நிலவுடைமையாளர்கள் ஊரில் இல்லாததாலும், விவசாயிகளின் அனுதாபத்தை அமெரிக்க அரசாங்கம் இழந்ததாலும் இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு ஹூக்பலாஹேப் (Hukbalahap) இயக்கத்தின் புரட்சி தொடங்கியது.

பிலிப்பைன்ஸில் சீனர்கள் வசித்த இடங்களில் கி.பி. 1930 ஆம் ஆண்டுவரை உற்பத்தி மூன்று மடங்கு பெருகியது. பழங்காலத்திலிருந்து பிலிப்பைன்ஸ் நாட்டிலேயே பிறந்து வளர்ந்த பிலிப்பைன்ஸ் வணிகர்களையும், தொழிலாளிகளையும் பாதுகாப்பதற் காகப் பல இடங்களுக்குச் சீனர்கள் சென்று வாசம் செய்யக்

கூடாது என்ற தடை இருந்த போதும், சீனர்களால் இத் தடையை மீறி நடக்க முடிந்தது. உள்நாட்டு வாணிபம் வளர்ந்ததற்கும், கட்டடங்கள் பெருகியதற்கும், சீனர்கள்தாம் காரணம். கி. பி. 1904 ஆம் ஆண்டில் சீன வாணிபச் சங்கம் ஒன்று தோன்றியது. அரசியல் விவகாரங்களை ஆய்ந்தறிவதற்கு இச் சங்கம் பயன்படுத்தப்பட்டது. அறச்செயல்களிலும் வாணிக விவகாரங்களில் உதவவும், கூலி ஊதியம் நிருணயிக்கவும் சீனர்களுக்கு இச்சங்கம் உதவி செய்தது. கி. பி. 1932 ஆம் ஆண்டுக்குள் மொத்த வாணிகமும், நான்கில் மூன்று பங்குச் சில்லறை வாணிகமும் சீனர்கள் வயமிருந்தன. பிலிப்பைன்ஸ் மக்களுக்குச் சமமாகச் சீனர்களிடமும் நெல் ஆலைகள் இருந்தன. அயல்நாட்டார்கள் பிலிப்பைன்ஸில் ஒன்றும் சொந்தமாக வைத்துக் கொள்ளக்கூடாது என்ற தடையை மீறுவதற்காகச் சீனர்கள் பிலிப்பீனியர்களைத் திருமணம் செய்து கொண்டு, அவர்கள் பெயரில் பத்திரம் வாங்கிக் கொண்டார்கள். உள்நாட்டு வாணிப வரியில் நான்கில் மூன்று பங்குச் சீனர்கள் செலுத்தினார்கள். கி. பி. 1949 ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸில் சீனர்களுக்கு 100 மில்லியன் டாலர்கள் மூலதனம் இருந்தன.

பிலிப்பீனிய மயமாக்கும் முறைகள்

சுயாட்சிமுறை வருவதற்குப் பிலிப்பைன்ஸ் மக்களுக்குப் பயிற்சியளிக்கவேண்டும் என்றும், பிரபுக்கள் ஆட்சிவராமல் பாதுகாக்க வேண்டும் என்றும் கி. பி. 1908 ஆம் ஆண்டில் டாப்ட் கூறினார். இதை நிறைவேற்றுவதற்குப் பலகாலம் பிலிப்பைன்ஸ் மக்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். பொறுப்புள்ள, நன்மை பயக்கும் ஆட்சி அமெரிக்கர்களின் அதிகாரத்தின்கீழ் அமைக்கவேண்டும்; அரசியலிலும், ஆட்சி முறையிலும் பிலிப்பைன்ஸ் மக்களுக்கு அனுபவம் ஏற்படத் தகுந்த வாய்ப்புகள் அளிக்க வேண்டும் என்றும் டாப்ட் கூறினார். மாகாணங்களைப் புகைவண்டிகள் மூலமும், பொதுச் சாலைகள் மூலமும், நீராவிக் கப்பல்கள் மூலமும் நகர வளர்ச்சி மூலமும் இணைக்க வேண்டும் என்றும் கூறினார்; மிக விரைவில் பிலிப்பைன்ஸ் மக்களுக்குக் சுயாட்சி முறையில் பயிற்சியளிக்க முடியும் என்றும் நம்பினார். பல ஆண்டுகள் ஆட்சிபுரிந்தால் அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸ் மக்களுக்கு சுயாட்சி முறையைப் பயிற்றுவிக்க முடியும் என்றும் நம்பினார். ஆங்கிலத்தை எல்லாத் துறைகளிலும் பயன்படுத்தவேண்டும்; கற்றுத்தரவேண்டும் என அவர் விரும்பினார். இப் பயிற்சிகளின் மூலம்தான் பிலிப்பைன்ஸ் மக்கள்தங்கள் நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்க முடியும் என்று கூறினார். மிக விரைவில் இப் பாதையில் பிலிப்பைன்ஸ் மக்களை நடத்திச் செல்ல வேண்டும் என அவர் விரும்பினார்.

கி. பி. 1907 ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸ் நாட்டின் சட்டசபையைத் தேர்ந்தெடுத்ததால் பிலிப்பீனிய மயமாக்கும் முறை தொடங்கப்பட்டது எனக் கூறலாம். இரண்டு ஆண்டுகள் பிலிப்பைன்ஸ் தீவுகளில் அமைதி நிலவினால், பொதுத் தேர்தல்களை நடத்தலாம் என்று கி. பி. 1902 ஆம் ஆண்டின் கூப்பர் சட்டம் கூறியது. ஆகையால், கி. பி. 1905 ஆம் ஆண்டில் மக்கள் தொகைக் கணக்கு எடுக்கப்பட்டது. இந் நிபந்தனைகள் நிறைவேறியதாகக் கி. பி. 1907 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் கருதப்பட்டது. கி. பி. 1907 ஆம் ஆண்டு 30ஆம் நாள் தேர்தல் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் வரிகட்டுபவர்களும், படித்தவர்களும்தாம் வாக்களிக்கலாம் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. ஆகையால், நான்கு விழுக்காடு மக்களே வாக்களிக்க உரிமைபெற்றனர். படித்தவர்களும், அதிக வரிகட்டுபவர்களும் அதிக அளவில் பட்டணங்களில் வசித்ததால், வாக்களிப்பவர்களின் எண்ணிக்கை பட்டணங்களிலும், மாகாணங்களிலுமே அதிகமாயிருந்தது. தேசியவாதிக் கட்சி (Nationalist Party) அதிக வாக்குப் பெற்று வெற்றியடைந்தது. உடனடியாக நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கித் தருவதாக இக் கட்சி மக்களுக்கு உறுதியளித்தது. இதற்கு முன் இருந்த அமெரிக்காவிற்கு ஆதரவாயிருந்த கூட்டரசு அமைப்புக் கட்சி மறைந்தது. கி.பி. 1907ஆம் ஆண்டில் முற்போக்காளர்கள் கட்சியும் (Progressive Party) இருந்தது. பிலிப்பீனியர்கள் சுயாட்சிமுறையில் முன்னேறியவுடன் பிலிப்பைன்ஸ் நாட்டிற்குச் சுதந்திரம் வரவேண்டும் என இக் கட்சி கூறியது. கி.பி. 1907ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் சட்டசபை தொடங்கப்பட்டது.

கி.பி. 1922ஆம் ஆண்டு வரை தேசியவாதிக் கட்சிக்கும் சட்டசபைக்கும் தலைவராய் விளங்கியவர் செர்ஜியோ ஓஸ்மேனு (Sergio Osmena). சீன–பிலிப்பீனியப் பிறப்பினத்தைச் சேர்ந்த இவர் செபு (Cebu) தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர். இவர் நேர்மையானவர்; தாம் கொடுத்த வாக்கையும், திட்டத்தையும் காப்பாற்றுபவர். நாடாளுமன்றச் சட்டங்களிலும், நடவடிக்கைகளிலும் நன்கு பயின்றவர் ஆதலால் தம் தொழில் சம்பந்தமான கடமைகளைச் சரிவரச் செய்தார் சட்டசபை நடவடிக்கைகளை நல்லொழுக்கத்துடனும், மரியாதையுடனும், பெருந்தன்மையுடனும் நடத்தினர். அவருக்கு நிறையச் செல்வமும், செல்வாக்கும் இருந்த போதிலும், ஆடம்பரமாக வாழவில்லை; தம் பெயருக்கு இழுக்கு வருமாறு நடக்கவில்லை. அவரைப்பற்றி யாரும் குறைகளைப் பேச விரும்பவில்லை. கட்டுப்பாடில்லாமல், சிதறிக்கிடந்த பிலிப்பீனியத் தேசியவாதிகளை ஒன்றுசேர்த்ததே இவர்

பிலிப்பைன்ஸ் மக்களுக்குச் செய்த பெரிய தொண்டாகும். முடிவாகத் தமக்குப் பிறகு மேன்யுவல் கிவிஜான் (Manuel Quezon) தேசியவாதிக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை இவர் ஒப்புக்கொண்டார். கிவிஜான் அறிவுக் கூர்மையுள்ள அரசியல் நிபுணர். கி.பி. 1907ஆம் ஆண்டில் சட்டசபையில் பெரும்பான்மைக் கட்சியின் தலைவராயிருந்தார். குடியரசுத் தலைவர் வில்சன் ஆட்சியின்போது அமெரிக்காவில் இருக்கையாணையாளராகப் (Resident-Commissioner) பணிபுரிந்தார். கி.பி. 1922ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸ் மேல் சட்டசபையின் மன்றத்தலைவராகப் பணி புரிந்தார். தேசியவாதிக் கட்சிக்குள் இவ்விரு தலைவர்களும் போட்டிபோட்டுக்கொண்டாலும், இவர்களிருவரும் மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தனர். கி.பி. 1941ஆம் ஆண்டில் ஜப்பானியப் போர் தோன்றிப் பரவியவுடன் குடியரசு நாட்டின் மக்கள் தலைவராக ஒஸ்மேனுவும் மக்கள் துணைத்தலைவராக கிவிஜானும் பணிபுரிந்தார்கள். விதியின் திருவிளையாடலாலோ என்னவோ பிரபுக்களின் ஆட்சிவரக்கூடாது என டாப்ட் எண்ணியதற்கு மாறுகப் பொதுவாகப் பிலிப்பைன்ஸ் அரசியல் தலைவர்களெல்லாம் உயர்குடியில் பிறந்தவர்களாகவே இருந்தார்கள். மக்களில் ஒருவராயிருந்த அகுயிநால்டோ போன்றவர்களுக்கு அரசியல் சூதாட்டத்தில் வெற்றி கிடைக்கவில்லை. அரசாங்கப் பொதுப்பணித்துறைகளில் பணிபுரிந்த அமெரிக்கர்களுக்குப் பதிலாகப் பிலிப்பைன்ஸ் மக்களே பணிபுரியவேண்டும் எனப் பிலிப்பைன்ஸ் சட்டசபை அரசியல்வாதிகள் விரும்பினுர்கள். கி.பி. 1920ஆம் ஆண்டில் இப் பணித்துறைகளில் 25 பேருக்கு ஓர் அமெரிக்கர் என இருந்தார்கள். ஆனுல், 1933ஆம் ஆண்டில் 60 பேருக்கு ஓர் அமெரிக்கர் எனக் குறைந்தனர். படைத்துறை சாராத பொதுநிலை அரசுப் பணியில் பணிபுரிந்த அமெரிக்கர்கள் ஊழியத்திலிருந்து விரைவில் ஓய்வு பெற்ருல் அவர்களுக்கு அதிக ஓய்வூதியம் கொடுப்பதாகக் கூறினுர்கள். ஸ்பானிய மதகுருமார்களும் நீக்கப்பட்டார்கள். ஆகையால், கி.பி. 1930ஆம் ஆண்டில் கத்தோலிக்க மாதாக்கோவில்களில் பதினெட்டில் எட்டுப் பாதிரிகள் பிலிப்பைன்ஸ் மக்களைச் சார்ந்தவர்கள். ஒவ்வோராண்டும் பிலிப்பைன்ஸ் சட்டசபையில் பிலிப்பைன்ஸ் மக்கள் சுதந்திரத்தை விரும்புகிருர்கள் என்றும், அவ்வாறு சுதந்திரம் வந்தால் அச் சுதந்திர நாட்டின் பொறுப்புகளையும், கடமைகளையும் ஏற்றுக் கொள்ளப் பிலிப்பைன்ஸ் மக்கள் தயாராக இருக்கிருர்கள் என்றும் எல்லாச் சட்டசபை மன்றத்தினர்களும் மன்றத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினுர்கள். இம் மன்றத் தீர்மானத்தின் பிரதிகளை அமெரிக்கக் குடியரசின் சட்டசபைக்கு ஒவ்வோராண்டும் அனுப்பி

ஞர்கள். பிலிப்பீனிய மக்களுடைய இந்த ஆசையை நிறைவேற்ற அமெரிக்க மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்ற வேண்டு கோளையும் இத் தீர்மானத்துடன் அனுப்பினார்கள்.

கி.பி. 1912ஆம் ஆண்டு அமெரிக்க மக்கள் தலைவர் தேர்தலில் அமெரிக்க டெமொக்கிராடிக்கட்சி(குடியரசுக்கட்சி) வெற்றியடைந்த வுடன் பிலிப்பீனிய மயமாக்கும் முறைக்கு ஒரு புதுத்திருப்பமே ஏற்பட்டது. இத் தேர்தலுக்கு முன்னும், அமெரிக்க ரிபப்ளிக்கன் கட்சி (Republican Party) கி.பி. 1920ஆம் ஆண்டின் அமெரிக்கச் சட்டசபைத் தேர்தலிலே வெற்றியடைந்த பிறகும், பிலிப்பைன்ஸ் தீவுகளுக்குச் சுதந்திரம் அளிக்கவேண்டும் என்று துணிவோடு மனம் திறந்து டெமொக்கிராடிக் கட்சியைச் சார்ந்தவர்கள் பேசி ஞர்கள். ஆனால், கி.பி. 1912 ஆம் ஆண்டிலிருந்து 1920 வரை டெமொக்கிராடிக் கட்சி ஆட்சிபுரிந்தபோது அவர்கள் அவ்வளவு துணிவோடு மனம் திறந்து பிலிப்பைன்ஸ் சுதந்திரத்தைப்பற்றிப் பேசவில்லை. ஏனென்றால், அத்தகைய தீர்மானம், எடுப்பதற்கு அவர்களே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டிய நிலைமையில் இருந்தார்கள். அமெரிக்கத் தனித்தலைமையை எதிர்க்கும் கொள் கையைத் தழுவி டெமொக்கிராடிக் கட்சியின் தலைவரும், மக்கள் தலைவருமான வில்சன், பிரான்ஸிஸ் பர்டன் ஹாரிசன் என்பவரைப் பிலிப்பைன்ஸின் தலைமை ஆளுநராக நியமித்தார். அரசாங்க நிருவாகத்தில் பிலிப்பைன்ஸ் மக்களுக்கு அதிக வாய்ப்பு ஹாரிசன் கொடுத்தார். இதன் மூலம் விரைவில் பிலிப்பைன்ஸ் நாடு சுதந் திரம் அடைய வேண்டும் என்ற நோக்கத்துடனே அவர் அவ்வாறு செய்தார். பிலிப்பைன்ஸ் சுதந்திர நாடாவதற்கு வேண்டிய தகுதி யடையவில்லை என மக்கள் தலைவர் வில்சன் நினைத்தார். ஆனால், பிலிப்பைன்ஸ் மிக விரைவில் சுதந்திரம் அடைந்துவிடும்; அடைய வேண்டும் என ஹாரிசன் விரும்பினார். உடல்நலத் திட்டங் களிலும், பொதுநலத்துறையிலும், நிதித்துறையிலும் பிலிப்பைன்ஸ் நாடு முன்னேறவில்லையென்றாலும், அரசாங்க விவகாரங்களில் பிலிப்பைன்ஸ் மக்கள் அனுபவம் பெற்றுவிட்டார்கள் என ஹாரிசன் நம்பினார். பிலிப்பைன்ஸ் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டு நான்கு அமெரிக்கர்கள், ஹாரிசனைப்போல முதல் முறையாகப் பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு வந்திருந்தார்கள். ஆனால், முதன்முறையாக இக்குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் பிலிப்பீனியர்களே. இக்குழுவில் ஐந்து பிலிப்பீனி யர்கள் இருந்தார்கள். இவர்கள் எல்லோரும் தேசியவாதிக் கட்சியின் சிந்தனைகளைப் பிரதிபலித்தார்கள் என்ற நோக்கத் துடனே வில்சன் இவ்வாறு செய்திருக்கலாம் கி.பி 1910, 1911,

1912 ஆகிய ஆண்டுகளில் பண ஒதுக்கீட்டு மசோதா தோற்கடிக்கப்பட்டதால், முந்திய ஆண்டு வரவு செலவுத் திட்டப் பட்டியல்படி நிருவகிக்கத் தலைமை ஆளுநர் சட்டப்படி அனுமதி கொடுத்தார்.

டெமொக்கிராடிக் கட்சி அமலுக்குக் கொண்டுவந்த முக்கிய அரசியல் சட்டம் 1916ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்திய ஜோன்ஸ் சட்டமாகும். டெமொக்கிராடிக் கட்சியின் தனித்தலைமை எதிர்ப்பைப்பற்றி இச் சட்டத்தின் முகவுரையில் கூறப்பட்டிருக்கிறது. இச் சட்டத்தின் முகவுரையில் கூறியிருப்பதும், இச் சட்டத்தின் முக்கியப் பகுதியில் கூறியிருப்பதும், பலவகைகளில் முன்னுக்குப் பின் முரணாக இருந்தன. கி.பி. 1898ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடியரசிற்குப் பிலிப்பைன்ஸ் நாட்டைக் கைப்பற்றும் எண்ணம் இல்லை என முகவுரையில் கூறப்பட்டிருக்கிறது. மேலும், பிலிப்பைன்ஸ் தீவுகளில் நிலையான அரசாங்கம் அமைக்கப்பட்டவுடன் சுதந்திரம் கொடுக்கப்படும் என்றும், பிலிப்பைன்ஸ் மக்களைச் சுயாட்சி முறையில் தயாரிப்பதற்காக அவர்களுக்கு உள்நாட்டு விவகாரங்களில் முழுவாய்ப்புக் கொடுக்கவேண்டும் என்றும் இம் முகவுரையில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் பிலிப்பைன்ஸ் நாட்டிற்குச் சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டிய நாளைத் தற்காலிகமாக இச்சட்டத்தில் அறிவிக்கவேண்டும் என்ற ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்தபொழுது, டெமொக்கிராடிக் கட்சியினர் அதிகமாயிருந்த அமெரிக்கக் குடியரசின் சட்டசபை இதை அனுமதிக்கவில்லை. அதற்குப் பதிலாகச் சட்ட நிறைவேற்ற ஆட்சித்துறையின் முழு அதிகாரத்தையும், சட்டமியற்றுபவர்கள் சட்டத்தை மறுப்பு ஆணையைச் செலுத்தித் தடுக்கவும் தலைமை ஆளுநருக்கு இச் சட்டத்தில் இடம் கொடுக்கப்பட்டது.

தலைமை ஆளுநர் ஹாரிசன் ஜோன்ஸ் சட்டத்தின் முகவுரையில் கூறியதற்குத்தான் முதன்மை கொடுத்தார். இச் சட்டத்தின் முக்கியப் பாகத்தில் கூறியதன்மேல் கவனம் செலுத்தவில்லை. சட்டநிறைவேற்ற ஆட்சித்துறைபற்றித் தமக்குள்ள சில அதிகாரங்களை அவர் துறந்தார். அமைச்சர்அவை பற்றிய நியமனங்களும், துணை ஆளுநர் நியமனமும் மேல்சபை (Senate) அனுமதிக்கவேண்டும் என்று நடவடிக்கையில் கொண்டு வந்தார். மக்கள் தலைவரே துணை ஆளுநரைக் கல்வி, உடல் நலம் ஆகிய துறைகளின் தலைவராக நியமித்தார். அமெரிக்க அரசாங்கத்தின் அரசுரிமை பாதிக்கப்படும் செய்திகள் பற்றித்தான் தலைமை ஆளுநர் மறுப்பு ஆணையைப் பயன்படுத்த வேண்டும் எனப் பிலிப்பைன்ஸ்

அரசியல்வாதிகள் உரைத்தார்கள். ஹாரிசன் இது பற்றிய விவாதத்தில் இறங்கவில்லை. அவருடைய ஏழாண்டு ஆட்சியில் ஐந்து முறைதான் அவர் மறுப்பு ஆணையைப் பயன்படுத்தினார். நிருவாகம் பற்றிய சட்டங்களைத் தலைமை ஆளுநர்தாம் தொகுக்கலாம். ஆனால், இவர் பிலிப்பீனியர்களின் ஆலோசனையையும் கேட்டுக் கி.பி. 1916ஆம் ஆண்டில் நிருவாகச் சட்டங்களை இயற்றினார். அமெரிக்கக் குடியரசு சட்டசபைக்குப் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்குச் சுதந்திரம் கொடுக்கும் எண்ணம் இல்லை என்பதால் ஹாரிசனின் நடவடிக்கைகள் அவருக்கும், அவருக்குப்பின் தலைமை ஆளுநர்களாக வந்தவர்களுக்கும் தொல்லை கொடுத்தன.

புதுத் தலைமை ஆளுநர் ஹாரிசன் இனவெறியில்லாதவர்; ஆகையால் பல பிலிப்பீனியர்களுடன் கலந்து பழக வாய்ப்புக் கிடைத்தது. பல பிலிப்பீனிய நண்பர்களும் அவருக்குக் கிடைத்தார்கள். பிலிப்பைன்ஸில் குடியேறியிருந்த அமெரிக்கர்கள் இதை வரவேற்கவில்லை. ஆகையால், ஹாரிசனைக் காவிநிறமுடைய சிறு நண்பர்களின் 'கையாள்' என இவர்கள் அழைத்தார்கள். மேல்சபையில் வரும் திட்டங்கள்பற்றிப் பிலிப்பீனியத் தலைவர்களின் ஆலோசனையைத்தான் இவர் கேட்டார். கி.பி. 1913ஆம் ஆண்டில் 29 விழுக்காடு அமெரிக்கர்கள்தாம் படைத்துறை சாராத அரச அலுவலர்களாகப் பணிபுரிந்தார்கள். இவர்கள் கி.பி. 1920ஆம் ஆண்டில் 4 விழுக்காடே இருந்தார்கள். ஹாரிசனை ஒரு திறமை வாய்ந்த நிருவாகியென்றும், தக்கசமயத்தில் அசையாமல் உறுதியான தீர்மானங்களை எடுப்பவர் எனவும் இவருடன் பழகியவர்கள் கூறினார்கள்.

கி.பி. 1935ஆம் ஆண்டு வரை ஜோன்ஸ் சட்டம் ஓர் ஆதார அரசியல் சட்டமாய் விளங்கியது. பிலிப்பைன்ஸ் தீவுகளில் படிப்படியாகச் சுயாட்சி வருவதற்கு அடிகோலியது. ஆனால் பிலிப்பைன்ஸ் தீவுகளின் சூழ்நிலையும், இச் சட்டத்தில் உள்ள முற்போக்கு எண்ணங்களும் புறம்பானவையாக இருந்தன. இச் சட்டத்தின்படிப் பிலிப்பைன்ஸ் தீவுகளின் மேல்சபையை மக்கள் தேர்ந்தெடுக்கவேண்டும்; வாக்காளர்களின் எண்ணிக்கையைப் பெருக்கும் நோக்கத்துடன் குறைந்தது 15 டாலர்கள் வரிசெலுத்தும் படித்த பிலிப்பீனியர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படவேண்டும்; வரி, செலவீனம் ஆகியனபற்றிச் சட்டசபை சட்டமியற்றலாம்; ஆனால், இவற்றைப் பற்றித் தலைமை ஆளுநர் மறுப்பு ஆணையைப் பயன்படுத்தலாம். கி.பி. 1920ஆம் ஆண்டு பிலிப்பீனியர்களே அரசாட்சி நடத்தத் தொடங்கினர். தேசியத் தலைவர்களிடம் உண்மையாகவே அரசியல் அதிகாரம் வந்தது.

இவ்வதிகாரத்தைச் சிலசமயங்களில் அவர்கள் தவருன முறையிலும் பயன்படுத்திஞர்கள் எனக் கூறலாம்.

7. தளபதி வுட்டின் ஆட்சி முறை

கி.பி. 1920ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடியரசின் தேர்தலின் போது பிலிப்பைன்ஸ் தகுநிலையைப்பற்றி ரிபப்ளிக்கன் கட்சி பிரசாரம் செய்யவில்லை. அப்படிப் பிரசாரம் செய்யாமலிருந்தாலும் பதவிக்கு வந்தவுடன் மக்கள் தலைவர் ஹார்டிங் பிலிப்பைன்ஸ் தீவுகளின் நிருவாகத்தின்மேல் கவனம் செலுத்தத் தொடங்கிஞர். பிலிப்பைன்ஸ் தீவுகளில் அரசியல் குழப்பம் இருப்பதாகவும், நிலையில்லாத அரசாங்கம் இருப்பதாகவும், முறைகெட்ட ஆட்சி நிலவுவதாகவும் தளபதி லியோஞர்டு வுட் (Leonard wood), முன்ஞள் ஆளுநர் கேமெரன் பேர்பேன் (Cameron Farben) ஆகியவர்களின் தலைமையில் வந்த விசாரணைக் குழு கூறியது. 'நிலையில்லா' ஆட்சி என்பதுதான் இவ்விசாரணைக் குழுவின் முக்கியக் குற்றச்சாட்டு. ஏனென்ருல், நிலையான அரசாங்கம் வந்தால் சுயாட்சி கொடுக்கலாம் என ஜோன்ஸ் சட்டத்தில் கூறப் பட்டிருந்தது. திறமையற்ற நிருவாகத்திலிருந்து, நிலையற்ற, நம்ப முடியாத உலகச் சூழ்நிலைவரை எல்லாவற்றையும் 'நிலையில்லா' என்ற சொல்லின் பொருளாகத் தளபதி வுட்டு பயன்படுத்திஞர். விசாரணை முடிந்தபிறகுதான் தலைமை ஆளுநராக வருவதை ஒப்புக்கொள்வதாகத் தளபதி வுட்டு தெரிவித்தார். ஆகையால், ரிபப்ளிக்கன் கட்சி வென்றவுடன் தளபதி வுட்டு தலைமை ஆளுநராக மணிலாவுக்குத் திரும்பி வந்தார். சுயாட்சி கொடுப்பதைப் படிப்படியாக உயர்த்தவேண்டும் எனப் பிலிப்பீனியர்கள் கேட்டதை வுட்டு வரவேற்கவில்லை. அவர் இராணுவத்திலேயே பணிபுரிந்திருந்ததால் அவர் மனப்போக்கும் இயல்பும் இதற்குப் புறம்பாயிருந்தன. அமெரிக்கக் குடியரசு பிலிப்பைன்ஸ் தீவுகளைவிட்டு வெளியேறிஞல், அது பிலிப்பைன்ஸ் மக்களுக்குப் பெரும் தீங்கை விளைவிக்கும் என்றும், ஆசியாவில் அமெரிக்கர்களுக்கு உள்ள செல்வாக்கும், சிறப்பும் இதஞல் பாதிக்கப்படும் என்றும் வுட்டு தீர்மானமாகக் கூறிஞர். ஒருவேளை தம் வாழ்க்கையில் பலவகையான ஏமாற்றங்கள் அடைந்ததால் வுட்டு இவ்வாருன மனப்பான்மையுடன் இருந்தார் எனவும் கூறலாம். முதல் உலகப் பெரும்போரின்போது அயல்நாடுகளில் தளபதியாக வுட்டை அமர்த்த வேண்டிய தறுவாயில் அவரைப் புறக்கணித்தார்கள். கி.பி. 1920ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு இவர் வெற்றியடையவில்லை.

பிலிப்பைன்ஸ் அயல்நாடுகள்பற்றிச் சட்டமியற்றும் செய்திகளிலும் வுட்டு மறுப்பு ஆணை செலுத்துவதைக் குறைக்கப் பிலிப்பீனியர்கள் முயற்சி செய்தார்கள். இதனால் தலைமை ஆளுநர் வுட்டுக்கும் பிலிப்பீனியர்களுக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டது. ஜோன்ஸ் சட்டத்தில் தலைமை ஆளுநருக்குக் கொடுத்திருக்கும் சட்ட நிறைவேற்ற ஆட்சித்துறை அதிகாரங்கள் குறைவதைச் சிறிதும் வுட் விரும்பவில்லை. தம் அதிகாரத்தைக் குறைக்க யாராவது முயற்சியெடுத்தால் அதை எதிர்க்கவும் வுட்டு தயாராயிருந்தார். அவருடைய ஆட்சியின்போது மறுப்பு ஆணையை 126 முறை பயன்படுத்தினர். இதுபற்றி எதையும் விட்டுக் கொடுக்க வுட்டு தயாராகவில்லை. ஆகையால், வரலாற்றுக் கடிகாரத்தின் முட்களைத் திருப்பி வைக்க வுட்டு முயன்றார். பிலிப்பைன்ஸ் தேசியவாதிகள் அரசாங்கம் தனித்தலைமை வழியில் செல்வதை வரவேற்கவில்லை. தேர்தலில் நிற்கும் ஒவ்வொரு பிலிப்பீனியரும் படிப்படியாகச் சுயாட்சி உரிமைகளை அதிகரிக்க வேண்டுமென்றும், பிலிப்பைன்ஸ் தீவுக்கு மிக விரைவில் சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்றும் பிரசாரம் செய்தார்கள்.

கி.பி. 1923ஆம் ஆண்டில் வெளிப்படையாகப் பிளவு ஏற்பட்டது. கி.பி. 1918ஆம் ஆண்டில் ஹாரிசனால் அமைக்கப் பட்ட ஆலோசனை அளிக்கும் மேல்சபையின் பிலிப்பீனிய உறுப்பினர்களுக்கும், வுட்டுக்கும் கி.பி. 1923ஆம் ஆண்டில் சண்டை மூண்டது. பிலிப்பீனிய உறுப்பினர்களை இருசபைகளின் சபைத் தலைவர்களும், அமைச்சர்களும் ஆதரித்தார்கள். மேல் சட்டசபை உறுப்பினர்கள் கீழ்ச் சட்டசபைக்குத்தான் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்; தலைமை ஆளுநருக்குப் பதிலளிக்கக் கடமைப்படவில்லை என இவர்கள் வாதாடினார்கள். இதை வுட்டு எதிர்த்ததால் மேல் சட்டசபையில் உள்ள உறுப்பினர்கள் எல்லோரும் பதவியினின்றும் விலகினார்கள். தலைமை ஆளுநர் வுட்டு இதற்கும் அஞ்சவில்லை. நேருதவிச் செயலர்களைப் பல துறைகளில் உள்ள அன்றாட விவகாரங்களைக் கவனிக்க ஏற்பாடு செய்தார். இராணுவத்திலிருந்து சிலரைத் தமக்கு ஆலோசனை கூற நியமித்தார். அமெரிக்க அரசாங்கமும் தலைமை ஆளுநர் வுட்டையே ஆதரித்தது.

பொருளாதாரம்பற்றியும் பிளவு ஏற்பட்டது. பொருளாதாரத்தின் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டுள்ள பொறுப்புள்ள மனிதர்கள் 50,000 ஏக்கர்வரை நிலங்களைக் குத்தகைக்கு எடுக்கலாம் என்றும், திரும்பவும் 25 ஆண்டுகள் குத்தகை எடுக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு என்றும் வுட்டு தெரிவித்தார்.

மிகுந்த அளவில் அமெரிக்க இரப்பர்த் தோட்டங்களை வளர்க்க மிண்டாநாவோ, சுலு ஆகிய தீவுகளில் நிலங்களைக் கொடுக்க வேண்டும் எனக் கூறினர். பொதுவாகப் பிலிப்பீனிய மக்களும், பிலிப்பைன்ஸ் சட்டசபையினரும் இந்தத் திட்டங்களை எதிர்த்தார்கள். ஹாரிசன் காலத்தில் அமைத்த அரசாங்கத்திற்குச் சொந்தமான கழகங்களைத் தலைமை ஆளுநரின் மேற்பார்வையின் கீழ் வரவேண்டும் என வுட்டு தீர்மானம் செய்தார். ஒரு தேசிய வங்கி, மணிலாப் புகைவண்டித்துறை, தேசிய முன்னேற்ற வாணிபத் தலம், ஆகியவை அரசாங்கத்திற்குச் சொந்தமான கழகங்களாயிருந்தன. ஹாரிசன் மேற்பார்வை மன்றத்தின் (Harrison's Board of Control) உறுப்பினர்களாக இரு சட்ட சபையின் தலைவர்களும் பணிபுரிந்தார்கள். இம் மன்றம்தான் அரசாங்கத்திற்குச் சொந்தமான கழகங்களுக்கு அரசாங்க மூலநிதி கொடுப்பதைப்பற்றித் தீர்மானித்தது. இம் மன்றத்தை வுட்டு ஒழித்தார்; வாணிபத்தில் அரசாங்கம் தலையிடக்கூடாது எனக் கூறினர்.

வுட்டின் கொள்கைகளையும் திட்டங்களையும் எதிர்த்துப் பிலிப்பீனிய மக்கள் பலமுறை அமெரிக்க மக்கள் தலைவர்களுக்கு முறையிட்டார்கள். ஆனால், அவர்கள் வெற்றியடையவில்லை. சினமுற்ற தேசியத் தலைவர்கள் ஜோன்ஸ் சட்டத்தைச் சிறிது மாற்றியமைக்குமாறு அமெரிக்கக் குடியரசு சட்டசபையைத் தொந்தரவு செய்தார்கள். பிலிப்பைன்ஸ்பற்றிய பல சீர்திருத்தத் திட்டங்களைக் கி.பி. 1924ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடியரசு சட்டசபை விவாதித்தது. ஆனால், அதே ஆண்டில் அமெரிக்க மக்கள் தலைவர் கூலிட்ஜ் (Coolidge) தேர்தலில் வெற்றியடைந்தவுடன் இச் சீர்திருத்தத் திட்டங்களைப்பற்றி அமெரிக்கர்கள் மறந்தார்கள். ஆகையினால், பிலிப்பைன்ஸில் பற்றார்வ வெறி யேற்பட்டது. அரசாங்கம் இந் நிலைமையைப்பற்றி விசாரணை நடத்தியது. வுட்டின் திட்டங்களை வெளிப்படையாக எதிர்க்கா விட்டாலும், இராணுவ அதிகாரிகளை வுட்டு ஆலோசகர்களாகப் பயன்படுத்தியதற்கும், பிலிப்பீனியர்களுக்கு அமெரிக்க அரசாங்கத்தின்மேல் உள்ள நம்பிக்கை குறைந்ததற்கும் காரணம் வுட்டுதான் என இவ் விசாரணைக் குழு குறை கூறியது. ஆனால், இக் குழுவால் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கு யாதொரு நன்மையும் ஏற்படவில்லை.

8. வுட்டு ஆட்சிக்குப் பின்

புற்றுக் கழலை நோயினல் பாதிக்கப்பட்ட வுட்டு கி.பி. 1927ஆம் ஆண்டு ஆகஸ்டில் இறந்தார். அவருக்குப் பிறகு ஹென்ரி

எல். ஸ்டிம்சன் (Henry L. Stimson) என்பவர் தலைமை ஆளுநர் பதவியேற்ருர். வுட்டைப்போல் நடந்துகொள்ளாமல் ஸ்டிம்சன் பிலிப்பைன்ஸ் சட்டசபை மன்றத்தாரோடு ஒத்துழைத்தார். ஆனாலும், பிலிப்பீனிய மக்களே பிலிப்பைன்ஸ் அரசாங்கத்தை நடத்தவேண்டும் என்ற ஆசையையும், கொள்கையையும் சட்டசபை மன்றத்தார்கள் விட்டுவிடவில்லை. வுட்டு காலத்தில் ஏற்பட்ட மனக் கசப்பினுல் பிலிப்பீனிய மக்கள் நன்றியில்லாமலும், வரம்பு மீறியும் நடந்து கொள்கிருர்கள் என்ற எண்ணம் அமெரிக்கர் களிடையே நிலவியிருந்தது. ஆகையால், அமெரிக்கர்கள் பிலிப்பீனிய மக்களை நேச மனப்பான்மையுடன் நோக்கவில்லை. பிலிப்பீனிய வாணிபர்களோடு போட்டியிடுவதிலிருந்து விடுபட்டுத் தங்கள் செல்வத்தைப் பெருக்கவேண்டும் என விரும்பிய அமெரிக்க வணிகர்கள் அமெரிக்கர்களின் இந்த மனப்பான்மையைத் தங்களுக்கு ஆதரவாகப் பயன்படுத்திக்கொண்டார்கள்.

தலைமை ஆளுநருக்கு இருந்த சட்டநிறைவேற்ற ஆட்சித் துறை அதிகாரங்களை வுட்டு பயன்படுத்தியதால் பதவெறி கொண்ட மக்கள் ஆதரவுள்ள கலகங்கள் வளர்ந்தன. கி.பி. 1907ஆம் ஆண்டுக்குப் பிறகு வெளிப்படையாக ஏற்படும் கலகங்கள் மறைந்தன. ஆனுல், கி.பி. 1924ஆம் ஆண்டுக்குள் மக்களின் மனநிலை மாறியது. முதல் உலகப் போர் முடிந்ததிலிருந்து மக்கள் மனப்பான்மை மாறியிருந்தது. மத்திய லூஜானில் விவசாயிகளின் கடன் தொல்லை பெருகியது. திறமையற்ற ஆட்சியும், அரசியல் மாறுதல்களும் மக்களிடையே ஒரு குழப்பமான சூழ்நிலையை உருவாக்கியிருந்தன. மக்களுக்குச் சுயாட்சி கொடுக்க வேண்டும், பிலிப்பைன்ஸ் தீவுகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தினுல் உந்தப்பட்ட அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளிலே தங்கிப் பலகாலம் ஆட்சி புரிவார்களோ என்று கி.பி. 1924ஆம் ஆண்டுக்குப் பிறகு பொதுமக்கள் அஞ்சத் தொடங்கினுர்கள்.

மந்திரவித்தையிலும், மாயாஜாலத்திலும் நம்பிக்கை கொண்ட பழங்குடி மக்கள் கி.பி. 1924ஆம் ஆண்டில் கலகம் செய்தார்கள். தெற்கு விஷயாஸ் பகுதியில் புகாஸ் கிராண்டிக் (Bucas Grande) கலகம் எழுந்தது. ஜோஸ்ரிஜாலைத் தோண்டி எடுத்துத் திரும்பவும் உயிர்பெற்று எழச் செய்வோம் என்று கூறியதால் கலகத் தீ பரவியது. கடவுளால் பாதுகாக்கப்படும் புகாஸ் கிராண்டியில் வசிக்கும் மக்களைத் தவிர, உலகத்தில் உள்ள மற்றப் பகுதிகள் எல்லாம் அழிவது திண்ணம் என இக் கலகக்காரர்கள் நம்பினுர்கள். தாணுக்காரர்களும், கப்பற்படை வீரர்களும் சேர்ந்து இக் கலகத்தை

அடக்கினார்கள். மாயாஜாலத்தில் நம்பிக்கையுள்ள இரகசியச் சங்கங்கள் மேலும் ஐந்து ஆண்டுகள் அரசாங்கத்திற்குத் தொடர்ந்தரவு கொடுத்துத்தான் வந்தன. பிலோரென்சியோ இன்ட்ரென் செராடோ (Florencio Intrencherado) என்பவர் தலைமையின்கீழ் மற்றொரு கலகம் ஏற்பட்டது. ஒரு பூகம்பம் வரப்போகிறது என்று சரியாக இன்ட்ரென் செராடோ முன்கூட்டியே (ஜோசியம்) கூறியதால் இவரைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. கி.பி. 1924ஆம் ஆண்டிலிருந்து 1927ஆம் ஆண்டுவரை பிலிப்பைன் தீவுகளின் பேரரசர் என இவருடைய சீடர்கள் இவரை அழைத்தார்கள். தம்மைப் பின்பற்றுபவர்களிடமிருந்து 3 பிசாஸ் (Pesos) பணத்தை உறுப்பினர்களாவதற்காக அவர் வாங்கிக் கொண்டார். ஒரு பேரரசர்க்கு வேண்டிய ஆடம்பரங்களெல்லாம் இவரிடம் இருந்தன. இவருக்கு என்று ஓர் அரச மாளிகை கொடுக்கப்பட்டது. இரத்தினங்களால் இழைக்கப்பட்ட வாள் உறையுள் ஒரு பொன் உடைவாள் இடையில் செருகியிருந்தார். பொன்முடி அணிந்துகொண்டார். சீருடை அணிந்த கையாள்கள் இவரை எப்பொழுதும் பாதுகாத்தார்கள். உலகம் அழியும் தறுவாயில் இருந்தாலும் தம்மிடம் அடைக்கலம் அடைந்தவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் என உறுதிமொழி கொடுத்தார். தலைவரியை நீக்குவதற்கும், பிலிப்பைன்ஸ் சுதந்திர நாடாக மாறுவதற்கும் தாம் பாடுபடப் போவதாகக் கூறினார். கி.பி. 1926ஆம் ஆண்டில் அரசாங்கம் 'இவர் ஒரு பைத்தியக்காரன்' என்று அறிவித்தது. நிலங்களைப் பற்றிய அலுவலகத் தாள்களை எரிக்க வேண்டும்; அத் தீவுகளில் உள்ள செல்வங்களைச் சரிசமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்; சீன, ஜப்பானிய வணிகர்களின் பொருள்களைக் கைப்பற்ற வேண்டும் என இவரைப் பின்பற்றுபவர்கள் அரசாங்கத்திடம் கூறினார்கள். பொதுவாசு மத வெறியுள்ள பிலிப்பீனியர்கள் நிலவுடைமைகளையும், அயல்நாட்டு அதிகாரத்தையும் எதிர்த்தார்கள்.

ஜப்பானியர்களின் பொருளாதார ஆதிக்கத்தைப் பிலிப்பீனியர்கள் வரவேற்கவில்லை. மணிலா வாணிபத்தில் ஜப்பானியர்கள் அதிக அளவில் பங்கு கொள்ளத் தொடங்கினார்கள். வடக்கு லூஜானில் உள்ள பாகியோவில் மிக அதிக அளவில் ஜப்பானியர்கள் குடியேறியிருந்தார்கள். கிழக்கு மிண்டானோவில் உள்ள டாவாஓ (Davao) மாவட்டத்தின் வளர்ச்சிக்கு இவர்களே முக்கியக் காரணம் ஆவார்கள். 1936ஆம் ஆண்டில் 20,000 ஜப்பானியர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளில் குடியேறியிருந்தார்கள். டாவாஓ

மாவட்டத்தின் 80 விழுக்காடு வாணிபம் இவர்கள் தனித் தலைமை யின்கீழ் வந்தது. டாவாஓ மாவட்டத்தின் உள்நாட்டு அரசாட்சி இவர்களிடமே இருந்தது. அம்மாவட்டத்தின் நலம், கல்வி, முதலிய துறைகளை இவர்கள்தாம் கண்காணித்து வந்தார்கள்.

டாப்ட் பரிந்துரை செய்ததால்தான் மக்கள் தலைவர் கூலிட்ஜ் ஸ்டிம்சனை தலைமை ஆளுநராகத் தேர்ந்தெடுத்தார். இது பற்றிக் கியூஜான் டாப்ட் உதவியை நாடியதால்தான் டாப்ட் இதில் தலையிட்டார். மேலும் கியூஜான் ஸ்டிம்சனை இந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தினர். பிலிப்பைன்ஸ் சட்ட சபையில் பிலிப்பீனியத் தேசியவாதிகள் தம்முடன் ஒத்துழைத் தால்தான் தாம் இப் பதவியை ஏற்றுக்கொள்ள முடியும் என ஸ்டிம்சன் ஒரு நிபந்தனை விதித்தார். மேலும் பிலிப்பைன்ஸ் நாட்டுச் சுதந்திரம் பற்றிய விவகாரங்களில் தாம் தலையிடமுடியாது என்றும், தலைமை ஆளுநராய்ப் பணிபுரியும்போது நிருவாகத்தில் தான் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் ஸ்டிம்சன் கூறினர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் ஓர் ஆண்டுக் காலம்தான் ஸ்டிம்சன் பணிபுரிந்தார். மக்கள் தலைவர் ஹூவர் அவரைக் குடியரசின் அமைச்சராய் (Secrertary-of-states) தேர்ந்தெடுத்ததால்தான் அவர் பிலிப்பைன்ஸ் தீவுகளை விட்டுச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. தாம் தலைமை ஆளுநராய்ப் பணிபுரிந்தபோது வாக்குவாதங்களையும், அரசியல் பேச்சுகளையும் இவர் தவிர்த் தார். ஆகையால், இவருக்கு பிலிப்பீனியச் சட்டசபை உறுப் பினர்களின் நம்பிக்கையும், ஒத்துழைப்பும் கிடைத்தன. பெரும் பான்மைக் கட்சியின் தலைவர்களுடன் ஆலோசனை செய்துதான் இவர் அக் கட்சியிலிருந்து தமது அமைச்சரவையின் அமைச்சர் களைத் தேர்ந்தெடுத்தார். மேல் சட்டசபையை மீண்டும் உருவாக் கினர். பின், இரு சட்டசபைகளிலும் பெரும்பான்மைக் கட்சியின் தலைவர்களையும் மேல் சட்டசபையின் உறுப்பினர்களாக நியமித் தார். பின்வந்த தலைமை ஆளுநர்களுக்கும் பிலிப்பீனிய மக்களின் ஒத்துழைப்புக் கிடைத்தது. ஆனல் அமெரிக்க வணிகர்கள் இதை வரவேற்கவில்லை; அரசாங்க நடவடிக்கையில் குறை கண்டார்கள். இவர்கள் பிலிப்பீனியத் தேசியவாதிகளை எதிர்த்தார்கள். பிலிப் பைன்ஸ் தீவுகளில் அமெரிக்கர்கள் வாணிபம் செய்வதை நிறுத்த வேண்டும் என அமெரிக்கக் குடியரசு சட்டசபை கொண்டுவந்த தீர்மானத்தை ஸ்டிம்சன் மாற்ற முயன்றுர். ஆனல் அவர் வெற்றி யடையவில்லை.

9. சுயாட்சி வந்தது

கி.பி. 1929ஆம் ஆண்டில் பங்கு மாற்று வாணிகக் களம் (Stock–Market) முறிவடைவதற்கு முன்னே அமெரிக்க விவசாய நிலையில் மந்தம் ஏற்பட்டது. இதனுல் ஏற்பட்ட விளைவுகளால் அமெரிக்கக் குடியரசு சட்டசபை பிலிப்பைன்ஸ் தீவுகளுக்குச் சுயாட்சி கொடுக்கத் தீர்மானித்தது. அமெரிக்க அரசாங்கம் செய்த தவறு என்னவென்றுல் துன்புற்றுக் கொண்டிருக்கும் அமெரிக்க உற்பத்தியாளர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து இறக்கு மதியான சர்க்கரை, தாவரத்திலிருந்து எடுத்த எண்ணெய் போன்ற பொருள்களுடன் வாணிபத்தில் போட்டியிட ஆர்வ மூட்டியதே காரணம். ஆகையால் அமெரிக்கக் குடியரசின் சர்க்கரை வியாபாரிகள், அமெரிக்கப் பால்பண்ணை நிறுவனங்கள், பருத்தி யெண்ணெய் உற்பத்தியாளர்கள் முதலியவர்கள் பிலிப்பைன்ஸ தீவுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்குச் சலுகையும், ஆதரவும் காட்டக்கூடாது என முறையிட்டார்கள். பழைய பழக்க வழக்கங்களைப் பாதுகாக்கின்றவர்களும், புரட்சி மாறுதல்களை எதிர்ப்பவர்களும் அமெரிக்கத் தனித்தலைமையை எதிர்த்த கட்சியின் கொள்கையை ஆதரிக்கத் தொடங்கினுர்கள். மேலும் கி.பி. 1930ஆம் ஆண்டில் வெளிநாட்டு விவகாரங்களில் தலையிடாமல் தனித்து இருப்பதே நல்லது எனப் பெரும்பான்மை யான அமெரிக்கர்கள் கூறத் தொடங்கினுர்கள். பிலிப்பீனிய மக்கள் அமெரிக்காவிற்கு வந்து குடியேறுவதை அமெரிக்கத் தொழி லாளர்கள் எதிர்த்தாலும் அமெரிக்காவின் இத்திருப்பத்திற்கு ஒரு காரணமா யிருக்கலாம்.

பிலிப்பைன்ஸ் தீவுகளுக்குச் சுதந்திரம் கொடுக்காமல் பிலிப் பைன்ஸ் தீவுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களின் போட்டி யைத் தவிர்த்து அமெரிக்காவுக்குப் பொருளாதாரத்தில் சுதந்திர மளித்தது அமெரிக்க அரசாங்கம். அமெரிக்காவில் இத் திருப்பம் ஏற்பட்டதால் பிலிப்பைன்ஸ் சுதந்திரத்திற்கு எதிராக வாதாடிய அமெரிக்கக் குடியரசு சட்ட சபையில் எதிர்ப்பு மறைந்தது. அமெரிக்காவிற்குப் பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து பொருள்கள் இறக்குமதியாகக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டதால் பிலிப் பைன்ஸ் நாட்டின் பொருளாதார நிலை பாதிக்கப்படுமோ எனப் பலர் அஞ்சினர். மிகக் குறைந்த அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸ தீவுகளில் மூலதனம் இட்டிருந்தனர். ஆகையால், பெரும்பான்மை யான அமெரிக்க மக்களுக்குப் பிலிப்பைன்ஸின்மேல் அக்கறை கிடையாது. பிலிப்பைன்ஸ் தீவுகளை ஆட்சி புரிவதற்கும், பாது

காப்பதற்கும் ஆகும் செலவு, பிலிப்பைன்ஸ் தீவுகளிலிருந்துவரும் பயனைவிட மிக அதிகமாயிருந்தது.

கி.பி. 1929ஆம் ஆண்டுக்குப் பிறகு பிலிப்பைன்ஸ் தீவுகளிலே பலவகையான புதுத் திருப்பங்கள் ஏற்பட்டன. ஒன்பதே ஒன்பது வாக்கு இல்லாததால் அமெரிக்கக் குடியரசின் மேல்சட்டசபையில் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்குச் சுதந்திரம் கொடுக்கவேண்டும் என்று கூறிய ஒரு தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. இதற்குப் பிறகு கொடுத்த பத்துப் பிரேரணைகளும் தோற்கடிக்கப்பட்டுவிட்டன. கடைசியாகக் கி.பி. 1932ஆம் ஆண்டில் குடியரசுக் கட்சியினர் பெரும்பான்மையாய் உள்ள அமெரிக்கக் குடியரசின் சட்டசபை ஹேர்-ஹாவ்ஸ் கட்டிங் சட்டத்தை (Hare-Hawes Cutting Act) நிறைவேற்றியது. இச் சட்டத்தைத் தோற்கடிப்பதற்காக மக்கள் தலைவர் ஹூவர் மறுப்பு ஆணையைப் பயன்படுத்தினர். ஆனால், கி.பி. 1933ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடியரசு சட்டசபை இம் மறுப்பு ஆணையைப் புறக்கணித்தது. பிலிப்பைன்ஸ் சட்டசபையின் அனுமதியைப் பெறுவதற்காக இச் சட்டம் பிலிப்பைன்ஸுக்கு அனுப்பப்பட்டது. ஓஸ்மேனு, ரோக்ஸாஸ், ஒசியாஸ் ஆகியவர்கள் அமெரிக்கச் சட்டசபை இச் சட்டத்தை ஒப்புக்கொண்டதற்குக் காரணமாய் விளங்கினர்கள். தாங்கள் அடைந்த வெற்றியைப் பற்றிப் பிரசாரம் செய்வதற்காக இவர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்குத் திரும்பி வந்தனர். இதனல் மக்களிடையே இவர்கள் செல்வாக்கு ஓங்கிவிடுமோ என மேன்யுல் கியூஜான் அஞ்சினர். ஆகையால், கியூஜானும் அவரை பின்பற்றுபவர்களும் முயற்சி செய்து பிலிப்பைன்ஸ் சட்டசபை இச்சட்டத்தை ஏற்கமறுக்கும்படிச் செய்தார்கள். இம் மசோதா பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கு உடனே சுதந்திரம் கொடுக்கவேண்டும் என்று கூருததால் அகுயி தால்டோ போன்ற தலைவர்கள் இதை எதிர்த்தார்கள். வாணிபம்பற்றி இது கூறிய நிபந்தனைகளையும், வெளிநாட்டார்கள் குடியேறுவதைப்பற்றி இதுபோட்ட கட்டுப்பாடுகளையும், அமெரிக்காவின் இராணுவத்துக்கும், கப்பலுக்கும் தளமாய்ப் பிலிப்பைன்ஸ் விளங்கப்போவதையும் பல பிலிப்பீனியத் தலைவர்கள் எதிர்த்தார்கள். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுக் கட்சியின் நிருவாகத்தால் இன்னும் பல நன்மைகள் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கு ஏற்படலாம் எனப் பலர் நினைத்தனர். இச் சூழ்நிலை மணிலாவிலும், வாஷிங்டனிலும் குழப்பத்தை உண்டாக்கியது.

இதுபற்றி வாஷிங்டனில் பேச்சு நடக்கத் தொடங்கியது. பிலிப்பீனியக் குழுவின் தலைவராகக் கியூஜான் வந்தார். பல மாதப் பேச்சுகளுக்குப் பிறகு மக்கள் தலைவர் ரூஸ்வெல்ட், மேல்சட்டசபை

உறுப்பினர் டெய்டிங்ஸ் (Tydings) ஆகியவர்களின் முயற்சியால் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அமெரிக்கக் கப்பல் தளம் பிலிப்பைன்ஸில் இருக்கவேண்டும் என்ற நிபந்தனை இம் மசோதாவிலிருந்து நீக்கப்பட்டது. இதைப்பற்றிப் பிற்பாடு பேச்சு நடத்தலாம் என்று ஒப்பந்தம் ஏற்பட்டது. மேலும், பிலிப்பைன்ஸில் 3,00,000 ஏக்கரில் அமெரிக்க இராணுவம் அமைத்திருந்த இராணுவத் தளத்தைப் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கு அந்நாட்டின் சுதந்திரத்திற்குப் பிறகு கொடுக்கவேண்டும் என்ற உடன்படிக்கை யேற்பட்டது. இந்த மாற்றங்களைத் தவிரப் புதிய டெய்டிங்ஸ்–மெக்டபிச்சட்டத்திற்கும் (Tydings–Mcduffie Act), ஹேர்–ஹாவ்ஸ் கட்டிங் சட்டத்திற்கும் யாதொரு வேற்றுமையும் இல்லை. அமெரிக்கக் குடியரசின் இணைக்கூட்டான சட்டங்கள் மூலம் கப்பல் கட்டுங்கயிற்றின் (Cordage) மேல் உள்ள வரி, தீர்வை முதலியவற்றினின்று விலக்களிக்கப்பட்டது. தேங்காயெண்ணெய் இறக்குமதிமேல் உள்நாட்டுப் பொருள்வரி விதிக்கப்பட்டது. தேங்காயெண்ணெய் இறக்குமதி உள்நாட்டுப் பொருள்வரிமூலமும், சர்க்கரைப் பதனவரி (Processing Tax) மூலமும் வந்த பணங்களைச் சேர்த்து 50 மில்லியன் பீசாஸ் (Pesos) பிலிப்பைன்ஸ் தீவுகளின் பொது வருவாய்த்துறைபரங்கத்திற்குக் கொடுக்கவேண்டும். அமெரிக்கக் குடியரசு ஏற்றுமதி இறக்குமதிச் சுங்கவரி நிபந்தனைகள் பிலிப்பைன்ஸ் தீவுகளின் பொருள்களின்மேல் விதிக்கப்படமாட்டா எனக் கி.பி. 1938ஆம் ஆண்டில் தீர்மானம் எடுக்கப்பட்டது. கி.பி. 1934ஆம் ஆண்டு மே மாதம் டெய்டிங்ஸ்-மெக்டபி சட்டத்தைப் பிலிப்பைன்ஸ் சட்டசபை ஏற்றுக்கொண்டது. இத்தகைய சூழ்நிலையில் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கு முழுச் சுதந்திரம் கொடுப்பதைத் தவிர வேறு ஒரு வழியுமில்லை.

டெய்டிங்ஸ்-மெக்டபிச் சட்டம் நடைமுறையில்

பிலிப்பீனிய மக்களே கூடி ஒரு புதிய குடியரசு நாட்டின் அரசியல் சட்டதிட்டத்தை உருவாக்கும்படிக் கி.பி. 1934ஆம் ஆண்டுச் சட்டம் அவர்களுக்குச் சட்டப்படி அதிகாரம் வழங்கியது. ஆனால், இதுபற்றிச் சில நிபந்தனைகளையும் விதித்தது: 1. பிலிப்பைன்ஸ் தீவுகளில் ஒரு குடியரசு ஆட்சியை உருவாக்க வேண்டும். 2. முற்போக்குள்ள உரிமைகள் கொடுக்கும் மசோதாவைத் தயாரிக்க வேண்டும். 3. பத்தாண்டு இடைக்காலத்திற்கு அமெரிக்கக் குடியரசின் அரசுரிமை தொடர்ந்து நீடித்திருக்க வேண்டும். 4. அமெரிக்காவின் முழுமையான அதிகாரமும் பிலிப்பைன்ஸ் தீவுகளிலிருந்து விலகும் வரை பிலிப்பைன்ஸ் தீவுகளில் உள்ள அமெரிக்கர்களின் உரிமைகளுக்குப் பாதுகாப்பு

அளிக்கவேண்டும். 5. அமெரிக்கப் போர்த்துறையின் அன்றாட அலுவல்கள் சம்பந்தமாக இந்த இருநாடுகளுக்கும் இடையே இடையீட்டாளராக நிருவாகம் செய்யவேண்டும். 6. அமெரிக்க மக்கள் தலைவரின் அதிகாரத்தைப் பாதுகாப்பதற்காக ஓர் உயர் தனிப் பேராணையரை நியமனம் செய்ய வேண்டும்.

அமெரிக்க மக்கள் தலைவரின் பிரதிநிதியாக இருப்பதால் உயர்தனிப் பேராணையருக்கு (High-Commissioner) மிகுந்த அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. நாட்டின் அமைதியைப் பாதுகாப்பதற்காகவும், நிலையான அரசாங்கம் ஏற்படுவதற்காகவும், சொத்துரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், நிதி நிலையில் கடன் தீர்வுத்திறன் ஏற்படுவதற்காகவும் (Financial Solvency) வாணிபம், குடியேற்றம் ஆகியவைபற்றி மேற்பார்வையிடுவதற் காகவும், அமெரிக்கப் பாதுகாப்புத் தளங்களை நிருவகிப்பதற் காகவும், தக்க தருணத்தில் தலையிடுவதற்கு அவருக்கு உரிமை யுண்டு. ஆனால் உண்மையில் அவருக்கு அவ்வளவு அதிகாரம் தேவையில்லை, அந்த அதிகாரங்களையும் அவர் மிகச் சில சமயங் களிலே பயன்படுத்தினார். மேலும் பிலிப்பைன்ஸில் இருந்த அரசியல் சூழ்நிலையில் அவர் தம்முடைய அரசுரிமை அதிகாரங்களைப் பயன் படுத்துவது இயலாத செயலாயிருந்தது. அவருக்கு உதவிசெய்ய மிகக் குறைந்த அமெரிக்க நிறுவன அலுவலர் குழாமே இருந்தது; மலாகனன் அரண்மனையை விட்டு அவர் வெளியேறவேண்டுவதா யிருந்தது; பிலிப்பைன்ஸ் குடியரசு அரசாங்கத்தின் நிருவாகம் பற்றிய தொடக்க வேலையைத் தொடங்கியது.

கி.பி. 1935ஆம் ஆண்டு பிப்ரவரியில் குடியரசு அரசியல் சட்டதிட்டம் உருவாகியது; மக்கள் தலைவர் ரூஸ்வெல்ட்டின் அனு மதி பெறுவதற்காக அவரிடம் அனுப்பப்பட்டது. கி.பி. 1935ஆம் ஆண்டு மே 14ஆம் நாள் பிலிப்பைன்ஸ் வாக்காளர்களால் இது உறுதி செய்யப்பட்டது. அமெரிக்கச் சட்டதிட்டத்தில் இருப்பது போல் சட்டநிறைவேற்ற ஆட்சித்துறை, சட்டமியற்றும் சட்ட சபை, தீர்ப்பினைத் தெரிவிக்கிற நீதிமன்றம் ஆகியவை தனித் தனியாகப் பிரிக்கப்பட்டன. ஆட்சித் தலைமையுரிமை மக்களிடமே உள்ளது என்றும், மக்களிடமிருந்துதான் அரசாங்கத்தின் அதிகாரம் உருவாகிறது என்றும் உறுதியாகக் கூறப்பட்டது. தானாக இயங்குகிற அடிமைப்பட்ட வாழ்வு சட்டத்திற்குப்புறம்பானது என ஒழிக்கப்பட்டது. சமூக உரிமைகளைப் பாதுகாப்பதே அரசாங்கத் தின் முக்கியக் குறிக்கோளாகும் என அறிவிக்கப்பட்டது. இதைப் பற்றி மக்கள்தலைவர் ரூஸ்வெல்ட் அதிகார முறையில் வெளிப்படை யாக அரசவிளம்பர அறிவிக்கைவிட்டவுடன் (Proclamation)

கி.பி. 1935ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் நாளிலிருந்து இச் சட்டதிட்டம் நடைமுறைக்கு வந்தது. கி.பி. 1946ஆம் ஆண்டு ஜூலை 4ல் முழுச் சுதந்திரம் கொடுப்பதாக உறுதியளிக்கப்பட்டது. நடைபெற்ற தேர்தலில் கியூஜான் குடியரசுத் தலைவராகவும், ஓஸ்மேனு துணைக் குடியரசுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். ஆகையால், மலாகனன் அரண்மனைக்கு வந்து குடியரசுத் தலைவர் கியூஜான் குடியேறினர். பிலிப்பைன்ஸ் பொது வருவாய்த் துறைக்கு அளிக்கப்பட்ட சர்க்கரை, தேங்கா யெண்ணெய் ஆகியவற்றின் வரிகள் மூலம் அதிக வருமானம் கிடைத்ததால் தொடக்கத்தில் பொதுத்துறையில் வரம்புமீறிச் செலவு செய்யப்பட்டது. மேலும் மக்கள் தலைவர் கியூஜான் மத்திய அரசாங்க அதிகாரத்தைப் பெருக்க நடவடிக்கைகள் எடுத்தார். இதனல் ஒரு தனி மனிதனின் ஆட்சியும் ஒரு தனிக்கட்சியின் அதிகாரமும் தழைத்தோங்கி வலிமையடைந்தன. அமெரிக்க உயர்தனிப் பேராணையாளர் பால் வி. மெக்நட் (Baul V. Mcnutt) கி.பி. 1933ஆம் ஆண்டில் டெய்டிங்ஸ்-மெக்டபிச் சட்டத்தை மறுபடியும் ஆராய வேண்டும் எனக் கூறினர். அமெரிக்க ஏற்றுமதி இறக்குமதிச் சுங்கவரி நிபந்தனைகள் பிற்காலத்தில் பிலிப்பீனியப் பொருள்களின்மேல் விதிக்கப்பட்டால் பிலிப்பைன்ஸ் தீவுகளின் பொருளாதாரநிலை மிக அதிகமாகப் பாதிக்கப்படுமென்றும், கீழை நாடுகளிலிருந்து அமெரிக்கா வெளியேறினல் இந் நாடுகளின் அரசியல் நிலைமை மிகுதியாகப் பாதிக்கப்படும் என்றும் இவர் கூறினர். ஆகையால், செலாவணி விவகாரங்களையும், அரசாங்கக் கடன் பொறுப்புகளையும் வெளிநாட்டு உறவுகளையும், ஏற்றுமதி இறக்குமதிகள்பற்றிய சுங்கவரிகளையும், குடியேற்றங்களையும் அமெரிக்கக் குடியரசு அதிகாரத்தின்கீழ்க் கொண்டு வருவதே நல்லது என இவர் கருதினர். ஆனல், பிலிப்பீனிய அரசியல் தலைவர்கள் இவருடைய ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. பிலிப்பைன்ஸ் தீவுகளின் முழுச் சுதந்திரத்தைப் பாதிக்கும்படியான செய்கைகள் எதுவும் செய்யமுடியாது என அமெரிக்கக் குடியரசின் உயர்தனிப் பேராணையாளர் பிரான்ஸிஸ் பீ. சாயர் (Francis B. Sayre) கி.பி. 1939ஆம் ஆண்டில் ஒப்புக்கொண்டார். குடியரசுப் பாதுகாப்புப் பொறுப்புகள் படைத்துறை உயர்பணியாளர் டக்ளஸ் மக் ஆர்தரிடம் (Douglas Mac Arthur) ஒப்படைக்கப்பட்டன. ஆண்டிற்கு 40,000 பயிற்சியாளர்களைப் படையில் சேர்க்க வேண்டும் என அவர் திட்டமிட்டார். நீர்மூழ்கிக் குண்டுக் கப்பல்களை அதிகரிக்க வேண்டும் என்றும், 60 விமானங்கள் கொண்ட விமானப்படைகளை அமைக்க வேண்டும் என்றும் இவர் விரும்பினர். வரப்போகும் ஜப்பானியப் படைகளின் எதிர்ப்பை

இவர் பொருட்படுத்தவில்லை. அமெரிக்கக் குடியரசின் உதவியில்லாமல் இத் தீவுகளை ஜப்பானியப் படையெடுப்பிலிருந்து பாதுகாக்க முடியாது என்பது திண்ணம்; ஆனால், ஜப்பானியப் படையெடுப்பின்போது இத் தீவுகளுக்கு அமெரிக்கக் குடியரசு பாதுகாப்புக் கொடுக்கத் தவறியது.

அமெரிக்கக் குடியரசு பிலிப்பைன்ஸ் தீவுகளை 40 ஆண்டுகள் தாம் ஆண்டது. ஆனால், இந்தக் குறுகிய காலத்துக்குள் அமெரிக்க ஆட்சியினால் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்குப் பல நன்மைகள் விளைந்தன. உடல் நலம், கல்வி ஆகிய துறைகளில் பிலிப்பைன்ஸ் முன்னேறியது. கட்டுப்பாட்டுத் திட்டமுள்ள அமைதியான ஆட்சியை அமைத்தது. செலாவணி நிலைமை உறுதியாயிற்று. சிறைகளை மேம்படுத்திச் சீர்ப்படுத்தியது. தண்டனைச் சட்டங்களில் உள்ள கொடுமைகளை அகற்றியது. மக்களின் நம்பிக்கை பெற்ற ஒரு சுதந்திர நீதி மன்றத்தை நிறுவியது. மக்களுக்குத் தொல்லை கொடுத்த மத குருமார்களின் தனி நிலை உரிமைகளை ஒழித்தது நிலப்பதிவு சம்பந்தமான செயல்களை ஏற்பாடு செய்தது. அமெரிக்க வாணிபத் தலங்களில் பிலிப்பைன்ஸ் நாட்டுப் பொருள்களுக்குச் சலுகை கொடுத்தது. மேலும் அமெரிக்கக் குடியரசு 1 மில்லியன் டாலருக்குமேல் பிலிப்பைன்ஸ் முன்னேற்றத்திற்குச் செலவு செய்தது. இதில் பாதிக்குமேல் பொதுத்துறைத் தேவைகளுக்காகச் செலவழித்தது. இவை தவிர, பிலிப்பைன்ஸ் பொருளாதார வளர்ச்சிக்காக 300 மில்லியன் டாலர்கள் முதலீடு செய்தது. கீழை நாடுகளின் ஊதிய நிலைமையைவிடப் பிலிப்பைன்ஸ் மக்களின் ஊதிய நிலைமை மேம்பட்டிருந்தது. தொழிலாளர்கள் ஒரு நாளில் 8 மணி நேரம்தான் வேலை செய்தார்கள். மேலும் அவர்களுக்கு இழப்பீடுகளும் கொடுக்கப்பட்டன. ஆனால், வாழ்க்கை நடத்துவதற்கான தேவைப் பொருள்களின் விலை அதிகமாயிருந்தது. இதனால் கி.பி. 1930 ஆம் ஆண்டுக்குப்பிறகு தொழிலாளர்கள் மனக்கசப்பு அடைந்தார்கள். பிலிப்பைன்ஸ் வாணிபம் அமெரிக்கத் தனித்தலைமைக்குள் வந்ததால் பிலிப்பைன்ஸ் பொருளாதார விவகாரங்கள்பற்றி அமெரிக்க ஆதரவைத் தேட வேண்டிய நிலை ஏற்பட்டது.

நன்மைகள் பல இருந்தாலும், அமெரிக்காவிற்குப் பிலிப்பைன்ஸ் தீவுகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் இல்லை. இதற்கு அமெரிக்காவின் அனுபவமின்மையே காரணம். பிலிப்பைன்ஸ் ஆட்சிபற்றி நிலையான கொள்கையும் அமெரிக்கக் குடியரசுக்குக் கிடையாது. பிலிப்பைன்ஸ் தேசியவாதிகளின் உணர்ச்சிகளைத் தட்டியெப்புழுபியதால் அமெரிக்காவில் பிலிப்பைன்ஸ் தீவுகளைக்

கட்டுப்படுத்தி மேற்பார்வையிட முடியவில்லை. ஆனால், இத் திறமை ஒரு நாட்டைத் தக்கவகையில் ஆட்சி புரியத் தேவை. மக்கள் ஒருவரை ஒருவர் சுரண்டிப் பிழைத்ததைக் குறைக்க அரசாங்கம் முயற்சி எடுக்கவில்லை. கி.பி. 1907ஆம் ஆண்டுக்குப் பிறகு அமெரிக்க அரசாங்கத்துடன் ஆட்சித் துறையில் ஒத்துழைக்க முன்வந்த பிலிப்பீனியத் தலைவர்கள் மக்களுடைய செல்வத்தையும் நலனையும் முன்னேற்ற வேண்டும் என்று நினைக்காமல் நடந்ததும் இந் நிலைமைக்கு ஒரு காரணம் எனக் கூறலாம். வங்கிகளிலும், கப்பல் தொகுதியிலும், தொழிற்சாலைத் துறையிலும், ஏற்றுமதித் துறையிலும் உள்ள முதலீடுகளெல்லாம் அயல் நாட்டார் ஆதிக்கத்தின்கீழ் இருந்தன. பிலிப்பீனியப் பிரபுக்கள் நிலவுடைமையாளர்களாயிருந்தார்கள். 99 விழுக்காடு பிலிப்பீனிய மக்களிடம் 30 விழுக்காடு சில்லறை வாணிகம்தான் இருந்தது. ஆனால் பிலிப்பைன்ஸில் குடியேறியிருந்த 1 விழுக்காடு அயல்நாட்டினர்கள் அரசாங்கத்திற்கு வரும் வரியில் 80 விழுக்காடு கொடுத்தனர். பிலிப்பைன்ஸ் நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களிலிருந்து அதிகரிக்கும் செல்வத்தினால் ஒரு சில பிலிப்பீனியர்களுக்குத்தான் நன்மை கிடைத்தது.

அமெரிக்கக் கலாசாரத் தொடர்பினால் பிலிப்பீனிய மக்களின் வாழ்க்கை நெறி பாதிக்கப்பட்டது எனச் சிலர் கூறுகிறார்கள். பகட்டு வாழ்க்கையிலும், இன்பத்தை நாடுதலிலும், சூதாட்டத்திலும், நேர்மையற்ற தீயவழி முறையிலும் மக்கள் கவனம் செலுத்தத் தொடங்கினார்கள். மேலும், அமெரிக்கன் ஜாஸ் சங்கீதம் (Jazz) பயனற்ற, இழிவான, கீழ்த்தரமான நூல்கள், ஊதாரித்தன்மையுள்ள வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு ஆர்வமூட்டுதல் முதலியவை நாட்டிலுள்ள நிலைமையை மேலும் பாழ்படுத்தின. ஆனால், இவ்வாறான கருத்துகளை முழுவதும் நாம் உண்மையென நம்பவேண்டிய ஆதாரங்கள் நமக்குக் கிடையா. மதச் சார்பற்ற கல்வி முறையினால் ஒரு வேளை மக்களின் வாழ்க்கை முறையில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், நிச்சயமாக இது மக்களின் மூடநம்பிக்கைகளையும் மக்கள் எளிதில் நம்பக்கூடிய தன்மையையும் மாற்றவில்லை.

10. பிலிப்பைன்ஸ் குடியரசு (கி.பி. 1967 வரை)

பிலிப்பைன்ஸ் தீவுகளை ஜப்பான் ஆட்சி புரிந்த சமயம் மக்கள் தலைவர் குவிஜான் நாடு கடத்தப்பட்டு இறந்து போனார். இவருக்குப்பின் ஓஸ்மேனா (Osmena) மக்கள் தலைவர் பதவியேற்றார். ஜப்பானியர்களின் தோல்விக்குப்பின் கி.பி. 1945ஆம் ஆண்டு

பிப்ரவரி மாதம் ஓஸ்மேனு தம்முடைய அரசாங்கத்துடன் மணிலாவிற்குத் திரும்பினர். ஆனல் பெயரளவில்தான் அவருக்கு அதிகாரம் இருந்தது; அமெரிக்கப்படை முக்கியமான விவகாரங்கள் பற்றிய தீர்மானங்கள் எடுத்துக்கொண்டிருந்தது. கி.பி. 1946ஆம் ஆண்டு ஜுலை 4ஆம் நாள் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்குச் சுதந்திரம் கொடுப்பதாயிருந்ததால் ஓஸ்மேனு இதுபற்றி நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருந்தார்.

பலவகையான சிக்கல்களையும் குழப்பங்களையும் பிலிப்பைன்ஸில் தீர்க்க வேண்டியதாயிருந்தது. நாட்டில் கிளர்ச்சிச் சூழ்நிலையை நீக்கிக் குடும்பங்களை மீண்டும் ஒன்றுசேர்த்தல், பொதுமக்களுக்கு மீண்டும் துணிவு கொடுத்தல், கொரில்லாப் போர் வீரர்களுக்கும், ஜப்பானியர்களுடன் ஒத்துழைத்தவர்களுக்கும் இடையே இருந்த பகைமையைக் குறைத்தல், பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்து முன்னேற்றம் அடையச் செய்தல், அரசியல் சூழ்நிலையில் அமைதியை உருவாக்கல், எஞ்சியிருந்த ஜப்பானியப் படைவீரர்களைத் தேடிச் சிறைப்படுத்துதல், ஜப்பானுடன் தொடர்ந்து போர்புரிதல் முதலிய பணிகள் அமெரிக்கக் குடியரசிடம் விடப்பட்டன.

கி.பி. 1946ஆம் ஆண்டு ஏப்ரல் 23ஆம் நாள் பிலிப்பைன்ஸ் தீவுகளில் தேர்தல் நடந்தது. இச் சமயத்தில் நாட்டின் பல பகுதிகள் இராணுவ ஆட்சியின்கீழிருந்தன. நேசனலிஸ்டாக் கட்சியைச் (Nacionalista Party) சேர்ந்த மக்கள் தலைவர் ஓஸ்மேனு, அக் கட்சியிலிருந்து பிரிந்து வந்து புதியதாக உருவாக்கப்பட்ட முன்னேற்றக் கட்சியின் (Liberals) தலைவரான மான்யுவல் ரோக்ஸ்சாஸ் (Manuel Roxas) என்பவரால் தோற்கடிக்கப்பட்டார். மக்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் முன் ரோக்ஸ்சாஸ் அமெரிக்க இராணுவத்தில் ஓர் அதிகாரியாகப் பணிபுரிந்து வந்தார். ஜப்பானியர்களின் ஆதிக்கத்தின்போது அமைச்சரவையில் பணிபுரிந்தார். நிலவுடைமையாளர்களும், கிறித்தவக் கோவில்களைச் சேர்ந்தவர்களும், படைத்துறை சாராத அலுவலகங்களில் பணிபுரிந்த பணியாளர்களும், பெரும்பான்மையான செய்தித்தாள் நிறுவனங்களும் இவரை ஆதரித்தனர். தேர்தல் பிரசாரத்தில் சிறப்புப் பெற்ற செய்திகள்: (1) ஜப்பானியர்களுடன் ஒத்துழைப்பு, (2) தலைவர்களுக்கு நாட்டில் உள்ள மதிப்பு, (3) அமெரிக்கக்குடியரசின் செல்வாக்கு ஆகியவை ஆகும். மக்களாட்சிச் சடங்குகளைப் பின்பற்றித் தேர்தல் நடக்கவில்லை. குடியாட்சி முறைக்கு இத்தேர்தல் ஓர் இழுக்காயிருந்தது. மக்களின் வாக்குகள் விற்கப்பட்டன; வாங்கப்பட்டன; வாக்களிப்புப் பெட்டிகள் நிரம்பி வழிந்தன; தேர்தல் முடிவுகளில் ஊழல் நிறைந்திருந்தது. வெற்றி

யடைந்த முற்போக்காளர்கள் கட்சியின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது சட்ட மாமன்றம். மத்திய லூஜானில் ஹக் (Huk) செல்வாக்குள்ள பல பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைச் சட்ட மாமன்றத்தில் வந்து அமர இம் முற்போக்காளர் கட்சி அனுமதிக்கவில்லை. வாக்குறுதி அளித்தபடி கி.பி. 1946ஆம் ஆண்டு ஜூலை 4ஆம் நாள் அமெரிக்கக் குடியரசு பிலிப்பைன்ஸ் தீவுகளில் தனக்கிருந்த அதிகாரத்தை விட்டுவிட்டு வெளியேறியது. சுதந்திர பிலிப்பைன்ஸ் தீவு பிறந்தது.

ரோக்ஸ்சாஸ்-குவிரினோ ஆட்சி (கி.பி. 1946—1953)

பிலிப்பைன்ஸ் தீவுகளிலிருந்த குழப்பங்களை உடனடியாகத் தீர்ப்பதற்காக அமெரிக்கக் குடியரசு பெரும்பான்மையான உதவி அளித்தது. பிலிப்பைன்ஸ் தீவுகளைச் சீரமைக்கவும், பழுதகற்றிச் சீர்ப்படுத்தவும் 620 மில்லியன் டாலர்களை அமெரிக்கச் சட்டசபை பிலிப்பைன்சுக்குக் கொடுக்க அனுமதி கொடுத்தது. பெல் வாணிபச் சட்டம் (Bell Trade Act) என்ற சட்டத்தின் மூலம் எட்டு ஆண்டுகள் (கி.பி. 1954 வரை) பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கும் அமெரிக்கக் குடியரசிற்கும் இடையே கட்டுப்பாடில்லா வாணிபம் (Free Trade) நடந்தது. இச் சட்டத்தின்படி பிலிப்பைன்ஸ் தீவுகளிலுள்ள பொது நிலங்களிலும், இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்த வேண்டிய வாய்ப்புகளிலும், பொதுத் துறைகளைச் சொந்தமாக்கிக் கொள்ளும் வாய்ப்புகளிலும் அமெரிக்கர்களுக்கும் பிலிப்பீனிய மக்களுடன் சம வாய்ப்புக் கொடுக்க வேண்டும். இதனால் பிலிப்பீனிய மக்களுக்கு அமெரிக்கர்களின்மேல் சினமும் வெறுப்பும் ஏற்பட்டன. கி.பி. 1947ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடியரசும் பிலிப்பைன்சும் ஏற்படுத்திய ஒப்பந்தப்படி அமெரிக்கா பிலிப்பைன்சிற்கு இராணுவ உதவி கொடுப்பதாக ஒப்புகொண்டது. மேலும், பிலிப்பைன்ஸ் தீவுகளில் அமெரிக்கா படைத்தளங்கள் அமைத்தது. சுபிக் பே (Subic Bay), கிளார்க் பீல்டு (Clarke Field), பாகியோவிலுள்ள (Baguio) கேம்ப் ஜான் ஹே (Camp John Hay) ஆகியவை பிலிப்பைன்ஸ் தீவுகளிலிருந்த முக்கிய அமெரிக்கப்படைத்தளங்கள்.

அயல்நாட்டு விவகாரங்களில் உள்ளனவற்றைவிட உள்நாட்டு விவகாரங்களிலிருந்த குழப்பங்களே அதிகம். நடுநிலையற்ற, சீரமைதி குறைந்த சமூகப் பொருளாதாரச் சூழ்நிலையிருந்ததால் நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. ஐந்து விழுக்காடு பிலிப்பீனிய-ஸ்பானியர்களும், பிலிப்பீனியச் சீனர்களும் (கலப்புத் திருமணத்தில் பிறந்தவர்கள்) நாட்டின் பொருளாதாரத்தைக் கைப்பற்றியிருந்தார்கள். மற்ற மக்கள் சிறு நிலங்களில் வாழ்ந்த ஏழைக் குடியான

வர்கள்; பொதுவாக இவர்கள் கடனில் மூழ்கியிருந்தார்கள்; இவர்களின் வாழ்க்கைநிலை இழிந்த நிலைமையில் இருந்தது; இச் சூழ்நிலையிலிருந்து விடுதலையடையப் பொதுமக்களுக்கு வாய்ப் பேதும் இல்லை; ஆட்சிபுரிந்த சிறுபான்மையோர் இவர்கள் வாழ்க்கையைச் சீர்படுத்த அக்கறை காட்டவில்லை. பொரு ளாதாரத்தை ஆக்கிரமித்த சிலவராட்சிக் குழு (Oligarchy) அரசாங்கத்தையும், அரசியல்வாதியையும் தன் ஆதிக்கத்தில் கீழ்க் கொண்டு வந்தது.

மக்கள் தலைவர் ரோக்ஸ்சாஸாலோ அவருக்குப்பின் மக்கள் தலைவர் பதவியேற்ற குரிவினோவாலோ (Quirino) நாட்டின் நிலைமையைச் சீர்படுத்த முடியவில்லை. கையூட்டும், ஊழலும் அரசியலில் நிரம்பவே, சமூகப் பொருளாதாரச் சீர்திருத்தம் ஏற்படுத்தவேண்டும் எனக் கூறி ஹக்குகள் கிளர்ச்சியும் (Huk Rebellions) புரட்சியும் செய்தனர். இவர்களுக்குக் கம்யூனிஸ்டு தலைவர்கள் தலைமை தாங்கியதால் இவர்கள் அரசாங்கத்துடன் சமரசப் பேச்சு நடத்த மறுத்தார்கள். ஹக்குகளிடம் தேவையான ஆயுதங்களும், திறமையான தலைமையும் இருந்தன. மணிலாவில் ஒரு கொடுஞ் சூழ்நிலையை உருவாக்கினார்கள் இவர்கள். பிலிப் பைன்ஸ் சட்டமில்லாத நாடாக மாறியது. அரசாங்கத்தால் இவர் களை அடக்கவோ, கட்டுப்படுத்தவோ முடியவில்லை. முக்கியமாகக் குடியானவர்கள் பாதிக்கப்பட்டார்கள். காவலர்கள்கூட இவர் களைப்பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

கி. பி. 1950ஆம் ஆண்டில் கோடைக்காலத்தில், கொரியாப் போரின்போது சட்டமில்லாத, இழிநிலையடைந்த நாடாகப் பிலிப் பைன்ஸ் மாறியது, பிலிப்பைன்ஸ் சூழ்நிலையை நேரடியாக அறிவதற்காக அமெரிக்கக் குடியரசு ஒரு குழுவை அனுப்பியது. நாட்டைச் சீரமைக்க வேண்டும் எனவும், அமெரிக்கக் குடியரசு உதவிபுரிய வேண்டும் எனவும் இக் குழு அறிவித்தது. இதன்படி கி.பி. 1950 ஆம் ஆண்டு நவம்பரில் குவிரினோ–பாஸ்டர் உடன் படிக்கை (Quirino Foster Agreement) ஏற்பட்டது. 250 மில்லியன் டாலர்கள் பத்து ஆண்டுகளுக்குக் கொடுப்பதாக அமெரிக்கா அறிவித்தது.

கொரியாப் போரின்போது பிலிப்பைன்ஸ் ஐக்கிய நாடுகள் (United Nations) அமைப்புடன் ஒத்துழைத்தது. கி.பி. 1951 ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடியரசுடன் ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் (Mutual Defence Treaty) செய்து கொண்டது. ஜப்பானுடன் செய்துகொண்ட சான்பிரான்ஸிஸ்கோ சமாதான உடன் படிக்கையில் (Sanfrancisco Peace Treaty) கையொப்பமிட்டது.

முன்னாள் கொரில்லாப் போர்வீரர்களின் தலைவரும், சட்ட மாமன்ற உறுப்பினருமான இராமன் மாக்சேசே (Ramon Magsaysay) பாதுகாப்புச் செயலாளராய்ப் (Secretary of Defence) பதவியேற்றவுடன் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் திரும்பத் தொடங்கின. ஹக்குக் கலகக்காரர்களை இவரால் நன்கு அடக்க முடிந்தது. படைகளிடையே இவர் ஒரு புதிய பொறுப்புணர்ச்சியை உருவாக்கினார்; ஹக்குக்கலகக்காரர்களை அழித்தார்; அல்லது திறமையுடன் தம்பக்கம் சேரும்படி செய்தார். அடைக்கலம் புகுந்தவர்களுக்குப் புதுவாழ்க்கை கிடைக்கும் என்ற நம்பிக்கையை உருவாக்கினார். இதனால் ஹக்குக் கிளர்ச்சியின் முதுகெலும்பு உடைந்தது.

இக் காரணங்களால் இவருடைய தலைவரைவிட இவருக்கே நாட்டில் பேரும் புகழும் அதிகமாய் ஓங்கி வளர்ந்தன. கையூட்டும், ஊழலும் அதிகரித்ததால் தம்முடைய கட்சியைவிட்டு விலகி இவர் நேசனலிஸ்டாக் கட்சியில் சேர்ந்தார்; கி.பி. 1953ஆம் ஆண்டில் குடியரசு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கிராம மக்களின் பேராதரவு கிடைத்ததால் நிலவுடைமையாளர்—அரசியல்வாதிகளின் கூட்டணியை இவரால் எளிதில் தோற்கடிக்க முடிந்தது.

இராமன் மாக்சேசே ஆட்சி (1954—57)

தம்மூலம் பதவியேற்றவர்கள் நாணயத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என மக்கள் தலைவர் மாக்சேசே வலியுறுத்தினார். தங்கள் கஷ்டங்களை மக்கள் எடுத்துரைப்பதற்காகக் குறை தெரிவிப்புச் செயற்குழு ஒன்றை அமைத்தார். லூயிஸ் தாருக் (Luis Taruc) உள்பட, ஹக்குக் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கிய அனைவரையும், இவர் வெற்றியுடன் கைது செய்ததால் நாட்டில் அமைதியை நிலைநாட்ட முடிந்தது. ஏழை ஏர் உழவர், குத்தகைக் காரர் ஆகியவர்களின் நன்மைக்காகப் பாடுபட்டார்; மேலும் அதிக நிலங்களையும், வட்டி குறைவான கடன்களையும், வியாபாரத் துறைப் பொருள் வளர்ச்சி ஆகியவைபற்றிய ஆலோசனைகளையும், அளித்தார். அதிகக் கிணறுகளையும், சீர்ப்படுத்தப்பட்ட பெருஞ் சாலைகளையும் அமைத்தார்; தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான முயற்சிகளைச் செய்தார். மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடனும், விலைவாசியைக் குறைக்கும் எண்ணத்துடனும் பொருளாதாரத் திட்டங்களை வகுத்தார். ஒரு சிலரே இவரை எதிர்த்தார்கள்; ஆனால், ஒரு சிறு குழாம் இவரைத் தீவிரமாக எதிர்த்தது. மிகப் பெரிய விவகாரங்களை ஆராயக்கூடிய அறிவு இவருக்குக் கிடையாதென்றும் சிறு விவகாரங்களில் இவர் மூழ்கியிருக்கிறார் என்றும் இவர்கள் மறுப்புத் தெரிவித்தார்கள். இவர் மதம்,

கோவில் முதலிய விவகாரங்களில் அதிகக் கவனம் செலுத்துகிறார்; கல்வி, பொதுப்பள்ளிக்கூடம் முதலியவற்றைப் பொருட்படுத்த வில்லை என இவருக்கு எதிராக இவர்கள் பிரசாரம் செய்தார்கள்.

இவர் ஆட்சியின்போது படைச்செலவு அதிகரித்தது; நாட்டின் கடன்சுமை மிகுதியாக வளர்ந்தது. அமெரிக்காவை நம்பித்தான் வாழ்கிறார். வேறு வகையான அயல்நாட்டுக் கொள்கைகள் இவருக்குக் கிடையாதெனச் சட்டமாமன்ற மேலவை உறுப்பினர் ரெக்டோ (Senator Recto) இவருக்கெதிராகப் பிரசாரம் செய்தார். இவருடைய அனுமதியுடன்தான் தென்கிழக்காசிய நேசநாடுகள் உடன்படிக்கையின் கூட்டம் முதன்முதலாகப் பிலிப்பைன்ஸில் நடந்தது. கம்யூனிஸத்தை ஆசியாவில் கட்டுப்படுத்தி அடக்க வேண்டும் என்று டல்லஸ் (Dulles) கூறியதை முழுமனத்துடன் இவர் ஆதரித்தார். கி.பி. 1955ஆம் ஆண்டில் நடந்த பாண்டுங் கூட்டத்தின்போது (Bandung Conference) படைத்துறை முதல்வர் ரோமுலோ (General Romulo) குடியாட்சி முறையை ஆதரித்துப் பிரசாரம் செய்தார்.

'நான் அமெரிக்காவின் கைப்பாவை யல்லேன்' எனப் பலமுறை குடியரசுத் தலைவர் மாக்சேசே நிரூபித்துக் காண்பித்தார். கி.பி. 1955ஆம் ஆண்டில் பெல் வாணிபச் சட்டத்தை நீக்கி, பதிலாக லாரல் லாங்லே வாணிப ஒப்பந்தத்தை (Laurel–Langley Agreement) ஏற்படுத்தினார். இவ்வொப்பந்தத்தின்படி அமெரிக்காவுடன் இருந்த பொருளாதாரத் தொடர்பில் பிலிப்பைன்ஸிற்குப் பல சலுகைகள் கொடுக்கப்பட்டன. இவ்வொப்பந்தம் கி.பி 1974ஆம் ஆண்டுவரை நீடிக்கும். பிலிப்பைன்ஸ் மக்கள் தீவிரமாக எதிர்த்த போதிலும் அமெரிக்கர்களுக்குப் பிலிப்பைன்ஸில் சம வாய்ப்புக் கொடுக்கவேண்டும்; அமெரிக்கப் பிலிப்பைன்ஸ் வாணிபச் சிறப்பு உறவு நீடிக்க வேண்டும் எனப் பெல் வாணிபச் சட்டத்தில் கூறி யிருந்ததை நீக்கவில்லை. பிலிப்பைன்ஸிலுள்ள அமெரிக்கப் படைத் தளம்பற்றிய உடன்படிக்கையை மாற்றியமைக்கவும் முயற்சி யெடுக்கப்பட்டது. இரண்டாவது உலகப் போரின்போது பிலிப் பைன்சுக்கு அமெரிக்கா கொடுக்கவேண்டிய பணம் கொடுக்கப்பட வில்லை என முதன்முதலாகக் கூறிய குடியரசுத் தலைவர் மாக்சேசே பிலிப்பைன்சிற்கு அமெரிக்கா கொடுக்க வேண்டிய அத் தொகை யைக் கொடுக்கும்படியும் கேட்டார். கி.பி. 1956ஆம் ஆண்டில் ஜப்பானுடன் இழப்பீட்டு ஒப்பந்தத்தை (Reparation Agreement) ஏற்படுத்தினார்.

கி.பி. 1957ஆம் ஆண்டு மார்ச்சு 17ஆம் நாள் ஒரு விமான விபத்தில் குடியரசுத் தலைவர் மாக்சேசே இறந்தார். ஒரு மிகப் பெரிய அரசியல் தலைவரைப் பிலிப்பைன்ஸ் தீவுகள் இழந்தன.

கார்லோஸ் கார்சியாவும் (கி.பி. 1957—67), டயஸ்டாடோ மகபலும் (கி.பி. 1961—68)

மாக்சேசேவுக்குப்பின் ஆட்சிக்கு வந்த எல்லாக் கட்சியினரும் மக்களுடைய வாழ்க்கையைச் சீரமைக்கவும், பொருளாதாரத்தை வளர்க்கவும், நல்வழியில் செல்லும் அரசாங்கத்தை மக்களுக்குக் கொடுக்கவும், நாட்டு உணர்ச்சியையும், சமாதானத்தையும், அமைதிச் சூழ்நிலையையும் வலுப்படுத்தவும் வாக்குறுதியளித்தார்கள். ஆனால், நேசனலிஸ்டாக் கட்சியைச் சேர்ந்த கார்சியாவாலும் (Carlos Garcia), முற்போக்குக் கட்சியைச் சார்ந்த மகபகலாலும் (Diosadadu Macapagal) நாட்டின் சூழ்நிலைக் கேற்றவாறு விடைகொடுக்க முடியவில்லை. வழிவழி மரபாக வந்த பொருளாதாரத் துன்பங்கள், நாட்டின் மக்கள் தொகை அதிகரிப்பைத் தடுக்க முடியாததால் அதிகரித்தன. எவ்வாறு விலைவாசிகளைக் குறைத்து மக்களால் அன்றாட வாழ்க்கைக்குப் பொருள்களை வாங்கும் சக்தியை உண்டாக்குவது; அரிசி விலையை அதிகரிக்காமல் எவ்வாறு பயிரிடுபவர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கச் செய்வது என்பவைகளே நாட்டின் முக்கியமான பிரச்சினைகளாகும். நிலச்சீர்திருத்தத்தின்மூலமும், தொழிற்சாலைகள் அமைப்பதன்மூலமும் இத்தகைய சூழ்நிலையை மாற்றியமைக்க முடியும் என அரசாங்கம் தீர்மானித்தது. நிலச் சீர்திருத்தம் ஏட்டளவில்தான் இருந்தது; செயல்முறையில் தோன்றவில்லை. ஆகையால், குத்தகைக்காரர்களும் விவசாயிகளும் பாதிக்கப் பட்டார்கள்; இவர்கள் உழைப்பில் செல்வம் சேர்ந்த நிலவுடைமை யாளர்கள் முன்னேற்றம் அடைந்தார்கள்.

தொழிற்சாலைகள் அமைப்பதும், தொழில் உற்பத்தியைப் பெருக்குவதும் வெறும் பகற்கனவாயிருந்தன. நூற்றுக்கணக்கில் புதிய ஆக்கத் தொழிலகங்கள் அமைக்கப்பட்டன; ஆனால் அவை செல்வந்தர்களின் பணத்தைப் பெருக்கினவே தவிர, பண நெருக்கடி உடையவர்களை நாடிச் செல்லவில்லை. ஏறத்தாழ இரண்டு மில்லியன் தொழிலாளர்கள் வேலையில்லாமல் தவித்தார்கள்; மேலும் பட்டப்படிப்புப் பெற்ற இளைஞர்களும் வேலையில்லாமல் தவித்துக் கூலிவேலை செய்யப் போட்டி போட்டுக் கொண்டு வந்தார்கள். தொழிற்சாலைகள் அமைப்பதற்குத் தேவையான இயற்கைப் பொருள்கள் பிலிப்பைன்ஸில் இருந்தன; ஆனால்,


தேவையான மேலாளர்களும், செயலாட்சியாளர்களும், இயக்குநர் களும், முதலீடும், திறமைத் தொழிலாளர் குழுவும், மின் சக்தியும், போக்குவரத்துச் சாதனங்களும் இல்லை. அமெரிக்கக் குடியரசு சிறிது உதவியது; ஆனால், பிலிப்பைன்ஸ் தீவில் நிலவிவந்த தீவிரத் தேசிய உணர்ச்சியால் அயல்நாட்டுத் தனியார் முதலாளிகள் பிலிப்பைன்ஸ் தீவில் முதலீடு போட முன்வரவில்லை. வாணிபத்துறையில் பற்றுக்குறை ஏற்பட்டது; அரசாங்கச் சேமிப்புக் குறைந்து மறையத் தொடங்கியது; கவலைதரும் பண நெருக்கடிச் சூழ்நிலை உருவாகியது.


மாக்சேசே மறைந்தவுடன் நாணயமும் திறமையும் மறைந்தன. தேர்தல்களில் வன்முறை பயன்படுத்தப்பட்டது; அரசாங்க அதிகாரிகளின் மதிப்பு மக்களிடையே மிகவும் குறைந்தது. உண்மை நிலைக்காகவோ கொள்கை வேறுபாட்டிற்காகவோ அரசியல்வாதிகள் கட்சியைவிட்டு வெளியேறுவது பழங்கதையாக மாறியது; ஆடை களைக் களைந்து எளிதில் மாற்றிக் கொள்வதுபோல அரசியல்வாதிகள் எளிதில் கட்சிவிட்டுக் கட்சி மாறினார்கள். சட்டமன்றத்தில் பொறுப்புள்ள எதிர்க்கட்சி யில்லாமல் இருந்தது. கட்சிமாறுவது இழிவாகக் கருதப்படவில்லை.

வேலைகொடுக்கும் அதிகாரமும், பணம் வாங்கும் அதிகாரமும், ஒதுக்கிவைக்கும் அதிகாரமும் அரசாங்கத்திடமிருந்தன; சட்ட நிறைவேற்றத் துறையிடம்தான் மிகுந்த அதிகாரம் இருந்தது. மிகச் சிறிய செய்தியாயினும், அதனைத் தீர்மானிக்க உள்ளூர் அதிகாரிகள் மணிலாவின் அனுமதியை நாடினார்கள். ஆடம்பர வாழ்க்கையும், கையூட்டும் ஊழலும் பெருகின; சட்டங்கள் மதிக்கப்படவில்லை.

அயல்நாட்டு உறவுகளில் மாறுதல் தோன்றியது. பிலிப்பீனிய உணர்ச்சிகள் பொங்கி எழுந்ததால் பிலிப்பைன்சுக்கு முதன்மை கொடுக்கப்பட்டது. சுதந்திரத்தை மதிப்புடன் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் வளரத் தொடங்கியது; அமெரிக்காவுடன் உள்ள தொடர்பைச் சந்தேகத்துடன் பிலிபீனியர்கள் நோக்கத் தொடங்கினர். ஆசிய நாடுகளின்மேல் பிலிபைன்ஸ் புதிய அக்கறை காட்டியது. பிலிப்பைன்ஸ் 'அமெரிக்கக் காற்றாடியின் வால்' என்ற எண்ணம் பலகாலம் முளைத்திருந்ததால், தற்சமயம் அமெரிக்கர்களை வெறுக்கும் உணர்ச்சி தோன்றத் தொடங்கியது. செய்தித்தாள்கள் அமெரிக்காவுக்கு எதிராகப் பிரசாரம் செய்யத் தொடங்கின.

ஐக்கிய நாட்டுச் சபையில் முக்கியப் பங்குகொள்ள வேண்டும் எனப் பிலிப்பைன்ஸ் விரும்பியது. உருசியாவுடனும், கம்யூனிஸ்டுச் சீனவுடனும், நடுத்தரக் கொள்கைகளைப் பின்பற்றும் நாடுகளுடனும் தொடர்புகொள்ளப் பிலிப்பைன்ஸ் ஆர்வம் காட்டவில்லை. ஜப்பானுடன் இழப்பீட்டு உடன்படிக்கை செய்தபோதிலும், நட்பு, வாணிப உடன்படிக்கை முதலியன ஏற்படுத்தியபோதிலும் இவற்றை உறுதிசெய்து செல்லத்தக்கதாகச் செய்யவில்லை. மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் உள்ள வாணிபத் தொடர்பைப் பெரிதும் பெருக்கியது. ஆசிய நாடுகளுடன் உள்ள உறவை வலுப்படுத்தியது. குடியரசுத் தலைவர் கார்சியா, மகபகல் ஆட்சியின் போது பிலிப்பைன்ஸ் எடுத்த முயற்சியால் தென்கிழக்காசிய நாடுகளின் சங்கமும் (Association of South East Asia—ASA), மாபிலிண்டோவும் (Maphilindo) தென்கிழக்காசிய நாடுகளின் பொருளாதாரக் கலாசார உறவை வலுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டன. பிலிப்பைன்ஸ், மலேசியா, தாய்லாந்து ஆகியவை தென்கிழக்காசிய நாடுகளின் சங்கத்தின் உறுப்பினர்கள். மலேயா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா ஆகியவை மாபிலிண்டோவின் உறுப்பினர்கள். கி.பி. 1963ஆம் ஆண்டில் மலேசியா உருவாகுவதைக் குடியரசுத் தலைவர் மகபகல் எதிர்த்தார். மலேசியாவில் சேர்ந்த வடபோர்னியோ அல்லது (Sabah) பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தது என வாதாடினர். அமெரிக்கர்களுடன் ஒரு பிலிப்பைன்ஸ் படைப்பிரிவையும் வியட்நாம் போருக்கு அனுப்ப வேண்டும் எனக் கி.பி. 1965ஆம் ஆண்டில் அவர் பிலிப்பைன்ஸ் சட்ட மாமன்றத்தைக் கேட்டுக்கொண்டார்; ஆனல் இம் முயற்சியில் அவர் தோல்வியடைந்தார்.


வ
அஸ்ஸாம்
கசின்ஸ் இனத்தார்
வாழும் பகுதி
பாமோ
யூனான்
மணிபூர்
சிட்டகாங்
மோண்டலே
அமரபுரா
அவா
ஷான் (இனத்தார்)
நாடு
பாகன்
அக்யாபூ
அராகன்
கெங்துங்கு
லாவோஸ்
கரென்னி
லுவாங் பிரபாங்கு
சியாங்மை
லாம்புன்
வியன்சியன்
பெகு
பாசைன்
ரங்கூன்
மௌல்மெயின்
சியாம்
அந்தமான்
கடல்
அயூதியா
பாங்காக்
சியாம்
வளைகுடா
பிரிட்டிஷ் பர்மா
இருப்புப் பாதையமைப்பு
0
100
200
மைல்கள்


சியாம், பிரெஞ்சு, இந்தோ-சீன நாடுகள்
(இருபதாம் நூற்றாண்டில்)
வ
யூனன்
கடாங்கிங்
பர்மா
ஹநாய்
லுவாங் பிரபாங்
டொங்கிங்
வளைகுடா
சியாங்மை
லாவோஸ்
வியன்சியன்
பெகு
மௌல்மெயின்
சியாம்
மேநாம் ஆறு
மேகாங் ஆறு
ஹியூ
டுரேன்
அன்னம்
பாங்காக்
கம்போடியா
சியாம்
வளைகுடா
நாம்பென்
சைகான்
கொச்சின்
சீனா
இருப்புப் பாதையமைப்பு
பினாங்கு
மலேயா
0 100 250
மைல்கள்



தென் கிழக்காசிய நாடுகள் 1965 ஆம் ஆண்டில்
(குடியேற்ற ஆட்சியமைப்பு மறைந்த பிறகு)
பர்மா
தாய்லாந்து
கம்போடியா
பிலிப்பைன்ஸ்
குடியரசு
மணிலா
மலேசியக் கூட்டரசு
கோலாலம்பூர்
சுமத்திரா தீவு
சரவாக்
போர்னியோ
அல்லது
காலிமந்தான்
இந்தோனேசியக் குடியரசு
திமோர் தீவு

மேற்கோள் நூற்பட்டியல்
(BIBLIOGRAPHY)
General

Agoncillo, Tevdoro : 'A Short History of the Filipino People', Queyon city, 1961.

Allen, Richard : 'A Short Introduction to the History and Politics of Southeast Asia', Oxford University Press, London, 1970.

Bastin, John and Benda Harry J. : 'History of Modern Southeast Asia', Prentice Hall, 1968.

Buchanan, Keith : 'Southeast Asian World', New York, Double day, Anchor, 1968.

Butwell, Richard : 'Southeast Asia, Today and Tomorrow,' 2nd Edn., New York, 1969.

Cady, John F. : 'Southeast Asia, Its Historical Development', New York, 1964.

Cady, John, F. : 'Thailand, Burma, Laos and Cambodia,' Englewood Clifts, 1966.

Claude, A. Buss : 'Contemporary Southeast Asia', Van Nostrand Reinhold Company, New York, 1970.

Fisher, C A. : 'Southeast Asia — A Social, Economic and Political Geography', Methuen, 1964.

Gordon, Bernard K. : Dimensions of Conflict in Southeast Asia', Prentice Hall, 1966.

Hall, D.G.F. : 'A History of Southeast Asia', New York, 1960.

Harrison, Brian : 'Southeast Asia—A Short History', New York, 1954.

Kahin, George McT. : 'Major Governments of Asia', Cornell Univ. Press, Ithaca, New York, 1967.

Koo, Gilbert : 'A Short History of Southeast Asia'.

Milton, W. Meyer : 'Southeast Asia—A Brief History', New Jersey, 1971.

Purcell, Victor : 'The Colonial Period in Southeast Asia', New York, 1953.

Purcell, Victor : 'The Chinese in Southeast Asia' London, Oxford University Press, 1951.

Tarling, Nicholas : 'A Concise History of Southeast Asia', New York, 1966.

Thomson, V.M. and Adloff R. : 'Minority Problems in Southeast Asia', Stanford, 1955.

Burma

Cady, John F. : 'A History of Modern Burma', Ithaca, 1958

Hall, Daniel G.L. : 'Burma', 2nd Edn. London, 1958.

Malaysia and Singapore

Bastin, John : 'The Native Policies of Sri Stamford Raffles', Oxford, Clarendon Press, 1957.

Cowan, C.D. : 'Nineteenth Century Malaya', Oxford University Press, London, 1961.

Emerson, R. : 'Malaysia', University of Malaya Press, 1964.

Emerson, R. : 'Malaysia — A Study in Indirect Rule', New York, Mac Millan, 1937.

Ginsberg, N.S. and Roberts C.F. : 'Malaya', Seattle, 1958.

Gullick, J.M. : 'Malaya', London, 1963.

Gungwuwong (Ed.) : 'Malaysia — A Survey', London.

Kennedy, J. : History of Malaya

Krsihnan, R.B. : 'The Indians in Malaya', Singapore, 1936.

Lim Chong - Yan : 'Economic Development of Modern Malaya', Oxford University Press, 1969.

Mahajani, U. : 'The Role of Indian Minorities in Burma and Malaya', Bombay, 1960.

Miller, Harry : 'A Short History of Malaysia', New York, 1966.

Ongkill, J.P. : 'The Borneo Response to Malaysia', 1961—1963.

Purcell, V. : 'The Chinese in Malaya', Oxford University Press, Kuala Lumpur, 1968.

Pye, L.W. : 'Guerilla Communism in Malaya', Princeton University Press New Jersey, 1956.

Raghavan, M. : 'India and Malaya—A Study,' London, 1954.

Richard Winstedt : 'The Malays — A Cultural History', London, 1961.

Roh, W R. : 'The origins of Malay Nationalism', University of Malaya Press, Singapore, 1965.

Ryan, N. J. : 'The Making of Modern Malaysia and Singapore', Oxford University Press, Singapore, 1970.

Sinnappah Arasaratnam : 'Indians in Malaysia and Singapore,' Oxford University Press, Kuala Lumpur, 1970.

Treggonning, K.G. : 'History of Modern Malaya'.

Treggonning, K.G. : 'History of Modern Sabah, 1881—1963', University of Malaya Press, Singapore, 1965.

Indonesia

Allan, G.G. and Audrey, G. : 'Donnithorne—Western Enterprises in Indonesia and Malaya', London, Mac Millan, 1957.

Anderson, Benedict, R.O,G : 'Some Aspects of Indonesian, Politics under the Japanese Occupation 1944—1945', Cornell University Press, Ithaca, New York.

Aziz, M.A. : 'Japanese Colonialism and Indonesia', The Hague, 1955.

Boeke, J. H. : 'The Evolution of the Netherlands Economy', New York, Institute of Pacific Relations, 1946.

Boeke J.H. : 'The Structure of Netherlands Indian Economy', New York, 1942.

CaldWell, J.A.L. : 'Indonesia Oxford University Press', New York, 1963.

Feith, Herbert : 'The Declne of Constitutional Democracy in Indonesia,' Ithaca, New York, 1962.

Furnivale, J S : Netherlands India — A Study of Plural Economy', MacMillan, 1944.

Higgins, Benjamin : 'Indonesia's Economic Stablisation and Development', New York, Institute of Pacific Relations, 1959.

Legge J.D., Sukarno : 'A Political Biography', Pelican Books, 1972.

Mintz, S. Jeanne : 'Indonesia — A Profile', D. Van Nastrand Company, Princeton, 1961.

Palmier, Leslie H. : 'Indonesia and the Dutch,' London, Oxford University Press, 1962.

Ruth, T. Mcvy (Ed.) : 'Indonesia', Human Relations Area, Files Press, 1963.

Vlekke, H M. : 'Nusantara — A History of Indonesia,' The Hague, Van Hoeve, 1959.

Thailand and Indo-China Countries

Bain. Chester : 'Vietnam, Roots of Conflict', Prentice Hall, 1967.

Busch, Noel F. : Thailand', New York, 1958.

Buttinger, Joseph : 'The Smaller Dragon—A Political, History of Vietnam', A Praegelr New York, 1958.

Herz, Martin : 'A Brief History of Combodia', New York, 1958.

Jean Lacoutre : 'Vietnam between two Truces' Vintage.

Steinberg, David J. : 'Cambodia Its People, Its Society, Its Culture'. New Haven, 1959.

Warbey : 'HoChi Minh'.